161430

JL

Tm21', N95

Nos. 1-2

# நல்லாசிரியன்

905௵ ஜூன்௴ முதல் 1906௵ மே௴ வரை.

## முதற் சம்புடம்.

பத்திராதிபர் — கா. நமச்சிவாய முதலியார்.

வெளியிடுவோர்
[illegible]
[illegible]
[illegible]

161430

JL

TM21, NOS

NOS 1-2

PRINTED AT THE "CAXTON PRESS," MADRAS. — 1906.

# CONTENTS.

## பொருளடக்கம்.

1. அன்னப் பறவை ... ... ... ... ... ... 170
2. ஆசையும் [illegible] ... ... ... ... 76
3. இளவரசர் வருகை ... ... ... ... ... ... 181
4. [illegible] ... 186
5. உயிரெழுத்துப் போதிக்குமுறை ... ... .. ... 18
6. உபாத்தியாயர் ... ... ... ... ... ... 58
7. எரியும் மெழுகுவர்த்தியில் அறியும் விஷயங்கள் ... ... 100
8. எண்முதல் விளக்கம் ... ... ... 206, 225, 246, 267
9. ஒர் உபந்நியாசம் ... ... ... ... ... ... 176
10. கடவுளை நம்பினோர் கைவிடப்படார் ... 42, 60, 81, 128, 178
11. கிராமபாடசாலைகள் ... ... ... ... ... 44
12. கிராம உபாத்தியாயர் ... ... ... ... 252, 279
13. குறிப்புப் புத்தகங்களை உபயோகத்தைத் தெரிக்குமுறை ... 160
14. கெஜட்விளம்பரம் ... ... ... ... ... ... 20
15. கைத்தொழிற் படிப்பும், சித்திர விருத்தியும் ... ... 154, 174
16. சொந்தத் தேன் ... ... ... ... ... ... 202, 228
17. சமாசாரக் கொத்து 22, 48, 72, 95, 118, 144, 165, 190, 215, 264
18. சிலந்திப் பூச்சி ... .. ... . ... ... 147
19. சிறுவர் கல்விப்பயிற்சி ... ... ... ... ... 270
20. சுதேசியம் ... ... ... ... ... ... 68, 92
21. [illegible] 25, 49, 73, 97, 121, 145, 169, 193, 217, 242
22. [illegible] 162
23. சொல்லதெழுதல் ... ... ... ... ... ... 117
24. திரைகளை பறியும் விதம் ... ... ... ... ... 66
25. நீர்விளையைபதென்ன? ... ... ... ... ... 243
26. தட்டமின்விளைத் தெரிந்த உபாத்தியாயர் ... ... 152
27. நமது தேசத்துப் பழமையான படிப்பு ... ... ... 141
28. நல்லநிபுணர் ... ... ... ... ... ... 84
29. நன்மாணுக்கர் ... ... ... ... ... ... 111
30. நந்தனர் இருதங்களின்உருவும் படங்களும் ... ... 219
31. நீரின் வல்லமையை அறிதல் ... ... ... 195
32. பட்டமும் அதைப்போதிக்கு முறையும் ... .. ... .. 34
33. படிப்பு பெரிதா, அறிவும் பெரிதா? ... ... ... 254
34. பத்திரிகைகளின் குறிப்புகள் ... .. ... ... 140
35. பரீட்சை விஷயங்கள் ... ... .. ... [illegible], 88, 118, 131

# நல்லாசிரியன்.

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வால்யூம் 1. | 1905 ௵ ஜூன் | மாதம் 1


## AN APPEAL.

### விண்ணப்பம்.

ஆசிரிய நேசர்கள் !

இக்காலத்திற் பத்திரிகைகள் பல நம் தமிழ் நாட்டிற்
ற்று விளங்குகின்றன வெனினும் அவற்றிற் பெரும்பாலன பல
கண்டு களிக்கத் தக்கனவாகவே இருக்கின்றன வென்பது அனைவ
அறிந்த விஷயம். பண்டிதர் பார்வைக்கான இரண்டொரு பத்
கைகள் இலக்கிய இலக்கண ஆராய்ச்சிகளை விளக்க வெளிவருகி
றன. இப்பத்திரிகைகள் ஒருவாறு உபாத்தியாயர்கட்கும் ப
படத் தக்கவை யெனினும், தற்காலத்து உபாத்தியாயரே
அறியக்கிடக்கும் கணிதம், பூகோளம், ககோளம், சரித்தி
ரசாயனம் முதலிய சாஸ்திரங்களில் வேண்டிய விஷயங்களை அ
விளக்காமையின் அவ்விஷயங்களையும் மற்றும் கல்விச் சாலை வி
மாய் அறியவேண்டிய பலவேறு விஷயங்களையும் பார்க்கக் கூ
யெல்ல பத்திரிகை ஒன்று வேண்டுமென்பது அவசியமே யன்றே

நிற்க, மேல் நாட்டாராகிய ஆங்கிலேயர் நாம் முய
அவ்வத்தொழிலுக்கென பற்பல பத்திரிகைகளை, பார்ப்பவர் க
ணையும் மனத்தையும் கவரும் வண்ணமாய் வண்ணிறந்த சித்தி
படங்களுடன் வெளியிட்டுவருவதை யாவரும் காண்கின்றோம். அ
றன் ஆகிய தொழிலுக்கென்றே யமைந்த பத்திரிகைகள் ஒ
ஆற்றுக்கு நிறைந்திருக்கின்றன. அவைகளோ ஒவ்வொருநாட்டு
தம் பதிப்பாய் வெளிவருகின்றன

# INTRODUCTION.

## முகவுரை.

நல்லாசிரியன் என்பது நன்மை, ஆசிரியன் என்னும் இரண்டு சொற்கள் ஒருசொற்றன்மை படைத்து நின்றன. நன்மை யென்பது நல்ல இலக்கணங்கள். ஆசிரியன் என்பது உபாத்தியாயன். எனவே நல்ல ஆசிரிய இலக்கணங்கள் அமையப் பெற்ற உபாத்தியாயன் என்றதாயிற்று. அஃது ஆசிரியத் தொழிலில் நெடுநாள் பழகி அவ்வநுபவ உணர்ச்சி கைவந்தவன் என்பதை உணர்த்தும். இனி நல்லாசிரியன் (Trained Teacher) எனவே போதனாவிருத்தி வித்தியாசாலை (Normal Training School) யில் நன்கு பயின்று அவ்வநுபவமுற்று முதிர்ந்த ஓர் உபாத்தியாயனைக் கொள்ளுதல் ஏற்றதாகும். ஏனெனின், இக்காலத்து உபாத்தியாயரானோர் எத்துணைக் கல்வியறிவுடையரெனினும், அன்னார் ஆசிரியத் தொழிற் பிரவேசிப்பதன் முன்னர் அல்லது பிரவேசித்த பின்னர் போதனாவிருத்தி வித்தியாசாலையில் ஈராண்டு பயின்று அதன்பின் ஆசிரியத் தொழிலுக்கென நியமித்துள்ள பரீட்சையில் தேர்ச்சியடைய வேண்டுமென்பது நமது துரைத்தனத்தாரது (English Government) முக்கியநோக்கம். ஆக 'நல்லாசிரியன்' எனவே முற்காலவகையானும், பிற்காலவகையானும் ஆசிரியத் தொழிலின் அநுபவ ஆராய்ச்சி யுணர்வைப் பரக்கக்காட்டவல்ல செந்தமிழ்ப் பத்திரிகை யென்பது விளங்கும்.

2. இப்பத்திரிகை தமிழ்நாட்டுக் கல்விச்சாலைகள் எல்லாவற்றிற்கும் சாலமுக்கியமானதெனினும் பிரைமரி, லோயர் செகண்டரி பாடசாலைகளுக்கே இன்றியமையாதது.

3. இனி இப்பத்திரிகை உணர்த்தும் விஷயங்களைச் சிறிதுரைப்போம். போதனாவிருத்தி வித்தியாசாலை (Normal Training School) யிற் பயிலாத உபாத்தியாயர்களும், ஆசிரியத் தொழிலிற் பிரவேசிக்க மனமுள்ளவர்களும், கல்விச்சாலையைப் பற்றிய எல்லா விஷயங்களையும் ஒருவர் உதவியின்றி யுணர்வதற்கு இப்பத்திரிகை முக்கிய சாதனமாவது.

4. போதனாவிருத்தி வித்தியாசாலையிற் பயின்ற உபாத்தியாயர்களுக்கும் அப்போதைக்கப்போது வேறுபடுகின்ற பேதங்களைச் சரிவர விளக்கிக் காட்டவல்லது. அப்பேதங்களாவன :—

போதனாபிவிருத்தி வித்தியாசாலையில் பயின்ற அநேக உபாத்தியாயர்கள் அவ்வித்தியாசாலையின் நோக்கங்களை நன்கு உணராமல் மயங்குவதன்றித் தமக்கு முன்னுள்ள அநுபவத்தையும் கைவிட்டுப் பின் தாம் போதனாபிவிருத்தி வித்தியாசாலையில் கற்றுக்கொண்ட முறைகளையும் அறியாதவர்களாய் இரண்டிடத்தும் அவலப்பட்டவர்களாகின்றனர். அவர்கள் அவ்வாறு அவலப்படுவதற்குக் காரணம் என்னவென்று யோசிக்கப்புகுந்தால் கீழ்வரும் காரணங்கள் தோன்றுகின்றன :—

ஒருவன் போதனாபிவிருத்தி வித்தியாசாலையில் கற்கவேண்டிய விஷயங்கள்—பாடசாலை ஏற்பாடு (Organization), கிரமசிட்சை (Discipline), போதனை (Instruction) என மூன்று பிரிவினவாய் இருந்தபோதிலும் அவற்றின் உட்பிரிவுகளைக் கணக்கிட எண்ணிறந்தனவாம். அவற்றில் பல விஷயங்கள் தான் கண்டறியாதனவும், கேட்டறியாதனவும், பழகியறியாதனவுமாகவே யிருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. அவ்விஷயங்கள்—சிறுவர் சிங்காரத் தோட்டம் (Kindergarten) பொருட்பாடங்கள் (Object Lessons) முதலியன. இவற்றில் ஒவ்வொருபாடமும் கல்வித்திறமை யுடைய ஒருவர் (அதாவது F.A., B.A., பரிட்சையில் தேர்ந்தவர்) பல ஆண்டுகள் நன்கு பழகி யறியவேண்டியதா யிருக்கின்றதென்றால் கல்வி யறிவு சிறிதுடைய பிரைமரி, லோயர் சகண்டெரி வகுப்பு உபாத்தியாயர்கள் அப்பாடங்களனைத்தையும் ஓர் ஆண்டில் பழகி யறிவது அரிதினும் அரிதன்றோ? அத்தகைய விஷயங்களை நாளடைவில் சிறிதுசிறிதாக எடுத்துப் போதிப்பதற்கு இப்பத்திரிகை ஒரு துணைக்கருவியாக விருக்கும்.

5. டைரெக்டர் துரை (Director of Public Instruction) யவர்களாலும், மற்றும் வித்தியா அதிகாரிகளாலும் (Other Inspecting officers) அப்போதைக்கப்போது ஏற்படுத்தப்படும் சீர்திருத்தங்களையும், விதிகளையும் உடனுக்குடன் தெரியப்படுத்தும் துணைக்கருவி ஒன்றில்லாமையால், அநேக உபாத்தியாயர்கள் நீக்கப்பட்ட பாடங்கள் இன்னவையென்றும், சேர்க்கப்பட்ட பாடங்கள் இன்னவையென்றும் உணராமல் வருத்தப்பட்டு முடிவில் வித்தியா அதிகாரிகள் பரிட்சைக்காக வரும்போது அவ்விஷயங்களைச் சொல்லக்கேட்டு இவை முன்னரே நமக்குத் தெரியாமற்போயினவே யென்று மனம் வருந்துகின்றார்கள். அத்தகைய விஷயங்களை அப்போதைக்கப்போது இப்பத்திரிகை தெரிவிக்கும்.

6. அரிய பாடங்களுக்குப் பாடக்குறிப்புக்கள் அல்லது மாதிரிப் பாடங்களையும், கரும்பலகைச் சுருக்கங்களையும் எழுதிக்காட்ட வல்லது.

7. பொருட்பாடங்கள் (Object Lessons), சிறுவர் சிங்காரத் தோட்டப் பாடங்கள் (Kindergarten Lessons) முதலிய வற்றிற்கு உபயோகமான கதைகள் பாட்டுக்கள் முதலியவற்றைத் தெளிவாய்க் காட்டவல்லது.

8. போர்ட்டு செய்ன்ட் ஜார்ஜ் கெஜட் (Fort St. George Gazette), சமாசாரப் பத்திரிகைகள் (News Papers) முதலிய வற்றிலிருந்து வித்தியாவிஷயங்களை எடுத்துக் காட்டவல்லது.

9. எழுத்து மூலபரிட்சை (Written Test for Teachers' Certificates) பிரைமரி, லோயர்சகண்டெரி பரிட்சைகளை (Pimary and Lower Secondary Examinations) பற்றிய விவரங்களையும், பரிட்சையில் கேட்கப்படும் கேள்விகளையும் தெரிவிக்கவல்லது. பிரைமரி லோயர்சகண்டெரி கிரேட் உபாத்தியாயர்களது எழுத்து மூல பரிட்சைப் பலன்களை (Results of the Primary and Lower Secondary grade Teachers' Certificate Examinations) யும் தெரிவிக்கவல்லது.

10. போதனாபிவிருத்தி வித்தியாசாலையிற் பயிலாத உபாத்தியாயர்கட்கென பாடசாலை ஏற்பாடு (Organization), கிரமசிட்சை (Discipline), போதனை (Instruction) களை முறையாகப் பத்திரிகைகள் தோறுங் காட்டி வரத்தக்கது. அத்தகைய உபாத்தியாயர்கள் இப்பத்திரிகையின் உதவியால் பரிட்சையில் தேர்ச்சியடைய அநுகூலமாகும்.

11. மேல்நாட்டாராகிய ஆங்கிலேயர், கல்வியின் விருத்திக்கென முயலும் முயற்சியின் மார்க்கங்களைக் காட்டவல்லது.

12. பெண்கல்வியின் விருத்தியை அநுசரித்த விஷயங்களையும், அப்பாடசாலைகளுக்கான சில அரியமாதிரிகளையும் நன்கு உணர்த்த வல்லது.

13. மனோல்லாசத்தையும், வியப்பையும், புத்தி நுட்பத்தையும் உண்டாக்கும் செய்யுட்களையும், கதைகளையும் காட்டவல்லது.

14. வித்தியாசம்பந்தமாய் வெளியிடப்படும் புத்தகங்களின் குணாகுணங்களை (Reviews of Books) எடுத்துக் காட்டவல்லது.

15. வித்தியாவிஷயமாய் நேரிடக்கூடிய குறைகளைக் களையும் வண்ணம் துரைத்தனத்தாரை மன்றாடிக் கேட்கவல்லது.

மற்றும் இப்பத்திரிகை எடுத்து விளக்கவல்ல விஷயங்களை விவரிக்க எண்ணிறந்தனவாம். இவ்விஷயங்களையன்றி அப்போதைக்கப்போது மற்றும் எவ்வெவ்விஷயங்கள் இப்பத்திரிகையின் மூலமாய் வெளியிடத்தக்கவை யெனப் புலப்படுகின்றனவோ அவையனைத்தையும் வெளியிட் டறிவிக்கவல்லது.

இப்பத்திரிகையின் விஷயங்கள் எவற்றினின்றும் வரும்?

1. பல வித்வசிரோமணிகளிடத்திலிருந்தும்,
2. போதனாபிவிருத்தி வித்யாசாலைத் தலைவர்களிடத்திருந்தும்,
3. இந்தியன் மாகஜைன் (The Indian Magazine and Review, London)
4. கிண்டர்கார்டன் மாகஜைன் (The Kindergarten Magazine, London.)
5. ஸ்கூல் ஒர்ல்ட் (The School World, London).
6. பிராக்டிகல் டீசர் (The Practical Teacher, London)
7. எடியுகேஷனல் ரிவியு (The Edncational Review, Madras)
8. எடியுகேஷனல் ஜர்னல் (Educational Journal, Madras)
9. கிராண்ட் இன் எய்ட் கோட் (The Grant-in-aid Code)
10. எடியுகேஷனல் ரூல்ஸ் (The Madars Educational Rules)
11. போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட் (Fort St. George Gazette)
12. சமாசாரப்பத்திரிகைகள் (News Papers)
13. ஜனவிநோதினி.
14. ஆங்கிலபாஷையில் பல ஆசிரியர்களால் வெளியிடப்பட்டுள்ள புத்தகங்கள்
15. தமிழ்ப் புராணங்கள் முதலிய வற்றினின்றும் வரும்.

இப்பத்திரிகை இம்முதற்புத்தகம் வெளியிடப்பட்ட அளவிலேயே யியன்றுவரும்.

இப்பத்திரிகைக்குச் சந்தாதோகையாது ?

பத்திரிகாபிமானிகளுக்கு (தடித்தகடிதம்) வருஷசந்தா ரூ. 2—0—0
மற்றவர்களுக்கு (மெல்லியகடிதம்) ,, ரூ. 1—0—0

குறிப்பு : உள்ளூருக்கும் வெளியூருக்கும் சந்தா ஒன்றே.



இப்பத்திரிகையைப் பெறவேண்டுவோர் இப்புத்தகத்தில் அடக்கஞ்செய்துள்ள கார்ட்டில் எழுதிக்காலணாத்தலை ஒட்டியனுப்ப வேண்டும்.

சந்தாதோகையை முன்பணமாக அனுப்பவேண்டும்.

---

## FORM OF LEAVING CERTIFICATE.

## விடுதலைச்சீட்டு.

இந்நாள் வரையில் விடுதலைச்சீட்டில் குறிக்க வேண்டிய விஷயங்கள் 11 ஆக இருந்தன. தற்காலம் திருத்தி வெளியிடப்பட்டுள்ள வித்தியாவிதியில் 13 விஷயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன :

### Chapter II, Rule 35.—II ஆம் அத்தியாயம் 35 ஆம் விதி.

1. Name of the School which the pupil is leaving—மாணாக்கன் விடும் பாடசாலையின் பெயர்.
2. Name of the pupil.—மாணாக்கன் பெயர்.
3. Date of Birth as entered in the Admission Register—பதிவு ரெஜிஸ்தரின் பதிவுபடி பிறந்ததேதி.
4. Class or Form in which the pupil was reading at the time of leaving (in words)—விடும்போது மாணாக்கன் வாசித்துக் கொண்டிருந்த வகுப்பு (எழுத்தால்).
5. Date of admission or promotion to that Class or Form அவ்வகுப்பில் சேர்க்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட தேதி.
6. Whether qualified for promotion to a higher Class or Form—மேல் வகுப்பிற்கு மாற்றத்தக்கவனா ?
7. Whether the pupil has paid all the fees due to the School—மாணாக்கன் பாடசாலைக்குச் சேர்க்க வேண்டிய சம்பள முழுதும் சேர்த்து விட்டானா ?
8. Date on which the pupil actually left the School. மாணாக்கன் பாடசாலையை விட்ட சரியான தேதி.
9. Date on which application for leaving certificate was made on behalf of the pupil by his Parent or Guardian-மாணாக்கனுக்காக பெற்றோர் அல்லது போஷகர் விடுதலைச் சீட்டுக்காக விண்ணப்பம் செய்த தேதி.

10. Higher examination passed and the date of passing the same—மாணுக்கன் தேறிய உயர்ந்த வகுப்பும், அதில் தேறிய தேதியும்.
11. Last Standard Examination for which grant was paid. கடைசியாக திரவியோபகாரம் பெற்ற வகுப்புப் பரிட்சை.
    (a) Date of examination—பரிட்சையின் தேதி.
    (b) Optional subjects for which it was paid—திரவியோபகாரம் பெற்ற இஷ்டமான பாடங்கள்.
12. Date of leaving certificate—விடுதலைச்சீட்டு கொடுத்த தேதி.
13. Signature of Headmaster—தலைமை உபாத்தியாயர் கையெழுத்து.

---

## PARENTS DECLARATION.

### APPLICATION FOR ADMISSION INTO THE SCHOOL.

பாடசாலையிற் சேர விண்ணப்பம்.

1. Name of pupil—மாணுக்கன் பெயர்.
2. Date of Birth—பிறந்ததேதி.
3. Residence—இருப்பிடம்.
4. Name of Parent or Guardian—பெற்ருேர் அல்லது போஷகர் பெயர்.
5. Occupation of Guardian—பெற்ருேர் அல்லது போஷகர் தொழில்.
6. Residence of Parent or Guardian—பெற்ருேர் அல்லது போஷகர் இருப்பிடம்.
7. School, if any, last attended by pupil—மாணுக்கன் முன்படித்திருந்த பாடசாலை (ஏதாவதிருந்தால்).
8. Signature of Parent or Guardian—பெற்ருேர் அல்லது போஷகர் கையெழுத்து.
9. Date—தேதி.

*Note.*—Satisfactory evidence in regard to the date of birth must be insisted *upon*. Head-masters will be held responsible for the accurate entry in the admission register of the date of birth.



## LIFE OF FROBEL.

## ப்ரொபெல் என்னும் பாலபோதகர் சரித்திரம்.

---

இக்காலத்தில் ஐரோபபாவிலே பாலசிக்ஷைசெய்வதில் விருப்பங்கொண்டவர்கள், பிரடரிக் ப்ரொபெல் என்னும் ஒரு ஜர்மானியர் எழுதிவைத்த விஷயங்களையும், அவர் கைக்கொண்ட போதனைமுறைகளையுமே மிகவும் அதிகமாகக் கவனித்து வருகின்றனர். அவருடைய அபிப்பிராயங்களை ஆராய்ந்து அவரது போதனை முறைகளையும் எவ்வளவுக்கெவ்வளவு உணர முயல்கின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு உறுதியாய் அவரொரு உத்தம உபாத்தியாயரென்று கல்விகற்றுத்தேர்ந்த பண்டிதர்கள் அறிந்து கொள்வார்கள். அந்த ப்ரொபெலினுடைய வரலாற்றைப்பற்றிச் சிறிது நமக்குத் தெரிந்தாலல்லது, சிறுவர்களைப்பற்றியும், சிறுவர்களை நடத்தவேண்டிய விதத்தைப்பற்றியும் அவர் கொண்டகொள்கையை நாம் தெளிவாகக் கண்டுகொள்ளக்கூடாதாதலின், அவருடைய சரித்திரத்தை ஒருவாறு அடியில் எழுதுகிறோம்.

பிரடரிக் ப்ரொபெல் ஜர்மனி தேசத்தில் ஒரு சிறு கிராமத்திலே பிறந்தவர். அவருடைய தந்தை அந்த ஊரில் மதவிஷயங்களைப் போதிக்கின்ற குருவாயிருந்தார். அவர் மிகவும் யோக்கியர், ஊக்கமும் மனவுறுதியுமுடையவர். ப்ரொபெல் அவரிடத்தில் அதிக பயபக்தியும் கவுரவமும் உடையவராயிருந்தாராயினும், தந்தைமாத்திரம் மகனிடத்தில் அதிகமாய் அன்புபாராட்டிவந்ததாய்த் தோன்றவில்லை. அவர் அப்படியிருந்தது அம்மகனிடத்தில்பிரீதியில்லாமையாலன்று ; அவர்க்கு எப்போதும் தன் சொந்தவேலையே சரியாயிருந்ததனுல், இவ்வுலகவிஷயங்களை அறிய அதிக ஆவல்கொண்டிருந்த அச்சிறுமகன விஷயத்தில் செலவுசெய்யச் சிறிதும் அவகாசமில்லாமற்போயிற்று. அப்பாலகனுக்கு ஒரு வயதாவதற்கு முன்னமே அவருடைய தாய் இறந்துபோனுள் ; தந்தை மறுவிவாகம் செய்துகொண்டார். அந்த மாற்ருந்தாய் அப்பேதைப் பாலகனிடத்தில் சற்றும் அன்பில்லாமல் அநாதரவுசெய்யவே பிரீதியாய்ப் போஷிப்பவர் ஒருவரும் இல்லாமல் அவர் மிகவும் வருந்தினுர். ஒவ்வொரு தருணங்களில் ப்ரொபெல் தன் தந்தை அவ்வூரார்க்குள் உண்டாகும் கலகத்தை அடக்கும் நிமித்தமும் அவ்விடங்களுக்குப் போகும்போது, அவரோடு தானும் அவ்விடங்களுக்குப் போவார். அச்சமயங்களில் அவர் சச்சரவுகளைப்பற்றி விசேஷமாகக் கண்டும் கேட்டுமிருக்கலாம். அப்படியிருக்க ஒருதடவை செலவுகாலத்தில் அச்சிறுவனுடைய சகோதரர் அவ்வூருக்கு வந்திருந்தார். அப்போது ஒருநாள் அவர் அச்சிறுவனைச் சீராட்டிக்கொண்டிருக்கும்போது

அப்பாலகன், இவ்வுலகத்தில் யாவரையும் புருஷர்களாகவாவது அல்லது பெண்களாகவேயாவது சுவாமி என் சிருஷ்டிக்கவில்லை அப்படிச் செய்திருந்தால் எங்கும் சச்சரவுக்கே இடமிராதே என்று கேட்டார். அதற்கு அவர் உரைத்த மறுமொழி வெகு யுக்தியாயும் சமத்காரமாயும் இருந்தது. அதாவது; அவர் செடிகளின் பல பகுதிகளையும் அச்சிறுவனுக்குக் காட்டி, வெவ்வேறுவிதமான இரண்டு மலர்களையும் செடிகளையும் ஒன்றாய்ச் சேர்த்து ஒட்டுவதனால் புதிதாய் வேறுமலர்களும் செடிகளும் உண்டாகின்ற விதத்தைத் தெளிவாக நிதரிசனப்படுத்திக் காட்டினார். இவ்விதமாக ப்ரொபெல் முதல் முதல் வெவ்வேறுவிதமான இரண்டு பொருள் ஒன்றாய்க் கூடுவதின் காரியத்தை அறிந்துகொண்டார். அவர் மனத்திற்கொண்டிருந்த முக்கியமான விஷயங்களுள் ஒன்றுக்கு இதுவே முதற்குறிப்பாயிருந்தது.

ப்ரொபெல் நான்கு வயதுவரையில் ஒரு தேவாலயத்தின் ஓரத்திலிருந்த ஒரு வீட்டில் வசித்துக்கொண்டிருந்தார். அந்தத் தேவாலயத்தின் மறைவினால் சூரிய வெளிச்சமேயில்லாமல் அவ்வீடு வெகு இருட்டாயிருந்தது. வீட்டுக்கு வெளியேபோய் விளையாடுவதற்காக அச்சிறுவனுக்கு சற்றும் சாத்தியபடவில்லை. ஏனெனில், மாற்றாந்தாய் அப்பாலகனைத் தான் எங்கும் எடுத்துக்கொண்டுபோக விருப்பமில்லாமல், அவனை முற்றும் ஒரு வேலைக்காரியின் வசத்தில் ஒப்பித்திருந்தாள். அந்த வேலைக்காரிக்கு வேலை மிகவும் அதிகமாயிருந்ததனால், அவளுக்கும் அவனை வெளியே எடுத்துக்கொண்டு போக அவகாசப்படவில்லை. அப்போது அந்த ஆலயத்தில் சில வேலைக்காரர்கள் பழுதுபார்த்துக்கொண்டிருந்தனர். அண்டையில் ஒருவருமில்லாமல் தனியே உட்கார்ந்திருந்த சிறுவனான ப்ரொபெல் சாளரத்தின் வழியாய் அவர்களை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார். ஆயினும் அப்படி பார்த்துக்கொண்டிருப்பது மாத்திரமே திருப்திகரமாகாமல் அவர் தாமும் அவர்கள் செய்வது போலவே செய்யத் தொடங்கி அவ்விதமாகக் கட்டடமும் கட்டமுயன்றார். ஆயின் எந்தக் கருவிகளைக்கொண்டு கட்டடம் கட்டுவார்? நாற்காலி மேஜைமுதலிய மரச்சாமான் தவிர மற்றொன்றும் அந்த அறையிலில்லை. முதலில் அந்த நாற்காலிகளையும் மணைகளையும் ஒன்றின் மேலொன்றாய் அடுக்கிக் கட்ட முயன்றார். அவை அதிக கனமாயிருந்தமைபற்றி அவற்றைத் தூக்கச் சாத்தியப்படாமற்போகவே அவர் அதை விட்டுவிடும்படி நேரிட்டது. ஆயினும் இப்படி இளமையில் சிற்பிகளுடைய செய்கையை அநுசரிக்க அபிலாஷை கொண்டதையும், அதைச் செய்து முடிக்கமாட்டாமல் தவறிப்போனதையும் அவர் ஒருபோதும் மறக்கவேயில்லை. பிற்காலத்தில் அவர், கட்டடம் கட்டி விளையாடுவதற்கு வேண்டியவைகளைச் சிறுவர்கட்குத் தேடிக் கொடுக்கவேண்டுவது அவசியமென வற்புறுத்தினார்.



இவ்விதமாகப் பத்து வயதுவரையில் ப்ரொபெல், ஆதரிப்பவர் ஒருவருமின்றி வருந்திக்கொண்டு தனியாக வசித்துக்கொண்டிருந்தார். ஆயினும், அவர்க்கு நேர்ந்த இவ்விதமான கஷ்டங்களெல்லாம் பிறருக்கு நன்மை உண்டாவதற்கு ஏதுவாயின. அவர் இவ்விதமான துன்பங்களைத் தான் அநுபவியாதிருப்பாராயின், சிறுவர்கட்கு அவற்றைத் தேடிக்கொடுக்கவேண்டுவது அவசியமென்பது அவர்க்கு ஒருபோதும் தெரியமாட்டாதல்லவா?

ப்ரொபெலுக்குப் பத்துவயதில் அவருடைய மாமன் அவரிடத்தில் அதிக இரக்கங்கொண்டு அவரை அபிமானிக்கலானார். அதுவரையில் அம்மாமனுக்கிருந்த ஒரு மகனும் இறந்துபோகவே, இந்த உடன்பிறந்தாளுடைய மகனிடத்தில் அவருக்குத் தன்சொந்த மகன் போலவே அதிக அன்பு உண்டாயிற்று. ப்ரொபெல் அந்த மாமன் வீட்டிலே ஐந்துவருஷகாலம், தந்தைவீட்டைப்போல அலக்ஷியமும் அநாதரவுமாயிராமல், அதிக அபிமானமும் பிரீதியுமாகப் போஷிக்கப்பட்டு வெகுசுகமாக வசித்துக்கொண்டிருந்தார். தந்தை வீட்டில் தனியாய்க் கிடந்ததுபோல் இராமல் அவ்விடத்துப் பிரதான பாடசாலையில் போய்ச்சேர்ந்து தமக்குச் சரியான சிறுவர்களோடு கூடிக்களிக்கலானார். அவர் தம்முடைய சொந்த அநுபவத்தாலேயே சிறுவர்களுக்குக் கூட்டாளிகளோடு கூடியிருப்பது அவசியமென்பதை அறிந்துகொண்டார். கூட்டாளிகள் இல்லாத குறைவினால் உண்டாகும் துன்பத்தை அவர் ஒருபோதும் அநுபவியாதிருப்பாராயின், அது அவ்வளவு அவசியமானதென்பதை அநேகமாய்த் தெரிந்துகொண்டிருக்கவேமாட்டார்.

இக்காலத்தில் ப்ரொபெல் செடிகளையும் ஜந்துக்களையும் நுட்பமாய்ப் பார்க்கத்தொடங்கினார். சிருஷ்டிப்பொருள்களைப்பார்க்கும் விஷயத்தில் அவருக்கு ஒருபோதும் வெறுப்புண்டானதில்லை. பறவைகள், பூச்சிகள், மலர்கள், மிருகங்கள், கற்கள் முதலியவெல்லாம் அவருக்கு அதிக விநோதமுண்டாக்கின. அவ்வண்ணமே அவர் பிற்காலத்திலும் எல்லாக் குழந்தைகளும் செடிகளையும், ஜந்துக்களையும் பார்த்துவரும்படி செய்வது அவசியமென உறுதியாய் அறிந்துகொண்டார்.

ப்ரொபெல் படிக்கப் பாடசாலைக்குப் போனாராயினும், அங்குச் செய்விக்கும் கல்விப்பயிற்சி அவருக்கு இனிப்பாயுமில்லை; திருப்திகரமாயுமில்லை. தான் பாடசாலையில் படிக்கும் விஷயம் தன்வாழ்நாளுக்காயினும் இவ்வுலகத்திற்கேயாயினும் உபயோகப்படத் தக்கதன்றென அவர்க்குத் தோன்றியது. அவர் இவ்வுலகத்தினிடத்திலேயே அதிக அவாக்கொண்டு அதைப்பற்றி அறியவேண்டுமென்னும் ஆவலே அதிகரித்தவராய் இருந்ததுபற்றி, அதை அறிவதற்குச் சிறிது இலக்கணமும் கணிதமும் அவர் கற்றும் உதவி

யாகவில்லை; பூகோளசாஸ்திரமும் அவருக்குப் பயன்படவில்லை; அவையெல்லாம் அவருக்கு யாதொரு பொருளுமில்லாத சொற்களாகவும் பெயர்களாகவுமே தோன்றின. அது அஸ்திவாரமின்றி ஆகாயத்திற் கட்டிய கோட்டைபோன்றதென அவரே மொழிந்தார். ப்ரோபெலுக்கு யுக்தாயுக்த விஷயங்களில் விவேகம் மிகவும் அதிகம். கடமையில் கருத்தும் விசேஷம். எது நியாயமோ அதைச் செய்யவேண்டுமென்பது. அவருடைய கருத்தேயன்றித் தமக்கு இஷ்டமாயிருப்பதையே செய்யவேண்டுமென்பதன்று. ப்ரோபெல் தாம் படித்துவந்த பள்ளிக்கூடத்தை விட்டவுடனே சகலகலாசாலையில் பிரவேசிக்கவேண்டுமென்று அதிக ஆவல் கொண்டிருந்தார்; ஆனால், அவருடைய மாற்றாந்தாய் அவரை அவ்விடத்துக்கு அனுப்பாதிருக்கும்படி அவர் தந்தைக்குத் துர்ப்போதனைசெய்தாள். இதைவிடக்கொடுமை வேறென்னவேண்டும்! ஏனெனில் உண்மையான ஞானம் சம்பாதிக்கவேண்டுமென்றே ப்ரோபெலுக்கு ஆவல் மிகவும் அதிகமாயிருந்தது. அவருடைய சகோதரர்களையும் மாற்றாந்தாயின் மகனையுங்கூடச் சர்வகலாசாலைக்கு அனுப்பினார்கள். அவர்களோடு தாம் போகக்கூடாமற்போகவே ப்ரோபெல் வேளாளத் தொழிலாவது பயிலத் தமக்கு உத்தரவுகொடுக்கும்படித் தந்தையை அநுமதிகேட்டார். அவர்க்குத் தேசத்தினிடத்திலும், ஜந்துக்கள் செடிகொடிகள் முதலிய சிருஷ்டிப்பொருள்களிடத்திலும் அபிலாஷை அதிகம்; அவற்றிலேயே தம்முடைய காலத்தைப் போக்க விருப்பமுள்ளவராய் இருந்தார். வேளாளத்தொழிலில் பயில்வதற்குத் தந்தை சம்மதிக்கவே, ப்ரோபெல் ஒரு வனபரிபாலகனிடத்தில் தொழில் பயில்பவனாய் அமர்ந்து மூன்றுவருஷகாலம் அதே வேலையிலிருந்தார். ஆனால், அந்த வனபரிபாலகன் அவரை உபேக்ஷைசெய்து அவருக்கு ஒன்றும் பயிற்றாமலே யிருந்தான்; ஆயினும் ப்ரோபெல் பிறருடைய உதவியில்லாமல் தாம் தனியாகவே வேலைசெய்யும் இயற்கையுடையவராய் இருந்ததனால், அக்காலங்களில் தமது கையிலிருந்த புத்தகங்களை அதிக ஊக்கமாய்ப் படித்துவந்தார். வேளாளனாக விரும்புகிறவன் நாட்டுவாழ்க்கைக்கு வேண்டிய எல்லா விஷயங்களையும் அறிந்துகொள்ளவேண்டுமெனக்கருதிப் புத்தகங்களைப் பார்த்து, பிரகிருதிப் பொருள்களின் சரித்திரமும், பீஜகணிதமும், க்ஷேத்திரகணிதமும் நன்றாய்த் தெரிந்துகொண்டார். யஜமானன் ஒன்றும் பழக்கிவைக்கவில்லை யாதலால் வேளாண்மைசெய்யக் கைப்பழக்கமாத்திரம் அவருக்குச் சிறிதும் உண்டாகவில்லை.

(இன்னும் வரும்).



# HOW TO TEACH VOWELS.

## உயிரெழுத்துக்கள் போதிக்குமுறை.

வித்தியாரம்பஞ் செய்யும் பாலர் வகுப்பிற்குத் தற்காலத்தில் பல்வேறு போதனை முறைகள் அனுசரிக்கப்படுகின்றன. எனினும் அவற்றில் நேரும் சில குறைகளையும், மற்றும் உயிரெழுத்துக்கள் போதிக்கப்படக்கூடிய முறைகளையும் இங்குக் கவனிப்போம்.

1. ட, ப, ய, ம முதலிய எழுத்துக்கள், சுலபமானவை எனக்கருதிச் சில புத்தகங்களில் ஆரம்பத்திற் கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட எழுத்துக்கள் வரிவடிவில் (எழுதுவதில்) சுலபமானவையேயன்றி ஒலிவடிவில் (உச்சரிப்பில்) சுலபமானவை அன்று. ஒரு முயற்சியுமின்றி வாயைத் திறந்த மாத்திரத்திற் பிறக்கும் எழுத்து அகரமேயன்றி மேற்குறித்த எழுத்துக்கள் அன்றென்பது பாமரர்க்கும் விளங்காமற்போகாது. இதனாலேயே எப்பாஷையினும் அகரம் தலையெழுத்தாய் விளங்குகின்றது. "அகரமுதல எழுத்தெல்லாம்" என்னும் ஆன்றோர் வாக்கு இங்குக் கவனிக்கத்தக்கது. சில குழந்தைகளுக்கு 7, 8 வயது வரையில் டகர உச்சரிப்புத் தோன்றுவதேயில்லை.

2. மற்றுஞ் சில புத்தகங்களில், அகர முதலாகவே எழுத்துக்கள் உதாரணப் படங்களுடன், காட்டப்பட்டுள்ளன. எனினும் அவை வரன்முறையாகக் காட்டப்படாமை பெருங்குறையே. ஏனெனின், தமிழ்ப் பாஷையில், எழுத்துக்கள் அவ்வவற்றின் உச்சரிப்பு, பிறப்பு முதலிய ஒற்றுமை முறை நோக்கி ஒன்றன்பின் ஒன்றாய் அமைக்கப்பட்டுள்ளன. அதனால் எழுத்துக்கள் முறையே கூறப்படாவிடின் ஆன்றோர்கூறிய முறை பிறழ்வதேயன்றி, முறையிற் பழகிய பெற்றோரும், தம்மக்கள் முறையின்றிப் படிக்கும் புத்தகத்தில் ஒருவாறு வெறுப்புக் கொள்கின்றனர் என்பதும் அனுபவத்திற் காண்கின்றோம்.

3. எழுத்துக்களின் உச்சரிப்பை ஞாபகப்படுத்துவதற்கே திருஷ்டாந்தப் படங்களை அமைத்துக் காட்டுகின்றோம். அப்படங்கள் காட்டும் பொருள்கள் பிள்ளைகள் அனுபவத்திற் கண்டனவாயும், ஆசிரியர் காட்டும் எழுத்தன்றி வேறொன்றையும் குறியாதனவாயும் இருத்தல்வேண்டும். சில புத்தகங்களில் இம்முறை மாறுகின்றது. எவ்வாறெனின் "அ" என்னும் எழுத்தைக் குறிக்க அரசின் படம் காட்டப்படுவது எவ்வாற்றானும் பொருந்தாது. மற்றும் "எ"

என்னும் எழுத்தைக் குறிக்க எருதின் படங்காட்டப்படுவது சிறந்ததே. எனினும், சிறுவர்கள் அப்படத்தைக் கண்டு "மாடு" என்று சொல்லவும் கூடுமாகையால், அவ்வாறு இரண்டு சொற்களை ஏற்கும் பொருட்பாடங்களை யமைக்கலாகாது. "எ" என்பதற்கு எலியின் படத்தைக் காட்டுவதே சாலச் சிறப்பாம்.

4. உயிர்மெய்யெழுத்துக்களை க, கா, கி முதலிய முறையாகப் போதிப்பதினும் கா, ஙா, சா ; கி, ஙி, சி முதலிய முறையாகப் போதிப்பதே சிறந்த முறை. அவ்வாறு போதிக்கையில் "ஆகார" முதலியவற்றிற்கான குறிகள் இவை எனக் காட்டவேண்டும். அக்குறிகளில் ஒன்றை அருமையாய்ப் பெறும் எழுத்துக்களைத் தனியே காட்டவேண்டும். அதாவது ண, ற, ன இம்மூன்றே யன்றி மற்ற எழுத்துக்கள் ஆகாரக்குறிகளில் (ா) காலை மாத்திரம் பெறும். ◡ இக்குறியைப்பெறும் ணா, றா, னா இம்மூன்றையும் தனிப் படப் போதிக்கவேண்டும்.

5. எழுத்துக்களை முறையாய் ஞாபகத்தில் வைக்கும்படி அவ்வெழுத்துக்கள் வரச்சுலபமான பாட்டுக்கள் ஆங்காங்கு போதிக்கப்படின் மிகச்சிறப்பாம். அப்பாடல்கள், கிண்டர்கார்டன் என்னும் சிறுவர் சிங்காரத்தோட்டப் பாடத்தை நடத்துகையில் மிக்க அனுகூலமானவைகளாகக் காணப்படும்.

6. உயிரெழுத்துக்களுள் ஈகாரத்தை இகரத்தையேசுழித்து மாற்றுவது யாவருக்கும் ஒப்பமுடிந்ததாகவே யிருக்கும். இவ்வெழுத்தே ஆதியில் இருந்ததாய்த் தெரியவருகிறது. மகாவித்துவான் தாண்டவராய முதலியார் பதிப்பித்த புத்தகங்களுள் எல்லாம் ஈ இகரஞ்சுழித்ததாகவே இருக்கின்றது. அவ்வாதாரங்கொண்டு, பிள்ளைகளுக்கு மிகச் சுலபவழியைக் காட்ட இதனைஉபயோகிக்கலானேன். உயிரெழுத்தில் மற்ற எழுத்துக்கள்யாவும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டிருக்க இது ஒன்றும் மாறியிருப்பது பெருங்குறையே. பிற்காலத்தில் ஈகாரம் (ஈ) இவ்வாறும் எழுதலாகும் எனப் போதிக்கவும்.

"அ" முதல் "ஔ" வரையில் எழுத்துக்களைக் குறிக்கக் கீழ்காட்டிய கதையைச் சொல்லி ஆரம்பிக்கவும்.

முதலில் அத்திப்பழத்தின் படத்தைக் காட்டி, அதன் பெயரைப் பிள்ளைகளிடம் வருவிக்க அல்லது சொல்லுக.



## கதை.

"அ" என்பது ஒரு அத்திப்பழம், அந்த அத்திப்பழத்திற்கு
"ஆ" என்பவன் ஆசைப்பட்டான். உடனே,
"இ" என்பவன் இதோ என்று காட்டினான். அப்போது,
"ஈ" என்பவன் அத்திப்பழத்தின்மேல் ஒரு "ஈ" உட்கார்ந்திருக்கிறது என்று சொன்னான்.
"உ" என்பவன் அத்திப்பழத்தை உரி என்று சொன்னான்.
"ஊ" என்பன் அத்திப்பழம் சொத்தையாயிருக்கும் அதை ஊது என்று சொன்னான். அப்போது,
"எ" என்பவன் ஓடிவந்து எனக்குக் கொடு என்று கேட்டான் அதற்கு,
"ஏ" என்பவன் உனக்கு ஏது போ என்றான். பின்பு,
"ஐ" என்பவன் வந்து ஐயா எனக்கு ஒன்று கொடு என்று கெஞ்சிக் கேட்டான். அதற்கு.
"ஒ" என்பவன் ஒன்று தான் இருக்கிறது ; உனக்கில்லை போ என்றான். உடனே,
"ஓ" என்பவன் அத்திப்பழத்தைப் பிடுங்கிக்கொண்டு ஓடிவிட்டான். அவன் ஓடும்போது,
"ஔ" என்பன் பிடுங்கி வாயில் கௌவிக்கொண்டான்

என்று கதையை இனிமையாய்ச் சொல்லி முடித்து, பின்பக்கத்தில் காட்டியபடி இக்கதையைப் பாட்டாகவும் பாடிக்காட்டவும், இக்கதையைச் சொல்லும்போது 12 பிள்ளைகளை 12 எழுத்துக்களாகநியமித்து அவனவனுக்கு அ முதல் ஔ ஈறாக ஒவ்வொரு எழுத்தையே பெயராக வைப்பதுநலம்.

குறிப்பு:—எழுத்துக்களின் வரிவடிவைச் சுலபமாக்கப் பின்காட்டியுள்ளபடி பிள்ளைகளுக்கு எழுதிக்கொடுக்கவும். பிள்ளைகள் இதனை எழுதப்பழகியபின்பு ஒழுங்குபெற கையெழுத்துப் பாடத்தில் தெரிவிக்கவும்.




பாட்டு.

அ இதுவோர் அத்திப்பழம். ஆ என்பவன் ஆசைப்பட்டான்.
இ என்பவன் இதோ என்றான். ஈ என்பவன் ஈ என்றான்.
உ என்பவன் உரி என்றான். ஊ என்பவன் ஊ தென்றான்.
எ என்பவன் எனக்கென்றான். ஏ என்பவன் ஏதென்றான்.
ஐ என்பவன் ஐயா என்றான். ஒ என்பவன் ஒன்றென்றான்.
ஓ என்பவன் ஓடிவிட்டான். ஔ என்பவன் கௌவிக்கொண்டான்.






# THE TEACHING OF ENGLISH IN GERMANY AND MADRAS.

## ஜர்மனியிலும், சென்னையிலும் ஆங்கில பாஷை போதிக்கு முறை.

சுயபாஷை யல்லது புதிய அந்நிய பாஷையைக் கற்பிக்கும் முறையில் மற்ற நாட்டாரினும் ஜர்மனியர் தலைமைப்பட்டவர்களாய் நல்ல முறையாகவும், திருத்தமாகவும் ஆராய்ந்து கற்பித்துவருகின்றனர். அங்ஙனஞ் செய்வதில் அத்தேயத்தவர் எல்லாமுறைகளையுந் தழுவுகின்றனர். அங்ஙனந் தழுவப்பட்ட முறைகள் மற்றைய நாட்டாராற் கடைப்பிடிக்கப்பட்ட முறைகளுக்கு மேம்பட்டதென்று சொல்லவில்லை. ஆயின், என்ன கருத்தோடு அந்நிய பாஷையைக் கற்பிக்கின்றார்களோ அக்கருத்துக்கிசைய அதன் தன்மை முதலியவைகளை யாராய்ந்து அதற்கேற்ப முடித்து நடத்தி வருகின்றனரென்றே சொல்லலாம். முறைகள் பலவுளவாயினும் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஒரே வகையான முறைகளையே கொண்டொழுக ஜெர்மனியிற் காணலாம். அதற்கேற்ற உபாத்தியாயர்களும் தம் உள்ளத்தில் ஒரே எண்ணமுடையராய்ப் போதித்து வருவதால் அந்நிய பாஷையையறிவதால் அடையக்கூடிய பலன் முழுவதையு மடைகின்றனர். இவ்வகைய ஒத்த ஆராய்ச்சித்திறமும், அதனாலடைந்த முடிபும், சென்னைப் பிரதேசப் பள்ளிக்கூடங்களில் குறைவுபட்டிருப்பதைக் காண்கின்றோம்.

இங்ஙனம் அநுஷ்டிக்கப்படு முறைமூன்று பிரிவாயிருந்து ஆசிரியர்களுக்கு உள்ளக்கிளர்ச்சியை யுண்டுபண்ணிப் போதிப்பிக்கின்றதென்று சொல்லலாம். அவை லௌகிகத்திற்கொத்த முறை, அநுபவத்திற்கொத்த முறை, பொதுமுறை என்னப்படும். அந்நியபாஷையைக்கற்கும் மாணுக்கர், அப்பாஷையால் வேறு தேசத்தாரது சரித்திரம், அறிவு, நடை, ஆசாரம் முதலியவைகளை யறிந்து அவசியமானல் அதன்படி யொழுகவும் தூண்டப்படுவர். அன்றி அப்பாஷைக்குரியாரோடு சம்பாஷிக்கவும், விவகாரம் புரியவும், தத்துவவாராய்ச்சி செய்யவும் இடங்கொடுக்கும். இதுவுமன்றி பாஷா ஞானமிகுதியுமடைய எண்ணங்கொண்டார் அந்நியபாஷையிலுள்ள இலக்கணநூலையும், இலக்கிய நூலையும் முறையாய்ப் படித்துணர்வதால் தம்பாஷையிலும் அபிவிருத்தியடைவதல்லாது பிறபாஷைக்கும் தம்பாஷைக்குமுள்ள தாரதம்மியத்தைப் பகுத்துணர்ந்து பாஷைகளு

க்குப் பிறப்பிடமாகிய தாய்ப்பாஷைக்கு எவ்வகைய நிலையில் அப்பாஷைகளிருக்கின்றன வென்றும் பிரித்துணரச் சக்தியுடையவராகின்றார்கள்.

இம்முறைகளை வேறு பிரித்துக் கூறலாமாயினும் அவை தம்முள் வித்தியாச முடையனவாகவாவது முறண்படுவனவாகவாவது இருப்பதாய்த் தோன்றவில்லை. இம்மூன்று முறைகளையும் ஜெர்மானியர் கைக்கொண்டு பல வகுப்புக்களில் உபயோகிக்கின்றனர். மூன்றாவதாகிய பொது முறையைப் பாடசாலைகளினின்று நீக்கி அதற்குரிய இடமாகிய சர்வகலா சங்கத்தில் அநுஷ்டிக்கின்றனர். இரண்டாவதாகிய அனுபவத்திற் கொத்த முறையே மிக்க உபயோகமானதால் அதனை மத்தியதரக் கலாசாலைகளிலும், கைத்தொழிற் சாலைகளிலும் அநுஷ்டிக்கின்றனர். முதல் முறையாகிய லௌகிக முறை உயர்தரப் பாடசாலைகளில் தலையாய் நின்று அதிற் பயிலும் மாணாக்கர்களுக்கு அந்நியபாஷா ஞானத்தையும், அந்நியரது தன்மையையும் விளக்கி அதன்மூலமாய் அறிவை விருத்தி படுத்துகின்றது. அந்நியபாஷையைக் கற்பதற்கு என்ன முகாந்தரமிருக்குமோ அதுவே பிரயோஜன மாயிற்றென்று சொல்லத்தடையொன்றுமிராது.

சென்னைப் பிரதேசத்தில் இம்முத்திறத்தனவாய முறைகளையும், அதன் குணகுணங்களையும் சிந்திப்பதாகவும், சீர்தூக்குவதாகவுந் தோற்றவில்லை. உபாத்தியாயர்களெல்லாம் மெற்றிகுலேஷன் பரிக்ஷையையே முதன்மையாக வைத்துக்கொண்டு அப்பரீக்ஷயாலடைந்த பிரயோஜனத்தைக் காகிதத்திற் கண்டுகொள்கின்றனர். சர்வ கலாசங்கமும் இங்கிலீஷ்பாஷையாலடையக்கூடியபலனை விளக்கமாய் எடுத்துக் காட்டவில்லை. ஆயினும் இச்சங்கமும், பள்ளிக்கூடங்களும் கூடி கவர்ன்மெண்டு உத்தியோகத்திற் கருகராக ஜனங்களைப் போதுமான அளவு படிக்கவும், திருத்தமாய் எழுதவும், பேசவும் செய்தனவென்பதிற் சந்தேகமில்லை. இக்கருத்து நமக்கு உடன்பாடானது அல்லவென்ப தொருபுற மிருப்பினும் ஒரு வகையில் பொருத்தமுடையதென்றே சொல்லலாம்.

இங்கிலீஷ் பாஷையைக் கற்பதில் இந்தியர்களும் ஜெர்மானியர்களும் வித்தியாசமான கருத்துடையவர்களா யிருக்கின்றார்களென்பதற்கு ஒரு முகாந்தரமுண்டு. ஆங்கிலேயர் அரசாளுவோராயும், அந்தஸ்துடையோராயும் இந்தியாவிலிருப்பதால் அவர்களோடுவாழவும், ஜீவிக்கவும் இருக்கும் ஒவ்வொரு சுதேசியும் அப்பாஷையைத் தாராளமாய் எழுதவும் பேசவுங் கற்றிருக்கவேண்டிய தவசியமாகின்றது. இதனால் முற்கூறிய மூன்று முறைகளும் தலை தடுமாறுகின்றன. (இன்னும் வரும்.)



---

## TIT-BITS.

### விநோதக் கூற்றுக்கள்.

(i) குடியானவன் ஒருவன் தன் குமாரனைக் கூட்டிக்கொண்டு ஓர் உபாத்தியாயரிடம் சென்று "ஐயா! என் குமாரனைப்படிப்பிக்க எவ்வளவு செல்லும்"? என்று கேட்டான். அதற்கு உபாத்தியாயர் "ஐம்பதுரூபாய் செல்லும்" என்றார். அதைக்கேட்ட குடியானவன் மனந்திடுக்கிட்டு "ஐயையோ ஐம்பது ரூபாயா! ஐம்பது ரூபா யிருந்தால் அழகான எருது ஒன்று வாங்குவேனே" என்றான். அதன்மேல் உபாத்தியாயர் ஐம்பது ரூபாய்க்கு ஒரு எருது வாங்கினால், அப்போது உன்னிடம் இரண்டு எருதுக்கள் இருக்கும் என்றார். குடியானவன் அதைக் கேட்டு இரண்டெருதுகள் எப்படிஇருக்கும்? என்றான். ஐம்பது ரூபாய்க்கு வாங்கும் எருது ஒன்றோடு படிப்பில்லாத உன் குமாரனும் ஒரு எருதாயிருப்பான் என்று கூறினார். இதைக்கேட்ட குடியானவன் வெட்கமடைந்து தன் மகனைப் படிப்பிக்கலானான்.

(ii) ஒரு ஊரில் தாசில்தார் ஒருவர் இருந்தார். அவருக்கு இரவில் நித்திரை உண்டாவதில்லை. அதைப்பற்றி ஒருநாள் அவர் தன் சிநேகர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தார். சிநேகர் ஒருநாள் தமதுவீட்டில் புராணப்பிரசங்கம் வைத்துத் தாசில்தாரை வரவழைத்தார். தாசில்தார் பிரசங்கத்தைக்கேட்டுககொண்டே தூங்கிவிழுந்தார். அப்போது தாசில்தார் ஆ! ஆ! இதுவரையில நமக்கு இந்தவைத்தியம் தெரியாமற்போயிற்றே; பிரசங்கமே நித்திரைக்கு கைகண்ட மருந்து என்று தன்னுள் தேர்ந்துகொண்டு ஒரு புராணிகரை வரவழைத்து, "ஐயா! உமக்கு மாதம் 15ரூபாய் கொடுக்கிறேன், நீர் தினந்தோறும் இவ்விடம்வந்து நமக்கு நித்திரைவருமளவும் பிரசங்கிக்கவேண்டும்" என்றார். பிரசங்கியார் வயிற்றின் கொடுமையாலும், அதிகார ஆக்கினையாலும் அமைதியோடு ஒப்புக்கொண்டார். அன்று முதல் நித்திரைப்பிரசங்கம் நடந்தேறிவந்தது. ஒருநாள் தாசில்தார் கலெக்டரைக் காணப் போனார். அங்கு கலெக்டருடைய குதிரை வயிற்று வலியால்

வாதையுற்று நித்திரையின்றித் தத்தளித்துக்கொண்டிருந்தது. அப்போது கலெக்டர் மனம் வருந்தித் தாசில்தாரைப்பார்த்து இக்குதிரை யிப்படியே இராவெல்லாம் நித்திரையின்றி அவஸ்தைபடுகிறது என்ன செய்யலாம்? என்றார். அதைக்கேட்ட தாசில்தார் இதற்குத்தானா தாங்கள் வருந்துகிறீர்கள், ஒரு நொடியில் இந்தக் குதிரைக்கு நித்திரை வரச்செய்ய என்னிடம் தக்க மருந்து ஒன்று இருக்கிறது, அது கைகண்ட ஔஷதம் என்று சொல்ல அப்படிப்பட்டதை உடனே தருவிக்கவேண்டும் என்று கலெக்டர் கேட்டார். அப்போது தாசில்தார் சேவகனைக் கூப்பிட்டு அடே! ஒரு ஓட்டம் பிடித்து உடனே நமது பிரசங்கியாரை அழைத்துவாவென்றார்.. அவன் அப்படியே ஓடினான். அங்கிருந்தவர்கள் பிரசங்கியாருக்கு வைத்தியமும் தெரியும்போலிருக்கிறது என்று எண்ணினார்கள். பிரசங்கியார் வந்தவுடனே தாசில்தார் பிரசங்கியாரைப்பார்த்து ஐயா! இரவெல்லாம் இந்தக் குதிரைக்கு நித்திரை யில்லையாம், இன்றுதான உமமுடைய திறமையைக் காட்ட வேண்டும், இது பெரிய இடம், ஆகட்டும் பிரசங்கம் என்றார். அதைக் கேட்ட பிரசங்கியார் மனங்கசிந்தனர். சூழவிருந்தவர்களும் கலெக்டரும் கைகொட்டி நகைத்தார்கள். இவ்வாறே கல்வியருமை யறியாத சிலர் முன்பின் பாராது பேசுவது வழக்கம். சில பிரபுக்கள் கவுரவத்திற்காகவே சமாசாரப் பத்திரிகைகளை வாங்கி அதைத்திருப்பியும் பாராமல் மேஜைமேல் போட்டு வைப்பதும் வழக்கம். இவர்களெல்லாம் பாஷாபிமான முள்ளவர்க ளாவார்களா?

## GAZETTE NOTIFICATIONS.

### கெஜிட் விளம்பரங்கள்.

ம-ா-ா-ஸ்ரீ. ராவ் பகதூர் நாகோஜிராவ் அவர்கள், பி. ஏ., கும்பகோணத்தில் வேறு அலுவலில் இருக்கையில், வடக்கு வட்டப் பாடசாலைகளின் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ, வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள் பி. ஏ., தென் வட்டப் பாடசாலைகளுக்கு இன்ஸ்பெக்டராக,

தென்வட்டப் பெண்பாடசாலைகளின் இன்ஸ்பெக்ட்ரெஸ் மிஸ். ஆர்நால்ட் அம்மாள் மத்தியவட்டப் பெண்பாடசாலைகளின் இன்ஸ்பெக்ட்ரஸ் ஆக.

வடக்குவட்டப் பெண்பாடசாலைகளின் இன்ஸ்பெக்ட்ரஸ் மிஸ்ட்ரஸ் ரீனியஸ் அம்மாள் இரண்டாவது இன்ஸ்பெக்ட்ரஸ் ஸ்தானத்தை வகிக்க, ஆனால் வடக்கு வட்டத்திலேயே வேலைபார்க்க.



இந்திய செக்ரிடெரி அவர்களால் சென்னை ராஜதானியில் இன்ஸ்பெக்ட்ரஸ் வேலைபார்க்க நியமிக்கப்பட்ட மிஸ். லின்ச் அம்மாள் மூன்றாவது இன்ஸ்பெக்ட்ரஸ் ஆக தென்வட்டத்தில் வேலைபார்க்க.

மதராஸ் ரேஞ்சு அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்ட்ரஸ் மிஸ். பெர்நார்ட் அம்மாள் தன்வேலையோடு மத்திய வட்டப் பெண்பாடசாலைகளின் இன்ஸ்பெக்ட்ரெஸ் வேலைபார்க்க. மிஸ். ஆர்நால்ட் அம்மாள் தம் வேலையை ஒப்புக்கொண்டபிறகு மிஸ். பெர்நார்ட்அம்மாள், மிஸ். ஸ்காட் கவர்ட் அம்மாள் லீவிலிருக்குந்தனையும், அல்லது மறு உத்திரவு வரையில் சென்னை பிரிஸிடென்ஸி ட்ரெயினிங் பாடசாலையின் சூப்ரின்டென்டாக விருக்க. கள்ளிக்கோட்டை பெண்பாடசாலைகளின் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்ட்ரெஸ் மிஸ். பாடர்சன்அம்மாள், மிஸ். பெர்ட்நாட் அம்மாள் வேறு வேலையில் இருக்கும் வரையில் மதராஸ் பெண்பாட சாலைகளின் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்ட்ரெஸ் ஆகயிருக்க. ஆனால் கள்ளிக்கோட்டை பெண்பாட சாலைகளின் அஸிஸ்டெண்ட் இன்ஸ் பெக்ட்ரெஸ் ஆகவே வேலைபார்க்க

சென்னை பிரிஸிடென்ஸி ட்ரெயினிங்ஸ்கூல் முதல் உதவி உபாத்தியாயினி மிஸ். பார்ஸன்ஸ் அம்மாள் பி.ஏ., எல். டி., மதராஸ் பெண்பாடசாலைகளின் இன்ஸ்பெக்ட்ரெஸ் ஆக வேலைபார்க்க. (மிஸ். பெர்நார்ட் அம்மாள் ட்ரெயினிங் ஸ்கூல் வேலையை ஒப்புக்கொண்ட பிறகு மிஸ். பாஸன்ஸ் அம்மாள் அந்தவேலையை ஒப்புக்கொள்ளவேண்டும்.)

## TEXT-BOOKS.

### பாட புத்தகங்கள்.

கெவர்மென்டாரால் அங்கீகரிக்கப்படாத புத்தகங்களை அநேக அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் இன்னம் உபயோகித்திருப்பதாயும், மாணாக்கர்கள் பாடபுத்தகங்களின் குறிப்புக்களையும், தேச சரித்திரம், பூகோளசாஸ்திரங்களைக் குட்டி பாடம் செய்யத் தகுந்த புத்தகங்களையும் உபயோகிப்பதாயும், உபாத்தியாயர்களும் இவ்வித புத்தகங்களை உபயோகிப்பத்தில் தூண்டுகோலாயிருப்பது மல்லாமல் அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களைவிட இப்புத்தகங்கள் அதிகமாய் பரவத்தக்க விதத்திற்கு தாங்களே தாராளமாய் வழி விடுகிறார்களென்றும் டைரக்டர் துரையவர்களுக்குத் தெரியவருகிறது.

ஆகையால், அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களை யுபயோகிக்கும் மானேஜர்களுக்கு, சட்டபடிக்கு பாடசாலைகளை ரெகக்னிஷனின்றும் துரைத்தனப்பொருள் சகாயத்தினின்றும் நீக்கப்படுமென்று எல்லா வித்தியா அதிகாரிகளும் எச்சரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். வித்தியா அதிகாரிகள் பாடசாலையின் பரிட்சை காலத்திலும் பிள்ளைகளையும் உபாத்தியாயர்களையும் குட்டி பாடம் செய்யத்தக்க விதங்களை அனுசரித்த கேள்விகளை கேட்கா வண்ணம் கூடியளவில் ஜாக்கிரத்தையா யிருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக, அநேகவிஷயங்களில் பாடபுத்தகங்களில் அர்த்தம், விஷயவினாவிடைகளில் பரிட்சிக்கு மாதிரியில் மனப்பாடத்திற்கு நேர்தூண்டுதலாயும் புத்தியுள்ள போதனையைச் சார்ந்தல்லாமலு மிருக்கிறது. மேலும் பரிட்சை உபயோகத்திற்கு இப்புத்தகங்கள் அதிகமாய் விற்கிறதென்று நம்புவதற்கு காரணமாகின்றது. அநேக பிரைமரி பாடசாலைகளில், முக்கியமாய் போர்டு பாடசாலைகளில் கெவர்ன்மென்டாரால் அங்கீகரிக்கப்படாத புத்தகங்கள் உபயோகித்திருப்பதாயும் தெரியவருகிறது. இப்புத்தகங்களின் உபயோகத்தை உடனே நீக்கவேண்டும். இவ்விஷயங்களைப் பற்றிய ஏற்பாடுகளை அநுசரிக்காத பாடசாலைகளை, வித்தியாதிகாரிகள் அப்பாடசாலைகளின் ரெகக்னிஷனையும் பொருள் சகாயத்தையும் நீக்குவதற்கு சிபார்சு செய்யவேண்டியது.

என்றாலும், அங்கீகரிக்கப்பட்ட ஓர் பாடசாலையின் மானேஜர் அங்கீகரிக்கப்படாத ஓர்புத்தகத்தை உபயோகிக்க விரும்பினால், அப்புத்தகத்தை, டெக்ஸ்டு புக் கமிட்டியாருக்கனுப்பி, தகுதியானதாயிருந்தால், அங்கீகரிக்கப் பட்ட புத்தகப் பட்டியில் சேர்ப்பிக்க டைரக்டர் துரையவர்களுக்கு அனுப்பும்படியாய் வித்தியா அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

---

## NEWS AND NOTES.

### சமாசாரக்கொத்து.

சேர்க்கைப்பட்டியில் (Admission Register) மதம் என்னும் பத்திக்குப் பதிலாக ஜாதி என்னும் பத்தி யிருந்தால் நலமாகும்.

***

அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன்நகரத்தில் மிஸ்டர் வின்ஸ்லோ என்பவர் பறக்கும் யந்திரமொன்றைக் கண்டுபிடித்திருக்கிறாராம்.



ஜெர்மனிய தீவில் ஒன்றான ஹெலிகோலாண்டில் 17-வயதுக்குட்பட்ட பிள்ளைகள் சாராயக் கடையிலுள்ளாவது நாடகசாலையிலுள்ளாவது போகக்கூடாதென ஒரு சட்ட மேற்பட்டுள்ளது.

***

இரங்கூனில் இப்போது ஒரு விதமான நோய் கண்டிருக்கிறது. மனிதர் நடக்கும்பொழுதே விழுந்து சாவார்களாம். இந்த மாதிரி விஷயம் 5-6-பேருக்குக் கண்டிருக்கிறதாம்.

***

திருத்தி வெளிபிடப்பட்ட வித்தியாவிதியில் (Madras Educational Rules) ஆஜர்பட்டியின் (Attendance Registers) கடைசியில் நடக்கை (conduct) என்னும் ஒரு பத்தி அதிகமாய் சேர்க்கப்பட்டிருக்கிறது.

***

பல்லாரியில் ஆசார சீர் திருத்த மாதர் சங்கத்தில் சுமார் 200 பெண்டுகள் கூடினர்களாம். இதற்கு ஜானகியம்மாளென்னும் பிராமணஸ்திரி சபைத்தலைமைவகித்தார்கள். கல்வியைப்பற்றியும்,பாலிய விவாகத்தைப்பற்றியும் பேசப்பட்டது.

***

கீழ்த்திசை யுத்தத்தில், மாண்ட ஜப்பானிய வீரர்களின் குடும்பத்தாருக்கு உதவி செய்வதின் பொருட்டும் மற்றும் போரில் அங்கவீன மடைந்திருப்போர்களுக்குத் துணைபுரியும்பொருட்டும் பம்பாயிலிருக்கும் ஜப்பானியச் சங்கத்தார் இந்தியாவில் நன்கொடைகள் பெற்று வருகின்றனர். அந்நிதி இதுவரை ரூபா 94,959-10-8 ஆயிருக்கின்றது. இதன்பொருட்டுக் கொடுக்கப்படும் பணமெல்லாம் பம்பாயிலிருக்கும் யோகஹாமாநாணய பாங்கிக்காரர்களால் அங்கீகரித்துக்கொள்ளப்படும்.

***

ஸார் சக்ரவர்த்தியின் பட்டத்துக் குமாரனாகிய கைக் குழந்தையை வேலைக்காரி யொருத்தி கொதிக்கின்ற வெந்நீர்த் தொட்டியில் அமிழ்த்தத் தொடங்கிக்கொண்டிருந்தசமயத்தில் சக்ரவர்த்தினி, யார் மூலமாகவோ இந்த வஞ்சனையை அறிந்து ஓடிவந்து குழந்தையைக் காப்பாற்றிக்கொண்டார். ஸார் அரண்மனையின் வேலைக்காரிகளெல்லாம் ஒரேயடியாய் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர். ஐரோபா முழுமையும் உயர்ந்த வகுப்பினருக்குள் இந்தச் சம்பவமே பேச்சாக இருக்கின்றதாம்.

விதவை விவாகம் செய்துக் கோள்ள முன் வந்தார்.—நான் சுத்த வேலனாடு வகுப்பைச் சேர்ந்த கார்கச கோத்திரத்தி லுதித்த தெலுங்கு பிராம்மணன். வயது 30. ஒரு வேலி நிலம் உண்டு. மாயவரம்தாலூகாவில் குடித்தனம். ருதுசாந்திமுகூர்த்தம் நடப்பதற்கு முன் விதவையான ஸ்திரீயை விவாகம் செய்துகொள்ள அபிப்பிராயப்படுகிறேன். பெண்ணுக்கு விவாக காலத்தில் ரூபா 200 பெறுமான நகை போட சித்தமாயிருக்கிறேன். மணம் புரிய இஷ்டமுள்ள விதவை அல்லது விதவையின் தகப்பன், பெண் ஜாதகத்தை கோத்திரத்துடன் விவரித்து பதில் எழுதுவதற்குத் தெளிவானவிலாசமும் கொடுத்து என்பேருக்கு எழுதிக்கொள்ளலாம்.

கி. சுப்பிரமணிய ஐயர்,
குமரகோயில் அக்கிரகாரம், பொறையாறு ரங்கன்பாடி,
மாயவரம் தாலூக்கா, தஞ்சாவூர் ஜில்லா.

***

ஆபீஸ் மாற்றப்பட்டது.—சென்னை மத்திய வட்டப் பெண் பாடசாலைகளின் இனஸ்பெக்ட்ரஸ் ஆபீஸ், சென்னை, மைலாப்பூர், எட்வர்ட் எல்லியட்ஸ் ரோட், டவுடன் லாட்ஜில் (Doveton Lodge, Edward Elliot's Road) மாற்றப்பட்டது.

***

வயது சென்ற மனுடன்.—நியூயார்க்கில் ஒருவன் சென்ற மீ 13உயன்று 130ம் வருடத்திய ஜனனநாட்கொண்டாட்டம் நடத்திப் பூரண சுகத்தோடும், பலத்தோடு மிருக்கின்றானாம்.

***

ஜப்பானிய மாதர்.—ஜப்பான் தேசத்திலுள்ள ஸ்திரீகளுட் பலர் இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் தாம் தமது தேசத்திற்குச் செய்யக்கூடிய ஊழியம் வேறொன்று மில்லாமையால் இப்பொழுது யுத்தத்தில் காயமடைந்து வைத்தியசாலையிற் கிடக்கும் யுத்த வீரரைப் பராமரிப்பதற்கு வலிந்து சென்றுகொண்டுவருகின்றனர். பலர் ஊர் தோறுஞ் சென்று பொருட் சேகரித்து அப்போர் வீரர்களின் குடும்பத்தார் பலரைக் காப்பாற்றி வருகின்றனர். உண்மையாக இத்தேசத்துச் சனங்கள் தங்கள் சக்கரவர்த்தியாரைத் தெய்வமென்றே மதித்து நடக்கின்றனர்.

---

# நல்லாசிரியன்.

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

| வயது 1. | 1905வரு ஜூலைமீ | மாதம் 2. |
|---|---|---|

## THE INDIAN KINDER GARTEN.

## செல்வச் சிறுவர் சிங்காரத் தோட்டம்.

கிண்டர்கார்டன் என்றால் பிள்ளைகள் தோட்டம் என்று பொருள். (Kinder = Child = பிள்ளைகள் ; Garten = Garden = தோட்டம்) ஆகையால், இனி இதனைச் செல்வச் சிறுவர் சிங்காரத் தோட்டம் எனச் சொல்வோம். அதாவது, சிறுவர் மனமென்னும் நிலத்தில் கல்வி என்னும் விதையை நாட்டி, அறிவென்னும் விருக்ஷங்களை விருத்தி செய்வதென்பது இதன் உள்ளுறைப் பொருளாம்.

சிறுவர்களுக்கு ஆரம்பத்திலே கல்வியை எழுத்தின் மூலமாய்ப் போதிக்காமல் அதை விளையாட்டின் மூலமாய் விருத்திசெய்வது கிண்டர் கார்டன் போதனையின் முக்கிய நோக்கம்.

அதனால், கிண்டர் கார்டன், முக்கியமாய் மூன்றுவிதங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவை

1. வஸ்துக்கள், தொழில்கள் முதலியன,
2. கதைகள்,
3. பாட்டுக்கள் என்பனவாம்.

இம்மூவகைப் பிரிவுகளுள் ஒவ்வொன்றும் சிறுவர்களுக்கு அதிக உற்சாகத்தை யுண்டாக்கி அவர்கள் மனத்தைத் தன்வயமாக்கக்கூடியது என்பதை நாம் அநுபவத்தில் காண்கின்றோம்.

சிறு குழந்தைகள், தங்கள் கண்ணில் காணும் ஒவ்வொருவஸ்துவையும் உள்ளும் புறமும் பரிசோதிக்க அவாவுகின்றன. எவ்வாறெனில், இவ்வுலகில் காணும் ஒவ்வொருவஸ்துவும் ஒரு சிறு குழந்த

க்கு நூதனமும், அற்புதமு மானதாக இருக்கும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. சாதாரணமாய்க் குழைந்தைகள் ஏதேனும் ஒரு பொருளைக்கண்டால் அதைத் தமக்குக் கொடுக்கும்படி யழுகின்றன. அப் பொருளைக் கொடுத்தவுடனே அழுகையும் நின்று விடுகிறது. பிறகு அக்குழந்தை தான் பெற்ற பொருளைக் கையில் பிடித்து முன்னும் பின்னும் முழுவதும் நன்றாய்ப் பார்த்து முடிந்தவுடன் அதைத் தன் வாயில் வைத்துக்கொள்கின்றது. தின்னக்கூடியதானால் தின்றுவிடும், தின்னக்கூடாததாகவும், கடினமுள்ளதாகவும் இருந்தால் அதைத் தரையில்போட்டு அடிக்கிறது. உடைந்துவிடக் கூடியதாயிருந்து உடைந்து விட்டால் அதன் உட்புறமெல்லாம் நன்றாய்ப் பார்க்கிறது. பிறகு முதலில் கொண்டதுபோலவே அழ ஆரம்பிக்கிறது. குழந்தைகள் இப்படிச் செய்வதன் முகாந்தரம் என்னவென்று யோசித்தால் அவற்றிற் கெல்லாம் தக்க நியாயங்கள் புலப்படுகின்றன. அவற்றை விவரிப்போம்.

ஒரு குழந்தை ஏதாவதொரு வஸ்துவைப் பார்த்தவுடனே அது தனக்கு வேண்டுமென்று கருதி, கேட்கத் தெரியாமையால், அழுகின்றது. அன்றி, குழந்தைப் பருவத்தில் அழுதல் ஒன்றே அவர்கள் பாஷையாக இருக்கிறது. பசி எடுத்தாலும், நோய் கண்டாலும், ஏதாவதொன்று வேண்டியிருந்தாலும் மற்றும் எந்தக்காரியமானாலும் பேச அறியாத குழைந்தைகள் அழ ஆரம்பிக்கின்றன. அப்போது அதன் பெற்றோர் பலவகை முயற்சிகளால் அதன் எண்ணத்தை உணர்ந்து அதைப் பூர்த்திசெய்ய நேரிடும். அதுபோல் ஒருவஸ்துவைக்கண்டு குழந்தை அழும்போது பெற்றோர் அதற்கு அவ்வஸ்துவைக்கொடுக்கிறார்கள். கொடுத்தவுடன் குழந்தை அதை வாங்கிப்பார்ப்பதால் அது இன்ன நிறமுடையதென்றுஅறிகிறது. அவ்வஸ்துவைக் கைகளால் பிடிப்பதனால் அது கடினமானதா? அல்லது மிருதுவானதா? எனத்தெரிந்து கொள்ளும். பின்பு அது என்ன சுவையுடையது எனக்கண்டறிய அதை வாயில்வைத்துக் கொள்கின்றது. அது தின்னக்கூடாதவஸ்துவானால் அதன் உட்புறத்தையும் பரிசோதிக்க எண்ணி அதைத் தரையில் போட்டுத்தட்டி உடைக்கிறது. ஒரு வஸ்துவைத் தட்டுவதனால் அது இன்ன சத்தமுடையதென்றும் தெரிந்து கொள்ளும். அவ்வாறு தட்டும்போது அது உடைந்து விட்டால் உட்புறத்தையும் உற்றுப்பார்க்கிறது.

அது மேற்புறத்தைவிட உட்புறம் விநோதமுள்ளதாகத் தோன்றினால் அக்குழந்தை முன்னிலும் ஊக்கத்தோடு உற்றுப்பார்க்கிறது. பரிசோதித்த பின்பு அவ்வஸ்துவை முன் இருந்ததுபோலவே செய்துவிட உடைந்த துண்டுகளை ஒன்று சேர்க்கிறது. அது ஒன்று சேராமையால் குழந்தை பின்னும் அழ ஆரம்பிக்கிறது. அப்போது உடைந்ததை எடுத்துக்கொண்டு அதேமாதிரியான முழு வஸ்துவை அக்குழந்தையின் கையில் கொடுத்து விட்டால் அழுகை நின்று விடும். இவ்வகைக்காரணங்களை உற்று நோக்கினால் குழந்தைகளுக்கு வஸ்துக்களைப் பரிசோதிக்கும் குணம் இயற்கையாய் அமைந்திருக்கின்றதென்பது நன்கு விளங்குகின்றது. ஆகையாற்றான் ஆரம்பத்தில்எழுத்துக்களைப் போதித்து குழந்தைகளுக்குச் சிரமத்தையும், மனவெறுப்பையும் மந்த புத்தியையும் உண்டாக்காமல் அவர்களிடத்தில் இயற்கையாய் அமைந்துள்ள பொருளாராய்ச்சி யறிவைக் கொண்டே கல்விகற்பிப்பது உத்தமமென்று இக்கிண்டர்கார்டன் போதனை ஏற்படுத்தப்பட்டது.



(இன்னும் வரும்)

# LIFE OF FROBEL.

## ப்ரொபெல் என்னும் பாலபோதகர் சரித்திரம்.

(12-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மூன்றாவது வருஷம் முடிகிற சமயத்தில் அந்த யஜமானன் தான் அதுவரை அவர் விஷயத்தில் செய்துவந்த உபேக்ஷை வெளிவராதிருக்கவேண்டுமென்று, ப்ரொபெலைப்பற்றி அவர் தகப்பனார்க்குத் தப்பான அபிப்பிராயங்களை எழுதியனுப்பினான். அதுகண்டு அவருடைய மாற்றாந்தாய், இனி நாம் நம் இஷ்டப்படி நடத்தலாமென்றும், ப்ரொபெல் வீட்டிலேயே தான் அற்பவேலைக்காரனாக விழுந்துகிடக்கவேண்டுமென்றும் எண்ணி அகமகிழ்ந்தாள்; ஆயினும் தாம் வேலையிலும் காலம் கழிந்தவுடனே ப்ரொபெல் தம் யஜமானனை நிர்ப்பந்தித்துச் சரியான யோக்கியதாபத்திரம் பெற்றுக்கொண்டதனால் அவருடைய தந்தையும் அவரும் ஒத்திருக்கும்படியாயிற்று. பின்பு ப்ரொபெல் தம்மை வித்தியாசாலைக்கு அனுப்பும்படி உத்திரவுகேட்க, அதற்கு அவர்கள் அப்போதும் உடன்படவில்லை; ஆயினும் ப்ரொபெல் சும்மாவிராமல் தம்முடைய சகோதரர் ஒருவரைக் காணப்போக, அந்தச் சகோதரர் தம் தாயாருடைய சொற்ப ஆஸ்திக்கு விசாரணைத் தலைவராயிருந்தவரோடு ஏதோ ஒரு ஏற்பாடுசெய்து வித்தியாசாலையில் இரண்டு வருஷகாலம்

வாசிப்பதற்குப் போதுமான பணம் சேர்த்துக்கொடுத்தார். ஆயினும் அவருடைய துரதிர்ஷ்டத்தால் அந்தச் சொற்பப்பொருள் சீக்கிரமே செலவழிந்துபோக, அவர் சிறிதும் யோசனையில்லாத சாதாரணமான பிள்ளைகளைப்போலவே கடன்பட்டு, அதற்காக வித்தியாசாலைச் சிறையில் தள்ளப்பட்டு அங்கே இரண்டுமாதகாலம் கிடந்தார். அப்படிச் சிறையிலிருக்கையிலும் அவர் காலத்தை வீண்போக்கவில்லை; மிகவருந்தி லத்தீன் பாஷை கற்றதுமன்றி அங்கே எந்தெந்தப் புத்தகம் அகப்படுமோ அதையெல்லாம் வாங்கிப் படித்துக்கொண்டிருந்தார். பின்பு அவருடைய தகப்பனருக்குத் தேகம் சவுக்கியமில்லாமற்போகவே அவர்க்குத் துணையாகத் தன் கிராமத்துக்குப் போப்படி நேரிட, தந்தை இறக்குமளவும் அவர் அவ்விடத்திலேயே இருந்தார். அக்காலத்தில் தந்தையும் மகனும் ஒருவர்க்கொருவர் இருக்கும் அந்தரங்கமான அபிப்பிராயத்தை அறிந்துகொண்டிருக்கலாம். தந்தை இறந்தபிறகு ஒருநாள் ப்ரொபெல் "இப்பொழுதாவது நம்முடைய தந்தை நம்மிடத்தில் உள்ளூற நேசித்தவனென்று திருப்தியாயிருப்பாரா?" என்று சொன்னார்.

இப்பொழுது ப்ரொபெலுக்கு இருபது வயது. இனி அவர் இஷ்டப்படி நடக்கலாம்; எதற்கும் சுவதந்திரர்தான். அப்போது அவருக்குச் சாதாரணமான ஒரு ஊர்நிலத்திற்கு விசாரணைத்தலைவராக ஒரு உத்தியோகம் கிடைத்தது. அதில் ஒழிவுவேளைகளிலெல்லாம் வித்தியாப்பியாசம் செய்வதும், தமக்குக் கிடைத்தவரையில் பிரகிருதிப் பொருள்களின் சரித்திர முதலிய உபயோகமான புத்தகங்களைப் படிப்பதுமாயிருந்தார். அப்படி வேலைசெய்துவருகையில், நிலங்களை விசாரணைசெய்கிறவனுக்குக் கட்டடம் கட்டுகிற வேலையும், சிற்பமும் சிறிது தெரிந்திருக்கவேண்டுமென்று அவர்க்குத் தோன்றவே, சிற்பசாஸ்திரமும் அப்பியசிக்கும்படி பிராங்குபோர்ட்டுக்குச் சென்றார். இந்தப் பிரயாணமே ப்ரொபெலுடைய வாழ்க்கை மாறுபடுவதற்கு இடமாயிருந்தது. அவ்விடத்தில் போதனாப்பியாச பாடசாலையின் விசாரணைத்தலைவரோடு அவருக்குப் பழக்கம் உண்டாக, அந்த விசாரணைத்தலைவர் இவரைப் பார்த்து, உபாத்தியாய உத்தியோகத்திற்கு இவர் மிகவும் ஏற்றவரென்றறிந்து, சிற்பசாஸ்திரம் படிப்பதைவிட்டு உபாத்தியாய உத்தியோகம்பெற உமக்கு விருப்பமானால், முதலிலேயே நான் உமக்கு இந்தப் பாடசாலையில் உதவி உபாத்தியாயவேலை கொடுக்கிறேன் என்றார். இந்த வேலை ப்ரொபெல் சற்றும் எதிர்பாராத வேலையேயாயினும் அவர்



அதையும் அங்கீகரியாமல் மறுத்தே இருப்பார்; முதலில் அவர் வேளாளனாய் அமர்ந்ததுமுதல் பல அதிகாரிகளிடத்தினின்றும் பெற்ற யோக்கியதா பத்திரிகைகள் யாவும் அத்தருணத்தில் காணாமற்போகவே, அவர் அந்தப் பாடசாலை விசாரணைத் தலைவருடைய வேண்டுகோளுக்கு உடன்பட்டு உபாத்தியாயரானார்.

அந்த உபாத்தியாய உத்தியோகம் பெற்றவுடனே தமக்கேற்ற சரியான உத்தியோகம் இதுவேயென அவருக்குத் தோன்றியது. முப்பது பிள்ளைகளுள்ள ஒரு வகுப்பின்முன்னே நான் முதலில் போய் நின்றபோது, பறவைகளுக்கு ஆகாயம்போலவும், மீன்களுக்கு நீர்போலவும், எனக்குத் தக்க வசதியில் நான் போய்ச் சேர்ந்தது போல் எனக்கு அதிக சவுக்கியமும் சந்தோஷமும் உண்டாயின" என்று அவர் தாமே சொல்லுகிறார் "நான் நெடுநாளாய் உபாத்தியாயனாயிருந்ததுபோலவும், அந்த வேலைக்காகவே நான் பிறந்திருப்பதுபோலவும் எனக்கு உடனே தோன்றியது" என அவர் தம் சகோதரருக்குக் கடிதம் எழுதினார்.

வேலைகளின் நுட்பத்தைத் தாம் செம்மையாய்த் தெரிந்துகொள்ளக்கூடாதபடி தமக்கு ஒரு வியாபாரமும் அவ்வளவு வருத்தமானதல்ல, எந்தப் படிப்பும் தமக்கு அவ்வளவு கடினமானதல்லவென்று ப்ரொபெல், வேளாளத்தொழில் செய்துவந்தகாலத்தில் எண்ணியிருந்தபடியே, இப்போது பிரவேசித்த வேலை தமக்கு மிகவும் ஏற்றதாயிருக்கிறதென்று கண்டார். தமக்கு முக்கியமான கடமைகளை நிறைவேற்றக்கூடாதபடி அவ்வளவு வருத்தமான வேலை ஒன்றுமில்லையென்று அவர்க்கு நன்றாய்த் தெரிந்தது. பாடசாலையில் முதலில் நேர்ந்த விடுமுறைக்காலத்தில் அவர் ஸ்விட்ஜர்லாந்திலிருந்த பெஸ்தலோகி என்னும் மிகப் பிரசித்திபெற்ற கல்விப்பயிற்சி செய்விப்பவரிடத்தினின்றும் தம்மால் கூடியதையெல்லாம் கற்றுக்கொள்ளவேண்டுமென்று அவ்விடத்திற்குச் சென்றார். மறுபடி அவர் திரும்பிவந்து தம் வேலையில் புகுந்தபின்பு பார்க்கையில் அவருடைய அபிவிருத்தி மிகவும் அதிகமாயிருந்தது. மற்ற உபாத்தியாயர்களும், பிள்ளைகளுடைய பெற்றோர்களும், பிள்ளைகளைப் பரீக்ஷிப்பவர்களுமாகிய யாவரும் இவருடைய வகுப்பைப் பார்த்து, இது எல்லாப் பாடசாலைகளுக்கும் நிதர்சனமான பாடசாலைக்கு நிதர்சனமான வகுப்பாயிருக்கிறதென்று சொல்லிக் கொண்டாடினார்கள். ஆயினும் ப்ரொபெல் மாத்திரம் தாம் எல்லா விஷயங்களையும் இன்னும் பூர்த்தியாய்த் தெரிந்துகொள்ளவில்லையென்றே எண்

ணியிருந்தார். இன்னும் கற்கவேண்டுமென்றே அவர்க்கு அதிக ஆவல் உண்டாயிற்று. அதிலும் முக்கியமாய்ப் பிள்ளைகளுக்குக் கற்பிக்க நல்ல முறைகளைத் தெரிந்துகொள்வதற்கே அதிக அவாக் கொண்டு, அதற்காக அவர் அந்தப் போதனாப்பியாச பாடசாலையை விட்டுவிட்டுத் தனியே படிப்பதற்கே தன் காலத்தையெல்லாம் விநியோகப்படுத்தலானார்.

இது நடந்த சிலநாளைக்கெல்லாம் சிறிதுகாலமாய் அவரை அறிந்து அவர் வித்தை கற்பிப்பதில் மிகவும் வல்லவரென்று தெரிந்துகொண்டிருந்த ஒரு பெருமாட்டி தன் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும்படி அவரை வேண்டிக்கொண்டாள். அப்பிள்ளைகளுக்கு ஆதியில் செம்மையான சிக்ஷையில்லாமற்போனதனால், அவர்கள் மிகவும் அடங்காதவர்களாய்ப் போனதுகண்டு அவர்களைப்பற்றித் தாய் மிகவும் விசாரப்படும்படியாயிற்று. அவள் வேண்டிக்கொண்டபடியே ப்ரொபெல் அங்கீகரித்து, அப்பிள்ளைகளை முற்றும் தம் ஆதீனத்திலேயே விட்டுவிடுவார்களானால், அதிக சீக்கிரத்தில் அவர்களுடைய கெட்ட வழக்கங்களை வேர்ப்பிடுங்கலாகப் பிடுங்கிவிடலாம் என்றெண்ணி, அவர்கள் கெட்டபிள்ளைகளோடு சேர்ந்து கெட்டுப்போகப்போகிறார்களே என்கிற பயம் சிறிதும் இல்லாமல் அப்பிள்ளைகள் சுகமாய்ச் சஞ்சரிக்கவும் செடிகளையும் ஜந்துக்களையும் பார்த்துப் பழகவும் ஏற்றதான ஒரு நாட்டுப்புறத்துக்கு அவர்களை அழைத்துக்கொண்டுபோக அனுமதி பெற்றுக்கொண்டார். ஆயினும், சிலகாலத்துக்குப் பிறகு, அந்தப் பிள்ளைகளை இப்படி ஜனங்களுடைய சகவாஸமேயில்லாமல் தனியே வைத்துக்கொண்டிருப்பது நல்லதல்லவென்றறிந்து ப்ரொபெல், அவர்களை ஸ்விட்ஜர்லாந்திலே பெஸ்தலோகியின் பாடசாலைக்கு அழைத்துக்கொண்டுபோக அனுமதி பெற்றுக்கொண்டார். அங்கே அவர் அந்தப் பிள்ளைகளோடு தாமும் விசேஷமாய்க் கற்றுக்கொண்டு மூன்றுவருஷ காலம் இருந்தார். அவ்வளவு ஞானம் சம்பாதித்தும் அதிலும் திருப்தி பிறக்காமல் அவர் கொஞ்சம் கையில் பொருள் சேர்த்துக்கொண்டு உபாத்தியாயராயிருந்த வேலையைவிட்டுவிட்டு மறுபடியும் காடிஞ்சன் சர்வகலாசாலையில் படிக்கப்புகுந்தார். அங்கிருக்கும்போது அவர் தாதுப்பொருள்களைப்பற்றிப் படித்து, அதில்மிக்க வல்லவரானார். அந்த வித்தியாசாலையை விட்டவுடனே அவர் பர்லின் நகரத்திலிருந்த ஒரு பிரசித்தரான உபாத்தியாயரிடத்தினின்றும் தாதுப்பொருள்களைப்பற்றிய சாஸ்திரம் படிக்கலாமென்று அப்பட்டணத்தில் ஒரு பாடசாலையில் உபாத்தியாயராய் அமர்ந்தார்.



ப்ரொபெல் பர்லின் நகரத்திலிருந்தபோது அவருடைய சுதேசத்தில் சண்டை உண்டாயிற்று. அக்காலத்தில் ஜர்மனிதேசம் சுதந்திரதேசமாயிராததுபற்றி அதற்காகவே அந்தச் சண்டை ஆரம்பமாயிற்று. அதுதெரிந்து ப்ரொபெல் தமது தேசத்துக்குச் சகாயம் செய்யவேண்டுவது தம்முடைய கடமையென்றெண்ணி, தாம் கைக்கொண்டிருந்த உபாத்தியாயத் தொழிலை விட்டுவிட்டு, தம்மைத் தாம் காத்துக்கொள்ளமாட்டாத சிறுவர்களுக்காகத் தாம் சண்டைசெய்யப் போர்க்களத்திற்குப் போனார். அங்கிருந்த போர்வீரர்களுள் பர்லின் நகரத்து வித்தியார்த்திகள் இரண்டுபேர் இருந்தனர். அவர்கள் ப்ரொபெலைப்பார்க்கிலும் மிக்க இளையவர்களாயிருந்தாலும், அவர்கள் ப்ரொபெலினுடைய நற்குணங்களாலும் சமத்காரமான சம்பாஷணையினாலும் அவரை அதிகமாக நேசிக்கலானார்கள். அப்போது அம்மூவருக்கும் ஆந்தரமான நேசமுண்டாகி அது அவர்களுடைய ஆயுளளவும் நீடித்திருந்தது.

வெயிலெரிக்கும்போது பட்டாளம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகிற தருணங்களில், படையாட்களுள் அநேகர் தம்முடைய மூட்டை இலேசாய் இருக்கும்படி அதிலுள்ள சாமான்களைக் கூடியவரை எறிந்துவிட முயன்றிருக்கையில், ப்ரொபெல் பலவிதமான இலைகள், பாசிகள், கற்கள் முதலியவற்றையெல்லாம் சேர்த்துத் தன்னால் சுமக்கக்கூடாதபடி தன் மூட்டை அத்தனை பெரிய சுமையாகுமாறு வைத்துக் கட்டிக்கொண்டார். வழியில் இராக்காலங்களில் தங்கியிருக்கும்போது ப்ரொபெல் இப்பொருள்களையெல்லாம், எடுத்துக்காட்ட அம்மூன்று நேசர்களும் அவற்றைப் ற்றியும் வித்தியாப்பியாசத்தைப்பற்றி ப்ரொபெலுக்கு உண்டாயிருக்கும் அபிப்பிராயத்தைப் பற்றியும் நெடுநேரம் பேசி மகிழ்வார்கள்.

அந்த யுத்தம் ஓய்ந்ததும் ப்ரொபெல் பர்லின் நகரத்துப் பலபொருட் காட்சிசாலையில் தாதுப்பொருள் சாஸ்திரம் படிக்கும்படி சென்றார். தாம் கைக்கொண்ட வித்தியாப்பியாசம் செய்விப்பதாகிய சிறந்த காரியத்திற்குத் தான் மிகவும் தகுந்தவனாக வேண்டுமென்பதே அவருடைய முக்கியமான கோரிக்கை. அந்தப் பலபொருட் காட்சிசாலையில் அதிக வேதனங்கிடைக்கும் ஒரு உத்தியோகத்தைக் கொடுக்கவரும்போது அவர், தமக்கேற்ற சரியான உத்தியோகம் படிப்பிப்பதேயெனத் தெரிந்தவராகி அதை வேண்டாமென்று மறுத்துவிட்டார். இது நடந்த சிலநாளையில் ப்ரொபெலினுடைய சகோதரர் ஒருவர் தம்முடைய பிள்ளைகளை அநாதரவாக விட்டுவிட்டு

இறந்துபோனார். அந்தப் பிள்ளைகளையெல்லாம் ப்ரொபெல் போஷிக்கும்படி நேரிடவே அவர் அந்தப் பிள்ளைகளோடு இன்னும் சில பிள்ளைகளையும் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குக் கல்விகற்பிக்கும்படி தாமே சொந்தமாய் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினார். இப்பொழுது ப்ரொபெல் மிகவும் சுதந்திரராகி, நெடுநாளாகத் தாம் மனத்தில் ஆலோசித்துக் கொண்டிருந்த அபிப்பிராயங்களுக் கேற்றபடியே தம்முடைய பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளைப் படிப்பிக்கத் தொடங்கினார்.

(இன்னும் வரும்.)

---

## THE TEACHING OF ENGLISH IN GERMANY AND MADRAS.

## ஜர்மனியிலும், சென்னையிலும் ஆங்கில பாஷை போதிக்கு முறை.

---

(19-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வகை தடுமாற்றம் கெடுதியைவிளைக்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. இவ்வகையால் இருவகுப்பாரும் தத்தம் கருத்துக் கிசைந்தவாறு மாறாகி அதற்கேற்பமாறான காரியங்களிற் பிரவேசித்திருக்கையில் ஒருவரோடொருவர் நெருங்கியிருக்க நேர்ந்தால் கருத்து, நடை முதலியவற்றில் மாறுபட்டு ஒருவரையொருவர் அறியாது போகின்றனர். ஆகையால், முதலில் அவர்கள் ஒவ்வொருவரது வாழ்க்கை நிலையையும், எண்ணத்தையும், சித்த விருத்தியையும் கவனித்துக்கொள்வதோடு தத்தம் காலவியல்பையுங் கவனித்துக் கொள்ளவேண்டும். இவ்வகைய வித்தியாசங்கள் முழுதுமுடைய பள்ளிக்கூடங்களிலிருந்தே பிள்ளைகள் செவ்வையாய் எழுதப்படிக்கப் பேசத் தெரிந்து கொண்டு மெற்றிகுலேஷன் பரிட்சையில் தேறி வெளிவருகின்றனர்.

ஜெர்மனிதேசத்தைப்போல நமது பள்ளிக்கூடங்களில் ஆங்கிலேயரது சொந்த நாட்டிலுள்ள விஷயங்களை உள்ளவாறறிவதற்காகவே அப்பாஷை படிப்பிக்கப்படுவதாயிருக்கவேண்டும். இங்கிலீஷ் புத்தகங்களும் ஆங்கிலேயரது நடைமுதலியவைகளை விளக்கி விரிவாய் எடுத்துக்காட்டி அவர்கள் ஆசாரம் முதலியவைகளில் அநுதாபமுண்டாக்கக் கூடியனவாயிருக்கவேண்டும். இம்முறையே ஜெர்மனியில் அநுசரிக்கப்பட்டுவருகின்றது. இவ்வாறே செய்யவேண்டுமென்ற அவசியம் இந்தியாவிற்குமிருப்பதால் அதை இச்சென்னைக்



கல்விச்சாலைகளிலும் செய்யலாம். ஜெர்மன் பாஷையைப் பார்க்கிலும் தமிழ்ப்பாஷை இங்கிலீஷுக்கு அதிக வித்தியாசமுடையதென்பது உண்மையே. ஆயினும், இங்கு இங்கிலீஷ் படிப்பிற்காக அதிக நேரம் செலவிடப்படுகின்றது. அந்நேரத்தை யுத்தேசிப்போமாயின் அதிற் கற்றுக்கொள்ளும் விஷயம் மாத்திரம் கொஞ்சமாகவேயிருக்கிறதென்று சொல்லலாம். இனி, கருத்து மாறுபட்டுப் பயில்வதற்குரிய காரணங்களைக்காட்டுவோம். உயர்தரபாடசாலைகளிற் பயிலும் மாணாக்கர்கள் ஆங்கிலேயரது எண்ணம், நடைமுதலியவைகளையறிய வசதியற்றவர்களாயிருக்கின்றனர். ஐந்தாவது ஆறாவது பாரங்களிற் படிப்பவர்கள், தாங்கள் படிப்பது இன்னதென்றுணரச் சத்தியற்றிருக்கின்றனர். பாடமல்லாத வேறுபுத்தகங்களைப் படித்துணரவேண்டுவது அவசியமாயினும், குறுகிய அறிவால் அவற்றை எங்ஙனம் படித்துணர்வார்கள்? எத்தனையோ முறை Citizen of India என்னும்புத்தகம் மிகக் கஷ்டமாயிருக்கின்றதென்று பிள்ளைகளில் பலர்குறைகூறக் கேட்டிருக்கின்றோம்.

நமது பள்ளிக்கூடங்களிற் பிள்ளைகள் படிக்கும் நேரத்தையுற்று நோக்கும்போது இவ்வகையான குறையிருக்க எவ்வகைய நியாயமுமில்லை. அப்பர்செகண்டரி வகுப்புக்களில் கற்கும் பாடங்களை கிரமமாய் லோயர் செகண்டரி வகுப்புக்களிலேயே பயின்றிருக்கவேண்டும். அதிகமுணர்வதற்கும் இலக்கணமும் பதங்களுக்கு அர்த்தமும் மிகுதியு மறிந்திருக்க வேண்டுமாதலால் அது குறைந்தபோது மற்றவையும் மட்டுப்படுகின்றன. இக்குறையை யொழிப்பதற்கு லோயர்செகண்டரி வகுப்புக்களிலேயே முயலவேண்டும். இங்குத்தான் வீண்காலம் மிகுதியும் போகின்றது. இதன் பிரயோஜனத்தைப் பின்னால் தெரிவிப்போம்.

ஆதலின் ஆரம்பத்திலேயே தக்க மேலான முறைகளைக் கவனமாய் அனுஷ்டிக்கவேண்டும். ஒவ்வொரு பள்ளிக்கூடத்து உபாத்தியாயரும் எந்த முறையையாகிலும் எடுத்துக்கொள்ளட்டும். ஆனால் அதன் உட்கருத்தை மாத்திரம் அவர் நன்றாயுணர்ந்திருக்கவேண்டும். இக்கருத்தைக் கடைப்பிடிப்பார்களாயின் அப்போதுதான் ஜர்மனிதேசத்துக் கருத்துக்கு ஒத்திருக்கும் என்னலாம்.

(இன்னும் வரும்)

---

# WHAT IS PLAN AND HOW TO TEACH IT.

## படமும், அதைப் போதிக்கு முறையும்.



படம்.

வினா:—மேலே காட்டியிருப்பது என்ன?

விடை:-குதிரை.

வினா:—அது குதிரையானால் அதை வண்டியிற் பூட்ட அல்லது அதன் மேல் ஏறிச்சவாரி செய்ய உதவுமா?

விடை:-உதவாது.

வினா:—ஏன் உதவாது?

விடை:-அது உள்ளபடியே உயிருள்ள குதிரையல்ல.

வினா:—அப்படியானால் அதை ஏன் குதிரை என்று சொல்ல நேரிடுகிறது?

விடை:-குதிரையைப்போல் எழுதியிருப்பதனால் அதைக் குதிரை என்று சொல்ல நேரிடுகிறது.

வினா:—குதிரையைப்போல் எழுதியிருந்தால் நியாயமாக அதை என்னவென்று சொல்லவேண்டும்?

விடை:-அதைக் 'குதிரையைப்போல் எழுதியபடம்' என்று சொல்லவேண்டும்.

☞ மூன்றும் வகுப்புக்காக இதேமுறை ஒவ்வொரு ஜில்லாவிற்கும் மற்றும் விஷயங்களோடு பூகோள சாஸ்திரத்திரங்கள் எழுதப்பட்டுள்ளன. படத்துடன் விலை அணா 2.



  

வினா:—மேலே காட்டியிருப்பவை யாவை?

விடை:-முதலாவது—ஆட்டின் படம்.
இரண்டாவது—கண்ணின் படம்.
மூன்றாவது—நாயின் படம்.

வினா:—படம் என்றால் என்ன?

விடை:-ஒரு *பொருளின் உருவத்தைப்போல் எழுதுவது படம்.

| | |
|---|---|
| வினா:—காக்கையைப்போல் எழுதினால்? | விடை:—காக்கையின் படம் |
| வினா:—பூனையைப்போல் எழுதினால்? | விடை:—பூனையின் படம் |
| வினா:—மனிதனைப்போல் எழுதினால்? | விடை:—மனிதன் படம் |
| வினா:—கண்ணைப்போல் எழுதினால்? | விடை:—கண்ணின் படம் |
| வினா:—மரத்தைப்போல் எழுதினால்? | விடை:—மரத்தின் படம் |
| வினா:—மலையைப்போல் எழுதினால்? | விடை:—மலையின் படம் |
| வினா:—காட்டைப்போல் எழுதினால்? | விடை:—காட்டின் படம் |
| வினா:—வீட்டைப்போல் எழுதினால்? | விடை:—வீட்டின் படம் |
| வினா:—பாடசாலையைப்போல் எழுதினால்? | விடை:—பாடசாலையின் படம் |
| வினா:—வகுப்பறையைப்போல்எழுதினால்? | விடை:—வகுப்பறையின் படம். |

### படம் எழுதல்.

வினா:—ஆனால்,நாம் நம்முடையவகுப்பின் அறையைப்போல்எழுதலாமா?

விடை:-நாம் அதை எழுதமுடியாது.

வினா:—ஏன் எழுதமுடியாது?

விடை:-அந்த அறை மிகப் பெரியதாயிருப்பதனால் அதைக் காகிதத்திலாவது, பலகையிலாவது எழுதமுடியாது.

வினா:—குதிரை, இப்புத்தகத்தைவிடப் பெரியதா? சிறியதா?

* பொருள் என்றால் உயிருள்ளது, இல்லாததுமாகிய சகல வஸ்துக்களையும் குறிக்கும்.

விடை :-பெரியது.

வினா :—அப்படியானால் குதிரை எப்படி இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது ?

விடை :-குதிரையின் உருவம் சிறியதாய் எழுதப்பட்டிருக்கிறது.

வினா :—அப்படியே நாமும் நம்முடைய வகுப்பு அறையின் அளவைச் சுருக்கி எழுதமுடியாதா ?

விடை :-சுருக்கி எழுதமுடியும்.

வினா :— அப்படி எழுதுவதற்கு என்ன செய்யவேண்டும் ?

விடை :-ஒரு வஸ்துவின் உருவத்தைப்போல் எழுதவேண்டுமானால் முதல் அந்தவஸ்துவின் அகலத்தையும்,நீளத்தையும் அளந்து அறியவேண்டும். பிறகு, நாம் எடுத்துக்கொள்ளும், காகிதம் அல்லது பலகைக்குத் தக்கபடி அந்த வஸ்துவின் அளவைச் சுருக்கி எழுதவேண்டும்.

வினா :—ஆனால், வகுப்பறையை அளவெடுப்பது எப்படி ?

விடை :-ஏதாவது ஓர் அளவைக்கொண்டு அளக்கவேண்டும்.

வினா :—அளவு என்றால் என்ன ?

விடை :-ஜாண், முழம் முதலியவை அளவுகளாம்.

வினா :—இந்த அறையின் நீளத்தை அளந்து எத்தனை ஜாண்கள் இருக்கின்றனவென்று சொல்.

விடை :-20 ஜாண்கள் இருக்கின்றன.

வினா :—இந்த நீளத்தை ஒரு மனிதன் தன் ஜாணினால் அளந்தாலும் 20 ஜாண்கள் இருக்குமா ?

விடை :-இராது.

வினா:—ஏன் இராது ?

விடை:-மனிதனுடைய ஜாண் சிறுவன் ஜாணைவிடப் பெரியதாயிருக்கும்.

வினா:—ஆனால், பெரியவர்கள், சிறியவர்கள் முதலிய எல்லாருக்கும் பொதுவான அளவுகள் எவை?

விடை:-அங்குலம், அடி முதலியவை எல்லாருக்கும் பொதுவான அளவுகளாம்.

வினா:—அங்குலமென்றால் என்ன ?

விடை: ———————— (அளவைக் கையிற்காட்டி) இவ்வளவு நீளமுடைய அளவு ஓர் அங்குலமாம்.

வினா:—அடி என்றால் என்ன ?

விடை:-12 அங்குல நீளமுடையது ஓர் அடி.

வினா:—(ஓர் அடிக்கோலைக் காட்டி) இது எவ்வளவு அளவுள்ளது ?

விடை:-இது ஓர் அடி அளவுள்ளது.

வினா:—இந்த அளவுக்கோலினால் இந்த அறையின் நீளத்தை அளந்து எத்தனை அடி என்று சொல்.?

விடை-10 அடி நீளம் இருக்கிறது.

வினா:—அப்படியே அகலத்தையும் அளந்து சொல் ?



விடை:-அகலம் 6 அடி இருக்கிறது.

வினா:—இதை எப்படிப் பலகையில் எழுதுவது ?

விடை:-இந்த அளவைச் சுருக்கி எழுதவேண்டும்.

வினா:—அளவைச் சுருக்கி எழுதுவது எப்படி ?

விடை:-நாம் எழுத எடுத்துக்கொள்ளும் காகிதம், பலகை முதலியவற்றிற்குத் தக்கபடி வஸ்துவின் அளவைச் சுருக்கவேண்டும் இங்கு 2 அடி அளவை 1 அங்குல அளவாகச் சுருக்கி எழுதிக்கொள்ளலாம்.

வினா:—2 அடிக்கு 1 அங்குலமானால் 10 அடி நீளத்திற்கு எத்தனை அங்குலமாகும் ?

விடை:-10 அடிக்கு 5 அங்குலமாகும்.

வினா:—5 அங்குலத்தை என்ன செய்யவேண்டும் ?

விடை:-10 அடி நீளமாகையால் பலகையில் 5 அங்குல அளவு நீளத்தில் ஒருகோடு கிழிக்கவேண்டும்.

வினா:—6 அடிக்கு எத்தனை அங்குலம் வைக்கவேண்டும்?

விடை:-6 அடிக்கு 3 அங்குலம் வைக்கவேண்டும்.

வினா.—3 அங்குலத்தை என்ன செய்வது ?

விடை:-6 அடி அகலமாகையால் 3 அங்குல அளவு அகலத்தில்ஒருகோடு கிழிக்கவேண்டும்.

வினா:—இரண்டுபக்கங்களில் கோடுகிழித்தால் மற்ற இரண்டுபக்கங்களில் என்ன செய்வது ?

விடை:-அதையும் அளந்துபார்த்து முன் கிழித்திருக்கிற கோடுகளுக்கு எதிராகக் கோடுகிழிக்கவேண்டும்.

வினா:—நான்கு பக்கங்களிலும் கோடு கிழித்துவிட்டால் வழியை எப்படிக் காட்டுவது ?

விடை:-கதவு எங்கிருக்கிறதோ அதை அளந்து படத்தில் அந்த இடத்தில் அதனுடைய அளவு பிரகாரம் வழி விடவேண்டும் ?

வினா:—வாசக்கால் என்றும் ஜன்னலென்றும் எப்படிக் காட்டலாகும் ?

விடை:-வாசக்காலானால்—| |—திறந்துவிட்டும்; ஜன்னலானால் |——| மூன்று கோடுகளால் எழுதியும் காட்டவேண்டும்.

வினா:—இப்போது 10 அடி நீளமும் 6 அடி அகலமும் உள்ளநம்முடைய வகுப்பு அறையின் படத்தை எழுதி வகுப்பு அறையின் நீளத்தின் மத்தியில் 3 அடி நீளமாய் எதிர் எதிராக இருக்கும் இரண்டு ஜன்னல்களையும், தென்புறமாய் பார்த்திருக்கும் ஒரு வாசக்காலையும், அதற்கு எதிரிலுள்ள ஜன்னலையும் காட்டுக. அந்த அறைக்குள் நீங்கள் உட்காரும் பெஞ்சுக்களையும், மேஜையையும்,நாற்காலியையும்,கரும்பலகையையும் குறித்துக் காட்டு.

குறிப்பு:—படம் எழுதும்போது முன்சொன்னது போலவே படத்தின் மேல்பக்கத்தை வடக்காகவும், கீழ்ப்பக்கத்தைத் தெற்காகவும், படத்தைப் பார்த்து நின்றால் நமது வலதுகைப் பக்கத்தைக் கிழக்காகவும், இடதுகைப்பக்கத்தை மேற்காகவும் கொண்டு எழுதவேண்டும்.

# TIT-BITS.

## விநோதக் கூற்றுக்கள்.

### I. மூடனைப் பரிகசித்த முழுமூடன்.

கல்வியறிவில்லாத சிலர், கற்றோரைப்போல் நடிக்கப் பிரயத்தனப்பட்டு தம் மூடத்தனத்தைத் தாமே வெளியிடுகின்றனர். இப்படிப்பட்டவர் வாய் பேசாது வாளாவிருத்தலே சாலச் சிறப்பாம். இதற்கோர் உவமை கூறுவோம்.

ஒரு செல்வனுக்கு ஒரு செல்வியிருந்தாள். அவளைப் பெற்றோர் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்க்க வளர்ந்து திருமணப்பருவத்தை யடைந்தாள். அக்காலத்து அப்பெண்ணுக்குரியார் அனைவருங் குழுமித் தத்தமக் கியன்றவாறு பேசினர். அதாவது:—

குலம் வேண்டுமென் றிருப்பார் குலத்துளார் கல்வியினால் குறை
யானானைப், பலம் வேண்டுமென் றிருப்பார் தந்தைமார் பரந்த
பெருஞ் செல்வமுள்ள, தலம் வேண்டுமென் றிருப்பார் தாய்
மார்கள் எவ்வனமும் அழகுஞ்சார்ந்த, நலம் வேண்டுமென்
றிருப்பார் நாறுகுழன் மங்கைமார் நலத்தின் மிக்கார்.

என்றபடி சுற்றத்தார் சுசாதியையும், தந்தை கல்விமானையும், தாய் தனவந்தனையும், மணப்பெண் யவ்வனபுருஷனையும் நாடி நின்றார்கள். ஆயின்யாவரும் ஒருபடித்தாய் அப்பெண்ணைப் படித்தவனுக்கே பாணிக்கிரகணம் செய்துகொடுக்க உடன்பட்டனர். இவ்விஷயத்தையறிந்த ஒருவன் அப்பெண்ணைத்தான் விவாகம் செய்துகொள்வதாய் பெண் வீட்டை நாடிச்சென்றான். ஆண்டு அப்பெண்ணின் தாய்தந்தையர் அவன் வரவை நல்வரவாகக்கொண்டு உபசரித்து உணவளித்துச் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் வாயிலில் மறைவாகக் கட்டியிருந்த தடுக்கண்டை சல, சல வென்றொரு சத்தம் கேட்டது. அதைக்கேட்ட விருந்தாளி, “அங்கென்ன சத்தம் கேட்கிறதே?” என்றான் “அங்கு ஒரு ஒணான் செல்கிறது” என்று பதில் சொன்ன உடன் “அப்படியானால் அதிலிருந்து ஒரு இறகு பிடுங்கி வாருங்கள் காதில் நமைச்சல் உண்டாகிறது” என்றான். இதைக் கேட்ட பெற்றோர் அவன் புத்தியீனத்திற்கு வியந்து அனுப்பிவிட்டனர். பின்பு, சில நாள் பொறுத்து மற்றொருவன் வந்தான்.



அவனும் முன்னவனைப்போலவே உபசரிக்கப்பட்டான். ஆனால் இவன் “மவுனம் கலகம் நாஸ்தி” என்பதை மேற்கொண்டனன். அது கண்ட பெற்றோர் இவன் அறிவைப் பரிசோதிக்க எண்ணி முன் பொருவர் வந்திருந்தார் அவர் ஒணானிலிருந்து இறகு கொண்டு வரும்படி கேட்டார் என்று சொல்லி நகைத்தார்கள். அப்போது அவன் அவர்களைவிடப் பதின் மடங்காய் வயிறும் புண்படச்சிறித்து, “அடடா அவனொரு முட்டாள்! அவன் அதை ஆமை என்று எண்ணினான்போலும்” என்று பின்னும் சிரித்தான். அது கேட்ட பெற்றோர் அவனைப் பலவகையிலும் அவமானப்படுத்தி யனுப்பினர். ஆதலின் இப்படிப் பட்டவர்கள் தம் ஊற்றைவாயைத் திறவாதிருந்து கனமடையக்கடவர்.

### II. சோம்பேறிகள்.

ஓர் ஊரில் காற் சோம்பேறி, அரைச் சோம்பேறி, முக்காற் சோம்பேறி, முழுச்சோம்பேறி என நால்வர் சோம்பேறிகள் இருந்தனர். ஒருநாள் அவர்கள் நால்வரும் ஒரு சத்திரத்திற் படுத்து உறங்கினர். அவர்கள் காலபலன் அச்சத்திரத்தில் தீப்பிடித்துக் கொண்டு எரிய ஆரம்பித்தது. அத்தீச்சுடர் காற்சோம்பேரிமேல் வீசவே அவன் சிறிது கண்விழித்து “அடடா! மடம் பற்றி எரிகிறதே” என்றான். அதைக்கேட்ட அரைச்சோம்பேறி “எரிந்தால் என்ன கெட்டது”? என்றான். அதன்மேல் முக்காற்சோம்பேறி “அதைத்தான் சொல்வானேன்”? என்றான். முழுச்சோம்பேறியோ வாயையும் திறந்தவனல்லன். பின்னர் முழுச்சோம்பேறி நீங்க மற்ற மூவரும் ஒருவாறு அவ்விடத்தை விட்டகன்று உயிர்தப்பினர். முழுச்சோம்பேறி தீயில் மூழ்கி இறந்துபட்டான்.

### III. நல்ல பதார்த்தமும், கெட்ட பதார்த்தமும்.

ஆங்கிலதுரை ஒருவர் ஒரு நாள் தம் வேலைக்காரனை நோக்கி இன்று நல்ல பதார்த்தம் வாங்கிவந்து சமைத்துவை என்றார். அவன் அதைக்கேட்டு ஓடோடியுஞ்சென்று ஆட்டுநாக்கை வாங்கிவந்து சமைத்துவைத்தான். துரை அப்பதார்த்தத்தை உண்ணும்போது பலவாறு யோசித்தும் அவன் நல்ல பதார்த்தம் என்று நாக்கை வாங்கிவந்தகாரணம் புலப்படவில்லை. மறுநாள் அப்பிரபு தன் பணி

யாளனைப் பார்த்து இன்று ஏதேனும் ஒரு கெட்ட பதார்த்தம் வாங்கிவந்து சமைத்துவை என்றார். அவன் அன்றும் நாக்கையே வாங்கிவந்து சமைத்துவைத்தான். அது கண்ட பிரபு மிக்க வியப்படைந்து இவன் எண்ணம் என்னோ? நமக்கொன்றும் புலப்படவில்லை எனச் சந்தேகித்து அவனை அழைத்து பின்வருமாறு வினாவினார்.

துரை—அப்பா! நல்ல பதார்த்தம் வேண்டுமென்றபோதும், கெட்டபதார்த்தம் வேண்டுமென்றபோதும் நாக்கையே கொண்டுவந்தாயே அதனால் உன் கருத்தென்ன?

வேலை—துரையே! உலகத்திலுள்ள எல்லாப்பதார்த்தங்களையும் நல்லதாக்கிக்கொள்வதும் நாக்கே, கெட்டதாக்கிக்கொள்வதும் நாக்கே. நாக்கு நல்லதானால் ஞாலம் நல்லதாகும். அதனால் நமது நாக்கை அடக்கி நல்ல நாவாகச்செய்யவேண்டுவது அவசியம். "யாகாவாராயினும் நாகாக்க, காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு" "இனிய உளவாக இன்னாத கூறல்கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" என்னும் முதியோர்வாக்கும் இது நோக்கியன்றோ? என்றான்.

---

# EXAMINATION PAPERS.

## பரிக்ஷை வினாக்கள்.

---

டிபார்ட்மெண்ட் ஆவ் எட்யுகேஷன்.

உபாத்தியாயர் யோக்கியதாபத்திரத்திற்காக எழுத்துப்பரிட்சை.
லோயர் செக்கெண்டெரி—பாடசாலை ஏற்பாடும் கிரம சிட்சையும்.

செவ்வாய்,டிசம்பர் 8-ம்உ, **1896—10—12** மணி வரையில்.

(பரிட்சிக்கப்படுவோர்க்கு.—கடிதாசியில் ஒரு புறத்தில் மாத்திரமெழுதுக. ஓரத்தில் ஒரு அங்குலம் வெறுமையாய் விட. ஒவ்வொரு விடைக் கடிதாசியிலும் உம்முடைய பேரை எழுதுக. விடைக் கடிதாசிகளுக்கு இலக்கமிட்டு வரிசைப்படுத்தி இடதுபுறத்து மேல்மூலையில் தைக்க அல்லது குண்டூசியினால் குத்திவைக்க.)

1. நன்றாய் ஏற்படுத்தப்பட்ட அப்பர் பிரைமெரி பாடசாலை இப்படிப்பட்டது என்று விவரிக்க.

2. காலநிர்ணய சட்டம் (டைம் டேபில்) வரையும்பொழுது என்னென்ன விஷயங்களை மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்?



3. பாடசாலையில் முதல் மணிநேரத்தில் ஏன் முக்கியமான பாடங்களைக் கற்பிக்கவேண்டும்? அந்த நியாயங்களைப்பற்றி என்னென்ன பாடங்களை முதல் மணிநேரத்துக்கென்று குறிப்பீர்?

4. வேளைத்திட்டம் தவறிவரும் பிள்ளைகளை எவ்வளவு சீர்ப்படுத்துவீர்? நீர் அனுசரிக்கும் வழிவகைகளுக்கு நியாயஞ் சொல்லுக.

5. ஒரு மாதத்தில் வந்தவர்களின் தினசராசரி எப்படிக் கண்டுபிடிப்பீர்?

6. அப்பர் பிரைமெரி பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்க்கும் பட்டியை வரைந்து அதில் தலைப்புகளை (ஹெடிங்ஸ்) எழுதிக் காட்டுக.

---

உபாத்தியாயர் யோக்கியதா பத்திரத்துக்காக எழுத்துப்பரிட்சை.
லோயர் செக்கெண்டெரி—போதனை.

புதன், டிசம்பர் 9-ம் உ, **1896 ; 10—1** மணி வரையில்.

---

1. (a) பூகோள படம் இன்னதென மாணாக்கர் தெரிந்து உபயோகப்படுத்தும்படி அவர்களை எவ்வாறு ஆயத்தப்படுத்துவீர்?

(b) நீர் இருக்கும் ஜில்லாவைப் பற்றிய பூகோள பாடக் குறிப்புகள் எழுதுக.

2. (a) பெருக்கல், வகுத்தல் வாய்பாடுகளைக் கற்பிப்பதில் மணிச்சட்டத்தை (பால்பிறேம்) எவ்வாறு உபயோகிப்பீர்?

(b) மாணாக்கர் அங்ககணிதத்தில் கணக்கைப் (1) பிழையில்லாமலும், (2) வேகமாயும் செய்யும்படி என்ன வழிவகைகளினால் அவர்களைப் பழக்குவீர்?

(c) அடியில் வருவதை மாதிரிக் கணக்காகச் செய்துகாட்ட:-

306 ரூ. 4 அ. 10 பையை. 365 ஆற் பெருக்க.

3. சொந்த பாஷையில் நாள்தோறும் வழங்கிவரும் சொற்களில் பெரும்பாலானவற்றை உயர்ந்த வகுப்பு மாணாக்கர் கூடத் தப்பாய் எழுத்துக்கூட்டுவதற்கு நியாயமென்ன? இந்தக் குறைவை எவ்வாறு நிவர்த்திப்பீர்?

4. சொல்வதெழுதல் பாடத்தை நீர் நடத்தும் முறையைச் சுருக்கமாய்க் கூறி, எழுதினதைத் திருத்தும் முறைகளில் மேலானது இன்னதென்றும் விவரிக்க.

5. எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்-இவற்றைக் கற்பிக்கும் பாடக்குறிப்புகளைச் சுருக்கமாய் எழுதுக.

## THOSE WHO REPOSE IN GOD WILL NOT BE FORSAKEN.

## கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

முற்காலத்தில் இந்தியவர்த்தகத்தால் இருநிதியெய்திய இத்தலிதேசத்தில் பதினைந்தாவது நூற்றாண்டின் இறுதியில் பாட்டுயா என்னும் நகரம் செழித்தோங்கி யிருந்தது. அந்நகரத்தில் பட்டுச்சவளியும் பருத்திச்சவளியும் செம்பொன்னணியும் வெண்பொன்னணியும் விலைசரசமாக விற்பனை செய்யும் வியாபாரிகள் அநேகர் அங்கங்கே குடியேறி நிலைத்திருந்தனர். இலக்ஷாதிகாரிகளும் கோடீசுவரர்களுமான வியாபாரிகள் இங்கே இங்ஙனம் வேரூன்றி நிலைத்தமையால் வியாபகமுள்ள வியாபாரத்துறையான வெனிஸ்நகரந்தானும் இந்நகர்க்கு இணையாகாமல் இளைப்பதாயிற்று. இந்நகரில் தனதத்தன் என்று பெயர்சொல்லப்படுவான் ஒரு சாவகாரி இருந்தனன். கோடீசுவரரென்று கொடி பிடித்த ஏனைவணிகர் அனைவரும் இவனுக்குத் தாழ்ந்தவர்களே. ஆற்றுப்பாலத்தின் அருகில் அரமனைபோல் அழகிய மாளிகை அமைத்து அங்கே குடியிருந்தான். அதிர்ஷ்டம் அவனுக்கு ஆறாகப் பெருகியது. பாட்டுயாவின் பெயரறியாதவர் இத்தலியில் இருப்பினும் இருப்பர்; இவன் பெயர் அறியாதவர் எவரும் அங்கிலர். வணிகர் பதின்மர் இருபதின்மருடைய பொருள்களை ஒன்றாகக் குவித்தாற்போலே கோடாது கோடியாய், உடையவன்றானும் இவ்வளவென்று அறுதியாகக் கணக்கிடலாகாத பொருட்குவியலைப் பெற்றிருந்த அந்தச் சாவகாரியின் வாழ்க்கைக்கு ஐரோப்பாவில் எந்த அரசனுடைய வாழ்க்கையை உவமையாகச்சொல்வோம்? பற்பல சிற்றரசருடைய உரிமைகள் அனைத்தையும் ஒருங்கே விலைக்கு வாங்கவேண்டுமென்று நினைத்தாலும் நினைத்தபடியே செய்யலாவதான அவன் செல்வத்தை ஒருவாறு குபேரசம்பத்து என்று சொன்னால் சொல்லலாமே தவிர, வேறு என்னவென்று சொல்லக்கூடும்.

சேர்கிற இடத்திலேதான் பொருள் பின்னும் சேரும். பரதேசப் பிரயாணமாக வருகின்ற பிரபுக்களனைவரும் தங்கள் தேசத்து நாணயங்களை மாற்றிக்கொள்ள இவனுடைய காசுக்கடையையே தேடிச்செல்வர். அதில் வரும் வட்டமெல்லாம் இவனுடைய கந்தாயமே. தக்க உறவினரின்றித் தனத்தைச் சேர்த்துவைத்த தனவந்தர் பலரும் தங்கள் அந்தியகாலத்தில் தருமபரிபாலனம் செய்யும்படி இவனையே தருமகர்த்தனாக நியமித்து வந்தனர். சந்ததியில்லாத



அநேகர் இவனையே தங்களுடைய வாரிசாக மரணசாசனம் எழுதிவைத்தனர். துரைத்தன கட்டடங்கள் கட்டுதல் சேனைக்குவேண்டிய பண்டங்களைச் சவதரித்துக் கொடுத்தல் முதலிய வேலைகளெல்லாம் இவனிடத்தில் குத்தகையாக உடன்படிக்கை செய்து கொடுக்கப்பட்டுவந்தன. இப்படிப்பட்ட தருமபரிபாலனங்களும் குத்தகை உடன்படிக்கைகளும் மற்ற வர்த்தக கந்தாயங்களும் இவனை வலிய வலிய வந்தடைந்தன. இவைகள் எல்லாவற்றையும் நிர்வகிப்பது கஷ்டசாத்தியமாக இருந்தமையால் இவைகளிற் சிலவற்றை வேண்டாவென்று விலக்கினாலும், அவரவர்கள் இவனைப் பலவந்தப்படுத்தி இயைவித்தனர். இங்ஙனம் தனலட்சுமியானவள், வேறெங்கும் போக்கிடமில்லாமல், இவன் மாளிகையைத் தனக்கு என்றும் நீங்காத இருப்பிடமாகக்கொண்டதுபோல் காணப்பட்டது.

குன்றாத செம்பொற் குன்றின்மீது குடியிருப்பவனாயினும், இல்லாரை எள்ளிபிகழ்தல் முதலான இழிகுணம் ஏதொன்றும் இவன்பாலில்லை. சித்திரபுத்திரன் கணக்கில் மயிரிழை தவறினாலும் தவறும்; இவனுடைய கணக்கில் இம்மியளவும் தவறு என்பது இராது. கர்ணனைப்போலக் கண்ணை மூடிக்கொண்டு தனத்தைத் தானம் செய்வதில்லையாயினும், பாத்திரம் அறிந்து பிச்சையிடுவான். அந்த நகரில் ஏற்பார் பலரின்மையின் இவன் வள்ளன்மை வெகுவாய் விளங்காதாயிற்று. ஆயினும் உறவினரில் நொந்தபேர்களுக்கு உதவியாக மாதந்தோறும் உபகாரச் சம்பளம் கொடுத்துவந்தான். பிரதிஷ்டைக்காக ஒன்றும் பொருளுதவி செய்யாவிடினும் அவசியமான பொது நன்மைகளில் அள்ளியள்ளிப் பொருளை எடுத்துக் கொடுப்பான். தன்னுடைய காரியகாரர்கள் தவறும் தவற்றினைக் கண்டு காட்டுவதான சினக் குறிப்பன்றி இவன் சினங்கொள்ளுதல் பிறிதெங்குமில்லை. உலுத்தரைக் கண்டு பொறாமைகொள்வதன்றி செல்வரைக் கண்டு நெஞ்சழுங்குதல் என்றும் இல்லை. இவன் சத்தியத்தில் அரிச்சந்திரன், சாந்தத்தில் தருமராசன். வர்த்தக சூட்சுமத்தில் மற்ற வியாபாரிகள் இவனிடத்தில் பாடம் படிக்கத்தக்க வல்லமையுள்ளவன். பலநாள் பழகிப் பழகித் தேர்ச்சியடைந்த அஷ்டாவதானி சதாவதானிகளெல்லாம், காரியத்திறமையில் இவனுடைய சகசிராவதானத்தைக் கண்டு தலைசாய்ந்து வெட்குவர். குன்றிமணிக்கும் குண்டியில் கறுப்பு உள்ளவாறுபோல, இவனிடத்தில் துர்க்குணம் ஒன்று குடியிருந்தது. "ஊக்கமுடைமை ஆக்கத்துக்கழகு" என்பது இவனுக்கு சித்தியான பழம் பாடம். அவ

னருள் அற்றால் அனைவரும் அற்றார், அவனருள் உற்றால் அனைவரும் உற்றார்" "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என வருகிற ஏட்டை அவன் திரும்பிப் பார்ப்பதேயில்லை. தெய்வத்தை இகழ்பவன் அல்லனாயினும், தனது அமிதமான செல்வப் பேற்றுக்குக் காரணம் தனது முயற்சியேயன்றி வேறில்லை என்பதே அவனுடைய கொள்கை. ஏனையர் பிதுரார்ஜிதத்தைக் கண்டு மகிழ்ச்சியடைவர். இவன் தன் சுவயார்ஜிதத்தைக் கண்டு பெருமிதமடைவான். பகவான் ஆண்டான், நாம் அடிமைகள்; அவன் உடையான், நாம் உடைமை; அவன் சுவதந்தரன், நாம் பரதந்தரர்? அவனுடைய கடாட்சமின்றி நாம் எவ்வளவும் கடைத்தேறமாட்டோம் என்கிற எண்ணம் அந்தத் தனதத்தனுடைய மனத்தில் எழுவதேயில்லை.

(இன்னும் வரும்.)

## RURAL SCHOOLS.
### கிராம பாடசாலைகள்.

தற்காலஞ்நாம் கேள்விப்படுகிற கிராம பாடசாலைகளை ஸ்தாபிக்கும் புது ஏற்பாட்டைப்பற்றி முன்னமே லண்டன் நகரத்துக் கல்வியபிவிருத்தி சங்கத்துத் தலைவர் விடுத்துள்ள விளம்பரத்தை நம் நாட்டுப் பிரைமெரிப் பாடசாலையுபாத்தியாயர்களும் மானேஜர்களும், வாசித்துணருமாறு ஒருவாறு மொழிபெயர்த்து வெளிப்படுத்தலானோம்.

இங்கிலாந்து, வேல்ஸ் தேசங்களின் ஜில்லாக்களில் உள்ள கிராமங்களில் ஸ்தாபித்திருக்கும் பாடசாலையில் கல்விபயிலும் வித்தியார்த்திகளின் அறிவு, அவர்கள் வசிக்கும் இடத்திற்கு அருகில் நடைபெறும் கிருஷித்தொழில் சம்பந்தமாயும், மற்றும் வஸ்துக்களின் சம்பந்தமாயும் பெருகும்படி பிரைமெரி பாடசாலை உபாத்தியாயர்களும், மானேஜர்களும் கவனித்து அப்பிள்ளைகளுக்குப் போதிக்கும் சாதாரணக்கல்வியோடு இத்தொழிற் கல்வியுமொட்டிவர வேண்டுமென்று வித்தியா சங்கத்து அதிகாரிகள் விரும்புகின்றார்கள். இவ்வபிவிருத்தி உண்டாக்குவதில் இதற்கென்று தனியாய் காலமும், இடமும், பாடமும் அமைப்பதனால் பிள்ளைகளுக்குக் கஷ்டமும், உபாத்தியாயர்களுக்குச் சிரமமும் உண்டுபண்ணிக்கொள்ளாமல் பள்ளிக்கூடதிற்கு இயற்கையில் அமைந்தநேரத்திலேயே இத்தொழிற் சம்பந்தமான பொருள்களைப்பற்றிப் போதித்து வந்தாற் போதுமான விருத்தியைக்கொடுக்குமென்று அநுபவத்திலுணரலாயிற்று.



கிருஷிசாஸ்திரத்திற் கூறும் விதத்தையும், அநுபவத்தில் கையாண்டுவரும் முறையையும் பிரைமெரி பாடசாலைகளில் பயிலும் பிள்ளைகளுக்கு உபாத்தியாயர்கள் போதிக்க வேண்டுமென்று வித்தியாதிகாரிகள் ஏற்பாடு பண்ணவரவில்லை; ஆயினும் பிள்ளைகள் சுற்றுப்பக்கங்களிற் காணும் பொருள்களைப் பற்றிய அறிவையவர்கள் பெறும் பொருட்டு உபாத்தியாயர் சமயம் நேர்ந்தபோது கைசோரவிடாமல் போதித்து இயற்கைப்பொருள்களின் இலக்கணங்களை இனிது காட்டவேண்டும். இவ்வாறு காட்டுவதில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்கு இயற்கையாயமைந்துள்ள பொருளாராய்ச்சியாசையை விருத்திசெய்ய எவ்வாற்றானும் உதவிபுரிய வேண்டும் என்னும் எண்ணமுள்ளவராகவேண்டும். அப்பிள்ளைகள் காணும் பொருள்களைப்பற்றியுண்டாகும் சந்தேக விபரீதங்களைப்பற்றிக் கேட்கும் கேள்விகள் அவர்கள் விரும்பியவாறு கேட்கவும் இடங்கொடுக்கவேண்டும். அவர்கள், முன்னமே உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்துள்ளதால், அறிந்துள்ள விஷயங்களைக் கொண்டு புதுப்பாடங்களையுணர, செடி, கொடி, புல், பூண்டு, பூ, பூச்சி முதலியவைகளின் உதாரணங்களையும் போதிக்கவும் இடந்தரவேண்டும். அன்றியும் பிள்ளைகளுக்கு இயற்கையிலமைந்திருக்கும் சுறுசுறுப்பை மிக்க உபயோகமான வழிகளிற் செலுத்தவும் அவர்களைத் திருப்பவேண்டுமென்று விரும்புகின்றார்கள். உதாரணமாக, பயிர்த்தொழிலாளிகளுக்கு உபயோகமானவைகள் அல்லது கெடுதிவிளைவிப்பதாயுள்ளவைகளான செடி, கொடி, பூச்சிகளின் தன்மைகளையறியவும், அவர்கள் கைகள் பேனா பென்சிலை உபயோகிப்பதற்காக மாத்திரம் கற்பிக்கப்படாமல், கிராம வாழ்க்கையில் உபயோகிக்கும்படியான சில பள்ளிக்கூடப் படிப்பு முடிவதற்குள் கருவிகளைக் கையாளவும், தோட்டம், வயல் முதலிய விடங்களில் சிறு ஆயுதங்களையுபயோகிக்கவும் சந்தர்ப்பம் வாய்த்தபோது பழக்கப்படுத்தப்பட்டவர்களாயிருக்கவேண்டும்.

கீழ்வகுப்புகளிற் போதிக்கும் பொருள்பாடங்களுக்கு உரிய பொருட்கள் அப்பிள்ளைகள் தினந்தோறும் தங்களுக்கருகில் காணும் வஸ்துக்களாக விருப்பின் அதனால் கிடைக்கும் அறிவு அவர்கள் உயர்வகுப்புக்களிலுணரப்போகும் கடின விஷயங்களை எளிதிலுணர அஸ்திவாரம் போட்டதுபோலாகுமென்று இவ்வதிகாரிகள் எண்ணமிடுகின்றனர். ஆனால் இப்பொருட்பாடங்கள் தற்காலம் நடத்தப்படும் முறைபோல் பாடபுத்தகத்திற் கண்டுள்ள விவரங்களையே கேள்வி

யாகவும், விடையாகவும் மடித்து மடித்து போதிக்காமல் இருக்க வேண்டும். பொருட்பாடங்களால் பிள்ளைகளுக்கு அறிவு விருத்தியும் நுட்பபுத்தியும் உண்டாகும்படி இப்பாடங்களே நல்லறிவுச் சுடர்கொளுத்தியாதல் உத்தமம். உபாத்தியாயர்கள் அடிக்கடி அப்பொருள்களை பிள்ளைகள் அனுபவத்தில் தெரிந்துள்ள வஸ்துக்களைக் கொண்டு விளக்கிக்காட்டி அப்பிள்ளைகளும் தங்கள் வீட்டில் தங்கள் செய்கையாலே உணரும்படியும், செய்து காட்டும்படியும் படிப்பிக்க வேண்டும். இவ்வகைய விருத்திக் குதவியான பொருள்கள் இவ் வித்தியாதிகாரிகளின் அருகிலேயே கிடைக்கும்படி தயாராகவும் இருக்கின்றன. இப்பொருள்கள் அந்தந்த ஜில்லாக்களுக்குத் தக்கதா யிருக்கும்படியும் பலவகையிலிருக்கின்றன. இப்பொருள்கள் இயற்கைப்பொருள்களோடு ஒப்ப இருப்பது மன்றி யோசனைக்கும் இடங்கொடுப்பதாயிருப்பதால் உபாத்தியாயர்கள் இதைப்பார்த்து ஏனையவற்றைத் தெரிந்துகொள்ளுவார்களென்று நம்பப்படுகிறது. இப்பொருட் பாடங்களே ஏனைய பாடங்களை யுணரவழிகாட்டிகளா யிருக்கும்படி உபாத்தியாயர் போதிப்பார்களாயின் அப்போது தான் இப்பாடங்களிற் உயர்வும் உபயோகமும் பெரிதாக மதிக்கப்பட்டதாக ஏற்படும். உதாரணமாய், பொருட்பாடத்துடன் சித்திரமெழுதல் (Drawing) பாடத்தை ஒன்று படுத்தலாம். பொருள்களை விவரித்துச் சொல்லுங்கால் பிள்ளைகள் அவைகளை எழுதிக்காட்டவும் இப்பாடம் உபயோகமாகும். வழக்கமாய் எழுதும் உருவத்தையே எழுதாமல் அதனாற் கிடைத்த தேர்ச்சியால் மற்றும் சுலபமாயிருக்கும் வஸ்துக்களையும் எழுதவசதியுண்டாக்கலாம். இவ்வழியில் அப்பிள்ளைகள் படித்துள்ள இலை, செடி, கொடி, பூச்சி முதலியவைகளையும், உபயோகிக்கும் கருவிகளையும், ஆயுதங்களையும் எழுதவசதி ஏற்பட்டு அதனால் அப்பொருள்களின் அந்தரங்கத்தையும் எளிதிலுணரக் கூடியவராகின்றார்கள். இப்பிள்ளைகள் பாடபுத்தக மூலமாய் படித்துள்ளதற்கும், பார்த்துள்ளதற்கும் பொருத்த முடையதாயுள்ள பிறபொருள்களைப்பற்றி விளக்கிக் காட்டும்படியும் அதன் உறுப்புக்களை எழுதிக்காட்டும்படியும் வீட்டுப்பாடமாகவும், விருத்திப்பாடமாகவும் உபாத்தியாயர்கள் கொடுத்து அதனால் அப்பிள்ளைகளுக்குச் சாதாரணமாய்த் தோன்றும் சகல வஸ்துக்களைப்பற்றியும் பூரண அறிவை யுண்டாக்கலாம். கணக்குகளும் கிராமவாழ்க்கைக் குரிய வஸ்துக்களைப் பற்றியதாகவும் அனுபவத்திற் கொத்ததாகவும் இருக்கும்படி யமைத்துப் போடுவதே சாலச்சிறந்தது.



பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பிள்ளைகளில் அறிவில் முதிர்ந்துள்ள பிள்ளைகள் தங்கள் பள்ளிக்கூடத்திற்கு வெளியில் செய்யக் கூடிய வேலைகளால் விருத்தியாகும் மார்க்கத்தையும் இவ்வதிகாரிகள் பெரிதும் கவனிக்கின்றனர். அவ்வேலைகள் க்ஷேத்திர கணித வாரம்ப ஆராய்ச்சியாக வாயினும், வீட்டுப்புறங்களிலுள்ள விளையாட்டுக்குரிய நிலங்களின் படங்களையாயினும், மற்றும் இடங்களைப் பற்றியாயினும், சாதாரண பொருள்களை வரைதலைப்பற்றியாயினும் காடு, தோட்டம், வயல், சந்து, தெரு முதலியவிடங்களுக்குச் சென்று ஆங்குள்ள காட்சிகளைக்கண்டு உபாத்தியாயரின் உதவியால் அவற்றின் தன்மைகளை யூகித்தறிவதைப் பற்றியாயினும் இருக்கலாம்.

சமயம் நேர்ந்தபோதெல்லாம் அவ்வப் பருவங்கள்தோறும் உபாத்தியாயர் பிள்ளைகளை யழைத்துக்கொண்டு, தோட்டம், வயல், பரந்தவெளிமுதலிய விடங்களுக்குப்போய் ஆங்கு உபயோகமாகும் ஆடு மாடுமுதலிய மிருகங்களைப்பற்றியும் செடி, கொடி, பூ முதலியவைகளைப் பற்றியும், மற்றும் பூச்சிகளைப் பற்றியும் ஏர் உழுதல், விதை விதைத்தல், நாற்றுநடல், பூச்செடி கொடிகளைப் பக்குவப்படுத்தல் முதலியவைகளைப் பற்றியும் விளக்கிக்காட்டி ஆராய்ச்சியை விருத்திபடுத்துவது நலம். இவ்வாறு வெளியில் அறிந்த விஷயங்களையே பள்ளிக்கூடத்தில் பாடமாகவும், சித்திரமெழுதலாகவும், வியாசமெழுதலாகவும் பாடம் நடத்தி விளங்கவைப்பது பெரும் பிரயோஜனத்தைக் கொடுக்கும்.

இவ்வகைகளால் கிராமத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு அறிவு விருத்தியாகும் மார்க்கம் இன்னதென்று உபாத்தியாயர்களே தங்கள் அனுபவத்தி லுணர்ந்துகொண்டு மற்றும் ஆராய்ச்சிக்குரிய நுட்பங்களையும் கண்டுபிடிக்கச் சக்தியுடையவராகின்றார்கள். இவ்வாறு போதித்து வந்தால் பிள்ளைகள் நாளேற்றத்தில் தாங்கள் காணும் வஸ்துக்களிற் பற்றுடையராகவும் அவற்றின் விருத்தியைக் கோருபவராகவும், அதனால் தேசக்ஷேமத்தைக் கருதுபவராகவும், தேசாபிமானங் குடிகொண்டவராகவும் அமைகின்றனர். அன்றியும் இவ்வாராய்ச்சி விருத்தியாவதால் சாதாரணமாயுள்ள பாடங்களை யறிந்து கொள்ளவும், அதனால் ஒரு கஷ்டமு மின்றி ஒப்பிக்கவும் வசதியுடையவராகின்றனர்.

இனி, கிராமபாடசாலைகளில் உபாத்தியாயர்களா யிருப்போர் அப்பாடசாலைக்குரிய ஆராய்ச்சி குறைவாயிருக்கும் இடங்களிற் பழகியவர்களா யிருப்பின் அவர்கள் விஷயத்தை இனிது உணர்ந்

தில்லா திருப்பார்களாகலின் பிள்ளைகளுக்குப் போதிக்க வழியில்லாதிருக்குங் குறைவைநீக்கி விருத்தியை யுண்டாக்குமாறு அந்தந்த ஜில்லாக்களில் வித்தியாதிகாரிகளால் அமைக்கப்பட்டிருக்கும் பாடசாலைகளில் பள்ளிக்கூடத்து விடுமுறைக் காலங்களிற் சென்று பயின்று வருவதே நலம். இவ்வாறு பயின்றாலன்றி உபாத்தியாயர்களுக்கு உண்மையாயன அன்பும் பொருளாராய்ச்சி யாசையும் உண்டாகா; அவைஉண்டாகாதவழி கிராமத்தில் வாசிக்கும் பிள்ளைகள் பிற்காலத்தில்விருத்தியடைந்து லௌகிகளாயிருந்துவாழவேண்டியதற்குரிய கல்வித்தேர்ச்சி யுண்டாகாதாகலின் அதனைவிருத்தி படுத்தவே இவ் விளம்பரம் விடலாயிற்று.

---

## NEWS AND NOTES.

### சமாசாரக் கொத்து.

சீனதேயத்தில் ஒருவன் ஒரு தவளையை அறுக்கும்போது அதன் வயிற்றில் 500 ரூபாய் மதிப்புள்ள முத்து ஒன்றிருந்ததாம்.

***

லோயர் சகண்டரி, பிரைமரி பரிட்சைகள் நீக்கிவிடப்பட்டன. இவற்றிற்கென வேறு பரிட்சைகள் ஏற்படுமோ வென எண்ணுகின்றனர் பலர். சென்றவருஷம் லோயர் சகண்டெரி பரிட்சையில் கட்டாயமான பாடத்தில்மாத்திரம் தேறிய மாணாக்கர் ஈமென்ன செய்வதென்று திகைக்கின்றனர்.

***

ஒவ்வொரு இரவிலும் வெளியில் படுத்துறங்குவோர் லண்டனில் 6000-ஆம்.

***

3400 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட புத்தகம் நியூயார்க் புத்தக சாலையி லிருக்கிறதாம்.

***

மதுரைஜில்லாவை இரண்டு ஜில்லாக்களாகப் பிரிக்கப்போகிறார்களென்று வதந்திமிகவாய் இருக்கிறது.

***

ஒருபன்றியின் வயற்றில் 8 காலுடைய குட்டி யொன்று பிறந்து மூன்றுநாள் இறந்துவிட அதை திராவகத்தில் விட்டு லண்டன் நூதன காட்சிச்சாலையில் வைத்திருக்கின்றார்களாம்.

***

உலகத்தில் எல்லா மரங்களையும் விட வுயர்ந்தது, கடற்பாசியினின்று உண்டாகும் ஒரு வகைச்செடியாம். அதன் நீளம் சுமார் 3000 அடியாம்.

---

# நல்லாசிரியன்.

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 1. | 1905ஆ ஆகஸ்ட்டுமீ | மாதம் 3.

## THE INDIAN KINDERGARTEN.

### செல்வச்சிறுவர் சிங்காரத்தோட்டம்.

(27-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இக் கிண்டர்கார்டன் போதனைமுறையிற் காட்டியுள்ள மார்க்கங்கள், தொழில்கள் முதலிய யாவும் நமது இந்துதேசத்தில் தொன்றுதொட்டு வழங்கிவந்தனவேயாம். ஆனால், இக்காலத்தில் ஆங்கில பாஷையில் அவற்றை ஒரு ஒழுங்குபடுத்திக் கல்விச்சாலைகளில் பாடமாக அநுசரித்து வருவதுபோல் நமது நாட்டில் நடத்திவந்ததாகக் காணப்படவில்லை. கிண்டர்கார்டன் பாடம் நமது நாட்டில் எவ்வாறு நடைபெற்றுவந்தது என்பதை ஈண்டு ஆராய்வோம்.

சென்னை துரைத்தனத்தார் ஏற்படுத்தியுள்ள வித்தியாவிதியில் (Madras Educational Rules) கிண்டர்கார்டன் பாடம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை :—(முற்கூறியபடியே) I. தொழில்கள் (Occupations), II. கதைகள் (Stories), III. பாட்டுக்கள் (S[illegible]s) என்பனவாம்.

### OCCUPATIONS.

### I. தொழில்கள்.

முற்கூறிய மூன்று பிரிவுகளில் தொழில்கள் என்னும் தலைப்பில் கீழ்க்குறித்துள்ள உட்பிரிவுகள் அடங்கியிருக்கின்றன.

(1) நிறங்கள் (Colours)
(2) மணி கோத்தல் (Beads Threading)
(3) கொட்டை வைத்தல் (Seed Placing)
(4) குச்சி வைத்தல் (Stick Placing)
(5) கட்டை யடுக்கல் (Brick Laying)
(6) களிமண் உருச்செய்தல் (Clay Modelling)
(7) பாய் பின்னல் (Mat plaiting)
(8) காகிதம் மடித்தல் (Paper Folding)
(9) வளையம் வைத்தல் (Ring Laying)
(10) சித்திரம் வரைதல் (Drawing)
(11) அட்டை வைத்தல் (Tablets Laying)
(12) குத்தித் தைத்தல் (Pricking) முதலியவாம்.

(1) நிறங்கள் (Colours):—குழந்தைகள், சாதாரணமாய் இவ்வுலகத்திலுள்ள புஷ்பங்கள் வஸ்திரங்கள் முதலிய வஸ்துக்களைப் பார்ப்பதனால் பலவகை நிறங்களையும் கண்டறிகிறார்கள். நிறங்கள் குழந்தைகளுக்கு மனோத்சாகத்தை யுண்டாக்குமாதலால், பெற்றோர் பலவகை நிறமுள்ள துணிகளால் கிளி முதலிய உருக்களைச் செய்து தொட்டிலின்மேல் கட்டிவைத்து அத்தொட்டிற் குழந்தைகளுக்கு நேத்திரானந்தத்தை யுண்டாக்கி விளையாடச் செய்து வருகின்றனர். குழந்தைகளும் அவ்வகைய நிறங்களைக்கண்டு சந்தோஷித்து விளையாடிக் காலங் கழிக்கின்றன. குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருள்களாக உபயோகப் படுத்துவது பெற்றோரின் எண்ணமாயின் அவ்வுருக்களைப் பலவகைய நிறங்களின் துணிகளால் செய்ய முயலமாட்டார்கள். பலவகை நிறங்களைத் தேடுவதனால் பெற்றோர் எண்ணம் நிறங்களைப்பற்றியதென்றே ஏற்படுகின்றது.

(2) மணிகோத்தல் (Beads Threading):—இத்தொழில் நமது நாட்டில் சர்வசாதாரணமாய் நடந்து வருகிறது. செல்வவான்களாயினும் குழந்தைகளுக்கு முதலில் ஆபரணமாகப் பூட்டுவது மணியேயாம். நமது நாட்டில் குழந்தை பிறந்த பத்துத் தினங்களில் பால மணி என்னும் ஒருவகை வெண் *காறியை கழுத்திற் பூட்டுகிறார்கள். அக்குழந்தைகள் நாலைந்து வயதான பிறகு மணிகளாலும் முத்துக்களாலும் மயிர்மாட்டி, அட்டிகை, மோதிரம், முதலிய பலவகை ஆபரணங்களைச் செய்து அணிந்து கொள்ளுகின்றார்கள். குருவிக்காரர் என்னும் ஒருவகைச் சாதியார் மணியினாலேயே விதவிதமான ஆபரணங்களைச் செய்து அணிந்து கொள்கின்றனர்.



(3) கொட்டைவைத்தல் (Seed Placing):—புளியங்கொட்டை, குன்றும்மணி, பலகறை, கச்சக்காய் முதலிய வஸ்துக்களைக் கொண்டு சிறுவர்கள் விளையாடுவதுமன்றி அவற்றைப் பதித்துப் பலவகை விளையாட்டுப் பொருள்களைச் செய்வதுண்டு.

(4) குச்சிவைத்தல் (Stick Placing):—இத்தொழில் பலவகையாக நமது நாட்டில் நடைபெற்று வருகின்றது.

(a) சிறுவர்கள் துடைப்பக்குச்சியை இரண்டாகப்பிளந்து இடையில் நீண்ட குச்சி ஒன்றை வைத்து வில்லென்று சொல்லி விளையாடுவதுண்டு.

(b) குச்சுக்களை உடைத்துச் சுற்றிச் சதுரமாகவைத்து அதன் மத்தியில் துளி தண்ணீர்விட்டால் அவையாவும் விரிந்து ஒன்றுசேரச் சிறுவர்கண்டு களித்து விளையாடுவார்கள்.

(c) கிராமாந்தரங்களிலுள்ள சிறுவர்கள் துடைப்பம் அல்லது தென்னை நரம்புகளை அத்திக்காய் அல்லது நொணுக்காயில் செருகித் தேர், கட்டில் முதலியவற்றைச் செய்து விளையாடுவதைப் பலரும் பார்த்திருக்கின்றோம்.

(5) கட்டை யடுக்கல் (Brick Laying):—இத்தொழில் நமது நாட்டில் கட்டைகளின் மூலமாய் நடைபெற்றுவந்ததாகத் தோன்றவில்லை. சிறுவர்கள் செங்கற்களைக்கொண்டு கோயில், கோபுரம், வீடு முதலிய கட்டி விளையாடுவார்கள். அங்கிலேயரும் கட்டைகளைச் செங்கல்லாகப்பாவித்துத் தொழில்களைச் செய்வதனால் நமது சிறுவர்கள் செய்துவந்தது மிகப்பொருத்தமானதென்றே ஏற்படுகின்றது.

(6) களிமண் உருச் செய்தல் (Clay Modelling):— நமது நாட்டிலுள்ள பெண்பிள்ளைகளில் பெரும்பான்மையோர் களிமண்ணைக்கொண்டு மிகச்சிறிய அடுப்பு, கலயங்கள், தட்டுக்கள், அம்மி, குழவி முதலியசெய்து நெருப்பிலிட்டுக் கொளுத்தி விளையாட்டுக் கருவிகளாக்கி நிலாச்சோறு அல்லது கூட்டாஞ் சோறு சமைத்து விளையாடுவது யாவரும் பிரத்தியக்ஷமாய்க் காணும் விஷயமே. நகரங்களிலுள்ள சிறுமிகள் களிமண்ணைத்தேடி இவ்வகை விளையாட்டுப் பொருள்களைச் செய்யக்கூடாதவர்களாய் இருப்பதனால் நாளடைவில் குயவர்களே இப்படிப்பட்ட சிறு உருக்களைச் செய்து விற்கத்தலைப்பட்டனர். இவ்வகைய சமையற் பாத்திரங்களே யன்றி பழவர்க்கங்கள்

காய்வர்க்கங்கள் முதலியவற்றையுஞ்செய்து விளையாடுவதுண்டு. பின்னர் வியாபாரிகள் அத்தகைய வஸ்துக்களைச் செய்து வர்ணமிட்டு விற்கத்தலைப்படவே சிறுமிகளுக்கு அவற்றைச் செய்யும் ஊக்கமும் குறைவுபட்டது. இவையே புதுச்சேரிப் பொம்மைகள் எனப்படும்.

(7) பாய் பின்னல் (Mat Plaiting):—ஆங்கிலேயர் பாய் முடைதல் தொழிலைக் காகிதத்திற் செய்கின்றனர். அது அவர்கள் நாட்டில் ஓலையும், கோரையுமில்லாக் குறையினாற் போலும். நமது நாட்டிலோ இத்தொழில் சர்வசனங்களுக்கும் சுலபமாய்த் தெரிந்திருப்பதன்றி பாடசாலைப் பிள்ளைகளில் ஒவ்வொருவரும் அறிந்த விஷயமே. நமது நாட்டில், பாடசாலைப் பிள்ளைகள் பனையோலையினால் தடுக்கு முடைந்து கொள்வதும், எழுத்தாணிக்கூடு செய்வதும், புஷ்பப் பெட்டி செய்வதும் காணாதார் யாவர்? அன்றிச் சிலர் இவ்வோலையால் பெட்டி, நாமப்பெட்டி முதலிய செய்து விற்றும் ஜீவிக்கிறார்கள். தென்னையோலையை முடைந்து பந்தல் முதலியவற்றிற்கும் உபயோகிக்கிறார்கள். மற்றும் பலவகையாக இத்தொழில் சாதாரண ஜனங்களால் நடை பெற்று வருகின்றது.

(8) காகிதம் மடித்தல் (Paper Folding):—இத்தொழில் நமது நாட்டில் தொன்று தொட்டு நடை பெற்று வந்ததாகக் காணப்படவில்லை. காகிதம் சிறிது நாட்களுக்கு முன் வேறு தேயத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டமையால் அத்தொழில் இந்நாட்டில் நடைபெறுவதற்குக் கூடாமையாயிற்று. ஆயினும், காகிதத்திற்குப் பதிலாய் நமது நாட்டில் ஓலை வழங்கப்பட்டது. ஆதலின் ஓலையினால் தாலியுரு, மோதிரம், காப்பு, கிளி முதலியவை செய்யப்பட்டு வந்தன. இக்காலத்திலும் கிராமாந்தரத்திலுள்ள சிறுமிகள் விளையாட்டாக இவைகளைச் செய்து அணிந்துகொண்டு விளையாடுகின்றனர். அன்றி இக்காலத்தும், விசேஷ தினங்களில் வீடு, கோயில் முதலிய விடங்களில் தென்னங் குருத்தோலையால் செய்து வரிசையாகக் கட்டப்படும் பலவகைக் கிளிகள் முதலாயின மிக நேர்த்தியாகவும் அலங்காரமாகவும் காணப்படுகின்றன அல்லவா?

(9) வளையம் வைத்தல் (Ring Laying):—இந்நாட்டுப்பெண்கள் யாவரும் கையில் அணிந்திருக்கும் வளையலைக் காணும்போதே இத்தொழில் நமது நாட்டில் நடைபெற்றுவந்ததென்பது விளங்கும். அன்றியும், சிறுமிகள் உடைந்த வளையல்துண்டுகளை விளக்கில் காட்டி யிளக்கிச் சங்கிலிகளாகச் செய்து இன்றும் விளையாடுகின்றனர்.



(10) சித்திரம் வரைதல் (Drawing):—நமது நாட்டில் இத்தொழிலறியாத பெண்பிள்ளைகளே கிடையாது. கோலமிடுதல் சித்திரத்தொழிலுக்கு வேறல்லவென்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். நமது சிறுமிகளிற் பெரும்பான்மையோர் கல்வியறிவில்லாதவர்களாயிருந்தும் அவர்கள் அலங்காரமாயிடும் கோலத்தைக் கண்டால் கற்றோரும் வியக்கத்தக்கதா யிருக்கின்றது. இக்கோலத்தின் மூலமாகவே கல்யாணமணை, குளம், யானை, குதிரை, கப்பல் முதலியவற்றை வெகு திறமையாய் ஓரளவுமின்றி அரிசிமாவினால் பூமியி லிடுகின்றனர். இஃதன்றி, பெண்பிள்ளைகள் தரையில் மண்ணினால் வீடுகட்டி, ஆண்பெண் உருக்கள்செய்துவைத்து விளையாடுவார்கள். இதனாலன்றோ?

"அறையு மாடரங் கும்மடப் பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ?"

என மகா கவியாகிய கம்பரும் இராமாயண அவையடக்கத்திற் கூறினர்.

(11) அட்டை வைத்தல் (Tablets Laying):—நமதுநாட்டில் காகிதம் இல்லாதொழியவே அட்டையும் கிடையாதாயிற்று. பலவகையிறமுள்ள அட்டைத்துண்டுகளைத் தக்கபடிசேர்த்து உருக்களைச் செய்வதுபோல அரிசிமாவில் பலவகை வர்ணங்களை வெவ்வேறுய்க் கலந்து அலங்காரமான உருக்கள் இன்றும் செய்வதுண்டு.

(12) குத்தித் தைத்தல் (Pricking):—இத்தொழில் ஓலையின் மூலமாய் நடைபெற்று வந்ததாகத் தோன்றுகின்றது.

மேல் விவரித்துக்காட்டிய முகாந்தரங்களால் "தொழில்கள்" என்னுந் தலைப்பிலடங்கிய உட்பிரிவுகள் யாவும் நமது நாட்டில் வழங்கிவந்தனவாகவே நன்கு விளங்குகின்றது. இதுபோலவே மற்றவைகளையும் விளக்கிக்காட்டுவோம்.

(இன்னும்வரும்.)

---

## LIFE OF FROBEL.

## ப்ரொபெல் என்னும் பாலபோதகர் சரித்திரம்.

(32-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ப்ரொபெல் பள்ளிக்கூடம் ஏற்படுத்திய கீலன் என்னும் இடம் மிகவும் சாதாரணமான ஒரு கிராமம். 1815-ஆம் வருஷத்தில் அது இவ்விந்தியாவிலுள்ள கிராமம்போல் அவ்வளவு சாதாரணமாயிருந்

தது. அது ப்ரொபெலுக்குத் தம்மனோரதத்தை நிறைவேற்ற மிகவும் அனுகூலமாயிருந்தது. சாதாரணமான உணவும், ஆடம்பரமில்லாத நடையுடைகளும், பிரகிருதிப் பொருள்களின் மத்தியில் வாழ்வதுமே தம் மாணாக்கர்களுக்கு வேண்டுமென்று அவர் விரும்பினார். அவ்விடத்தில் அவர் அப்பிள்ளைகளைப் புலங்களுக்கு அழைத்துக்கொண்டுபோய் ஜந்துக்கள், செடிகள், கீற்கள், சூரிய சந்திர நக்ஷத்திரங்கள் இவைகளைப்பற்றிக் கற்பித்தார். புத்தகப் படிப்பு மிகுதியாயில்லவே யில்லை : பூமியும் ஆகாயமுமே அவர்களுக்குப் புத்தகமாயிருந்தன. முன் யுத்தத்தில் ப்ரொபெலுக்குத் துணையாயிருந்த மிதந்தார்ப்பு என்பவரும் இந்தப் பள்ளிக்கூடத்தில் அவருக்கு உதவிசெய்யச் சீக்கிரமே அவ்விடம்வந்து சேர்ந்தார். தான் குருவாகவேண்டுமென்று நெடுநாளாய்க் கருத்திற்கொண்டிருந்த அபேக்ஷையையும் ஒழித்துவிட்டு இதில்வந்து சேர்ந்துகொள்ளும்படி, ப்ரொபெல் செய்துவந்த வியாபாரத்தில் அவருக்கு அவ்வளவு கவுரவம் தோன்றியது. அதற்குப்பின்பு லாஞ்சிதால் என்னும் ப்ரொபெலுடைய மற்றொரு போர்த்துணைவர், தான் சகலகலாசாலையில் ஒரு பண்டிதராகவேண்டுமென்று விரும்பியிருந்த விருப்பத்தையும் விட்டுவிட்டு ப்ரொபெலுக்குத் துணைசெய்ய வந்துசேர்ந்தார். இம்மூவருக்கும் இருந்த நேசம் மிகவும் உறுதிப்பாடுடையதாகி, பிள்ளைகளுக்கு மிகவும் பயன்படுவதாயிற்று. அவர்களில் ஒருவர்க்கொருவர் கொண்டிருந்த மரியாதையையும் நேசத்தையும் நேராய்ப் பார்த்திருந்த அச்சிறுவர்களுக்கு நன்னெறிபயக்கச் சட்டங்களும் சிக்ஷைகளும் அநாவசியகமாகிவிட்டன. அது அவர்களுக்குச் சிரிப்பும் களிப்புமாய் விளையாடத்தக்க விநோதமான வீடுபோலிருந்ததேயன்றி ஒரு பள்ளிக்கூடமாகத் தோன்றவேயில்லை.

பின்பு, ப்ரொபெல் ஒரு பெருமாட்டியை மணம்புரிந்தார். அந்தப் பெருமாட்டியும் ப்ரொபெலுடைய நோக்கங்களைப் பார்த்து வெகு சந்தோஷமடைந்தாள். ப்ரொபெலுடைய சிநேகிதர்கள் இருவரும் இரண்டு பெண்களைக் கலியாணம்செய்துகொண்டு இல்லறம் பூண்டார்கள். அவர்களுடைய பள்ளிக்கூடம், வித்தியாப்பியாசத்திற்கு ஏற்றவிடமாகி மிகவும் பெருமைபெற்றது ; ஆயினும், பிள்ளைகளைப் பரீக்ஷைக்காகவும், வாழ்நாளுக்கு வேண்டிய விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்காகவும் பயிற்றுவித்தலும் இன்றியமையாததாகவந்து நேரவே, தாம் மனத்திற் கருதிக்கொண்டிருந்தவளவு பிள்ளைகளுக்குப் புத்திபயிற்சிசெய்விக்கக் கூடாமற்போனதுபற்றி, அதிலும் அவ்வளவாக ப்ரொபெலுக்குத் திருப்தி உண்டாகவில்லை.



பிறகு, அவர் தம் கருத்துக்கு ஒத்தவர்களாய்ச் சில நேசர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று பிரான்க்போர்ட்டுக்குச் சென்றார். போனவிடத்தில், தாம் உட்கொண்ட கருத்துக்கு ஜர்மனியைப் பார்கிலும் ஸ்விட்ஜர்லாந்தே மிகவும் ஏற்றவிடமென அவர்க்கு நன்றாய்த் தெரியவந்தது. அப்போது ஜர்மனியைப் பார்கிலும் ஸ்விட்ஜர்லாந்தில் குடிகளுக்கு சுவாதந்திரியம் அதிகமாயிருந்ததனால் அத்தேசத்தார் விருத்தியடைய விசேஷமாக விருப்பங்கொண்டிருந்தனர். ப்ரொபெல் ஸ்விட்ஜர்லாந்துக்குச் சென்று அங்கே வில்லிஸ்லன் நகரத்தில் ஒரு பாடசாலை ஏற்படுத்தினார். மிதந்தார்ப்பு அதன் நிர்வாகத்தைத் தானே ஏற்றுக்கொண்டு பெண்சாதி பிள்ளைகளையெல்லாம் விட்டுப்பிரிந்து அங்கேயே தனித்திருந்தார். ஆயினும் அந்தப் பாடசாலை முடிவுபெறுகிறவரை அவர் அங்கிருக்கவில்லை ; நான்கு வருஷந்தான் இருந்தார். ஸ்விட்ஜர்லாந்திலே ப்ரொபெல் உபாத்தியாயர்களைப் பயிற்றுவிக்கத் தொடங்கினார். அங்குள்ள உபாத்தியாயர்களை நன்றாகப் பயிற்சிசெய்துவிட்டால், பிள்ளைகளைப் பயிற்றுவிக்க அது மிகவும் ஏற்றதாயிருக்கும் ; பரீக்ஷைகளுக்கும் உலகவியாபாரங்களுக்கும் தகுந்தவர்களாகப் பிள்ளைகளைப் பயிற்றும்படி நேர்ந்தாலும் நிமித்தமில்லையென்பது அவர் கொண்ட கொள்கை. அவ்வண்ணமே அறுபது உபாத்தியாயர்வரையில் நன்றாகப் பழக்கினார். ஆயினும் அத்தேசத்தில் அவருடைய மனையாட்டிக்குத் தேகத்தில் அசவுக்கியமுண்டாகவே அவர் அவ்விடம் விட்டுத் திரும்பி ஜர்மனிதேசம் வந்துசேர்ந்தார். மனையாட்டி இறந்துபோய் மிக்க மனத்துயரமுண்டான காலத்தும் அவர் தம் ஊக்கத்தைக் கைவிடாமல் உழைத்தார். முதலில் சிறிது மனங்கலங்கினவராகக் காணப்பட்டாராயினும், சீக்கிரமே அதை ஒழித்துவிட்டுத் தைரியமாகவே பாடுபட்டு உழைக்கத் தொடங்கினார்.

பின்பு, ப்ரொபெல் சிறிதுகாலம் சிறு பிள்ளைகளைப் படிப்பிப்பதிலேயே மேன்மேலும் அதிக ஊக்கங்கொண்டிருந்தார். ஆயினும் அவர் உபாத்தியாயராயிருந்தகாலம்முழுதும், பிள்ளைகளைப் பரீக்ஷைகளுக்கும் உலக வியாபாரங்களுக்கும் யோக்கியர்களாக்குவதும், புத்திப்பயிற்சி செய்வித்து விருத்திபண்ணுவதுமாகிய இரண்டு வியாபாரங்களையும் ஏககாலத்தில் செய்விக்கக் கூடாமையைப்பற்றி அவர்க்கு அதிக சங்கடம் நேர்ந்துகொண்டிருந்தது. நன்றாய்ப் பழகின உபாத்தியாயர்களிருந்தால் அதைச் சாதிக்கக்கூடுமென்று அவர் நினைத்திருந்தார் ; முயன்று பார்க்கும்போது அது பின்னும் அதிக

வருத்தமெனத் தெரியவந்தது. புத்தி சற்றும் மலராதவர்களாயும், கெட்டவழியிற்பயின்ற புத்தியுடையவர்களாயுமே பல பிள்ளைகள் அவருடைய பள்ளிக்கூடத்திற்கு வந்துசேர்ந்தனர். அவர்கள் பார்க்கவும், கேட்கவும், கருவிகளைக் கையாடவுங்கூடப் பயின்றவர்களல்ல. அப்படிப்பட்ட சிறுவர்களுக்குக் கல்விப்பயிற்சி செய்விக்க மனஞ்செலுத்தி ப்ரொபெல் அதைப்பற்றி ஆலோசித்து, சிறுவர் சிங்காரத்தோட்டமெனப் பெயரிட்டுப் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தினர். தம் மனையாட்டி இறந்த ஒரு வருஷத்திற்கெல்லாம் அவர் தாம் பிறந்த ஊருக்குச்சென்று அங்கே தான் முதல்முதல் சிறுவர் சிங்காரத்தோட்டமொன்று ஸ்தாபித்தார். அதை ஸ்தாபித்தபோது அதற்காகச் சிறந்த பண்டிகையொன்று கொண்டாடப்பட்டது. அதைக் கண்டு களிக்க அண்டை அயல்களிலுள்ள ஊரார் அனைவரும் வந்தார்கள். முக்கியமாய் அந்தச் சிறுவர் சிங்காரத்தோட்டத்திலுள்ள விசேஷமென்னவெனில், அதில் ஸ்திரீகள் படிப்பிக்கவேண்டுமென்பதே. பிள்ளைகளைப் பத்திரமாய்க் காத்து அவர்களுக்குக் கல்விபயிற்றுவிப்பதற்காகவே இவ்வுலகில் ஸ்திரீகள் முக்கியமாய் வந்துபிறந்தது என்கிற விஷயத்தை, அவர் வெகு வருத்தப்பட்டு ஸ்திரீகள் நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படி செய்தார். முக்கியமாய்ச் சிறுபிள்ளைகளைப் பயிற்றும் வேலைக்குத் தங்களைத் தக்கவர்களாக்கிக்கொள்ளும்படி ஸ்திரீகளைத் தூண்ட அவர் மிகவும் பிரயாசப்பட்டார். ஸ்திரீகளுடைய முக்கியமான வியாபாரம் அதுவேயென்பது அவருடைய அபிப்பிராயம். அநேகர் அவருடைய உட்கருத்துக்கு இசைந்தார்கள். கணவனிழந்தவர்களும், கலியாணமாகாதவர்களும், பிள்ளை, பெண்பெற்றவர்களும், பரோபகாரசிந்தையுள்ள பின்னும் பலருமாய் அநேகம் ஸ்திரீகள் பிள்ளைகளுக்குப் படிப்பிப்பதாக வந்தார்கள். ஊர்ப்பிள்ளைகளெல்லாம் அவர்களுடைய வித்தியார்த்திகளானார்கள். இவ்வண்ணமாகக் கடைசியில் சிறுவர்களாலும் பிள்ளைகளைப் பயிற்றுவிக்கப் பழகுகின்றவர்களாலும் சூழப்பட்டவராகி ப்ரொபெல் தாம் கைகொண்ட விளையாட்டுக்களும், பாட்டுக்கள், தேகப்பயிற்சி, உத்தியோகங்கள் இவைகளுக்குரிய ஏற்பாட்டை நிறைவேற்றினார். வெகு சந்தோஷமாய்க் களித்துக் கற்கின்ற சிறுவர்களுடைய மத்தியில் பெரிய மனிதனான ப்ரொபெல் ஒரு நாயகமணிபோல நின்றார். அவரிடத்தில் கற்கவந்த பெண்பிள்ளைகளுள் ஒருத்தி சிறுபிராயம் முதற்கொண்டு கீலன் கிராமத்துக்கு வந்துகொண்டிருப்பது வழக்கம். அவள் ப்ரொபெலினுடைய பெண்சாதிக்கு எல்லாக் காரியங்களிலும் உதவிசெய்துவந்த



வள், பிறகு ப்ரொபெல் அந்தப் பெண்மணியையே மறுவிவாகம் செய்துகொண்டார். அதன்பின்பு எல்லாம் அவர்க்குப் பெருமையாகவே முடிவதாகத் தோன்றியன. ஆயினும் அவருடைய மனோரதத்தைக் கெடுக்க அப்போதும் கெடுதியொன்று காத்திருந்தது. அக்காலத்தில் ஜர்மனிதேசம் குடிகளுக்கு மிக்க நிர்ப்பந்தமான தேசமாயிருந்ததென்று முன் சொன்னோமல்லவா? குடிகளுக்கு நிர்ப்பந்தம் அதிகமானால் அதிருப்தி அதிகமாகும், அதிருப்தி அதிகமானால், குடிகளால் கெடுதி நேருமெனப் பயந்து துரைத்தனத்தார் அவர்களுக்கு சுதந்திரமாயிருக்கவேண்டுமென்னும் எண்ணமே உண்டாகக்கூடாதென்று, அதற்காகக் குடிகளுக்கு ஒன்றும் தெரியவொட்டாமல் அவர்களை மூடர்களாகவே வைத்திருக்க விரும்பினார்கள். ஜர்மனிய துரைத்தனத்தார் ப்ரொபெல் ஏற்படுத்திய கல்விப்பயிற்சி மாதிரியைப்பார்த்து, இவ்விதமாகக் கல்விபயிற்றுவித்தால் குடிகளுக்குச் சுதந்திரமா யிருக்கவேண்டுமென்னும் அபேக்ஷையுண்டாகி, துரைத்தனத்தாரை எதிர்த்துக் கலகமுண்டாக்க இடங்கொடுக்குமென்றுணர்ந்து, ஜர்மனிதேசத்தில் சிறுவர் சிங்கராத்தோட்டம் ஏற்படுத்தவேகூடாது என்று உத்தரவுசெய்தார்கள்.

இத்தனை வருஷகாலமாய் எவ்வளவோ ஆலோசனைகள்செய்து பாடுபட்டுவந்த ப்ரொபெலுக்குக் கடைசியில் இவ்வண்ணம் நேர்ந்தது பச்சைமரத்தில் ஒரு பேரிடிவிழுந்ததுபோலல்லவா? ஆனால் அவர் ஒன்றும் பேசாமல் முன்போலவே வியாபாரம் நடத்தமுயன்றார். ஆயினும் இதற்குப்பிறகு அவர் நெடுநாள் ஜீவித்திருக்கவில்லை. அவருடைய எழுபதாம் வருஷத்துப் பிறந்தநாள் பண்டிகை, அவரை நேசித்திருந்த அனைவராலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவரும் அவர்களுடைய நேசத்திற்காக நன்றிபாராட்டி மிகப் பெருமையடைந்திருந்தார். இது நடந்த இரண்டுமாதத்தில் அவர் காலமானார்.

ப்ரொபெல் இறந்துபோனாராயினும் அவர் செய்துவைத்த வியாபாரங்களும் எழுதிய புத்தகங்களும் இறந்துபோகவில்லை. அவருடைய மனையாட்டியும் நேசரான மிதந்தார்ப்பும் அவருடைய கொள்கையை விடாமற் கைக்கொண்டு அதன்படியே பிறர்க்குக் கல்வி கற்பித்துவந்தனர்.

ம்ரொபெல் சரித்திரம் முற்றிற்று.

## TEACHER.

### உபாத்தியாயர்.

1. உபாத்தியாயர் மிக படித்தவரா யிருக்கவேண்டும். சிலர் யூனிவர்ஸிடி பரிட்சையில் தேறினதே போதுமென்றெண்ணுவார்கள். ஆனால் அவர்கள் அப்பொழுதுதான் உண்மையான படிப்பாரம்பித்தவராவார்கள். பள்ளிக்கூடத்தில் பலவிதப் படிப்பில் பிரவேசமாகிறதே யொழிய வேறொன்றுமில்லை. குறைந்தபட்சம் தன் வகுப்புப் பாடங்களை உபாத்தியாயர் முன்னதாய் படித்துவரவேண்டும். அப்படிப் படிக்கும்பொழுது உதாரணங்களால், தெளிவுறச் செய்தல் முதலியவை ஞாபகத்தில் வைக்கவும். நல்ல உபாத்தியாயரின் இலட்சணம் எப்பொழுதும் தன் பள்ளிக்கூடத்திற்குச் சம்பந்தப்பட்டதாகிய எதையாவது படித்துக்கொண்டிருப்பதே.

"அறிவு முதலிலாழ்ந்து அப்புறம் விசாலமாகவேண்டும். பலவிஷயங்களைச் சிறிது, சிறிது அறிவதிலும் ஒன்றையே குறைவற அறிவது உத்தமம்."

2. கல்வி கற்பிக்கும்வழி உபாத்தியாயருக்குத் தெரியவேண்டியது அவசியம். ஒருவனுக் கெவ்வளவு தெரிந்திருந்தாலும் கற்பிக்குந் திறமை யிருந்தாலல்லவோ பிள்ளைகளுக்குப் போதிக்கலாம்.

"எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்து
உய்த்துணர் வில்லெனின் இல்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனின் என்னு மஃதுண்டேல்
பொன்மலர் நாற்ற முடைத்து."

சிலர் தங்களைப்போலவே, எல்லோரு மிருப்பார்களென்றெண்ணிக்கொண்டு, குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க ஆரம்பிப்பார்கள். அப்படிக்கில்லாமல், அவ்வயதில், அவ்வகுப்பில், தாங்கள் எப்படி யிருந்தனரோ, அதை நினைத்து நடக்கவேண்டும். அப்பொழுது தான் பிள்ளைகளின் சக்தி தெரியவரும். பிள்ளைகளை ஒன்றையும் சொல்லென்று கேட்கக்கூடாது. ஆனால் சொல்லும்படி செய்ய வேண்டும். சொல்வன்மை இல்லாமல் முடியாதா யென்பது மருந்தில்லாமல் மனிதன் சுகித்திருக்கானா யென்பதுபோலாம்.

3. உபாத்தியாயர் தன்வேலையில் ஜாக்கிறதையுள்ளவரா யிருக்கவேண்டும். சிலர் எங்கேயும் வேலை யகப்படாமல் கடைசியாய் உபாத்தியாயராக வந்து சேர்ந்து, சமயம் பார்த்து வேறு வேலைக்



குப் போவது வழக்கம். இவர்களா கவலையுள்ளவர்கள்? உபாத்தியாயர் வேலையைப்போல் கண்ணியமானது உலகத்தில் வேறொன்றுண்டோ? ஒவ்வொருவகுப்பும் ஒரு சிறிய இராச்சியமாகவும், பிள்ளைகள் அதில் வசிக்கும் குடிகளைப்போலவும், உபாத்தியாயர் ஓர் அரசனைப் போலவுமாம். பிள்ளைகளின் அபிவிர்த்தி யாரைச்சேர்ந்தது? இப்பிள்ளைகள் நல்லகுணத்தை யுடையவராய்த் தங்கள் குடும்பத்தோடு பின்பு சுகப்படுவது யாராலே? அரசர்களுக்கும், இப்படிப்பட்ட உத்திரவாதம் கிடையாது. இதையெல்லாம் யோசியாமல், உபத்தியாயர் வேலை அற்பமென்றெண்ணுவது கூடாது.

4. பிள்ளைகளின் சுபாவம் எப்போதும் சந்தோஷமாயிருப்பது. அவர்களுக்கும் துக்கத்திற்கும் வெகுதூரம். இது கடவுளமைப்பு. ஆகையால் அவர்களிடத்தில் உபாத்தியாயர் சந்தோஷமாகவே யிருந்து தன்வழிக்குக் கொண்டுவரவேண்டும். மேலும் உபாத்தியாயர் அதைரியப்படக்கூடாது. விடாமுயற்சியுடையவராயும், பிள்ளைகளிடத்திற் பட்சமுள்ளவராயு மிருக்கவேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்." இந்த இரண்டு இலட்சணங்களும் உபாத்தியாயருக் கமையவேண்டும்.

5. உபாத்தியாயர் முன்கோபியாயிராமல், பொறுமையுள்ளவராயிருக்கவேண்டும். சிலவேளை பிள்ளைகள் மிக வருத்துவார்கள். சில வேளை சொல்வதைச் செய்யமாட்டேனென்பார்கள். தான் ஒருவிஷயத்தை நன்றாய்க்கற்பித்த பிறகு, அதையே கேட்க ஒன்றுஞ்சொல்லார்கள். சிலவேளை நாம்செய்யும் நன்மைக்குத் தீமைசெய்ய நினைப்பார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முன்கோபப்படாமல் புத்தியைச் சுவாதீனத்தில் வைத்துப் பொறுமையைக் காட்டவேண்டும். நாம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கிறதுபோல் நடந்துகாட்ட வேண்டும். ஆகையால் உபாத்தியாயர் நன்னடக்கை யுடையவராகவே யிருக்கவேண்டும். சகலத்திற்கும் இவரே உதாரணமா யிருக்கவேண்டும். உபாத்தியாயருக்கு இன்றியமையாதவைகளை இவ்விடத்தில் சுருக்கமாய்ச் சொல்லுவோம்.

(1) உபாத்தியாயர் படித்தவரா யிருக்கவேண்டும்.
(2) கற்பிக்கும் வழி தெரிந்தவரா யிருக்கவேண்டும்.
(3) சுய அநுபவம் மாத்திரம் போதுமான நெறியல்ல.
(4) உபாத்தியாயருக்கு போதனை சாஸ்திர மாகிய மனோதத்துவ விர்த்தியைப் பற்றியும் தெரியவேண்டும்.

(5) உபாத்தியாயர் பெருந்தன்மையுடையவராயும் தம்தொழிலில் பக்தியுடையவராயும் இருப்பதன்றி, யதார்த்தமுள்ளவராயும் இருக்க வேண்டும்

(6) உபாத்தியாயருக்கு ஊக்கமும் மனவுறுதியும் வேண்டும்.

(7) உபாத்தியாயர் அதிகாரமும். தயையும் உடையவராயிருப்பதுமல்லாமல், அப்படியே பேசவேண்டும்.

(8) உபாத்தியாயருக்கு ஆளுந்திறமை இருக்கவேண்டும்.

(9) கல்விகற்பிக்கும் தொழிலை உபாத்தியாயர் ஆயுள்பரியந்தம் செய்யத்தக்க தொழிலாக மதிக்கவேண்டும்.

(10) உபாத்தியாயர் உற்சாகம், நேசம், ஆவல் ஆகிய இவைகளையுடையவராயிருக்கவேண்டும்.

(11) உபாத்தியாயருக்கு புத்தியும், திடசித்தமும், தெளிந்த புத்தியும் வேண்டும்.

(12) உபாத்தியாயருக்கு அமைவான தீர்மானமும் வேண்டும்.

(13) உபாத்தியாயர் அங்கவீனமில்லாமல் நல்ல தேகசவுக்கியமுடையவராயிருக்க வேண்டும்.

---

## THOSE WHO REPOSE IN GOD WILL NOT BE FORSAKEN.

## கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

(44-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இங்ஙனம் பகவானிடத்தில் பக்திசெய்யாமல் தன்க்ஷேமத்துக்குக் காரணம்தானே என்ற அஹங்காரம் கொண்டால் தெய்வம் பொறுக்குமா? இவனுக்கு இறங்கும்படியான காலம் கிட்டியிருப்பதாக ஒருவாறு புலப்பட்டது, வழியில் துரைத்தன பிரதானிகளில் எவரேனும் ஒருவர், இரண்டு குதிரைகட்டிய சகட்டில் ஏறிச்செல்வதைக் காணினும், பொருட்டு செய்யாமல் செல்லும் பிரபுக்களெல்லாம் தனதத்தனைக் கண்டால் அஞ்சலிஹஸ்தராய் நமஸ்காரம்செய்வர். சிலர் தீர்க்கதண்டம் பண்ணுவர். இவ்வளவு வணக்கமாய் மரியாதை செய்பவர்களும் அவனைக் காணுமிடத்தில் சிலநாளாக ஏதோ வேறு பராக்காகப் போவார்போலே, கைதானும் குவிக்காமல் போவாராயினர். முன்னே வழிவிட்டு விலகிச் செல்பவரெல்லாம் இப்போது அவனை ஏறிட்டுப்பாராமல் தங்கள் பாட்டிலே நேராகச்



செல்வாராயினர். பரிபாலனார்த்தமாக இவனிடம் விடப்பட்டிருந்த தருமங்களுக்குரியவர்களிற் சிலர் அவ்வுரிமைகளை மீட்டுக்கொண்டனர். சிலர் தருமபரிபாலன வரவு செலவு கணக்குகளைக் கேட்கத் தொடங்கினர். அங்ஙனங் கேட்கும்போது சிலர் தேசசட்டவிதிகளையும் தருமபரிபாலகர்களுக்குரிய கடமைகளையும் சுட்டிப்பேசலாயினர். அதுவரையில் விடேன் தொடேன் என்று அவனைத் தேடி வருபவரெல்லாம் ஒவ்வொருவராய்க் குறைவாராயினர். வலிய வலிய இவன் சிலரைத் தழுவப்போனாலும் அவர்கள் நழுவிநழுவித் தப்பிப்போகவே பார்ப்பதைக் கண்டான். மர்தந்தோறும் இவனிடத்தில் உபகாரச்சம்பளம் பெறும்பொருட்டு வருகின்ற உறவினரும் ஏழைகளுந் தவிர வேறெவரும் கிரமமாக இவனிடம்வருவது இல்லையாயிற்று. இவற்றுக்கெல்லாங் காரணம் இன்னதென்று அவனுக்கு விளங்கவில்லை இவைகளெல்லாம் அவனுக்கு அதிசயமாகவே இருந்தன. ஏதோ விகிர்தம் நேரிட்டிருக்கவேண்டும், அது இன்னதென்று அவனுக்குப் புலப்படவில்லை. தான் வசிக்கும் நகரத்தின் தேவாலயபொக்கிஷபரிபாலன அதிகாரம் தனக்குக் கிடைக்குமென்று உறுதியாக நம்பியிருக்கையில் தன்னிலும் பலமடங்குதாழ்ந்த ஒரு வியாபாரி அவ்வதிகாரஸ்தானத்தில் நியமிக்கப்பட்ட செய்தியொன்றுமே அங்ஙனம் நேர்ந்த விகிர்தத்துக்குப் போதிய சான்றாக இருந்தது.

இங்ஙனம் அவ்வதிகாரம் பெறாமல் தோல்வியடைந்த செய்தி தெரிந்தவளவிலே மனத்தளர்வுற்று வீட்டுக்குத் திரும்பினான், தன்னுடைய காரியாகாரியங்களையெல்லாம் சாவகாசமாக ஆராய்ந்து பார்த்தான். விகிர்தம் இன்னதென்று தோற்றவில்லை. நான் எவரையாகிலும் ஏமாற்றியிருக்கிறேனா? இல்லை. எவரெவர்க்கு என்னென்ன தொகை சேரவேண்டுமோ அதையெல்லாம் அப்போதைக்கப்போது கணக்குப்பார்த்துச் சேர்த்து விடுவதன்றி அவர்கள் இரண்டாமுறை என்னைக் கேட்கும்படி வைத்துக்கொள்ளுகிறேனா? இல்லை. எவருக்காகிலும் என் வியாபாரவிஷயத்தில் ஒருஇம்மியளவு மோசஞ்செய்கிறேனா? இல்லை. தருமபரிபாலனங்களில் ஒருமயிரிழையளவாகிலும் பிசகியிருக்கிறேனா? இல்லையே. பின்னை இந்த விகிர்தம் எங்ஙனம் உண்டாயிற்று?" என்று பலமுறையும் பலவிதமாக ஆலோசித்துப் பார்த்தான். ஒருகாரணமும் புலப்படவில்லை. அதுவரையில் தன்னை அவரவர்கள் நாடிவருவதும் போய் அனைவருமே பிரத்தியக்ஷமாய்ப் பழிப்பதைக் கண்டான். இதுகிடக்க,

“இந்தச்சாவகாரிக்கு இப்படிப்பட்ட மகதைசுவரியம் எங்கிருந்து கிடைத்தது? பாவி இவன் அக்கிரமமாகவே பொருள் ஈட்டினான்” என்று ஒரு வதந்தி அங்கங்கே அந்தரங்கமாய் உலவுவ தாயிற்று. “இவன் இரகசியத்தில் கள்ளக்காசுகளைச் செய்து செல்வத்தைப் பெருக்கினான், இவன் பொன்சரிகைவேலை வெள்ளிச்சரிகைவேலையில் மகாநிபுணனல்லவா, கள்ளக்காசு செய்வது இவனுக்குக் கடினமான வித்தையா? ஐயோ, இவனுடைய அநியாயத்தால் எத்தனை குடித்தனம் பாழாய்ப் போகுமோ?” என்று அங்கங்கே இரகசியமாகவும் பகிரங்கமாகவும் குடிகள் பேசிக்கொள்ளலாயினர்.

பொழுதுபோகும்படி வேடிக்கையாக வார்த்தை பேசிக்கொண்டிருப்பவர்களில் ஒருவன் “தனதத்தன் என்ன பைத்தியக்காரனா? தன் சாமர்த்தியத்தை யெல்லாம் மூட்டைகட்டி வைத்து விட்டுச் சும்மா இருக்க; அவன் பக்காத்திருடனையா” என்ன, அவன் பக்கத்திலிருந்தவன் “அவசரப்பட்டுப் பேசலாமா? எந்தப்புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ? இத்தனைகாலமாக அவனைப்பற்றி ஏதாகிலும் எவராகிலும் நாக்கைவளைத்துப் பேசினதுண்டா? அவனைச் சத்திய சந்தன் என்றுதான் நான் எண்ணியிருக்கிறேன்” என்று சொன்னான். அப்போது முன்னவன் “நான் கூட அவனை அரிச்சந்திரன் என்றுதான் நம்பியிருந்தேன். இதோ இந்த ரூபாயைப்பாரும்” என்று காட்டினான். மற்றவன் அதைத்தட்டிப்பார்த்து “இதற்கென்ன? சப்தம் சரியாகத்தான் இருக்கிறது” என்றான். முன்னவன் “நானும் அதைப் பரிசோதித்துப் பார்க்கிற வரையில் நல்ல ரூபாய் என்றுதான் நினைத்தேன். இது அந்தச்சாவகாரியிடத்தில் பெற்றுவந்த ரூபாயே. உம்முடைய உரைகல்லில் வேண்டுமானால் உரைத்துப் பாரும், அப்பொழுதானாலும் என் வார்த்தையை நம்புவீர்” என்று சொன்னான். அப்படியே இருவருமாகப் பரிசோதித்துப் பார்க்கையில், அது கள்ளரூபாய். அதில் கால்பங்கு செம்பு கலந்திருக்கிறது என்று தெரியலாயினர். (இன்னும் வரும்.)

## TIT-BITS.

### விநோதக் கூற்றுக்கள்.

ஒருவருடம் செங்கற்பட்டு ஜில்லாவில் நடந்த பிரைமரி பரிட்சையில் “கலப்பெண்ணாவது யாது?” (What is a Mixed Number?) என்னும் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அந்தப் பரிட்சைக்கு ஆஜரான உபாத்தியாயர் ஒருவர் “கலப்பெண்ணாவது நல்லெண்ணெயும் கடலெண்ணெயும் சேர்ந்ததாம்” என்று விடைகூறினார். பிறகு அவருடையதொழிலை ஆராயப்புகுந்ததில் அவர் சில்லரைக்கடை வியாபாரம் செய்துகொண்டே, உபாத்தியாயத்தொழிலையும் செய்பவரென்று தெரியவந்தது. ஆகையால் பலதொழிலைச் செய்து பாழ்படும் உபாத்தியாயர்காள்! ஒருகாலத்தில் ஒரேவேலையைக் கவனிப்பீராக. (“One thing at a time.”)



செங்கற்பட்டு ஜில்லா பொன்னேரியில் ஒருவருடம் நடந்த ஸெஷனல் ஸ்கூல் பரிட்சைக்கு ஆஜரான ஓர் உபாத்தியாயர் அப்பரிட்சையை நடத்தும் அதிகாரியிடத்தில் தான் முன்னமே பிரைமரி பரிட்சையில் தேறியிருப்பதாய்ச்சொன்னார். பரிட்சையதிகாரிஎப்போது என, வேதாந்தாசாரியார் இன்ஸ்பெக்டராயிருந்தகாலத்தில் என்றுசொல்ல, பரிட்சையதிகாரி உபாத்தியாயரைநோக்கி பரிட்சையில் என்ன கேள்வி கேட்டார்? என, அதற்கு உபாத்தியாயர் சொன்னதாவது:— “ஒருபுட்டியில் இரண்டு தைலம்” அது என்ன? என்றார்; அதற்கு நான் உடனே “முட்டை” என்று விடைகூறினேன். அதனால் அவர் மிகவும் வியப்படைந்து நான் பிரைமரி பரிட்சையில் தேறியதாகச் சொல்லினார் என்று சொல்லிக்கொண்டு தானே சந்தோஷித்தார். அதைக்கேட்ட பரிட்சை யதிகாரிகளும் நகைத்தார்கள். ஆசிரிய நண்பர்காள்? இவரும் ஓர் உபாத்தியாயரேயோ?

தணிக்கைபார்க்கும் அதிகாரி (Inspecting Officer) ஒருவர் வட ஆற்காடு ஜில்லாவில் ஒரு லோகல்பண்ட் ஸ்கூலைத் பார்க்கச்சென்றார். அன்று 19-ஆம் தேதி. அதிகாரி ஆஜர்பட்டியை (Attendance Register) பரிசோதிக்கும்போது அதில் 25ஆம்தேதி வரையில் ஆஜர் பதிந்திருக்கக்கண்டு உபாத்தியாயரை நோக்கி இன்று யாது தேதியென, உபாத்தியாயர் 19 என்று விடைகூறினர். அதிகாரி ஏன் 25ஆந்தேதிவரையில் ஆஜர் பதிவு செய்தீர்? என, அதற்குப் பதிலாக உபாத்தியாயர், ஐயா! நான் இன்று ஊருக்குப்போக இருந்தேன்; போனால் 25 ஆந்தேதி யன்றுதான் வருவேன்; ஆகையால் அதுவரையில் பதிந்தேனென்றார். இப்படி விடைகூறியதினால் அவ்வுபாத்தியாயர் ஆஜர் பதிவுசெய்த குற்றமொன்றேயன்றி மேலதிகாரியிடம் விடைபெற்றுக் கொள்ளாமல் தான் பாடசாலையை விட்டுவிட்டுப் போய்விடும் மற்றொரு குற்றமும் சேர்ந்ததே! ஆசிரிய நேயர்காள்! இவ்வுபாத்தியாயர் ஆசர்பட்டியைத் தினந்தோறும் இரண்டுவேளையும் குறிக்க

வேண்டுமென்பதையும், அப்படிக் குறிக்கும்போது ஒவ்வொரு பிள்ளையின் பெயரையும் கூப்பிட்டுக் குறிக்கவேண்டுமென்பதையும், ரெஜிஸ்தர்கள் வைக்கப்படும் நோக்கங்களையும் சற்றேனும் அறிந்தவரெனக் கொள்ளுதலெவ்வாறு? இவரும் ஓர் உபாத்தியாயரேயன்றோ?

---

ஆசிரியனும் மாணாக்கனும்:—ஒரு நாள் ஆசிரியர் மாணாக்கனுக்கு, 'கடவுள் உலகத்திலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலும் வியாபித்திருக்கிறார்' என்று போதித்தார். மாணாக்கன் அந்த வாக்கியத்தின் உட்கருத்தை யறியாமல் கடவுள் உள்ளபடியே ஒவ்வொரு வஸ்துவிலும் இருக்கிறார் என்று எண்ணிக் கொண்டிருந்தான். ஒருநாள் மாணாக்கன் ஒருவழியாய் போய்க்கொண்டிருக்கையில் ஒருயானை எதிரேவந்தது. யானைப்பாகன் வழியில் குறுக்கே நின்றுக் கொண்டிருந்த மாணாக்கனைப் பார்த்து விலகிப் போகும்படி 'விலகு, விலகு' என்று கைதட்டிக் கூவினான். அப்போது மாணாக்கன் 'நான் ஏன் விலகவேண்டும்? நானும் கடவுள் தான், யானையுங் கடவுள்தான். கடவுளுக்குக் கடவுள் ஏன் பயப்படவேண்டும்,' என்று நினைத்து அவன் வழியைவிட்டு விலகாமல் நின்றுக்கொண்டிருந்தான். யானை அவனருகில் வந்து தும்பிக்கையால் அவனை வாரியெறிந்தது. அதனால் அவன் காயமடைந்து பின்ஆசிரினிடத்திற்குவந்து நடந்த விருத்தாந்தங்களைச்சொன்னான். அதற்குக் குரு மாணாக்கனை நோக்கி'நீயுங் கடவுள் யானையுங்கடவுள் என்பது சரியே ஆனால் கடவுள், பாகன் சொரூபியாயிருந்து உன்னை விலகிப்போகும்படி எச்சரித்தாரல்லவா? அதை நீ கவனியாததால் உனக்கு இத்தீங்கு நேரிட்டது' என்றார்.

---

## நியாயத் தீர்ப்பு.

---

நேயர் இருவர் நெடுந்தூரம் பயணம் போயினர். நடவையில் தம் பசிநோயைத் தீர்த்துக்கொள்ளும்வண்ணம் இருவரும் தனித்தனி சிறிது அப்பங்களை ஆதரவாய்க்கொண்டு சென்றனர். பிரயாணத்தில் ஒரு நாள் இருவரும் சிற்றுணாக்கொள்ள ஒரு சாவடியிற்றங்கினர். அப்பொழுது ஒருவனிடத்தில் ஐந்தப்பங்களும், மற்றவனிடத்து மூன்றப்பங்களும் மிகுந்திருந்தன. அவ்விருவோரும் அப்பம் அருந்தும் சமயத்தில் அவர்களது அரியநண்பன் ஒருவன் அவ்விடத்தடைந்தான்.



ஆகவே அம்மூவரும் அப்பங்களைச் சமமாகப் பகிர்ந்து உண்டனர். மூன்றுவான் தான் முன்னுறச் செல்ல நேர்ந்தமையின் அவ்விருவோர்க்கும் பொதுவில் எட்டுப் பணங்களை அவ்விடத்திட்டு விடைகொண்டு சென்றனன்.

மூன்றுவான் விட்டுப்போன எட்டுப் பணங்களை முதலவன் எடுத்துத் தான் கொண்டிருந்த ஐந்தப்பங்களுக் கேற்க ஐந்து பணங்களைக்கொண்டு மற்றவன் கொண்டிருந்த மூன்றப்பங்களுக் கேற்க மூன்று பணங்களை அவனுக்குக்கொடுத்தனன். அவன் அம்மூன்று பணங்களைப் பெறாது "அஃதெப்படி? நாமிருவர் அப்பங்களையும் சமமாகவே நமது நண்பனுக்கு ஈய்ந்தமையால் நாமும் அவ்வெட்டுப் பணங்களைச் சமமாகக் கொள்வதேநேரிது. ஆதலின் நாம் இருவரும் நன்னான்கு பணமாகப் பகிர்ந்துகொள்வதே நியாயமாகும்" என்றனன்.

இவ்வாறு பாகத்தில் ஒற்றுமை நேராது வேற்றுமை கொண்டதோழர் தொடர்ந்து சென்று நியாயத்தலத்தைச் சேர்ந்தனர். ஆண்டுத் தம்வழக்கை நீதிபதிக்கு நிகழ்த்தினர். நீதிபதி அவர்கள் விஷயங்களை நன்கு உய்த்துணர்ந்து ஐந்தப்பக்காரன் சிறிது அதிகம் பெறுதலே தகுதி எனத் தனக்குள் தீர்மானித்ததன்றி மூன்றப்பக்காரன் மூன்று பணம்பெறாது முரணியது நியாயவிரோதமென்றும் தேர்ந்தனன். பின்னர் அரசன் அடியில் வருமாறு அவர்கள் வழக்கைத் தீர்ப்பாணையினான்.

உங்களில் ஒருவன் ஐந்தப்பங்களும், மற்றவன் மூன்றப்பங்களும் கொண்டிருந்தீர்கள். ஆக எட்டப்பங்களையும் உங்கள் நண்பனோடு மூவரும் சமமாகப் பகிர்ந்து உண்டீர்கள். ஆதலின் அவ்வெட்டப்பங்களும் (8×3) 24 துண்டுகளாகும். அவற்றில், 3 அப்பங்கள் 9 துண்டுகளாகவும் 5 அப்பம் 15 துண்டுகளாகவும் இருத்தல் வேண்டும். ஆக 24 துண்டுகளையும் மூவர் சமமாக அருந்தினால் ஒவ்வொருவன் 8 துண்டுகளை உட்கொண்டிருத்தல் வேண்டும். ஆகவே நீவிர் இருவோரும் சேர்ந்து மூன்றுவனுக்கு 8 துண்டுகள் ஈந்திருக்கின்றீர்கள். 5 அப்பமுடையோன் தன் 15 துண்டுகளில் தான் உட்கொண்ட 8 துண்டுகள் போக மிகுதி 7 துண்டையும், 3 அப்பமுடையோன் தனக்கு 8 துண்டுபோக ஒரு துண்டையும் சேர்த்து மூன்றுவானுக்குக் கொடுத்திருக்கிறீர்கள் என்பது வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. ஆதலால் அவன் விட்டுப்போன எட்டுப்பணங்களில் ஐந்தப்பமுடையோன் ஏழுபாகமும் மூன்றப்பமுடையோன் ஒரு

பாகமும் கொள்வதே நியாயமாகும். அதனால் ஐந்தப்பமுடையோன் ஏழுபாகமும், மூன்றப்பமுடையோன் ஒருபாகமும் அடைவதென்று தீர்ப்புச் செய்தனன்.

மூன்றப்பமுடையோன் நீதிபதியின் தீர்மானத்தைச் செவியுற்றுத் திடுக்கிட்டு அந்தோ அப்போழ்தே மூன்று பணத்தை முரணின்றிப் பெற்றுக்கொள்ளாமற் போயினேமே என்று தன்னைத் தானே வெறுத்துக்கொண்டனன்.

பேராசை பெருநஷ்டத்தைப் பிறப்பிக்கும் என்பது விளங்குகின்றது.

---

## திசைகள்.

### பூமியின் திசைகளை அறிவது.






வினா:—சூரியன் காலையில் எந்தத் திசையில் உதிக்கிறது?
விடை:-(உதிக்கும் திசையைக்காட்டி) இந்தத் திசையில் உதிக்கிறது.
வினா:—சூரியன் எந்தத் திசையில் மறைகிறது?
விடை:-(மறையும் திசையைக்காட்டி) இந்தத் திசையில் மறைகிறது.
வினா:—சூரியன் உதிக்கிற திசைக்கு என்னவென்று பெயர்?
விடை: சூரியன் உதிக்கும் திசை கிழக்கு.
வினா:—சூரியன் மறைகிற திசைக்கு என்னவென்று பெயர்?
விடை:-சூரியன் மறைகிற திசை மேற்த.
வினா:—சூரியன் உதிக்கிற திசையைப்பார்த்து நின்றால் உன் வலது பக்கத்துக்கு என்ன பெயர்?
விடை:-சூரியன் உதிக்கிற திசையைப்பார்த்து நின்றால் வலது பக்கம் தெற்கு.
வினா:—சூரியன் உதிக்கிற திசையைப் பார்த்து நின்றால் இடது பக்கத்துக்கு என்ன பெயர்?
விடை:-சூரியன் உதிக்கிற திசையைப் பார்த்து நின்றால் இடது பக்கம் வடக்த.
வினா:—திசைகள் எத்தனை? அவை எவை?
விடை:-நான்கு: கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு.



வினா:—நீ மேற்கு முகமாகப் பார்த்து நின்றால் மற்றத்திசைகளை எப்படி யறியலாம்?
விடை:-முகத்தின்பக்கம் மேற்கு.
முதுகின்பக்கம் கிழக்கு.
வலதுபக்கம் வடக்கு.
இடதுபக்கம் தெற்கு.
வினா:—தெற்குமுகமாகப் பார்த்து நின்றால் மற்றத் திசைகளை எப்படி யறியலாம்?
விடை:-முகத்தின்பக்கம் தெற்கு.
முதுகின்பக்கம் வடக்கு.
இடதுபக்கம் கிழக்கு.
வலதுபக்கம் மேற்கு.
வினா:—வடக்கு முகமாகப் பார்த்து நின்றால் மற்றத் திசைகளை எப்படி யறியலாம்?
விடை:-முகத்தின்பக்கம் வடக்கு.
முதுகின்பக்கம் தெற்கு.
வலதுபக்கம் கிழக்கு.
இடதுபக்கம் மேற்கு.
வினா:—நீ ஓர் ஊருக்குப்போனால் திசைகளை எப்படிக் கண்டுபிடிப்பாய்?
விடை:-1. சூரியன் உதிக்கும்பக்கம் கிழக்கு.
2. சூரியன் மறைகிறபக்கம் மேற்கு.
3. சூரியன் உதிக்கும் பக்கத்தைப் பார்த்துநின்றால் வலதுகைப்பக்கம் தெற்கு.
4. சூரியன் உதிக்கும் பக்கத்தைப்பார்த்து நின்றால் இடதுகைப்பக்கம் வடக்கு என்று தெரிந்து கொள்வேன்.

### படத்தில் திசைகளை யறிதல்.



வினா:—படத்தில் கிழக்கு எது?
விடை:-படத்தைப்பார்த்து நின்றால் நிற்பவனுடைய வலது பக்கம் கிழக்கு.
வினா:—படத்தில் மேற்கு எது?
விடை:-படத்தைபார்த்து நின்றால் நிற்பவனுடைய இடது பக்கம் மேற்கு.
வினா:—படத்தில் வடக்கு எது?
விடை:-படத்தின் மேல்பக்கம் வடக்கு.
வினா:—படத்தில் தெற்கு எது?
விடை:-படத்தில் கீழ்ப்பக்கம் தெற்கு.
வினா:—படத்தில் திசைகளை இடங்களோடு சொல்லு?
விடை:-1. படத்தின் மேல்பக்கம் வடக்கு.
2. படத்தின் கீழ்ப்பக்கம் தெற்கு.
3. படத்தைப் பார்த்து நின்றால் நிற்பவனுடைய வலதுபக்கம் கிழக்கு.
4. படத்தைப் பார்த்து நின்றால் நிற்பவனுடைய இடது பக்கம் மேற்கு.

# SWADESIAM.

## சுவதேசீயம்.

நம் இந்தியநாட்டில் இமசேது பரியந்தம் இப்போது ஒரு உணர்ச்சி தோன்றியிருப்பதாக அறிகிறோம். அவ்வுணர்ச்சியை சுவதேசிய உணர்ச்சி என்னலாம். அதாவது நம் நாட்டு விளைபொருள்களிடத்தும், நாட்டிடத்தும், அதில்வசிக்கும் பலவகைக் குடிகளிடத்தும் அன்புவைத்துப் போற்றியும் பாதுகாத்தும் வருவதாம். இது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத குணமாம். இவ்வரிய குணம் அமைந்தோரே சுவதேசத்தினர் என்று சொல்லிக்கொள்ளும் இலக்கணமுடையராவார். இவ்வகைய உணர்ச்சி எக்காலத்தில் குடிகளுள்ளத்திலுதிக்கின்றதோ அக்காலமே தேச செழுமையை விருத்திப்படுத்த முன் வந்த ஆதிகாலமாம். இவ்வுணர்ச்சியை மற்றையோருக்குண்டாக்கியவர்கள் வங்காளவாசிகளாவர். இவர்களே நம் நாட்டுக்குக் கண்போன்றவர்கள். இவர்களே ஏனைய ராஜதானிகளிலுள்ளவர்களைப் பொதுக்காரியங்களில் பிரவேசிப்பிக்கின்றனர். இவர்கள் வழிநின்றே அநேக அரும் பெரும் நலன்களை யடைந்துள்ளோம். ஆகவே இச்சுவதேசிய முயற்சிக்கும் அவர்களே தலையாய்நின்று ஊக்



கமுண்டாக்கி வருவதால் பிரயோஜன முண்டாக்குமென்று நம்புகின்றோம்.

இனி இம் முயற்சியின் தன்மையைக்குறித்து ஆராய்வோம். மேற்கண்டபடி நம்நாட்டு விளைபொருள்களை விருத்தி படுத்துவதும், அவற்றை நாம் உபயோகிப்பதும் முதற்காரியமாகும். பண்டைக்காலந்தொட்டு நம் நாடு உலோகவகையாலும், மரவகையாலும், பயிர்வகையாலும், சிற்பவகையாலும், கைத்தொழில்வகையாலும், கல்விவகையாலும், சிறப்புற்றதென்று சரித்திரவாயிலானும், அநுபவவாயிலானும் அறிகின்றோம். இவ்வகைய பெருஞ்சிறப்பிருந்தும் அதனைப் பரிபாலிப்பார் இன்மையால் க்ஷீணமடைந்து வந்தன. இக்குறைவுக்கு நமது அறிவின்மையே காரணம். எவ்வாறெனில், நம் நாட்டு கர்நூல், கடப்பை, பல்லாரி, திருநெல்வேலி ஜில்லாக்களில் உற்பத்தியாகும் பருத்தி ஆங்கிலவர்த்தகர்களால் பெரும்பாலும் ராத்தல் ஒரு அணாவிற்குள் வாங்கப்பட்டு இங்கிலாந்து தேசத்து மான்செஸ்டர் நகரத்துக்குப்போய் ஆடையாக நெய்யப்பட்டு மீளவும் நமக்கே 12 அணாவுக்கு விற்கப்படுகிறது. என்ன லாபம்! நூலாக்கவும், ஆடையாக்கவும், போக்குவருத்துக்காகவும் செல்லும் சிறிது செலவு நீங்கலாக நிற்கும் பெரியலாபம் முழுதும் அயல் நாட்டினர்க்கே உரியதாகின்றது. இவ்வாறே இவ்விடமிருந்து அனுப்பப்படும் பதனிடாததோல், உலோகவகைகள் பெரிய லாபங் கொடுத்து வருகின்றன.

இரண்டாவதாய் நாட்டிடத்து அபிமானங் கொள்ளவேண்டுமென்பதாகும். இவ்வகையில் நம்நாடு நம்மை ஐயிரண்டு திங்களாய்ச் சுமந்து பெற்றுப் பையலென்றபோது பரிந்தெடுத்துப் பாலூட்டும் தாய்க்குச் சமதையாகின்றது. தாய் எவ்வாறு என்றும் தான்பெற்ற பிள்ளையின் குறைகுணங்களைப் பெரிதாய் நோக்காது அன்புபாராட்டி வருகின்றாளோ அவ்வாறே நம் நாடும் நம்மிடம் அன்புபாராட்டி வருகின்றது. தமது தாய்மாரைத் திருத்திபடுத்திக் களிப்பிப்பது ஒவ்வொரு உத்தமகுலப் புதல்வனது செய்கையாதல் போல நாட்டுத்தாயையும் களிப்பிப்பது தேசாபிமானச் செல்வரது சிறந்த நடையாம். இவ்வகையசெல்வரே மிகுதியும் வேண்டப் படுபவராகின்றார். இத்தேசாபிமானம் மேற்கொண்டிருப்பது கூடாதகாரியமல்ல. திரிகரண சுத்தியாய் நாட்டிடத்து அன்பு செலுத்தி அதிற் காணும் குறைகளை யொழிக்க முயன்று தம்மாலான சகாயஞ் செய்வதே சிறந்த முறையாம்.

நம்தேசத்தில் வசிப்போர் பலபாஷை பேசி, பலமதந் தழுவி, ஆசாரபேதம்பலவாய் உடையவராக விருப்பினும் உற்றுநோக்குங்கால் ஒரே இந்தியத்தாயின் மக்களாகின்றனர். ஒருதாய்க்குப் பிறந்த புதல்வர் பலர் பல குண நடை வேறுபாடுடையராயினும் அண்ணன் தம்பியராயிருத்தல் போல நாமும் நம்பொதுத்தாயின் மக்களாயிருந்து சகோதர பாவஞ் செலுத்திவரவேண்டும். இதுவே மூன்றாவது முறையாம். இவ்விஷயம் மிகப்பெரிதாதலால் அதன் கூறுபாடுகளைப்பற்றி விரித்தெழுதாது பொதுவாய் ஒருவர் மனதுக்கு ஒருவர் கூடுமானவரையில் பொதுக்காரியங்களில் ஒத்து நடப்பதே போதுமான பலனைக்கொடுக்குமென்போம். அது சமயத்தினிடத்தும், ஜாதி வேறுபாட்டிடத்தும், ஆசார அநுஷ்டானத்திடத்தும் காட்டவேண்டும். எந்தச் சாதியானாயிருப்பினும், எந்த மதத்தினனாயினும், எந்தக்கொள்கை யுடையவனாயினும் யாவர்க்கும் பொதுவாகிய காரியத்தில் ஒன்றுபடாதிருக்க நியாயமில்லை. இப்படி ஒன்றுபடாதிருப்பது அறியாமையாலன்றி அகம்பாவத்தாலன்றென்று நினைக்க இடமுண்டு. ஆகவே தெரிந்தோர் தம்மாலானவரையில் அன்னோரைத் திருத்திவரவேண்டும்.

இதற்கேற்ப நாம் முக்கியமாய்க் கையாடவேண்டிய மார்க்கங்களைக் கவனிப்போம். நம் நாட்டுப்பொருளை யபிமானிப்பதால் பிறநாட்டுப்பொருள் நமக்கு அனாவசிய மாகின்றது. அப்படி யாகாவிடினும் நாமே யாக்கிக்கொள்ளவேண்டும். நம்நாட்டுப் பொருளையே நாம் உபயோகிக்க முற்படுவோமாயின் பிறநாட்டுப் பொருளுக்குச் செலவில்லாமல் அதன் வருத்தும் தானாகவே நின்றுவிடும். இப்போது நமது வீட்டில் கையாண்டுவரும் எந்தவஸ்துவைப் பார்க்கிலும் அந்நியநாட்டுப் பொருளாகவே இருக்கின்றது. உடுக்கும் வஸ்திரம், ஏற்றும் விளக்கு, கையாளும் சாமான் முதலியவெல்லாம் அந்நியநாட்டனவே. இதற்குப்பதில் நம் சொந்த நாட்டுப்பொருள்களில்லையா? எல்லாம் உண்டு. செல்வவந்தருக் கேற்ப நாணய ஜவுளித்தினுசும், மற்றுஞ் சாமான்களும் உண்டு. ஆனால் சிறிது விலையதிகமும், இருக்குமிடந்தேடும் சிரமமும் உண்டாகலாம். இதற்கேற்ப அவற்றின் நீடித்த உபயோகமும், செல்வவிருத்தியும் அதிகமாகலாம். இவ்விருவகையினும் நமக்கே பிரயோஜன மதிகரித்தலால் யாவரும் தம்மாற்கூடியஅளவு தம்நாட்டுப்பொருளையே யுபயோகிக்க முற்படவேண்டும். தான்புதிதாய் வாங்கப்போகும் வஸ்து எவ்வளவு பெரிதாயிருப்பினும், அற்பமாயிருப்பினும் நாட்டுப்பொருளாகவே இருக்க வழி செய்தால் போதுமானது. இச்செயலால் நாளடைவில் நம் நாட்டுப்பொருள் சகல சிறப்பும் பெற்று அப்பொருளைச் சித்தஞ்செய்யும் வினையாளருக்கும் இலாபத்தைக்கொடுத்து நாட்டுப்பொருள் அந்நியரிடம் போகாமல் தேசசெழுமைக்கு ஆதாரமாகும். இதனைக் கவனியாமையால் வருடந்தோறும் பலகோடி ரூபாய் வெளியே போகின்றது. நாமோ பஞ்சத்தாலும் பிணியாலும் வருந்துகின்றோம். இதுவன்றி நாட்டிடத்து அன்பு பாராட்டுவதால் அதற்கு அரசாக்ஷியினரால் அவ்வப்போது உண்டாகும் குறைகளை ஒரே மனதாயிருந்து எடுத்துக்காட்டி அவற்றை நீக்கவும் வழியுண்டாக்குகின்றோம். யாவரிடத்தும் அன்புவைத்து நடப்பதால் நமக்குவேண்டும் சவுகரியங்களெல்லாவற்றையும் உண்டாக்கிக் கொள்கின்றோம்.



இவ்வளவுக்குங் காரணமாகிய இம்முயற்சி இப்போது உதித்திருப்பதால் இதனை ஒவ்வொருவருங் கைப்பற்றவேண்டும். இது சம்பந்தமாய் ஆங்காங்கு பெருங்கூட்டங்கூடி வேண்டுங் காரியங்களைச் செய்ய முயல்கின்றனர். யாவற்றிற்கும் பொருள் முதற்காரணமாதலால் அதனைச்சேகரிக்க வழியும் செய்யவேண்டும். இதனைக்கிராமபாடசாலை யுபாத்தியாயர்கள் மேற்கொள்வதால் பெரும் பிரயோஜனம் விளையும். (இன்னும் வரும்)

## OPINION OF THE JOURNAL.

### செந்தமிழ்ப் பத்திரிகையின் அபிப்பிராயம்.

நல்லாசிரியன் (*Trained Teacher*) சென்ற ஜூன்மாதமுதல் சென்னையினின்று வெளிரும் இம்மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையின் முதற்பகுதி கிடைக்கப்பெற்று மகிழ்ந்தோம். இப்பத்திரிகை எழுந்த தன் நோக்கம்தமிழ்நாட்டுள்ள பாலாசிரியர்க்கும் பிறர்க்கும் போதனாமுறைகளின் விசேடத்தைத் தெளிவுறுத்தி, கல்வியபிவிருத்தி பெற முயல்வதேயாகும். நம் தமிழ்நாட்டிற் சிற்சில பத்திரிகைகள் ஒவ்வொரு பெரு விஷயத்திற்கென்றே தொடங்கப்பட்டிருத்தல் போல, இதுவும் "மாணவரின் கல்வியபிவிர்த்தி" என்னும் இன்றியமையாத பெரு நோக்கத்தைக் கொண்டு வெளிவருதலின், தமிழ்மக்களெல்லாம் அபிமானித்தல்வேண்டற்பாலதாம். இதன் முதற்பகுதியில் "சிறுபிள்ளைகளுக்கு உயிரெழுத்துக்கள் போதிக்குமுறை" என்னுந் தலைப்பினுள்ள விஷயம் படங்களுடன் சிறப்பாக எழுதப்பட்டிருக்கின்றது. இன்னும், விடுதலைச்சீட்டு, பெற்றோர் விண்ணப்பம், 'ப்ரொபல்' என்னும் பாலபோதகர் சரித்திரம், ஜர்மனியிலும், சென்னையிலும் இங்கிலீஷ் பாஷை போதிக்கப்படும்முறை' முதலிய விஷங்களும் படிப்போர்க்குப் பயனளிக்கத்தக்கன. நமது அரசாங்கத்தார் விவசாயம், நாட்டுப்படிப்பு இவற்றின் அபிவிர்த்தியிற் கவலை செலுத்துமிக்காலத்தே, இத்தகைய பத்திரிகை யொன்றுந் துணைபுரிய முன்வந்திருத்தலின், கவர்ன்மெண்டார், இதன் நிலைபேற்றினும் கருணைவைத்தல் நன்மை பயக்கக்கூடியதென்னும் எண்ணமுடையோம்.

## NEWS AND NOTES.

### சமாசாரக் கொத்து.

பிரான்சுதேசத்தில் ஒருவைத்தியர் ஒருவகைக்கருவியைக் கண்டுபிடித்திருக்கின்றாராம். இக்கருவியைக் கொண்டு இடையில் பார்வை இழந்தவர்களே யன்றி பிறவிக் குருடரும் நன்றாய்ப் பார்க்கக் கூடுமாம்.

***

லண்டன் நகரத்தில் ஒரு அமரிக்கன் வந்திருக்கின்றானாம். அவன் எவ்வளவு பாஷாணம் தின்றாலும் அது அவனுக்குத் தீமைசெய்வதில்லையாம். சிலநாட்களுக்குமுன், இருபத்திநான்கு பேரைக்கொல்லக்கூடிய மூன்றுவகைப்பாஷாணங்களைக்கலந்துதின்றும் யாதொரு கெடுதியுமின்றிச் சுகமாயிருக்கின்றானாம்.

***

மிருகங்களுள் சிங்கத்தின் கர்ச்சனையே வெகுதூரங் கேட்கும், அதனினுங்குறைந்தது கழுதைப்புலியின் சத்தம், அதனினுங்குறைந்தது ஆந்தை அலறுதல், அதனினுங்குறைந்தது நரி ஊளையிடுதல்.

***

### உபாத்தியாயர் தேவை.

செங்கற்பட்டு ஜில்லா சைதாபேட்டை ரேஞ்சு சிறுகளத்தூர் சேறி பஞ்சம போர்ட் பாடசாலைக்கு, குறைந்தது பிரைமெரி கிரேட் உபாத்தியாயராக உள்ள ஒருவர் தேவை. மாதச்சம்பளம் ரூபா 7ம், வருஷத்தில் ரிசல்ட் கிரான்ட்டும் கொடுக்கப்படும். மொத்தத்தில் மாசத்திற்குப் பன்னிரண்டு ரூபா யாகலாம். பஞ்சம வகுப்பு உபாத்தியாயராயிருந்தால் நலம். மற்ற இந்துவாயிருப்பினும், பஞ்சம உபாத்தியாயர் கிடைக்காவிடின் கவனிக்கப்படும்.

***

நம் நாட்டுத்தாய்க்காக உழைக்கக்கூடிய அநேக உபாத்தியாயர்கள் தேவை. அவர்கள் ஒவ்வொருவரும் தேசப்பொருள்களையுபயோகிப்பதாலும், தேசஜனங்களை யொற்றுமைப் படுத்துவதாலும் விளையக் கூடிய பெருநன்மையை யாவர்க்கும் போதிக்கக் கூடியவர்களாய் இருக்கவேண்டும். இவர்கள் தங்களுக்கு வேண்டிய சகல ஆதாரங்களையும் நமக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

***

### பத்திராதிபர் குறிப்பு.

சிலர் ஜூலை மாதத்திய சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எழுதியிருக்கின்றனர், அவ்வாறு கிடைக்கப் பெறாதவர்கள் பிரசுர ஆபீசுக்கு எழுதிக்கொள்ள விரும்புகின்றோம்.


# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

## மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 1. | 1905ஸு செப்டம்பர்மீ | மாதம் 4.


## THE INDIAN KINDERGARTEN.

### செல்வச்சிறுவர் சிங்காரத்தோட்டம்.

(53-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

### II. STORIES.

### கதைகள்.

நீதியும், விநோதமுமான கதைகளைச் சொல்லிச் சிறுவர்கள் அறிவை விருத்தி செய்வது கதை சொல்வதன் நோக்கமாம். சிறுவர்கள் அறிவை விருத்தி செய்வதற்கு இம்முறை சிறந்த மார்க்கமே. எப்படியெனில், கதை சொல்லிக் குழந்தைகள் மனத்தைக் களிக்கச் செய்து வசப்படுத்துவது மிக எளிது. நாம் கதை சொல்லும்போது மிகச்சிறிய குழந்தைகளும் மிகவும் கவனத்துடன் கேட்கின்றன. கதைகள் சிறுவர்களுக்கே யன்றி கற்றார், கல்லார் முதலிய யாவர்க்கும் மனோல்லாசத்தை யுண்டாக்குகின்றன. இஃது, எந்நாட்டாருக்கும் உடன்பாடானதே. இவ்வாறு, கதைகளின் மூலமாய் நல்லறிவு விருத்தியானதற்குப் பஞ்சதந்திரக்கதையே போதிய திருஷ்டாந்தமாய் நின்று நமது நாட்டிற்குச் சிறப்புண்டாக்குகின்றது. எவ்வாறெனின், பஞ்சதந்திரக்கதையின் வரலாற்றை ஈண்டுக் கூறுவோம்.

பாடலிபுரம் என்னும் நகரத்தில் செங்கோல் செலுத்திய சுதரிசனன் என்னும் அரசனுக்கு புத்திரர் பலர் இருந்தனர். அப்பிள்ளைகள் மிகவும் மந்த புத்தியுடையவர்களா யிருந்தனர். அவர்களுக்குக் கல்வி கற்பிக்க அரசன் தன்னாலானமட்டும் முயன்றும் அது முற்றும் பிரயோசன மில்லாதொழிந்தது. அரசன் தன் புத்

திரர் மூடராயிருப்பதைக்கண்டு மிகவும் மனம் வாடி அவர்களைக் காணவும் மனமில்லாதிருந்தான். ஒரு நாள் தன் சமுகத்தில் பல வித்துவான்கள் கூடியிருக்கக்கண்டு அவர்களைநோக்கிச் சொல்வானாயினன். வித்துவச்சிரோமணிகளே! எனது புத்திரர்கள் மிகவும்மூடராயிருக்கின்றனர். கல்வியும்தருமகுணமுமில்லாதபிள்ளைகள் இருந்தாவதென்ன? பால்கொடாத பசுக்களைப்பாதுகாப்பதில் பயனுண்டோ? வேதசாத்திரமறிந்த பிள்ளை ஒருவனிருந்தாலும் அவனாற் குலமுழுதும் சுகமடையும். அவ்வாறில்லாப் பிள்ளைகள் கருப்பத்திலேயழிந்தாயினும், அழியாவிட்டாற் பிறந்தவுடனே இறந்தாயினும் போவதே நலம். குலத்தில் அயோக்கியனான பிள்ளை இருத்தலாகாது. ஜன்மாந்தர புண்ணிய வசத்தினால் இம்மைக்கும் மறுமைக்கும் இதந்தரும் புத்திரன் பிறக்கின்றான். பாவசம்பந்தத்தினால் குலத்தைக்கெடுக்கும் புத்திரன் பிறக்கிறான். அன்றி இப்புதல்வரைப் பெற்றோர் என்ன தவம் இயற்றினர்களோவென்று ஆன்றோர் கூறும் வண்ணம் நடப்பவனன்றோ புத்திரன் எனப் பற்பலவாறு கூறி மற்றுஞ் சொல்வான். புலவீர்! இளமை, செல்வம், இராஜசம், அறிவின்மை ஆகிய நான்கினுள் ஒன்றே கேட்டுக்கெல்லாம் ஏதுவாகுமெனின் இந்நான்கும் ஒருவனிடத்திலிருந்தால் அவன் என்னபாடுபடான்? பிள்ளை எண்ணிக்கைக்குப் பிறந்து துன்மார்க்கர்களாயிருக்கும் என் புத்திரருக்கு நீதிசாஸ்திர உபதேசஞ்செய்து எந்த மகாபுருஷன் மறுஜனனம் வரச்செய்வானோ? என்று கலங்கி நிற்குமளவில், சகல நீதிசாஸ்திரங்களிலும் நிபுணராகிய சோமசன்மாவென்னும் பிராமணோத்தமர் எழுந்து அரசனைநோக்கி "அரசே! தமது குமாரரை ஆறுமாதகாலம் எம்மிடம் அனுப்பிவைத்தால் அவர்களுக்குச் சமானமான அறிவுடையோர் இவ்வுலகில் இலரென்று அறிவுடையோர் கூறும் வண்ணம் செய்வேன்" என்று கூறினர். அதுகேட்ட அரசன் நடுக்கடலில் திசைதப்பி மயங்கும் மாலுமிக்கோர் துறை தோன்றினாற்போலும் பெருமகிழ்வடைந்து தன்புத்திரரை அவ்வந்தணர் வயமாக்கினன். அப்பிராமணன் அரசகுமாரரைத் தன் அகத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் முதலில் வித்தியாரம்பஞ் செய்யாமல் நீதிக்கதைகளால் அறிவுண்டாக்க எண்ணிக் கருப்பஞ் சாற்றைக் காய்ச்சிச் சர்க்கரைக் கட்டியாகத் திரட்டினாற்போல் நீதிசாத்திரக் கருத்துக்கள் அனைத்தையுந் திரட்டிப் பஞ்சதந்திரக் கதையாகக் கற்பித்துச் சொல்லத்தொடங்கினன். அரசகுமாரர்களும் அக்கதையை ஊக்கத்தோடும் விருப்பத்தோடுங் கேட்டுத் தெளிந்து இராஜதந்திர நிபுணர்களானார்கள்.



ஆசிரியநண்பர்காள்! இச்சரித்திர வரலாற்றை நோக்கும்போது கதைசொல்லி நல்லறிவு புகட்டியதாக நன்கு விளங்குகின்றதல்லவா? ஆதலின், கிண்டர்கார்டன் முறைப்படி கதைசொல்லிச் சிறுவர்களின் அறிவை விருத்திசெய்யும் முறை நமது நாட்டில் ஆதிகாலந்தொட்டு வழங்கி வருவதாய்த் தெளிவாகின்றதல்லவா?

## III. SONGS.

### தொழிலுக்கேற்ற பாட்டுக்கள்.

ஜீவப்பிராணிகளின் மனத்தில் இன்பமூட்டுவதற்குப் பாட்டைக்காட்டிலும் வேறோர் சிறந்தமார்க்கமில்லை. சில பட்சிகள் இனியகுரலாய்ப் பாடி நமக்கு இன்பத்தை விளைவிக்கின்றன. பசுக்கள், எருதுகள், பாம்புகள் முதலிய சில ஜெந்துக்கள் மனிதர் பாடும் இனிய குரலோசையைக் கேட்டுக் களிப்படைந்து தம்மை மறந்து நிற்கின்றன. இதினாலேயே,

"பாலுண் குழந்தை யொடுநற் பசுவும் பணியுமின்னும்
ஞாலத் தமர்பண் டிதயோ கியருடன் ஞானியரும்
கோலத் தமரரும் நான்முகன் முக்கண்ணன் கோவலனும்
சாலச் சுகமுற வோங்கிய நற்கலை சங்கீதமே"

என்னும் ஒரு செய்யுளும் வழங்குகின்றது. கடவுள் விஷயமாய் நம் முன்னோர்களாகிய பெரியோர் மனமுருகிப் பாடியருளிய பாடல்களை நாமே இசையோடு பாடினாலும், ஒருவர் பாடக்கேட்டாலும் அக்காலத்தில் நம் மனம் ஒரு நிலைப்பட்டு பரவசமடைந்து நிற்கின்றது. இது யாவரும் அநுபவத்திற்காணும் விஷயமே.

ஆகையால், சிறுகுழந்தைகளுக்கு உற்சாக முண்டாக்கப் பாட்டே மிகச்சிறப்புடையது. கைக்குழந்தைகளும் தம் தாய்மார் பாடும்போது அழுகையின்றி கவனமாய்க் கேட்டு நித்திரையடைகின்றன. நமது நாட்டிலுள்ள ஸ்திரீகள் தம் மக்களுக்குச் சந்தோஷ முண்டாக்கச் சிறு பாடல்களைக் கற்பித்து வருவதை இன்றும் காண்கின்றோம், அப்பாடல்களுள் பெரும்பாலானவை கிண்டர்கார்டன் பாடலை ஒத்திருக்கின்றன.

கிண்டர்கார்டன் போதனையில் சொல்லியபடி, முன்பு ஒரு தொழிலைச் செய்துகாட்டி, அதற்கேற்ற ஒருகதையைச் சொல்லி, அக்கதையைப் பாட்டாகவும் பாடுவதே மிகச்சிறந்த முறையாம். இதே முறை சரியானபடி நமது நாட்டில் இன்றும் நடைபெற்று வருகின்றது. அதாவது:—

சில ஏழைஜனங்கள் பாரதம், இராமாயணம் முதலிய சரித்திரத்திலுள்ள விஷயங்களுக்கு ஏற்க சித்திரப் படங்களையும், உருவங்களையும் எழுதித் தெருக்களில் சாலையோரத்தில் விரித்து அப்படத்தில் எழுதிய உருவங்களை மனிதர்களுக்குக் காட்டி முதலில் அதற்கேற்ற கதைகளைச் சொல்லிப் பின்பு அந்தக் கதையையே பாட்டாகவும் பாடுகின்றார்கள். இம்மார்க்கமே கிண்டர்கார்டன் முறைக்கு மிகவும் பொருத்தமானதாகும்.

## ACTION SONGS.

## அபிநயப் பாடல்.

ஒரு பாட்டைச் சொல்லிக்கொண்டு அதிலுள்ள கருத்துக்கிணங்கக் கை, கால், முகம் முதலிய உறுப்புக்களால் செய்கைகாட்டுவதே அபிநயப் பாடலாகும். இவ்விஷயமாக நமது நாட்டில் அபிநய சாஸ்திரங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. இது கற்றறிந்தோராலும் நன்கு மதிக்கப்படுகிறது. இப்படிபட்ட சிறுபாடல்கள் சாதாரணமாய் நமது நாட்டில் சாமானியஜனங்களாலும் வழங்கப்படுகின்றன. அவற்றைத் தாய்மார் தமது கைக்குழந்தைகளுக்குக் கற்பித்து விளையாடச்செய்து சந்தோஷிப்பிக்கின்றனர். அவை:—

(1) " சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு "

(2) " கைவீசம்மா கைவீசு, கடைக்குப்போகலாம் கைவீசு"

(3) " இவ்வளவு வேண்டுமோ பாவற்காய், அதுவும் வேண்டாம் கோவைக்காய் "

(4) " அகத்திக்கீரை பிண்ணாக்கு, அதிலேகொஞ்சம் நெய்வாரு "

(5) " சின்னி, தலநொச்சே" (చిన్ని తలనొచ్చె) முதலியனவாம்

(இன்னும் வரும்.) பத்திராதிபர்.

## WHY THE SKY IS BLUE?

## ஆகாயம் நீலமாயிருப்பதேன் ?

உலகத்திலுள்ளோர் அனைவரும் ஆகாயத்தில் மிகவும் பளபளப்பான மாசற்ற நீலநிறத்தைக் கண்டு வியந்துகொண்டிருக்கிறார்கள். ஆயினும் எவராகிலும் எப்பொழுதாவது சிறிதுநேரம் நிதானித்து இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசித்து " ஆகாயம் நீலமாயிருப்பதேன்''? என்று சிந்தித்துப்பார்த்ததுண்டா ? ஆய்ந்துபார்த்தால் இதன் காரணம் மிகவும் சுலபமானதுதான். ஆயினும், அதைத் தெரிந்துகொள்ள முயல்வதற்குமுன்னே ஒளியின் இயற்கையைப் பற்றி நாம் கொஞ்சம் தெரிந்துக்கொள்வது மிகவும் அவசியமானது.



முதலில், உலகத்திலுள்ள ஒளிகளெல்லாம் முக்கியமாய்ச் சூரியனிடத்தினின்றே உண்டாகின்றனவென்று அனைவர்க்குந் தெரியும். அதன்மேல் அறிந்துகொள்ளவேண்டுவது என்னவென்னில்? சூரியனுக்கும் நமக்கும் நடுவிலிருக்கும் அநேகங் காதவழியைக் கடந்துகொண்டு அந்த ஒளி நம்மிடத்திற்கு எப்படிவருகிறதோ அதை அறியவேண்டும். மிகக் கற்றறிந்த பண்டிதராகிய நியூடன் சொல்வதாவது: சூரியன் ஏதோ ஒருவகைப்பொருளின் சிறு துண்டுகளை ஆகாயத்தின்வழியாய் நம்மிடத்திற்கு எறிகிறான்; அந்தப் பொருள் நம்மண்டைவந்து நமது கண்களுள் ஊடுருவிச் செல்லுகின்றது; அதனாலேதான் ஒளி உண்டாகிறதென்று சொல்லுகிறார். அது அவ்வளவு உண்மையா யிருக்குமென்று தோன்றவில்லை; ஏனெனில், இந்த ஒளியொன்றுதவிர மற்றெந்தக் கெட்டிப்பொருளாவது கண்ணாடிக்குள் ஊடுருவிச்செல்லக் கண்டிருக்கிறோமா? மேலும் இந்த ஒளியே கண்ணாடியைவிட வெகு மெதுவாயும் ஊடுருவிச்செல்ல வெகு சுலபமாயுமிராநின்ற ஒரு கறுப்புத்துணியைக் கடந்து செல்லமாட்டாதென்பது நமக்கு நன்றாய்த்தெரியுமே. இந்த ஒளியின் விஷயத்தைப்பற்றியே ஆலோசனை செய்துகொண்டிருந்த அநேகர் இப்பொழுது, சூரியனுக்கும் நமக்கும் இருக்கிற இடைவெளியிலேவெகு லேசாய்க் கண்ணுக்குத் தெரியாத ஈதர் (Ether) என்று சொல்லப்பட்ட ஒரு பொருள் வியாபித்திருக்கிறதென்றும, சமுத்திரத்தில் நீர் அலை யலைத்துக்கொண்டு ஓரிடத்தினின்றும் மற்றோரிடத்திற்கு ஓடுவதுபோல (மெக்ஸிகோ குடாவிலிருந்து அயர்லாந்து முதலாய்ப் பலவிடங்களுக்குச் சமுத்திரத்துள் நீர்வெள்ளம் ஓடுவது அநேகர்க்குத் தெரியுமல்லவா?) ஒளியும் அந்த ஈதரின் மூலமாய் நாற்புறமும் பரவுகிறதென்கிறார்கள். ஆயினும், நீரலைக்கும் ஒளியலைக்கும் சிறிது வேற்றுமையுண்டு. நீரலை ஒரு நிமிஷத்திற்குக் கால்மைல்தூரம் ஓடுகிறதென்றால், அதேகாலத்தில் ஒளி கோடிமைலுக்கு அதிகமாகவே செல்லுகின்றது.

ஒரு தண்ணீர்ப்பாத்திரத்தில் கையைவைத்து முன்னும் பின்னும் அலட்டினால், சிறிது சிறிதாய்ப் பல அலையுண்டாகிப் பாத்திரத்தின் ஓரங்களில் மோதுமென்பது தெரியுமே. நமது கையைப் போலச் சூரியனையும், தண்ணீரைப்போல ஈதரையும் வைத்துக்கொண்டால், ஒளியின் அலைகள் நீரலைக்கு ஒப்பாகவும், நமது கண்கள் அந்த அலைமோதுகிற பாத்திரத்தின் விளிம்புக்கு ஒப்பாகவும் ஆகும். இப்படிச் சூரியன் அசைவதனால் பல சிற்றலை

களுண்டாகின்றன. அவை தாம் ஒளியலைகள். அவை ஈதரின்மூலமாய்ச் சூரியனிடத்தினின்றும் நாற்புறமும் பரவுகின்றன.

பெரும்புயல் அடித்துவிட்டபிறகு சமுத்திரத்தில் அலைகள் மலைமலையாய்ப் பெருத்து எழும்பிவரக் கண்டிருக்கிற நாம், வேளைக்குத் தக்கபடி ஒளியலைகள் பலவிதமாயிருக்கக்கண்டு அதிசயிக்க வேண்டுவதில்லை. பெருத்த நீரலைகள் கடற்கரையில் பலமாய் மோதுவது போலவே பெருத்த ஒளியலையும் அதிக வேகமாய் நமது கண்களில்வந்து மோதி அந்த ஒளிக்கு இருப்பிடமானபொருளை அதிக பளபளப்பாய் விளங்கச்செய்கின்றது.

புயலுக்குப் பிறகு மோதுகிற பெருத்த அலையொன்று மாத்திரமேயன்றி, ஒளிக்காகக் கடற்கரையிற் காணவேண்டிய திருஷ்டாந்தம் வேறொன்றும் உண்டு. பலவித வேளைகளில் அலைகள் ஒன்றுக்கொன்று பலவிதமான தூரமுடையதாயிருக்கக் கண்டிருக்கிறோமல்லவா? அப்படியே சிறந்த பண்டிதர்கள் ஒளியின் அலைகளைப் பரிசோதித்ததில், அவற்றுள் சில அலைகள் மற்றவைகளைவிட ஒன்றுக்கொன்று இரட்டிப்பான தூரத்திலிருப்பதாகக் கண்டிருக்கிறார்கள். ஒளியைப்பற்றிய மிகவும் நுட்பமான விஷயம் இதுதான்; அந்தந்த ஒளியலைகளுக்கு நடுவில் இருக்கிற தூரத்தினாலேதான் ஒளிக்கு நிறம் ஏற்படுகிறது. ஆகையால், அந்தத்தூரத்தின் அளவைக் கண்டுகொண்டால் இன்னஒளி இன்ன நிறமுடையதென்றும், இன்னஒளி இன்னநிறமென்றுந் தெரிந்துகொண்டால், அதைக்கொண்டு இன்ன அலை இன்ன அலையைவிட இவ்வளவு தூரத்திலிருக்கிறதென்று சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

ஒளியலைகள் வந்து நமது கண்களில் மோதும்போது, எல்லாவற்றிற்கும் கடைசியாய் வெகுதூரத்திலிருக்கிற அலைகள் சிவப்பு நிறமாகவும், அதை அடுத்த அலைகள் கிச்சிலிப்பழ நிறமாகவும், அதன் பின்னலை மஞ்சள்நிறமாகவும், பிறகு பசுமைநிறமாகவும், அப்புறம் கறுப்பாகவும், பிறகு நீலமாகவும், கடைசியாய் ஊதாநிறமாகவும் தோன்றும். இப்படியாக ஒளியலைகள் நீர் அலைகளுக்கு ஒப்பாகவே இருக்கின்றன; நீரலையின் உயரத்திற்கு ஒளியலையின் பளபளப்பும் அதன் தூரத்திற்கு இதன் நிறமும் சரியாகின்றன.

இப்போது நிறமுள்ள ஒளி இப்படிப்பட்டதென்று தெரிந்தது. ஒளிக்கு வெளுப்பு நிறமாவது என்னவென்று இனி விசாரிக்கவேண்டும், ஒருதிருஷ்டாந்தம் பாருங்கள்: வட்டமான ஒரு உரப்புக் கடி-



தத்தை யெடுத்து அதில் நேருக்குநேராகச் சமதூரத்தில் நான்கு கோடு இழுத்து மையத்தில் ஒரு ரந்திரம்செய்தால், அந்தத்துண்டுக் கடிதம் எட்டுப்பாகமாகப் பிரிக்கப்படுகிறது. அவ்வெட்டினுள் ஒன்றில் சிவப்புநிறமும், அதையடுத்த இரண்டில் மஞ்சள்நிறமும், அதையடுத்த கட்டத்தில் கிச்சிலிப்பழநிறமும், அதன் பக்கத்துக் கட்டத்தில் பசுமைநிறமும், ஆறுங்கட்டத்தில் கறுப்பும், ஏழாங் கட்டத்தில் நீலமும், எட்டாங்கட்டத்தில் ஊதாவுமாக நிறங்கொடுத்துப் பிறகு அந்தத் துண்டுக்கடிதத்தைக் காற்றாடிபோலக்கட்டி வெகு வேகமாய் ஆடச்செய்தால் அப்போது அந்தக் கடிதம் முழுதும் வெளுப்பாகவே தோன்றும். இதை அநேகர் நேராய்ப்பார்த்துமிருக்கலாம். அதிலுள்ள வர்ணங்களெல்லாம் சுத்தமான வர்ணங்களல்ல. ஆகையால், அந்த வெண்மைநிறம் சுத்தமான வெளுப்பாயிராது; சாம்பல் நிறமாயிருக்கும். இந்தப் பல வர்ணங்களையும் சேர்ப்பதனால் வெண்மைநிறமாகிறதென்று இதனால் தெரியவருகிறது. ஆனால், வெண்மைநிறத்தில் இத்தனை வர்ணமும் கலந்திருக்க வேண்டுமல்லவா?

நியூடன் என்பவர்தான் முதல்முதல் இதைக் கண்டுபிடித்து விளக்கிக் காட்டியிருக்கிறார். வெளுப்புநிறமாகிய சூரியனுடைய காந்தி ப்ரிஸிம்(Prism) என்று வழங்குகிற முச்சவுக்கக்கண்ணாடியின் வழியாய்ப் புகச்செய்தால் அதினின்றும் வெளிவருகிற காந்தி வெளுப்பாயிருப்பதில்லை. சிவப்பு மஞ்சள் பச்சை நீலம் முதலான நிறங்களாக மாறுகின்றன. அந்த ஒளி ஒரு கடிதத்தில் விழும்படிச்செய்தால் அதில் கீழ்ச்சொன்ன வரிசையாகவே சிவப்பு முதலிய நிறங்கள் அமையக் காணலாம். இந்த வரிசையும் கீழ்ச்சொல்லியபடி ஒளியலைகளுக்கு ஒன்றுக்கொன்றுள்ள தூரத்தின் வேறுபாட்டாலேதான் உண்டானது. இந்தப் பலவர்ணங்களும் இப்படித் தோன்றுவதற்கு அந்த முச்சவுக்கக் கண்ணாடிசெய்கிற காரியமென்னவெனில், வெண்மைநிறமாக மாறுகிற பலநிறமுள்ள சூரியகிரணங்களைத் தனித்தனி தன்னிடத்திற்கு இழுத்துக்கொள்கின்றது. ஆயினும், எல்லாக் கிரணங்களையும் ஓரளவாக இழுத்துக்கொள்வதில்லை. சிவப்புக்கிரணங்கள் மிகவும் பெரியவைகளாதலால் சுலபமாய் வணங்கிவரமாட்டா; மிகவும் சிறியவைகளான ஊதா கிரணங்களோ கொடிபோல் வெகு லேசாய் வணங்குகின்றன.

இவைகளுக்கும் ஆகாயத்திலுள்ள நீலநிறத்திற்கும் சம்பந்தமென்னவென்று இப்போது விசாரிப்போம். வெளுப்பான சூரிய

காந்தி இப்பூமியைச் சூழ்ந்திருக்கும் வாயுமண்டலத்தில் வரும்போது, ப்ரிஸிம் என்னும் கண்ணாடி செய்வதுபோலவே செய்யவல்ல ஏதோ ஒரு பொருளோடு சேர்கின்றது. அப்போது பலவிதமான சூரியகிரணங்களும் அதனால் வணக்கியிழுக்கப்பட்டு வெவ்வேறாகப் பிரிக்கப்படுகின்றன. கறுப்பு நீலம் ஊதா இந்தக் கிரணங்கள் அதிகமாய் வணக்கப்பட்டு அவற்றுள் சில மறுபடியும் சூரியனிடத்திற்குத் திரும்பிச்செல்லும்படிச் செய்யப்படுகின்றன. மிகுந்த பச்சை மஞ்சள் சிவப்பு இந்த நிறங்கள் மாத்திரமே நம்மிடத்திற்கு வருகின்றன. இவையெல்லாம் சேர்ந்து மங்கலான மஞ்சள்நிறமாகின்றன. மூடுபனி முதலியவைகளால் ஆகாயம் நன்றாய்க் கனத்திருக்கையில் இன்னும் பச்சை மஞ்சள் நிறங்கள்கூடச் சூரியனிடத்திற்குத் திருப்பப்பட்டுக் கிச்சிலிப்பழ நிறமும் சிவப்புநிறமுமே நம்மிடத்திற்கு வருகின்றன. அதனாலேதான் அக்காலத்தில் சூரியன் அதிக சிவப்பாகத் தோன்றுகின்றது. காலை மாலைகளிலுங்கூட இதேவிதமாகவே ஆகின்றது. அக்காலங்களில் சூரியகிரணங்கள் மிகவும் சாய்வாக வாயுமண்டலத்தில் நடுவே வெகுதூரம் வரவேண்டியிருக்கின்றதனால், பனிமூடிய ஆகாயத்தின் வழியாய்ச் சிறிது தூரம் வருவதனால் எக்காரியம் உண்டாகிறதோ அதேகாரியம் உண்டாகின்றது; அதாவது: சிவப்புக் கிரணங்கள் மாத்திரமே நம்மிடத்திற்குவந்து சூரியனைச் சிவப்பாய்க் காட்டுகின்றன.

திரும்பிப்போன ஊதா நீலம் கறுப்பு இந்தக் கிரணங்கள் என்னவாயினவோ அதை இப்போது விசாரிக்கவேண்டும். அவை, ஆகாயத்தில் நாற்புறமும் பரவுகின்றன. சந்திரனிடத்திற்கும் மற்றக் கிரகங்களிடத்திற்கும் போகிற காந்தியினின்றும் நீலகிரணங்களையெல்லாம் நம்முடைய வாயுமணடலம் இழுத்துக்கொள்கின்றது. அதனாலேதான் ஆகாயம் நீலமாகவும் அந்தக் கிரகங்களுடைய கிரணங்களெல்லாம் சிவப்பும் மஞ்சளுமாகவும் தோன்றுகின்றன

இப்படிச் சூரியகிரணங்கள் சிவப்பும் நீலமுமாய் இரண்டாக நம்முடைய வாயுமண்டல்த்தால் பிரிக்கப்படுகின்றன. சிவப்புக் காந்தி நேராய் நம்முடைய கண்களண்டைவந்து சேருகின்றது. நீலநிறம் நாற்புறமும் பரவிப்போகின்றது. அதனால், நாம் சிவப்புக் காந்தியைமாத்திரம் பெற்றுக்கொண்டு நீலகாந்தியை இழந்துபோகிறோம். ஆயினும், சந்திரனிடத்திற்கும் கிரகங்களிடத்திற்கும்போகிற காந்தியினின்றும் நீலநிறமானது நமது வாயுமண்டலத்தால் கவரப்பட்டு ஆகாயத்தில் நமக்கு நன்றாய்ப் புலப்படுகின்றது.



ஆகாயம் நீலமாயிருப்பது இதனாலென்பது இப்போது நன்றாய்த் தெரிந்ததல்லவா? இன்னும் சற்று நிதானித்துப் பார்த்தால் இன்னொரு விஷயமும் தெரியும். ஒவ்வொருகாலத்தில் சூரியன் அதிக சிவப்பாகத் தோன்றுகிறதே, அக்காலங்களில் பச்சைக்கிரணங்கள்கூட நம்மிடத்திற்கு வராமல் திரும்பிப்போய் விடுவதனாலேதான் அப்படியாகின்றது. அதனால் அக்காலங்களில் ஆகாயம் சுத்த நீலமாகத் தோன்றக்கூடாது. பசுமைகலந்த நீலமாகவே தோன்றவேண்டும். சூரியன் அதிக சிவப்பாய்த் தோன்றுகிற மாலைவேளைகளில் பார்த்தால் ஆகாயம் அப்படியே தோன்றக்காணலாம்.

---

## THOSE WHO REPOSE IN GOD WILL NOT BE FORSAKEN.

## கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

---

(62-ஆம் பக்கத் தொடர்ச்சி).

இந்த மோசத்தை இங்ஙனம் கண்டறிந்தவன் தனதத்தனுடைய மாளிகைக்குச் சமீபத்திலிருக்கும் ஒரு வியாபாரியே. இவன் வெகு நாணயமான வர்த்தகன்: மடிமாங்காய் போட்டுத் தலை வெட்டுகிறவன் அல்லன்: ஒருவன் தன்னிலும் மேலான வர்த்தகனாயினும் அவன் சீரழிவதைக்கண்டால் சந்தோஷப்படாமல் மிகவும் பரிதாபங் கொள்பவனே. இவனுக்குத் தருமபாலன் என்று பெயர். இவன் தனதத்தனிடத்தில் அடிக்கடி கொடுக்கல் வாங்கல் முதலான விவகாரங்கள் உடையவனாதலால் தனதத்தனுடைய குணாதிசயங்களை நன்குணர்ந்தவன். “இந்த தனதத்தன் இத்தனைகாலமாகப் பேரும் புகழுமாய்ச் சத்தியந் தவறாமல் இருந்தவன், இப்பொழுது இப்படி மோசக்காரன் ஆய்விடுவானா? நான் நம்பமாட்டேன். ஆனால், அந்த ரூபாயை உரைகல்லில் உரைத்துப் பார்த்தோமே அந்த ரூபாய் ஒரு வேளை அவன் கையில் வேறெந்த விதமாக வந்ததோ? நானே பிரத்தியக்ஷமாய்ப் பரீக்ஷித்துப்பாராமல் தனதத்தனை மோசக்காரன் என்று எள்ளளவுங் கொள்ளமாட்டேன்,” என்று ஆலோசித்து, மிகவும் சூட்சுமபுத்தி உடையவனாதலால், தருமபாலன் ஒரு உபாயஞ் செய்யலானான். உடனே தன் வீட்டை யடைந்து பெட்டியைத் திறந்து நூறு ரூபா எடுத்து ஒரு பையிலிட்டுக் கட்டிக்கொண்டு தனதத்தனைக் தேடிக்கொண்டு போனான். போய், “ஐயா, தனதத்தரே, முன்பின் பாராமல் ஒரு வியாபாரத்தில் தலைபிட்டுக்கொண்டேன், அதில் தடுமாற்றம் உண்டானால்

நான் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் பரதேசம் போய்விட வேண்டும். எப்படியிருக்குமோ என்றஞ்சி, இந்த நூறு ரூபாயையேனும் பத்திரப்படுத்தி வைத்தால், இதைக்கொண்டாயினும் கரையேறக் கூடுமே என்றெண்ணி இந்த முடிப்பை எவரும் அறியாமல் தங்களிடத்திலே வைத்துப் போகலாமென்று வந்தேன். உங்களை நான் அறிவேன், என்னை நீங்கள் நன்கறிவீர்கள். உங்களிடத்தில் இருப்பது என்பெட்டியில் இருப்பதினும் பதின்மடங்கு பத்திரமல்லவா?" என்று சொல்லிப் பையைக் கொடுத்தான். தனதத்தனும், தன்னைத்தேடி எவரும் வராமலிருக்குங் காலமாகையால், அதிசயங் கொண்டு, பையை வாங்கிப் பத்திரமாகப் பெட்டியில் வைத்துப் பூட்டினான். தருமபாலனும், தான் கேட்ட சங்கதி பொய்படும்; தன் கொள்கையே உறுதிப்படும் என்றெண்ணி, விடைபெற்றுக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான்.

சிலநாள் கழிந்தபிறகு, தருமபாலன் ஒரு நாள் திடும்பிரவேசமாய்த் தனதத்தனிடஞ் சென்று, "ஐயா, நண்பரே, அந்தமட்டில் வீட்டில் இருக்கின்றீரே, வெகு சந்தோஷம். அவசரமாக ஒரு தண்டற்காரன் வந்திருக்கிறான். தங்களிடம் வைத்த ரூபாயைத் தயவு செய்யவேண்டும்" என்று கேட்டான். அதற்குத் தனதத்தன், "ஐயா, நாம் சிநேகிதரல்லவா? இதற்கு இத்தனை முகவுரை வேண்டுமா? என்னுடைய பணத்தைக்கொடு என்றால் கொடுத்துவிட மாட்டேனா" என்று சொல்லிக்கொண்டே எதிரில் இருந்த பெட்டியின் உள்ளறை ஒன்றைத்திறந்து, "இதோ அன்று உங்கள் எதிரில் வைத்தது வைத்தபடியே இருக்கின்றது, எடுத்துக்கொள்ளும் உங்கள் விஷயத்தில் எவ்விதசகாயம் வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறேன். நீங்கள் கூசுதலின்றி எப்போது வேண்டுமானாலும் வாருங்கள்" என்று சொன்னான்.

பையை எடுத்துக்கொண்டு தருமபாலன் விரைந்துபோய் ரூபாயை எண்ணிப் பார்த்தான். ரூபாய் நூறும் சரியாக இருந்தது. மேனியும் வேறுபடாமல் இருக்கக்கண்டு, ஒவ்வொரு ரூபாயாகத் தட்டிப்பார்த்தான். ஒரு ரூபாயானது சப்தம் வேறுபட்டுச் சந்தேகத்துக்கு இடம் உண்டாயிற்று. "நான் கொடுத்த போது எல்லாம் சரியாகவே இருந்தன. ஆனாலும், ஏதோகைதவறாக இருக்கக்கூடும்." என்று நினைத்து மற்றவைகளைத் தட்டிப்பார்க்கும்போது, மறுபடி ஒன்று சப்தம் மாறுபட்டது. சந்தேகம் அதிகரித்தது. பின்னையும் ஒன்றைத்தட்டிப் பார்க்கையில், எல்லாவற்றையுமே உரைத்துப்



பரீக்ஷிக்கவேண்டும் என்கிற எண்ணம் உண்டாயிற்று. அங்ஙனம் பரீக்ஷித்துப் பார்க்கையில், முப்பது கள்ளரூபாய் கலந்திருக்கக் கண்டு, "ஐயா, இவ்விதமாக அசத்தியவானாகி விட்டானே தருமதத்தன்" என மனங்கலங்கி வருந்துவனாகி, மீண்டும் சாவகாரியைத் தேடிக்கொண்டுபோய், "ஐயோ, உம்மிடம் வைத்த ரூபாயில் முப்பது ரூபாய் வேறுபட்டிருக்கிறது. இதோ பாருங்கள்," என்று காட்டினான். "வேறுபாடோ, இல்லையோ, நான் என்ன கண்டேன், நீர் கொடுத்த பையைத் திறந்து தானும் பார்க்கவில்லையே. வைத்தது வைத்தபடியே பெட்டியில் இருந்ததே" என்று கூறும் தனதத்தனைப் பார்த்து, "ஐயா, இத்தனைக்காலமாக உங்கள் இடத்தில் எத்தனை விவகாரமாக வந்திருக்கிறேன், எப்பொழுதாவது குறைகூறினதுண்டா. இதில் ஏதோ பிசகு நடந்திருக்கிறது." என்று உறுதி கூறினான் தருமபாலன். தருமதத்தன் "என்ன ஐயா, பித்தனாக இருக்கிறாய்? இந்த அல்பத்துக்கு ஆசைப்பட்டு மோசம்பண்ணுவேனா? போ, போ, வீட்டை விட்டு அப்புறம்போ." என்று கோபங்காட்டினான். தருமபாலன் "ஐயா, கோபம் சண்டாளம், நான் என்ன முழுமூடனா? இதோ பிரத்தியக்ஷமான சாக்ஷி இல்லாமல் உமக்கு முன்னே இப்படி மன்றாடுவேனா? எவ்விதத்திலோ மோசம் நடந்திருக்கிறது. நானாகிலும் மோசம் செய்திருக்க வேண்டும், நீராகிலும் மோசம் செய்திருக்க வேண்டும். நாம் இருவரும் நாணயமான வர்த்தகராகையால், இந்த விஷயம் சிக்கறுதல் வேண்டும். நான் நியாயஸ்தானத்தில் போய் [illegible]பாடுசெய்ய உத்தேசிக்கிறேன்." என்று சொல்ல, தனதத்தன "எங்கேயாகிலும் போ. புண்ணியத்துக்குக் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்ப்பதுபோல, பத்திரமாய் உன்பணத்தை வைத்திருந்து கொடுத்தபிறகு என் தலையில் இவ்விதமாகச் சொட்டுவைத்தாய். போ, போ, இப்பொழுதே தாமதிக்காமல் நியாயாதிபதியிடத்தில் போய் முறையிட்டுக்கொள்" என்று கோபித்துக்கொண்டான். அந்தக்ஷணமே தருமபாலன் நியாயவிசாரணைத்தலைவரிடம் போய் நடந்த செய்தியை நடந்தபடியே எடுத்துரைத்தான்,

நியாயாதிபதி தனதத்தனை அழைத்து, "தனதத்தரே, உம்முடைய பிரதிவாதம் என்ன?" என்று கேட்டதற்கு, அந்தச் சாவகாரி "ஐயா, தருமபாலர் என்னிடம் நூறு ரூபாய் என்று சொல்லிக்கொடுத்த பையை அவரெதிரிலேயே நான் பெட்டியின் உள்ளறையில் வைத்துப் பூட்டினேன். ரூபாயை எண்ணிப் பார்த்ததுமில்லை; அவர் வந்தபோது பையை வைத்தது வைத்தபடியே எடுத்துக்

கொடுத்தேன். அவர் கொஞ்ச நேரங் கழித்து வந்து "இதில் ஏதோ பிசகு நடந்திருக்கின்றது" என்றார். நியாயாதிபதி யிடத்தில் முறையிட்டுக்கொள்ளும் என்று சொல்லி அனுப்பிவிட்டேன்" என்று சொன்னான். குற்றஞ்சாட்டப்பட்ட பிரதிவாதி தன்மேல் குற்றம் இல்லாவிட்டால் சத்தியப்பிரமாணம் பண்ணிக் குற்றநிவாரணம் பண்ணிக்கொள்ளலாம் என்று பாட்யுயா நகரத்தில் ஒரு சட்டவிதி உண்டு. நியாயாதிபதி சாவகாரியை "சத்தியம் பண்ணுகிறீரா?" என்று கேட்ட மாத்திரத்தில் சாவகாரியும் "பண்ணுகிறேன்" என்றான். உடனே அவர்களுடைய வேதபுஸ்தகம் கொண்டுவந்து எதிரில் வைக்கப்பட்டது. சாவகாரி "நமது வேதபுஸ்தகத்தின்மேல் ஆணை, நான் ஒரு பாவமும் அறியேன்" என்று சத்தியம் பண்ணினான். அவ்வளவிலே நியாயாதிபதி பிரதிவாதியின்மேல் குற்றமில்லை என்று தீர்மானஞ் செய்துவிட்டார்.

(இன்னும் வரும்).

திருமணம் - செல்வகேசவராய முதலியார், M. A.

---

# A GOOD TEACHER.

## நல்லாசிரியன்.

ஆசிரியன், ஆசான், அறிவன், குரவன், குரு என்பன ஒரு பொருட்சொற்கள். ஆசிரியர்கள் ஞானாசிரியரும், போதகாசிரியருமென இருதிறத்தினர். ஞானாசிரியராவோர் தம்மையடுத்து வழிபடும் நன் மாணாக்கருக்கு வீடுபேற்றிற்குக் காரணமாகிய உண்மைப்பொருளைத் திண்மையுறப் போதிக்குஞ் சிறப்புடையர். போதகாசிரியராவோர் தன்மகன், ஆசான்மகன், அரசன்மகன், பொருள்கொடுப்போன், வழிபடுவோன், நூலுரையை விரைவிற்கற்போனாகிய இத்தொடக்கத்தினருக்கு நூற்பொருளைச் சந்தேகமறப் போதிக்க வல்ல ஆற்றலுடையர். போதகாசிரியராவோர்க்கு ஒருவிஷயத்தை யாவரும் உய்த்துணர எடுத்துரைக்கும் ஆற்றல் (போதனாசக்தி) இன்றியமையாதது. அத்தகைய போதனாசக்தி எல்லோருக்கும் பொருந்தியிருப்பது அரியதே. என்னையெனின்:—

"ஆர்த்தசபை நூற்றொருவன் ஆயிரத்தொன் றாம்புலவன்
வார்த்தை பதினா யிரத்தொருவன்—பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே தாதாகோ டிக்கொருவன்
உண்டாயி னுண்டென் றறு"

என்பதனால் ஒருவிஷயத்தைப் பலரறிய எடுத்துரைக்கும் ஆற்றல் (போதனாசக்தி) பதினாயிரத்து ளொருவருக்கே அரிதில் அமை



யும் என்றதாயிற்று. இது நிற்க, ஒருவன் எவ்வளவு கல்வி யறிவுடையனே யெனினும் ஒருவிஷயத்தைப் பிறருக்கெடுத்துரைக்கும் ஆற்றல் (போதனாசக்தி) அவனிடத்தில் இல்லையாயின் அக்கல்வியை அவன் கற்றதிற் பயனின்றாம். என்னையெனின்:—

"எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகும் - உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை யின்றெனி னென்னாமற் றஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து."

ஒருவன் கற்றகல்வி எவ்வளவு நிறைவுடையதெனினும் அதை ஆராய்ந்தறிந்து பேசும் ஆற்றல் இல்லையேல் அவன் அக்கல்வியைக் கற்றதிற் பயனின்றாம். அங்ஙனம் ஆராய்ந்தறிந்து பேசும் ஆற்றலெய்தியிருந்தும் பிறருக்கு எடுத்துரைக்கும் ஆற்றல் (போதனாசக்தி) அவனிடத்தில் இல்லையாயின் என்னபயன்? மற்றும் அப்போதனாசக்தியும் அவனிடத்து உண்டாயின், பொன்னாற்செய்ததொரு பூவிற்கு இயற்கையாயுள்ள அழகேயன்றி மணமும் உண்டாயினவாறுபோற் சிறப்பெய்துவான் என்பதாம். இனி நல்லாசிரியர்களது இலக்கணங்களைச் சிறிது ஈண்டு ஆராய்வாம். போதகாசிரியராவார், *நற்குடிப்பிறப்பு, சீவகாருண்யம், கடவுள் வழிபாடு, பன்னூற்பயிற்சி, போதனாசக்தி, நிலம், மலை, நிறைகோல், மலர். இவற்றையொத்த குணங்கள், உலகநடையை அறியுமறிவு, உயர்வாகிய குணம் இவைபோல்வன பிறவும் இன்றியமையாத இலக்கணங்களாகக்கொண்டவராய் இருத்தல் வேண்டும். இவற்றில் நிலம், மலை, நிறைகோல், மலர் இவை ஆசிரியரது இலக்கணத்திற்குப் பொருந்துமாறு எவ்வாறெனின் கூறுதும்:—

1. † நிலம்—பிறரால் அறியப்படாத உருவத்தின் பெருமையும், பெரியபாரஞ்செய்து தன்மேல் நெருங்கினவைகளாற் கலங்காத

---

* "குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவ னூலுரை யாசிரி யன்னே"—நன்னூல்.

† "தேரிவரும் பெருமையுந் திண்மையும் பொறையும்
பருவ முயற்சி யளவிற் பயத்தலும்
மருவிய நன்னில மாண்பா கும்மே"—நன்னூல்.

வலிமையும், தன்னையடுத்த மனிதர் தோண்டுதல், முதலியகுற்றங்களைச் செய்யினும் பொறுக்கும் பொறுமையும், பருவத்திலே உழவர்செய்யு முயற்சி யளவிற்குத் தக்கவாறு பயனைத்தருதலும் நல்ல நிலத்தினிடத்துப் பொருந்திய குணங்களாம். அதுபோல:—

ஆசிரியர்—பிறரால் அறியப்படாத கல்வியின் பெருமையும், பெரியவாதஞ்செய்து தன்மேல் நெருங்கினவராற் கலங்காத வலிமையும், தன்னையடுத்தமாணாக்கர் தன்னை யிகழ்தல் முதலிய குற்றங்களைச்செய்யினும் பொறுக்கும் பொறுமையும், பருவத்தில் மாணாக்கர் செய்யும் முயற்சியளவிற்குத் தக்கவாறு அவர்க்குப் பயனைத்தருதலும் ஆகிய குணங்கள் பொருந்தினவரா யிருத்தல் வேண்டும்.

2. ‡ மலை—அளவு செய்யப்படாத வடிவத்தின் அளவும், அளவு செய்யப்படாத பல்வகைப்பொருளும், எப்படிப்பட்ட வலிமையுடையவராலும் அசைக்கப்படாதநிலையும், நெடுந்தூரத்திலுள்ளவர்களும் காணத்தகும் உயர்வும், மழைபெய்யாது வறந்த காலத்தும் தன்னையடைந்த உயிர்களுக்கு நீர்வளத்தைக் கொடுக்கும் கொடையும் மலையினிடத்துற்ற குணங்களாம். அதுபோல—

ஆசிரியர்—அளவு செய்யப்படாத கல்வியின் அளவும், அளவு செய்யப்படாத பல்வகை நூற்பொருளும், எப்படிப்பட்ட புலமையுடையோராலும் அசைக்கப்படாத கல்வியறிவின் நிலையும், நெடுந்தூரத்திலுள்ளவராலும் அறியப்படும் புகழுயர்ச்சியும், பொருள் வருவழி வறந்தகாலத்திலும் தன்னையடுத்த மாணாக்கருக்குக் கல்விப்பொருளைக் கொடுக்கும் கொடையும் உடையவ்ராயிருத்தல் வேண்டும்.

3. * நிறைகோல்—(துலாக்கோல்) நிறுக்கப்பட்ட பண்டத்தின் அளவைச் சந்தேகநீங்கக் காட்டுதலும், உண்மைபெறத் தான் இரண்டு தட்டுகளுக்கும் நடுவே நிற்றலும் துலாக்கோலினிடத்துள்ள குணங்களாம். அதுபோல—

‡ "அளக்க லாகா அளவும் பொருளுந்
துளக்க லாகா நிலையுந் தோற்றமும்
வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே"—நன்னூல்.

* "ஐயந் தீரப் பொருளை யுணர்த்தலும்
மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே"—நன்னூல்.



ஆசிரியர்—வினவப்பட்ட சொற்பொருளின் இயல்பைச் சந்தேகந் தீரக் காட்டுதலும், இருவர் தம்முள் மாறுபட்டாராயின் உண்மைபெறத் தான் அவ்விருவருக்கும் நடுவேநிற்றலும் உடையராயிருத்தல் வேண்டும்.

4. † மலர்.—சுபகருமத்துக் குரியதாகி, யாதொரு செயலுக்குந் தானில்லாது முடியாதாக, கண்டோர் யாவருங் களித்து மேலாகத் தன்னை வைத்துக்கொள்ள மெல்லிய குணமுடையதாகி, மலர்தற்குரிய காலத்து முகம் மலர்தலையுடையது புஷ்பத்தின் தன்மையாம். அதுபோல—

ஆசிரியர்—சுபகருமத்துக்கு உரியவராகி, யாதொரு செயலுஞ் சிறப்பிக்குந் தானில்லாது முடியாதாகக் கண்டோர் யாவருங் களித்து மேலாகத்தன்னை வைத்துக்கொள்ள மெல்லிய குணமுடையவராகிப் பாடஞ் சொல்லுதற்குரிய காலத்திலே முகமலர்தலை யுடையவராயிருத்தல் வேண்டும்.

ஆசிரியர் இத்தகைய நற்குணங்களை யுடையவராகி, பிறருக்கு வருங் கல்வியை நோக்கிக்கொள்ளும் பொறாமை, பொருளின்மீது வைக்கும் அவா, கேட்போர்க்கு அச்சம் உண்டாகப் பேசும் தன்மை முதலிய துற்குண வியல்பை ஒழித்தவரா யிருத்தல்வேண்டும். இன்னும் இவ்விலக்கணங்களும், மாணாக்கர் இலக்கணங்களும், ஆசிரியர் மாணாக்கருக்கு போதிக்கும் இலக்கணங்களும், மாணாக்கர் ஆசிரியரிடத்துப் பாடங்கேட்டலின் இலக்கணங்களும் இனிவருஞ் சஞ்சிகைகளால் இனிது விளங்கும். இதனை யறியார் சிலர் இவ்வகை இலக்கணங்கள் ஆங்கிலபாஷையின்மட்டுமே யுள்ளனவெனக் கூறுவர். அது தமிழ்நூலாராய்ச்சியின் குறைவினலென்க.

---

† "மங்கல மாகி யின்றி யமையா
தியாவரு மகிழ்ந்து மேற்கொள மெல்கிப்
பொழுதின் முகமலர் வுடையது பூவே"—நன்னூல்.

# EXAMINATION PAPERS.
## பரிட்சை வினாக்கள்.

டிபார்ட்மெண்ட் ஆவ் எட்யுகேஷன்.

உபாத்தியாயர் யோக்கியதா பத்திரத்துக்காக எழுத்துப்பரீட்சை.

லோயர் ஸெக்கெண்டெரி—போதனை.

வெள்ளி, ஏப்பிரல் 29-உ, 1898—10 மணிமுதல் 1 மணிவரையில்.

[பரிட்சிக்கப்படுவோர்க்கு :—கடிதாசியில் ஒரு புறத்தில் மாத்திர மெழுதுக. ஓரத்தில் ஒரு அங்குலம் வெறுமையாய்விட. ஒவ்வொரு விடைக் கடிதாசியிலும் உம்முடைய பேரை எழுதுக. விடைக்கடிதாசிகளுக்கு இலக்கமிட்டு வரிசைப்படுத்தி இடதுபுறத்து மேல்மூலையில் தைக்க அல்லது குண்டூசியினால் குத்திவைக்க.]

1. விஷயபாடமென்றால் என்ன? இது சுத்த வாய்மொழிப் பாடத்தினின்றும் எவ்வாறு வித்தியாசப்படுகின்றதென உதாரணங்களால் விளக்க.

2. போதிப்பதற்கும் பரிட்சிப்பதற்குமுள்ள பேதத்தை உதாரணங்களால் தெரிவிக்க.

3. எழுத்துக்கூட்டலைக் கற்பிப்பதற்கு மேலானவையென்று நீர் எண்ணும் அப்பியாசங்கள் இன்னின்னவெனக்கூறி விரிவாய் விவரிக்க.

4. திருஷ்டாந்தங்கள் இன்னின்ன வகைப்படும் எனக்கூறி அவற்றுள் எவை கீழ்வகுப்புக்களுக்கு மிகவும் ஏற்றவை யென்றும் ஏன் ஏற்றவையென்றும் சொல்லுக.

5. வீட்டுப் பாடங்களுக்காக அப்பியாசங்கள் கொடுக்கும் பொழுது என்னென்ன காரியங்களை நீர் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்? பாஷை பாடத்தில் வீட்டில் செய்துகொண்டுவரும்படி என்னவேலை யிடுவீர்?

6. கரும்புப்பலகை விஸ்தாரமாய் உபயோகிக்க வேண்டிய பாடங்கள் என்னென்ன? ஒவ்வொன்றிலும் என்னநோக்கத்திற்காக வழங்கவேண்டும்?

7. (a) பூகோளபாடம் ஆரம்பிக்கும் வகுப்பாருக்கு முதற் பாடம் இப்படியிருக்கவேண்டுமென்று சுருக்கமாய் உரைக்க.



(b) உமக்கு மிகவும் நன்றாய்த்தெரிந்த ஜில்லாவைப்பற்றிச் சுருக்கமான பூகோளபாடக் குறிப்புகள் எழுதுக.

(c) பூகோளம், சரித்திரம்-இப்பாடங்களைக் கற்பிக்கையில் சுவரில் தொங்கும்படம், அட்லாஸ் இவற்றை எவ்வாறு உபயோகப்படுத்துவீர்?

8. 'தெரிந்ததைக்கொண்டு தெரியாததை அறி' - இலக்கணம், அங்ககணிதம் என்னும் இப்பாடங்களைக்கற்பிக்கையில் இந்தவிதியை எவ்வாறு அனுசரிப்பீர் என்று விரிவாய்க் கூறுக.

லோயர் ஸெக்கெண்டெரி—பாடசாலை ஏற்பாடும் கிரம சிட்சையும்.

வெள்ளி, ஏப்ரல் 29-ம் உ, 1898—2 மணிமுதல் 4 மணிவரையில்.

[பரீட்சிக்கப்படுவோர்க்கு :—கடிதாசியில் ஒரு புறத்தில் மாத்திர மெழுதுக. ஓரத்தில் ஒரு அங்குலம் வெறுமையாய் விட. ஒவ்வொரு விடைக் கடிதாசியிலும் உம்முடைய பேரை எழுதுக. விடைக்கடிதாசிகளுக்கு இலக்கமிட்டு வரிசைப்படுத்தி இடதுபுறத்து மேல்மூலையில் தைக்க அல்லது குண்டூசியினால் குத்திவைக்க.]

1. 80 பிள்ளைகள் உள்ள ஒரு லோயர் பிரைமெரி பாடசாலையின் நிலப்படம் (கிரவுண்ட் பிளான்) வரைந்து அக்கட்டடத்தின் அளவையும் குறித்துப் பிளானுக்கு நியாயமுங் கூறுக.

2. ஒரு சேர்க்கைப்பட்டி (அட்மிஷன் ரெஜிஸ்டர்) வரைந்து இரண்டு பிள்ளைகள் சேர்ந்ததினத்தில் அவர்களைப்பற்றிக் குறிக்க வேண்டிய விஷயங்களை அந்தந்தத் தலைப்பின்கீழ்க்குறிக்க.

3. (a) இன்பெண்டுவகுப்புக்கு வாசிப்பும், (b) III-ம் வகுப்புக்கு அங்ககணிதமும் கற்பிப்பதற்காக என்ன உபகரணங்களைப் பாடசாலையில் வைத்திருப்பீர்?

4. (1) பிள்ளைகள் உமக்குக் கீழ்ப்படிந்து நடக்கும்படி நீர் என்னசெய்வீர்?

(2) பாடசாலையில் கிரமசிட்சை யுண்டாவதற்கனுகூலமாய்ப் பிள்ளைகளிடத்தில் இயற்கையாயிருக்கும் குணங்களென்ன?

5. ஆறுமணிநேரம் படிக்கும் நான்காம் வகுப்புக்கு ஒரு காலநிர்ணய சட்டம் வரைந்து அதில் எல்லாக் கட்டாயமான பாடங்களையும் மூன்று இஷ்டமான பாடங்களையும் குறித்து ஒவ்வொரு பாடத்துக்கும் இத்தனை மணிநேரம் விடவேண்டும் என்றும் காட்ட.

6. ஆகஸ்டுமாதம் முதலாம் தேதியில் பட்டியிலுள்ளவர்கள் 33 பேர். முதலாம் தேதி வெள்ளி; 4-ம் தேதியில் 7 பேர் சேர்ந்தார்கள்; 8-ம் தேதியில் 3 பேர் விட்டுவிட்டார்கள்; 11-ம் தேதியில் 10 பேர் சேர்ந்தார்கள்; 29-ம் தேதியில் ஒருவன் விட்டுவிட்டான்; மாதம் முழுமையும் வராதகணக்கு 27; 18-ம் தேதி விடுமுறை நாள். இந்த வகுப்பில் பட்டியில் உள்ளவர்களின் சராசரி இன்னது என்றும், வந்தவர்களின் தினசராசரி இன்னதென்றுங் கண்டுபிடிக்க.

---

### லோயர் ஸெக்கெண்டெரி—போதனை.

வியாழன், டிசம்பர் 8-ம் உ, 1898—10 மணிமுதல் 1 மணிவரையில்.

---

[பரீட்சிக்கப்படுவோர்க்கு :—கடிதாசியில் ஒரு புறத்தில் மாத்திரமெழுதுக. ஓரத்தில் ஒரு அங்குலம் வெறுமையாய்விட. ஒவ்வொரு விடைக் கடிதாசியிலும் உம்முடைய பேரை எழுதுக. விடைக் கடிதாசிகளுக்கு இலக்கமிட்டு வரிசைப்படுத்தி இடதுபுறத்து மேல்மூலையில் தைக்க அல்லது குண்டூசியினால் குத்திவைக்க.]

1. வீட்டப்பியாசத்துக்கு மற்றெல்லாப்பாடங்களிலும் ஏற்றவை எவை? வீட்டப்பியாசம் சரியாய்ச் செய்துகொண்டுவரும்படி செய்ய நீர் என்ன உபாயந்தேடுவீர்?

2. வகுப்பில் பாடம் நடத்துகையில் கறுப்புப்பலகையின் உபயோகங்கள் இன்னின்னவெனச் சுருக்கமாயெழுதுக.

3. மாணுக்கரிடம் கேள்வி கேட்கும்பொழுதும், மறுமொழி பெற்றுக்கொள்ளும்பொழுதும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களென்ன?

4. சொல்வதெழுதற்பாடம் கற்பிப்பதற்கு முதல் தரமான விதம் இன்னதென்று பூரணமாய்க் கூறுக.

5. செயப்படுபொருளைப்பற்றியபாடம் எப்படிக் கற்பிப்பீர் என்று திருஷ்டாந்தம் கொடுத்து விளக்க.

6. ஏன் படம் எழுதக் கற்பிக்கவேண்டும்? தென் இந்தியாவின்படத்தை எழுதும்படி ஒருவகுப்புக்கு எப்படிக்கற்பிப்பீர் என்பதைத் தெளிவாய்க் கூறுக.

7. நான்காம் வகுப்புக்குப் படிப்பிக்கும்படி பின்னத்தைப் பற்றிய முதற்பாடக்குறிப்புகள் எழுதுக.

8. கையெழுத்துக் கற்பிக்கும்பொழுது கவனிக்கவேண்டிய முக்கியவிஷயங்களிற் சிலவற்றைக் கூறுக.

---



### லோயர் ஸெக்கெண்டெரி—பாடசாலை ஏற்பாடும் கிரம சிட்சையும்.

வியாழன், டிசம்பர் 8-ம் உ, 1898—2 மணிமுதல் 4 மணிவரையில்.

---

[பரீட்சிக்கப்படுவோர்க்கு :—கடிதாசியில் ஒரு புறத்தில் மாத்திரமெழுதுக. ஓரத்தில் ஒரு அங்குலம் வெறுமையாய்விட. ஒவ்வொரு விடைக் கடிதாசியினும் உம்முடைய பேரை எழுதுக. விடைக் கடிதாசிகளுக்கு இலக்கமிட்டு வரிசைப்படுத்தி இடதுபுறத்து மேல்மூலையில் தைக்க அல்லது குண்டூசியினால் குத்திவைக்க.]

1. ஒரு பாடசாலையின் கட்டடத்துக்கு இடந்தெரிந்துகொள்ளும்பொழுது கவனிக்கவேண்டியவிஷயங்களென்ன?

2. இன்பெண்டு ஸ்டாண்டார்ட்டு முதல் நான்காம் ஸ்டாண்டார்ட்டு வரையில் வகுப்புக்களும் நாலு உபாத்தியாயர்களுமுள்ள அப்பர் பிரைமெரி பாடசாலைக்கேற்ற கட்டடத்தின் நிலப்படத்தை வரைந்து அதில் ஒவ்வொரு வகுப்பின் இடத்தையுங் குறிக்க.

3. மேற்படி பாடசாலைக்கு ஒரு காலநிர்ணயசட்டம்வரைந்து தலைமை உபாத்தியாயருடையவும் முதல் உதவி உபாத்தியாயருடையவும் வேலையைக்காட்ட.

4. நான்காம் ஸ்டாண்டார்ட்டுக்குப் பூகோளமும் முதலாம் ஸ்டாண்டார்ட்டுக்கு அங்ககணிதமும் படிப்பிப்பதற்கு வேண்டிய உபகரணங்களென்னென்ன? ஒவ்வொன்றின் உபயோகத்தையும் விவரிக்க.

5. உம்முடைய வகுப்பில் கிரமசிட்சையை இன்னின்னவழி வகைகளினால் உண்டாக்குவீர் என்று விரிவாய்க் கூறுக. நல்ல கிரமசிட்சையின் குறிகளென்ன?

6. செப்டெம்பர்மாதம் முதலாந்தேதியில் பட்டியிலிருந்தவர்கள் 36 பேர், அந்தத்தினம் வியாழக்கிழமை; 7-ம் தேதியில் 10 பேர் சேர்ந்தார்கள்; 13-ம் தேதியில் 6 பேர் விட்டுவிட்டார்கள்; மேலும் 20-ம் தேதியில் 8 பேர் சேர்ந்தார்கள், 23-ம் தேதியில் ஒருவன் விட்டுவிட்டான். ஞாயிற்றுக்கிழமையும், இரண்டாம் நாலாம் சனிக்கிழமையும், 6-ம், 22-ம் தேதிகளும் விடுமுறைநாட்கள். மாதமுழுமையும் வராதகணக்கு 22. மாசத்துக்குப் பட்டியிலுள்ளவர்களின் சராசரியும் வந்தவர்களின் சராசரியுங்கண்டுபிடிக்க.

எல். எஸ். கிரேட்.

---

# SWADESIAM.

## சுவதேசியம்.

(71-ஆம் பக்கத்தொடர்ச்சி)

சென்ற சஞ்சிகையில் ஒருவாறு பிரைமரிபாடசாலை யுபாத்தியாயர்கள் சுதேசியமுயற்சி சம்பந்தமாய்ச் செய்யக்கூடிய காரியங்களை விளக்கிக் காட்டியுள்ளோம். இப்போது இம்முயற்சி விருத்தியடைந்து யாவர்க்கும் பிரயோஜனமுண்டாக்கற்குத் தடையாயிருக்கும் சில காரணங்களையும், அத்தடைகளை எவ்வாறுஅகற்றலா மென்பதையும் பிறவுங் கூறுவோம்.

மானுடர் வாழ்க்கைக்கும், ஜீவியத்திற்கும் இன்றியமையாப் பொருளாயுள்ளவை இரண்டு. ஒன்று உணவும், மற்றொன்று ஆடையுமாம். இவ்விரண்டும் நம் நாட்டில் உண்டு. மற்றவை வேண்டுமாயினும் உற்று நோக்குங்கால் மிகையாக முடியும். ஆங்கிலேயரும், மற்றும் ஐரோப்பியரும் இந்தியாவைப் பார்ப்பதற்காகவும், வியாபாரஞ் செய்வதற்காகவும் பதினைந்து, பதினாறும் நூற்றாண்டுகளில் வந்தகாலத்தில் இந்நாட்டில் விளைந்து அதனால் ஆக்கப்பட்ட பருத்திநூல் ஆடைகளைப்பற்றி அவர்களுக்கெழுந்த பேராச்சரியத்திற்களவில்லை. அவர்கள் நாடு மிகக் குளிர்ச்சியுடையதாகலின் பருத்தி விளைவு அங்கில்லாதொழிந்தது. கம்பளத்தால் செய்யும் ஆடையைப் பார்க்கிலும் பருத்தியாடை சுலபமாகவும் விலை குறைவாகவும் செய்துகொள்ளலாமாகலின் கம்பளத்தையே ஆடையாக உடுக்கும் அவர்களுக்கு அதிசயமாயிருந்தது வியப்புக்கிடமாகாது. இப்பருத்தியைப்பற்றியும், அதனாலாக்கப்படும் ஆடையைப்பற்றியும் அவர்கள் தம் தேசஞ்சென்றகாலத்தில் எவ்வளவோ புகழ்ந்து கூறிப் பல கதைகளையுஞ்சொல்லிச் சிறப்பித்ததாக நாம் சரித்திரவாயிலாயறிகிறோம்.

இவ்வளவு மதிப்பு அதனிடத்தில் அவர்கள் வைத்திருந்தமையால் அத்தொழிலை அவர்கள் ஆதிகாலந்தொட்டு விருத்திசெய்யவும், அதனால் தம் நாட்டினரை உடுத்தவும் முற்பட்டு நாளேற்றத்தில் தொழில் முழுமையும் தமக்கே உரிமையாக்கிக்கொண்டனர். அன்றி எவ்வளவிற்கு அதனால் விருத்தியடையலாமோ அவ்வளவிற்கும் செய்துகொண்டனர். ஆனால் அக்காலத்தில் நம்மனோர் ஏராளமாய் அந்நியர் முதலைவாங்கி தாமே நூற்றல், நெய்தல் வகையில் தொழிலை விருத்திசெய்து அதன் பிரயோஜனத்தைத் தாமுமனுபவித்துப் பிறர்க்கு முண்டாக்கினர். இப்போதோ நூற்றலையும், நெய்தலை



யும் பெரும்பாலு மொழித்து அத்தொழிலுக்குக் கூலியாட்களாயமர்ந்து வயிறுவளர்க்க வழிதேடு நிலைமைக்கு வந்துவிட்டனர்.

இனி உணவைப்பற்றி நோக்கும்போது பண்டைக்காலந் தொட்டு நவதானியமும், தாவரவர்க்கமும் நம் நாட்டுச் சீதோஷ்ண நிலைமைக்கேற்ப அமைந்திருக்கின்றன. இம் முக்கிய விளைபொருளில் ஐரோப்பியர் நாடு அவ்வளவு சிறந்தில்லை. உலகத்தில் நாளுக்குநாள் ஜனத்தொகை யதிகரித்துவருவதால் அவர்கள் உண்ணக்கூடிய உணவும் அதிகம் வேண்டியதாகின்றது. ஜனத்தொகை குறைந்திருந்த காலத்திலும் போதுமான உணவுப் பொருள் கிடைக்காத ஐரோப்பியநாட்டுக்கு அது அதிகமாய் வேண்டும்போது எங்கிருந்து கிடைக்கும்? தற்காலம் மிகவும் தேர்ந்த கிருஷிசாத்திரமுறையால் விளையுமவை விருத்திசெய்து வந்தாலும் வருவாய்க்குமேற்பட்ட செலவு வந்தமையால் கிடைக்கக்கூடியவிடத்தில் பெறுகின்றனர். அவர்கள் பெறும்படியாக இருப்பது நம் நாடே. நாமோ பண்டைக்கால வழக்கத்தைப் போற்றிக் கைவிடாது பெரியோர்செய்த வழியிலேயே கிருஷி நடத்திவரும் இக்காலத்தில் காலமழையும் செவ்வனே பெய்வதில்லை. பெய்யாதிருப்பினும் இயற்கையில் தேசத்துக்குள்ள நிலச்செழுமையால் உற்பத்தியாகும் தானியம் நமக்கே போதாதிருக்கையில் அந்நியரால் அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டு அயல்நாட்டுக்குப் போய் உணவாகின்றது. அல்லும் பகலும் கஷ்டப்பட்டு விருத்திசெய்த ஏழையுழவர் சர்க்கார் கிஸ்திக்காக அதிக விலைக்கு விற்கவேண்டியவராகிறார்கள்.

உடுக்கும் ஆடையும், உண்ணும் உணவும் அந்நியரிடம் ஒப்பித்துவிட்ட ஏழைகளுக்கு வேறு சாமான்களைப்பற்றிச் சொல்வது அனாவசியமாகும்.

இவ்விரண்டு மல்லாது வேறு சாமான்களை விரும்பக்கூடியவர்கள் செல்வவந்தராவார்கள். அவர்கள்தாம் தம் நாட்டு ஏழைக்குடிகளின் நிலைமையைக் கவனித்து அவர்கள் விருத்தியடைய மார்க்கத்தைக் காட்டவேண்டும். கைத்தொழிலாளர் வசமிருந்த தொழிலெல்லாம் அந்நியரால் கொள்ளப்பட்டமையால் அவர்கள் தொழிலிழந்து வறுமை மேலிட்டு இருக்குமிடந்தெரியாது மறைகின்றனர். சீருஞ்சிறப்பு மடைந்திருந்த நம் தேசம் வறுமைக்குத் தாயகமாகிவிட்டது. வினையாளருக்குத் தொழில் கிடைப்பின் எவ்வளவோ விருத்தியடைந்து பழைய பெயரை நிலைநாட்டுவர். இப்பெயரை யுன்

டாக்க நம் நாட்டுப்பிரபுக்கள் முதலாவது அந்நிய நாட்டுச் சாமான்களை வாங்காதிருக்க விரதம் பூணவேண்டும். பின்னர் அச்சாமான்களை நம் நாட்டிலேயே செய்யவும் வழிதேடவேண்டும். அவ்வாறு தேடுவதில் முதற்பொருள் வைக்கவேண்டி வரினும் பின்வாங்கலாகாது. பலதுளி பெருவெள்ளமாவதுபோல் அநேகர்சேர்ந்து பொதுநிதி ஏற்படுத்தி தீர்க்காலோசனையின்பேரில் தொழிலை விருத்திபடுத்த முன்வரவேண்டும். சென்னையில் நம் கண்மணியாகிய கனம் G. சுப்பிரமணிய ஐயரவர்கள் முயற்சியால் ஸ்தாபகமான நிதிபோல, ஒவ்வொரு பெரும் பட்டணங்களிலும் ஸ்தாபகமாகவேண்டும். சிறிது சிறிதாக விடா முயற்சியுடன் ஒவ்வொரு தொழிலையும் திருத்தவேண்டும். முடிவாய்க் கூறுமிடத்து நம் நாட்டிற்குவேண்டும் எல்லாப்பொருள்களும் நம் நாட்டிலேயே நம்மால் செய்துகொள்ளக் கூடுமாகலின் அவற்றை நாம் கவனியாது இருந்ததுபோல் மேலுமிராமல் நாமேசெய்து நமதுபொருள் பிறர்கைவசப்பட்டு வருமைப் பிணியாலும்,மனநோயாலும் வருந்தாது காப்பாற்றிக்கொள்வதற்கே இம்முயற்சி எழுந்தது என்போம்.

பு. வே. சபாபதி முதலியார்

---

## TIT-BITS.

### விநோதக்கூற்றுக்கள்.

ஓர் ஊரில் ஓர் உபாத்தியாயர் இருந்தனர். அவர் தன்னைத் தான் புகழ்ந்து கொள்வதில் மிகவும் விருப்புடையவர். அத்தற்புகழ்ச்சிகளில் சிலவற்றைக் கூறுவோம்:—

***

அந்த உபாத்தியாயர் பரீக்ஷையதிகாரிக்கு (Inspecting officer) ஒரு கடிதம் எழுதினாராம். அவர் அந்தக் கையெழுத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டு அதைத் தம்முடைய பைலில் (File) ஒட்டிவைத்துக் கொண்டாராம். ஆசிரிய நேசர்காள்! உத்தியோகமூலமான கடிதங்களையும், மற்றும் முக்கியமான கடிதங்களையும் பத்திரப்படுத்தவேண்டுமென்னும் நோக்கத்தால் பைலில் இவர் வைத்தார் என்னும் நோக்கத்தை இவர் அறியார்போலும்.

***

ஒரு சமயத்தில் மேற்கண்ட உபாத்தியாயர் ஒரு மிஷன் பாடசாலையில் உபாத்தியாயராக இருந்தனராம். அக்காலத்தில் அப்பாட



சாலையின் மானேஜராகிய பாதிரியார் சில உபாத்தியாயரை நோக்கிப் "பார்வைக்கும் கேள்விக்கும் எவ்வளவுதூரம்" என்று கேட்டாராம். அதைக் கேட்ட உபாத்தியாயர்கள் பதில் சொல்ல முடியாமல் திகைத்துக்கொண்டிருந்தனராம். அப்போது மேற்கண்ட உபாத்தியாயர் உடனே "பார்வைக்கும் கேள்விக்கும் நான்கு விரற்கடை தூரம் என்றாராம், (கண்ணுக்கும் காதுக்கும் உள்ள இடைவெளி என்று இதற்கு அர்த்தம்) அதைக் கேட்டு வியந்த பாதிரியார் ஒரு பெரிய பைபில் புஸ்தகம் பரிசளித்தனராம்.

***

செங்கற்பட்டு ஜில்லா சைதாபேட்டை தாலுக்கா தின்னனூர் கிராமத்தில் ஒரு போர்ட்டு பாடசாலையுண்டு. அதன் தலைமை உபாத்தியாயராகிய, ம-ா-ா-ஸ்ரீ, சி. வே. சண்முக முதலியார் அக்கிராமவாசிகளில் ஒருவரைப் பார்த்து "ஐயா" உம்முடைய பையனைப் படிப்பிக்கலாகாதா? வயதாகி ஊர் திரிகிறானே" என்று கேட்டார். அதற்கு அவர் "ஐயையோ! என் பிள்ளையைப் படிப்பிக்கவா சொல்கிறீர், முன்பு ஒரு பிள்ளையை எங்கள் பாட்டனார் படிக்கப்போட்டு அந்தப்பையன் இறந்துவிட்டானும். அதுமுதல் நாங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கிறதில்லை. பிள்ளை என்று இருந்தால் எங்களுக்குப்போதும். படிப்பும் வேண்டாம், பாழும் வேண்டாம்" என்றார். நேயர்காள்! இப்படிப்பட்ட தந்தையர் இருந்தால் பிள்ளைகள் எப்படி ஈடேறுவார்கள். படிக்காத பிள்ளைகள் பால்கொடாத மலட்டுப் பசுவிற்குச் சமம் என்று இவர் அறியார்போலும்.

---

## NEWS AND NOTES.

### சமாசாரக் குறிப்புக்கள்.

சுதேசியம் நாளும் எங்கெங்கும் பரவிவருவதைகண்டு மகிழ்கின்றோம்.

சென்னையில் இம்மாதம் 18-உ பச்சையப்பன் கலாசாலைக் கெதிரிலுள்ள கோட்டை வெளியில் மாலை 5-மணிமுதல் 8-மணிவரையில் பல வித்துவச் சிரோமணிகளாலும் வர்த்தகர்களாலும் சுதேசிய விஷயமாயும், தீபாவளி நன்கொடை விஷயமாயும் சிறந்த உபந்நியாசங்கள் நடந்தன. அக்காலத்துச் சுமார் 8,000 ஜனங்களுக்கு மிக்குமிருந்தனர். மகம்மதியர், இந்துக்கள் என்னும் வேற்றுமையின்றி ஒற்றுமையோடு கூடிக் குலாவி விஷயபூர்த்தி செய்தனர் என்பதை மனமகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

பிரின்ஸ் ஆப் வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்து சுற்றிப் பார்த்தபின்னர் புகைக்கூண்டிலேறி ஆகாயத்தினின்றும் பட்டணத்துச் சிறப்பை கருடபார்வையிற்பார்க்க (Birds' eye view) விருப்புற்றிருக்கின்றாராம்.

---

## நமது கையொப்ப நேயர்களுக்கு ஓர் நயம்

### சத்திய விஜயம்

என்னும் ஒரு தமிழ்ப்புத்தகம் கிரவுன் 16 பக்க அளவில் 48 பக்கங்களையுடையது. "சத்தியந் தலைகாக்கும்" என்னும் பழமொழியை நிலை நிறுத்தும் சரிதமாகிய அரிச்சந்திரபுராணத்தை இனிய செந்தமிழ் வசன ரூபமாகவுடையது. படிப்போர்க்கு இன்னயம் பயக்கவல்லது. சிறுவரும், சிறுமியரும் கையேற்று அகமகிழ்ந்து வாசிக்கத்தக்கது. அரிச்சந்திர புராணத்திலுள்ள அரிய செய்யுட்கள் அனைத்தையும் உடையது. வெஸ்ட் அண்டு கம்பனியில் அச்சிடப்பட்டது. சென்னை லிட்ரெரி பீரோ என்னும் சங்கத்தாரால் வெளியிடப் பட்டது.

**இதன் விலை 4-அணா.**

நல்லாசிரியன் பத்திரிகையின் கையொப்ப நேயர்கட்கு மாத்திரம்.

**விலை அணா-2.**

வேண்டுவோர் $2\frac{1}{2}$-அணா தபால் தலை அனுப்பித் தபால் மூலமாய் பெற்றுக்கொள்க.

* * *

## அர்த்தபேதம்.

"திரைகடலோடியும் திரவியந்தேடு" என்றும் இவ்வாக்கியத்திற்கு:—

திரைகடல் = அலையையுடைய கடலின்மேல்; ஓடியும் = பிரயாணஞ்செய்தும்; திரவியம்=பொருளை; தேடு=சம்பாதி என்று பலரும் அர்த்தம் செய்கின்றனர். திரைகடல் என்பதற்கு அலையையுடைய என்பதில் உருபும் பயனும் உடன்றொக்கதொகையாகையால் "திரைக் கடல்" என்று இருத்தல்வேண்டும். அவ்வாறு மிகாமையால் திரைகடல்=அலைகின்றகடல் என்று வினைத்தொகையாகப் பொருள் கூறுவதே சரியாகும்.

பத்திராதிபர்.

OFFICE OF THE REGISTRAR ... REG. 18 JAN 1906 MADRAS

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

## மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 1. | 1905௵ அக்டோபர்௴ | மாதம் 5.

## THE INDIAN KINDERGARTEN.
## செல்வச்சிறுவர் சிங்காரத்தோட்டம்.

### PLAYS AND GAMES.
### விளையாட்டுக்கள்.

(76-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

---

பல்வகைப்பட்ட ஆடல்களை ஆடிக்கொண்டே, அவற்றால் உண்டாகுஞ் சிரமந் தோன்றாமல், அதற்கேற்ற பாடலைப் பாடுவது விளையாட்டின் தன்மையாம். அவ்விளையாட்டுக்கள் பலவகைப்படும். அவற்றில் சில தேகத்திற்குப் பலத்தையுண்டாக்குவனவாயும், சில மனோதத்துவங்களை விருத்திசெய்வனவாயும் இருக்கும். இவ்விருவகை விளையாட்டுக்களும் பற்பலவகையாய் நமது நாட்டில் தொன்றுதொட்டு நடைபெற்று வருகின்றன. இவ்வகைய ஆடல்களுள் பலவற்றைப் பெண்பிள்ளைகளே கடைப்பிடித்து ஒழுகுகின்றனர். அவையாவன:—

### சிறுமிகளுக்குரியன.

#### (i) பாடலோடு கூடிய ஆடல்கள்.

(1) ஏழாங்காய் ஆடல்.
(2) கழங்காடல்.
(3) கொப்பியடித்தல்.
(4) அம்மானை யாடல்.
(5) கோலாட்டம்.

(ii) (வெறும்) ஆடல்கள்.

(1) கண் மூடியாட்டம்.
(2) உப்பு விற்கும் ஆட்டம்.
(3) பள்ளாங்குழி.
(4) குச்சு மறைத்தல்.

ஆகிய இவைமுதலாயின சிறுமிகளுக்கு உரித்தானவை.

சிறுவர்களுக்குரியன.

(1) பந்தாட்டம்.
(2) கண் மூடியாட்டம்.
(3) பளிச்சப்பளான்.
(4) உப்புக் குந்தம்.
(5) சொட்டு ஆட்டம்.
(6) கில்லி யாட்டம்.
(7) சிதம்பர ஆட்டம்.

ஆகிய இவைமுதலாயின சிறுவர்களுக்கு உரித்தானவை.

இவையன்றி ஆண்பாலார், பெண்பாலார் ஆகிய இரண்டு வகுப்பினரும், மனோதத்துவங்களை விருத்திசெய்யும் சில ஆடல்களை ஆடுவர். அவையாவன:—

(1) சதுரங்கம்.
(2) சொற்கேட்டான்.
(3) தாயம்.
(4) புலிக்கோடு.
(5) பரமபத சோபானபடம் முதலியனவாம்.

யாம், முன் மூன்று சஞ்சிகைகளில் எழுதிவந்த விஷயங்களால் கிண்டர் கார்டன் பாடத்தின் பிரிவுகளாகிய தொழில்கள், கதைகள், பாட்டுக்கள், அபிநயப் பாடல்கள், விளையாட்டுக்கள் முதலிய யாவும் நமது இந்து தேசத்திற் தொன்று தொட்டுச் செவ்வனே நடைபெற்றுவந்தனவென்பது நன்கு விளங்குகின்ற தன்றோ? கிண்டர் கார்டன்முறை புதிதாய் ஏற்பட்ட அயல்நாடுகளில் அப்பாடம் நன்றாய் நடைபெற்றுவரவும், அப்பாடம் தொன்று தொட்டு நடைபெற்று வந்த நமது நாட்டில் அது நன்றாய் விளங்காமலும், செவ்வையாய் நடைபெறாமலும் இருப்பது என்னோவென்று யோசிக்குங்கால்



நமது நாட்டில் தற்காலத்திலிருக்கும் உபாத்தியாயர்கள் இப்பாடத்தின் உட்கருத்தையும், உபயோகத்தையும் சற்றும் உணராமல் அஃதோர் விளையாட்டுப்பாடமென்றே நினைத்து அதனை அலட்சியம் செய்வதே காரணமெனத் தோன்றுகின்றது.

இது நிற்க, நமது நாட்டு உபாத்தியாயர்களில் பலர், கிண்டர் கார்டன் பாடத்தை வெறும் விளையாட்டுப் பாடமாகவும், உபயோகமற்றபாடமாகவும் நினைக்கிறார்கள் என்பதைச் சற்றுவிவரிப்போம்.

போதனாப்பியாசகலாசாலையில் (Training College) நன்கு பயின்று எல். டி. முதலிய பரிட்சைகளில் தேறியுள்ள சிலகல்விமான்களோடு யாம் இக்கிண்டர் கார்டன் பாடவிஷயமாய்ப் பேசிக்கொண்டிருக்கையில் அவர்கள் "அதென்ன ஒருபாடமா? பயித்தியக்கார விஷயமாய் இதனில் ஊக்கங்கொள்கிறார்கள். இதனாலென்ன? அறிவு விருத்தியாகுமா? படிக்கும் சிறுவர்களுக்கு விளையாடல் காட்டுவதற்கே இப்பாடம் ஏற்பட்டிருக்கிறது" என்றார்களே யன்றி விளையாட்டின் மூலமாய்க் கல்வியபிவிருத்தி செய்வது இப்பாடத்தின் நோக்கம் என்றறிந்தவர்களாகச் சற்றும் புலப்படவில்லை.

இஃதன்றி, யாம் பல பிரைமரி பாடசாலைகளுக்கு, வித்தியாதிகாரிகளோடு சென்றிருந்தபோது அவ்வித்தியாதிகாரிகள் உபாத்தியாயர்களைப்பார்த்து "நீங்கள் கிண்டர் கார்டன் பாடம் போதிக்கலாகாதா?" என்று கேட்டால் அதற்கவர்கள் "ஐயா! இவ்வூரில் அம்மாதிரியான கட்டைகள் இல்லையே" என்று பதில் சொல்லப் பலமுறையும் கேட்டிருக்கின்றோம். ஆசிரிய நேசர்காள்! கட்டையடுக்குதல் முதலிய சிலவகைத் தொழில்கள்தாம் கிண்டர் கார்டன் என்று அவர் அறிந்திருக்கிறார் என்பது இதனால் நன்கு விளங்குகின்றதல்லவா? இப்படிப்பட்ட உபாத்தியாயர்கள் இருந்தால் இவ்வகைப் பாடங்கள் எவ்வாறு விருத்தியாகும்? எவ்வாறு நமது நாட்டின் மேன்மையும், நமது நாட்டில் பூர்வத்தில் இருந்த மேதாவிகளுடைய நல்லறிவும் வெளிப்படும். அந்தோ! உபாத்தியாயரென வெளிவருவோர் பொதுவிஷயங்கள் பலவற்றினும் சிறிதேனும் அறியாதிருப்பது எவ்வளவு சுதேசாபிமானக்குறைவு என்பதை எண்டுச் சொல்லாமல்விட மனம் இடங்கொடுக்கவில்லை.

பத்திராதிபர்.

# SCIENCE IN A CANDLE.

## எரியும் மெழுகுவர்த்தியில் அறியும் விஷயங்கள்.

ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்துங்கள். அதன் நுனியில் எரியும் வர்த்தியைச் சுற்றி மெழுகு உருகி, ஒரு தட்டில் எண்ணெய் நிற்பதுபோல நிற்கும். விளக்கின் உஷ்ணத்தால் மெழுகு உருகுகின்றது, குளிர்காற்று மெழுகு வர்த்தியின் நுனியில் பட்டுக்கொண்டேயிருப்பதால், தீச்சுவாலையின் அருகிலிருக்கும் மெழுகு மாத்திரம் உருகிக்கொண்டிருக்கச் சுவாலைக்குச் சற்று தூரத்திலிருக்கும் மெழுகு குளிர்காற்றின் சகாயத்தால் உருகாமல் அருப்பு கட்டி, உருகின எண்ணெயைத் தாங்கும் கிண்ணம்போலாகின்றது. அகலில் நூல்திரியின் மூலமாய் எண்ணெய் ஏறி எரிவதுபோல உருகின மெழுகெண்ணெய், மெழுகுவர்த்தியின் மத்தியிலிருக்கும் திரியில் ஏறிஎரிகின்றது. எண்ணெயோ சலபதார்த்தம். சலம் உயர்ந்த விடத்திலிருந்து கீழ் நோக்கிப்பாயும் குணமுடையது. அங்ஙனமிருக்க, இம்மெழுகெண்ணெய், வர்த்தியில் மேல்நோக்கிப் பாய்வதெப்படியெனில், நூலினால் பின்னப்பட்டிருக்கும் திரியில் மிகச்சிறு குழாய்கள் உண்டாயிருக்கின்றன. சாம்பல் சலத்தை யிழுப்பதைப் போலவும், செடியின் சல்லிவேர்கள் சலத்தை நுனிக்கு இழுப்பதைப் போலவும், மையொற்றும் தாள், மையை யிழுப்பதைப் போலவும் திரியிலிருக்கும் இக்குழாய்கள் எண்ணெயை மேலுக்கு இழுக்கின்றன.

எரியும் விளக்கை வாயால் ஊதிஅவியுங்கள். உடனே, வர்த்தியிலிருந்து புகைகிளம்புவதைக் காண்பீர்கள். நெருப்புக் குச்சு ஒன்றைக்கிழித்துப் புகைபோகும் வழியில் திரிக்குச் சற்றுதூரத்தில் பிடித்தால், புகையில் தீப்பற்றிப் பிறகு, திரியைப் பற்றவைக்கும். இதனால் மெழுகெண்ணெய் எரிவதற்குமுன் ஒரு வாயுவாக மாறி அவ்வாயுவே விளக்காக எரிகின்றது என்பது விளங்கும்.

விளக்குக் காற்றினால் அலையாமலிருக்கும் சமயத்தில், அதை உற்றுப்பார்த்தால் தீச்சுவாலை வாழைப்பூ வடிவமாய் அடிகனத்து மேற்செல்லச் செல்ல நுனிசிறுத்திருப்பதைக் காணலாம். தீச்சுவாலை இவ்வடிவ மடைவதற்குக் காரண மென்னவெனில், சுவாலையைச் சுற்றியிருக்கும் காற்று உஷ்ணமடைகிறது. உஷ்ணவாயு குளிர் காற்றைவிட இலேசாகலின் மேனோக்கிச் செல்லுகின்றது. இங்ஙனம் உஷ்ணவாயு மேல்நோக்குவதால் சுவாலை அடியில் அகன்றும் நுனியில் சிறுத்தும் தோன்றுகின்றது.



161450 600 008

உஷ்ணவாயு மேலே செல்லுந் தன்மையினால்தான் புகைக் கூட்டிற்குப் புகை ஏறுகின்றது. ஒரு காகிதக்கூட்டில் விளக்கை வைத்து ஆகாயத்தில் விட்டால் விளக்கு எரியும்வரையில் அக் கூடு ஆகாயத்தில் மேலே செல்லுகின்றது.

வெள்ளைக் காகிதத்துண்டை யெடுத்து, காற்றினால் அலையாமலிருக்கும் சுவாலையின் மத்தியில் படும்படி செய்து, உடனே யெடுத்துச் சுவாலைபட்ட இடத்தைப்பார்த்தால் அதில் மோதிரம்போல் புகையட்டும், மத்தியிலுள்ள இடத்தில் சிறிது அழுக்குப்படிந்தும் தோன்றும். இதனால் சுவாலைக்கு மத்தியில் மெழுகு, வாயுவாயிருப்பதையும் அதைச் சுற்றி, பைபோல் சுவாலை எரிவதையும் காணலாம். இன்னும் விளக்கை உற்றுப்பார்த்தால் சுவாலை, திரியைத் தொடுவதாகக் காணப்படவில்லை. எரியும் விளக்கை கொஞ்சம் ஊதி அலையவிடுங்கள். அப்போது, விளக்குப்புகைவதைக் காணலாம். இப்புகை எங்கிருந்து வருகின்றது? வாயினால் விளக்கை ஊதும்போது மெழுகுவாயுவைக் கட்டிக்காக்கும் பையாகிய சுவாலை கிழிகிறது. இக்கிழிவின் மூலமாய், காற்றும் மெழுகுவாயுவும் கலந்து வெளியே செல்லுகின்றன. இதுதான் புகைவதற்குக் காரணம். விளக்கு, காற்றினால் அலையாமல் எரியும்போது வெளிக்காற்று, சுவாலைப்பையைக் கிழித்து உட்செல்வதுமில்லை, சுவாலைப்பைக்கு உள்ளிருக்கும் மெழுகுவாயு பையைக் கிழித்துக்கொண்டு வெளிவருவதுமில்லை. இதனால் விளக்கு, பிரகாசமாயெரிகிறது. காற்று விளக்கின்மேல் அதிகமா யடித்தால் சுவாலைப்பை கிழிபட்டுப் புகைகிறதென்று முன்சொன்னோம். ஒரு விளக்கின் வர்த்தியைச் சற்று அதிகமாய்த் தூக்கிவிட்டால் அப்போதும் புகைகின்றதே அதற்குக் காரண மென்னவெனின், அதிகமாய்த் தூக்கப்பட்ட திரியின்மூலமாய் அதிக எண்ணெய் ஏறுகின்றது, ஆதலால் அதிக எண்ணெயால் வாயுவுண்டாகிறது. இவ்வாயு சுவாலைப் பைகொள்ளும் அளவைப்பார்க்கிலும் அதிகமாயிருத்தலால் அது புகைந்து போகிறது.

ஒருதட்டில் ஒரு துண்டு மெழுகுவர்த்தியை வைத்து, அதில் அங்குல ஆழத்திற்குச் சலம் விட்டு மெழுகுவர்த்தியைக் கொளுத்தி ஒரு கண்ணாடிக்குவளையால் (Glass Tumbler) விளக்கை மூடுங்கள். விளக்கு, சிறிதுநேரத்திற் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பிரகாசம்

Tm 11, No5 · Nos. 1–2

மங்கிக் கடைசியில் அணைந்துவிடுவதையும், தட்டிலிருக்கும் நீர் கொஞ்சங் கொஞ்சமாய்க் குவளைக்குள் ஏறுவதையும் பார்க்கலாம். இதனால் காற்றில்லாமல் விளக்கெரியாது என்பதும், எரிந்தகாற்றின் அளவிற்கு ஜலம் குவளைக்குள் ஏறியிருக்கிறதென்பதும் விளங்குகின்றன. குவளையைக் கவிழ்த்துத் தட்டில் படும்படி மூடிவிட்டதால், வெளிக்காற்று குவளைக்குள் பிரவேசிக்கமாட்டாது. குவளைக்குள் ஐந்திலொரு பாகம்வரையில் ஜலம் ஏறியிருப்பதால் குவளைக்குள் இருந்த காற்று முழுமையும் எரியவில்லையென்பதும், விளக்கு எரிவதற்கு காற்றில் ஒரு பாகந்தான் பிரயோசனப்படுமென்பதும், மற்றொருபாகம் விளக்கை அவிக்கும் குணமுடையதென்பதும் விளங்குகின்றன. இப்படி விளக்கு எரிவதற்குப் பயன்படும்வாயு ஐந்திலொரு பங்காகவும், விளக்கை அணைக்கும் வாயுஐந்தில் நாலு பங்காகவும் நம்மைச் சுற்றியிருக்கும் காற்றில் கலந்திருக்கிறதென்பது இதனால் விளங்கும். காற்றில் விளக்கை எரிவிப்பது பிராணவாயுவென்றும் விளக்கை அவிப்பது இலவணவாயுவென்றும் பெயர்பெறும்.

மெழுகுவாயு காற்றோடு கலந்தால் விளக்கில் புகை கிளம்புகிறதென்று முன் சொன்னோம். புகை என்பதென்ன? புகை என்பது கொளுத்தப்படாத நுண்ணிய கரித்தூள். விளக்கெரியும்போது விளக்கெண்ணெய் வாயுவாக மாறுகிறது. சுவாலையின் உஷ்ணத்தால் இம்மெழுகு வாயுவிலிருந்து கரித்தூள் உண்டாகின்றது. இதுதான் புகை. இப்புகையால் ஒரு பலன் உண்டு. அதாவது மெழுகெண்ணெய் எரியும்போது முதலில் நீலநிறமாயிருக்கும்; இதன் மத்தியில் புகை சேர்ந்து எரியும்போது நீலநிறமாறி விளக்கு பிரகாசமடைகின்றது. விளக்கால் உண்டாக்கப்பட்ட புகை அல்லது கரித்தூள் உண்டானதக்ஷணமே காற்றோடு கலந்து எரிவதால் விளக்கு பிரகாசத்தையடைகிறது.

மெழுகுவர்த்தி, எரியும்போது பிரகாசத்தையும் புகையையும் கொடுப்பதோடு உஷ்ணத்தையும் கொடுக்கிறது. எரியும் சுவாலையை விரலால் தொட்டால் அனல்படுவதை யறியலாம். மெழுகுவர்த்திவிளக்கில் ஒரு புகைபோக்கியை (Chimney) வைத்து, புகைபோக்கியின் தலைப்பில் கையைவைத்துப் பார்த்தால் ஒருவித உஷ்ணவாயு புகைப்போக்கியை விட்டு வெளிவருவது தோன்றும். இப்புகைபோக்கியைக் குளிர்ச்சிசெய்தால் புகை போக்கியின் உட்புறத்தில் நீர்த்துளிகள் பனிபோல்சேர்வதைப் பார்க்கலாம். இதனால் மெழுகுவர்த்தி எரியும்



போது ஜலம் உண்டாகின்றதென்பது விளங்கும். இஃது எப்படி உண்டாகின்றது? ஒரு பங்கு பிராணவாயுவும், நான்கு பங்கு இலவணவாயும் கலந்தால் காற்றாகிறதல்லவா? இம்மாதிரியே ஒரு எடை பிராணவாயுவும் எட்டெடை ஜலவாயுவும்சேர்ந்து ஜலமுண்டாகிறது. இச்சலவாயு மெழுகுவர்த்தியிலிருக்கிறது. இதற்கு எரியுங்குணமுண்டு. மெழுகில் இருக்கும் ஜலவாயு காற்றிலிருக்கும் பிராணவாயுவினால் எரிகிறது. எனவே மெழுகுவர்த்தி எரியும்போது பிராணவாயுவும், ஜலவாயுவும் கலக்கின்றன. இப்படிக் கலப்பதால் ஜலம் உண்டாகிறது. இச்சலம் ஆவியாகப் போவதினால் கண்ணுக்குத் தெரிவதில்லை. புகைபோக்கியைக் குளிர்ச்சி செய்தால் நீராவி யிறுகிச் சிறு நீர்த்துளிகளாகப் புகைபோக்கியின் உட்புறத்தில் படிகிறது.

மெழுகு வர்த்தி யெரியும்போது கரிவாயு வென்னும் மற்றொரு பதார்த்தமும் உண்டாகிறது. மெழுகு அல்லது மெழுகுவாயுவில் கரியுண்டென்று முன் சொன்னோமே அக்கரித்தூள் பிராணவாயுவோடுகலந்து எரியும் போது இக்கரிவாயுவுண்டாகின்றது.

*Teachers' Aid.*

---

## OBJECT LESSONS.
## பொருட் பாடங்கள்.

லண்டன் நகரத்துக் கல்விச் சங்கத் தலைவர்கள், இன்ஸ்பெக்டிங் அதிகாரிகளுக்குப் பொருட்பாடம் போதிக்குமுறை விஷயமாய் வெளியிட்டிருக்கும் பிரகடனத்தை, நம் நல்லாசிரியனைக் கையேந்தும் உபாத்தியாயர்களது உபயோகத்திற்காக அடியிற்கண்டவாறுமொழி பெயர்த்து வெளியிடலானோம்.

பொருட்பாடங்களைப் போதித்து வரும்படி ஏற்பாடு செய்துள்ள பள்ளிக்கூடங்களில், உபாத்தியாயர்கள் அதி ஜாக்கிரதையாய், இப்பாடசம்பந்தமாய் வெவ்வேறான இரண்டுகுணங்களைப்பற்றி மயங்காமல் நல்லமாதிரியில் கற்பித்து வருவதாகப்புலப்படுகின்றது. இது மற்றப்பாடசாலைகளை நோக்குங்கால் நன்கு விளங்கும். முற்காட்டிய இரண்டு குணங்களாவன: 1 ஆவது பொருள்களை யுற்றுநோக்குவதும், 2 ஆவது அப்பொருள் சம்பந்தமான விஷயத்தை யாராய்ச்சி செய்து உணர்வதுமாம். இவ்விரண்டிற்குள் இருக்கும் வித்தியாசம்

மிகப்பெரிதாகும். அதற்கேற்ப அவற்றை யறியச்செய்யு முறையும் மாறுபடும். பொருட்பாடபோதனை, பிள்ளைகளின் ஆராய்ச்சியறிவை யதிகரிப்பித்துப் பரிசீலனையால் அறிவுவிருத்தியடைய வழியுண்டாக்குகிறது. அவ்வகைய அறிவுவிருத்தி யுண்டாவதற்குப் பொருளை நேரிற்காட்டிப் புத்தியைச்செலுத்த வசதிசெய்தாலல்லாமல் வேறு வகையில் போதிக்கும் போதனைகளெல்லாம் சிறந்தமுறையாகா வென்று சொல்லலாம்.

இன்ஸ்பெக்டிங்அதிகாரிகளின் முன்னிலையில், அநுபவமுதிராத உபாத்தியாயர்கள் பொருட்பாடங்களைப் பிள்ளைகளுக்குப் போதித்துக்காட்டவேண்டு மென்று கேட்கப்படும் போது அவர்கள் பல முறையும் பொருட்பாடம் என்று சொல்லத்தகாதவைகளை நடத்தியுள்ளதாகத் தெரிகின்றது. எங்ஙனமெனில்? போதிக்கும்படி கையாண்ட பொருளில் பிள்ளைகளின் கண்ணையும் மனத்தையுங் கவரும் படியான மார்க்கத்தைக் கையாளாமையா லெனலாம். திருஷ்டாந்தமாய், யானையை நேரிலாகிலும், உயிர்வருக்கப் பொருட்காட்சிச் சாலையிலாகிலுங் கண்டிராத கிராமபாடசாலை மாணாக்கனொருவனுக்கு அவ்யானையைப் பற்றிச் சொல்லிக்கொடுக்கும் பாடம், விஷயபாடமாய்ச் சிலமுக்கிய விஷயங்களை மனத்திடத்துச் சேகரஞ்செய்து வைக்க உதவியாயிருக்குமேயன்றி, தானாய் நேரிற்கண்டு, ஆராய்ச்சிபுரிந்து அறிவுவிருத்தியாவதைப் போலாயினும், உற்று நோக்கி விஷயமறிய உற்சாகமுண்டாக்குவதைப் போலாயினுமிராது. எடுத்துக்கொண்ட பொருளை நேரிற்கண்டும், பரிசித்தும், கவனித்தும் சந்தேகவிபரீதமறச் செய்தாலல்லாமல் எவ்வளவு நுட்பமாகவும், விரிவாகவும் வரைந்துகாட்டினாலும், பூதக்கண்ணாடி மூலமாய் விளக்கிக்காட்டினாலும் அது பொருட்பாட போதனையேயாகாமல் விஷயபாட போதனையாகவே முடியும். பொருட்பாட போதனைமுறையில் பொருளையுற்று நோக்கி யறியுந்திறத்தை விருத்திசெய்வதே முதலாவது முறையென்றும், அப்பொருள் சம்பந்தமான விஷயத்தைக்கேட்டுணர்வது பிந்திய முறையென்றும் யாவரும் மனத்திற்கொள்ளவேண்டும்.

பொருட்பாடங்களை நடத்துவதில் இயற்கைப்பொருள் சம்பந்தமானபோதனையின் வித்தியாசத்தைச் செவ்வனே எடுத்துக்காட்டவேண்டும். பிரகிருதிசாஸ்திரத்திற்கு மூலமாகிய சில இயற்கைப் பொருள்களின் தன்மைகளைக் கண்டுபிடிக்கப் பிள்ளைகளுக்கு உதவியாயிருப்பது பொருட் பாடமாகும். ஆயினும், இப்பிரகிருதி சாஸ்திரப்



போதனைமுறை ஒருவழியாய் நின்று ஒரேவிஷயத்தைத் தெளிவுபடுத்திச்சொல்லாமல் மாறுபடுவதால் ஒரேவிஷயத்தை எடுத்துக்கொண்டு அதன் பகிரங்காந்தரங்கங்களைக் கூறும் சரியான முறைக்கு மாறுபடுகின்றது. முறையாய் விஷயங்களைப் பாகுபாடு செய்து தொடர்ச்சியாய் அவ்விஷயங்களின் தன்மைகளைச் செவ்வனே ஆராய்ந்து, அவற்றின் இயற்கையமைப்பு, செயற்கையமைப்புக்களையுணர்ந்து தெளிதல் பிற்காலத்திய புத்திகோசரத்திற்கு வழிகாட்டியாயிருப்பதாகத் தோற்றுதலின் இவற்றிற்கெல்லாம் தக்கமாதிரி பொருட்பாடங்களை நடத்துவதே போதுமானவழிகாட்டியாயிருக்குமென்று எண்ணப்படுகின்றது. ஆதலின் பொருட்பாட போதனைக்காக உதகரிக்கும்: தாவரவர்க்கங்களைப் பற்றி விவகரித்து வருகையில் அதன் தொடர்ச்சியாகவே தாவர ரசாயன சாத்திர (Botany) வாராய்ச்சிக்கும், ஜந்துவர்க்கங்களைப் பற்றிவிவகரித்து வருகையில் உயிர்வருக்கசாத்திரவாராய்ச்சிக்கும் பிள்ளைகள் மனத்தைச் செலுத்தலாகாது. இத்தொடர்ச்சிகளை மிக்கநுட்பமாக உபாத்தியாயர்கள் கவனிக்கவேண்டும். பொருட்பாட போதனையில் உபாத்தியாயர்கள் பொருளின் தன்மையைப்போதிப்பதிலேயே கட்டுண்டிருக்கவேண்டும். அநுபவமுதிர்ந்த உபாத்தியாயர்களின் அநுபோகத்தின்படி, இதன் சம்பந்தமாய்க் குறிப்பிட்டுள்ள சிலகுறிப்புக்களை அடியில்காட்டுகின்றோமாதலின் அவை மற்ற உபாத்திமார்கட்கும், மிக்க உபயோகமாயிருக்குமென்று நம்புகின்றோம்.

(1) பொருட்பாட புத்தகத்தில் கையாண்ட பொருள்களில் ஒருவருடத்துக்குள் சுலபமாயும், பிள்ளைகள் மனத்துக்குப்பெருஞ் சுமையென்று தோன்றாததாயுமுள்ள பாகங்களைமட்டும் பாடங்களாக நடத்தவேண்டும். சில பாடங்களேயாயினும் செவ்வனே நடத்துவதால் உற்று நோக்கி, உள்ளதை உள்ளவாறறியுங் குணமும், புத்தியும் பிள்ளைகளுக்கு விருத்தியாகு மல்லாமல் பல பாடங்களை மேற்படிப்பாய்ப் படிப்பதா லமையாது.

(2) உபாத்தியாயர் தாம் பொருளை நேரிற்காட்டுவதாலாகிலும், அல்லது அப்பொருளை நேரில் பார்க்கக் கூடியதா லடையும் அறிவுவிருத்தியைக் குறைவுபடுத்தாதிருக்கும் வேறு கருவியை யுபயோகிப்பதாலாகிலும் பிள்ளைகளுக்குப் பொருட்பாடம் போதிக்கலாம். இவ்விரண்டு மார்க்கமுமில்லாமல் வேறு எக்காரணத்தாலும் பொருட்பாடம் போதிக்கலாகாது. இவ்வாறுபோதிக்கையில் பிள்ளை

கள் மனத்தில் தெளிவாய் பதியக் கூடாத மரபுச்சொற்களையும், மறைபொருட்பதங்களையும் அதிஜாக்கிரதையா யகற்றவேண்டும்.

(3) பிள்ளைகள் தாங்கள் படிக்கும் பொருட்பாடத்தைவிளக்கிக்காட்டவல்ல பொருட்களைச் சேகரஞ்செய்தோ, இரவல்வாங்கியோ பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்ற வழக்கத்தை உபாத்தியாயர் விருத்திசெய்யவேண்டும்.

(4) பிள்ளைகள்படிக்கும் பொருட்பாடத்தில் நேரும் சந்தர்ப்பத்திற்கேற்றபடி அவற்றின் உருவங்களை எழுதவும், அவசியமானால் சிலகுறிப்புக்களை எழுதிக்கொள்ளவும் பழக்கவேண்டும். பிள்ளைகள் தாங்கள் படித்தவிஷயத்தை எவ்வளவு தூரம்மனத்தில் வைத்திருக்கின்றார்களென்பதை பிள்ளைகளைக் கொண்டு களிமண் உருக்கள் செய்விப்பதால் அறியலாம். அவ்வாறு செய்விப்பதில் முக்கியமாய்க் குறிப்பிட வேண்டியதையுங் கவனித்தால் அவர்கள் மனத்தில் தங்கிக்கிடக்கும் விஷயத்தின் அளவு தெரியவரும். உபாத்தியாயரும் அடிக்கடி கரும்பலகையிலும் எழுதிக்காட்டி விளக்கவேண்டும். உபாத்தியாயர் சொல்லிவரும் விஷயத்தை ஐந்து நிமிஷங் கேட்டு வெறுப்படைந்த பையனும் அதனை எழுதுவதாலும், அவ்வாறு எழுதுவதில் கவனிக்கவேண்டிய விஷயங்களைக் குறிப்பிட்டு விளக்குவதால் நிகழும் பேச்சாலும் கழியும் அரைமணிநேரம் கவனித்துவர வெறுப்படையான்.

(5) பொருட்பாட சம்பந்தமா யறிய வேண்டிய விஷயங்களை நேரிற்காண பொருட்காட்சிச்சாலை முதலியவிடங்களுக்குப் போதல் மிகவும் முக்கியமென்று வித்தியாசட்டம் அங்கீகரிப்பதால் அவசியமானபோது அவ்வாறுசெய்வது பெரும்பயனளிக்கும். சமயாசமயங்களில் இவ்வாறுவெளியேபோய் பொருட்பாடவிஷயவாராய்ச்சிபுரிந்து வருவது அப்பொருள்களைப்பற்றி அறிவு விருத்தியாவதற்கு உபாயமாயிருப்பதுமல்லாமல் மேற்கொண்டு நடக்கவேண்டிய பாடங்களைத்தெளியவும் வழிகாட்டியதாகும்; முன்பின் படித்துள்ளதையும் ஞாபகத்திற்குக் கொணர்ந்து விருத்திபடுத்துவதாகும். ஒரு பொருளை விளக்கிக்காட்டுமாறு அப்பொருளிருக்குமிடத்தினின்றும் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவந்தால் இயற்கையில் அது இருக்குமிடத்திலிருந்ததற்கும், கொண்டுவந்தபின்பு அடைந்தவேறுபாட்டுக்குமுள்ள வித்தியாசத்தை உபாத்தியாயர் விளக்கிக்காட்டி நேரில் திருஷ்டாந்தப் படுத்தவேண்டும்.

**பத்திராதிபர்.**

(இன்னும் வரும்.)



# THE BEES.

## வண்டுகள்.

இந்த விசித்திரமான உலகத்தில் நாற்புறமும் சுற்றிப்பார்க்கும்போது, இவ்வுலகமெல்லாம் யாருக்காகப் படைக்கப்பட்டதென்று நீங்கள் எப்பொழுதாவது யோசித்ததுண்டா? இப்போது நாமே இதைப்பற்றி யோசித்துப்பார்ப்போம். ஆகாயமானது வெகு விசாலமாய் எங்கும் பரந்திருக்கின்றது. அவ்வாகாய மண்டலத்திலே சிலகாலம் வெகு பளபளப்பாய்ச் சூரியன் பிரகாசிக்கின்றது. சிலகாலம் மேகங்கள் வந்தடர்ந்து சொற்பமாய் மழை பொழிவதும் காற்றுமழையடிப்பதுமாயிருக்கின்றன. நமக்குப் பிராணாதாரமாக வாயு எப்போதும் வீசிக்கொண்டிருக்கிறது. விஸ்தாரமான ஆறுகளும், ஏரிகளும், காடுகளும், செடிகளும், மலைகளும், சமுத்திரங்களும் நிறைந்து இந்தப் பூமியும் மிகப்பெரிதா யிருக்கின்றது. இவையாவும் நம்முடைய நன்மைக்காகவே படைக்கப்பட்டனவென்று எண்ணுகிறீர்களோ? இந்த ஈசுவர சிருஷ்டியில் மன்னுயிர்கள் மிகவும் சொற்பம். இப்பூமியில் அவர்கள் வசித்திருக்குமிடமும் மிகவும் சொற்பமே. அவர்கள் தாம் பயிர்செய்துகொள்வதற்குவேண்டிய புலங்களைக் கைப்பற்றிக்கொள்ளமாட்டுவார்கள். பட்டணங்களும் கிராமங்களும் கட்டிக்கொள்ள யதேஷ்டமான பூமிகளைக் கைப்பற்றிக்கொள்ளமாட்டுவார்கள். ஆறு ஏரிமுதலியவைகளை நீர்பாய்ச்சல் ஸ்நானம் முதலியவைகளுக்கும், சமுத்திரங்களைக் கப்பல்கள் போக்குவரவுசெய்வதற்கும் உபயோகித்துக்கொள்ளமாட்டுவார்கள். இப்படியெல்லாம் பலவாறாக உபயோகப்படுத்தியும், இன்னும் எவ்வளவோ பூமிகள் மனிதர் கைப்படாமலே இருக்கின்றன. மனிதர் சிறிதும் உபயோகித்துக்கொள்ளமாட்டாத மலைகள் எத்தனையிருக்கின்றன! சிறிதும் மனிதர் கண்ணுக்குத் தெரியாத எவ்வளவு பிரதேசங்கள் சமுத்திரங்களிலிருக்கின்றன! இப்படி மனிதர்கள் வாசஞ்செய்யாமலும் இருக்கும்பொழுது, அப்படிப்பட்ட இப்பூமிமுழுதும் மனிதர்களுக்காகவே படைக்கப்பட்டதென்று நாம் எப்படி சொல்லலாம்? நாம் வாசம் பண்ணாமற்போனபோதிலும் அவ்விடங்கள் முழுதும் வாசம்பண்ணப்பட்டிருக்கின்றன. அவ்விடங்கள் நமக்கு அவசியமில்லாமற்போனபோதிலும் ஈசுவரனால் சிருஷ்டிக்கப்பட்ட கோடா கோடி பிராணிகளுக்கு அவசியமாயிருக்கின்றன. கடவுளால் படைக்கப்பட்ட அநேகமாயிரம் காட்டுமிருகங்களுக்கும்

வாசஸ்தானம்வேண்டுமல்லவா? சில ஆப்ரிக்கா கண்டத்துக் கொடிய காடாந்தரங்களில் வசிக்கின்றன; சில ஆசியாகண்டத்துக் காடுகளில் வசிக்கின்றன; சில பருவதப்பிராந்தங்களில் வசிக்கின்றன; சில உத்தர மகா சமுத்திரத்தையடுத்த பனிபூமிகளில் வசிக்கின்றன. இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தாலும், இம்மனிதர்களாலும் மிருகங்களாலும் வசிக்கப்படாதவிடங்கள் இப்பூமியில் இன்னும் விசேஷமாயிருக்கின்றன. அவ்விடங்களிலும் அநேகமாயிரம் ஜீவப்பிராணிகள் வசிக்கின்றன; அவை பூச்சிகளாம்.

ஈ, தேனீ, வண்டு, குளவி முதலிய பூச்சிகளைப்பற்றிக் கேட்கும்போது நீங்களெல்லாரும் என்ன நினைப்பீர்கள்? இவற்றுள் ஏதாவது ஒன்றைக் கண்டால் என்ன நினைப்பீர்கள்? சித்திரவதைசெய்துகொல்வீர்களென்று நினைக்கிறேன். அவைகளும் ஆதரவோடு போஷிக்கப்படுகின்றன; நம்மைப்போலவே அவையும் சுகம் அனுபவித்துக்கொண்டு வாழவேண்டுமென்று கருதியே படைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கும் வீடுகள் உண்டு; குடும்பங்களுமுண்டு; நம்முடைய பெற்றோர் நமக்கு வேண்டிய உணவு தேடுவது போலவே, அவையும் அவ்வவற்றின் குஞ்சுகுட்டிகளுக்கு உணவுதேட வழியுடையவையாயிருக்கின்றன. அவையும் வீடுகட்டிக்கொள்கின்றன; கஷ்டகாலம் வருமெனக்கண்டு முன்னதாகவே அதற்கு வேண்டிய பொருள் தேடிக்கொள்கின்றன. நம்முடைய சிறுவர்களைப்போலவே அவை ஒன்றுக்கொன்று நேசிக்கின்றன; கலகப்பட்டுச் சண்டைபோடுகின்றன. ஆயினும் அவை நம்மைப்பார்க்கிலும் மிகச் சிறியவையாயும்,மிகவும் துர்ப்பலமானவைகளாயுமிருப்பதால், நாம் அவற்றை அதிகமாய் அலக்ஷியம்செய்து அவைகள் கிழே கிடந்தாலும் மிதித்துக்கொண்டு நடந்துபோகிறோம். அவற்றினிடத்திலுள்ள பெருமைகளை அறிந்திருந்தால் அப்படிச் செய்யத் துணியோமல்லவா?

முதலில் வண்டைப்பற்றி விசாரிப்போம். அதன் நிறம் அனைவரும் பார்த்து அதிசயிக்கும்படி எவ்வளவு பளபளப்பாயிருக்கின்றது! அதை வயிற்றுப்புறமாய்த் திருப்பிப்பார்ப்போமானால், அங்கு அது வெகு சிறந்த கவசமொன்று அணிந்துகொண்டிருக்கிறதென்பது தெளிவாய்த் தெரியவரும். அது சாதாரணமாய்ப் பார்வைக்கு நீல நிறமாய்த் தசைபோலவே தோற்றினும், மேற்புறத்துத் தோலைப் பார்க்கிலும் மிகவும் சிறந்தது. அதன் கால்களைப்போலச் சிறந்த கால் நம்முள் எவர்க்குமில்லை. அப்படி அதற்கு ஆறுகால்களுண்டு.



அவற்றோடு முன்புறத்தில் மிக்க பலமுள்ளதான மீசைகளிருக்கின்றன. கால்களிருந்தாலும் அது பறக்கவும்மாட்டும். இவ்விரண்டு சாமர்த்தியமும் உள்ளதாயிருப்பதால் நம்மைப்பார்க்கிலும் அதற்கு உதவி அதிகம். அதன் கண்கள் மிகவும் அற்புதமானவை. பூதக்கண்ணாடியைக்கொண்டு பார்த்தாலன்றி அவற்றிலுள்ள அதிசயங்கள் நமக்குப் புலப்படா. அதற்குச் சாதாரணமாயுள்ள கண்கள் மாத்திரமேயல்ல, தலையின் பின்புறத்திலும் மிகச்சிறிய கண்களுண்டு. முதலில் இந்தப் பூச்சி ஒரு சிறு புழுவாயிருக்கும். கால் மிகவும் குட்டையாதலால் அப்போது நடக்கமாட்டாது; விலாப்புறத்தால் இழுத்துக்கொண்டு மெல்ல மெல்ல நகரும். மிகவும் இருண்ட விடமான மரப்பொந்தில் மரத்தையே புசித்துக்கொண்டு இதுவரையில் வசித்திருந்த இவ்வண்டு இப்பொழுது எப்படிப்பட்டதாயிருக்கிறது பாருங்கள்!

வண்டுகளுள் பலவகையுண்டு. அத்தனைவிதங்களையும் நாம் அறிந்துகொள்ளவேண்டுமென்றால் நம்மால் முடியாது. ஆயினும் வெகு சிரமப்பட்டு அவற்றின் இயற்கைகளைக் கற்றறிந்தவர்கள் அவற்றைப்பற்றி வெகு விசித்திரமான கதைகள் சொல்லுகிறார்கள். ஒரு ஜாதிவண்டுக்குத் தன்னைச் சத்துரு ஒன்றும் எதிர்க்கக்கூடாமல் காத்துக்கொள்ளத்தக்க ஒருவகை விசித்திரமான போர்க்கருவி இருக்கின்றது. நம்முடைய சிறுவர்கள் ஒருவரையொருவர் எதிர்த்துச் சண்டைபோடுவதுபோலவே இந்த வண்டுகளும் சண்டைபோடுவதுண்டு. இந்த ஆயுதத்தோடுகூடிய வண்டை இதற்கு விரோதியான பெரிய வண்டு ஒன்று எதிர்த்துச் சண்டைபோடவருமானால், அது அதனருகாமையில் வருமளவும் இந்தச் சிறுவண்டு காத்திருந்து, அண்டையில் வந்தவுடனே அது பயந்தோடிப்போம்படி அதன் முகத்தில் துப்பாக்கியால் சுடுவதுபோலச் சுடும். அந்தச் சுடும்கருவி எப்படிப்பட்டதெனில், அந்த வண்டின் வயிற்றுக்குள் ஒருவகைத் திரவப்பொருளோடுகூடிய பைபோல் ஒன்று இருக்கின்றது. சுடும்போது அது வெடித்துச் சிறிது சத்தமும் புகையுமாய் வெளிவரும். அப்படிச் சுடும்போது அந்தவண்டை நமது கையில் வைத்திருப்போமானால், அது வெடித்துவருகிற ஆவியால் நம்முடைய கை கறுத்துப்போக நாம் காண்போம்; ஆயினும் அப்படி அது சுடுவதினால் நமக்கு யாதொரு கெடுதியுமுண்டாகாது. அந்தத் துப்பாக்கி வெடியோசை கேட்டவுடனே பெரியவண்டு மிகவும் பயந்து தான் நீட்டிய மீசைகளை அப்படியே பின்னுக்கு வாங்கிக்கொள்ளும். அந்தப் பெரியவண்டுக்கு இவ்விதமான துப்பாக்கிகள்

கிடையாவாதலால், தன் சத்துரு செய்கிற செய்கை இன்னதென்று அறியாது பயந்து போகின்றது. அச்சமயம் தெளிந்து அது மறுபடி எதிர்க்க முயல்வதற்கு முன்னமே சிறுவண்டு வெகுதூரம் ஓடிப் போய்விடும்.

மற்றொருவகை வண்டுகளின் செய்கையைக் கேட்டால் பின்னும் வெகு விசித்திரமாயிருக்கும். அந்த வண்டைப் புதைவண்டென்கிறார்கள். ஏனெனில், அது பறவை, தவளை, எலி, உணவு இவைகளையெல்லாம் பூமிக்குள் கொண்டுபோய்ப் புதைத்துவைப்பதனால் அதற்கு அந்தப் பெயர் வழங்குகின்றது. இதைக் கேட்கும்போது அந்த வண்டு மிகப் பெரிதாயிருக்குமென உங்களுக்குத் தோன்றுமல்லவா? அப்படியில்லை; அது ஒரே அங்குலந்தான் நீண்டிருக்கும். எவ்வளவு நாழிகையானாலும் விடாமுயற்சியாய் உழைக்கும் திறமையுடைத்தாயிருப்பதால் அது அவ்வளவு பெரிய ஜந்துக்களையும் பூமிக்குள் கொண்டுபோய்ப் புதைத்து விடுகின்றது. தன் கஷ்டகாலத்துக்கு உணவு குறைவில்லாமல் வேண்டுமென்றே அது இவ்விதமாக ஜந்துக்களைக் கொண்டுபோய்ப் புதைத்துவைக்கின்றது. இப்படி ஆஸ்தியாகக் கொண்டு சேர்த்த பொருள்களின் மேலேயே பெண்வண்டு முட்டையிடுகிறதாதலால், அம்முட்டைகளெல்லாம் புழுவானவுடனே அந்தப் புழுக்களுக்கு உணவுக்குக் குறையென்ன?

இந்த வண்டுகள் தரை சிறிதும் தோண்டக்கூடாமல் மிகவும் கெட்டியான ஓரிடத்தில் செத்தபறவை ஒன்று விழுந்திருக்கக்கண்டால், தனா சுலபமாய்த் தோண்டக்கூடும்படியான மற்றோரிடத்திற்கு அந்தப் பிணத்தை இழுத்துக்கொண்டுபோம். கொண்டுபோனபின்பு ஆண்வண்டு அதைப் புதைக்கும்படி பள்ளம்வெட்ட ஆரம்பித்து, அந்தப் பூச்சி இருக்குமிடத்திற்கு அரையங்குலம் அப்பால் அதைச்சுற்றிப் பள்ளம் கல்லும். பின்பு அப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் அந்தப் பிணத்தின்கீழ் உள்ள மண்ணையெல்லாம் அறுத்து அப்புறப்படுத்தி அதைத் திடீரென்று பள்ளத்தில் தள்ளிவிடும். அவ்வண்ணம் மூன்றுமணிநேரம் வேலைசெய்து பின்பு அந்த வண்டு வெளியேவந்து ஒரு மணிநேரம் சும்மா இளைப்பாறியிருக்கும். இளைப்பாறினபிறகு அந்தப் பள்ளம் அப்பறவை புதையப் போதுமா போதாதாவென்று அதன் இறகைப் பிடித்திழுத்துப் பரீக்ஷைபார்க்கும். போதாதெனத் தோன்றினால், அந்தப் பள்ளத்தைப் பின்னும் ஆழமாகக் கல்ல ஆரம்பிக்கும். மூன்று மணிநேரம் வேலைசெய்தானால் மறுபடி வெளியே வந்து செத்தபிணம்போலச் சிறிதும் அசையாமல் ஒருமணிநேரம் அயர்ந்திருக்கும்; திரும்பியும் போய் வேலைசெய்யும். அந்தப் பள்ளம் அது புதையப் போதுமானதென்று மனத்திற்குத் திருப்தியாய்ப்போன பிறகு அந்தப் பறவையை இப்புறமும் அப்புறமும் இழுத்துப் பார்த்து மத்தியில் செம்மையாய்ப் பொருத்தி அதன்மேல் மண்ணைத் தள்ளிப் புதைத்துக் கெட்டி செய்துவிடும். இதெல்லாமாயினபிறகு, அந்தப் பறவையின்மேல் மூடிய மண்ணில் ஒரு சிறுவளை தோண்டிக்கொண்டு அதில் அந்த வண்டு தன் பெண்சாதியோடு கூடச் சந்தோஷமாக வசித்திருக்கும். பெண்வண்டு முட்டையிட்டவுடனே அம்முட்டைகளை அப்படியே விட்டுவிட்டு அவை இதேவிதமாகவே உணவுதேடிப் பிழைக்க மற்றோரிடத்திற்குப் போய்விடும்.



இந்தக் கதை எவ்வளவு விசித்திரமாயிருக்கின்றது! இது வாஸ்தவமாக நடக்கின்ற செய்தியே. இவற்றுள் முக்கியமான விஷயம் ஒன்றுசொல்ல மறந்தோமே; இவ்வளவு வேலையையும் அவ்வண்டு தன் தலையாலேயே செய்துமுடிக்கும். பள்ளம் தோண்டுவதற்கும், அதில் பறவை எலி தவளை முதலியவைகளைக் கொண்டுபோய்ப் புதைப்பதற்கும் இந்தவண்டுக்கு முக்கியமாயுள்ள கருவி தலையொன்றுதான். இவ்வாறு செத்துப்போன பறவைகளைப் பூமிக்குள் புதைத்துவிட்டு அவற்றின் துர்க்கந்தம் வெளிவர வொட்டாமற் செய்து நம்மைக் காப்பாற்றுகிறநிமித்தம் நாம் இவற்றினிடத்தில் மிக்க பிரீதியுடையவர்களாயிருக்கக் கடவோம். வருஷாவருஷம் எத்தனை ஆயிரம்கோடி ஜீவப்பிராணிகள் இப்பூமியில் இறக்கின்றன? ஆயினும் நாம் வெளிகளில் சஞ்சரிக்கும் பொழுது பார்க்க அருவருப்பாயாவது துர்க்கந்தம் வீசிக்கொண்டாவது ஒரு செத்த ஜீவனாவது நம்முடைய கண்ணுக்குப் புலப்படுகின்றதா? இல்லை. இப்படி இப்பூமியைச் சுத்திசெய்து நமக்கு நன்மைகளை விளைவிப்பதற்காக நாம் இவற்றினிடத்தில் மிகவும் நன்றியுடையவராகக் கடவோம்.

---

## A GOOD SCHOLAR.

### நன் மாணாக்கன்.

---

மாணாக்கன், மாணவன், சீடன் என்பன ஒருபொருட் சொற்கள். மாணாக்கனாவான் நல்லாசிரியரை யடுத்து வழிபட்டு உண்மைப் பொருளையறியுங் கடமைபூண்டோன். தன்மகன், ஆசான்மகன், அரசன்மகன், பொருள்கொடுப்போன், வழிபடுவோன், நாலுவரையை

விரைவிற்கற்போன் என்ற இத்தொடக்கத்தினர் மாணுக்க ராகுந் தன்மையர். (இக்காலத்துப் பாடசாலைகளிற் பயிலும் மாணுக்கர்கள் பொருள்கொடுப்போரிற் சேர்த்தெண்ணப்படுவர்) அம்மாணவர் தாம் * முதன் மாணுக்கரும், இடைமாணுக்கரும், கடைமாணுக்கரு மென மூன்று பகுதியினை யுடையார்.

1. முதன்மாணுக்கர்.— இவர் உத்தம மாணுக்கரெனவும் படுவர். இம்முதன்மாணுக்கர் அன்னத்தையும், பசுவையும் ஒப்புவர், ஆயின் முதன் மாணுக்கர் பட்சியையும், மிருகத்தையும், ஒத்தவரே? எனின் அங்ஙனமன்று. (1) அன்னம்—நீரோடு சேர்ந்த பாலை யுண்ணுமிடத்துநீரைப்பிரித்து அதிலுள்ளபாலைமாத்திரம் பருகும். அதுபோல. முதன்மாணுக்கர் குணகுணங்களைப் பிரித்து குணத்தைக்கொண்டு அக்குணத்தை நீக்குவர். (2) பசு.—புல் மிகுதியாக விருக்கு மிடத்தைக்கண்டால் வயிறார மேய்ந்து பின்போரிடத்தில் அமர்ந்து மேய்ந்த புல்லைச் சிறிது சிறிதாக வாயில் வருவித்து மென்று தின்னும். அதுபோல முதன் மாணுக்கர் மிகுந்த கல்வியறிவுடைய ஆசிரியரைக்கண்டவிடத்து அக்கல்வியை தன்னுள்ள நிறையக் கேட்டறிந்து பின்பு ஓரிடத்து அமர்ந்து கேட்டறிந்த அவ்விஷயங்களைச் சிறிது சிறிதாக நினைவிற்குக் கொண்டுவந்து சிந்தித்தறிவர்.

2. இடைமாணுக்கர்.— இவர் மத்திம மாணுக்கரெனவும் படுவர். இவ்விடைமாணுக்கர் மண்ணையும், கிளியையும் ஒப்புவர். எங்ஙனமெனின்.— (1) மண் உழவர் செய்யும் முயற்சி யளவிற்குத்தக்கப் பயனைக் காட்டுதலே போல் இடைமாணுக்கர் ஆசிரியன் வருந்திக் கற்பிக்கும் முயற்சியளவிற்குத் தக்க கல்வியறிவைக் காட்டுவர், (2) கிளி தனக்குக் கற்பித்த சொல்லையன்றி வேறொன்றையுஞ் சொல்லாத வாறுபோலஇடைமாணுக்கர் தமக்குக் கற்பித்த நூற்பொருளையன்றி வேறொருநூற்பொருளையும் ஊகித்துச் சொல்ல அறியார்.

3. கடைமாணுக்கர்.— இவர் அதம மாணுக்கரெனவும் படுவர். இக்கடை மாணுக்கர் பொள்ளற்குடம், ஆடு, எருமை, பன்னாடை, இவற்றை யொத்தவர். எங்ஙனமெனில்:— (1) பொள்ளற்குடம் நீரைவார்க்குந்தோறும் ஒழுகவிடுதல் போலக் கடைமாணுக்கர், ஆசிரியன் நூற்பொருளைக் கற்பிக்குந் தோறும் மறந்துவிடுவர். (2) ஆடு ஒரு செடியில் தழை நிறைந்திருப்பினும் அச்செடியிலேயே மேய்ந்து தன் வயிற்றை நிறைத்துக் கொள்ளாது தன் கண்ணுக்குப் புலப்படுஞ் செடி தோறும் போய் மேய்தல் போலக் கடையாயினர் ஓராசிரிய ரிடத்து மிகுந்த கல்வியறிவு இருப்பினும் புலமை நிறையக் கற்றுக்கொள்ளாது பலரிடத்தும் பாடங்கேட்பர் (3) எருமை குளத்து நீரைக்கலக்கிக்குடித்தல்போலக் கடையாயினர் ஆசிரியனை வருத்திப்பாடங்கேட்பர் (4) பன்னாடை தேன் முதலிய சாரத்தைக் கீழே ஒழுகவிட்டு, எறும்பு முதலிய பொருள்களைப் பற்றிக் கொள்ளுதல் போல் கடைமாணுக்கர் ஆசிரியர்கள் கற்பிக்கும் நற்பொருள் அனைத்தையும் மறந்து தீயபொருளைச் சிந்தித்துப்பற்றிக்கொள்வர். இத்தகைய மாணுக்கரில் தலையாயினரும் இடையாயினருமே மாணுக்க ராதற்குரியவர்.

பத்திராதிபர்.

* "அன்னமு மாவே, மண்ணொடு கிளியே,
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலை, யிடை, கடை மாணுக்கர்"—நன்னூல்.



---

## EXAMINATION PAPERS.

## பரிட்சை வினுக்கள்.

---

### டிபார்ட்மேன்ட் ஆவ் எட்யுகேஷன்.

### லோயர் ஸெக்கெண்டரி—பாடசாலை ஏற்பாடும் கிரம சிட்சையும்.

1. (*a*) ஒரு பிரைமெரி பாடசாலையின் கிரண்டு பரிட்சை முடிந்தவுடன் விட்டுவிடும்படி விரும்பும் இரண்டுபிள்ளைகளுக்கு விடுதலை (லீவிங்)சர்ட்டிபிக்கேட்டு எழுதுக. அவர்களில் ஒருவன் மேல்வகுப்புக்குப் போகத்தகுந்தவன். மற்றவன் தகுந்தவனல்ல.

(*b*) ஒரு பிள்ளை உம்முடைய பாடசாலையிற் சேரவந்தால், சேர்க்கைப்பட்டியில் (அட்மிஷன் ரிஜிஸ்டர்) அவசியம் பதியவேண்டியவைகளை எழுதும்படி அந்தப் பிள்ளையிடம் அல்லது கார்டியனிடம் என்னென்ன கேள்விகள் கேட்பீர்? அந்தப்பிள்ளையிடம் என்ன சர்டிபிகேட்டு அல்லது கடிதம் கேட்பீர் ?

2. ஒரு அப்பர்பிரைமெரி பாடசாலையின் ஒவ்வொருவகுப்புக்கும் என்ன இரண்டு இஷ்டமான பாடங்களை ஏற்படுத்துவீர்? விடைக்கு நியாயம் சொல்லுக? அப்பாடங்கள் மனதிலேபடும்படி கற்பிக்க என்னென்ன உபகரணங்கள் அல்லது பொருள்கள் வேண்டும்?

3. ஒரு அப்பர் பிரைமெரி பாடசாலைக்குத் தலைமை உபாத்தியாயரைவிட இரண்டு உபாத்தியாயர் இருக்கிறார்கள், பள்ளிக்கூடக்கட்டடம் L என்ற எழுத்தைப்போலிருக்கிறது. வகுப்புகளும், உபாத்திமாரும், அதற்கு இருக்கவேண்டிய எழுது மேசைகளும் (டெஸ்க்கு) இருக்கவேண்டிய இடத்தைப் படம் எழுதிக் குறிக்க.

4. (a) நல்ல கிரமசிக்ஷையின் அறிகுறிகள் என்ன?

(b) நல்ல கிரமசிக்ஷையை உண்டாக்கிக் காக்க விரும்பும் உபாத்தியாயன் எவ்விதமான கட்டளையைக் கொடாதபடி சாக்கிரதையாய் இருக்கவேண்டும்? உம்முடைய விடையைப் பூரணமாய்த் திருட்டாந்தப்படுத்த.

5. (a) பாடசாலைக்கு ஒழுங்கீனமாய்வரும் மாணாக்கனைச் சீர்படுத்தும்படி என்னென்ன உபாயங்களை அனுசரிப்பீர்?

(b) ஒரு மாணாக்கன் பாடசாலைக்கு நேரஞ்சென்று வருவதினால் உண்டாகும் அசவுக்கியமும் நஷ்டமும் இன்னின்னவென ஒரு மாணாக்கனுக்கு எடுத்துரைப்பதுபோலப் பூரணமாய்க்கூறி, அப்பேர்ப்பட்ட பிள்ளையை தண்டிப்பது முறையென்பதற்கு நியாயமுஞ் சொல்லுக.

6. ஒரு வகுப்பில் பன்னிரண்டுபிள்ளைகளிருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் $2\frac{1}{2}$ நாளும் இன்னொருவன் $3\frac{1}{2}$ நாளும் வேறொருவன் 2 நாளும், வரவில்லை. பள்ளிக்கூடம்வைத்த வாரத்தில் நாள் $5\frac{1}{2}$ இப்படிவைத்துக்கொண்டு வருகைப்பட்டியில் வந்தவர், வராதவர்களைப் பதிவுசெய்து, வந்தவர்களின் வாரச்சராசரியையும் கண்டுபிடிக்க.

---

லோயர் ஸெக்கெண்டேரி கிரேட்—போதனை.

1. (a) நாலாவது ஸ்டாண்டார்டுக்குப் பாஷை பாடம் ஆயத்தம் செய்யும்பொழுது மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய நோக்கங்கள் என்ன? அவற்றுள் ஒவ்வொன்றையும் எப்படி நிறைவேற்றுவீர் என்று பூரணமாய்க் கூறுக.

(b) பூகோளம், இலக்கணம் என்னும் வழக்கமான பாடங்களை நாலாவது ஸ்டாண்டார்டுப் பிள்ளைகள்வீட்டில் ஆயத்தம் செய்வதற்கு உதவியாக என்னென்ன விதிகளை அல்லது முறைகளைச் சொல்லிக் கொடுப்பீர்?

2. மரம் செடிகளின் இலைகளைப்பற்றிய விஷயபாடத்தை மூன்றாம்ஸ்டாண்டார்டுக்குக் கற்பிக்கும் முறையைப் பூரணமாய்விவரிக்க.



3. பூகோளபாடத்துக்கு வேண்டிய வெவ்வேறான திருட்டாந்தங்கள் இவையெனக்கூறி அவற்றை விவரிக்க.

4. உமக்கு மிகவும் நன்றாய்த்தெரிந்த ஜில்லாவைப் பற்றிச் சுருக்கமான பூகோளபாடக் குறிப்புக்களெழுதுக.

5. போதிக்குங்கேள்விகள் என்றால் என்ன? உமதுவிடையை உதாரணத்தால் திருட்டாந்தப்படுத்த.

6. (a) "தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றைச் சொல்லு." இந்தப் பிரமாணத்தை அனுசரித்து இலக்கணத்தில் ஒருவிதியை எவ்வாறு கற்பிப்பீர்?

(b) மாணாக்கர் மறுமொழியைப் பூர்ணவாக்கிய ரூபமாய்க் கொடுக்கவேண்டுமென்று நீர் உறுதியாய் நிற்பதினால் அவர்கள் அடையும் நன்மைகளென்ன?

7. (a) அங்ககணிதம் கற்பிக்கும்பொழுது மனதில் வைத்துக் கொள்ளவேண்டிய நோக்கங்களென்ன?

(b) மாதிரிக்காக அடியில்வருங் கணக்கைச் செய்துகாட்ட:—

ரூ-206-10-8 ஐ 117 ஆற் பெருக்க.

8. பிரைமெரி பாடசாலைக்கு வேண்டிய தேக அப்பியாச உபகரணங்கள் இன்னின்ன எனக்கூறி அவற்றை விவரிக்க.

லோயர் செகண்டேரிகிரேட்.

---

## TIT-BITS.

### விநோதக் கூற்றுக்கள்.

(தந்தை தநயனுக்குக் கூறிய புத்தி மதிகள்).

ஒரு மகம்மதியனுக்கு ஒரு மகனிருந்தான். அவன் தன் தந்தையைத் தனக்கேற்றபுத்திமதிகளைப் போதிக்கும்படி நாடோறுங்கேட்டு வந்தான். அவன் தந்தை மரணகாலத்தில் தன் தநயனை தன்பக்கத்திலிருத்திப் பின் வருமாறு நற்புத்திகளைப் போதிக்க லாயினன்.

என் அருமந்தமகனே! நீ தினந்தோறும் வேண்டிக்கொண்டபடி நான் இத்தருணத்தில் சில நற்புத்தி புகட்ட நினைக்கின்றேன்; அவற்றை நீ உபேட்சை பண்ணிக் கைசோரவிடாமல் அபேட்சையோடு கடைப்பிடித்து ஒழுகவேண்டும். அவையாவன :—

1. நமது வீட்டிலிருந்து உன் உத்தியோகசாலை வரையில் பந்தலமைத்துக் கொண்டு செல்லவேண்டும்,

2. அநுதினமும் அமுதம் அருந்தவேண்டும்,
3. குளிக்காமல் உண்ணலாகாது;
என்று சொல்லி வாய் மூடுமுன் உயிர் துறந்தான்.

இவற்றைக் கேட்ட குமாரன் நாம் தினந்தோறும் நாலணாவுக்குக் கூலி வேலை செய்கிறோம், இந்த நாலணாவில் வீட்டிலிருந்து உத்தியோகசாலை வரையில் எவ்வாறு பந்தலமைத்துக்கொள்வது, அமுதம் அருந்துவது; ஆனால் குளிப்பது மாத்திரம் குறையின்றிச் செய்யலாம் என்றிப்படிப் பலவாறு சிந்தித்து ஒன்றுந்தோன்றாமல் திகைத்துத் தந்தைசொல்லைத்தட்டி நடப்பதுந்தகாதே; இதன்கருத்து நமக்கொன்றும புலப்படவில்லையே என்றாலோசித்துக் கொண்டிருந்தான். பிறகு அவன் ஒரு வித்துவானை அடுத்து தன் தந்தை கூறிய புத்திமதிகளை அவரிடத்தில் தெரிவித்து அவற்றின் கருத்துக்களை விளக்கும் படி வேண்டினான். அவர் கீழ் வருமாறு பதில் சொன்னார்.

1. வீட்டிலிருந்து உத்தியோகசாலைவரையில் பந்தல் போடுவது நீ நிழலில் போகவேண்டுவதைக் குறித்துச் சொல்லியதாகும். அதாவது நீ சூரியன் புறப்படுமுன் உன்வேலைக்குப் போகவேண்டுமென்பது அர்த்தமாம்.

2. அநுதினமும் அமுதம் அருந்தவேண்டுமென்பது மிகுந்த பசியாய் இருக்கும்போது உப்பில்லாத கஞ்சியைக்குடித்தபோதிலும் அது அமுதமாகும். ஆகையால், பசியெடுத்தபோதுதான் சாப்பிட வேண்டுமென்பது அர்த்தமாம்.

3. தினந்தோறுங் குளிக்க வேண்டுமென்பது தேகஞ் சுத்தமாய் இருந்தால் யாதொரு பிணியும் நேராது என்பதாம். உடல் சுத்தத்தைக் கருதுவோர் உடைசுத்தத்தையுங் கருதுவாராதலால் "கூழானாலுங் குளித்துக்குடி, கந்தையானாலுங் கசக்கிக்கட்டு" என்னும் பழமொழியை வலியுறுத்திக் காட்டியதாகும்.

### எதிர்மறை உடன்பாடானது.

ஓர் ஊரில் ஒரு பிரபு இருந்தார் அவருக்கு உடையார் என்னும் பட்டப்பேர் உண்டு. அவர் கற்றோரை யாதரிக்கும் கருத்துடையர். பாவாணர் பாத்தொடுக்குந் தோறும் பரிசளிக்கும் பண்புடையார். அவரைக் காணச்செல்லுங் கவிவாணர் ஒவ்வொருவரும் எலுமிச்சம் பழம் கொண்டுபோவது வழக்கமாய் இருந்தது. ஒரு புலவர் அவர் சமுகம் நாடிச் சென்றபோது தம்மால் ஆனமட்டும் முயன்றும் எலுமிச்சம் பழம் கிடைப்பதரிதாயிற்று. பிறகு, நெடுநேரம் யோசித்துத் தெய்வத்திற்குந் தேங்காய் பிரியமன்றோ? என்று தேறி ஒருதேங்காயை வாங்கிக்கொண்டு பிரபுவிடஞ் சென்றார். அப்போது அப்பிரபு தன்சிநேகிதர் சிலருடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். வித்துவான் இதுவே தக்க சமயமெனத் தேர்ந்து பிரபுவைக்கண்டு தேங்காயை நீட்டினார். பிரபுவும் கவிவாணரை உபசரித்து தேங்காயைத் தன் நேசருடன் தின்ன உடைத்தார். அது அழுகலாயிருந்தது பிரபு வித்துவானைப் பார்த்து என்ன அழுகல் தேங்காய் கொண்டு வந்தீர் என, ஐயா! உலகமுழுதும் உம்மை உடையார் என்று சொல்லவே நான் இதைக்கொண்டுவந்தேன். உடையார் உடைத்து விடவே அதுவும் அழுகி விட்டதெனப் பதிலுரைத்தார். அவ்வரிய விடையைக் கேட்ட பிரபுவும் சிநேகிதரும் வயிறும் புண்படநகைத்துப் பண்டிதருக்குப் பரிசளித்தனுப்பினர்.

பத்திராதிபர்.



---

## HINTS ON DICTATION.
### சொல்வதெழுதல்.

மாணாக்கர் சொல்வதெழுதல் பாடத்தில் (Dictation Lesson) அதிக பிழையாய் எழுதுகின்றார்கள். மற்றப் பாஷைகளைப்போலத் தமிழ்ப்பாஷை எழுதுவதற்கு அவ்வளவு கஷ்டமானதன்று. அதை எழுதுவதில் கவனிக்க வேண்டிய சில குறிப்புக்களைக் கவனியாமையினாலேயே பிழைகள் நேருகின்றன. அதை நோக்கியே கீழ் குறித்துள்ள குறிப்புக்களை, யாம் எழுதி யுள்ள பாட புத்தகங்களின் கடைசியில் சேர்த்திருக்கின்றோம். அக்குறிப்புக்களை நமது ஆசிரிய நேசர்கள் அறிந்து தம் மாணாக்கருக்குப் போதிக்கும் வண்ணம் இதனில் பிரசுரிக்க லாயினோம்.

(1) ஒரு சொல்லின் முதல் எழுத்தாய் யி, யீ வருவதில்லை.

| தப்பு. | சரி. | தப்பு. | சரி. |
|---|---|---|---|
| யிவன் | இவன் | யீசன் | ஈசன் |
| யிரும்பு | இரும்பு | யீதல் | ஈதல் |
| யிது | இது | யீயம் | ஈயம் |

(2) ஒரு சொல்லின் முதல் எழுத்தாய் யெ, யே வருவதில்லை.

| தப்பு. | சரி. | தப்பு. | சரி. |
|---|---|---|---|
| யெது | எது | யேது | ஏது |
| யெருது | எருது | யேணி | ஏணி |
| யென்ன | என்ன | யேற்பது | ஏற்பது |

(3) ஒரு சொல்லின் முதலெழுத்தாய் வு, வூ, வோ, வோ வருவதில்லை.

| தப்பு. | சரி. | தப்பு. | சரி. |
|---|---|---|---|
| வுப்பு | உப்பு | வூசி | ஊசி |
| வுரி | உரி | வூர் | ஊர் |
| வுருளை | உருளை | வூமை | ஊமை |
| வோன்று | ஒன்று | வோணன் | ஓணன் |

(4) ட வுக்கு முன் (ண்) முச்சுழி ணகரமே வரும்.
கண்டான் வண்டி வண்டு மண்டை

(5) த வுக்கு முன் (ந்) தந்நகரமே வரும்.
பந்து சந்து கந்தன் வந்தான். -

(6) ஒரு சொல்லின் முதலில் நகரம் வந்தால் (ந) தந்நகரமே வரும்.
நன்றி நாய் நில் நீலம் நெல்

(7) முச்சுழி ணகரத்திற்குப் பின் (ண) அந்த ணகரமே வரும்.
கிண்ணம் தண்ணீர் எண்ணம் வண்ணான்.

(8) இருசுழி னகரத்திற்குப் பின் (ன) அந்த னகரமே வரும்.
பின்னல் என்ன இன்னம் முன்னால்

(9) இருசுழி னகரத்திற்குப் பின் (ற) வல்லின றகரமே வரும்.
ஒன்று நின்றான் பன்றி கொன்றது

(10) வல்லின றகரத்திற்குப் பின் (ற) அந்த றகரமே வரும்.
கற்றவன் ஏற்றவன் மற்றது பற்றினான்

(11) வல்லின றகரத்திற்குப் பின் க், ச், த், ப், வராது.
அதற்கு முயற்சி வருவதற்கு ஏற்பது

(12) கிறேன், கிறாய், கிறோம் முதலிய சொற்களில் வல்லின றகரமே வரும்.

| | | | |
|---|---|---|---|
| வருகிறேன் | போகிறாய் | நிற்கிறான் | பறக்கிறது |
| வருகிறோம் | போகிறீர் | நிற்கிறாள் | பறக்கின்றன |
| — | போகிறீர்கள் | நிற்கிறார் | — |
| — | — | நிற்கிறார்கள் | — |

(13) கின்றேன் முதலிய சொற்களிலும் வல்லின றகரமே வரும்.

குறிப்பு.

“ ந ” இது தந்நகரம்.
“ ர ” இது இடையின ரகரம்.
“ ற ” இது வல்லின றகரம்.
“ ண ” இது முச்சுழி ணகரம்.
“ ன ” இது இருசுழி னகரம்.

மற்ற விதிகளைச் “ சிற்றிலக்கண வினாவிடை ” புணரியலில் காண்க.

பத்திராதிபர்.

☞ இது இப்பத்திராதிபரால் எழுதப்பட்டு, துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட பாட புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.



# NEWS AND NOTES.

## சமாசாரக் கொத்து.

ஆஜர் பட்டியில் (Attendance Register) கடைசியில் நடக்கை (Conduct) என்னும் ஒரு பத்தி புதிதாய் சேர்க்கப்பட்டிருப்பதாக முன்பு கூறியிருக்கிறோம். அதில் பிரிதி மாதமும் ஒவ்வொரு பிள்ளையினுடைய நடக்கையைப் பற்றி எழுதவேண்டுமா? என்னும் ஒரு சந்தேகம் நிகழ்கின்றது.

***

இனி போதனாப் பியாசபாடசாலையில் (Normal Training School) 14-வயதுள்ளவர்களும் சேரலாம் என்று புதிய வித்தியா சட்டம் கூறுகிறது. கிராமாந்தரங்களில் கீழ்வகுப்புக்களில் வயது முதிர்ந்த பிள்ளைகளும் படிக்கிறபடியால் உபாத்தியாயராக வருவோர் 14-வயதுடைய சிறு பிராயமுள்ளவரா யிருப்பது அவ்வளவாய் நன்மையாவாதென்று சிலர் எண்ணுகின்றார்கள்.

***

வித்தியா விதியில் குறித்துள்ளபடி முதல், இரண்டு வகுப்புக்களுக்கு ஏற்படுத்தியுள்ள கணிதபாகங்களை நோக்கும்போது, மூன்றாவது வகுப்புக்கு மிகுதியாகவும், மூன்றாம் வகுப்பைவிட நான்காம் வகுப்பிற்கு அதினும் மிகுதி யாகவும் காணப்படுகின்றன.

***

சித்திரம் எழுதல் (Drawing) பாடத்தை ஆரம்பிக்கும்போது உபாத்தியாயர்கள் பெரும் பாலும் நேர்கோடுகளையும், வளையங்களையும் எழுதிக்காட்டுகின்றனர். அதனால் பிள்ளைகளுக்கு மனோத்சாகமில்லாமல் அப்பாடத்தில் வெறுப்புக்கொண்டு அதனைக் கைசோரவிடுகின்றனர். ஆகையால், முதலிலேயே நேர் கோடுகளால் அமைந்த உருக்களை எழுதிப் போதித்தால் சிறுவர்கள் ஊக்கத்தோடும் சந்தோஷத்தோடும் கற்றறிவார்கள் என்பதில் சந்தேகமில்லை. இம்முறையையே அநுசரிக்கும்படி வித்தியாதிகாரிகள் (Inspecting Officers) இக்காலத்தில் வற்புறுத்திவருகின்றார்கள்.

***

பெண் பாடசாலைகளில் இலைதைத்தல், தொன்னைதைத்தல், பூமாலைகட்டுதல் முதலிய சிலதொழில்களைக் கிண்டர்கார்டன் தொழில்களாக அமைத்துப் போதித்து வந்தால் மிக்க பிரயோசனகரமாகவிருக்கும். அன்றி மூன்றாவது நான்காவது வகுப்புக்களில் சமையற்றொழிலுக்கான முக்கியாம்சங்களை போதிப்பது உத்தமம்.

பென்சல், காகிதம், பலப்பம், பேனாக்கட்டை, பேனாமுள் (Nib) முதலிய பொருள்கள் வெகுதிருத்தமாயும், ஒழுங்காயும் சுதேசிகளால் செய்யப்பட்டு விற்பனைக்குத்தயாராய் இருக்கின்றன வென்பதை நமது உபாத்தியாயர்களுக்கு சந்தோஷத்துடன் அறிவிக்கின்றோம்.

---

## நமது கையொப்ப நேயர்களுக்கு ஓர் நயம்

---

### சத்திய விஜயம்

என்னும் ஒரு தமிழ்ப்புத்தகம் கிரவுன் 16 பக்க அளவில் 48 பக்கங்களையுடையது. "சத்தியந் தலைகாக்கும்" என்னும் பழமொழியை நிலைநிறுத்தும் சரிதமாகிய அரிச்சந்திரபுராணத்தை இனிய செந்தமிழ் வசன ரூபமாகவுடையது. படிப்போர்க்கு இன்னயம் பயக்க வல்லது. சிறுவரும், சிறுமியரும் கையேற்று அகமகிழ்ந்து வாசிக்கத்தக்கது. அரிச்சந்திர புராணத்திலுள்ள அரிய செய்யுட்கள் அனைத்தையும் உடையது. வெஸ்ட் அண்டு கம்பெனியில் அச்சிடப்பட்டது. சென்னை லிட்டெரரி பீரோ என்னும் சங்கத்தாரால் வெளியிடப் பட்டது.

இதன் விலை 4-அணா.

நல்லாசிரியன் பத்திரிகையின் கையொப்ப நேயர்கட்கு மாத்திரம்.

விலை அணா-2.

வேண்டுவோர் $2\frac{1}{2}$-அணா தபால் தலை அனுப்பித் தபால் மூலமாய் பெற்றுக்கொள்க.

பத்திராதிபர்.

## முக்கியக் குறிப்பு.

கடிதம் எழுதுவோர் தயவுசெய்து தம்முடைய நம்பரைக் குறித்து எழுதுவாராக.

---


# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 1. | 1905 ஹு நவம்பர்மீ | மாதம் 6.


## THE INDIAN KINDERGARTEN.

### செல்வச் சிறுவர் சிங்காரத் தோட்டம்.

(99-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

---

இதுவரையில், கிண்டர் கார்டன் பாடத்தை அங்கிலேயர் பாகுபாடு செய்து அமைத்திருக்கும் முறைகளையும், அவற்றின் நோக்கங்களையும் விளக்கமாய்க் கூறினதல்லாமல் அப்பாகுபாடுகள் அனைத்தும் அவர்களது நோக்கங்களைப் போலவே நமது நாட்டிலும் தொன்றுதொட்டு நடைபெற்று வந்திருக்கின்றன வென்பதையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டி வந்தோம். அதனால், நம் நாட்டு உபாத்தியாயர்கள் அனைவரும் கிண்டர்கார்டன் பாடம் மற்றைய நாடுகளைவிட நமது நாட்டில் உச்சநிலையில் இருக்கவேண்டும் என்பதை அறியாமல் இரார்கள் என்று நம்புகின்றோம் எனினும் அப்பாடம் நம் நாட்டில் நன்றாய்ப் பரவாமைக்கு நேர்ந்த காரணங்களையும் முன் பத்திரிகையில் கூறியிருக்கின்றோம்.

இனி, இக்கிண்டர்கார்டன் பாடம் போதிப்பதில் சில விஷயங்களை நம்நாட்டிற்கு ஏற்றவாறு மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இது செய்வது கூடாமையுமன்று; முறை பிறழ்வுமன்று. சில பாடங்கள் புதிதாய் ஏற்பட்டகாலத்தில் அப்பாடங்கள் ஏற்படுத்தப்பட்ட நாட்டிற்கு இயன்றவாறு அவ்வாசிரியரால் செய்யப்படும் அம்முறை சிறந்ததென மற்றைய நாட்டாருக்கும் புலப்படுமானால், அப்பாடத்தைக் கையாள்வதற்கு வேண்டிய போதனோபகரணங்கள் அந்நாட்டில் கிடைப்ப தரிதாயிருக்கலாம், அல்லது மிகப் பணச் செலவு செய்து அவ்வுபகரணங்களைத் தருவிக்க வேண்டியிருக்கலாம்

ஆயினும் அது உபாத்தியாயர்க்கேயன்றி மாணாக்கர்களுக்கும் சிரமத்தையும் பொருட்செலவையும் உண்டாக்குமாதலால் அது அப்பாடம் செவ்வையாய் நடைபெறுமைக்கே முகாந்தரமாய் முடியும். திருஷ்டாந்தமாக:—

ஆங்கிலமுறையால் கிண்டர்கார்டன் பாடம் நடத்தப்படும் நமது நாட்டில் சிலபோதனோபகரணங்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. பாய்முடைதற்றொழிலுக்கு நாமும் ஆங்கிலேயரைப்போல வர்ணக் கடிதாசிகளை உபயோகிக்கிறோம். அக்காகிதத்துண்டுகள் ஒழுங்குபெற கிடைப்பது அரிதாக இருப்பதால் உபாத்தியாயர்கள் அவற்றைத்தாமே கத்தரிக்க நேருகின்றது. அது மயிரிழைகோணலாயின், தொழில் செய்யும்போது முற்றும் விகாரவடிவமாய்க்காணப்படும். இவ்வாறே, கட்டையடுக்கல், வளையம் வைத்தல், அட்டைவைத்தல் முதலிய தொழில்களுக்கான போதனோபகரணங்கள் நமது நாட்டில் கிடைப்பது அரிதாயிருக்கின்றது. ஆகையால் இவ்வகையதொழில்களைப்பாடமாக நடத்த முயலாமல் விட்டுவிடுவதே சாலச்சிறப்பாம். அப்படிப்பட்ட ;தொழில்களையே நடத்தவேண்டுமென்றும், வேறுவகையில் நமது நாட்டிற்கான தொழில்களை நடத்தக்கூடாதென்றும் துரைத்தனத்தார் வற்புறுத்தவில்லை; மற்றும் நமது நாட்டிற்கான தொழில்களையே நடத்தும்படி நம்மை உற்சாகத்தோடு தூண்டிவருகின்றனர். இவ்வகையமாறுதல்கள் ஏற்படவேண்டுமென்பதே துரைத்தனத்தாரது முக்கிய நோக்கமாதலின் நமது நாட்டிற்கு ஏற்றதொழில்களில் சிலவற்றை இங்குக் கூறுகின்றோம்.

(1) பாய்முடைதற்றொழிலே பனை ஓலை, ஈச்சம் ஓலை முதலியவற்றால் செய்தல் நலம். ஓலைகளுக்கு வேண்டியபடி வர்ணமிட்டுச் சிறுதடுக்குக்கள், கிலிகிலிப்பை, பெட்டி, விசிறி முதலியவற்றைச் செய்வதே நமது நாட்டிற்கு ஏற்றதாகும். இவற்றிற்கெல்லாம் பழவேற்காட்டில் செய்யப்பட்டு விற்கப்படும் தடுக்கு, பெட்டி முதலியவற்றை மாதிரியாகக்கொள்ளலாம்.

(2) குச்சுவைத்தல் தொழிலுக்குத் துடைப்பக்குச்சுகளையாயினும், நன்றாய்ச் சீவித்துண்டித்த தென்னை நரம்புகளையாயினும் உபயோகிக்கலாம். நெருப்புக்குச்சுகளில் கந்தகபாகத்தைவெட்டி எறிந்து மற்றத்துண்டுகளை உபயோகிப்பதும்தகும். வெட்டும்போது ஒழுங்குபெறச் செவ்வையாய் வெட்டவேண்டும். பனைநரம்புகளால் சிறுகூடைகள் செய்யலாம். இவ்வாறே மற்றத்தொழில்களுக்கு வேண்டிய போதனோபகரணங்களையும் நமது நாட்டில் சுலபமாயும், மலிவா



யும் கிடைக்கக் கூடியனவாய் அமைத்துக் கொள்ளவேண்டும். இவையன்றிப்புதிதாக :—

(3) இலைதைத்தல், (4) தொன்னைதைத்தல் (5) பூமாலைகட்டுதல் முதலிய தொழில்களில் பலவகையான மாதிரிகளையமைத்துச் செய்விப்பது பிற்காலத்தில் மிக்க நன்மையைப் பயக்கும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

பத்திராதிபர்.

## GOLD AND GOLD MINES.

### பொன்னும், பொற்கனிகளும்.

சகலமான உலோகங்களுள்ளும் பொன்னே முதலில்கண்டுபிடிக்கப்பட்ட உலோகமெனக் காண்கிறது. இவ்வுலகத்தில் சிறிதளவாயினும் பொன்னே அகப்படாத தேசம் ஒன்றுமில்லை. பொன் அதிக பளப்பளப்பாயிருப்பதினாலே அது மிக விரும்பத்தக்கதாயிருக்கின்றது. இரும்பு எங்கும் விசேஷமாய்க் கிடைக்கின்ற உலோகமாயினும், பொன் கண்டுபிடித்தபின் நெடுநாள்வரையிலும் இரும்பின் சொரூபம் ஒருவர்க்கும் தெரியாமலேயிருந்தது. இரும்பு இயற்கையில் வேறு சில பொருள்களோடு கலந்திருப்பதால், அப்பொழுது அதைப்பார்த்தால், சாதாரணமான கல்போலவே காணப்படும். மிகவும் உக்கிரமான தீயும் உழைப்பும் இருந்தாலல்லது இரும்பை, அதனோடு கலந்திருக்கும் களிம்பு மண்ணை விட்டுப் பிரித்தெடுப்பது கூடாது. பொன்னோ அப்படிப் பட்டதன்று; அநேகமாய் அது சுபாவத்திலேயே சுத்தமாயிருக்கும். இரும்பைப்போல் அல்லாமல் பொன் அதிக துரிதத்தில் உருகும்.

பொன் மஞ்சள் நிறமானது; ஏறக்குறைய அது ஈயத்தைப்போல் அத்தனை நயமுள்ளது. பொன் எல்லாவற்றிலும் அதிகபளுவான லோகமாயினும், அதைப்போல மிகவும் மெல்லியதாய் அடித்து நீட்டத்தக்க லோகம் வேறொன்றுமில்லை. இரண்டுலக்ஷம் தகடுசேர்த்தாலும் ஒரு அங்குலம் கனத்துக்கு அதிகப்படாமல் அத்தனை மெல்லிய தகடுகளாகப் பொன்னை அடிக்கலாம். ஒரு குன்றுமணி எடையுள்ள பொன்னை 500 அடி நீளக் கம்பி யிழுக்கலாம். வெயில் காற்றுகளிலாயினும் தண்ணீரிலாயினும் இரும்பையாவது செம்பையாவதுபோட்டுவைத்தால் அவை நாளடைவிலே துருப்பிடிக்கும்; பொன் ஒருபோதும் தன் இயற்கை மாறாது. இரண்டொருவகைக் கொடிய திராவகங்களைச் சேர்த்தாலன்றிப் பொன்னை அழிக்கக் கூடாது.

பூர்வகாலந் தொடங்கிப் பொன், ஆபரணங்களாகவும், பண்டமாற்றலுக்குரிய மத்தியஸ்தமான விலைப் பொருளாகவும் உபயோகிக்கப்படுகின்றது. முதலில் பொன்னை நிறுத்தே விற்றுக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது அதை வாங்குபவர்கள் வாங்குகிறபொன் சுத்தமா அல்லவா என்பதைப் பரீக்ஷித்தறிய வேண்டியதாயிருந்தது. பின்பு சிலகாலம் கழித்துப் பொன் ஒரேநிலையான விலைமதிப்புள்ள நாணயங்களாகச் செய்யப்பட்டது. இத்தனையென்று அந்த நாணயங்களை எண்ணிக்கொள்ள வேண்டுவதொன்றேயொழிய மற்றப்படி அவற்றில் குணதோஷம் ஒன்றும் பார்க்க வேண்டுவதில்லை. இப்பொழுது வழங்குகிற பிரித்தானியருடைய பொன் நாணயங்களில் பதினொருபங்கு பொன்னும் ஒருபங்கு செம்பும் கலந்திருக்கின்றன. சுத்தமான பொன் சீக்கிரம் தேய்ந்துபோகுமாதலால், நாணயங்கள் கெட்டியாயிருக்கவேண்டுமென்றே அதில்செப்பு கலக்கப்படுகின்றது. பொன் நாணயங்களில் செம்பைக் கலப்பதனால்துரைத்தனத்தாருக்கு லாபம் ஒன்றுமில்லை. ஏனெனில், அந்த நாணயத்தில் சேர்த்திருக்கிற பொன்னின் அளவைமாத்திரம் கொண்டு அதற்கு விலை ஏற்படுத்தியிருக்கிறதேயன்றிச் செம்பையும் சேர்த்தன்று. செம்பையாவது வெள்ளியையாவது பொன்னோடு வெவ்வேறு அளவாய்க் கலந்தால், அதற்குத்தக்கபடி பொன்னின் நிறம் வேறுபடும்.

பொன் தண்ணீரைப்போலப் பத்தொன்பதுபங்கு பளுவானது. செம்போ ஒன்பதுபங்குக்கு அதிகமில்லை. அதனால், செப்புகலந்த பொன் கட்டி ஒன்று இருக்குமானால், அதனெடையையும் பரிமாணத்தையும் பார்த்து, அதில் பொன் இவ்வளவென்றும், செப்பு இவ்வளவுகலந்திருக்கிறதென்றும் நாம் கண்டறிந்துகொள்ளலாம். இதைப்பற்றிப் பூர்வகாலத்தில் சுமார் 2000 வருஷங்களுக்கு முன்னே பிரசித்தமாய் நடந்ததாகச் சொல்லுகிற கதை ஒன்றுண்டு. என்னவெனில், ஹீரோ என்ற ஒரு அரசன் சுத்தமான சுவர்ணத்தால் கிரீடமொன்று செய்வித்தான். ஆயினும் தட்டான் அதில் வெள்ளிகலந்திருக்கிறானென்று அவ்வரசனுக்கு எப்படியோ சந்தேகமுண்டாயிற்று; அதைக் கண்டுபிடித்துச் சொல்ல அவனுக்கு வழிமட்டும் யாதொன்றும் தெரியவில்லை. அதனால் அவ்வரசன் அந்த விஷயத்தை ஆர்க்கிமெடீஸ் என்னும் ஒரு கணிதசாஸ்திர பண்டிதருக்கு அறிவித்தான். அந்த வித்வான் அதைப்பற்றி ஆலோசித்துக் கொண்டேயிருக்கையில், ஒருநாள் ஸ்நானம் பண்ணும்பொழுது இந்த நுட்பத்தைக்கண்டுபிடிக்கிறவழி ஒன்று அவர் புத்தியில் தோன்றியது. அதைக் கண்டு



பிடித்த சந்தோஷத்தால் அந்த க்ஷணமே அவர் "நான் அதைக்கண்டுபிடித்தேன்! நான் அதைக் கண்டுபிடித்தேன்!" என்று கூவிக்கொண்டு அப்படியே நிர்வாணமாக எழுந்து ஓடினார் என்கிறார்கள். அவர் வீட்டுக்குப் போனவுடனே, சிறிதும் கலப்பில்லாத பொன்னென்று தனக்கு நன்றாய்த் தெரிந்த ஒரு பொன் கட்டியை எடுத்துத் தண்ணீர்க்குள் நிறுத்துப் பார்த்தார்; வெளியே நிறுக்கும்போது அது என்ன எடையிருந்ததோ, அந்த எடையிலே பத்தொன்பதில் ஒருபங்கு தண்ணீருக்குள்ளே நிறுக்கையில் குறைவுபட்டிருந்தது. அதைக் கண்டு அவர் நாம் மேலே சொல்லியபடி, சுத்தமான பொன் தண்ணீரைப்போலப் பத்தொன்பதுபங்கு பளுவானதெனக் கண்டுகொண்டு, அரசனிடம் சென்று அந்தக் கிரீடத்தையும் அப்படியே தண்ணீரில் நிறுத்துப் பார்த்தார். அதன் எடை பத்தொன்பதில் ஒருபங்குக்கு அதிகம் குறைவு பட்டது. அதனால் அந்தக் கிரீடத்தில் தட்டான் பொடி கலந்திருப்பது வாஸ்தவமே என நிச்சயித்து அந்தத்திருட்டுக்காக அவனைத் தண்டிக்க வேண்டியதுதான் என்றார்.

பொன்னை மிகவும் மெல்லிய ரேக்குகளாய் அடித்துப் படங்களின் சட்டம்முதலியவைகளுக்குப் பொன்னிறம்கொடுக்க உபயோகிப்பார்கள்; திராவகங்களைக்கொண்டு பொன்னை நீராக உருக்கி வேறு லோகங்களுக்கும் பொன்பூச்சுப் பூசுவார்கள்.

கொஞ்சமோ அதிகமோ பொன் இந்தப் பூலோகத்தின் எந்தப்புறத்திலும் அகப்படும். இத்தேசத்தில் சில ஆறுகளின் மணல்களில் சிற்சிலவாய்ப் பொன் அகப்படுகின்றது. மேற்கு மலைத்தொடர் என்னப்பட்ட ஸகியபர்வதத்தின் சாரல்களில் சில விடங்களிலே நெடுநாளாகப் பொன் வெட்டியெடுத்து வந்தார்கள். ஆயினும் அதற்கேற்ற யந்திரங்கள் இல்லாததுப்பற்றிக், கனிகள் அதிக ஆழமாகவெட்டப்படவில்லை. அதனால் மனிதர் கை உழைப்பால் வெட்டியெடுத்த பொன் உழைப்பின் கூலிக்கே கட்டிவராமற் போயிற்று. அப்படி பொன் வெட்டியெடுப்பதைப்பார்க்கப் பயிர்த்தொழில் செய்வதனால் ஒருவன் அதிகம் சம்பாதிக்கக் கூடும். அதனால் அந்த வியாபாரம் நிறுத்தப்பட்டது. இப்போது சிலநாளைக்கு முன்னே நீராவியந்திரம்முதலிய சில கருவிகளைக்கொண்டு இவ்விந்தியாவில் பொன் வெட்டியெடுத்து லாபம் சம்பாதிக்கலாமென்று கண்டறிந்து, அதற்காக லந்தன்நகரத்தில் சுமார் பதினாறு சங்கத்தார் சேர்ந்து இரண்டு கோடிரூபாய் மூலதனம் சேர்த்துக்கொண்டு, மறுபடியும் இத்தேசத்தில் பொன் வெட்டி எடுக்கவேண்டிய யந்திரங்களையும், மிகச் சமர்த்

தர்களான சுரங்கம் வெட்டுவோர்களையும் அனுப்பி யிருக்கிறார்கள். உதகமண்டலம், மைசூர் இவற்றிற்கு அருகாமையில் முன்னே சிறிதும் விலைபெறாமலிருந்த நிலங்கள் மிகவும் உயர்ந்த விலைக்கு அவர்களுக்கு விற்கப்பட்டன.

இவ்வாசியா கண்டத்தின் வடக்கிலுள்ள ஸைபீரியா தேசத்தில் அதிகமாகப் பொன் அகப்படுகின்றது. ஆசியாகண்டத்தில் மற்றெங்கும் அவ்வளவில்லை. அங்கே வருஷத்தில் மூன்றுகோடி ரூபாய் விலைமதிப்புள்ள பொன் அகப்படுகின்றது. அதனோடு ஒத்துப்பார்க்கையில் ஐரோப்பாவில் பொன் அகப்படுவது மிகவும் சொற்பமென்றே சொல்லவேண்டும். ஐரோப்பாவுக்குள் ஆஸ்திரியா தேசத்துப் பொன்கனிகள் மிகச் சிறந்தவை யென்று பெயர். அங்கே வருஷத்தில் இருபது லக்ஷம் ரூபாய் பொன்தான் அகப்படுகின்றது. ஆப்பிரிக்கா கண்டத்திலும் இப்போது பொன் சொற்பமாய்த்தா னிருக்கிறது. ஆயினும் அங்கே வரவர விருத்தியாகுமென்று எதிர்பார்த்திருக்கிறார்கள்.

1847-௵த்தில் உத்தர அமெரிக்காவின் மேலண்டைக் கரையோரத்தி லுள்ள காலிபோர்னியா தேசத்திலே சிறந்த பொன்கனி கண்டுபிடிக்கப் பட்டது; சாக்கிரமெந்தோ என்னும் ஆற்றின் அடியில் பொன் கனி இருக்கக் காணப்பட்டன. இந்தச் செய்தி சீக்கிரமே சன் பிரான்ஸிஸ்கோ என்னும் பட்டணத்திற்குத் தெரியவர, உடனே அப்பட்டணத்தாரெல்லாம் பொன்கண்டெடுக்கப் பேராவல்கொண்டு தாங்கள் செய்துவந்த வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு ஓடினார்கள். அங்கேவெகு தூரத்துக்கு வெகுதூரம் பொன் விசேஷமாய்ப் பரந்திருப்பதாகச் சீக்கிரமே தெரியவரவே, அமெரிக்காவிலுள்ள பல தேசங்களி லிருந்தும் அநேகர் அவ்விடத்துக்குப் போனார்கள். கடைசியில் அச்செய்திகேட்டு ஐரோப்பியரும் அநேகர் அவ்விடத்திற்குத் தேடிச் சென்றார்கள். அவ்விடத்தில் வருஷத்துக்கு 13,00,00,000 ரூபாய்க்குக் குறையாமல் பல வருஷங்கள் வரையில் பொன் அகப்பட்டுக் கொண்டுவந்தது. ஆயினும் பின்பு சில வருஷங்களில் அது வரவரக் குறைந்து அந்தத்தொகையில் பாதிக்கு வந்துவிட்டது.

1851-௵த்தில் ஆஸ்திரேலியா தேசத்தில் சிறந்த பொன்கனிகள் இருக்கக்கண்டு உலகத்தாரெல்லாம் அதனிடத்தில் அதிக ஆவல் கொண்டார்கள். அங்கே பலதேசங்களிலும் பலவிதமாய்ப் பொன்



அகப்பட்டதாயினும், அங்குள்ள விக்டோரியா தேசத்திலேதான் விசேஷமாய்க் கண்டெடுக்கப்பட்டது.

பொன் சாதாரணமாய்ச் சிறிது சிறிதாகவே அகப்படும். ஆயினும் சிலவிடங்களில் 100 சேர் எடையும் ஒரு முழம் நீளமும் உள்ள கட்டிகளாகவும் அகப்படுகின்றது. அந்தக் கட்டிகள் ஒவ்வொன்றின் விலையே லக்ஷம் ரூபாயாகும்.

பொன் எடுக்கிற வழி இரண்டு உண்டு. தரைமேல் உள்ள மண்களையெடுத்து அரித்துத் தேடியெடுப்பதுமுண்டு; கனிகளுக்குள் வெட்டியெடுப்பதுமுண்டு.

ஆதியில் தரைமேலிருந்த மண்களையே சேர்த்து அரித்துப் பொன் கண்டுபிடித்துவந்தார்கள். அதெப்படியெனில், ஒரு பெரிய சாலில் மண்ணைவாரிப் போட்டு அதன்மேல் நிரம்பத் தண்ணீர் வார்த்து அந்த மண்ணை அதில் நன்றாய்க் கரைத்து மேலோடு நீரைக் கீழே ஊற்றிவிட்டால், அதிக பளுவான பொன்துண்டுகள் அதன் அடியில் தங்கிப்போம். இப்படியே ஒருவன் ஒரு சால் மண்ணில் 12,000 ரூபாய் விலையுள்ள பொன் கண்டெடுத்தான். அதுகண்டு அநேகர் தாமும் அவ்வண்ணமே கண்டெடுக்கலாமென்று முயன்றார்கள். பூமியில் பலவிடங்களிலும் பொன் மண்களைக் கும்பல் கும்பலாய்ச் சேர்த்துக் குவிக்கப் புகுந்தார்கள்.

பூர்வகாலத்தில் அகப்பட்ட பொன் பூமிகளில் இப்பொழுது மேல்மண்ணில் அவ்வளவாய்ப் பலன் கொடுக்க வில்லை. கனிகளில் வெகு ஆழத்திற்குக் கீழேதான் சிறந்தபொன் அகப்படுகின்றது. அங்கிருந்து வெட்டியெடுத்த பொன்கலந்த கல்களை மேலே கொண்டுவந்து நன்றாய்ப் பொடியாக்கித் தண்ணீரை வார்த்து அரித்தால், கற்களெல்லாம் அலசுண்டுப்போகப் பொன் அடியிலே தங்கிப்போம். 1878-௵த்தில் விக்டோரியா நாட்டில் 36,636 பேர் பொன்கனி வெட்டுகிற வேலையில் அமர்ந்தார்கள். அந்த வருஷத்தில் 1290 சதுரமைல் பொன்பூமி வெட்டி யெடுக்கப் பட்டது. சிலகனிகள் 2000 அடி ஆழத்தின் கீழேயும் இருந்தன. அப்பொழுது அதற்காக மிக்க வலியுள்ள 10;6 நீராவி யந்திரங்கள் உபயோகிக்கப் பட்டன; அகப்பட்ட பொன்னும் சுமார் நான்கு கோடி ரூபாய் விலை தாளும்.

மற்ற லோகங்களைப் பார்க்கப் பொன்னுக்கு விலை மிகவும் அதிகமாய் இருப்பதெல்லாம் அதன் அருமையாலும் அழகினாலுமே. பொன் செம்பைப்போல் அத்தனை ஏராளமா யிருக்குமாயின், செம்

பைப்பார்க்க அதற்கு அதிக விலையிராது. பொன்னின் பெருமைக்கு அதன் அழகும் ஒரு காரணந்தான். மிகவும் அருமையாயினும் அழகும் உபயோகமும் இல்லாமையால் உலகில் ஒருவரும் வேண்டுவாரில்லாத பொருள் எத்தனையோ இருக்கின்றனவல்லவா? ஐ. வி.

---

## THOSE WHO REPOSE IN GOD WILL NOT BE FORSAKEN.

## கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

(84-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

---

"மகாசத்தியவான், மிகவும் யோக்கியன் என்று நாம் எண்ணிய தனதத்தன் அடடா! மோசம் பண்ணினதன்றிப் பொய்ச்சத்தியமும் செய்யத்துணிந்தானே" என்று மனம் கிடுகிடுத்துத் திடுக்கிட்டுத் தருமபாலன் வீடுபோய்ச் சேர்ந்தான். இந்த வழக்கு இவ்விதமாக முடிந்ததைக் கண்டு சிலர் "கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளையில் தெரியாதா? எப்படியும் பலநாள் திருடன் ஒருநாள் அகப்பட்டுக் கொள்வான். இவனுக்கு யோககாலம் இன்னும் முடிவாகவில்லை" என்று சிலர் எண்ணினர். சிலர் "தனதத்தன் நெடுநாளாகப் புரட்டு செய்து வருகிறான். மகா சுசீலனாகிய தருமபாலன் இவன் மேல் வழக்குத் தொடுத்ததே இதற்குப் பிரத்தியக்ஷப் பிரமாணம். இந்த வழக்கிலே பொய்சத்தியம் பண்ணித் தப்பினான்; கிடக்கட்டும், எங்கே போகிறான்" என்று சொல்லிக் கொண்டனர்.

கொத்தவால்களும் ஊர்க்காவலாளிகளும் சாவகாரியின் திருட்டுப் புரட்டை எவ்விதத்திலாயினும் கண்டு பிடிக்கவேண்டுமென்று கங்கணங் கட்டிக்கொண்டனர். இத்தலியர் மகோபாயமெல்லாம் அறிந்தவர்கள். அவர்களுள் கொத்தவால்களும் ஊர்க்காவலாளிகளும் திருட்டுப்புரட்டுகளைக் கண்டுபிடிப்பதில் வெகுசாமார்த்தியமான தந்திரோபாய முடையவர்களானமையால், அவர்களில் சிலர் வேறு தேசத்து வர்த்தகர்போல மாறுவேடம் பூண்டு தனதத்தனிடஞ் சென்றனர். எளிதில் கண்டுபிடிக்க முடியாத குறிப்பிட்ட ரூபாய்களையும் வராகன்களையும் ஒரு பையில் கட்டித் தனதத்தன்கையிற் கொடுத்து "ஐயா நாங்கள் வடதேசவர்த்தகர்கள். இன்னும் ஐங்காததூரத்தில் ஒரு ஊரில் காரியமிருக்கிறது. அதைப் பார்த்துக் கொண்டு மீண்டுவருவோம். நாலைந்து நாள்வரையில் இந்தப் பணமுடிப்பைப் பத்திரமாக வைக்கத்தகுந்த இடம் தெரியாமல் அலையும் போது உங்கள் நினைவு வந்தது. இதைப்பத்திரமாய் வைத்திருந்து



நாங்கள் கேட்கும்போது கொடுப்பீர்களென்று பிரார்த்திக்கிறோம்" என்றுவிநயமாகப் பேசினர். அவனுடையசம்மதியின்மேல்முடிப்பை அவனிடம் வைத்துப்போய், அவர்கள் சிலநாள் கழித்துப் பழைய வேடத்துடனே வந்து முடிப்பை மீட்டுக்கொண்டு போய்த் தங்கள் அதிகாரிகளின் எதிரிலே காவலாளிகள் பணத்தைப் பரீக்ஷித்தனர். முடிப்பில் முக்காற்பங்கு கள்ளக்காசு கலந்திருப்பதைக் கண்டறிந்தனர்; கண்ணால் கண்டதற்கு ஏன் அகப்பைக்குறி? தருமபாலன் தொடுத்த வழக்கில் சாவகாரி செய்தது பொய் சத்தியம் என்பதற்கு வேறுசாட்சியம் வேண்டுமா?

அடுத்த நாளில் சாவகாரியைக் கையும் பிடியுமாய்க் கொண்டு போய்க் காவலில் வைத்துக் கொத்தவால்கள் உடனே அவன் வீட்டைப் பரிசோதிக்கலாயினர். காசு அடிப்பதற்கு இன்றியமையாத கருவிகளெல்லாம் பெட்டிகளில் அடியறைகளின் உள்ளறைகளுள் வைத்திருந்தன. கள்ளக்காசுகளில் கலப்பதற்குரிய செம்பு முதலானவைகளும் கூடவே வைத்திருந்தன. தனதத்தனுடைய மாளிகையில் அங்கங்கே வெவ்வேறு பெட்டிகளில் வெவ்வேறு அறைகளில் கள்ளக்காசுக்கள் வைத்திருந்தன. இதைக்கேட்ட நகரினர் அனைவரும் கையுங் கட்டாரியுமாகப் பேராரவாரஞ் செய்து புறப்பட்டனர். 'கெட்டால் பெரிய வெட்டரிவாள்' என்பது உலகியல். கெட்டார்க்கு உற்றார் கிளையிலும் இல்லை என்பது பொய்யாகுமா? எல்லாரும் "கண்டீர்களா! இந்தப்பெரிய மனிதன் இவ்விதமாகப் புரட்டு செய்துகொண்டு இத்தனைகாலமாக அரசமாளிகைகட்டி ஆடம்பரத்துடன் வாழ்ந்தானே. இந்திரஜாலம் மகேந்திரஜாலமெல்லாம் இவன் ஜாலத்துக்கு நிகராகுமா? எல்லாருடைய கண்ணிலும் வாயிலும் மண்ணைத் தெள்ளிப்போட்டு என்னகாரியம் செய்துவந்தான்! அடடா! இந்த நகரத்தின் பஞ்சாயத்தில் ஒருவனாகி இந்த யோக்கியன் நியாய பரிபாலனமும் செய்து வந்தானே! நியாயம் என்பதென்ன, ஏழைகளுக்கு மாத்திரமேயோ? செல்வர்களுக்கும் குற்றஞ்செய்தால் நியாய விசாரணையில்லையா? இப்படிப்பட்ட சண்டாளனை என்னசெய்தால் தீரும்?" என்று முழங்கினார்கள். ஊரெல்லாம் ஒன்றுகூடிச் செய்யும் திமிலகுமிலத்தைப் பார்த்து நீதிபதிகள் தனதத்தனுடைய குற்றவிசாரணையை விரைந்து நடத்தலானார்கள். குற்றவாளியை நியாயஸ்தலத்தில் நிறுத்தி அவனுடைய குற்றத்தை எடுத்துரைத்துக் கொத்தவால்கள் அதற்குண்டான சான்றுகளையெல்லாம் எடுத்துக் காட்டினர். சான்றுகளெல்லாம் அவ

னுக்கு விரோதமாகவே இருந்தமையால், சாவகாரி எதிர்த்தட்டாக எடுத்துரைக்காட்டலான சமாதானம் ஒன்றுமே இன்றி வாய்திறக்காமல் மௌனமாக இருந்தான். திங்கட்கிழமை விசாரணை தொடக்கமாகி அன்றே தீர்மானம் சொல்லப்பட்டது. அடுத்த வெள்ளிக்கிழமை காலையில் எட்டுமணிக்குச் சந்தைவெளியின் எதிரிலே தூக்கிட்டுக்கொல்வதென்று நீதிபதிகள் யாவரும் ஏககண்டமாய் விதித்தார்கள். அவன் தேவத்தியானம் பண்ணி ஆத்மரக்ஷணைபெறும் பொருட்டாக இடையில் நான்குநாள் இருக்கட்டும் என்றுகூறினர்.

இத்தனைநாள் ஈடும் எடுப்புமாக இருந்தவன் இடுப்பொடிந்தவனாயினான். அவனுடைய பேரென்ன, புகழென்ன, செல்வப்பெருக்கென்ன? கௌரவமிக்க பிரபுக்கள் எத்தனைபேர் அவனுடைய ஏகபுத்திரியைக் கொள்ள விரும்பி இருந்தனர். ஊரிலுள்ள பெண்டிரெல்லாம் கண்டு நாணத்தக்க ஒழுக்கமுடையவள் அல்லளோ அவனுடைய இல்லக்கிழத்தி? அவன் மாளிகையிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்களும் சித்திரப்படங்களும் எந்த அரசன் வீட்டில் கிடைக்கும்? பாவம்! அவன் பெண்டாட்டியையும் பெண்ணையும் ஒரு சிற்றறையில் இருக்கவிட்டு மற்ற அறைகளையெல்லாம் பூட்டிட்டுக் காவலாளிகள் சாவகாரியின் சொத்துக்களையெல்லாவற்றையும் மறியல் செய்தனர். தனதத்தன் எங்குற்றான்? சிறைச்சாலையில் கைகால்களை நீட்டிப்படுக்கமுடியாமல் நான்கடிச் சதுரமான ஒரு இடுக்கறையில் வைத்துப் பூட்டப்பட்டிருந்தான். திக்கற்றவர்க்குத் தெய்வமே துணையல்லவா, செல்வமுள்ள காலத்தில் கடவுளைக் கனவிலுங் கருதாதவர்கள் அல்லலடைந்த காலத்தில் அகோராத்திரம் பகவானைநினைந்து நினைந்து பரிதபிப்பரன்றோ? ஆக்கத்துக்கு ஊக்கம் துணைக்காரணமாயினும் தெய்வாநுகூலமாகிய முதற்காரணமில்லாமல் ஊக்கம் ஒன்றுமே ஒருவனை ஈடேற்றுவிக்குமா என்கிற எண்ணம் அவனுடைய உள்ளத்திலே உதித்தது. சாகிறகாலத்திலே சங்கரா சங்கரா என்பார்போல அந்தியகாலத்தில் அந்தச் சாவகாரியும் ஆராமைமேற்கொண்டு பகவத்தியானம் பண்ணினான்.

தனதத்தனிடத்தில் மிகவும் நம்பிக்கையுள்ள இலேககன் ஒருவன் இருந்தான். அவன் தன் தலைவனைத் தூக்கிடுவதாக நியமித்திருந்த வெள்ளிக்கிழமைக்கு முன்னாள் எஜமாட்டியிடத்தில் ஏதோ ஒரு செய்தி சொல்லு நிமித்தமாக மெத்தைப்படிக்கட்டில் ஏறிச் செல்பவன் காலிடறித் தலைகீழாகச்சாய்ந்து உருண்டு படிக்கட்டின் கீழேவிழுந்து கழுத்து முறிதலாகி, உடனே மரணமடைந்தான்.



இந்தக் கணக்கனுடைய மனைவி, நெடுநாளாகத் தூர்ப்பலையாக இருந்தவள், இந்தச் செய்தியைக் கேட்டமாத்திரத்தில், புண்ணின்மேல் பூச்சிபுங் கடித்தவாறாக, நிலைகுலைபவளாயினாள். தானும் சீக்கிரத்தில் மரணமடைவது நிச்சயமென்று கண்டு தனது நெஞ்சில் திக்குமுக்கலாடியிருந்த ஒரு செய்தியைத் தனதத்தனுடைய மனைவியிடத்தில் அவசியம் சொல்லவேண்டுமென்று கொண்டு, அவளை அழைத்துவரும்படி அண்டையில் இருந்தவர்களை வேண்டினாள். வெள்ளிக்கிழமை விடியற்காலத்திலே வந்த தனதத்தன் மனைவியைக்கண்டு, அருகிலிருந்தவர்களை வெளியில் போகும்படி செய்து, அவள் "அம்மா நான் பேசிமுடிகிறவரையில் குறுக்கிட்டுப் பேசவேண்டாம். உம்முடைய புருஷன் நிரபராதி, என் புருஷனே குற்றவாளி, என் புருஷன் செய்திருக்கிற பாதகங்களுடன், ஒரு பாவமும் அறியாத உமது புருஷனது கொலைப்பாதகமும் சேர்ந்து, அவனுடைய ஆத்துமா அதோகதியடையாதபடி, தாங்கள் விரைந்துசென்று இது செய்தியை நியாயத்தலைவரிடம் தெரிவியுங்கள் உம்முடைய புருஷன்—" என்று சொல்லி அப்புறம் பேசமுடியாமல் கண்ணை மூடிக்கொண்டாள். கைகால்களெல்லாம் சில்லிட்டன. (இன்னும்வரும்.)

தி. செல்வகேசவராய முதலியார், M. A.

---

# EXAMINATION QUESTIONS.

## பரிட்சை வினாக்கள்.

### டிபார்ட்மெண்ட் ஆவ் எட்யுகேஷன். (29-4-1092.)

லோயர் ஸெக்கெண்டரி—பாடசாலை ஏற்பாடும் கிரம சிட்சையும்.

1. (a) ஒரு பிரைமெரி பாடசாலையில் ஒவ்வொரு மாணாக்கனுக்கும் குறைந்தபட்சம் எத்தனை சதுர அடியும் எத்தனை கன அடியும் விடவேண்டும்?

(b) வெளிச்சம் ஏன் இடப்புறத்திலிருந்து வரவேண்டும்? பெஞ்சு (ஆசனம்) களுக்கு ஏன் முதுகு இருக்கவேண்டும்?

(c) ஒரு அப்பர் பிரைமெரி பாடசாலையின் தலைமை உபாத்தியாயரிடம் குறைந்த பட்சம் இருக்கவேண்டிய சாதாரண வித்தியா சம்பந்தமான திறமைகளும், உத்தியோக சம்பந்தமான திறமைகளும் என்ன?

2. (a) பட்டியிலுள்ளவர்களின் சராசரி எண், வந்தவர்களின் தின சராசரி எண், இவற்றை யெப்படிக் கண்டுபிடிப்பீர்? மாதக் கடைசியில் பட்டியிலுள்ளவர்களின் எண்ணைப்பார்க்கிலும் மேலே குறித்த எண்கள் எப்பொழுது அதிகமாயிருக்கும்?

(b) வருகைப்பட்டியிலும் (அட்டெண்டன்ஸ்), சேர்க்கைப்பட்டியிலும் (அட்மிஷன்) பின் வருவனவற்றை எப்படிக் குறிப்பீர்? வியாதி, முன்னேரம் வராமல் பின்னேரம் வந்தது, முன்னேரம் வந்து பின்னேரம் உத்தரவுபெற்று நின்றுவிடல், ஒரு மாதத்தில் பள்ளிக்கூடம் வைத்த முதல்நாளில் ஒரு பிள்ளையைச் சேர்த்தது, வேறெந்த நாளிலாவது ஒரு பிள்ளையைச்சேர்த்தது, விட்டுவிட்ட பிள்ளையை மறுபடியும் சேர்த்தது.

3. (a) ஒரு பிரைவேட் திண்ணைப் பள்ளிக்கூடம் மாத்திரம் உளதாயிருந்த கிராமத்தில் ஒரு பிரைமெரி பாடசாலை புதிதாய் ஏற்படுத்த வேண்டுமானால், பிள்ளைகளை எவ்வாறு வகுப்பு வகுப்பாய்ப் பிரிப்பீர்?

(b) ஒரு அப்பர் பிரைமெரி பாடசாலையில் பிள்ளைகள் 50 பேர், உபாத்திமார் மூன்றுபேர், கற்பிக்கும் பாடங்கள் கட்டாயமான பாடங்களும், இரண்டு இஷ்டமான பாடங்களும், இந்த பாடசாலைக்கு ஒரு வாரத்துக்குக் கால நிர்ணய சட்டம் எழுதி, ஒவ்வொரு பாடத்துக்கும் விட்ட நேரத்தையுஞ் சுருக்கமாய்க் காட்ட.

4. (a) கிரம சிட்சை யென்றாலென்ன? கிராம பிரைமெரி பாடசாலை உபாத்திமார் கிரம சிட்சைக்காக முக்கியமாய் உபயோகிக்கும்வழி வகைகளென்ன?

(b) உபாத்திமாரிடத்தில் அடியில் குறித்த குற்றங்குறைகளிருப்பதினால் விளையுந் தீமைகளென்ன?

(1) மிகவும் அடிக்கடி பிரம்பைக் கையாடல்.

(2) இட்ட கட்டளையை இடைவிடாது திரும்பத்திருப்ப இடுதல்.

(3) முற்கோபமும், பொறுமை யில்லாமையும்.

(4) நியாயமற்ற தண்டனை விதித்தல்-உ-ம். தப்பாய் எழுத்துக்கூட்டின சொல்லைத் திருத்தமாய்ப் பல நூறுதரம் எழுதச் சொல்லுதல் முதலியன.

(5) ஓயாமற் கடிந்துகொள்ளுதல்.

5. பிள்ளைகளிடம் தோன்றும் பின்வருங் குற்றங்குறைகளைப் பார்த்து என்னசெய்வீர்?

(a) வேளைத் திட்டத்துக்கு வாராமை.

(b) முரட்டுத்தனம்.

(c) கீழ்ப்படியாமை.



6. (a) தண்டனை வெகுமதிகளின் நோக்கமென்ன?

(b) என்னென்ன குற்றங்களுக்குச் சரீர தண்டனைசெய்யலாம்? அவ்வித தண்டனைகளுக்காக ஒரு ரிஜிஸ்டர் வைப்பது ஏன் அவசியம்.

லோயர் ஸெக்கெண்டெரி—போதனை.

1. இன்பெண்டு வகுப்புக்கு (1) வாசிப்பு, (2) கையெழுத்து இவற்றுள் ஒவ்வொன்றையும் நீர் கற்பிக்கும் முறையை விரிவாய் விவரிக்க; உமது முறை ஏற்றதென்றதற்கு நியாயமுங் கூறுக.

2. என்னென்ன நோக்கங்களை மனதில் வைத்துக்கொண்டு வீட்டப்பியாசத்துக்கு வேலை கொடுப்பீர்? வீட்டப்பியாசம் சரியாய்ச் செய்து கொண்டுவரும்படி செய்ய நீர் என்ன உபாயந் தேடுவீர்?

3. நாலாவது ஸ்டாண்டர்ட்டுப் பிள்ளைகள் தங்கள் பூகோள பாடத்தை ஆபத்தப்படுத்துவதற்கு உதவியாக என்னென்ன விதிகள் சொல்லிக்கொடுப்பீர்?

4. (a) மாணாக்கர் அங்ககணிதத்தில் கணக்கைப் பிழையில்லாமலும் வேகமாயும்செய்யும்படி என்னென்ன உபாயங்களைச் செய்வீர் என விரிவாய்க் கூறுக.

(b) ரூ 206-10-8 ஐ 104 ஆல் பெருக்க. இதை மாதிரியாகச் செய்துகாட்ட.

5. (a) சித்திரப்படம் (ட்ராயிங்) வரையக் கற்பிப்பதினால் மாணாக்கர் என்னென்ன நன்மைகள் அடைகிறார்கள்?

(b) மூன்றாம் ஸ்டாண்டர்ட்டுக்குப் பிள்ளைகளுக்குச் சித்திரபடம் வரையக்கற்பிக்கும் முதற்பாடத்தின் குறிப்பைச் சுருக்கமாய் எழுதுக.

6. முதலாம் ஸ்டாண்டர்ட்டுக்கு அங்க கணிதமும், மூன்றாம் ஸ்டாண்டர்ட்டுக்குப் பூகோளமும் கற்பிப்பதற்கு வேண்டிய உபகரணங்கள் இன்னின்னவெனக் கூறி அவற்றுள் ஒவ்வொன்றின் உபயோக மின்னதென்றுஞ் சுருக்கமாய் விவரிக்க.

7. நல்ல போதனைக் கேள்விகளின் இலட்சணங்களென்ன? எழுவாய் பயனிலையைப்பற்றிய கேள்வித்தொடரினால் உமது விடையைத் திருட்டாந்தப் படுத்துக.

8. நான்காம் ஸ்டாண்டர்ட்டுக்குக் கற்பிக்குஞ் செய்யுட் பாடக் குறிப்புச் சுருக்கமாய் எழுதி, அந்த ஸ்டாண்டர்ட்டுக்கு விதித்த செய்யுளில் இரண்டு மூன்றடிகளெடுத்து நீர் கற்பிக்கும் முறையைத் திருட்டாந்தப்படுத்திக் காட்டுக.

# FEMALE EDUCATION.

## பெண்கல்வி.

---

### கல்விகல்லாத தாய்மார்களால் பிள்ளைகளுக்கு உண்டாகும் கெடுதி.

நமது நாட்டுச்சிறுவர் க்ஷேமமடைய வேண்டுமாயின் அது பெண்கல்வியைப் பொறுத்ததென்னும் விஷயத்தை நம் நல்லாசிரியன் பத்திரிகை வாயிலாகச் சிறிதாராய்வோம்.

குழந்தைகள் (ஆணாயினும் பெண்ணாயினும்) தாயகட்டிற் கருவேறி ஐயிரண்டு திங்கள் கர்ப்பவாசம் செய்கையில் எவ்விதம் கர்ப்பச்சூட்டின் சம்பந்தத்தால் அத்தாய்க்குரிய வியாதியைத் தாம் அடைகின்றனவோ அவ்வாற்றானே அத்தாயின் கல்வியில்லாக் காட்டெருமைத் தன்மையையும் பிண்டத்திலேயே ஏற்றுக்கொள்கின்றன. தகப்பன் ஞானவானாயின் அத்தகையோன் வீரியம் வீண் போகாதாயினும் கர்ப்பவாச சஹவாசதோஷம் சற்றேனும் பற்றாதொழியாதென்பது துணிபு.

இவ்விதம் தினக்கிரமத்தில் கர்ப்பத்தில் விருத்தியடைந்த பிண்டம் சிசுவாகப்பிறந்த பிறகும் அதன் கிரஹசாரபலத்தால் கல்வியறிவில்லாத் தாயின் பாலையே உண்டு வளரவேண்டியிருப்பதால் தினே தினே அவிவேக சுபாவிகத்தையடையத் தொடங்குகிறது. எப்படியெனின்? அஞ்ஞானரச பூரித க்ஷீரத்தைப் பல்காலும் ஸ்வீகரிப்பதாலும், சரஸ்வதி விலாசம் சற்றேனும் பற்றியிராத ஜடத்துக் கொப்பான தன் தாயின் உகப்பில் முகத்தை நோக்கிக் கொஞ்சிக்குலாவி அவளது வாய்மொழிகளைச் செவிமடுக்கும் வழக்கத்தாலுமென்க. இவ்வகைத் தாய்மாரிடம் குழந்தைகள் வார்த்தைசொல்லக் கற்குந்தோறும், அவர்களின் உச்சிஷ்டத்தையருந்த நேரிடுந்தோறும், அவர்கள் பிறரிடம் அநாகரீகமாக வாதாடி வாய்க்குவழங்கா வார்த்தைகளைப் புகல்வதைக்கேட்குந்தோறும், ஏனைய நல்வழிகளல்லாப் பல்வகையினாலும் அக்குழவிகள் துரப்பியாசங்களைப் பயிலத்தொடங்குகின்றன. சில பெண்மணிகள் கல்விகல்லாதாரேனும் கல்வியறிவுடைய தம் தந்தைமார், சகோதரர்கள், பர்த்தாக்கள் முதலியோரின் சேர்க்கைவாசனையால் நல்லொழுக்கங்களைப் பற்றியொழுகுதலைக் கண்டு களித்திருக்கிறோம். யாம் இங்கு அத்தன்மையோரிடம் குறைகூற வந்தோமில்லை. ஆயினும் அன்னோரும் கல்விகேள்விகளில் பயில்வாராயின் பொன்மலர் நாற்றமுடைத்தாம். இவ்விதக் குறைபாடுகள் கல்வியை அசட்டைசெய்



யும் நாட்டுப்புறத்துத் தாய்மார்களிடம் பெரும்பாலும் பிரத்தியட்சத்தில் விளங்கக் கண்டிருக்கிறோம்.

சாதாரணமாய்க் குழந்தைகள் ஐந்து வயதளவும் தாயைவிட்டுப் பிரியாத்தன்மையுடையனவாதலால் இப்பெருங்காலவளவில் அப்பிள்ளைகள் தாய்க்குரிய துர்வழக்கங்களை எம்மட்டில் தம்மட்டில் ஒப்பந்தம் செய்துகொள்ளக்கூடுமென்பதனை யூகித்துப்பார்த்துணரலாகும். 'தாயைப்போல்பிள்ளை நூலைப்போல்சேலை' என்றபடி சஹவாசதோஷம் இத்தன்மையாகும். தகப்பன் ஏதோ தன் குடும்ப ரக்ஷணார்த்தமாகத் தேடவேண்டிய ஊதியத்தின் பொருட்டு பகற்காலமெல்லாம் காடோ, செடியோ; கழனியோ, கொல்லையோ; கைத்தொழிலோ, மெய்த்தொழிலோ; உத்யோகமோ; சத்யோகமோ வீட்டைவிட்டுப் போகவேண்டி இருத்தலால் குழந்தைகள் இவனிடம் பழகவேண்டியதற்கிடமில்லை.

இவ்வாறு பழகிய சிறுவர் அல்லது சிறுமிகள் தமது ஐந்தாமாண்டில் பள்ளிக் கனுப்பப்பட்டபோது உபாத்தியாயர் கல்விச்சாலையில் உணர்த்தும் வித்தியாப்பியாச போதனைமுறைகளைச் செவ்வனே தொடர்ந்துணரும் அறிவின்மையால் அப்படிக் கல்லாத நல்வழியிற் கல்விகற்ற தாய்மாரிடம் பழகிய பிள்ளைகளுக்குச் சர்வவிதத்திலும் கீழ்ப்பட்டிருத்தலை அனுபவத்திற் கண்டிருக்கிறோமாகையால் எவ்வாற்றானும் பெண்பிள்ளைகளும் கல்விபயிற்றற்பாலரே யென்பது பிரத்தியட்சமாகிறது.

கல்விகல்லா மடந்தையின் கொடுந்தொழிலை அடியில் வரும் பாடல்களால் திருட்டாந்தப் படுத்துவோமாக.

### விருத்தங்கள்.

கல்வியைக் கல்லாப் பொல்லாக் காரிகை யொருத்தி செய்த
நல்வகை யல்லாச் செய்கை நவில்வனா னதனைக் கேண்மின்
பல்வகை யிழிவாஞ் செய்கை பற்றிடா தகற்றி யேலோர்
செல்வழி நின்ற பெற்ற சிறுவனை யன்னை நோக்கி (1)

என்னடா பயலே நீதா னித்தனை நாளாய் வாசித்
தின்னமு மொருவே லைக்கிங் கிணங்கிய பாட்டைக் காணோம்
உன்னது தகப்ப னிந்த வுதவிடாக் கல்வி கற்று
தன்னைநொந் தென்னை நீத்துத் தவித்துயிர் விட்டா னந்தோ. (2)

நீயுமே யதுபோல் செய்ய நிச்சயித் திருந்து நாளு
பாயமாய்க் கழித் திடற்கோ பார்க்கிருப் பள்ளிக் கூடம்
போயது போதும் நாளை புத்தகம் கட்டி வைத்துக்
கோயிலில் வேலை செய்து கொண்டுவா கூலி யென்றாள். (3)

அன்னவ னிதனைக் கேட்டெ னன்னையே சிறிது காலம்
என்னைநீ படிக்க வைத்தா லெய்திய கஷ்ட மில்லை
இன்னில மதிக்க நாமு மிருக்கலா மென்று ரைக்க
பின்னுமன் னவளிவ் வாறு பிதற்றுவா ளாயி னாளே. (4)

படித்தலாற் கருவ மிஞ்சும் பற்றிய கருவத் தாலே
எடுத்தொரு வேலை செய்யா ரெதிர்த்தெதிர்த் துரைத்து நிற்பார்
பிடித்ததம் பிடிவா தத்தாற் பேசுவார் பிள்ளை பெற்றும்
கெடுத்திடும் படிப்பில் விட்டுக் கெட்டவர் பலபே ரென்றாள். (5)

கோபமா யன்னை சொல்லக் குறைக்குறை யாமற் பிள்ளை
சோபமாய்ச் சிறிதப் பாலே தொலைந்திடத் தாயந் நேரம்
தாபமாய்ப் புத்த கங்க டம்மையெல் லாங்கி ழித்துப்
பாபமா மென்றெண் ணாமற் படுத்திய பாட்டு ரைப்பாம். (6)

பூமிசாத் திரமெடுத்தாள் பூமியிற் கிழித்தெ றிந்தாள்
ஆமெனு வானசாஸ்த்ர மதனைவா னத்தெறிந் தாள்
தாமதி யாமலக்னி சாத்திர மனலி லிட்டாள்
போமெனு மற்றநூ லும் பொடிப்பொடி யாக்கி னாளே. (7)

கூட்டலுங் கழித்த லோடு குறித்திடும் பெருக்கல் மற்றுங்
நாட்டிடும் வகுத்த லாதி நவிலுநற் கணித நூலை
ஏட்டையெல் லாங்கி ழித்தா ளெறிந்திட்டாள் துடைப்பத் தாலே
கூட்டினாள் கழித்தாள் பெருக்கிக் குப்பைக்கே வகுத்திட் டாளே.(8)

வேற்றுமை விகார மாதி விகற்பமாண் பெண்பா லெல்லாம்
தேற்றுநா லிலக்க ணத்தைத் திகழ்நெடில் குறுக லாக்கி
ஆற்றிய பெண்பா லாண்பா லானதை மண்பா லாக்கி
மாற்றினா ளொருமை பன்மை மருவிய விகாரந் தோன்ற (9)

கற்றவ ளானு லிந்த காரியம் புரிய நெஞ்ச
முற்றவ ளாவ ளோவிம் முறைமைநற் கல்வி கல்லா
மற்றவ ளிடத்திற் றேன்றி மைந்தனைப் பகைத்தா ளன்றோ
சற்றிதை யுணர்ந்தார் கல்வி தன்புகழ் தோன்று மாதோ. (10)

சி. வே. சண்முக முதலியார்.



# OBJECT LESSONS.

## பொருட்பாடம்.

(106-ஆம் பக்கத்தொடர்ச்சி).

---

(6) பிள்ளைகள் தங்கள் பொருட்பாடங்களைச் சரியாயுணர வேண்டுமாயின் முதலில், வேறு சிந்தனையின்றி அப்பாடத்தில் கவனஞ் செலுத்தவேண்டும். உபாத்தியாயர், அவர்கள் கவனத்தைக் கவரவேண்டுமாயின் தாம் படிப்பிக்கும் விஷயத்தை முதலில் சம்பாஷணை நடையில் ஆரம்பித்துப் படிப்படியாய் பொருளின் ஒவ்வொரு உறுப்பையும் விளக்கியபின்பு, ஒரு உறுப்போடு மற்றோர் உறுப்புக்குள்ள சம்பந்தத்தைத் தெளிவாய் விளக்கவேண்டும். இவ்வாறு விளக்கியபின்பு பொருளின் பொதுக்குணத்தை விளக்குதலும் இன்றியமையாததே. இவ்வாறு பொதுவாய் விளக்கும்போதும், உறுப்புக்களின் தன்மைகளை விரித்துரைத்தபோது குறிப்பிட்டுவந்த முக்கிய விஷயங்களில் ஒன்றையும் விடுபடாதிருக்க முயல்வதே தக்க வழியாம். இதனால் பிள்ளைகளுக்குப் பொருளைப்பற்றிப் போதிக்க வருகையில் அவர்கள் மனத்தில் ஆரம்பத்தில் பதியும் சந்தேக விபரீதங்கள் நாளேற்றத்தில் ஒழிந்து, பொருளைப்பற்றிய முழு அறிவும் செவ்வனே யமையும்.

(7) பிள்ளைகள் தாங்கள் படிக்கும் பொருட்பாடத்திற்குரிய பொருளை உற்றுநோக்கி உள்ளதை உள்ளவாறறியப் பழக்கப்படுத்துங்கால் அவர்கள் அப்பொருளின் குணகுணங்களையும் அறிந்து கொள்ள வழி செய்யவேண்டும். பொருளில் ஏதாகிலும் ஒருபாகத்தின் தன்மையைப் பிள்ளைகள் அறிந்துகொண்டதை ஸ்திரப்படுத்த அவர்கள் தங்கள் சொந்தவாக்கியத்தாலேயே அதனைச் சரியாய்த் தெரிவிக்கவும் பழகவேண்டும். இவ்வாறு தங்கள் சொந்த வாக்கியங்களாலேயே கருத்தை வெளிப்படுத்துவதால் வாக்கியமமைக்கும் வழிபெரிதும் அவர்களுக்குப் பழக்கமாகி, நாளேற்றத்தில் வழுவின்றித் திருத்தமாய்ப்பேசவும் எழுதவும் வல்லவர்களாகிப் போதுமான சொற்களையும் உணரக்கூடியவர்க ளாகின்றார்கள். இதற்குப் பின்பு பிள்ளைகள் பெரியவகுப்புகளுக்குப் போவார்களாயின் அங்கு தாங்கள் வாராந்தத்தில் எழுத வேண்டிய வியாசத்தையும் திருத்தமாகவும் தெளிவாகவும் எழுத வழிகண்டவராவார்கள்.

இங்ஙனம் பொருட்பாட சம்பந்தமாய்க் குறிப்பிட்டுவந்த விஷயங்களையெல்லாம் சீர்தூக்கின் அவற்றால் மூன்று முக்கிய உபயோகங்கள் அமைகின்றன. அவற்றுள் முதலாவது மிகவும் முக்கியமானது—அது பிள்ளைகள் பொருள்களை உற்று நோக்குவது; தாரதம்மியங்களைக் கவனிப்பது; கவனித்ததின் பயன் இன்னதென்று தெளிவது. இரண்டாவது—பொருள்களின் செய்தியை நன்கறிவது; மூன்றாவது—இங்ஙனமறிந்ததால் விளையக்கூடிய பிரயோஜனத்தைப் பாஷாபிவிருத்தி, சித்திர மெழுதல் முதலிய கைத்தொழில் திருத்தம் முதலியவைகளையடைய அஸ்திவார மிட்டது போலாகும்.

ஆயினும் மேற்கூறியவை யல்லாது வேறு நல்ல பிரயோஜனங்களும் பொருட் பாடபோதனையால் உண்டாகலாம். பிள்ளைகளின் சலினமடைந்த புத்தியும், கண்ணும், கையும், நல்ல விஷயங்களுக்கு உபயோகமாகி அவர்கள் வாழ்நாள் சந்தோஷத்தில் கடந்துசெல்ல வழியுண்டாகின்றது. அன்றிச் சாமானியமென்று புறக்கணித்துத் தள்ளும் அற்ப வஸ்துக்களின் இலக்கணங்களும் இவ்வாராய்ச்சியால் இனிது விளங்கும். புத்தகத்தால் அறிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணமும் மட்டுப்படும். பிள்ளைகள் அறியாமையால் ஜந்துக்களை இம்சிப்பதும், வஸ்துக்களைக் கெடுப்பதும், பொதுவில் முரட்டுத்தனமாய் யிருப்பதும் ஒழிந்து தெய்வ சிருஷ்டியின் தன்மை யிப்படிப்பட்டதென் றுணர்ந்து அவற்றின் மீது அன்பு செலுத்திப்போற்றிப் பாதுகாக்கவும் வழியுண்டாக்கியதாகும். ஒவ்வொரு ஜந்துவின் பிரயோஜனமும், அதனை எவ்வாறு உபயோகித்துக் கொள்ளலா மென்பதும் நன்கு விளங்கும். இதனாலும் மற்றும் வகைகளாலும், சரியான வகையில் போதிக்கப்படும் பொருட்பாட போதனை பிள்ளைகளின் பாடசாலைக்கல்வி முடியுமளவும் அவர்களைச் சரியான வழியிற் செலுத்தி, அவர்கள் செய்யும் எல்லாக் காரியங்களிலும் திருத்தமா யிருக்க அஸ்திவார மிட்டதுபோலாகும்.

பத்திராதிபர்.

## TIT-BITS.

### விநோதக்கூற்றுக்கள்.

இராயர் என்னும் அரையன் ஒருவன் ஒரு நாள் மாலை தனது மந்திரிகளுடன் பூங்காவனத்துலாவுகையில் அங்கிருந்த ஓர் குளத்தில் நீர் நிறைந்திருப்பதையும், அதில் தாமரைகள் நிறையப் பூத்திருப்பதையும், ஒவ்வொரு மலரிலும் அன்னம் அமர்ந்திருப்பதையும் கண்டுமகிழ்வுற்றுத் தன்னருகிலிருந்தவர்களை நோக்கி 'இக்குளத்து நீர் எப்படியிருக்கிறது?' என்றான். அதற்கு, அது முத்துப்போ லிருக்கிறதென்றும், வெண்மையாக விருக்கிறதென்றும், அழகாக விருக்கிறதென்றும், சுத்தமாக விருக்கிறதென்றும், நிறைய விருக்கிறதென்றும் பற்பலவிதமாக, அப்பாஜி என்னும் முதன்மந்திரி நீங்கலான மற்றையோரெல்லாங் கூறினர். அப்பாஜியோ சும்மாவிருந்தனன். சும்மாவிருந்த அப்பாஜியை நோக்கி எப்படியிருக்கிறதென, அவன் மகாராஜாவே, நீர் கரையினாலிருக்கிறதென அரசன் அதைக்கேட்டு அப்பாஜியின் புத்தி கூர்மையை வியந்து அவனுக்கு நற்பரிசளித்தான். இதனால் அறிவு மிகவும் விசேஷப்பட்ட வஸ்து என்பது புலப்படுவதோடு அதை ஒவ்வொருவரும் அடைந்திருத்தல் வேண்டுமென்பதும் பெறப்படுகின்றது.



* * *

முன்னொருகாலத்தில் இத்தேசத்தை இராயன் என்பவன் அரசாண்டுகொண்டிருந்தான். அவனிடத்தில் அப்பாஜியென்பவன் மந்திரியாகவிருந்தான். அந்த அப்பாஜி புத்திமானென்று டில்லி பாட்சாவானவர் கேள்விப்பட்டு அப்பாஜியைத் தம்மிடத்துக் கனுப்பவேண்டுமென்று இராயனுக்குக் கட்டளை அனுப்பினார். இராயனப்படியே அப்பாஜியை யனுப்பினான். அப்பாஜி பாட்சாவைக் காணுகிறதற்கு முன்னே, பாட்சாவானவர் ஒருவனுக்குத் தன்னைப் போல வேஷம் போட்டுத் தன் சிங்காதனத்தில் உட்காருவித்துத் தான் மந்திரிவேஷம் போட்டுக்கொண்டு மந்திரிகள் வரிசையி லுட்கார்ந்திருந்தார். காணப்போன அப்பாஜி மந்திரி வரிசையிலிருந்த பாட்சா முன்னேநின்று காணிக்கைவைத்து வணங்கினான். பாட்சா, அப்பாஜியைப் பார்த்து என்னை எந்தவிதமா யறிந்தாயென்றார். மகாராஜாவே! சபையிலிருக்கிறவர்களுடைய பார்வைகளெல்லாந் தங்கண்மேலே விழுந்திருந்ததினாலே தெரிந்துகொண்டேன் என்றான். அதைக்கேட்டுப் பாட்சா மிகவும் சந்தோஷப்பட்டு அவனுக்கு வெகுமதி செய்தனுப்பினர். இப்படிப்பட்ட மந்திரி இராயனுக்கிருக்கிறதினாலே தான் இராயன் மற்றவர்களைப்போல் நமக்குப் பகுதி கட்டாததுமன்றிப் பயப்படாமலுமிருக்கிறானென்று மந்திரிகளுடன் பேசிக்கொண்டார்.

மதிவனப்புச்சேய்.

* * *

37 ஆகிய இந்த எண்ணை 3, 6, 9, 12, 15, 18, 21, 24, 27 ஆகிய எண்களால் பெருக்கினால்; முறையே 111, 222, 333, 444, 555, 666, 777, 888, 999 ஆகிய இந்தத் தொகைகள் விடைவரும்.

## REVIEWS OF JOURNALS.

### பத்திரிகைகளின் குறிப்புக்கள்.

பூலோக வியாசன்:—என்னும் மகுடம் வாய்ந்த மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை முறையே வரப்பெறுகின்றோம். இதனுள் பல மேதாவிகளால் பல்வேறு விஷயங்கள் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு விளங்குகின்றன. சைவசித்தாந்தம், வைத்தியம், கல்வி, அறநெறி முதலிய விஷயங்கள் படிப்போர்க்கு இன்னயம்பயக்குமாறு செவ்வனே எழுதப்படுகின்றன. இதுகாறும் வெளிவராதசில அரிய செந்தமிழ் நூல்களும் இப்பத்திரிகையின் மூலமாய் வெளிப்படுதல் கற்றோர்க்கும் பயன்படற் பாலதே. தமிழ்மக்கள் பலரும் இதனை ஆதரிப்பர் என நம்புகின்றோம். இதன் வருடச் சந்தா ரூபாய் ஒன்றே பத்திராதிபர் ம-ள-ள-ஸ்ரீ, பூஞ்சோலை முத்துவீர உபாத்தியாயர் என்பார்.

***

முஹம்மதீய மித்திரன்.—இது வாராந்தத் தமிழ்பத்திரிகை. வாணியம்பாடியினின்றும் வெளியிடப்படுகின்றது. இதனுள் பெரும்பாலும் மகம்மதியருக்கான சாத்திர விஷயங்கள் எழுதப்படுகின்றன. அன்றி, இராஜாங்க விஷயம், தேசவாராய்ச்சி முதலியபொதுவிஷயங்களும் எளிய செந்தமிழ்நடையில் எழுதப்படுகின்றன. இது மகம்மதியரானோர்பலர்க்கும் இன்றியமையாததென்றே நம்புகின்றோம். இதன் பத்திராதிபர் ம-ள-ள-ஸ்ரீ, M. அப்துல் காதர் சாஹிப் அவர்கள். இதன் வருடச் சாந்தா ரூ. 2-8-0.

***

விஜய விகடன்.—இது சென்னையினின்றும் வெளியிடப்படும் வாரப்பத்திரிகை. இதன் பத்திராதிபர். ம-ள-ள-ஸ்ரீ, கதிர்வேல் நாடார் அவர்கள். இப்பத்திரிகையில் வரும் விஷயங்கள் படிப்போர்க்குச் சதாபெருநகைப்பையேவிளைவிக்கக் கூடியன. விகடமூலமாகவே நல்லறிவையூட்டும் நன்னலம் வாய்ந்தது. இதனுள் விகடங்கள், விகடப்பாடல்கள், இராஜாங்கவிஷயம், சுதேசியம் முதலியன எளியசெந்தமிழ் நடையில் இயன்று வருகின்றன. இத்தகைய விகடப்பத்திரிகை நடத்துவது கற்றோர்க்கு அரியதாமென கண்டோரனைவரும் கூறும்வண்ணம் விஷயப்பொலிவையுடையது. இதனை யாம் கையேற்றுக் காணுந்தோறும் அகமகிழ்கின்றோம். இதன் வருடச்சந்தா ரூ. 2-0-0.



## ANCIENT EDUCATION IN OUR COUNTRY.

### நமது தேசத்துப் பழமையான படிப்பு.

“ தற்காலத்திலுள்ளபடி இத்தேசத்து வித்தியாப்பியாசத்தை நன்றாக ஆலோசித்துப் பார்ப்போமானால், ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாத இரண்டு வித்தியாப்பியாச முறைகள் இங்கே வழங்கி வருவது நன்றாகத்தெரிகிறது. அவைகளிலொன்று, இத்தேசத்துப் பழமையான படிப்புமுறை. மற்றொன்று, புதிதா யேற்பட்ட அங்கிலேயர் படிப்புமுறை. பழமையானபடிப்பு முறையிலுள்ள குணதோஷங்களைக் கண்டறிய, ராஜாங்கத்தார் சிறிதும் முயற்சிகொள்ளவேயில்லை, புதியபடிப்பு முறையையோ, விசேஷமாக விருத்திசெய்து அதைப்பற்றின பலசங்கதிகளையும் தெரிந்துக்கொண்டிருக்கிறார்கள். ஐரோப்பியருடைய நூதனமான நாரிகம் இத்தேசத்திற்கு வருகிற வரையில் இங்கே தெருத்திண்ணைப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்ட பழய படிப்புமுறை இத்தேசத்துச் சகலமான பிரஜைகளுக்கும் இவ்வுலக வாழ்க்கைக்கு அவசியமாய் வேண்டியவைகளுக்குப் போதுமானதாகவே யிருந்தது. அப்படியிருக்க, இக்காலத்து நூதனமான பிரதமவித்தியாப்பியாசத்திலே, திண்ணைப்பள்ளிக்கூடத்துப் பழையபடிப்பு முறையிலுள்ள குணங்களை அநுசரிக்காமலிருப்பதைப்பார்க்க மிகவும் பரிதாபமாயிருக்கிறது,” என்பதாம்.

1820-ஆம் வருஷம் சென்னை கவர்னாயிருந்த ஸர்-தாமஸ் மன்றோ பிரபு அவர்கள் இத்தேசத்து வித்தியாவிஷயத்தை விசாரிக்கத்தொடங்கினார்கள். அவருக்கு பிரதியுத்தரமாக ஜில்லாகலெக்டர்கள் அனுப்பியபத்திரிகைகளினால், இந்த ராஜதானியில் 12,498 பாடசாலைகளில் 1,88,650 பிள்ளைகள் படித்து வந்ததாகவும், அந்தப்பாடசாலையில் 740 கலாசாலைகளாயிருந்ததாகவும், அவைகளில் தஞ்சாவூர் ஜில்லாவிலேயே மாத்திரமிருந்த 993 பாடசாலைகளில் 109 கலாசாலைகளாயிருந்ததாகவும் அப்போது தெரிந்துகொள்ளப்பட்டது.

’ அக்காலத்து ஜனத்தொகை மொத்தம் 1,28,50,941 ஆகவே ஆயிரம் பிரஜைகளுக்கு ஒரு பாடசாலை யிருந்ததாகத் தெரியவருகிறது. அநேகமாய் இப்பாடசாலைகளெல்லாம் அந்தப்பிள்ளைகளின் பெற்றோர்களாலேயே பரிபாலிக்கப்பட்டுவந்தன. பிராம்மணர்களே அப்பாடசாலைகளுக்குத் தலைவர்களாயிருந்தார்கள். அவர்களுக்கு மானியங்கள் விடப்பட்டிருந்தன, அந்த மானியங்கள் பூர்வகாலத்து ஜமீன்தாரிகளாலும் நவாப்புகளாலும் விடப்பட்டவை.

1820-ஆம் வருஷம் கிழக்கு இந்திய வர்த்தகச்சங்கத்தாருடைய அத்யக்ஷசபையார் அனுப்பிய ராஜாங்கவிஷயமான பத்திரிகையில், ஸர்-தாமஸ் மன்ரோ செய்த ஏற்பாடுகளைப் பூரணமாய் அங்கீகரித்தார்களானாலும், கிராமபாடசாலைகளில் இன்னவிதமான படிப்பு படிப்பித்துவந்தார்களென்பதையும், அந்தப்படிப்புக்கு இன்னவிதமான புஸ்தகங்களை உபயோகித்து வந்தார்கள் என்பதையும் பற்றி ஐயந்திரிபற விசாரித்துத் தெரிந்துகொள்ளவில்லையென்று மிகவும் துக்கித்திருந்தார்கள்.

1835-ஆம் வருஷத்திற்கு முன்னே இத்தேசத்தில் முக்கியமாய் சுதேச பாஷைகளே படிப்பிக்கப்பட்டுவந்தன. அப்போது சுதேச பாஷா ஞானத்தையும் அந்தப்பாஷையிலுள்ள சாஸ்திரங்களையுமே விருத்திசெய்விக்க வேண்டு மென்பது அவர்களுடைய உத்தேசமாயிருந்தது. மேனாட்டுப்படிப்பிலுள்ள விசேஷங்களையும் அவற்றுடன் சேர்த்துப் படிப்பித்து வந்தார்கள். பிறகு 1835-ஆம் வருஷத்தில் பாஷையோடு சம்பந்தப்படாத விஷயங்களைச் சுதேஸபாஷையாலா, அல்லது அங்கிலேய பாஷையாலா போதிப்பது என்கிற விசாரம் வந்தபோது, மெக்காலே பிரபு எழுதிவைத்த கியாதி பெற்ற ராஜாங்கக்குறிப்பை அநுசரித்து லார்டு வில்லியம் பென்டிங்கு அங்கிலேய பாஷையாலேயே போதிப்பிக்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டார். அதனாலேயே இத்தேசத்தில் சுதேசபாஷைகள் மென்மேலும் விருத்தியடைய வழியில்லாமற் போயிற்று.

இத்தேசத்தார் பிரதம சிக்ஷையை விருத்திசெய்ய திறமையற்றவர்களாயிருந்தபோது 1852-ஆம் வருஷத்தில் கிறிஸ்தவ பாதிரிமார் இத்தேசத்தில் 1885 பாடசாலைகள் ஸ்தாபித்தார்கள். அவைகளில் 38,000 பிள்ளைகள் படித்தார்கள். அந்தப்பாடசாலைகள் வெகுவாய்த் தஞ்சாவூர், திரிசிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களிலேயே விசேஷமாயிருந்தன. அக்காலத்தில் கிறிஸ்தவ சங்கத்தார் பாடசாலைகளின் கட்டடங்களுக்கு மாத்திரமே 1852-ஆம் வருஷத்தில் 40,000 ரூபாவரையிலும் 1853-ஆம் வருஷத்தில் 30,000 ரூபாவரையிலும் செலவு செய்தார்கள். இதே விதமாக நமது தேசத்தில் வைதிகமார்க்கத்தை விருத்திசெய்விப்பதற்காக ஏற்பட்டிருக்கும் மடாதிபதிகள் ஸ்தாபித்த பாடசாலைகளெங்கே? எங்கே என்றுகேட்டால், அதற்கு 'எங்கே'? என்கிற பிரதித்தொனிமாத்திரம் மறுமொழியாய் உண்டாகிறதே யொழிய மற்றொரு பிரதி உத்தரமு முண்டாகக் காணோமே.

பிரோபஸர். அரங்காசாரியார், எம். ஏ.



# THE IMPROVEMENT OF EDUCATION IN JAPAN.
## ஜபான் தேசத்தின் வித்யாபிவிருத்தி.

இந்தச்சென்னை ராஜதானியில் தற்காலத்தில் ஆரம்பக் கல்வி (Primary Education) மிகவும் குறை அடைந்து இருப்பதுபோலவே சில வருஷங்களுக்குமுன் ஜபான்தேசத்திலும், ஆரம்பக்கல்வி மிகவும் மட்டுப்பட்டிருந்தது. ஆதியில் பௌத்தமத ஆசாரியர்கள் போதித்தபோதனைகள் மாத்திரம் 1872-ஆம்வருஷம்வரையில் ஜபான் தேசத்தில் ஒருவாறு வழங்கிவந்தனவாம். அத்தேசத்தில் நாகரீகத் தேர்ச்சி உண்டாகத் தொடங்கிய மேற்கண்டவருஷத்தில் ஜபான் சக்கரவர்த்தி வித்யாபிவிருத்தி விஷயமாய் ஒரு பத்திரிகை பிரசுரம் செய்தார். அதில் தோட்டிமுதல் தொண்டைமான்வரையிலுமுள்ள உத்தியோகஸ்தர்கள், விவசாயிகள், சிற்பிகள், கைத்தொழிலாளிகள், வைத்தியர்கள் முதலிய யாவரும், அவரவர் செய்யும் வேலைக்கு வேண்டிய தேர்ச்சியுண்டாவது படிப்பினாலேயாம். ஆகையால் இன்றுமுதல் கல்விப்பயிற்சியில்லாத ஒருவனும் இந்நாட்டிலில்லாதபடி வித்தியாபி விருத்தி செய்விக்க வேண்டும் என்னும் விஷயம் அடங்கியிருந்தது. தங்கள் சக்கிரவர்த்தி இவ்விதமாக பிரசுரம் செய்தது கண்டு அத்தேசத்துப் பிரஜைகள் தாமும் வித்தியாபி விருத்தி செய்வதில் அதிகமான உற்சாகமுள்ளவர்களாய் ராஜாங்கத்தாரோடு கூடித் தாமும் வேண்டிய திரவியசகாயஞ் செய்து தம்மாலானவளவு பாடுபட்டு வந்தார்கள். 1896ஆம் வருஷத்தில் பாடசாலை மூலதனத்திற்காக அவர்கள் தாமே வேண்டிக்கொடுத்த நன்கொடை 1,56,000 பவுண்டு. அதனோடு 36,77,000 ஏகரா நிலமும், 14000 புஸ்தகங்களும், 16000, தொழில்பயிலும் கருவிகளும் கொடுக்கப்பட்டன.

1892ஆம் வருஷத்தில், படிக்கத்தக்க வயதுவந்த 79,25,996 பிள்ளைகளில் 40,62,418 பிள்ளைகள் மேனாட்டு மாதிரியாக ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டார்கள். ஆண்பிள்ளைகள் மாத்திரம் கணக்கிட்டால் 100-க்கு 82 பேர் கற்பிக்கப் படுவதாக ஏற்படுகிறது. 30 வருஷத்திற்குமுன் நாகரீக மில்லாதிருந்த ஜப்பான் தேசம் அதிசீக்கிரத்தில் இப்படிப்பட்ட மேலான நிலையை அடைந்திருக்க, நெடுநாளாக நாகரீகத் தேர்ச்சியடைந்த தேசமென்று பிரசித்தி பெற்றிருக்கும் நமது இந்து தேசம் இப்படிப்பட்ட ஈனஸ்திதியை அடைந்திருப்பது நமக்குள் முயற்சியும் ஐக்கியமும் இல்லாக்குறையினாலன்றோ?

## NEWS AND NOTES.

### சமாசாரக் குறிப்புக்கள்.

லண்டன் நகரத்தில், பட்சிகளுக்குச் சங்கீதம் கற்பிக்கப் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவாம்.

கூத்தநல்லூரில் ஓர் எருமை, தலை, உடல், வால் ஆகிய மூன்று உறுப்புக்கள் இரண்டிரண்டு; கண், கால்கள் தனித்தனிநான்கும் உள்ள ஒரு கன்றை யீன்றதாம்.

ஜான் மார்லி என்பவர் இந்தியமந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இம்மேதாவியின் ஆளுகையில் இந்திய நாடு மிக்க நன்மைகளையடையு மென்று அபிப்பிராயப் படுகின்றனர்.

மத்திய மகாணத்துரைத்தனத்தார் பிரைமரிகிரேட் உபாத்தியாயர்களுக்கு மாதச்சம்பளம் 10-ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றார்கள்.

திருவாங்கூர் மகாராஜா அவர்கள் இந்திய பொருட்காட்சிச் சாலைக்குக் 1000-ரூபாய் நன்கொடை யளித்ததைக்கேட்டுச் சந்தோஷிக்கின்றோம்:

### முக்கியக் குறிப்பு.

கடிதம் எழுதுவோர் தயவுசெய்து தம் நம்பரைக்குறித்து எழுதுவாராக.

---

### நமது பத்திரிகை நேயர்களுக்கு ஓர் நயம்.

நயம்! மிகநயம்!! மிகவும்நயம்!!!

நமது இந்திய சக்கிரவர்த்தியாகிய ஏழாம் எட்வர்ட்டு அவர்கள் திருவுருவப் படங்கள் இரண்டுவகையும், சக்கிரவர்த்தினியார் திருவுருவப்படம் ஒருவகையும் ஆக மூன்று வகையபடங்கள் விலைக்குத் தயாராயிருக்கின்றன.

இப்படங்களில் ஒவ்வொன்றும் 15 வர்ணங்களை யுடையனவாய், மிக நேர்த்தியாய், பார்ப்பவர் கண்ணையும் மனத்தையும் கவரத்தக்க வண்ணமாய் 20×24 அகலநீளமுள்ளதாய் இயன்றுள்ளது.

| | |
|---|---|
| சக்கிரவர்த்தியார் பட்டாபிஷேகப் படம் | 1 |
| சக்கிரவர்த்தினியார் ,, ,, | 1 |
| சக்கிரவர்த்தியார் போர்க்கோலப்படம். | 1 |

இப்படங்கள் தனித்தனி ஒரு ரூபாய் விலைக்கு விற்கப்பட்டன. தற்காலம் இந்தியாவிற்கு விஜயஞ்செய்துள்ள பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் அவர்கள் ஞாபகார்த்தமாக நமது பத்திரிகை நேயர்களுக்குமாத்திரம் தனித்தனி அணா ஆறு விகிதம் கொடுக்கப்படும்.

22 MAR 1906
MADRAS.

நல்லாசிரியன்
உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்
மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.
வயது 1. | 1905 ஹ டிசம்பர்மீ | மாதம் 7.

## THE INDIAN KINDERGARTEN.

### செல்வச் சிறுவர் சிங்காரத்தோட்டம்.

(123-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கிண்டர் கார்டன் பாடம் செவ்வனே நடைபெற வேண்டுமானால், அப்பாடத்தை நடத்தும் உபாத்தியாயருக்குச் சில அரிய தன்மைகள் இயற்கையில் அமைந்திருத்தல்வேண்டும். அவையாவன:—

1. கிண்டர்கார்டன் போதிக்கும் உபாத்தியாயர் தன் வகுப்புப் பிள்ளைகளோடு தானும் ஒரு பிள்ளையைப்போல் இருந்துகாட்ட முயல்வதே அவரது முதல் தன்மையாம்.

2. தம் கண்ணில் காணும் ஒவ்வொரு பொருளையும் உள்ளும் புறமும் ஆராய்ந்தறியும் தன்மையுடையவர் ஆதல் வேண்டும்.

3. மூலவர்க்கங்கள், தாதுவர்க்கங்கள், பிராணிவர்க்கங்கள் முதலியவற்றின் குணகுணங்களைச் சரிவர அறிந்துகொள்ளும் ஆவலுடையவராயும், அவற்றின் பாகங்களைத் தனித்தனி எழுதிக்காட்டிப் பிள்ளைகளுக்கு விளக்கவல்ல வல்லமையுடையவராயும் இருத்தல் வேண்டும்.

4. சந்தோஷம், இரக்கம், வீரம், பத்தி, நீதி முதலிய நற்குணங்களையுண்டாக்கும் சிறுகதைகளை மிகுதியும் கற்றவராய் இருத்தலேயன்றி அக்கதைகளைச் சிறுவர்களுக்குச் சொல்லும்போது ஆங்கா

ங்கு உண்டாகும் சந்தர்ப்பங்களை இயற்கையில் காட்டுவதுபோல் அபிநயங்களால் விளக்கிக் காட்டவல்லவராதல் வேண்டும்.

5. கிண்டர்கார்டன் பாடம் போதிக்கும் உபாத்தியாயர் இசையோடுகூடிய சிறுபாடல்கள் பாடுவதில் தேர்ந்திருத்தல் வேண்டும். இவர் சங்கீதப்பயிற்சி யுடையவராயிருத்தல் சாலச்சிறப்பாம்.

6. தம் நாட்டில் கிடைக்கக்கூடிய பொருள்களுக்குத் தக்கவாறு தொழில்களை அமைக்கக்கூடியவரா யிருத்தல்வேண்டும்.

7. கிண்டர்கார்டன் பாடத்தில் சொல்லப்படும் கதையையே பாட்டாகப் பாடிக் காட்டுவது மிக்க ஏற்றதாக எண்ணப்படுவதனால், உபாத்தியாயர் மிக எளிய நடையில் சிறு பாட்டுக்களைத் தாமே இயற்றவல்லவராயிருத்தல் இத்தன்மைகள் அனைத்தினும் சிறப்புடையதாம். இவைமுதலிய தன்மைகள் வாய்ந்த நல்லாசிரியர்கள் கிடைப்பது மிக அருமையாக இருக்கின்றது. இக்குணங்கள் அமைந்த உபாத்தியாயர்கள் அரிதில் ஒருவர்இருவர்கிடைப்பினும்அவர்கள் உபாத்தியாயர்தொழிலை ஏற்கமனமில்லாதுநீங்கிவிடுகின்றனர். ஏனெனின்: கிண்டர்கார்டன்பாடம் பாலர், முதல், இரண்டு ஆகிய மூன்றுவகுப்புக்களில்மாத்திரம் நடைபெறுகின்றது. மேல் வகுப்புக்களில்நடத்த வித்தியாவிதி (Educational Rules) இடங்கொடுக்கவில்லை. ஆகவே முதல் மூன்றுவகுப்புக்களில் கிண்டர்கார்டன் முதலிய அரிய பாடங்களை நடத்தும் உபாத்தியாயர்கள் பெறும் சம்பளமோ 7-அல்லது 8-ரூபாயாக விருக்கிறது. அதிர்ஷ்டசாலியாயிருப்பவர்10 - ரூபாயைப் பார்க்கின்றார். அந்தோ! அந்தோ! இவ்வுபாத்தியாயர்களின் நிலையை என்னென்று இயம்பலாம்? கதைசொல்லவும், பாட்டுப்பாடவும், கவிபாடவுமாகிய அரியவித்தைகளைக் கற்றவர் கண்டது ரூபாய் 10-தானே வென்று வேறு வேலையில் விரும்பிச் செல்கின்றனர். வேறுவேலை கிடைக்காமல் உபாத்தியாயர் தொழிலில் இருப்போரும் இத்தொழிலில் இருக்கும் வரையில் தம்மை ஏழரை நாட்டுச் சனிபிடித்திருப்பதாய் எண்ணி மனச்சோர்வுற்று, சந்தோஷமற்றுக் கற்றவையனைத்தும் கைவிட்டு "மாடுமேய்த்தோம், கோலைப் போட்டோம்" என்றுஎண்ணிக் கடைமைக்குத் தம் வேலையை நடத்தி வீடு சேர்கின்றனர். உடலையும் உயிரையும் தத்தஞ்செய்யும் தொழிலில்7-8.ரூபாய் சம்பளம் கிடைப்பதனால்அவர்கள்தாம் என்ன செய்வார்கள். சம்பளம் குறைந்தால் சாதம் குறைகிறது. சாதம் குறைந்தால் சரீரம் குறைகிறது. சரீரம் குறைந்தால் தன் பலம் குறைகிறது. பலம்குறையவே தன்தொழிலின் பலனுங் குறைந்துவிடுகிறது.



ஆகவே, அரியபாடங்களைப் போதிக்கவல்ல ஆசிரியர்கள் கிடைத்தகாலத்தில் அவர்களுக்குத் தக்க சம்பளங்கொடுத்து உபசரித்து அப்பாடங்களை விருத்திசெய்ய வேண்டுவது அவசியமாகும்.

இதுநிற்க, இனி நாம் எடுத்த விஷயத்தைப்பற்றிப் பேசுவோம். கிண்டர் கார்டன் பாடம் இன்னதென்பது போதனாப்பியாச வித்தியாசாலையில் பயிலாத உபாத்தியாயர்கள் அறிந்திருப்பார்கள் என்று எண்ணுவதற்கு இடமில்லை. போதனாப்பியாச பாடசாலையிலும் கிண்டர்கார்டன் பாடம் இன்னதென்பதைச் சரிவர விளக்கிக்காட்டாமல் அப்பாடத்தால் உண்டாகும் நன்மைகளையும், அப்பாடத்தை நடத்தும் முறைகளையும் போதிக்கின்றனர். அதனால்,கடைக்காலில்லாக் கட்டடம் அழிவடைவதுபோல், கிண்டர்கார்டன்பாடம் தலையெடாமல் தடுமாறி நிற்கின்றது. அன்றி இப்பாடத்தைப்பற்றிய புத்தகமொன்றும் நம் நாட்டிற்கு இயன்றவாறு சுதேசபாஷையில் இதுகாறும் ஏற்படாமை பெருங்குறையே. விஷயங்களை (Matter) அறிந்த பின்னரே முறை (Method) பிரயோசனப்படுமாதலால் விஷயங்களைப் போதிக்காமல் முறைகளைமட்டும் போதிப்பது எவ்வாற்றானும் ஏற்றதாகாது.

பத்திராதிபர்.

## THE SPIDER.

## சிலந்திப்பூச்சி.

புஸ்தகங்களைப் படிப்பதனால் மாத்திரம் அறிவு உண்டாகுமென்பதில்லை. கடவுளுடைய அளவற்ற சிருஷ்டிகளின் ஆச்சரியங்களை ஆராய்ந்தறிவதாகிய படிப்பினால் உண்டாகும் அறிவும், ஞானமும் மிகச்சிறந்தவை. பிராணனுள்ளளவும் சிருஷ்டிப்பொருள்களை யார் ஒருவன் பரிசோதிக்கப் புகுகின்றானோ, அவனுக்குப் பேரானந்தமும் பேரறிவும் உண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை. சாதாரணமாய் ஒவ்வொரு நிமிஷமும் நமது புறக்கண்ணுக்குத்தென்படும் ஜீவவர்க்கங்களிலும் மூலவர்க்கங்களிலும் எவ்வளவோ மாட்சிமைகள் மறைந்திருக்கின்றன. அவைகள் ஏன் நமக்குத்தெரியவில்லை என்றாலோ, அவைகளைத் தெரிந்துகொள்ள நமக்கு ஆஸ்தையும் அக்கறையுமில்லாததனாலேதான். முழுமனதோடும் பூரணசிந்தையோடும் சிருஷ்டிகளை ஆராய்ந்தறிவதாகிய காரியத்தில் நாம் பிரவேசித்து அவைகளை ஊக்கமாய் கவனியாவிட்டால் அந்த மாட்சிமைகள் நமது அகக்கண்ணுக்குப் புலப்படமாட்டா.

இதற்குச் சாதாரணமான ஒரு திருஷ்டாந்தம் எடுத்துக் கொள்ளுவோம். சிலந்திப்பூச்சி எவ்வளவு அற்பமானது! ஜீவஜெந்துக்களில் சேர்ந்ததென்று கூட நாம் அதை மதிக்கிறதில்லையே. பொறுமையென்ன, உழைப்பென்ன, தைரியமென்ன, இவைபோன்றமேம்பட்டகுணங்கள் அதனிடத்தில் தங்கியிருக்கின்றன. இந்த லட்சணங்களை யாராவது ஒருவனிடத்தில் கண்டால் நாம் அவனை மிகவும் மகிழ்ந்துகொண்டாடுவோமல்லவா? இப்படி நாம் மேலாகக்கொண்டிருக்கும் குணங்கள் சிலந்திப்பூச்சியினிடத்தில் இருக்குமாயின், அதை நாம் எவ்வளவேனும் இழிவானதென்று நினைக்கலாகாதே. சிற்பசாஸ்திரத்தில் மிகுந்த தேர்ச்சி யடைந்திருப்பவர்களுடைய திறமையும் அதற்கு இந்த விஷயத்திலிருக்கிற சூட்சும புத்திக்கு ஈடாகமாட்டாது; அதனுடைய வேலையின் ஒழுங்கும் நேர்த்தியும் அவ்வளவு ஆச்சரியப்படத்தக்கதாயும் நிகரற்றதாயுமிருக்கின்றது.

சிலந்திப்பூச்சியில் பலஜாதிகளுண்டு. அவைகளுள் தோட்டச்சிலந்தியும், எட்டுக்கால்பூச்சி யென்கிற வீட்டுச்சிலந்தியும் முக்கியமானவை. அவைகள் முறையே தோட்டங்களில் செடிகொடிகளிலும், வேலிகளிலும், வீடுகளில் ஜன்னலுட்புறத்திலும், வெளிப்புறத்திலும், நூற்கூடு அல்லது நூற்கோட்டையைக் கட்டிக்கொள்ளுகின்றன. அந்தக் கூடு சக்கரவடிவமுற்றது; அச்சக்கரத்தின் திட்டத்தையும் திருத்தத்தையும் பார்த்தால் இரேகாகணிதச் சக்கரமும் தோற்றுப்போம். வெளிப்புறத்து நூல்கள்மாத்திரம் விசேஷமாய் வட்டமாயிருப்பதில்லை; முக்கோணவடிவாயிருக்கும். சக்கரத்தின் மத்தியஸ்தானத்திலிருந்து வெளிப்புறத்து நூல்களுக்கு வண்டிச்சக்கரத்தின் குடத்திலிருந்து கால்கள் வட்டை (சுற்றளவு) பரியந்தம் போயிருப்பதுபோல நூல்கள் ஓடுகின்றன. அதேமத்தியஸ்தானத்தைச்சுற்றி ஏகமத்திய சக்கரங்கள் ஒன்றின் பின்னொன்றுவிட்டுவிட்டு வந்துகொண்டிருக்கும். சிலந்தியின் நூல்கோட்டை பெண்பிள்ளைகள் செய்யும் விசித்திரமான தையல்வேலைகளைப்பார்க்கிலும் மேன்மையாயும் நேர்த்தியாயுமிருக்கும். அந்தநூல்கோட்டைக்கு உபகரணங்கள் என்னவென்றாலோ, சிலந்தி தன்னுடைய அவயவங்களினின்று உண்டாக்கும் அனேகவாயிரம் நுட்பமான நார்களைக்கொண்டு நூல்களை நூற்று, அந்த நூல்களினால் வலையைப்பின்னுகின்றது. சாதாரணமாய் வீடுகளில் கட்டியிருக்கிற கோட்டையின் நூல்கள் ஒவ்வொன்றும் முந்நூறு நானூறு நார்களால் ஆனவையென்று சொல்லுகிறார்கள். வலையின் மத்தியஸ்தானத்திலிருந்து சிலந்தியின் இருப்பிடத்துக்கு நூல்வழி ஒன்றுண்டு. வலையில் ஒரு ஈ அகப்



பட்டுக்கொண்டால் தட்சணமே அந்த நூல் கொஞ்சம் அசையும். அந்த அசைவை அறிந்து சட்டென்று நூல்வழியாய் ஓடி கோட்டையின்மத்தியில் போயிருந்துகொண்டு எந்த நூலில் ஈ சிக்கிக்கொண்டிருக்கிறதோ அதைக் காலினால் உணர்ந்து கண்டுபிடித்து அங்கே ஓடி ஈயைப் பட்சித்துப் போடும். இரைதேடுவதில் சிலந்திக்குக் கண்பார்வையை விட ஸ்பரிச உணர்ச்சியே பிரதானம்.

வீட்டுச்சிலந்தி தன் வலையில் ஒரு ஈ அகப்பட்டுக்கொண்டால் திடீரென்று முரட்டுத்தனமாய் அதன்மேல் பாய்ந்து வாயினால் கவ்வி தன்னுடைய ஸ்தானத்துக்குக் கொண்டுவந்து அப்புறம் அதைப் புசிக்கும். தோட்டச்சிலந்தி முதலிய உயர்ந்தஜாதிச் சிலந்தியோ அப்படியல்ல; இருப்பிடத்துக்குக்கிட்ட அகப்பட்டுக் கொண்டாலுஞ்சரி, தூர அகப்பட்டுக் கொண்டாலுஞ்சரி ஒழுங்குப்படி முதல்முதல் கோட்டையின் மையத்துக்குப்போய் ஈ மாட்டிக்கொண்டிருக்கிற நூலைத் தெரிந்துகொண்டு அங்கேயேபோய் அதைக் கொன்று தின்றுவிடும். ஈ சிறிதாயிருந்து இருக்கிற இடந்தெரியாமற்போனால் மத்தியஸ்தானத்திலிருந்து நூல்களைச்சுற்றிச்சுற்றி இரண்டு மூன்றுதரம் பிடித்து அசைத்து அது இருக்கிற இடத்தை அறிந்துகொள்ளும். ஒரு குளவி வலையில் சிக்கிக்கொண்டு அதை நேராகப் போய்அடிப்பது தனக்குத் தீங்காய் முடியுமென்று கண்டால், அந்த பக்கமும் நகரவொட்டாமல் இந்தபக்கமும் நகரவொட்டாமல் அதை நன்றாய்வலையில் மாட்டிவிட்டு அது சகல பலமும் ஒடுங்கி ஓய்ந்துபோய் தானாகச்சாகிறபரியந்தம் காத்துக்கொண்டிருக்கும்; அல்லது அவ்வளவு பெரிய ஜந்து வலையைச் சின்னாபின்னமாய் இழுப்பதனால் நூல்கள் அறுந்து வலைக்கு அபாயம் வருமென்று தோன்றினால், அது எந்த நூல்களில் சிக்கிக் கொண்டிருக்கிறதோ அந்த நூல்களை அறுத்துவிட்டு அதைத் தப்பிப்போகும்படி விட்டுவிடும்.

“ சின்னூல் பலபல வாயாலிழைத்துக் சிலம்பிபின்னும்
அந்நூலருந்தி விடுவதுபோல வரங்கரண்டம்
பன்னூறுகோடி படைத்தவையாவும் பழம்படியே
மன்னூழிதன்னில் விழுங்குவர்போத மனமகிழ்ந்தே ”

என்று கடவுளுண்டாக்கிய இயற்கை யறிவினால் சிலம்பிசெய்கிற அற்புதத்தொழில் அவருடைய படைப்புச்செயலுக்கு ஒருவாறொத்திருக்கிறதென்று தமிழ்நாட்டுக்கவிஞரும் பாடிவருகின்றனர்.

தன்னுடைய இனத்தில் ஒன்று வலையில் மாட்டிக்கொண்டால் அது இப்படியெல்லாம் பண்ணுகிறதில்லை. வலையின் நூல்கள் எல்லாவற்றையும் கால் நகங்களால் பிடித்து அசைக்கும்; அப்போது

அபாயத்திலிருந்த சிலந்தி ஓடிப்போகும். தப்பி ஓட முதலில் கொஞ்சம் இடம் கொடுக்கும்போது தப்பி ஓடாமல் அது எதிர்க்கவேண்டுமென்கிற அபிப்பிராயங்கொள்ளுமாயின், இரண்டும் கால்களை நன்றாய்ப் பரப்பிக்கொண்டு வாயைத்திறந்து ஒன்று மற்றொன்றுக்கு எமனைப்போன்ற பயங்கரமான பார்வையை உடைத்தாகி முன்கால்களால் மெல்லமெல்ல அணுகும். அவ்விரண்டுள் எது முதல்முதல் மற்றொன்றின்பேரில் பாய்ந்து கடிக்கிறதோ, அதுதான் ஜயமடையும். கடிப்பட்டசிலந்தி அப்படியே சுருட்டிக்கொண்டு செத்துப்போகும்.

எல்லாவித பூச்சிகளுக்குள்ளும் சிலந்தியைப்போல சூதும் தந்திரமுமுள்ள பூச்சியேயில்லை. தாய்சிலந்தி முட்டையிட்டுக் குஞ்சுபொறித்து குஞ்சுகள் வெளிப்படுகிற நாள்முதல் ஆயுள்பரியந்தம் இதர அபேட்சையில்லாமல் தங்களை மற்ற ஜந்துக்களிடத்தினின்று காத்துக்கொள்ளுவதுந்தவிர, சில ஜந்துக்களைத் தாங்கள் கொல்லவும் கொல்லுகின்றன. வட்டமான நூல்வலை ஈ பிடிப்பதற்கு மிகவும் வசதியானது; அப்படிப்பட்ட வலைகள் கட்டிக்கொண்டிருக்கும் சிலந்திகள் அதிசீக்கிரத்தில் கொழுத்துப் பருக்கின்றன. சிலந்திகள் தோலுரிப்பதுண்டு; அதற்கு இரண்டுமூன்று நாள்பிடிக்கும்; அந்தக் காலத்தில்மாத்திரந்தான் பலம் ஒடுங்கி சுருசுருப்பின்றி அடங்கிக் கிடக்கும். தோலுரிந்தபிறகு அவயவங்கள் தளதளவென்று பிரகாசித்துக்கொண்டு மிகவும் அழகாயிருக்கும்.

சாயங்காலவேளையில் தோட்டச்சிலந்தி தன்னுடைய மறைவிடத்தைவிட்டு நூல்கோட்டையின் மத்தியில் வந்து உட்கார்ந்து நூல்களின்பேரில் கால்களைப் பரப்பிக்கொண்டிருக்கும். நூல் அசங்கினதும் அசங்காததுமாயிருக்கும்போதே பளிச்சென்று வலையில் சிக்கிக்கொண்டிருக்கிற ஜந்துவின்மேல் பாய்ந்து அதைக் கொன்று விழுங்கிவிடும். நூல்களைப் பழுதுபார்க்கிறதும் சாயங்காலத்தில்தான். சிற்றுயிரிலக்கணசாஸ்திரத்தை அறிந்த சில வித்துவான்கள் சிலந்தியின் வலைநூல்கள் வொவ்வொருநாளும் புதிது புதிதாகப் போடப்படுகின்றனவென்றும் சொல்லுகிறார்கள்; இவர்கள் உண்மையைப்பார்த்து இப்படி உரைக்கிறார்களென்று கொண்டாலும் கொள்ளலாம். ஒரு நிமிஷமாகிலும் சும்மாயிராமல் சிலந்திப்பூச்சி தன்னுடைய வலையின்பேரில் இடைவிடாத கவலையுள்ளதாய் அதை எப்போதும் செவ்வைபண்ணிக்கொண்டேயிருக்கும். மழைகாலம் சமீபித்ததென்று காட்டும் குறிகளை அறிந்துகொண்டு மழைகாலத்தில் ஈக்கள் தங்குமிடமில்லாமல் அங்குமிங்கும் அலைந்து தன்னு



டைய இடத்துக்குவந்து சேருமென்கிற தைரியத்துடனே வலையைச் செம்மையாய் ஒழுங்குபடுத்திவைக்கும்.

தோட்டச்சிலந்தி இப்படி குசாலாய்ப் பொழுதுபோக்கிக்கொண்டு சௌக்கியப்பிராணியாயிருக்க, வீடுகளிலிருக்கும் சிலந்திகள் அநேகம் பேருக்காகிலும் நூல்வலை ஒன்று ஒன்றைக் கட்டிக்கொண்டு எப்போதாவது ஒரு ஈ தப்பித்தவறி வந்து விழப்போகிறதாவென்று பார்த்தபடியே அதிக பொறுமையோடு பட்டினியாகவே அநேகமாய்க் காலத்தைத் தள்ளுகின்றன; அப்படியும் பசிதாளாவிட்டால் தன் ஜாதியிலேயே சிறிதான பூச்சிகளைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொன்று தின்றுவிட அஞ்சுகிறதில்லை.

சிலந்தியில் குதித்துக்குதித்து ஓடுகிற ஒரு ஜாதியும் உண்டு. இதற்கு நூல்வலை கட்டவேணுமென்கிற கவலையே கிடையாது. வலையில்லாமலே இது ஆகாரத்தைச் சம்பாதித்துக்கொண்டிருக்கிறது. புலிஆட்டின்மேல்பாய்கிறப்போலே, ஈக்குத்தெரியாமல்அதன்பக்கத்தில் ஒரு பாய்ச்சல் பாயக்கூடிய தூரத்தில் மறைந்திருந்து சமயம் பார்த்து அதன்மேல்விழுந்து ஒரு விழுங்காய் விழுங்கிவிடும். வேட்டையில் பிரியமுள்ளவர்கள் இந்த பூச்சிசெய்கிற உபாயங்களை எல்லாம் கவனமாய்ப் பார்த்துக்கொண்டு அவைகளை அனுஷ்டித்தால் மிகவும் நலமாயிருக்கும்.

முன்னே சொல்லியபடி சிலந்தியில் இன்னும் எத்தனையோ ஜாதிகளுண்டு. அவைகளினுடைய புத்திகூர்மையையும் செய்கைத்திறமையையும் ஆராய்ந்தறிவோமானால், மனதுக்கு இன்பமும் ஆச்சரியமும் உண்டாவதுமன்றி, புத்திவிகாசமும் உண்டாகும். சிலந்தியினால் மனிதனுக்கு விசேஷமாகத் தொந்தரவில்லை. ஏதோ ஓரிரண்டுஜாதிச் சிலந்தியின்கடி நோவைத் தருகின்றதாம்; அதுவும் அபாயமானதல்ல. சிலந்தியினாலுண்டாகும் பெருத்தலாபம் என்னவென்றால், ஈக்களை நாசமாக்குகிறதுதான். ஈக்கள் பெருத்துப்போனால் மனிதனுக்குச் சகிக்கக்கூடாத உபத்திரவமுண்டாகும். ஒரு குதிரையின் சவத்தை ஒரு சிங்கம் எவ்வளவுகாலத்தில் பட்சித்துவிடுமோ, அதைவிடச் சீக்கிரத்தில் இருபது முப்பது ஈக்கள் சேர்ந்து தின்றுவிடுமாம். இப்படிப்பட்ட ஈக்களாலுண்டாகும் தீங்கைத் தணிப்பதற்கு சிலந்திப் பூச்சிகள் மிகவும் சாதகமாயிருக்கின்றன. சோம்பேறிக்குப் புத்தி சொல்லவேண்டுமானால், 'எறும்பினிடத்தில்போய் அதனுடைய வழிகளைக்கவனித்து விவேகம் கற்றுக்கொள்' என்று நல்ல குணங்களுக்கு எறும்பை உதாரணமாகச் சொல்லுகிறதுண்டு. அப்படியே சிலந்தி முதலிய அற்பபூச்சிகளையும் சொல்லலாம்.

# THE STORY OF A TEACHER WHO GOT RID OF HIS TROUBLESOME WIFE.

## துட்டமனைவியைத் தொலைத்துச் சுகித்த உபாத்தியாயன் கதை.

(விருத்தம்.)

பெண்டுகளநேகமான பேர்கள்கல்லாமையாலே
கொண்டவன்றனையேமீறிக் குவலயமவமதிக்கச் [வாச்
சண்டையை வருத்தன்னோர்கள் சமுசாரவாழ்க்கைக் கொவ்
சண்டிகளாவாரந்தச் சரித்திரமொன்றிசைப்பாம். (1)

மதி நல்லாசிரியன் என்னு மாதாந்தப்பத்திரிக்கைக்
கிதுநல்லாகியதாமென்ன வியற்றினன்கல்விகற்ற
துதிநல்லாசிரியர்துட்டத் தோகையை விலக்குமாசான்
கதிநல்லாகியதாமென்னுங் கருத்தினையுணரமாதோ. (2)

பதிவிரதைகள் செறிந்த பாடலிபுரமென்றோதும்
பதிதனிலிளையோர்கல்வி பயிலவாழுபாத்தியாயன்
பதிதபாவனனன்னோற்குப் பசாசைநேர்மனைவிவாய்த்த
பதிவினையிந்தநூலிற் பதிந்திடப்பாடுவேமால். (3)

ஒன்றுசெய்யெனமற்றொன்றை யுஞற்றுவாள்கணவனுக்கு
நன்றிசேர்மொழியிசைக்காள் நாத்தியோரகத்தியாரை
என்றுமேயிணங்கிவாழா ளெதிரெதிர்பேசிநிற்பாள்
பன்றிபோல்தின்பாளொன்றைப் பரிந்தொருவர்க்கியாளே. (4)

விருந்திடவிசையாள்வாயில் வெடித்தசொல்லிசைப்பாளேழை
வருந்திடப்பார்ப்பாளென்றும் வாயினில்வழங்காச்சொற்கள்
பொருந்தவேயுறைப்பாளிந்தப் பூதகிதன்னைநாளும்
திருந்தவேவுபாத்தியாயன் செய்திடவியலாதாலே. (5)

இத்தகைமனையாணந்த மில்லறவாழ்க்கைக்கொவ்வாள்
செத்திடில்விசாரமெல்லாந் தீருமென்றோருபாயம்
பத்தினியோடுறைக்கப் பாதகியதனைக்கேட்டங்
கொத்திடவவளையன்னோ னோர்குழிதள்ளினானே. (6)

இவ்வகைமனைவிகொண்டிங் கில்லறநடாத்தலோடும்
செவ்விதிற்சன்னியாசஞ் சேரலேநலமதாகும்
திவ்வியகுணத்தினாலே சிறந்திடும்புத்திவாய்ந்த
கவ்வையிற்கல்விகற்ற காரிகையிணக்கநன்றே. (7)



அன்னவளங்கிருக்கு மலகைபோடெதிர்த்தட்டாக
மன்னிடவலகைநொந்து மற்றொருவிடத்திற்கேக
உன்னியவமயத்தந்த வுபாத்தியன்மனைவியாங்கே
என்னவாறுளென்றோர விட்டனன்கபிறொன்றம்மா. (8

அந்தவோர்கயிற்றைமெல்ல வங்குறைபேய்கைப்பற்றி
வந்திடும்செய்தியோர்ந்து மாகிலங்கிணறுவெட்ட
தொந்தமாயங்கோர்பூதந் தோன்றியதொத்ததென்னா
நொந்திடுமவனுக்காங்கே நுவலுவவ்வலகைசால. (9)

ஐயனேவெகுநாளாக வடியனேனங்கிருந்தேன்
வெய்யவளொருத்தியென்னை வேதனைசெய்யவந்தாள்
பொய்யலவுன்றாலிங்கு போந்தனனில்லையாயின்
தய்யலினாலங்கு தவித்துயிர்விடுத்தல்வேண்டும். (10)

இந்தநல்லுபகாரத்தை யியற்றிய வுன்றனுக்கென்
வந்தனஞ்சொல்லக்கேளாய் வனிதைநல்மாதர்தம்மை
சந்ததநான்பிடிக்குஞ் சமயநீகண்டறிந்து
வந்திடத்தொலைவேன்பொன்னைவழங்குவரதனைக்கொள்ளே. 11

அரசன்மாமகளைநானு மாசையாற்பற்றவாங்கே
வரிசையில்நீவராதே வந்திடவாவிகொள்வேன்
துரிசறவறிதியென்னாச் சொல்லியங்கனமியற்ற
குரிசிலுமுபாத்தியாரைக் குறித்தழைத்திடுமினென்றான். (12)

தானவண்போகானாகிற் றலையறுப்படைதலெண்ணி
நானலகையினையேய்க்கு ஞாயமொன்றறிவேனென்னா
ஏனனிதீயமாதிங் கெய்தினளென்றோடிப்
போனதப்பேயெல்லோரும் புகழ்ந்தனர்கலைவலானை. (13)

அலகையைவிலகவோட்டு மதிசயமதியுளார்க்கென்
தலைமைசேர்புதல்விதன்னைத் தட்சணமணமுடித்திந்
நிலமெலாமளிப்பனென்றந் நிருபன்முன்னுரைத்தவண்ணம்
கலைபயிலுபாத்தியாயன் கன்னிகையைமணந்துவாழ்ந்தான். (14)

சதியினைவிளைத்தபொல்லாச் சதியினைவிலக்கிவந்த
விதியினைமதியால்வென்ற விவேகியாமுபாத்தியாயன்
பதியினையடைந்துசக்ர பதியெனவுலகமாண்ட
கதையினைப்படிப்போர்க்கெல்லாக் கருமமுமுடிகமாதோ. (15)

சி. வே. சண்முக முதலியார்.

# THE INDUSTRIAL EDUCATION AND THE GROWTH OF COMMERCE.

## கைத்தொழிற்படிப்பும் - வர்த்தக விருத்தியும்.

கடந்த சில வருஷங்களாய் வருஷத்துக்கொருமுறை நமது நாட்டில் பற்பல விடங்களில் அருகியும் பெருகியும் வழங்கும் சாமான்களையும், விளைபொருட்களையும், ஓரிடத்திற் சேகரித்து அவற்றின் உயர்வுசிறப்பைக் கவனித்துத் தக்கவாறு பரிசளித்து அவற்றின் விருத்திக்கு ஆதாரம் புரிந்துவருகின்றனர். இவ்வாறு செய்வதால் பிறராற் பரிசுபெற விரும்பியோர்யாவரும் அச்சமயத்திற்குதவும்படி தங்கள் அறிவு நுட்பத்தைக்காட்டி வேலைப்பாடாய்ச் சில பல சாமான்களைச்செய்து முடிந்ததும் அத்தொழிலை விட்டுவிட்டு அதனால் பிறருக்கும் தங்களுக்கும் நன்மைபயப்பிக்காது போகின்றனர். இதனால் அரியவேலைகளைச் செய்யக்கூடிய தொழிலாளர் நம் நாட்டில் இருக்கின்றார்களென்று பெயர்மாத்திரம் உண்டாகுமேயன்றி அவர்களறிந்த வேலையாலாகிலும், அவர்களால் செய்யப்படும் பொருளாலாகிலும், நம் நாட்டு ஜனங்களுக்காயினும் வர்த்தக விருத்திக்காயினும் பெரும் பயன் விளைவதாகத்தோன்றவில்லை.

ஓர் தேசத்தின் விருத்திக் காதாரமாயிருப்பது அத்தேசத்தின் வியாபாரப்பெருக்கமே. அப்பெருக்கம் அந்நாட்டின் விளைபொருளாலும், தொழில் மிகுதியினாலும் உண்டாகலாம். விளைபொருள் சீதோஷ்ணநிலையையனுசரித்து விருத்தியடையும். தொழில் அங்கு வசிக்கும் ஜனங்களின் படிப்பிற்கும்,ஊக்கத்திற்கும்,தைரியத்திற்கும், புத்திக்கும் தக்கபடி விருத்தியாகும். தற்காலம் ஆங்கில அரசாட்சியாற் கிடைத்திருக்கும் சவுகரியங்களால் விளைபொருள் விருத்தி அளவுகடந்து கூடுவதற்கு வழியுண்டு. கைத்தொழிலைப்பற்றி அவ்வாறுசொல்ல இடமில்லை. இது நாட்டில்விளையும் பொருளை வாங்குவோர் மிகுதியும் இருப்பதாலும், தொழிலைவிருத்திசெய்ய ஜனங்களுக்கு ஊக்கமும், படிப்பும், பொருளும்,அறிவும் இல்லாமையாலும் என்னலாம். இது ஒருபடித்தாயினும் உற்றுநோக்கின் பொருள் விருத்தியும் அதிகம் பெருகவில்லை யென்றும், கைத்தொழிற்படிப்பு அடைய வேண்டுமென்று ஜனங்களுக்கு ஆர்வமிருந்தும் அதனையடையமுற்படவில்லை யென்றும்தோன்றுகிறது.இது வெளிநாட்டு விவகாரங்களையும், தொழின்முயற்சியையும், பயிரிடுஞ் சீர்திருத்தமுறையினையும் நம் நாட்டினர் கவனியாமையாலும், எடுத்துக்காட்டுவார் பலர் இன்மையாலும் எனத்தோன்றி முதலில் நம் நாடுவியாபாரத்திலும், விளைபொருள் விருத்தியிலும் எந்தநிலையிலிருக்கின்றதென்று எடுத்துக்காட்ட சிலவிஷயங்களை இங்கெழுதவந்தோம்.



நாட்டின்நிலைமை நாளுக்குநாள் விருத்தியாகியே வருகின்றதென்று ஒரு சாராரும், விருத்தியின்றி நாளுக்குநாள் க்ஷீணித்துக்கொண்டே வருகின்றதென்று மற்றொரு சாராரும் சொல்கின்றனர். விருத்தியிலிருக்கின்றதென்று சொல்லுகிறவர்கள் பற்பலவிடங்களின் ஏற்றுமதி இறக்குமதிக் கணக்கை எடுத்துக்காட்டி வருஷத்துக்கு வருஷம் விருத்தியடைவதைக் காட்டுகின்றனர். மற்றொரு சாரார் நாட்டின் விளைபொருள்மிகுதியும்நாட்டைவிட்டுநாளுக்குநாள்வெளிப்படுவதாலும், உள்நாட்டுத் தொழில்விருத்தி வேறுநாட்டுப் போட்டியர்ல் ஓங்காதாகிக் குறைகிறதென்றும், தொழில்விருத்தியாகி அதனால் தேசபணம் அந்நியரிடம் போகாமற் காப்பதே விருத்தியாகுமென்றும் கூறுகின்றனர். இவ்விருகூற்றையும் சீர்தூக்கிப் பார்க்கின் ஒருவர்கருத்துக்கு மற்றொருவர் கருத்து மாறுபட்டே யிருக்கின்றனர். ஒருவர் எவ்வகையிலாகிலும் வியாபாரக்கணக்கு ஏற்றமடைகின்றதென்கின்றனர். மற்றவர் கணக்கு ஏற்றமடைவதாலேயே நாட்டில் செல்வம் விருத்தியாகாது, தரித்திரம் குறையாது, பஞ்சம் வராதிராது, ஆனால் நாட்டுப்பணம் அந்நியரிடம் போகாதிருக்கவும், அந்நியநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் வியாபாரச்சாமான்கள் உள்நாட்டில் உற்பத்தியாகவும் அதனால்பல்லாயிரக்கணக்கானஏழைகளுக்கு ஜீவனமுண்டாகி அந்நியநாட்டுப் போட்டிக்கிடங்கொடுக்காதிருக்க முயல்வதாலும் ஆகுமென்கின்றனர். இது உண்மையென்றே தோன்றுகின்றது.

இவ்வாறு பொருள் அந்நியநாட்டுக்குப் போகாது வழிசெய்வதும், அங்கிருந்து வரும் சகல இறக்குமதிச் சாமான்களையும் இவ்விடத்திலேயே செய்வதும் சாமானியகாரியமல்ல. பலகஷ்டங்களுண்டாகலாம். நாம் நாட்டுத்தொழில் நிலைமையைக் கவனிக்கின் பரிதாபமடையவேண்டியதாயிருக்கின்றது. இருப்பினும் அது விருத்தியாகாது அழிந்துவிடுமென்று எண்ண இடங்கொடுக்கவில்லை. நம் நாட்டின் தொழிலை விருத்திசெய்துகொள்வதற்கு உபாயம் நம் கையிலேயே இருக்கின்றது. அதற்குண்டாகும் இடைஞ்சலை நாம் தைரியமாயிருந்து அகற்றமுற்படவேண்டும். அவ்வாறகற்றமுயல்வதில் மனச்சோர்வென்பது சிறிதுங்கொள்ளலாகாது.

“முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்திவிடும்”

என்னும் பெரியோர்கட்டளை இங்கு கவனிக்கத்தக்கது.

மேற்கண்ட இடைஞ்சல் இரண்டுவகைப்படுகின்றது. ஒன்று நமது நாட்டுப்பூர்வீகமான தொழில்களிற் சில இறந்து பட்டன, மற்றுஞ் சில க்ஷீணதசையிலிருக்கின்றன. மற்றொன்று மற்றநாட்டினர்க்குப் போலல்லாது நமக்குப்பிரத்தியேகமா யமைந்திருக்கும் வியாபார தந்திரோபாயக்குறைவாகும். அதாவது, நம்நாட்டிலுண்டாகும் பொருள் குணத்தில் சிறப்புற்றதாயிருப்பினும் பார்வையிலும் விலையிலும் புறநாட்டுச் சரக்குக்கு வாங்காதிருக்கச்செய்யும் வெளிமயக்காகும். இதில் அந்நியநாட்டினர் கைதேர்ந்தவர்காளயிருத்தலால் அவர்களோடு நாம் போட்டி போடமுடியாதிருப்பதே.

## முதல் இடைஞ்சல்.

பூர்வகாலத்தில் நமது தொழில் எந்தநிலையிலிருந்ததென்றும், எவ்வளவு கவுரவத்தை நாட்டிற்கு விளைவித்ததென்றும், அது இக்காலத்தில் அந்நிய நாட்டுப்போட்டியின்முன் தலைஎடாதாகி எவ்வாறு க்ஷீணிக்கின்றதென்றும் விரித்துச்சொல்வது அனாவசியம். கடந்த அநேக நூற்றாண்டுகளாக நம் நாட்டுப்பொருள் ஆசியாக்கண்டத்து ஏனைய தேசங்களிலும், ஐரோப்பாவிலும், அதிகமாய்ச் செலவாகிவந்தது. அரேபியர், போர்த்துக்கேசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், பிராஞ்சியர் வியாபாரிகளாகவந்து உலகத்தின் பலதுறைமுகங்களுக்கும் கப்பல்கப்பலாய்ச் சரக்குகளையனுப்பிவந்தனர். வந்தாலும் நம் நாட்டுப் பொருளாதாரத்தைக் குறைக்கவோ அல்லது அதன்படித் தாங்களும் உண்டு பண்ணிக்கொள்ளவோ அவர்கள் கருதவில்லை. அங்ஙனங்கொள்ளினும், கைத்தொழில் வன்மையில் இந்தியர் அவ்வளவுமேம்பட்டவர்களாயிருந்தமையால் அவர்களாற் செய்யப்படும் பொருள் சர்வபோட்டியுங்கடந்து தலையெடுத்து நின்றது. இதனால் அயலார் தைரியமிழந்து வாங்கிவிற்பதாலேயே போதுமான லாபங் கிடைக்கின்றதென்று கண்டு ஏராளமாய் வாங்கி விருத்திபுரிந்து வந்தனர்.

ஆனால் ஆங்கிலேயர் இந்தியாவில் பதினெட்டாம் நூற்றாண்டு மத்தியில் இராஜாங்க சுதந்தரமடைந்ததும் மேற்கண்டவாறு வியாபார விருத்திக்கு ஆதாரம் புரிவது மாறுபட்டது. தாங்களே பொருள்களைச் சித்தஞ்செய்ய வாரம்பித்தனர். தங்கள் ஆளுகைக்குட்பட்ட தேசமே விருத்திசெய்வதாக விருப்பினும் சொந்ததேசத்தின் விருத்தியைக் கவனிக்கையில் இந்தியாவின் செழுமை யவ்வளவு பெரிதல்லவென்று கண்டு போட்டி கிளம்பிற்று. அதோடு நில்லாமல் இந்தியாவிலும் ஆதரவின்றியொழிந்தது. அப்போது இந்தியாவின் பொருளாதாரங் குறைவுபட்டு க்ஷீணமடையத் தொடங்கிற்று.

(இன்னும்வரும்.)

புு. வே. சபாபதிமுதலியார்.



# UNSUITABLE TEXT BOOKS.

## பொருந்தாதப் பாட புஸ்தகங்கள்.

பிள்ளைகள் படிப்பதற்காக ஏற்பட்ட பாடபுஸ்தகங்களால் உண்டாகும் தீமைகள் மிகவும் அதிகமாகி அதனால் கோதாவரி ஜில்லா உபாத்தியாயர்கள் ஒருமஹாஸபைகூடி அந்தவிஷயத்தைக் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொள்ளலானார்கள். அந்த மஹாஸபையில் பிரதமவித்யாப்யாஸ பாடசாலை உபாத்தியாயர்களும் த்விதீயவித்யாப்யாஸ பாடசாலை உபாத்தியாயர்களுமாய் ஏறக்குறைய நானூறுபேர் சேர்ந்தார்கள். அந்தச் சபையில் செய்த தீர்மானமாவது :—

" இப்போது கவர்ன்மெண்டுபாடசாலைகளிலும் லோகல்பண்டு பாடசாலைகளிலும் வழங்கும்படி ஏற்பட்டுப் பாடபுஸ்தக சபையாராலும் கவர்ன்மெண்டாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பாடபுஸ்தகங்களில் அநேகம் எந்தெந்த வகுப்புக்காக ஏற்பட்டனவோ, அந்தந்த வகுப்புக்குச் சரியான அளவுள்ளனவாயுமில்லை; சரியான பாஷை நடையுள்ளனவாயுமில்லையாகையால், பாடபுஸ்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் கவர்ன்மெண்டு பாடசாலை உபாத்தியாயர்கள், லோகல்பண்டுபோர்டுபாடசாலை உபாத்தியாயர்கள், த்விதீய வித்யாப்யாஸ அடிப்படை பாடசாலை உபாத்தியாயர்கள், பிரதம வித்யாப்யாஸ பாடசாலை உபாத்தியாயர்கள் இவர்களுடைய அபிப்ராயத்தை அதிகமாய் அனுசரிக்கும்படிக்கும், இந்த ஜில்லாவில் இப்பொழுது உபயோகப்பட்டுவருகிற சுதேசபாஷைப் பாடபுஸ்தகங்களுடைய குணகுணங்களைக் கண்டறியும் சாமர்த்தியமுள்ள தெலுங்கு பண்டிதர்களைப் பிரதிநிதிஸபையாராக நியமிக்கும்படிக்கும், அந்த ஸபையாருடைய அபிப்பிராயத்தை யனுசரித்து அந்தந்தப் பாடசாலைகளுக்கு ஏற்றவைகளான நல்ல பாடபுஸ்தகங்களைப் பிரசுரஞ்செய்ய உற்சாகப்படுத்தும்படிக்கும் வேண்டிக்கொள்ளப்படுகின்றது" என்பதாம்.

இத்தேசத்தில் நெடுங்காலமாக தேவஸ்தோத்திரமாயும் நீதி விஷயமாயுமுள்ள இரண்டடி நாலடியுள்ள சிறுபாடல்களைப்பிள்ளைகள் சிறுபிராயத்திலே பாடம்பண்ணுவது வழக்கமாயிருந்தது. இந்தக் கவர்ன்மெண்டாருடைய பாடபுஸ்தகங்களைப்படிக்க ஏற்பட்ட பிறகு கூட பிரதமவித்யாப்யாச பாடசாலைகளில் பிள்ளைகள் டைரெக்டர் அவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் உத்தரவின்படி பதிப்பிக்கப்பட்ட

நீதிமஞ்சரி முதல்பாகம் முழுமையும் படித்துவந்தார்கள். அந்தப் புத்தகம் எட்டுப்பதிப்புப் பதிப்பிக்கப்பட்டது. 1884-ம் ௵ கடைசியாக, சென்னைப்பாடசாலைச் சுதேசபுஸ்தக சங்கத்தார் 30,000 புஸ்தகம் அச்சிட்டார்கள். அவ்வளவு புஸ்தகங்களும் செலவாகிப் படிக்கப்பட்டனவன்றோ?

ஐந்து வருஷத்தில் 140-வரியே பாராமல் ஒப்புவிக்கவேண்டுமென்று கல்விப்பயிற்சிச் சட்டம் ஏற்பட்ட பிறகு, இந்தப்புஸ்தகம் உபயோகமில்லாமற்போய்விட்டது. பிறகு தமிழ்ப் பாடபுஸ்தகங்களைப் பிரசுரஞ் செய்யும் அங்கிலேய புஸ்தகவியாபாரிகள் தாம் பதிப்பிக்கும் வாசகபுஸ்தகங்களிலேயே அந்தந்த வகுப்புக்கு வேண்டியவளவு பாட்டையும்சேர்த்துப் பதிப்பிக்கலானார்கள். 140-வரி ஒப்புவிக்கவேண்டுமென்கிற கல்விப்பயிற்சிச் சட்டம் கிராமபாடசாலைகளுக்காக ஏற்பட்டது. தமக்குப்படிப்பது சுலபமாயிருக்கிறதென்று பட்டணத்துப் பாடசாலை உபாத்தியாயர்களும் பிள்ளைகளுடைய விருத்தியைச்சிறிதும் கவனியாமல், தாமும் அந்தச் சட்டத்தை அனுசரிக்கலாயினார்கள்.

பிள்ளைகள் பாட்டுக்களைப் படிப்பதென்றால், அர்த்தம்தெரியாமல் குருட்டுப்பாடம் பண்ணுவதென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அப்படிப்படித்தது எக்காலத்திலுமில்லை, அர்த்தத்துடனேதான் நீதிமஞ்சரிப் பாட்டுப் படித்துவந்தார்கள். பாடம்பண்ணவேண்டிய தேவஸ்தோத்திரம் முதலானபாடல்கள் வயதானபிறகு படிக்கத்தொடங்கினால் மனப்பாடமாகாவாகையால், அவைகளைச் சிறுவயதில் அவசியம் பாடம்பண்ணித்தானே தீரவேண்டும். பாடல்களை மட்டும் பாடம் செய்தார்களேயொழிய அர்த்தத்தைப் பாடம் பண்ணினவரில்லை.

மேலும், இத்தேசத்தில் மிகவும் இளம்பிராயமான ஐந்துவயதிலேயே அக்ஷராப்பியாசஞ் செய்வித்துப் பிள்ளைகளைப் படிப்பிக்கத் தொடங்குவது வழக்கமாகையால், அவ்வளவு சிறுவயதில் ஆலோசனை செய்யும்படியான வருத்தத்தைக் கொடுக்கலாகாதென்று, சில வருஷங்கள்வரையில் பாடம்பண்ணும் வழக்கத்தைக் கையாண்டுவருகிறார்கள். கிளிப்பிள்ளைபோல் பாடம்பண்ணுவது புத்திக்குச் சிறிதும் வருத்தமில்லாதகாரியம். இளம்பிராயத்தில் மூளைவளருகிறதாகையால், அப்போது ஆலோசனை செய்யும்படியான வருத்தத்தைக் கொடுத்து மூளையைக் கஷ்டப்படுத்துவது புத்தியைப் பலவீனமாக்கிவிடுமென்று கண்டறிந்து இக்காலத்துப் பெரியவைத்தியசாஸ்திரி



கள் நம்முன்னோர்களுடைய நல்லவழக்கத்தை மேலாகக்கொண்டாடுகிறார்கள்.

நீதிமஞ்சரி எடுபட்டுப்போக, இப்போது அந்தஸ்தானத்தில் உபயோகமில்லாத பல அர்த்தபுஸ்தகம், திறவுகோல் முதலானவைகளை நெட்டுருப்போட நேரிட்டிருக்கிறது. ஏனென்றால், வாசகபுஸ்தகம், இந்துதேசசரித்திரம், சென்னைராஜதானி இவைகளில் சொல்லியவிஷயம் பிள்ளைகளுக்குத் தெளிவாக விளங்கும் பொருட்டு தாறுமாறாய் அர்த்தபுஸ்தகங்களெழுதிக் கண்டபடி அச்சிடத் தலைப்பட்டிருக்கிறார்கள். சொற்பசம்பளத்துக்கு வேலைசெய்யும் உபாத்தியாயர்கள் தாம் படிப்பிக்கச்சோம்பிப் பிள்ளைகள் பரீக்ஷையில் தேறவேண்டுமென்கிற ஒரு எண்ணத்தையே முக்கியமாகக்கொண்டு அந்த அர்த்தபுஸ்தகங்களை வாங்கி வாய்ப்பாடம் பண்ணும்படிப் பிள்ளைகளை நிர்ப்பந்திக்கிறார்கள். அதனால் அர்த்தபுஸ்தகங்களும் திறவுகோல்களும் பிரதிவருஷம் பதினாயிரக்கணக்காகச் செலவழியத்தலைப்பட்டிருக்கின்றன. இந்த விஷயம் டைரெக்டர் அவ் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்வரையிலெட்டி அவர்கள் இனி இப்படிப்பட்ட புஸ்தகங்களைப் பாடசாலைகளில் வழங்கக்கூடாதென்று உத்தரவு பண்ணியிருக்கிறார்கள். ஆனாலும் கீழ்வகுப்பு உபாத்தியாயர்கள் கல்விபயிற்சி சட்டப்படியே நடப்பவர்களாகையால், தாமே தகுந்த நல்லபுஸ்தகங்களைத் தேர்ந்தெடுத்துப் படிப்பியாமல் டைரெக்டரவர்களுடைய மறு உத்தரவை யெதிர்பார்த்திருக்கிறார்கள் போலும்.

தேசபாஷை உறுதிப்படவேண்டுமென்கிற உத்தேசத்தால் ப்ரதமவித்யாப்யாஸ அடிப்படைப்பாடசாலைகளில் இங்கிலீஷ் படிப்பிக்கக்கூடாதென்று வித்யாவிசாரணைத் தலைவர் உத்தரவு பண்ணியிருக்கிறார். ஆனாலும் அந்த உத்தரவை அனுசரித்தவர்கள்கூடச் சுதேசபாஷைப் படிப்பை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய முறையை அனுசரிக்க டைரெக்டரவர்களது மறு உத்தரவை எதிர்பார்த்திருப்பார்கள்போலும்.

10-15-வருஷத்திற்குமுன்னே இத்தேசத்துப் பிரதம வித்தியாப்யாஸ பாடசாலைகளில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, உலகநீதி, மூதுரை முதலானபாட்டுகளைப் பதவுரை பொழிப்புரை கருத்துரைகளோடு பூரணமாய் படித்துவந்தார்கள். பதவுரை முதலானவைகளோடு படித்ததனால் ஸம்பிரதாயமான நல்லசொற்கள் அநேகம் வாய்பாடமாயிருந்தன. நல்லசொற்கள் அநேகம் வாய்ப்பாடமாவதேயன்றோ வித்பத்தி உண்டாவதற்கு முதற்

காரணம். அக்காலத்தில் வழங்கிவந்த ராஜாங்கத்து வாசகபுஸ்தகங்கள் ராஜாங்கத்துச்சிறந்த பண்டிதர்களால் நல்ல சுலபமான தமிழ் நடையில் எழுதப்பட்டு, பாடசாலையில் படிக்கவேண்டிய பாடங்களுடன் வீடுகளில் படிக்கத்தக்க விநோதமான பலகதைகளும் சேர்க்கப்பட்டு அளவில் அதிகப்பட்டனவாயிருந்தன. இவைகளன்றியும், ஜனவிநோதினி, மகாராணி, ஜந்துவர்த்தமானஸாரம், ஞானபோதினி, விவேகசிந்தாமணி முதலான தமிழ்ப்பத்திரிகைகளிலிருந்து பலவாசகபுஸ்தகங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆகவே இத்தேசத்தில் பிள்ளைகள் படிக்கப்பாடல்களுக்கும் வாசகங்களுக்கும் குறைவில்லையே. ஆனால் நல்ல நடையிலெழுதப்பட்ட இவைகளில் சித்திரப்படங்களில்லை யென்கிற குறையொன்று உண்டு.

இதே விதமாகவே தெலுங்கிலும் வேமனசதகம், சுமதிசதகம் முதலான பத்யங்கள் பிள்ளைகள் படிக்க விசேஷமாயிருக்கின்றன. ஸ்தோத்திர பாடங்கள் தமிழ், தெலுங்கு, ஸம்ஸ்கிரதங்களில் அளவு சங்கியையில்லாமலிருக்கின்றன. எப்படி ஆங்கிலேய பாஷையில் பைபில் மதபுஸ்தகமாயிருப்பதோடு பாஷையும் விருத்தியாக உபயோகப்படுகிறதோ, அப்படியேதான் இந்த ஸ்தோத்திரபாடங்களும் பயன்படும். ஸ்தோத்திரபாடம் படிப்பதால் பிள்ளைகளுக்குபயபக்திகள் அதிகமாகி நல்லொழுக்கமுமுண்டாகும். இக்காலத்துச் சிறந்த படிப்பாளிகளுடைய அபிப்பிராயப்படி படிப்பின் முக்கியமான உத்தேசம் பிள்ளைகளுக்கு நற்குணங்கள் அமைவதே யல்லவா?

கிராமபாடசாலைகளிலே அங்லேயபாஷையையும் படிப்பிப்பது மிகவும் நலமானது. அது ராஜபாஷையாகையால் எல்லாருக்கும் தெரிந்திருக்கவேண்டுவது மிகவும் அவசியமே. முன்வழங்கிவந்த கார்த்வேயிட்டு 1-2-இங்கிலீஷ் வாசகபுஸ்தகங்கள் ஜர்மன்படிப்பு முறையில் எழுதப்பட்டு இத்தேசத்தில் அதிகமான நன்மையை விளைவித்தன. பிரதமவித்யாப்யாஸ ப்ரகடன பத்திரிகை.

---

## HOW TO PREVENT THE USAGE OF NOTES.

## குறிப்புப்புத்தகங்களின் உபயோகத்தைத் தடுக்குமுறை.

---

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட எவ்வகைப்பாடசாலையிலும், பாடபுத்தகம் பூகோள சரித்திரம் முதலிய புத்தகங்களுக்குக் குறிப்புக்களையாவது, டெக்ஸ்ட்டுபுக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்படாத மற்றெந்தப் புத்தகங்களையாவது உபயோகித்தல் கூடா



தென்றும், அவ்வாறு உபயோகிக்கும் பாடசாலைகள் துரைத்தன அங்கீகாரத்தினின்றும், திரவியசகாயத்தினின்றும் விலக்கப்படுமென்றும் வெளியிடப்பட்ட டைரக்டர் துரையவர்களின் பிரசுரத்தை முன்பு காட்டியிருக்கின்றோம். அதனால் உண்டாகும் குணாகுணங்களை இங்குச் சிறிது ஆராய்வோம்.

குறிப்புப் புத்தகங்களைப் பிள்ளைகள் வாசிப்பதனால் மூல்புத்தகங்களிலுள்ள சொல்லமைதி, வாசக நடை, கட்டுரைச் சொற்கள், மரபுச்சொற்கள் முதலியவற்றில் பழக்கமில்லா தொழிகின்றார்கள். அன்றி சொற்களின் அர்த்தங்களைத் தனிப்படப் பாடஞ்செய்வதனால் அச்சொற்களுக்குச் சந்தர்ப்பநோக்கி அர்த்தஞ்சொல்லச் சக்தியற்றவர்களாகின்றார்கள். மற்றும் இதனாலுண்டாகும் தீமைகளை உபாத்தியாயர்கள் அறியாதிரார்கள். உபாத்தியாயர்கள் இத்தீமைகளையறிந்திருந்தும் அப்புத்தகங்களை உபயோகிப்பதன் முகாந்தரங்களை உற்றுநோக்கினால் அவ்வுபாத்தியாயர்களிடத்திலேயே சிலகுறைவுகள் காணப்படுகின்றன. அவை எவையெனின்:—

சாதாரணமாய், ஒரு பிரைமெரிகிரேட் உபாத்தியாயர் தாம் தேறியிருப்பது நான்காம் வகுப்பாகிய பிரைமெரி பரிட்சையாகும், நான்காம்வகுப்பில் தேறியவர் மூன்றாம்வகுப்பிற்குப்போதிக்க முட்டுபடுவார் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. உபாத்தியாயர் தொழிலுக்கென ஓராண்டு போதனாப்பியாச பாடசாலையில் பயின்றாலும் அவ்விடத்தில் தாம் கற்றுக்கொண்டது போதன முறைகளேயன்றி இலக்கிய இலக்கண நூல்கள் அன்று. ஆகவே உபாத்தியாயர் நல்ல போதனமுறைகளை அறிந்திருப்பினும் இலக்கிய இலக்கணப் பயிற்சி இல்லாவிட்டால் அவைசிறிதும் பயன் படாவாம்.

அதனால் குறிப்புப்புத்தகங்களை உபயோகிக்கக் கூடாதென வற்புறுத்தும் துரைத்தனத்தார் உபாத்தியாயர்களிடத்திலுள்ள குறைவுகளை அகன்ற முயன்றால் உயாத்தியாயர்கள் தாமே அக்குறிப்புக்களைக் கையாடாது விலகுவார்கள்.

பிரைமரி, லோயர் செகண்டரி கிரேட் உபாத்தியாயர்களை இரண்டுவருஷகாலம் போதனாப்பியாச பாடசாலையில் பயில்செய்து முதல் வருடமுழுவதும் அவர்களுக்கு இலக்கிய இலக்கணங்களைச் செவ்வனே போதித்து மறுவருடத்தில் முறைகளைப் பயிற்றவேண்டும். முதல் நான்குவகுப்புகளில் நடத்தவேண்டிய வாசகம், செய்யுள் முதலியபாடங்களை அவ்வுபாத்தியாயர்கள் முன்னரே பழகியிருப்பினும் அவர்கள் உபாத்தியாயராக வரும்போதும் இவைகளைக்

கற்றுக்கொள்ள முயலும் ஊக்கம் பிள்ளைகளாயிருந்து வகுப்பில் படிக்கும்போது இராதென்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயமாம். மேலும் உபாத்தியாயராகும்போது சொல்லிக் கொடுக்கும் அவ்வளவு விஷயங்களைப் பிள்ளையா யிருக்கும்போது சொல்லிக் கொடுக்க இயலாது.

ஆகையால் துரைத்தனத்தார் இவ்விஷயங்களில் சிறிதுகவலை செலுத்தினாலன்றிக் குறிப்புப்புத்தகங்களை உபயோகிக்கும் துர்வழக்கம் நீங்குவது அரிதாகும்.

பத்திராதிபர்.

---

## CHRISTMAS VACATION CLASSES AT SAIDAPET.

## சைதாபேட்டையில் கிறிஸ்துமஸ்விடுமுறை காலத்தில் நிகழ்ந்த உபந்நியாசங்கள்.

---

நல்லாசிரியனை வாசித்துவரும் நண்பர்கள், டிசம்பர் மாசத்துக் கடைசியில் பள்ளிக்கூடங்களுக்கு விடுமுறை கொடுப்பது வழக்கமென்று உணர்வார்கள். அக்காலத்தில் உபாத்தியாயர்கள் உபாத்திமைத்தொழிலில்லாது காலங்கடத்தலாமாதலால் அக்காலத்தை மிக்க உபயோகமானவகையில் நடத்தவேண்டுமென்று தற்காலம் அங்கிலேயர் பாடசாலைகளுக்கும், போதனாப்பியாசபாடசாலைகளுக்கும் இன்ஸ்பெக்டராயிருக்கும் மிஸ்டர் ஸ்டோன் துரையவர்கள் யோசனைசெய்து நம் இராஜதானியிலுள்ள போதனாப்பியாச பாடசாலைகளின் தலைமை உபாத்தியாயர்களையும், உதவி உபாத்தியாயர்களையும் தணிக்கை பார்க்கும் உத்தியோகஸ்தர்களையும் (Inspecting Officer) ஒருங்கே வரவழைத்து சைதாப்பேட்டையிலிருத்தி உபாத்திமைத்தொழிலினும், அத்தொழிலால் வித்தியார்த்திகள் பெரும்பயனடைவதற் கனுகுணமான பல்வேறு விஷயங்களிலும் தேர்ந்த பல நிபுணபுலவர்களைக்கொண்டு பிராணிகள், அவற்றின் தேகதத்துவம், தாவரவர்க்கவாராய்ச்சி, ரசாயனசாஸ்திரம், தேகதத்துவம், சித்திரம் வரைதல், கிண்டர்கார்ட்டன் முதலிய அரும்பெரும் விஷயங்களைக்குறித்து மூன்று வாரகாலம் உபந்நியாசமாரிபொழிவித்துக் களிப்பித்து வந்தார். அதுபோலவே இவ்வருடமும் மிஸ்டர் பிரெத்வெயிட் துரையவர்கள் மிகத்திறமை வாய்ந்த புலவர்களைக் கொண்டு மேற்கண்ட உபந்நியாசங்களை நடத்தினார்.



சைதாபேட்டையில் இவ்வுபந்நியாச மாரிபொழிந்தோர் பாலக்காடுவிக்டோரியாகாலேஜ் K.P.உக்கண்டான் உண்ணிநாயர், M.A, L.T, கவர்ன்மெண்டுமியூஜியம் அரங்காச்சாரியார், M.A, L.T., திருச்சி நாஷனல் ஐஸ்கூல் S. K. சுப்பிரமணிய ஐயர், P. P. பிரெத்வெயிட் துரை, மிஸ் கில்லிங்காம்முதலிய பெரியோராதலால் இவர்களால் அரும்பெரும் விஷயங்கள் சொல்லப்பட்டதென்றும் இதனைக் கேட்டோர் பெரும்பயனடைந்தனர் என்றுஞ் சொல்லவேண்டியது அவசியமின்றாம். உபாத்தியாயர்களையே யல்லாமல் இன்ஸ்பெக்டிங் அதிகாரிகளையுந் தருவித்து அவர்களுங்கேட்டுப் பயனடைந்து அவற்றையுபயோகிக்குமாறு உபயோகிக்கவும், உபாத்தியாயர்களும், இன்ஸ்பெக்டிக் அதிகாரிகளும் வித்தியார்த்திகள் விருத்திக்காதாரமான பலவிஷயங்களைப்பற்றி நெருங்கிப்பேசி சாதகபாதங்களைக் கவனித்து நடக்கவும் இதனால் வழியுண்டாவதால் இவ்வகைய பெருநலன்களை யுண்டு பண்ணிய மிஸ்டர் ஸ்டோன்துரை, மிஸ்டர் பிரெத்வெயிட் துரை இவர்களுக்கு மனப்பூர்வமான வந்தனைபுரிகின்றோம்.

உபந்நியாசம் நடைபெறுங்காலத்தில் அதனைவிரும்பிக்கேட்க அழைக்கப்பட்டவர்களுக்கு வேண்டியஎல்லாச்சவுகரியமுமிழைத்து, முடிவில் ஒரு சிறந்த விருந்து மளித்து, பிரயாணச்செலவு முழுவதையும் கவர்ன்மெண்டாரே ஏற்கும்படியும், உபந்நியாசகர்களின் மனோசிரமத்திற்கேற்ற பொருள் அளிக்காவிடினும் தேகசிரமபரிகாரார்த்தமாயிருக்கும்படிச் சிறிது சன்மானமளிக்கும்படியும் ஏற்பாடு புரிந்த அத் துரையவர்களுக்கு யாது கைம்மாறளிக்கப்போகின்றோம். இவ்வுபந்நியாசத்தால் என்ன நலன் விளையலாமென்று கருதி ஏற்பாடு புரிந்து நடத்தினரோ அந்த நலனை உண்டாக்குமாறு உபாத்தியாயர்களை நாமும் வேண்டுகின்றோம். இவ்வகைய உபந்நியாசங்கள் வருடந்தோறும் நடந்து உலகுக்குப் பெரும் பயன்கொடுப்பிக்கவென்று நாளும் ஈசனைப்பிரார்த்திக்கின்றோம். இவ்வுபந்நியாசங்களிற் கையாண்ட அரும்பெரும் விஷயங்களை யொருவாறு சங்கிரகித்து எழுதலாமென்று எண்ணினோமாயினும் விரிவஞ்சி விடுத்தோம்.

மேற்படி உபந்நியாசத்தை விரும்பிக்கேட்டுப் பயனடைந்தவர்களில் ஒருவராகிய தஞ்சாவூர் டிரெயினிங் ஸ்கூல் முதலுதவி உபாத்தியாயர் ம-ா-ா-ஸ்ரீ, C. கோபால ஐயங்கார் அவர்கள் அன்பின் பெருக்கால் இயற்றியுள்ள சில பாடல்களை யடியில் பதித்துள்ளோம்.

1. திருவளரும் மறைவிளங்கும் சென்னைமகா
 ராச்சியத்தின் சிறப்புத் தோன்ற
கருவிருளாம் பிரிவென்னுங் கடும்பெயரைக்
 கரைக்கவந்த கதிரோன் போன்ற
பெரும்புலவர் பலருக்குளிவரொருவ
 ரெனப்பெரியோர் புகலுமாறு
அரும்பெயராம் பிரேமித்வெயிட்டு
 எனும்பெயரை வகித்ததுரை அண்ணலே கேள்.

2. நின்னும்ப் பிரிவிரண்டுள் முன்பிரிவின்
 அசைகுறைய நிற்கும் பிரத்து
என்னுமப் பதப்பொருளை இயம்புவார்
 பெரியோர்கள் சுவாசமென்று
அன்னுமக் கடைப்பிரிவாம் வெயிட்டிற்கு
 அடக்கமென்பர் அறிவுள்ளோர்கள்
இன்னுமப்பத நிலமை அறிந்தார்கள்
 தவவல்லோர் அல்லார்யாரே.

3. தவத்துடையோர் சற்குணங்கள் சாந்தம் பொறு
 மையடக்கஞ் சமத்துவமாகும்
மனத்திடையே வலிவன்பு அனுதாப
 மெனுமிக்க வாண்மையெல்லாம்
தனித்துறையு மிடமின்றி ஏமாந்த
 வெகுகால விடுக்கண் நீங்க
சனித்த பெரும் தகவுடையோய் நின்பெயரின்
 சிலாக்கியத்தைச் சாற்றலாமோ.

---

## TIT-BITS.

### விநோதக்கூற்றுக்கள்.

ஓர் ஊரில் அரசன் ஒருவன் இருந்தான். அவன் நாட்டின் பாது காப்புக்காக திரண்டசேனைகளைச் சேகரித்துப் போஷித்து வந்தான். அச்சேனையில் கரி, பரி, தேர், காலாள் ஆகியபடைகள் அபரிமித மாய் இருந்தன. அரசன் இவ்வாறு இருக்க ஒருநாள் குரங்காட்டி ஒருவன் சில குரங்குகளைக்கூட்டிக்கொண்டு அரசன் அரண்மனையைக் குறுகினான். அங்கு அரசன் மந்திரி முதலாயினோர் சூழவிருந்தனன்.



அக்காலத்து, குரங்காட்டி தன் குரங்குகளுக்கு முன்னரே பழக்கி யுள்ள வித்தைகளைக்காட்டக் கையில் கோல் ஒன்றை எடுத்தான். கோலெடுத்தால் குரங்கும் ஆடுமன்றோ? அவன் அக்குரங்களுக்குப் போர்வீரரைப்போல் துப்பாக்கிகளை எடுத்தல், குறித்தல் முதலிய தொழில்களைப் பழக்கஞ்செய்திருந்தான். அவன் அதற்கான குறி ப்பு மொழிகளைச் சொல்லும்போதே குரங்குகள் ஒழுங்காகவும், விரைவாகவும் துப்பாக்கிகளைப் பிடித்து நின்றன.

இதைக்கண்ட அரசன் மந்திரியைப்பார்த்து நாம் வீணேபடை களை வைத்திருப்பதில் யாதுபயன்? இத்தகையகுரங்குகளைப்பாதுகாத் தாலும் பயனுண்டு. இனிச்சேனைகள்வேண்டுவதில்லையென்றான். உடனே மந்திரி அரசன் ஆணையைத்தடுத்து, அரசே! இது அடாது. சேனையை நீக்குவது சிறப்பன்று. பகைவர் வந்தபோது குரங்கு யாதுசெய் யும்? என்றான். அரசன் மந்திரிமொழியை மறுத்து ஏன் அப்படிச் சொல்கின்றீர்? குரங்காலாகாத காரியமும் உண்டோ? சீராமனுக்கு ஜயமுண்டானது குரங்கினாலன்றோ? வீணே பணச்செலவு செய்வதில் பயனின்று. சேனைகளை அனுப்பிவிடும் என்று கட்டளை இட, மந்தி ரியும் மன்னன் மனம்போல் செய்து விட்டு திரண்ட குரங்குகளைத் தருவித்துப் பழக்கிச் சேனையாக்கினான். அது கண்ட அயல்நாட்டு அரசன் இந்த மன்னன்மீது படையெடுத்து வர, குரங்குகள் கூடி எதிர்க்கவந்தன. உடனே அயல் அரசன் மந்திரி பட்டாணிமூட்டை ஒன்றைத்தருவித்து, குரங்குகளின்முன் தெளித்தான். உடனே குரங்கு கள்கையிலிருந்த ஆயுதங்களை எறிந்துவிட்டு பட்டாணிக்குப் பரிந் தோடின. அயலரசன் ஆயாசமின்றி பகைவன் நாட்டைக் கைபற்றிக் கொண்டான். இவ்வாறே சிலர் மதியீனத்தால் செய்வதறியாமல் செல் வத்தை இழக்கின்றனர்.

---

## NEWS AND NOTES.

### சமாசாரக் குறிப்புக்கள்.

மிஸ் கெலர்மேன் என்னும் மாது தேம்ஸ் நதியில் 4 மணி நேர த்துக்குள் 13 மைல் நீந்தினளாம்.

* * *

இங்கிலாந்து வாசி ஒவ்வொருவனும் வருஷம் ஒன்றுக்கு 173 பவுண்டு உருளைக்கிழங்கு தின்கிறானாம். ஆனால், இந்தியாவில் ஒவ் வொருவனும் 3 மூட்டையரிசி சோறு தின்கிறான்.

* * *

இந்தியாவில் பிறக்கிற இந்து ஜனங்களையெல்லாம் கணக்கிட் டால் ஒவ்வொரு இந்திய சுதேசியும் சராசரி 24 வயதுக்குத்தான் இருக்கிறான். ஆனால் சீமையில், 44 வயதாகிறதாம்.

ஜப்பானில் ஒரு பெண்ணுக்கு விவாகமானவுடன், அந்தப்பெண் தன்னைப் பெற்று வளர்த்ததற்கு உபகாரமாகப் பெற்றோருக்கு இனும் கொடுப்பதுவழக்கம். இந்தியாவிலும் அப்படிப் பெண் உபகாரம் செய்யாவிட்டாலும் பெற்றோரை தொந்தரவு செய்யாமலிருந்தாற் போதாதா?

***

மேலைச் சைனாவுக்கும் திபெத்துக்கும் மத்தியிலுள்ள மலையில் ஒருபடி இருக்கிறதாம். அதில் 20,000 படிகள் இருக்கின்றனவாம். இவை கள்பளபளப்பான வெண் கற்களால் செய்யப்பட்டிருக்கின்றனவாம். மொத்தவுயரம் 5,000 முதல் 11,000 ஜாதியடிவரை யிருக்குமாம். எவர்காலத்தில் யார் நிர்மாணித்ததோ அறியோம்!

***

கிரீன்வுட் என்னுமிடத்தண்டையிலுள்ள ஒரு காட்டில் சுமார் 50 வருஷங்களுக்குமுன் பிடித்த தீ இன்னு மெரிந்துகொண்டிருக்கிறதாம். அதை அணைப்பதற்காக எத்தனை லக்ஷம் ரூபாயோ செலவு செய்தும் ஏராளமான தண்ணீரைக்கொண்டு அவித்தும் இன்னும் அவியவில்லையாம்.

***

I. ஓர் மடைய வயித்தியம்:—திருவனந்த புரத்தைச்சார்ந்த அசாக்கிசா பாண்டியென்னும் ஊரில் ஒருபெண்பிள்ளை தன்னுடைய நான்குபிள்ளைகளுக்கும் பேதிக்குக் கொடுக்கக்கருதி, பெரம்தம்பாவென்னும் பூண்டைபிடித்துச் சாறுபிழிந்து, இரண்டுபிள்ளைகளுக்கு வாயில்வார்க்க மற்றிரண்டு பிள்ளைகள், (தம்தாய் பேதிமருந்து கொடுக்கிறாளே என பயந்துகொண்டு) ஓட்டம்பிடித்துவிட்டார்கள், மேற்படியாள் இரண்டுபிள்ளைகளுக்குக் கொடுத்துவிட்டு ஓடிவிட்ட பிள்ளைகளைப் பிடித்துவருமுன்னர்; பூண்டின்சாறு குடித்தபிள்ளைகள் இறந்துவிட்டார்கள். இதைக் கண்ட பந்துக்கள் இறந்த காரணத்தை யறியும்பொருட்டு இடித்துச் சாறுபிழிந்த பூண்டைப் பார்க்கையில், அதில் ஓர் சிறியநாகம் சுற்றுண்டும் இடிபட்டு மிருந்தது. இது பூண்டோடு இடிபட்டதில் தன் விஷத்தைக்கக்கினதாகத் தெரியவருகிறது. இப்படியே நம் நாட்டுத் தாய்மார்கள் அறியாப் பேதமையால் குழந்தைகளுக்கு மருந்துவார்ப்பதில் பெருநஷ்டமுறுகின்றார்கள்.

***

II ஓர் பர்வதப்பெண்:—சில வருஷங்களுக்கு முன், அமெரிக்காவிலுள்ள இந்தியநாட்டில் கிறுக் (Mrs. Craig) என்னும் ஓர் சீமாட்டியிருந்தனள். அச்சீமாட்டியின் நிறை எண்ணூறு இராத்தலாம். இவள் காதலர் நிறையும் அம்மட்டுண்டாம். இவ்விருவரும் வெளியிற் புறப்படுவதாயின் தனித்தனி ஒருவண்டி வேண்டியது போலும்.



III. தையற்காரப்பட்சி-(*The Tailor-bird*):—நுட்பமாய் ஆராய்ந்துபார்க்கையில் இப்பிரபஞ்சத்திலே எத்தனைகோடாகோடிபேதங் கொண்ட சீவராசிகளைக் காண்கின்றோம். அதிலொன்றான தையல்காரப்பட்சியின் செயலையென்னெனவுரைப்போம். இது தான் குடியிருத்தற் குபயோகமான கூடு வேண்டும்போது மரத்திலுள்ள இலைகளிரண்டைப் பிடித்தொன்றாய்த் தன் கூரியஅலகை ஊசியாகக் குத்தி, நார்களைப் புகுத்தித்தைத்து மிருதுவான இறகுகளைப்பரப்பி அணையாக்கி முட்டையிட்டு அடைகாக்குமாம்.

***

IV. வயித்தியம்:—யாம் கண்ணுற்ற ஓர் ஆங்கிலேய பத்திரிகையில் ஓர் நிருபர் எழுதியிருந்ததாவது: 'தேள்யாரையாகிலும் கொட்டிவிட்டால் உடனே இரண்டொரு துளி கிரிசன் எண்ணெயைக்கொட்டினவிடத்தில் விட்டால் உடனே நோய் நீங்கி சுகமெய்தச் சந்தேகமில்லை' என்பதாம். இதனைப்பரிக்ஷிக்க முயலல் வேண்டும்.

***

V. நடைமச்சம்-(*The walking-fish*):-எத்தனை நூதனமச்சங்களுள. சிலபறக்கின்றன. சிலநடக்கின்றன. சில பக்ஷிகளைப்போல கூடுகளைக்கட்டி முட்டையிடுகின்றன. சில தரையில் வந்து மரங்களிலேறுகின்றன. இந்நூதன ஜல சரங்களுள் சில தரையிலியங்குவதொன்று. இது மெக்சிகோ நாட்டிலுள்ளது. அது பூரணவளர்ச்சியுற்றிருக்கும்போது இவ்வகைமச்சம் எட்டொன்பதங்குல நீளங்கொண்டதாயிருக்கும். நிறம் கருங்கபிலமாய்ப் புள்ளிகள் படர்ந்திருக்கும். இதன் காலொவ்வொன்றில் நந்நான்குவிரல்களுண்டு. இது நீரையாவது காற்றையாவது சுவாசிக்கத் தக்கதாக மிருகங்களுக்குள்ள சுவாசப்பையும், மீன்களுக்குள்ள மூச்சுக்குழலு முடையது. ஆனால் இம்மீனுக்கோ இருவகை மூச்சுக்கருவிகளும் ஒரே முறையிலே யிருக்கின்றன. இவை நீரைவிட்டுத் தரையில் வரும்போது கால்பாவி நடக்கின்றன. இவ்வகைச் சலசரத்தால்மெக்ஸிக்கோநகரத்து வாவியில்தேங்கிக்கிடக்கும்.

***

VI. பராக்கிரமசாலிகள்:— அமெரிக்காநாட்டில் புதுமைகள் அதிகம். புதுமைகளுளெல்லாம் புதுமையாக ஜான்ஹெப்னர்என்னும் ஒருவன் 41 பிள்ளைகளுக்குத் தந்தையாயும், மேரி ஆஸ்டின் என்னும் மொருத்தி 44 பிள்ளைகளுக்குத்தாயாயும் வச்சிரதேகத்துடன் சில வருடங்களுக்கு முன்னரிருந்தனராம். இவர்கள் பிணியென்பதையே யறிந்திரார்களாம்.

மதிவனப்புச்சேய்.

உ


# நூதன புத்தக விளம்பரம்.

**பழமொழிக் கதைகள்.**—சிறந்த பல பழமொழிகளை அமைத்து ஒவ்வொரு பழமொழிகளுக்கும் பொருத்தமானகதைகள் எழுதப் பட்டிருக்கின்றன. ஸ்திரீ புருஷர்களுக்கு மிக உபயோகமானது.

இதன் விலை 0-10-0.

**அதிர்ஷ்டபோக்கிஷம்.**—இந்நூல் தெய்வசக்தி, நல்லறிவு, பக்தி, ஒழுக்கம், கல்வி முதலியவற்றை ஓர் நல்லாசிரியன் போலப்போதிக்க வல்லது.

இதன் விலை 0-8-0.

**வருணபேத விளக்கம்.**—ஜாதிபேதங்கள், அவற்றின் உற்பத்திக் கிரமம், பிராமணர்களுடைய அந்தரங்க ஏற்பாடுகள், இன்னு மநேக விஷயங்களைத் தெளிவாயெடுத்துரைக்கும்.

இதன் விலை 0-5-0.

**மதனலீலாவதி.**—இது புருஷர்கள் வியக்கத் தக்க கதை.

இதன் விலை 0-10-0.

**மகாராஜாதுறவு, (மூலமும் உரையும்).**—இவ்வரசனுடைய சரித்திரம் மிக இனிமையானது. துறவின் ஏற்றமும், குடும்பத்தாழ்வும் இணைத்தெனக்காட்டி, வேதாந்த ரகசியங்களைவெளிப்படுத்த வல்லது.

விலை (பாக்கெட் சைஸ்.) 0-8-0.

☞ தபால் செலவும், வி. பி. சார்ஜும் பிரத்தியேகம்.

**மானேஜர், கலாபூஷண ஆபீஸ்,**

தங்கசாலை போஸ்டு,

சென்னை.



OFFICE OF THE REGISTRAR REGISTERED 22 MAR 1906 MADRAS.



# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

| வயுது 1. | 1906ளு ஜனவரிமீ | மாதம் 8. |
|---|---|---|


## THE INDIAN KINDERGARTEN.

## செல்வச்சிறுவர் சிங்காரத்தோட்டம்.


(147-ஆம் பக்கத் தொடர்ச்சி.)


கிண்டர்கார்டன் பாடத்தைப்பற்றிய முன்னுரை முழுதும் இதுகாறும் சொல்லப்பட்டன. இனி இக் கிண்டர்கார்டன் பாடத்தைப் பிள்ளைகளுக்குச் சரிவரப் போதிப்பதனால் உண்டாகும் நன்மைகளைச் சிறிது கூறுவோம்.

1. கிண்டர்கார்டன் போதனை சிறுவர்களுக்கு வஸ்துக்களின் நிறங்கள், தன்மை, அளவு, பாகம் முதலியவற்றைச் சரிவர விளக்கிக் காட்டுகின்றது.

2. அது பொருள்களை உற்றுப்பார்த்தல், ஒரு பொருளைப் போல் மற்றொன்று செய்தல், பொருள்களை ஊகித்தறிதல், முதலிய மனோவிருத்திகளை யுண்டாக்குகின்றது.

3. அது ஒழுங்கு, கீழ்ப்படிதல், சுருசுருப்பு, ஜாக்கிரதை, திருத்தம், காரியங்களைப் பூர்த்தியாய்ச் செய்துமுடிக்கும் ஊக்கம் முதலிய நற்பழக்கங்களை யுண்டாக்குகின்றது.

4. அது செய்தொழிலில் மனவெறுப்பை யொழித்து, இன்பத்தை நல்வழியில் அநுபவிக்கச் செய்கின்றது.

5. அது சிறுவர்கள் பாடசாலையிற் கழிக்கவேண்டியகாலத்தை நல்வழியில் உபயோகிக்கச் செய்கின்றது.

6. அது சிறுவர்களை ஒழுங்கில் வைப்பதேயன்றி புத்தகமூலமாய்ப் பாடப்படித்து விஷயங்களை ஞாபகத்தில்வைக்கும் சிரமத்தை

முற்றும் ஒழித்து, பாடத்தைப் படிக்கவேண்டுமே என்னும் வருத்தத்தையும், மனவெறுப்பையும் அகற்றுகின்றது.

7. அது பிள்ளைகளைக் கணிதசாஸ்திரத்தில் வல்லவர்களாகவும், சித்திரம் எழுதும் விஷயத்தில் அறியவேண்டிய முக்கியாம்சங்களில் வல்லவர்களாகவும் செய்கின்றது.

8. அது நாளேற்றத்தில் வாசகம், எழுத்து, கணிதம், பூகோளம், சரித்திரம், சித்திரம் முதலிய பாடங்களில் பூரணவிருத்தியையுண்டாக்குவதன்றி இப்பாடத்திற் பழகாத பிள்ளைகள் பலவருஷங்கள் பழகியும் அறிந்துகொள்ளமுடியாத விஷயங்களைப் பல மாதங்களுக்குள் சரிவர வுணர்த்தி உலகஞானத்தை மிகுதியும் உண்டாக்குகின்றது.

9. அது சிருஷ்டிப்பொருள்களின் குணகுணங்கள், செயல்கள், முதலியவற்றை பிரத்தியக்ஷமாய்ச் சிறுவர்களுக்கு உணர்த்துவதனால் பிள்ளைகளுக்குத் தெய்வநிச்சயமுண்டாக்கித் தெய்வத்தின் மகிமையையும், பிரதாபத்தையும் நன்குவிளக்கும்.

## THE SWAN.

### அன்னப்பறவை.

லண்டன் பட்டணத்துக்கடுத்த தேம்ஸ் ஆற்றங்கரையில் அன்னப்பறவைகள் இப்போது அதிகமாயிருக்கின்றன. அவைகள் மிகுதியாய் மச்சங்களை அழிக்கின்றனவென்றெண்ணி, அநேகர் அவைகளைத் துரத்த முயன்றிருக்கின்றனர். கொஞ்சகாலத்திற்கு முன் அன்னப்பக்ஷிகள் அங்கே வெகு அரிதாயிருந்தனவாம். இப்போது அந்நதிக்கரையிலுள்ள மரங்களினிலைகளை எண்ணினாலும் எண்ணலாம். அவைகளை எண்ணிமுடியாது என்று சொல்லுகிறார்கள். நீரிலேயே விளைகிற ஒருவகைத் தானியமும், நீரோரங்களிலிருக்கின்ற பற்பல கோரைகளுமே அவைகளுக்கு ஆகாரம். அவைகளுக்கு மிகவும் ரசமானவுணவு மீன்முட்டைகளே. அவ்வாற்றங்கரையிலுள்ள விருக்ஷங்களநேகம் தழைந்து நீருக்குள்ளாழ்ந்திருக்கும். அக்கிளைகளினுனியில் மீன்முட்டைகள் தோரணம்போல் வரிசையாய்த் தொங்குவதுகண்டு, அந்தப் பக்ஷிகள் வேண்டுமென்று தங்களுக்காகவே அப்படிச் செய்திருப்பதாய் நினைத்து மிகவும் களிப்புற்றிருக்கும். இம்மாதிரி சிறந்த உணவு அவைகளுக்கில்லாவிட்டால் அவைகளின் இரை சரியாய் ஜீரணமாகமாட்டாதென்று சிலர்



சொல்லுகிறார்கள். எவ்விதமான உணவாயினும் ஜீரணத்திற்குக் கொண்டுவரும்படியான வல்லமை அப்பக்ஷிகளின் கல்லீரலுக்கு உண்டென்று வேறுசிலர் உறுதியாயுரைக்கின்றனர். ஆயினும் அவைகள் மீன்முட்டைகளை அதிகமாய் அழிக்கின்றனவென்பதுமாத்திரம் வாஸ்தவமே. அதற்காகவே மீன்களில் ஆசைகொண்ட அநேகர் அவ்வன்னங்களைத்துரத்த வெகுவாய் முயன்றார்கள். அது அசாத்தியமாய்ப் போய்விட்டது. அன்னங்கள் ஒருபோதும் தோல்வியடையத்தக்க பறவைகளல்ல. அவைகள், கப்பல் தள்ளுகிற துடுப்பின்மேலறைந்த அறையானது அதைப் பிடித்திருந்தவன் கையை ஒருமணிநேரம் வரையில் ஒன்றிற்கும் உதவாததாய்ச் செய்துவிட்டதாம். சிலகாலத்திற்குப்பிறகு பறவைகளைக் கூடுகளிலிருக்கும்போது அடித்தவர்களைத் தண்டிக்கும்படி சட்டமேற்பட்டுப்போனபடியால் ஒருவரும் அதன் கிட்டவே போகக்கூடாமற் போய்விட்டது.

முற்காலங்களில் கூடுகளிலிருந்து பக்ஷிமுட்டைகளை எடுக்கவே கூடாது. இங்கிலீஷ் துரைத்தனத்தாருடைய அடையாளமில்லாமலும் உத்தரவில்லாமலும் அந்தப் பக்ஷிகளைக்கூட வைத்திருக்கக் கூடாது. அப்படி ஒருவர் வைத்திருப்பதை மற்றொருவன் திருடினால் அது பெரும்பிழை. அதற்கு அக்காலத்திலிருந்த தண்டனை என்னவென்றால், அப்படி திருடின பறவை அகப்பட்டால் அதை நேராய் நிமிர்த்திவைத்து அதின் தலையளவு நிரம்பத்தக்க உணவை, திருடினவன் சொத்துக்காரனுக்குக் கொடுக்கவேண்டியது. அப்பறவை அகப்படாவிட்டால் வேறேதாவது ஒன்றை முன்போல்வைத்து அப்படியே செய்யவேண்டியது. பூனைகளைத் திருடினாலும் இப்படித்தான் தண்டனை. ஹம்ஸபக்ஷியை ராஜாக்களும் மற்றுமுள்ள பெரியமனிதர்களும் தனவான்களும் விசேஷமாய் வளர்த்துவந்தார்கள். பணங்கிடைக்காத முற்காலத்திலேகூட ஒவ்வொரு பக்ஷியின் விலை இருபத்தைந்து ரூபாய்க்கு அதிகமாயிருந்தது.

அன்னங்கள் ராஜாக்களுக்குரிய பறவைகளேயொழிய வேறல்ல. அதைக் காக்கவேண்டிய வழிகளைப்பற்றி அத்தேசத்தார் ஒருமாதிரி சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை நடத்தவேண்டிய அதிகாரம் சிலபேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகளுக்கு முத்திரைபோடுகிறவிதம் எப்படியென்றால், அவைகள் குட்டியாயிருக்கும்போது பிடித்து, பெரிய பக்ஷிகளுக்குப் போட்டிருப்பதுபோலவே, அவைகளுக்கும் ரக்கைகளில் முத்திரையடித்துப் புத்தகத்தில் பதிவுசெய்துகொள்வார்கள். இப்படியே முத்திரைபோட்ட பக்ஷிகளைக் கணக்கிட்டுவைப்பார்கள். முத்திரையில்லாத பக்ஷி

யொன்று புதிதாய் அகப்படுமானால் அதையும் உடனே பிடித்து முத்திரையடிப்பார்கள். ராஜாங்கத்தார்தவிர மற்றெவரும் பிடித்து முத்திரையிடக்கூடாது.

அன்னக்கூடு, குருவிக்கூடு முதலியவைகளைப்போல அழகானதல்ல. வைக்கோல்களையும் புற்களையும் துரும்புகளையும் குச்சிகளையும் சேர்த்து மொத்தமாய்க் கட்டியிருக்கும். அந்த நதி, கரைபுரண்டு வெள்ளம்வரும்போது அக்கூடுகளை மேலே தூக்கிக்கொண்டுபோம்படியான சக்தியைக் கடவுள் அவைகளுக்கு அளித்திருக்கிறார். மரங்களொன்றும் அடர்ந்திராமல் நன்றாய் வெயில்காயும்படியான வெளிகளிலேயே அவைகள் விசேஷமாய்க் கூடுகட்டுகின்றன. நமக்கு யாதொரு தீங்கு நேராமல் காக்கின்றவர்களிருக்க நாம் எங்கேயிருந்தாலென்னவென்று அறிந்துதான் அவைகள் அப்படிச் செய்கின்றனவோ? அக்கூடுகளில் அன்னப்பேடைகள் ஒவ்வொரு தடவையிலும் ஐந்துக்குக்குறையாமல் எட்டுக்கு உயராமல் முட்டையிடும். அம்முட்டைகள் ஒருமாதிரி பசுமை கலந்த வெளுப்பாய் நாலங்குல நீளமிருக்கும். ஒன்றரைமாதத்திற்குப் பிறகு அம்முட்டைகளின் பசுமை நிறம்மாறிக் கொஞ்சங்கொஞ்சமாய் வெளுக்க ஆரம்பிக்கும். தாயன்னமானது அடைகாக்கும் காலமெல்லாம் வெகு ஜாக்கிரதையாய்க் கிட்ட வேறொன்றும் நாடவொட்டாமல் காத்துக்கொண்டிருக்கும். அப்புறம் அது குஞ்சுபொரித்து நாளடைவில் வெளுத்துவரும். அதன் தாய் தன் குட்டிக்கு நல்ல வெண்மை நிறம் வந்ததென்று கண்டால் அதன்பிறகு ஒரு நிமிஷங்கூட அதைத் தன்னண்டை வைத்திராது. இளமைமுதல் வருந்தினால் அல்லது பிற்காலத்தில் தனக்கு இரைதேடிக்கொள்ளத் திறமிராதென்று உடனே துரத்திவிடும். அப்புறம் அதன் வழியை அது பார்க்க வேண்டுவதுதான். அப்போதே அவைகளை இறகை மடக்கிக்கட்டாவிட்டால், அவை ஆகாயத்தில் வெகுதூரம் பறந்துபோய் அங்கிருந்து பூமியெங்கும் ஆராய்ந்து பார்த்துத் தனக்கு எந்தவிடம் நல்லதாயும் ரம்மியமாயும் மிக்க இரை கிடைக்கத்தக்கதாயும் தென்படுகிறதோ அவ்விடம்போய்ச்சேர்ந்து அங்கே யாதொரு தீங்குமில்லாவிட்டால் நெடுநாள் அங்கேயே குடிபுகுந்திருக்கும். அதன் தாயன்னமும் தனக்குத்தக்கதான ஆணன்னத்தைத்தேடி அதனுடன் களிப்புற்றிருக்கும்.

அன்னப்பறவை நெடுநாள் ஜீவித்திருக்கும். சில முன்னூறு வருஷம் வரையிலும் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அத்தேசத்



தார் ஐம்பது அறுபதுவருஷத்திற்கு அப்பறவைகளைக் குத்தகைக்கு விட்டுவைப்பதுண்டு. அம்மாதிரி அநேகர் வளர்த்து எழுபது எண்பது வருஷம் அவைகள் பிழைத்திருக்கக் கண்டிருக்கிறார்கள். முன் இங்கிலாந்தில் அரசாண்டுகொண்டிருந்த ஓர் அரசி இவ்வழகிய பக்ஷியொன்றை வளர்த்தாள். அது ராஜசபைகளில் வந்து விநோதமாயிருப்பதில் மிகவும் விருப்பமுள்ளது. அதன் தைரியமும் பலமும் வியக்கத்தக்கதாயிருந்தது. ஆற்றுவெள்ளத்தில் எவ்வளவு பெரிய பதார்த்தத்தைத் தள்ளிவிட்டாலும் அதை எடுத்துக்கொண்டுவராமல் திரும்பாது. அவ்வளவு வலிமை சிறந்த நாய்களுக்குக்கூடக் கிடையாது. கடையில் பெரிய வாத்துப்படையோடு தானொன்றாய் எதிர்த்து இறந்துபோயிற்றாம்.

ஒரு ஹம்ஸம் தினந்தோறும் தன் எஜமானன் வீட்டுக்கு வரவேண்டிய காலந்தப்பாமல் கிரமமாய் வந்துகொண்டிருந்தது. ஒருநாள் வரவில்லை; என்னவென்று போய்ப்பார்த்ததில், தெருவில் ஒருவன் வைத்துக்கொண்டிருந்த தின்பண்டத்தை அடித்துப் பிடுங்கிக்கொண்டு ஆற்றின் நடுவில் உட்கார்ந்து ஒருமாதம்வரையில் அவ்விடத்தைவிட்டு வாராமல் அங்கேயே வாழ்ந்திருந்ததாம்.

மேலும் அவைகள் தமது கூடுகளையுயர்த்தும் விதங்களைச் சிலர் சொல்ல யாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவைகளின் முன்னறிவைக் கேட்டால் யாவரும் அதிசயிக்கத்தக்கதாயிருக்கும். இதற்குப் பல திருஷ்டாந்தங்களுண்டு. அன்னப்பேடொன்று தனக்குக் கூடுகட்டிக்கொண்டு ஐந்தாறு முட்டையிட்டுப் பெரிய சம்சாரியாயிருந்தது. அதற்குத் தன் பக்கத்திலிருந்த அன்னங்களிடத்திலெல்லாம் மிக்கநேசமுண்டு. அதை மற்றவைகளெல்லாம் மேலாய் மெச்சிக்கொண்டிருந்தன. ஒருநாள் அது மிக்க அவசரத்துடன் புல், பூண்டு, செத்தை, குச்சி முதலிய சாமக்கிரிகளைக் கொண்டுசேர்த்துத் தன் கூட்டை முன்னிருந்ததைவிட இரண்டரை அடி உயர்த்திற்று. அன்றையதினம் ராத்திரி பெருமழைபெய்து அவ்விடத்தில் வெகு சேதம் நேரிட்டது. அந்தத் தீர்க்கதரிசியான அன்னப்பறவைமாத்திரம் தன் குஞ்சுகளுடன் அந்த வெள்ளத்தின் மேல் நின்றுகொண்டிருந்தது. இப்படி மனிதர்க்கு அசாத்தியமான செயல்களை அவைகள் செய்கின்றன. ஆதலால் செயற்கையறிவைப்பார்க்க இயற்கையறிவே மிக்கதென்னலாம்.

ஜனவிநோதனி.

# INDUSTRIAL EDUCATION AND THE GROUTH OF COMMERCE.

## கைத்தொழிற் படிப்பும், வர்த்தக விருத்தியும்.

(156-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இந்திய நாட்டுக் கைத்தொழிற் சரக்குகள் ஐரோப்பாக்கண்டத்திற்குத் தாராளமாய்ப்போய் விலைபடாதிருக்கக் கடுமையான ஏற்று மதித்தீர்வையும், ஐரோப்பாவிலிருந்து இந்திய நாட்டுக்கு எல்லாச் சாமான்களும் எளிதில் வந்து விற்பனையாமாறு மிகச்சுலபமான இறக்குமதித் தீர்வையும் போடப்பட்டன. இதனை யுற்று நோக்கின் இந்தியச்சாமான்கள் சுலப செலவிலாக்கப்படுவதால் கூலி அதிகங்கொடுத்துச் செய்துகொள்ளவேண்டிய தேசத்தில் இச்சரக்குகள் மலிவா யிருக்குமாதலால் ஜனங்கள் இதனையே வாங்கமுற்படுவார்களென்றும், கொஞ்சம் விலைகூடியே யிருந்தால் வாங்குவோர் கஷ்டப்படுவார்களென்றெண்ணி அவ்விலையை அதிக தீர்வையால் அதிகப்படுத்தி வருவாயை மட்டுப்படுத்திய தென்பது விளங்கும். இதனால் தொழிலே நசிக்கும். தொழில் நசிப்பதால் உள்நாட்டில் மிதமாய் அச்சரக்கு வேண்டுவோருக்கு உதவுமாறு உற்பத்தியே யில்லாதொழியவும் அயல் நாட்டுச்சரக்கை நாடும்படியுமமையும். அயல் நாட்டுச்சரக்கு சுலபமாய் யாவர் கைக்குமெட்டும்படி இறக்குமதித்தீர்வையின் பளுவையுங் குறைத்திருப்பதால் இரண்டிடத்தும் போட்டி அறவே இல்லாதொழிந்தது.

இதனால் கைத்தொழிற் சரக்கின் உற்பத்தி மட்டுப்பட்டது. அந்நியநாட்டினர் தொழிலுக்கு ஆதாரமாயிருப்பது இந்நாட்டுச் செழுமையாலுற்பத்தியாகும் விளைபொருள்களே. இவ்விளைபொருள் விற்பனை அதிகமாகவழியுண்டாயிற்று. தொழில் விருத்தியாலாகும் சரக்கு ஏற்றுமதியாவதற்குப் பதில் அந்நிய நாட்டுத் தொழில் விருத்திக்கு ஆதாரமான பண்டங்கள் இங்கிருந்து போக ஆரம்பித்தன. இதனை யாதிகாலத்திலேயே யுணர்ந்த பெரிய மேதாவியாகிய மிஸ்டர் வில்சன் போன்றவர்கள் "சமமான போட்டியால் ஒருபோதும் வெல்ல முடியாத ஒரு சார்பான ஜனங்களை கிரமமற்ற இராஜாங்க தந்திரோபாயத்தால் கடைப்படுத்துவது முறையன்றாம்" என்று சொல்லியிருக்கின்றார்.

மேற்கண்டவகையால் நசிப்புண்ட தொழிலில் முக்கியமானது நெசவுத்தொழிலே. பதினெட்டாம் நூற்றாண்டுக்குமுன் இந்திய



ஆடைகளின் பெருமை அயநாட்டிலுள்ள ஒவ்வொருவர் வாயிலும் வெளிவராதிருந்ததில்லை. அந்த நூற்றாண்டின் துவக்கத்திலேயே அதற்கு ஏழரைநாட்டுச்சனி பிடிக்கவாரம்பித்து அந்நாடுகளில் யந்திரசாலைகள் மிகுதியாகி இந்திய நாட்டுக்கு அதில் உற்பத்தியான உடைகளை யனுப்ப முற்பட்டதோடு அச்சனியின் துன்பமும் பெரிதாகி உருக்காட்டா தொழித்துவிட்டது. இதனை அடியிற் காட்டும் பட்டியைச்சற்று உற்றுநோக்கி யோசனை செய்தால் நன்கு விளங்கும்.

கல்கத்தாவிலிருந்து 1801வருஷத்தில் இங்கிலாந்து நாட்டுக்கு

| | | | |
|---|---|---|---|
| ஏற்று மதியான ஜவுளிச்சிப்பங்கள் | | | 6000 |
| ஷை | 1802 | ஷை | 14000 |
| ஷை | 1803 | ஷை | 13000 |
| ஷை அமெரிக்காவுக்கு | 1804 | ஷை | 14000 |

இவ்வாறே மற்றும் போர்த்துக்கல், டென்மார்க், பாரசீகவளைகுடா வருகிலுள்ள நாடுகள், அரேபியா முதலியவற்றிற்கும் ஏற்றுமதியாகியிருந்தது நாளடைவிற் குறையவாரம்பித்து 1830-ஆம் வருஷத்தோடு மிக்க கீழ்மட்டத்திற்கு வந்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்றுமதிச் சிப்பத்தொகையே இல்லாதொழிந்தது.

கல்கத்தா நகரத்திற்குமாத்திரம் இக்கணக்காகும். இதைப் போலவே சென்னை, கள்ளிக்கோட்டை, பம்பாய் முதலிய துறைமுகப்பட்டணங்களும் வியாபாரம் புரிந்து வந்தன. இந்தியாவிற்கே நடுநாயகம்போலிருந்தது சென்னை நகரமாகும். இவ்விடத்தையடுத்த ஜில்லாக்களில் மிகுதியும் அந்நியநாட்டுக்கு உபயோகமாகும் ஆடைகள் விருத்திசெய்யப்பட்டுவந்தன. இவ்விருத்தியெல்லாம் ஒழியவே விளைபொருள் ஏற்றுமதி யதிகமாயிற்றென்றும் இறக்குமதித் தொகை யதிகமாயிற்றென்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை.

எமக்குத் தாய்போலிருந்து காலஞ்சென்றமகாராணியார் இந்திய அரசை நேராக ஏற்று அரசுரிமை நடத்த முன்வந்த காலமாகிய 1857ல் இந்தியாவில் இறக்குமதியான ஜவுளித் தினுசுகளின் கிரயம் ரூபாய் ஏழரைகோடி. அவர்கள் 1877ல் இந்திய சக்ரவர்த்தினி என்று பட்ட மேற்று அரசாள வாரம்பித்தபோது அவ்வருஷத்தில் இறக்குமதியான ஜவுளித்தினுசுகளின் கிரயம் ரூபா இருபத்து நான்கு கோடியாம். இவ்வாறு அளவுகடந்து இறக்குமதிச் சாமான்களின் கணக்கு மிகுந்து வருவது இந்தியாவின் செல்வப்பெருக்கைக் குறிக்கின்றது என்று சொல்ல முன்வந்தனர்! அவர்கள் வந்தாலும் நம்

நாட்டில் வியாபாரமுறையுணர்ந்த எந்த அனுபவ சாலியாயினும் இது இந்தியாவின் செல்வப்பெருக்கையறிவிக்கின்றதென்று சொல்வானா? இறக்குமதிக்கணக்கு பெருகுவதால் அப்பணமுழுதும் எங்குபோகின்றதென்று அவனுக்குத் தோன்றாமற்போமா? (எல்லாம் அந்நிய நாட்டுக்கேயன்றோ!)

இதுகாறும் காட்டிவந்ததால் நம்நாட்டில் ஆதியில் செழுமையிலிருந்த முக்கியமாய் ஜவுளி வியாபாரமும் மற்றும் அநேகவியாபாரங்களும் இக்காலத்தில் எப்படியிருக்கின்றனவென்று விசதமாய் விளங்கலாமாதலால் இதனைப்படிப்போரே தீர சிந்தித்துத் தாங்கள் நினைத்தவாறு சமாதானம் பண்ணிக்கொள்ள விட்டு விட்டு இரண்டாவது இடஞ்சலை நோக்குவோமாக. (இன்னும் வரும்.)

பு. வே. சபாபதி முதலியார்.

---

## A LECTURE.
## ஓர் உபந்நியாசம்.

சென்ற ஜனவரி ௴ 28உ ஞாயிற்றுக்கிழமை மாலை செங்கற்பட்டு ஜில்லா சைதாபேட்டை தாலுக்கா தின்னனூர் கிராமத்திலே கைத்தொழில், விவசாயவிருத்தி என்னும் விஷயமாய் ஒரு உபந்நியாசம் நடந்தது. இதனையுபந்நியசித்தவர்கள் நம் நல்லாசிரியன் பத்திராதிபரான ம-ா-ா-ஸ்ரீ கா. நமச்சிவாய முதலியாரவர்களும், சி. குமாரசாமி நாயுடு சன்ஸ் ஏஜண்டு ம-ா-ா-ஸ்ரீ பு. வே. சபாபதி முதலியாரவர்களுமாம். அன்றுபகற்போதிலேயே அவ்வூரிலுள்ள சில கனவான்கள் முன்னின்று தண்டோரா மூலமாய் உபந்நியாசத்தின் கருத்தை ஊர் ஜனங்களுக் கறிவித்து இருந்ததால் மாலை நேரத்தில் அவ்வூர்முக்கியஸ்தர்கள் யாவரும் வெளியிடத்தில் வந்து கூடினர். முதலில் பத்திராதிபரவர்கள் எழுந்து தொழிற் படிப்பு அவசியம் வேண்டுமென்றும், அப்படிப்பு மிகுதியும் உடைய அயல் நாட்டினர் அதிக செல்வாக்கோடிருக்கிறார்களென்றும், நம்நாட்டில் தொழிற் படிப்பில்லாமையால் எந்தத் தொழிலையும் செய்யவேண்டிய முறைப்படி செய்யாமலும், செய்யும் அந்நியரைப்பார்த்துத் தெரிந்து கொள்ளாமலும் வறிதே காலங்கடத்தி வறுமை நோய்க்காளாகின்றோமென்றும், கடவுள்சிருட்டிக் குட்பட்ட எல்லா ஜீவப்பிராணிகளின் தத்துவங்களையு முற்று நோக்குங்கால் அவற்றின் படைப்பு பலகாரணங்களால் நமக்கும் உலக விருத்திக்கும் ஆதாரமென்று தோன்றுவதுபோல ஒவ்வொரு நாளும் நாம் கண்ணில் காணும் எவ்வகை வஸ்துவையும்



அந்நியர் செய்து ஏற்றமடைந்திருப்பதை நாம் உற்று நோக்கி நாமும் அவ்வாறு செய்ய முற்படுவோமாயின் பிறர் மதிக்க வாழலாமென்றும், அதனால் எல்லாரும் பயிர்த் தொழில் ஒன்றையே பெரிதாய் நாடாது ஏனைய தொழில்களையும் நாடி விருத்திசெய்யவும், அவ்வாறு விருத்தி செய்வதை யபிமானித்து நம்மவர்செலவிடவும் முன்வந்தால் ஜீவனத்திற்கு ஆதாரம் போதுமானவரையிற் கிடைத்து செழுமையாய் வாழலாமென்றும், நாட்டின் விளைபொருளை அந்நிய நாட்டுக்கனுப்பி அது வேற்றுருவுடனும், வேறுபெயருடனும் வந்து ஏராளமானபொருளை அந்நியரிடம் சேர்ப்பதை நாம்தெளிவா யுணர்ந்தும் கவலைகொள்ளாதிருப்பது நமது நாட்டுப்பெருமைக்கும், இங்கு வசிக்கும் குடிகளுக்கும், இவர்கள் பூர்வநாகரிக ஏற்றத்துக்கும், பொருந்தாதென்றும், பிறவும் சுமார் முக்கால்மணி காலம் அமிழ்தினுமினிய செந்தமிழ் நடையிற் பேசியமர்ந்தார்.

பின்னர் சபாபதி முதலியார் அவர்கள் எழுந்து விவசாய விருத்திவிஷயமாய்ப் பேசவாரம்பித்துத் தற்காலத்தில் மழையின்மையாலும், அகால மழையாலும் விளைபொருள் விருத்தி குறைந்து எங்கும் பஞ்சம் உண்டாவது உண்மையேயாயினும் நம்மாற்கூடிய அளவு பஞ்சம் பரவாதிருக்கவும் வழிசெய்யவேண்டியது விவசாய விருத்தியாலாதலால் கேவலம் பண்டைக் காலந் தொட்டுக் கையாண்டு வரும் கிருஷிமுறைகளையே இக்காலத்திலும் கையாளக்கூடாதென்றும், மாரிகுறைந்து போயினும், அதன் உதவிபெரிதும் வேண்டப்படாத வேறுபயிர்களை புதுமாதிரியில் பயிரிட்டுப் பயனடைவது நலமென்றும், நெற்பயிரல்லாது செய்நேர்த்தியிலும், தொழில் முயற்சியிலும், செலவிலும் அநுகூலஞ்செய்யும் அநேக பயிர்வகைகளிருப்பதால் அவ்வவற்றிற் குரிய முறைகளைக் கையாடுவது நலமென்றும், தத்தம் ஊரிலுள்ள ஜலாதாரத்தைத் தங்கள் சக்திக்கியன்றவாறு கவர்ன்மெண்டாரின் உதவியைப் பெரிதும் நாடாது விருத்திபடுத்தி மழைகாலத்தில் காப்போரற்று வீணாய்ப்போகும் வெள்ளப் பெருக்கைத் தேக்கிக்கொள்வது நலமென்றும், இவற்றிற்கெல்லாம் கிராமஜனங்கள் பெரிதும் ஒற்றுமையுடையோராயிருத்தல் வேண்டுமென்றும், இவ்வொற்றுமை யிருந்தால் கிருஷிசம்பந்தமான சகல விஷயங்களையும் கலந்து பேசச் சிறுசங்கங்கள் ஏற்படுத்தி அவற்றிற்கென்று வெளிவரும் பல பத்திரிகைகளையும் நூல்களையும் படித்தறிந்து பயனடைந்து நாட்டில் பஞ்சம் தலைகாட்டாதொழிக்க வழியுண்டாக்கவேண்டுமென்றும் பிறவும் பேசி முடித்தார்.

தின்னனூர்வாசி.

# THOSE WHO REPOSE IN GOD WILL NOT BE FORSAKEN.

## கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

(131-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தனதத்தன் மனைவி இனித் தன் கணவனுடைய தலை தப்பும் என்ற உறுதிகொண்டு ஓட்டமும் நடையுமாக விரைந்து நியாயத் தலைவரிடம் சென்று, தங்கள் கணக்கப்பிள்ளையின் மனைவி மரணதறுவாயில் வாய் விட்டுரைத்ததை எடுத்தியம்பினாள். நியாயத்தலைவர் தலையை அசைத்துக்கொண்டே "இந்தச் செய்தி உரைத்தவள் இன்னும் உயிரோடு இருக்கிறாளா?" என்று கேட்டார். "ஐயா, அவள் மரித்தாள்" என்று சொல்லவே; "ஆனால் தனதத்தனுக்குப் பிரதியாகக் குற்றஞ் சாட்டப் பட்டவன் எங்கே இருக்கிறான்?" என்றனர், "அவனும் நேற்றைப் பகல் துர்மிருத்யு அடைந்தான்" என்றுரைக்க, "உங்கள் கணக்கன் பெண்டாட்டி உம்மோடு வார்த்தைசொல்லக் கேட்டிருந்த சாட்சிகள் எவராயினும் உளரா?" என வினவினர். "இல்லை, என்னிடத்தில் இரகசியம் பேசவேண்டுமென்று எல்லாரையும் வெளியில் போகும்படி செய்தாள்" என்ற விடையைக் கேட்டு, நியாயத்தலைவர் "அப்படியானால், அம்மா, அந்தக் கணக்கன் மனைவி தெரிவித்த இரகசியத்தால் உனக்கு ஒன்றும் நன்மையில்லை. சட்டத்தின்படி நாங்கள் நடத்தக்கடவோம்." என்று கையை விரித்துவிட்டார். இதைக்கேட்டு திப்பிரமைகொண்டு அவள் அடியற்ற மரம்போல் நியாயஸ்தலத்தில் கீழே விழுந்துவிட்டாள். அதைக்கண்டு பரிதாபங்கொண்டு அந்த நியாயத்தலைவர், அவளுடைய கணவனைத் தூக்கிலிட்டுக் கொல்லுகிறவரையில் அவளைத் தமது உத்தியோகஸ்தர் ஒருவருடைய வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சைத்தியோபசாரம் செய்துகொண்டிருக்கும்படி சில ஆள்களை ஏவினான்.

இதற்குள் ஏழரைமணி ஆயிற்று. தூக்கிடுகிற இடத்தில் கொலைக்கள அதிகாரிகள் வந்து சேர்ந்தனர். சந்தை வெளியில் ஜனங்கள் ஆயிரக்கணக்காக வந்து கூடியிருந்தனர். நகரத்திலுள்ள பெரிய கண்டாமணியை அடித்துக்கொண்டிருந்தனர். தூக்கு மரத்தின் கீழே சுற்றிலும் திரையிட்டிருந்தது. திரையின் வெளியிலே அதிகாரிகள் நாற்காலிகளில் வரிசையாக உட்கார்ந்துகொண்டிருந்தனர். அவர்களெதிரில் ஒரு மேசையின்மேல் தூக்குவிளம்பரம் முதலிய காகிதங்கள் வைத்திருந்தன. குற்றவாளியைச் சிறைச்



சாலைச்சேவகர்கள் விலங்குங் கையுமாக அழைத்து வந்து அதிகாரிகளின் எதிரிலே நிறுத்தினர். "பொழுதாயிற்று நீ ஏதாகிலும் சொல்லவேண்டுவதிருந்தால் தாமதமின்றிச் சொல்லலாம்" என்று நியாயாதிபதிகள் சொன்னவார்த்தையைக் கேட்டுத் தனதத்தன் "நான் நிரபராதி. நெஞ்சையொளித்தொருவஞ்சகமில்லை. மனதாற நான் செய்த குற்றம் ஒன்றும் இல்லை. என்னுடைய கர்மம் என்னை இப்படி ஆட்டிவைக்கிறது. இன்னும் நான் சொல்லத்தகுவது ஒன்றுமில்லை. மனவமைதியாய் பகவத்தியானம் பண்ணிக்கொண்டிருக்கிறேன். இனி நீங்கள் செய்வது செய்க." என்று சொல்லிக் கண்களைமூடிக் கைகளைக் கூப்பிநின்றான். கொலையாளிகள் அவனைத் தூக்குமரத்தில் ஏற்றிவிட்டனர். தூக்கிடுகிற கயிற்றை அவன்கழுத்தில் மாட்டப் போனார்கள்.

"ஊரையடித்து உலைவாயில் போட்டுவந்த பாவி செத்தான், சண்டாளன் செத்தான்" என்று ஜனங்கள் கூவலானார்கள். அப்போது ஒரு காவற்சேவகன் குதிரையேறிக் காற்றாய்ப் பறந்து வருகிறதைக் கண்டு ஜனங்கள் இருபுறமாக ஒதுங்கி வழிவிட்டார்கள். அங்கி[illegible] அதிகாரிகள் என்ன அவசரமான நிருபங்கொண்டு வருகி[illegible]தரியவில்லையே என்று அவன்மேல் வைத்த கண் இமை[illegible]ல் பார்த்திருந்தனர். அவன் மேஜையின் எதிரிலே, குதி[illegible]த்திக் குதிரையை விட்டிறங்காமலே கையில் பிடித்தி[illegible]தத்தை அதிகாரியின் கையிலே கொடுத்துக் கொலையாளியை அதன்றுச் சற்றுப் பொறு என்கிற குறிப்பாகக் கையமர்த்தி[illegible]பவத்துத் காகிதத்தில் எழுதியிருந்த செய்தியைப் படித்து[illegible]ளவிலே, தனதத்தனைக் கீழே யிறக்கி மறுபடியும் சிறைச்[illegible]க் கொண்டுபோகும்படி உத்தரவளித்து, அவ்வதிகாரிகள் [illegible]ம் விட்டு அப்புறப்பட்டார்கள். ஒன்றும் உணராத தனதத்தன் செத்தவன் உயிர் பெற்றாற் போலச் சென்றனன்.

மர்மத்தை அறியாத ஜனங்கள் "இதென்ன மாயம்? இதென்ன கனவீ நனவா? செத்தான் என்றிருந்தோமே, மறுபடியும் கழுதையை இறக்கி எங்கே கொண்டுபோகின்றார்கள்? அவனுடைய சிநேகிதர்கள் கூடிப் பெருந்தொகையான பணத்தைச் சேகரித்து இந்த நியாயாதிகாரிகளுக்கு ஏதாவது பரிதானம் கொடுப்பதாக எழுதி யனுப்பினார்களோ? கடைசியாகக் காரியம் இப்படி ஆய்விட்டதே. நம்முடைய நகரம் நல்ல நகரம்! பணம் இருந்தால் போதும்! என்ன அக்கிரமம் செய்தாலும் ஏனென்று கேட்பாரில்லை. நன்றாக

இருக்கிறது நம்முடைய நியாய பரிபாலனம்" என்று பலவாறாக நிந்தித்துக்கொண்டு போனார்கள்.

கிறிஸ்தவர்கள் தாங்கள் செய்த பாதகத்தை அந்தியகாலத்தில் ஒரு மதாசாரியனிடத்தில் இரகசியமாகச் சொல்லிவிட்டால், அந்த மதாசாரியன் அந்தப் பாதகத்துக்குப் பிராயச்சித்தந்தேடிப் பாதகஞ் செய்தவனுக்குப் பாவநிவாரணம் உண்டாக்குவான் என்பதாக ஒரு ஐதிஹ்யம் உண்டு. இதன்பொருட்டு நியமிக்கப்பட்ட மதாசாரியன் ஒருவன் ஒவ்வொரு சிறைச்சாலையிலும் இருப்பான். வெள்ளிக்கிழமை காலையில் இவ்வித மதாசாரியன் பாட்யுயாநகரின் சிறைச்சாலைத்தலைவனையடைந்து "ஐயா, நேற்றிரவில் இங்கே ஒரு குற்றவாளி ஜ்வரரோகத்தால் மரித்தான். மரிக்குமுன்னே அவன் தான் கள்ளக்காசு செய்கிற ஆள்களில் ஒருவன் என்றும், அந்த ஆள்களுக்கெல்லாம் தனதத்தனுடைய கணக்கப்பிள்ளை தலைவன் என்றும், தாங்கள் செய்யும் கள்ளக்காசை இந்தக் கணக்கன் தனது எஜமானனுடைய பெட்டிகளைக் கள்ளச்சாவி போட்டுத் திறந்து நல்ல ரூபாய்களையும் சவரன்களையும் எடுத்துக்கொண்டு அவைகளுக்குப் பர்த்தியாகக் கள்ளக்காசுகளைக்கணக்குக்குச் சரியாகக்கலந்துபழையபடியே பைகளைக் கட்டிவைத்து வந்தானென்றும், இந்த வேலைக்குரிய சாமான்களெல்லாம் அந்தக் கணக்கன் தன் கையில் வைத்துக்கொள்ளாததால் தனதத்தனுடைய மாளிகையிலேயே ஒவ்வொரு பெட்டியில்வைத்து நடத்துவது வழக்கமென்றும், தன்னோடு உடந்தையாய் வேலைசெய்கேட்டுகள் இன்னார் இன்னார் என்றும், தாங்கள் அந்தரங்கமாய்க்கூடுகின்ற இடம் இன்னதென்றும், என்னிடத்தில் எல்லாச்சங்கதிகளையும் அடுத்துரைத்துப் பாவநிவாரணஞ் செய்யும்படி வேண்டினான்' என்று சொல்லுகிறு ப வீட்டு த்துரைத்தான்.

டிருக்கு

தனதத்தனைத் தூக்கிடுதலான சமயம் மிகநெருக்கமாக இருப்பதை உணர்ந்த சிறைச்சாலைத் தலைவன், இது செய்தியைக் கொலைக்களத்தில் அதிகாரிகளுக்கு அறிவிக்குமாறு, சுருக்கமாக ஒரு கடிதம் எழுதி ஒரு காவற்சேவகன் கையிற்கொடுத்துக் குதிரையேறி வாயுவேக மனோவேகமாகப் போகும்படி அனுப்பிவிட்டு, "கள்ளக்காசு செய்கின்ற ஆட்கள் தனதத்தனுடைய கொலையை நிறுத்தியிருப்பதை அறிந்தால் கட்டுப்பாடு கலைந்துபோவார்கள். அப்புறம் அவர்களைக்கண்டுபிடிப்பது பகீரதப் பிரயத்தனம் ஆகும்" என்று நினைத்து, உடனே ஊர்க்காவலாளிகள் பலரை அனுப்பி அந்த ஆட்கள் அனைவரையும் தப்பாமல் பிடிப்பித்துவிட்டான். அன்று



மாலையே அனைவரும் நியாயத்தலத்தில் கொண்டுபோய் நிறுத்தப்பட்டனர். அந்த ஆட்களில் ஒருவன் தனக்குச்சேரவேண்டிய கிரமமானபாகம் பெருமையாலே, தன் கூட்டாளிகளின் மர்மத்தை வெளிப்படுத்திவிட்டான். மதாசாரியன் சொன்னதும் இந்த ஆள் சொன்னதும் ஒத்திருந்தமையால் தனதத்தன் நிரபராதி என்பது நியாயத்தலைவருக்குத் தெளிவாயிற்று.

நியாயத்தலைவர், தனதத்தன்மேல் வீணாக உண்டான அபவாதத்துக்குப் பரிகாரம் பகிரங்கமாகச் செய்யவேண்டுமென்று எண்ணி மறுநாள் நகரினருள் முக்கியமான பிரபுக்களனைவரும் நியாயமண்டபத்தில்வந்து கூடவேண்டுமென்று அறிக்கை செய்தனர். எல்லாரும் வந்து கூடினமாத்திரத்தில், தனதத்தனைச் சிறைச்சாலையில் நின்றும் தருவித்து, நியாயத்தலைவர் தமது பீடத்தில் நின்றும் இறங்கிவந்து தனதத்தனைக் கையைப் பிடித்தழைத்துக்கொண்டு போய்த் தமது பீடத்தின் பக்கத்திலே சமானமாகச் சரியாசனத்திலே இருக்கச் செய்தார். நியாயத்தலைவருடைய சேவகன், அனைவரையும் பேசாமல் நிசப்தமாக இருக்கும்படி கையமர்த்தினான். அவ்வளவிலே நியாயத்தலைவர் எழுந்து, சிறைச்சாலையில் ஜ்வரரோகத்தால் இறந்த குற்றவாளியின் வாக்குமூலத்தை வாசித்தார். முன்னாள் மாலையில் கள்ளக்காசுவேலை செய்யும் ஆட்கள் கொடுத்த வாக்குமூலத்தையும் அப்பால் வாசித்தார். பிறகு தனதத்தன் நிரபராதி என்று எல்லாரும் அறியச் சந்தோஷத்துடன் எடுத்துரைத்தார்.

அதன்மேல் அனைவரும் சங்கீதவாத்தியம் முழங்க அதிக வைபவத்துடனே தனதத்தனை அழைத்துக்கொண்டுபோய் அவன் மாளிகையில் சேர்த்தார்கள். மறியல் செய்த பொருள்களை நியாய வுத்தியோகஸ்தர்கள் அவனிடம் ஒப்புசெய்தார்கள். தனதத்தனும் கடவுளை நம்பினோர் கைவிடப் படார் என்று நம்பி முன்போலவே பேரும் புகழும் பெற்றுப் பெருவாழ்வாக வாழ்வானாயினன்.

முற்றிற்று.

தி. செல்வகேசவராய முதலியார் எம். ஏ.

---

# THE VISIT OF PRINCE OF WALES.

## இளவரசர் வருகை.

---

இந்தியகண்டத்து ஏகாதிபத்தியத்தை ஏற்று ஒரு குடைக்கீழாண்டுவரும் மன்னர் மன்னன் திருக்குமாரராகிய வேல்ஸ் இளவரசர் தமது தந்தையார்க்குப்பின் பட்டமேற்று ஆளப்போகும் நமது

நாட்டைநேரிற்காணவேண்டு மென்னு மார்வமிகுதியால் சிலமாசங்களுக்கு முன்னரே ஜன்மநாட்டைவிட்டுப் பம்பாய்த் துறைமுகத்திறங்கி கல்கத்தாமுதலிய பட்டணங்களைக்கண்டு களித்து ஜனவரிமீ 24-தேதி வியாழக்கிழமை மாலை 4-மணிக்கு சென்னைத் துறைமுகத்திலிறங்கினர். இதற்கென்றே தனியே யமைத்திருந்த பாலத்தில் சென்னைக்கவர்னரும் ஷெரிப்முதலிய பெரியோரும் சென்று நல்வரவு கூறியழைத்துவந்து மிக்க விமரிசையோடமைத்திருந்த சிங்காரக்கொலுமண்டபத்திலமர்த்தினர். அங்கு நம் இராஜதானியிலுள்ள முக்கிய அரசர்களும், ஜமீன்தார்களும், பெரியமனிதர்களும் கூடியிருந்தனர். இவர்கள் யாவரையும் ஒருங்கே இளவரசர்கண்டு அவரவர்களின் அந்தஸ்துக்குத் தக்கவாறு மரியாதைசெய்து சிநேகம் பாராட்டி யாவர் மதிப்பையும்பெற்று நாலரைமணிக்குக் கொலுமண்டபத்தினின்று நீங்கி கடற்கரைரோட்டு வழியாக நேரேசென்று ஐகோர்ட்டருகில் திரும்பி கோட்டைமார்க்கமாய் மலைச்சாலை வழியே சென்று கவர்ன்மெண்டு விடுதிக்குச் சென்றனர். இவர் ஊர்ந்து சென்ற ரதம்போலும் வண்டிக்குப் பின்னே சுமார் 60 வண்டிகளில் அரசர்முதலிய யாவரும் தத்தமக்கு விரித்தமுறைப்படி தொடர்ந்து சென்று விடுதியில் விட்டுத்திரும்பினர்.

இளவரசர் முகதரிசனஞ் செய்யும்படியாக நம் இராஜதானியின் எல்லாப்பாகத்திலுமிருந்து இலட்சக்கணக்கான ஜனங்கள் பலநாட்களுக்கு முன்னரே சென்னைக்குவரவாரம்பித்து அன்று மாலைப்போது இளவரசர் செல்லும் வழிமுழுதும் எள்விழவும் இடமின்று என்று சொல்லும்படியாக நெருங்கியிருந்தனர். எங்கு பார்த்தாலும் ஜனநெருக்கமே. இப்பெருங்கூட்டம் இளவரசரைக் கண்டதும் ஆநந்தமேலீட்டால் செய்த ஆரவாரத்தையும், வந்தனம் புரியும் கோஷத்தையும் இளவரசர் விம்மிதத்தோடேற்று பிரதி வந்தனம் புரிய உயர்த்தியகையைத் தாழ்த்தாது வழிமுழுதுஞ் சென்றனர். இளவரசியாரின் இனியமுகம் பிள்ளைகளின் மீது அன்புடைத்தாய் காட்டும் பட்சத்தை வெளிப்படுத்துவது போன்றிருந்தது.

அடுத்தநாள் முழுதும் இளவரசர் தம்மைக்காணவரும் அரசர்களை யேற்பதும், அவர்களோடு சம்பாஷிப்பதும், அவர்கள் விடுதிக்குத் தாம்போய் மரியாதை செய்வதும், கிண்டியில் உள்ள கவர்ன்மெண்டு விடுதிக்குப்போவதும், ஐகோர்ட்டு, முதலிய கட்டடங்களைப் பார்ப்பதும், Victoria Technical Institute விக்டோரியா கைத்தொழிற் கலாசாலைக்கு அஸ்திவாரம் போடுவது முதலிய காரியங்



களில் காலங்கடத்தினர். இரவில் சிறந்தபாணவேடிக்கை நடந்தேறியது. மூன்றுநாள் நிலச்சுவான்தர் சங்கத்தினது வந்தனோபசாரப்பத்திரமும், இராஜதானிப் பொதுஜனப் பத்திரமும் ஏற்று அவற்றிற்கண்ட விஷயங்களுக்குத் தக்கவாறு பதிலுஞ் சொல்லித் தம்மைக்கண்டோருக்கும், கேட்டோருக்கும் திருப்திசெய்து, மற்றும் பலவிஷயங்களைக் கவனித்துப் பொழுதுபோக்கினர். நான்காநாளாகிய ஞாயிற்றுக்கிழமை கோட்டையிலிருக்கும் கோயிலுக்குப் போய்ச்சிற்சிலவிடங்களைப்பார்த்துவிட்டு இரவு9-மணிக்கு மைசூருக்குப் பிரயாணமாயினர்.

இளவரசர் வந்ததின் ஞாபகார்த்தமாக அநேகருக்குப் பட்டங் கிடைத்ததல்லாமல் சென்னையில் நம்மனோர் முக்கியமாய் வசிக்கும் பாகமாகிய Black Town முத்தியாலுப்பேட்டைக்கு George Town ஜார்ஜ் டவுன் என்னும் பட்டத்தையுங் கொடுத்தனர். பூர்வகாலத்து அரசர் நாட்டைச்சுற்றிப் பார்க்கவருங்கால் குடிகளின் குறைநிறைகளைக்கவனித்துத் தக்கவாறு ஏற்பாடு புரிவது வழக்கமாயிருக்க இக்காலத்தில் நம் அரசர் தம் நாட்டைச்சுற்றிப் பார்க்க வந்ததில் பட்டப்பரிசு அளிப்பதாயமைவதும் ஒருவகையில் நல்லமாதிரி என்றே சொல்லலாம். நாம் நன்மையடைந்தோம் இல்லையென்பதொருபுறமிருக்க நம்மை யுண்மையில் நேசிப்பதாகவும், நமது இராஜவிசுவாசத்தில் அவர் முழுதும் நம்பகங்கொள்வதாகவும் சொல்லியதே நமக்குப்பெருநலன் விளைவித்தது போலிருந்து மகிழ்ச்சியுண்டாக்கியதால் அவர் வரவு நல்வரவாயிற்றென்றே சொல்லலாம்.

இங்கு நேரில் வந்து அதிகநாள் இருந்து நமது அகப்புறவொழுக்கங்களை அளவளாவிப்பழகியறியாது போயினும் தாம் அறிந்து கொள்ளவேண்டிய அளவு அறிந்து கொண்டிருப்பதாக அவர்பேசிய சந்தர்ப்பத்திற் சொல்லியிருப்பதால் அவ்வறிவைக் கொண்டு நமது குறைகளையறிந்து வேண்டியகாலத்தில் நிவர்த்திபண்ணுவாரென்று நம்புகின்றோம். இது நமக்குக் கைகூடிவருமாறு எல்லாம் வல்ல இறைவன் இளவரசருக்கும் இளவரசியாருக்கும் நீண்ட ஆயுளும், தேகாரோக்கியமும், சந்தோஷமுங் கொடுப்பாரென்று மனமொழிமெய்களால் வேண்டுகின்றோம்.

பத்திராதிபர்.

# TIT - BITS.

## விநோதக்கூற்றுக்கள்.

---

### போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து.

உலகத்தில் திரவிய முள்ளோர் செல்வர் என்றும், அஃதில்லார் வறியரென்றும் எண்ணப்படுவர். செல்வமுள்ளோர் எவ்வகைக்காரியங்களையும் எண்ணியவாறே செய்து முடிக்கும் சிறப்புடையவர் ஆவர். இதனாலே "ஈட்டி எட்டியவரையில் பாயும், பணம் பாதாளம் வரையிற்பாயும்" என்னும் பழமொழியும் வழங்கி வருகின்றது. செல்வர் தாம் கருதிய கருமங்களை முட்டின்று முடிப்பர். வறியனோ "முடவன்மாட் டெழுந்த சினமேபோல்" தன் மனத்தெழுந்த எண்ணங்களை முடித்தற்கின்றி மாழ்கி நிற்பான். வறியன் நற்குண முடையனே எனினும் அவன் வையத்தில் மாட்சியடையான். செல்வன் துர்க்குண முடையனே எனினும் அவன் சென்ற விடமெல்லாம் சிறப்புறுவன். "குணம் குப்பையிலே, பணம் பந்தியிலே" என்னும் ஆப்தமொழியேயன்றி 'கல்லானே' என்னும் ஆன்றோர்வாக்கும் சான்றுபகர்கின்றது.

2. உலகியல் இவ்வாறே யாயினும் மனநிறைவில்லாச் செல்வனினும் மன நிறைவுடைய வறியனே சிறப்புடையனாவன். இதனை விளக்கும் ஒரு திருஷ்டாந்த மிங்குக் கூறுவோம்.

செல்வபுரி என்னும் நகரத்தில் தனபதி என்னும் வைசியனொருவனிருந்தான். அவன் அளகேசனே என்ன அனைவருங் கொண்டாட திரண்ட செல்வமுடையவன். அவன் அத்திரவியத்தைக் கொண்டு மனநிறைவு கொள்ளாது மற்றும் வளநிதி தேட ஆர்வங் கொண்டு வர்த்தகம் புரிந்து நாடுகள் பலவும் நாடிச் சென்றான். செல்லு மார்க்கத்தில் ஓர் உழவனைக் கண்டான். அவ்வுழவன் 'பெற்றதே பாக்கியம்' என்னும் மனநிறைவுள்ளவன், அவன் தன் உழவுத் தொழிலைச் செவ்வனே செய்துகொண்டு பெரு மகிழ்ச்சியோடிருப்பதை வணிகன் கண்டு, தன்னுள் ஆலோசிக்கலானான். "ஆகா! இவ்வுழவனிலும் நமக்குத் திரண்ட செல்வமுண்டென்பதிற் சிறிதும் ஐயமில்லை! எனினும் இவனுக்குள்ள அகமகிழ்ச்சியில் அணுவளவும் நமக்கின்றே. இஃது என்னோ! அவனை அணுகியறிவோம்" என்று உழவனைக் குறுகினான்.

வணிகன் — ஐயா உழவரே! நீர் மிகவும் மெய்வருத்தப்பட்டு உழைக்கின்றீரே; இந்நிலம் தம்முடையது தானோ?



உழவன் — ஐயா! இந்நிலம் எனக்குச் சொந்தமல்ல; நான் அவ்வளவு செல்வனன்று. யான் கூலியின் பொருட்டு உழுகின்றேன்.

வணிகன் — நாடோறும் உமக்கு இதனால் கிடைக்கும் நிவேதனம் யாதோ?

உழவன் — சுமார் ஏழணாக்கிடைக்கும்.

வணிகன் — ஏழணாத்தானா? இதைக்கொண்டு நீர் எவ்வாறு காலந்தள்ளி வருகின்றீர்?

உழவன் — "அதென்ன ஏழணாத்தானா? "என்கிறீர். நான் இப்பெருந்தொகையைக் கொண்டு தினந்தோறும் என்குடும்பத்தோடு ஜீவிப்பதேயன்றிச் சிறிது சேர்த்தும் வைக்கின்றேன்.

வணிகன் — ஆ! ஆ! இதென்ன அற்புதமாயிருக்கிறது. 'அரைப் பணத்திற் கலியாணம், அதிற் கொஞ்சம் பாணவேடிக்கை' என்பதைப் போல் காண்கிறதே. அதெப்படியையா! நீர் இப்பணத்தைக்கொண்டு தினமும் ஜீவனஞ்செய்து மற்றும் எவ்வாறு சேர்த்துவைக்கின்றீர்?

உழவன் — என் சமுசாரத்தின் தினச்செலவு மூன்றணா; பழைய கடனுக்கு இரண்டணா, தருமம் ஓரணா, ஆக ஆறணாபோக ஓரணாச் சேர்த்து வைக்கின்றேன்.

வணிகன் — நீர் தினவரும்படியைக் கொண்டு இவ்வாறு செய்து வந்தால் கடன் எப்படி உண்டாகும்?

உழவன் — ஓகோ! அப்படியா நினைத்தீர். அஃதப்படியன்று. பழயகடன்காரர் என்பது என்னைச் சிறுவயதில்போஷித்த என்பெற்றோர். அவர்கட்கு நிதம் இரண்டணாத் தருகின்றேன். தருமம் என்பது என் சகோதரருக்குக் கொடுப்பது. என் சகோதரி என்னிலும் வறியள். அவள் பிணியால் பீடிக்கப்படுகின்றாள். அவள் நிமித்தம் ஓரணாச் செலவிடுகின்றேன். சேர்த்துவைப்பதென்பது என் புத்திரனைப் படிப்பித்தல். ஏனெனின் முன்னர் என்னைப் பாதுகாத்த என் இரு முது குரவரை யான் காப்பாற்றக் கடமைப் பட்டிருப்பதைப் போல் நான் இப்போது என் தனயனைக்காப்பாற்றினால் அவன் என் முதுமைப் பருவத்தில் அன்னபானாதிகள் அளித்துப் பாதுகாக்க உரிமையுள்ளவனாவானன்றோ? இதுவே எனது வாழ்க்கை. இவ்வளவு ஊதியத்தை நிதமும் ஈசுவரன் கட்டளையிட்டாற் சாலும் என்றான்.

வணிகன் — ஆ! ஆ! நமக்குத் திரண்ட செல்வமிருந்தும் யாது பயன். இவ்வுழவன் மனநிறைவே நிறைவு. இவனுக்கே நித்தியானந்தம். நமக்கு மனநிறைவு உண்டாகுந்தனையும் சந்தோஷமென்பது அணுவளவும் அணுகாது. இனியேனும் மனநிறைவையெய்தி மகிழ்ச்சியை அடைவேன் என்று தான் கருதியவை யனைத்தையும் உழவனுக்கு உரைத்தான்.

பின்னர் அவ்விருவரும் அளவளாவிச் சம்பாஷிக்கும்போது உழவன், ஐயா! 'போதுமென்ற மனமே பொன்செய்யுமருந்து' என்னும் உறுதிமொழியை உற்றுநோக்கும் என்றான். அது கேட்ட வணிகன் உழவனுக்கு வந்தனம்புரிந்து தன் நாட்டிற்குத் திரும்பி நிறைமனப்பட்டு நல்வாழ்வடைந்திருந்தான்.

## THE PRESIDENCY ADDRESS.

## வேல்ஸ் இளவரசருக்கு இராஜதானிப்பிரஜைகள் அளித்த நல்வரவுப் பத்திரிகை.

இந்த நல்வரவுப்பத்திரிகையை நம் இராஜதானியிலுள்ளாருக்கு நடுநாயகம்போலிருக்கும் சர். S. சுப்பிரமணிய ஐயரவர்கள் பலருடைய வேண்டுகோளால் பின்வருமாறு படித்தார்கள்.

"அரசிளஞ்செல்வரே ! சென்னை இராஜதானியிலுள்ளாரும், சுதேச சமஸ்தானங்களாகிய திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டைமுதலிய விடங்களிலுள்ளாருமாகிய நாங்கள் அத்தியந்த ராஜவிசுவாசத்துடனும், அகமகிழ்ச்சியுடனும் தென் இந்தியாவாகிய எங்கள் நாட்டுக்கு நல்வரவு கூறுகின்றோம். இத்தென்னிந்தியாவிற்குத் தலைநகராயிருக்கும் சென்னையிலேதான் சுமார் இருநூற்றெழுபது வருடங்களுக்குமுன்னே ஆங்கிலேயர் பெரிதும் அபிமானித்துப்புகழும் ஜ்யார்ஜ் என்னும் பெரியோர் பெயரால் வளைத்த கோட்டையினலங்கள் கடற்றுறையிலிருந்து பார்க்கின் தங்கள் கட்புலனுக்குத் தோன்றும். இவ்விடமே ஆங்கிலேயரது இந்திய ஆட்சியை நிலைப்படுத்த முதன்மையுற்றிருந்தது. இவ்வகைய பெரும்புகழுக்கிடமாகிய எங்கள் நகரம் வியாபார சாதகங்களால் மிகுந்திருக்கும் ஏனைய நகரங்களின் சிறப்பிற்கும்,செல்வத்திற்கும் சற்றுப் பின்வாங்கினும் ஆதிகாலந்தொட்டு ஆங்கிலேயரது பேராதரவால் படிப்படியாய் உயர்ந்துகொண்டே வருகின்றது. இப்படிப்பட்டவிடத்தில் வசிக்கும் நாங்கள் தங்கள் சுற்றுப் பிரயாண யோசனையைக் கேட்டதும் அது எப்போது நிகழுமோவென்று பேராவலுடன் எதிர்பார்த்திருந்தது தாங்கள் எங்கள் நாட்டெல்லையிற்கால்வைத்ததும்முடிந்தது. எங்களில் யாவருக்கும் பேரானந்தத்தை விளைத்துப் பூர்த்திசெய்தது. இது ஒருவாறாயினும் மற்றோர்வகையில் தங்கள் குடிகளாகிய எங்கள்மீது எவ்வளவு பெரிய அன்பும், அபிமானமும் வைத்திருக்கின்றீர்களென்பதையும், எங்கள்விருத்தி எவ்வகையிலிருக்கின்றதென்றுணர நேரில் காண விரும்பினீர்களென்பதையும் குறிக்கின்றதால் இதனாலும்பெருங்களிப்படைகின்றோம். அன்றி எங்களை இனியரசாளப்போகும் அரசராகிய தாங்களே முதலில் எங்கள் நாட்டுக்குவந்து எங்கள் அன்பின் மிகுதியையும்இராஜவிசுவாசத்தையும், மனத்தூய்மையையும், ஆங்கில அரசாட்சியிற்கிடைத்த அரும்பெரு நலன்களை மதிக்குஞ் சிறப்பையும்



நேரிற்கண்டு திரும்புகின்றீர்களாதலால் அதனால் பெரும்பயன் விளையுமென்றும், எங்கள்ஞாபகம் தங்கள் இதயத்திலென்றுமிருந்து சமயம் நேர்ந்ததும் உதவிகிடைக்குமென்னும் உள்ளுந்தோறும் உளமகிழ்கின்றோம். இவ்வாறு நாங்கள் உள்மகிழ்வதையும், எங்களுக்குக் கிடைத்திருக்கும் அரசாட்சியில் நாங்கள் பெரிதும் அன்புசெலுத்தி எவ்வாற்றானும் மனத்திருப்தி யடைந்திருப்பதையும், இவ்வகைய நலன்களையுண்டாக்கிய சக்கரவர்த்திமீதும், சக்கரவர்த்தினி மீதும், மற்றும் அரசகுடும்பத்தின்மீதும், நாட்டியிருக்கும் அன்பையும் அபிமானத்தையும், பயபக்தியையும் தாங்கள் திரும்பி ஜென்மநாடடைந்தபோது எங்கள் சக்ரவர்த்திக்கு உரைக்கும்படியாய்ப் பணிவாய்க் கேட்டுக்கொள்கின்றோம். நாங்கள் எங்கள்மனப்பூர்வமான ஆர்வத்தோடு தங்கள் வருகையை ஏற்று எங்களைப்போன்ற இராஜவிசுவாசமுள்ளவர்களும் தங்களிடத்து அன்புடையவர்களும் மற்றவிடங்களி லிருக்கமாட்டார்களென்று விண்ணப்பித்து அகமகிழ்கின்றோம்" என்றுபடித்து முடிந்ததும், இதற்குப்பதிலாக அரசிளஞ்செல்வர் உரைத்ததாவது :—

"கனவான்களே! நான் உங்கள் கவர்னரவர்கள் மூலமாய் இப்பெரிய இராஜதானியிலுள்ளவர்களாகிய உங்களையும் கொச்சி, புதுக்கோட்டை, திருவாங்கூர் முதலிய சுதேச நாட்டுத்தலைவர்களையும் சந்திக்கப்போகின்றேனென்று கேள்விப்பட்டதும் பெருங்களிப்படைந்தேன். ஆதலின் எமக்காகவும், இளவரசியாருக்காகவும் நீங்கள் கூறிய நல்வரவுக்காக எங்கள் மனப்பூர்வமான வந்தனமளிக்கின்றோம். உங்கள்செழுமைக் காதாரமானவற்றிலும், மனக்கிளர்ச்சிக்குரியனவற்றிலும் எங்கள் கருத்துமுழுதுஞ் செல்கின்றது. நாங்கள் எங்கள் நாட்டைவிட்டு இவ்விடங்களைச் சுற்றிப்பார்ப்பதால் எவ்வளவு பிரயோஜனமும் சந்தோஷமுமடைகின்றோமென்று இப்போது தெளிந்து அவற்றோடு உங்கள் அன்பின் பெருக்கையும் அபிமானத்தையும் நோக்கவரும்போது பேருவகையடைகின்றோம். இவ்விடத்தைப்போலவே உங்கள் இராஜதானியின் மற்றும் சிறந்த பட்டணங்களைப்பார்க்காது போவது எங்களுக்கு மனவருத்தத்தை யுண்டாக்குகின்றது. திரிசிராப்பள்ளி, தஞ்சை, மதுரை, கொச்சி, திருவாங்கூர்முதலிய பெரிய நகரங்களின் சிறப்பை நாங்கள் படித்திருக்கின்றோம், ஆயினும் எங்களுக்குக் கிடைத்தகாலம் போதாமையால் அசம்மதத்தோடு விடவேண்டிவந்தது. ஆதலின் நீங்கள் திரும்பி உங்கள் இருப்பிடஞ்சென்றபோது நீங்கள்கொடுத்த நல்வரவுப்பத்திரத்திற்கண்ட எங்கள் அன்பின்பெருக்கு எவ்வாற்றானும்மிகுந்து கூறப்படவில்லையென்று தெரிவிக்கவேண்டுகின்றேன்." என்றார்.

இவ்வாறு பதில் சொல்லி நம்நாட்டில் அருகியும் பெருகியும் வழங்கும் சிற்சிலவேடிக்கைகள் இக்கூட்டத்திற் காதாரமானவர்களால் நடப்பித்ததைப் பார்வையிட்டு மனக்களிப்படைந்து தமது இருப்பிடஞ்சென்றனர்.

## கட்டாயமான பாடங்கள்.

| பாடங்கள். | லோயர் பிரைமரி பாடசாலைகள். | | | | அப்பர் பிரைமரி பாடசாலைகள். |
|---|---|---|---|---|---|
| | பாலர் வகுப்பு. | முதல் வகுப்பு. | இரண்டாம் வகுப்பு. | மூன்றாம் வகுப்பு. | நான்காம் வகுப்பு. |
| **முதற்பாஷை:**<br>(1) வாசித்தல், ஒப்பித்தல், இலக்கணம். | நெடுங் கணக்கின் எழுத்துக்களைக் காட்டுதலும், உச்சரித்தலும், இரண்டு அசைகளுக்கு மேற்படாத வழக்கத்திலுள்ள சுலபமான பதங்களைப் படித்தலும். | (a) வகுப்பில் அந்த வருஷத்தில் வாசியாத, அங்கீகரிக்கப் பட்ட படாபுத்தகத்தி லிருந்து சில வரிகளைத் திருத்தமாய் வாசித்தல்.<br>(b) சுலபமான செய்யுள் பாடத்தில் 20 வரிகளை மனப்பாடமாய் ஒப்பித்தல். | (a) வகுப்பில் அந்த வருஷத்தில் வாசியாத, அங்கீகரிக்கப் பட்ட பாட புத்தகத்தி லிருந்து சில வரிகளைத் திருத்தமாய் வாசித்தல்.<br>(b) சுலபமான செய்யுள் பாடத்தில் 30 வரிகளை மனப் பாடமாய் ஒப்பித்தல்.<br>(c) வகுப்பில் உபயோகிக்கப்படும் வாசக புத்தகத்தில் படித்த பாகத்திலிருந்து கேட்கப்படும் கடினபதங்களுக்கு அர்த்தமும், விஷய வினைக்களுக்கு விடையும் சொல்லுதல். | (a) வகுப்பில் அந்த வருஷத்தில் வாசியாத, அங்கீகரிக்கப்பட்ட பாட புத்தகத்திலிருந்து சில வரிகளைக் கருத்து விளங்கவும் திருத்தமாயும் வாசித்தல்; மிகத் திருத்தமாய் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதியை வாசித்தல்.<br>(b) சுலபமான செய்யுள் பாடத்தில் 40வரிகளை மனப்பாடமாய் ஒப்பித்தல்.<br>(c) வகுப்பில் உபயோகிக்கப்படும் பாட புத்தகத்திலிருந்து கேட்கப்படும் கடின பதங்களுக்கு அர்த்தமும் விஷய வினுக்களுக்கு விடையுஞ் சொல்லுதல்.<br>(d) மனப்பாடமாய் ஒப்பித்த செய்யுள் பாடத்தில் கடின பதங்களுக்கு அர்த்தமும் விஷய வினுக்களுக்கு விடையும் சொல்லுதல்.<br>(e) சுலபமான வாக்கியங்களில் உள்ள பெயர் வினைச் சொற்களைக் கண்டு சொல்லுதல். | (a) வகுப்பில் அந்த வருஷத்தில் வாசியாத, அங்கீகரிக்கப்பட்ட பாட புத்தகத்திலிருந்து சில வரிகளைக் கருத்து விளங்கவும் திருத்தமாயும் வாசித்தல்; மிகத் திருத்தமாய் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதியை வாசித்தல்.<br>(b) சுலபமான செய்யுள் பாடத்தில் 50 வரிகளை மனப்பாடமாய் ஒப்பித்தல்<br>(c) வகுப்பில் உபயோகிக்கப்படும் பாட புத்தகத்திலிருந்து கேட்கப்படும் கடின பதங்களுக்கு அர்த்தமும், விஷய வினுக்களுக்குவிடையுஞ்சொல்லுதல்.<br>(d) மனப்பாடமாய் ஒப்பித்த செய்யுள் பாடத்தில் கடின பதங்களுக்கு அர்த்தமும் விஷய வினுக்களுக்கு விடையும் சொல்லுதல்.<br>(e) சுலபமான வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கண்டு சொல்வது; சொல்லதிகாரத்தில் கேட்கப்படும் சுலபமான வினுக்களுக்குவிடை கூறுவது. |
| (2) எழுதலும், எழுத்துக் கூட்டலும். | (a) மணல், கற்பலகை அல்லது அட்டையின் மேல் நெடுங்கணக்கிலுள்ளஎழுத்துக்களைப் பார்த்துப் பெரிதாய் எழுதுவது.<br>(b) நெடுங் கணக்கின் எழுத்துக் களைச்சொல்வ தெழுதலாக எழுதுவது. | (a) மணல், கற்பலகை அல்லது பனையோலையின் மீது, உபயோகத்திலுள்ள, பாடபுத்தகத்தில் ஒருபத்தியைப் பார்த்துப் பெரிய எழுத்துக்களாக எழுதல்.<br>(b) உபயோகத்திலுள்ள பாடபுத்தகத்திலிருந்து சொல்லப்படும் சுலபமான 8 சொற்களைச் சொல்வதெழுதல் பாடமாக எழுதல். | (a) மணல், கற்பலகை அல்லது பனையோலையின் மிது, உபயோகத்திலுள்ள பாடபுத்தகத்திலிருந்து ஒருபத்தியைப் பார்த்துப்பெரிய எழுத்துக்களாகஎழுதல்<br>(b) உபயோகத்திலுள்ள பாட புத்தகத்திலிருந்து சொல்லப்படும் 5 வரிகளை,சொல்வதெழுதல் பாடமாக எழுதல்.<br>(c) பெரிய எழுத்துக்களாக 15பக்கங்களுக்குக் குறையாமல் எழுதப்பட்ட காப்பி புத்தகத்தை வித்தியாதிகாரிக்குத் தாக்கல் செய்வது. இங்கி அல்லது பென்சிலால் எழுதலாம். | (a) உபயோகத்திலுள்ள பாடபுத்தகத்திலிருந்து ஒருவாக்கியத்தைக் கடிதத்தில்,மத்தியதர எழுத்தாக எழுதுவது.<br>(b) உபயோகத்திலுள்ள பாடபுத்தகத்திலிருந்து 8 வரிகளைச் சொல்வதெழுதல்பாடமாக எழுதல்.<br>(c) அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு காப்பிப் புத்தகத்தில் மூன்றுவரிகளை மத்தியதர எழுத்தாக தணிக்கையதிகாரியின் (Inspecting Officer) முன்னிலையில், எழுதுவது. பரிட்சை நடக்கு நாளுக்கு முன்பே அதேவித்தியார்த்தியால் அதேஅளவு எழுத்தாக 15 பக்கங்கள்இங்கியால்எழுதப்பட்டிருக்க வேண்டும். | (a) உபயோகத்திலுள்ள பாடபுத்தகத்திலிருந்து ஒருவாக்கியத்தைக் கடித்தத்தில் சிறிய எழுத்தாக எழுதுவது.<br>(b) உபயோகத்திலுள்ள பாடபுத்தகத்திலிருந்து 10 வரிகளைச் சொல்வதெழுதல் பாடமாக எழுதல்.<br>(c) அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு காப்பிப்புத்தகத்தில் மூன்று வரிகளைச் சிறியஎழுத்தாக தணிக்கையதிகாரியின் (Inspecting Officer) முன்னிலையில்எழுதுவது, பரிட்சை நடக்கு நாளுக்கு முன்பேஅதே வித்தியார்த்தியால் அதேஅளவு எழுததாக 15 பக்கங்கள் இங்கியால் எழுதப்பட்டிருக்க வேண்டும். |

# NEWS AND NOTES.

## சமாசாரக் குறிப்புக்கள்.

வங்காள மாகாணத்தில் பி. ஏ. பட்டம்பெற்ற இந்திய வாலிபர்களுக்கு நல்லதிர்ஷ்டம் பிறந்திருக்கிறது. பி.ஏ. படித்துவிட்டு கவர்ன்மெண்டுவேலையே கிடைக்க வேண்டுமென்று அங்குள்ளார் ஏக்கங்கொள்ள வேண்டியதில்லை. ஆங்கிலம் படித்தது சம்பாதனை யடைவதற்கென்றே சில சார்பார் நினைப்பதால் அந்த எண்ணத்தை மட்டுப்படுத்தவும், தொழிற் படிப்பை விருத்தி படுத்தவும், அம்மாகாணத்து வாலிப பி. ஏ. பட்டதாரிகளுக்கு பம்பாயிலுள்ள இந்தியா நூல் யந்திரசாலைகளில் தொழில் கற்றுக்கொள்ள இடங்கொடுக்கப் படுமென்றும், அத்தொழிலை முழுதுங்கற்றுக்கொள்ள மூன்று வருஷகாலஞ் செல்லுமாதலால் அதுகாறும் அவர்களுடைய போஷணைக்காக முதல் வருஷத்தில் ரூபா 50 சம்பளமும், அடுத்த ஒவ்வொரு வருஷத்தில் 25 ரூபா ஏற்றமுங்கொடுத்து முடிவில் 125 ரூபா சப்பள முண்டாக்குவதாகவும் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது. நூல் யந்திரசாலைப் படிப்பு வேண்டி இங்கிலாந்து முதலிய அந்நிய நாட்டுக்குப் போவதால் அதிக செலவும், அவ்விடத்தில் படித்துக் கொள்வதற்காகத் தொழிற்சாலைச் சொந்தக்காரருக்குக் கொடுக்க நேரும் பெருந்தொகையும் இதனால் மிகுதியாவதோடு அந்நிய நாட்டுக்குப் போகவேண்டிய அவசியமும் ஒழிகின்றது. தொழிற் படிப்பில்லாமையால் வருவாய் அதிகமில்லையென்று சொல்லுவோர் இதன் கருத்தை யுணர்வாராக.

* * *

அலகாபாத்தென்னும் நகரத்தில் கல்வியபிவிருத்தி செய்வதற்கென்று கூட்டிய ஒரு பெருங்கூட்டத்தில் அவ்விருத்திக்காதாரமான பலவிஷயங்களைப் பேசினர். சில ஸ்திரீகளும் பேசினர். இவர்களுட் பெரும்பாலர் அந்நாட்டு ஜயனமதஸ்தர். இவர்கள் பெருஞ்செல்வந்தர்களாயிருக்கின்றனர். பெண்பிள்ளைகள் ஏராளமாய்ப் படிக்க வாரம்பித்தால் மிக்க நலன் விளையுமென்று முடிவிட்டனர். பெண்கல்வி யதிகமாவதற்கு உபாத்தியாயர்களும் பெண்களாயிருந்தால் நலமென்று அநேகரை அத்தொழிலிற் பயிற்ற உபகாரச் சம்பளம் அநேகருக்குக் கொடுக்கத் தீர்மானித்தனர். ஆண்கள் தொழிற் கல்வியடைய மிகுதியும் தூண்டப்பட வேண்டுமென்று முடிவிட்டனர். ஜப்பானுக்குப்போய் தொழிற்கல்வி படித்து வருவதற்காக முற்படும் வாலிப னொருவனுக்கு அது முடியுங்காறும் மாசம்



100 ரூபாய் உபகாரச் சம்பளங்கொடுப்பதாய் ஒருவர் வாக்குறுதி செய்தார். இம்மாதிரி அநேக சம்பவங்கள் நிகழ்ந்தன. இவையெல்லாம் தொழிற் படிப்பையும், சன்மார்க்க கல்வியையும் விருத்தி செய்வதற்கெழுந்த கிளர்ச்சியாகத் தோன்றுவதால் நம் நாட்டுக்கு நல்ல காலம் வருகின்றதென்று பெரிதும் மகிழ்கின்றோம்.

* * *

கல்கத்தாவாசியாகிய ராஜா பியாரி மோகனராய் என்பவர் வங்காளநாட்டுப் பட்டுபருத்தி வியாபார சம்பந்தமான ஒரு சிறு புத்தகம் வெளிப்படுத்தியிருக்கிறார். அதில் 1700ஆம் வருஷத்தில் இங்கிலாந்திலுள்ள ஏராளமான வியாபாரிகள் இந்திய நாட்டுப் பட்டு,பருத்தியாடைகளையே தருவித்து வியாபாரஞ் செய்வதால் இனியப்படிச் செய்வோர் 3000 ரூபாய் அபராதத்திற் காளாவார்களென்று பார்லிமெண்டார் கட்டளை பிறப்பித்திருந்தார்களென்றும், மற்றும் 1831 ௵ மேற்கண்ட சட்டப்படியே மற்றோர் சட்டம் பிறப்பித்தார்களென்றும், அச்சட்டத்தால் இந்திய வியாபாரிகளுக்கு இடைஞ்சலும், நஷ்டமும் உண்டாகின்றதென்று இந்நாட்டு வியாபாரிகள் ஒருங்குகூடி விண்ணப்பம் பண்ணிக்கொண்டும் பயன்படா தொழிந்ததென்றும் கண்டிருக்கிறது. இதுவன்றி பருத்திபயிரிடும் சிறந்த முறைகளையும் அதிற் கண்டிருக்கிறார். கல்கத்தாவில் அந்நியநாட்டுச் சரக்கை வாங்கக்கூடாதென்று விரதம்பூண்டும், பிரசங்கித்தும்,பிறருக்குச் சொல்லியும் வரும் இந்திய ஜனங்களை வெறுத்தும் இந்திய தொழிலுக்கு ஆதரவு புரியாதவரும் எல்லாச் சார்பாருக்கும் இச்சிறுபுத்தகம் மிக்கப் பயனளிக்குமென்று நம்புகின்றோம். கைத்தொழிற் படிப்பை நமக்குத் தாராளமாய் இவ்விடத்திற் கொடுக்கா திருக்கும் ஆங்கிலேயர் 200 வருஷங்களுக்குமுன் என்ன ஏற்பாட்டால் அத்தொழிற்படிப்பை யடைந்தார்களென்றும், அவர்கள் கவர்ன்மெண்டார் அதற்காக எவ்வளவு சார்பாயிருந்தார்களென்றும் இதனால் ஏற்படும்.

* * *

இங்கிலாந்திலுள்ள பாடசாலைகளில் பிள்ளைகள் கற்பலகைகளை உபயோகிக்கக்கூடாதென்று வித்தியாதிகாரிகள் ஏற்பாடு புரியவிருந்தனர். கற்பலகைகளை ஏராளமாய் வெட்டியெடுத்து வியாபாரம் புரிபவர்களாகிய வடவேல்ஸ் நாட்டுவியாபாரிகள் சிலபெரியமனிதர்களைப் பின்பற்றிக்கொண்டு வித்தியாதிகாரிகளைச் சந்தித்து பள்ளிக்கூடங்களில் கற்பலகைகளின் உபயோகத்தைத் தவிர்க்க முயல்வது நலமல்லவென்றும், வெண்மையான காகிதத்தில் சிறு பிள்ளைகள் சதா எழுத அமைவதால் நாளேற்றத்தில் கண்ணுக்குக் கெடுதலுண்டாமென்றும் மற்றும் சொல்லிக்கொண்டனர். இவற்றை அதிகாரிகள் கவனித்து ஏற்பாடு புரிவார்களென்று மேலதிகாரி விடையளித்து அனுப்பினராம். எல்லாம் வியாபாரத்தைப் பொறுத்தே நிற்கின்றது.

## ஓர் அழகிய பொன் முள் (நிப்பு) தரித்த

## . . . . . பவுண்டன் பேனா.



இந்த அழகிய பேனாவானது பார்வைக்கு மிக அழகாகவும் வேலைக்கு வெகு சுறு சுறுப்பாகவும், ஒரு தடவை மை வார்த்துவிட்டால் அநேக நாளைக்கு மறுபடியும் மை தொடாமல் முத்துப்போன்ற எழுத்துகளாய் எழுதும்படியாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றது. இது பத்திரம் எழுதுவோருக்கு மிக அவசியம் வேண்டியது. கிராமத்தில் பத்திரம் எழுதித் தாலுக்காவில் ரிஜிஸ்தர் செய்யும் போது அதே இங்கியில் கை எழுத்து எழுத நேருகிறது. அதற்கு மைக்கூடும் பேனாவும் தனித்தனி எடுத்துக்கொண்டு, கீழும் மேலும் கொட்டிக்கடைசியில் இங்கியே அகப்படாமல்போகிறது. இந்தப்பேனாவினாலேயோ அப்படியொன்றும் நேராது. எவ்வளவு தூரமானாலும் அதிக சுலபமாய் எடுத்துக் கொண்டு போகலாம். இங்கிகீழே சொட்டாது. இந்த பேனாவாங்குபவர்களுக்கு இது வைக்கும்படியாக ஓர்பெட்டியும், மை கையில் படாதபடி வார்க்கிறதற்கு ஓர் கிளாஸ் குழாயும் இனாமாக கொடுக்கப்படும்.

விலை ரூ. **3-8-0.**

9 - MAY 1906
MADRAS
600 008.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

## மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது **1.** | **1906**௵ மார்ச்௴ | மாதம் **10.**

## THE INDIAN KINDERGARTEN.

## செல்வச் சிறுவர் சிங்காரத்தோட்டம்.

(195-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

---

### *ITS CONNECTION WITH OTHER SUBJECTS.*

### இதற்கும் மற்றப் பாடங்களுக்குமுள்ள சம்பந்தம்.

கிண்டர்கார்டன் பாடம் மற்றெல்லாப் பாடங்களுக்கும் தலைமை பெற்றிருத்தலே யன்றி ஒவ்வொரு பாடத்தையும் சிறுவர்கள் மனத்தில் நன்றாய்ப்பதிய வைப்பதற்கு இன்றியமையாத் துணைக் கருவியாகவு மிருக்கின்றது. அதனை இங்குச் சிறிது ஆராய்வோம்.

### *COMPULSORY SUBJECTS.*

### கட்டாயமான பாடங்கள்.

வாசித்தல்.—பாலர்வகுப்பில் கொட்டை வைத்தல், குச்சுவைத்தல், அட்டையிற் குத்தித்தைத்தல் முதலிய தொழில்களில் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களை உபயோகித்தலால் அவ்வகுப்புகளில் வாசகபாடத்தை ஒருவாறு நடத்துகின்றது. முதல் வகுப்பில் பொருள்களின் பெயர் முதலியவற்றை எழுதி வாசித்தலாலும், இரண்டாம் வகுப்பில் சிறிது கடின பதங்களமைந்த கதைகளை வாசித்தாலாலும் அவ்வகுப்புக்களில் நடத்தவேண்டிய வாசக பாடத்திற்கு உதவியாகின்றது.

செய்யுட் பாடம்.— வகுப்புக்களில் நடத்தப்பட வேண்டிய செய்யுட்பாடங்களுக்குப் பதிலாக நீதிக்கதைகளின் பாட்டுகளை உபயோகித்துக் கொள்ளலாம். செய்யுட்பாடம் நீதிவாக்கியங்களாகவே

இருப்பின் பிள்ளைகள் வெறுப்புக்கொள்கின்றமையால் நீதிக்கதைகளை யெளிய பாடல் ரூபமாகச் செய்து அதன் இறுதியில் அக்கதையால் நேரும் நீதியை விளக்குவது ஒருவாறு ஏற்றமுளதாகும்.

இலக்கணம்.—தொழில்களுக் கேற்ற கதைகளை உபாத்தியாயர் சொல்லக் கேட்டுப் பிள்ளைகள் அவற்றைத் திருப்பிச் சொல்ல நேருகின்றமையால் வாக்கிய வமைதிகள் நன்கு ஏற்படும். அக்கதையைப் பற்றி வினாவும்பொழுது பிள்ளைகள் கூறும் விடை முழுவாக்கியங்களாகச் சொல்லும் வண்ணம் உபாத்தியாயர் வற்புறுத்துவதே இதற்கேற்ற மார்க்கமாம். இப்பழக்கம் நாளடைவில் வியாசம் எழுதப் பழகுவதற்கு இன்றியமையாததாகும்.

எழுத்து.—சித்திரம் வரைதல் கையெழுத்துப் பாடத்தைச் சாலவும் விருத்திசெய்யும். பொருள்களின் பெயர்களையும் பாட்டுக்களையும் எழுதுவதனால் சொல்வதெழுதல் பாடத்தையும் விருத்தி செய்கின்றது.

கணிதம்.-கொட்டைவைத்தல், குச்சுவைத்தல் முதலியதொழில்களில் ஒவ்வொருபிள்ளையும் ஒரே அளவானபொருள்களைக் கொள்ளவேண்டியிருப்பதனால் அங்குகணிதஞானம் விருத்தியாகவிடமுண்டு. அட்டைவைத்தல் பாடத்தில் பலவகைக்கோணங்களைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளவேண்டி யிருத்தலின் க்ஷேத்ர கணிதம் முதலிய நூல்களைப் பயிலும்பொழுது இவை அநுகூலமாகும்.

## OPTIONAL SUBJECTS.

## இஷ்டமான பாடங்கள்.

1. பொருட்பாடங்கள்.—கதையில் வரும் பொருள்களைப்பற்றி வினாவிடைகள் நடத்தப்படுவதனால் பொருட்பாடத்தை விருத்தி செய்வதல்லாமல் சித்திரம் எழுதுவதிலும் களிமண் உருச்செய்வதிலும் அப்பொருள்களின் அமைதிகள் சிறுவர் மனத்தில் நன்றாயமையும்.

பூகோளசாஸ்திரம்.—களிமண் உருச்செய்தலில் மலைமுதலிய இயற்கைப பொருள்களைச் செய்வதனாலும், விளைபொருள்கள், பிராணிகள் முதலிய உண்டாகுமிடங்களை தெரிவிப்பதனாலும் சித்திரம் எழுதல் பாடத்தில் ஆறு, ஏரி முதலிய பிரிவுகளையன்றிப் படங்களையெழுதுவிப்பதனாலும் பூகோள பாடத்திற்கு மிக்க உதவியாகும்.

சரித்திரபாடம்.—கதைகளின் மூலமாய்ச் சரித்திரபாடங்களையுணர்த்த இடமுண்டாகும். அக்காலத்திற் படையெடுப்பு, முற்றுகைபோடல் முதலிய விஷயங்களை ஆடல் மூலமாய் நன்குவிளக்க



லாம். தேகாப்பியாச பாடத்தின் மூலமாய் போர்வீரர்களதுதொழில்களை மாதிரியாக நடத்திக்காட்டலாகும்.

கிருஷி சாஸ்திரம்.—கிண்டர்கார்டன் பாடசாலையை யடுத்துள்ள தோட்டத்தில் பிள்ளைகள், செடி கொடிகளை வைத்துப் பருவந்தப்பாமல் வேண்டுவனசெய்து விருத்தி செய்யவேண்டி யிருப்பதனால் கிருஷித்தொழிலை நன்றாய் உணர இடமுண்டாகும்.

பாட்டு.—கதைகளைப் பாட்டாய்ப்பாடுவதனால் பிள்ளைகள் இசையோடு கூடிய பாடங்களை யுணரக் காரணமுண்டாகின்றது. அபிநயப் பாடலும் இது விஷயமாய் மிக்க உதவிபுரிகின்றது.

தையல்.—அட்டையிற் குத்தித் தைத்தல் தொழின் மூலமாய் தையல் வேலையைச் செவ்வையுற நடத்திக்காட்டலாகும்.

தேகாப்பியாசம்.—ஆடல், விளையாடல், ஓடல் முதலிய தொழில்களை நடத்துவதில் தேகாப்பியாசம் விருத்தியாவதன்றிப் பிள்ளைகள் அனைவரும் முறையாகத் தொழில்களை நடத்தும்படி திருத்தமாகப் பழக்கப்படுவதனால் தேகாப்பியாசமேயன்றிக் கிரமசிக்ஷையும் செவ்வையாய் ஏற்படும்.

---

## THE STRUCTURE AND HABITS OF QUADRUPEDS.

## நாற்கால் ஜந்துக்களின் உருவமும் நடக்கையும்.

இப்பூமண்டலத்திலுள்ள பலவகைப்பட்ட பிராணிகளையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்த்தால், நாற்கால் ஜந்துக்கள் நமக்கு இரண்டாந்தரமான பிராணிகளாய்ச் சொல்லத் தக்கவை யென்று யாவர்க்கும் நன்றாய்த் தோன்றும். ஆதலால் அவைகளையே முதலில் விசாரிப்போம். நாற்கால் ஜந்துக்களின் உருவமைப்புக்கும் நம்முடைய உருவமைப்புக்கும் உள்ளவேற்றுமையையும், மற்றபிராணிகளைவிட அவைகளுக்கு விசேஷமாய்க் கிடைத்திருக்கின்ற இயற்கை அறிவையும், அவைகள் ஓயாமற்செய்யும் ஊழியத்தையும், அல்லது அவை ஒழியாமற்கொண்டிருக்கும் பகையையும் பார்க்கும்போது நமக்கு உண்டாகும் ஆனந்தத்திற்கு அளவில்லை. அவற்றின் இயற்கையை நாம் உற்றுப்பார்க்கப்பார்க்க, இவைகளைப்போல நமக்கு விசேஷமாய் மனவெழுச்சி உண்டாகத் தக்கதும் நாம் பேராவல் கொண்டு பார்க்கத்தக்கதுமான பிராணி வேறொன்றுமில்லையென நன்றாய்த்தோன்றும். நாற்கால்ஜந்துக்கள் இப்போது வெகுவாய்க்-

கீழ்ப்படுத்தப்பட்டிருந்தாலும், முதலில் ஒருவாறு நமக்குச் சரியாகவேயிருந்து இப்பூமியின் உரிமைக்காகவும் பாடுபட்டுக்கொண்டு இருந்திருக்கும். முழுதும் மிருகத்தன்மையுடையவர்களான மனிதர்கூட்டக் காடுகளை நன்றாய்ச் சீர்படுத்த அசமர்த்தர்களாய் இருக்கிறார்கள். காட்டுமிருகங்களோ, ஆயுதம்முதலிய போர்க்கருவி இருப்பிடம் முதலியவை ஒன்றுமில்லாம லிருக்கையிலும், ஒருவராலும் ஜயிப்பதற்கு அசாத்தியமானவைகளா யிருக்கின்றன. சூரர்கள் அநேகமாய் விருத்தியாகிக் கொடிய மிருகங்களைப் பலவாய் அடக்க முயன்றும் இப்பூமியில் இன்னும் அநேகம் பாகங்களை நாற்கால் ஜந்துக்களே ஆண்டுவருகின்றன.

நாலுகால் ஜந்துக்களுள் அநேகம் மனிதர்களோடு பகைமை பாராட்டுவதைவிட்டு இப்போது அவர்களுக்கு உதவியாயிருக்கின்றன. எவ்வளவு கடினமான வேலைகள் செய்யவேண்டுமென்றாலும் அவை எல்லாவற்றையும் பொறுமையாய்ச் செய்கின்றன. அவை செய்யும் வேலைக்கு நாம் எவ்வளவு கொஞ்சமாய்க் கூலி கொடுத்தாலும் அதைப் பொறுமையோடு பெற்றுக்கொண்டு, நாம் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்யக் காத்திருக்கிற பிராணி இவைகளைவிட வேறுண்டோ? ஆயினும் அந்தப் பிராணிகளுக்கு இயற்கையாய்ச் சுதந்திரஜீவனத்தில் இருக்கும் வினோதத்தைமாற்றி அவைகளை ஒருவர்க்கு அடங்கியவையாகச் செய்தது கொஞ்சத்தில் முடிந்திராது. ஏனெனில், காட்டுமிருகங்களுக்குச் சுபாவத்திலேயே உண்டான கொடுமை கொஞ்சத்தில் மாறுவதில்லை. அந்த மிருகங்கள் நமக்குச் சுவாதீனமானபிறகுகூட அந்தக் கொடுமைமட்டும் அநேகம் தலைமுறைவாயில் தொடர்ந்துவரக் காண்கிறோம். எப்போதோ ஒரு காலத்தில் காட்டுமிருகங்களாயிருந்த நாய் பூனை முதலியவை தங்களுடைய கொடுமையை இன்னும் தங்கள் குட்டிகளுக்குக் கற்பித்துக் கொடுக்கின்றன. அந்தக் கொடுமை அவைகளால் அநேகமாய் அடக்கப்பட்டிருந்தாலும், திடீரென்று ஒவ்வொரு தருணத்தில் வெளிக்கிளம்பக் காண்கிறோமல்லவா? இப்படிப்பட்ட கொடிய மிருகங்களை அடக்குவதற்காக மனிதர்கள்கொள்ளும் ஜாக்கிரதையினால், அவைகளுடைய குணம் மாத்திரமே மாறுவதில்லை; உருவங்கூட அநேகமாய் மாறிப்போகின்றது.

நாலுகால் ஜந்துக்களுடைய மேலுருவத்தை நாம் பொதுவாகப் பார்த்தால், சகலமான பிராணிகளுள்ளும் அவை மனிதர்களோடு மிகுதியாய் ஒத்திருக்கின்றனவென்று நன்றாய்க் காணலாம். அந்த



மிருகங்களைப் பின்னங்கால் இரண்டினாலே மாத்திரம் நிற்கவைத்து அப்படியே நடக்கப் பழக்கினால், அந்த ஒற்றுமை இன்னும் நெருங்கியதாய்த் தோன்றும். அப்படி நிற்கவைத்துப் பார்த்தால் அவை விகாரவடிவமுள்ள ஒருவகை மனிதனாகத் தோன்றுமே யொழிய வேறாய்த் தோன்றாது. ஒருவகை வாலில்லாக் குரங்கைப்பார்த்தால் இன்னும் வினோதமாயிருக்கும். அதைக்கண்டுதான் அவயவசோதக சாஸ்திரிகள், மிருகங்களுடைய சரீரத்தைவிட மனிதருடைய சரீரத்திலுள்ள சிறப்பு இன்னதென்று சொல்லமாட்டாமற்போனார்கள்.

சரீரத்தின் மேற்புறத்தின் அமைப்பு அப்படி இருக்கட்டும்; உட்புறத்தின் அமைப்பை ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுப் பார்ப்போமானால், அவைகளுக்கும் நமக்கும் இருக்கிற பாத்தியதை இன்னும் நெருங்கியிருக்கிறதென்று நன்றாய்த் தோன்றும்; மற்ற அற்பப் பிராணிகளுக்கெல்லாம் கிடைக்காத பல உரிமைகளை அவை நம்மைப் போலவே அநுபவிக்கின்றனவென்பதையும் நாம் காணலாம். குட்டிகளை உயிரோடு பெறுவதினால், அவை நம்மைப்போலவே பறவைகளுக்கு மேலானவையாயிருக்கின்றன; சுவாஸாசயங்களின் மூலமாய் மூச்சுவிடுவதனால், அவை நம்மைப்போலவே ஜல ஜந்துக்களுக்கு மேலானவையாயிருக்கின்றன; ரத்தநாடிகளின் மூலமாய்ச் சிவந்த ரத்தம் சரீரத்தில் பரவும் இயற்கை உடையவையாயிருப்பதனால், நம்மைப்போலவே பூச்சி புழு முதலியவைகளுக்கு மேலானவையாயிருக்கின்றன. பலவாறு சொல்லியென்ன? கடைசியாய், கொஞ்சமோ முழுவதுமோ, சரீரமெல்லாம் மயிரால் மூடப்பட்டிருப்பதனால், நம்மைப்போலவே அவை பலவிதமான பிராணிகளுக்கும் மேலானவையாயிருக்கின்றன. இப்படியாக இந்த மிருகங்கள் நம்மைப் பலவாறு ஒத்திருக்கின்றன. இவைகளை யெல்லாம் பார்த்தால், நமக்கு மானிடவடிவம் வந்ததே என்பதைமாத்திரம் குறித்து நாம் பெருமை பாராட்டுவதற்குக் காரணம சிறிதளவாவது உண்டென்று தோன்றுகிறதா? அதற்காக நாம் பெருமைப்பட்டால் நம்மைப்போல நாலுகால் ஜந்துக்களும் பெருமைப்படவேண்டுவதுதானே.

நாலுகால் ஜந்துக்களுக்கும் நமக்கும் இருக்கிற ஒற்றுமை இவ்வளவுமாத்திரமேயல்ல; மற்றப் பிராணிகளைப்போல் அவை அந்தந்த சீதோஷ்ணநிலைக்கும் உணவுக்கும் ஏற்றபடி உருமாறாமல், நம்மைப் போலவே என்றும் ஒரு சீராய் இருக்கின்றன. பக்ஷிகளுக்கு உருவம், நிறம் எல்லாம் அந்தந்த நிலைமைக்குத் தக்கபடி மாறிப்போகின்

றன; மீன்களுக்கோ இன்னும் அதிகம்; பூச்சி புழுக்களோ அந்தந்த க்ஷணத்திலே அந்தந்த நிலைக்கு ஏற்றபடி மாறுகின்றன. விருக்ஷவகைகளைப் பார்த்தாலோ, அவைகளுள் இந்தமாறுதல் மிகவும் ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது. பிராணிகளுடைய வடிவத்தை, நாம் வேண்டும்போது கட்டிக்கொள்ளவும் வேண்டாதபோது அவிழ்த்துப்போடவும் ஏற்றதான, நம்முடைய வஸ்திரத்திற்கு ஒப்பாகச் சொல்லலாம். மனிதர்களிடத்தில் அந்த உடுப்புவிசேஷமாய் மாறுமலிருக்கிறது; நாற்கால் ஜந்துக்களில் கொஞ்சம் மாறுதல் உண்டு. அந்தஸ்து குறையக்குறைய இந்த மாறுதலும் அதிகமாகின்றது.

நாற்கால் ஜந்துக்களுக்கு இவ்விதமான வேற்றுமைக்குறிப்புகள் இருந்தாலும், வெளவால், முள்ளம்பன்றி, உடும்பு முதலிய சில ஜந்துக்கள் இவ்வகுப்பிற் சேர்ந்தவையென்று தெளிவாய்ச் சொல்லக்கூடியவையாயிருக்கவில்லை. வெளவால் பக்ஷிவர்க்கத்தில் சேர்ந்ததென்று சிலர் சொல்லுகிறார்கள். முள்ளம்பன்றியும் இறகுகள் போன்ற முட்களுடையதாயிருப்பதால் அதுவும் பக்ஷிவகையிற் சேரலாமென்று தோன்றுகிறது. உடும்பு மாரால் நகர்ந்து ஊர்வதனால் ஊர்வனவற்றுள் சேர்ந்ததுபோல் காண்கிறது. இப்படி இந்த வர்க்கத்திற் சேர்ந்தவையென்று சொல்லக்கூடாத சில ஜந்துக்களும் உண்டு.

நாற்கால்ஜந்துக்கள் உலகத்தில் பலவிதமாயிருந்தாலும் அததின் நிலைமைக்கேற்றபடியே அமைக்கப்பட்டிருக்கின்றது. எவ்வளவு விகாரமான உருவமைப்புள்ள பிராணியாயிருந்தாலும், அததின் இயற்கைக்கு ஏற்றபடி சுகமனுபவிக்கத்தக்கதாய் உருவமைக்கப்படாத ஜந்து ஒன்றுகூடக் கிடையாது. அவைகளுக்குள்ள குறைவுகள் நமக்கும் உண்டு. சுகமோ அவைகளுக்கே அதிகமாயிருக்கின்றது. நாற்கால் ஜந்துகளாகட்டும், இன்னும் அற்ப ஜந்துக்களாகட்டும், அவைகளுக்கெல்லாம் ஏதாவது ஒரு துன்பம் உண்டாகும்போது வருத்தமேயொழிய மற்றப்போது இல்லை. அப்படித் துன்பங்கள் உண்டாவதே அருமை; உண்டானாலும் அது அற்பகாலந்தான் நிற்கப்போகிறது. மனிதர்களுக்கோ மனவருத்தமுண்டாக இரண்டுவழியுண்டு. என்றைக்கோ சங்கடமுண்டாகப்போகிறதென்பதை நினைத்து இப்போதே துன்பப்படுவதொன்று; அதை அனுபவிக்கும்போது வருந்துவதொன்று. ஆதலால் மனிதர்களுடைய அனுபவங்களெல்லாம் அந்தந்த ஜன்மத்தோடேயே ஒழிந்து



போகின்றனவென்று சொல்வோமானால் அப்போது மனிதஜன்மத்தைப்போலக் கேடுகெட்ட ஜன்மம் வேறொன்றுமில்லையென்று சொல்ல நாம் துணிகிறோம்.

நாற்கால்ஜந்துக்களுடைய முகம் வெவ்வேறுவிதமாய் அமைக்கப்பட்டிருந்தாலும், அதது பிழைக்கிறவழிக்கு ஏற்றபடியே அமைக்கப்பட்டிருக்கின்றது. சிலவற்றிற்குக் கூராயிருக்கின்றது; அதனால் தரையிலிருக்கும் இரையைப் பெயர்த்தெடுத்துத் தின்ன அவைகளுக்குச் சுலபமாகின்றது. நாய் முதலிய சில ஜந்துக்குத் தலை நீளமாயிருக்கின்றது. அதனால் கிராணேந்திய நரம்புகளுக்கு விசேஷமாய் இடம் உண்டாவதால், வாதனைபிடித்து இரையைப் பிடித்துக்கொள்ள அவைகளுக்குச் சுலபமாகிறது.

சிங்கம் முதலிய ஜந்துக்களுக்குத் தலை குட்டையாய் உரத்திருக்கின்றது. அதனால் அவற்றின் தாடைகளுக்கு அதிக வலிமையுண்டாகிச் சண்டைபோட மிகவும் அனுகூலமாகின்றது. புல் மேய்கிற நாற்கால் ஜந்துக்களுக்கோ, இலேசாய்க் குனிந்து புல்மேயவும் நிமிரவும் அனுகூலமாய், முதுகெலும்போடு சேர்ந்த ஒரு பெரிய கழுத்தெலும்பில் தலை அமைக்கபபட்டிருக்கிரது. அதனால் அந்த ஜந்துக்கள் தலையை எந்நேரம் நிமிர்த்தி வைத்துக்கொண்டிருந்தாலும் கவிழ்த்து வைத்துக்கொண்டிருந்தாலும் அவைகளுக்கு யாதொரு வருத்தமும் தோன்றுவதில்லை.

பிராணிகளுடைய பற்களைப் பார்த்தாலோ, அதது உண்கிற உணவுக்கு ஏற்றவகையாகவே அவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாம்ஸம் புசிக்கிற பிராணிகளுடைய பற்களுக்கும், தான்ய வகைகளைப் புசிக்கிற பிராணிகளுடைய பற்களுக்கும் அதிக வேற்றுமை உண்டு. தானியவகைகளைத் தின்கிற பிராணிகளுடைய பற்கள், முன்வாயில் இரையைக் கடிப்பதற்கு உபயோகமாய்க் கருக்காகவும், கடைவாயில் அதை மென்று பொடிசெய்வதற்கு உபயோகமாய்த் தட்டையாகவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதனாலேயே மனிதர்கள் மாம்ஸம் புசிப்பதற்காகப் படைக்கப்பட்டவரல்லரென்று நன்றாய்த் தோன்றும். மாம்சம் தின்பவைகளுடைய பற்களோ நுனியில் ஈட்டிபோல் வெகு கூராய் ஒரு பொருளைக் கவ்விக்கொள்வதற்கே உபயோகமாயிருக்கின்றன. தானியவகைகளைத் தின்கிற பற்களை எந்திரத்திற்கொப்பென்றும், மாம்ஸம் தின்கிற பற்களை ஈட்டிக்கொப்பென்றும் சொல்லலாம். எல்லாப் பிராணிகளுக்கும் பற்களுடைய மேற்புறமட்டும் ஓர் அளவாய் இருப்பதில்லை; வாயைய

மூடும்போது மேல்வாய்ப் பல்லும் கீழ்வாய்ப் பல்லும் நன்றாய்ப் பொருந்தும்படி இடை இடையே அதற்கு வேண்டிய சந்துகளும் சாய்வுகளுமாயிருக்கின்றன. அப்படி மேடும்பள்ளமாயிருப்பதால் இரையைப் பொடிப்பண்ணுவதற்கு மிகவும் அனுகூலமாகின்றன. வயதாக வயதாக அவ்விடமெல்லாம் வெழுமூண்டு போகின்றன. அதனாலேதான் நல்ல வயதுள்ள பிராணிகளைவிட கிழங்களுக்குத் தின்ன அதிக நாழிகை செல்லுகின்றது.

அவைகளுடைய கால்களும் பற்களைப்போலவே அததின் சவுக்கியத்திற்கு ஏற்றபடியே அமைக்கப்பட்டிருக்கின்றன. சில ஜந்துக்களின் கால்கள் இஷ்டப்படி எளிதாய் உபயோகித்துக்கொள்வதற்கில்லாமல் அவற்றின் பருத்த தேகத்தைத் தாங்குவதற்காகவே வலியவையாகவே படைக்கப்பட்டிருக்கின்றன. யானை காட்டானை முதலியவற்றின் கால்கள் இப்படிப்பட்டவையே. அவை மெல்லியவையாயிருக்குமாயின் அதன் பருத்த சரீரத்தைத் தாங்கமாட்டாமற் போம். வேகமாயோடுவதற்கு ஏற்றதாக இலேசாயிருக்குமாயின், அவை இதர ஜந்துக்களை இரைக்காக ஓடித் துரத்திப்பிடிக்க வேண்டுவதில்லையாதலாலும், அதிக பலசாலிகளாதலால் ஒன்றுக்குப் பயந்தோட வேண்டுவதில்லை ஆதலாலும் அது உபயோகமற்றதாய்விடும். முயல் மான் முதலியவை ஓடி ஒளித்துக்கொள்ள வேண்டியவையாதலின், அவற்றின் கால், வேகமாய் ஓடுவதற்கென்றே மெல்லியவையாய்ச் சுறுசுறுப்புடன் நரம்புகளாற் செய்யப்பட்டிருக்கின்றது. இல்லாவிட்டால் அவை மாம்ஸபக்ஷிகளுக்கு இரையாகி வெகுசீக்கிரத்தில் அந்த ஜாதியே நிர்மூலமாகிப்போம். இப்போது உலகத்தில் கொடுமைசெய்வதற்கு இருப்பதைவிடப் பத்திரந் தேடிக்கொள்வதற்கு இருக்கிற வழிகளே அதிகம். ஒருபிராணி மற்றொரு பிராணியைப் பிடிக்கவேண்டுமானால் சுலபத்தில் ஆவதில்லை. பொறுத்து விடாமுயற்சியாய்ப் பிரயாசப்பட்டால்தான் ஒருவேளை முடியும். ஜலஜந்துக்களைத்தின்கிற பிராணிகளுடையகால்கள் விரல்களெல்லாம் மெல்லிய தசையால் மூடப்பட்டு நீந்துவதற்கேற்றவையாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. கொடுமைசெய்து இதர ஜந்துக்களையேகொன்று ஜீவிப்பவைகளுடைய கால்கள் வாளாயுதம்போன்ற நகங்களோடு கூடியிருக்கின்றன. சாந்தமாய் ஜீவிக்கின்ற ஜந்துக்களுடைய கால்களோ ஒவ்வொருவேளை தங்களைக் காத்துக்கொள்வதற்கேற்ற குளம்புகள் உள்ளவையாயிருக்கின்றன. அதனால் அவை வெகுதூரம் காடுமேடுகளில் சுலபமாய் யாத்திரைசெய்ய வல்லமையுடையவையாயிருக்கின்றன.



இரைப்பையோ சாதாரணமாய் அந்தந்த ஜீவன் உட்கொள்ளுகிற உணவின் தன்மைக்கும், அந்த உணவு கிடைக்கிற விதத்திற்கும் ஏற்றதாயிருக்கிறது. மாம்ஸம் முதலான அதிக புஷ்டிதரத்தக்க உணவுகளை உண்கிற பிராணிகளுக்கு இரைப்பை சிறிதாயும், அதில் விழுகிற உணவை செரிப்பிக்கத்தக்க ஒருவிதநீரை உண்டாக்குவதாயுமிருக்கிறது. அவற்றின் குடல்களும் குட்டையாயும் கொழுப்பற்றவையாயும் இருக்கும். காய் கிழங்குகளைப் புசிப்பவைகளுடைய இரைப்பையோ பெரியதாயிருக்கும். அசைபோடுகிற ஜந்துக்களுக்கு இரைப்பைகள் நான்குக்குக் குறையாமலிருக்கும். அதனாலேதான் அவற்றின் மட்டியுணவுகள் அந்தந்த இரைப்பையில் நன்றாய்ச் சீர்பட்டுக் கடைசியில் ஜீரணமாகின்றன. இத்தேசத்தைவிடப் புல்பூண்டுகள் அதிக புஷ்டியைக்கொடுக்கிற ஆப்பிரிக்கா தேசத்திலே, இங்கே நான்கு இரைப்பை உள்ள பிராணிகளுக்குக்கூட இரண்டே இருக்கின்றனவாம். எந்தப் பிராணிகளானாலும் சரி, குடல்மட்டும் அததின் உணவுக்கேற்றபடியே இருக்கின்றது. எவைகளுக்குக் குடல் நீளமோ, அவைகளுக்கு இரைப்பையும் பெரிது; தீனியும் அதிகம் கொள்ளும்; அவ்வப்போது அகப்பட்டதைத் தின்கிற காட்டுமிருகங்களுக்கு இரைப்பையும் சிறிது; குடலும் சிறிதே. இப்படிக் கால்நடைகளெல்லாம் கொஞ்சமேறக்குறைய மனிதர்களை ஒத்திருப்பதனால், அவைகளை நாம் பக்ஷமாய்ப் பாராட்டாமல் அவற்றினிடத்தில் கொடுமைகாட்டக் காரணமுண்டோ?

## HOW TO BEGIN ARITHMETIC.

### எண்முதல் விளக்கம்.

**விளையாட்டுக் கருவிகளைக் கொண்டு, எண்ணுணர்வு தோன்றச் செய்தல்.**

ஒரு சிறுகுழந்தைக்கு எண்களைக்குறித்து முதற்பாடம் சொல்ல ஆரம்பிக்கும்போது, உபாத்தியாயர் அல்லது தாய்தந்தையர்கள் ஒரு பெட்டியில் வெள்ளைக்கல், மரத்துண்டு, கோலிக்குண்டு, பலகறை, கிளிஞ்சில், மணி முதலான குழந்தைகள் இச்சிக்கத்தக்க விளையாட்டுச் சாமான்களைச் சேர்த்துவைத்துக்கொண்டு, குழந்தைக்கு எட்டும்படியான இடத்தில் அந்தப்பெட்டியை வைக்கவேண்டியது. ஒவ்வொரு வஸ்துவில் இரண்டு மூன்று சேகரித்துவைப்பதுந் தவிர, பலவிதமான வஸ்துக்களையும் அந்தப் பெட்டியில் வைத்திருந்தால் மிகவும் நல்லது. அப்புறம் உபாத்தியாயர் சிறுவனைப்பார்த்து, "ஒரு பலகறை எடுத்துக்கொடு" என்று சொல்லவேண்டியது. அப்போது

அந்தக் குழந்தை ஒருவேளை தன்னுடைய சிறியகையை அந்தப்பெட்டியில் போட்டு, கையில் அடக்கிக்கொள்ளக் கூடுமான வஸ்துக்களை எடுத்துக்கொடுக்கும். உபாத்தியாயர் அவைகளை வாங்கிக்கொள்ளாமல், மறுபடியும் பெட்டியில் போடும்படிசெய்து, தனக்குப் பல வஸ்துக்கள் வேண்டியதில்லையென்றும், ஒருவஸ்துதான் வேணுமென்றும், அந்த வஸ்துவின்பேர் பலகறையென்றும் தெரியச்சொல்ல வேண்டியது. அப்போது குழந்தை எடுத்துக்கொடுக்கும் பலகறையை உபாத்தியாயர் தனக்கு முன் இருக்கும் மேசையின்மேல் பரபரத்துக்கொண்டிருக்கும் குழைந்தையின் கைக்கு எட்டாமலிருக்கிற தூரத்தில் நன்றாய்த் தெரியும்படி தனியே வைத்து, "ஒரு கோலிக்குண்டு எடுத்துக் கொடு" என்றுமறுபடியும் கேட்கவேண்டியது. கேட்டவுடனே குழந்தை இரண்டு மூன்று கோலிக்குண்டுகளை எடுத்துக் கொடுக்கவரும். அப்போது ஒரு கோலிதான் கேட்டதென்று தெரியச் சொல்லவேண்டியது. இவ்வாறே "ஒருமணி, ஒருவெள்ளைக்கல், ஒரு கிளிஞ்சில், ஒரு மரத்துண்டு" என்று ஒவ்வொன்றாய்க் கேட்டு, குழந்தை சரியாய் எடுத்துக்கொடுத்தால், அவைகளைத் தனித்தனியாய் தெரியும்படியான இடத்தில் வைக்கவேண்டியது. இப்படிப் பெட்டியில் இருக்கும் பல வஸ்துகளில் ஒவ்வொன்று எடுத்து வைத்தபிறகு உபாத்தியாயர் குழந்தையைப் பார்த்து "அப்பா, நான் கேட்ட வஸ்துக்களைச் சரியாய் எடுத்துக்கொடுத்தாய், இப்போது இதுகளை நான் எடுத்துக்கொள்ளட்டுமா? அல்லது உன்னிடத்தில் மறுபடியும் கொடுத்துவிடவா?" என்று கேட்கவேண்டியது. அப்படிக் கேட்கும்போது "எனக்குக் கொடுத்துவிடும் ஐயா" என்று குழந்தை சொல்லும். "அப்படியா, அப்பா உனக்குவேணுமா, அப்படியே கொடுக்கிறேன்; முன்னே நான்உன்னைக் கேட்டு எப்படி ஒவ்வொன்றாய் வாங்கிக்கொண்டேனோ, அப்படியே நீயும் ஒவ்வொன்றாய் என்னைக்கேட்டு வாங்கிக் கொள்ளு" என்று உபாத்தியாயர் சொல்ல வேண்டியது.

கு. ஐயா, என் கிளிஞ்சிலைக் கொடும்.

உ. அது கூடாது. நீ அப்படிக்கேட்டால், நான் கொடுக்க மாட்டேன். "ஒரு கிளிஞ்சில் கொடும்" என்று கேள். குழந்தை ஐயா ஒரு கிளிஞ்சில் கொடும். என்றுகேட்டவுடனே, அதைக் கொடுத்துவிட வேண்டியது.

கு. ஒரு கோலிக்குண்டு கொடும்.

இதையும் கொடுத்து, இப்படியே குழந்தை ஒவ்வொன்றாய்க் கேட்பதை யெல்லாம் கொடுத்து விடவேணும். இவ்வளவுடன்



முதற்பாடத்தை நிறுத்திவிடவேண்டியது. இந்தப் பாடம் நாலைந்து நிமிஷத்துக்குள் முடிந்தபோதிலும், இந்தச்சொற்ப காலத்தின் பயிற்சியினாலேயே குழந்தைக்குப் பரபரப்பு மேன்மேலும் அதிகமாய், இன்னும் வேறே வஸ்துகளைக் காண்பிக்கச் சொல்லிப் பிடிக்கும்.

தாய்தந்தை, அல்லது உபாத்தியாயர் சில பழங்களை வைத்துக் கொண்டிருந்தால், அவைகளைக் கொண்டு மேலேசொல்லிய பாடத்தையே மறுபடியும் குழந்தை சந்தோஷிக்கும்படி சொல்லி வைக்கலாம். தான் மறுபடிகேட்டால், கொடுத்துவிட வேணுமென்று முன்னே குழந்தையுடன் ஒப்பந்தம் பண்ணிக்கொண்டு, "அப்புறம் ஒரு கிச்சிலிப்பழம் கொடும், ஒரு மாம்பழம் கொடும், ஒரு அத்திப் பழம் கொடும், ஒரு கொய்யாப்பழம் கொடும்" என்று தன்கையிலிருக்கும் பழங்களை ஒவ்வொன்றாய்க் கேட்கச்சொல்லி, ஒவ்வொன்றாய் கொடுத்தால், எவ்வளவும் வெறுப்பில்லாமல் குழந்தை எண்களின் தன்மையைச் சுளுவில் அறிந்துகொள்ளும். இந்தமுறைதவிர இன்னும் வேறே வழியில் மேலே சொல்லியபாடத்தைப் போதிக்கலாம். ஒரு சிறிய கூடையில் பழங்களை வைத்து அக்குழந்தையின் கையிற்கொடுத்து "விஜயத்துக்கு ஒரு கிச்சிலிப்பழமும், சுந்தரத்துக்கு ஒரு மாம்பழமும், ராமனுக்கு ஒரு வாழைப்பழமும் கொண்டு போய்க்கொடு" என்று சொன்னால், அப்படியே தனித்தனியாய்ப்பலருக்கும் தானே கொடுத்துவரும். இப்படிச்சொல்லிவைத்த பாடத்தைக் குழந்தை மறந்துபோவதற்கு முன்னமே ஒன்றுகளையே பலவாறாய் எடுத்துக்காட்டவேண்டும். போஜனகாலத்தில் குழந்தையுடன் பேசும்போது "ஒரு சிறுபையன் ஒருபீடத்தின்பேரில் உட்கார்ந்திருக்கிறான்" என்றும், "ஒரு தாலம், ஒரு கிண்ணி, ஒரு சின்னச்செம்பு இதுகளைவைத்துக்கொண்டு சாப்பிடுகிறான்" என்றும் இலேசாய்ப் பிரஸ்தாபம் பண்ணிவிட்டால், உடனே அக்குழந்தைக்குக் களிப்புண்டாய்த் தன்னைச்சுற்றி இருக்கும் பலவஸ்துக்களையும் பார்த்து ஒவ்வொன்றாயிருக்கும் வஸ்துக்களைமாத்திரம் பகுத்தறியும். "ஒரு தாய் (அம்மா) ஒரு தகப்பன் (அப்பா) ஒருவேலைக்காரன், ஒரு பாகசாலை" என்று அச்சமயத்தில் தனித்தனியாய் தன் கண்ணெதிரில் தோன்றுகிற வஸ்துக்களையெல்லாம் ஒன்று ஒன்று என்று எண்ணிப்பாராமலிராது. குழந்தை இருக்கும் இடத்தில் எல்லாம் ஒவ்வொன்றாகக் கிடக்கும் பதார்த்தங்களைத் தங்களுக்குக் காட்டும்படி அதற்கு இரண்டொரு தினம் பராக்குக்காட்டிச் சந்தோஷப்படுத்தலாம். ஒரு தோட்டத்தில் போயிருந்து அவ்விடத்தில் இதின் அடியில் சொல்லியிருக்கும் வஸ்துகள் இருக்குமாகில், ஒருவாசற்

கால், ஒரு வேலி, ஒரு பூஞ்சோலை, ஒரு தென்னஞ்சோலை, ஒரு குளம், ஒரு கிணறு, ஒரு ஏற்றம், ஒரு சால், ஒரு மண்வெட்டி, ஒரு அரிவாள், ஒரு படலை, ஒரு குடிசை" என்று இவ்வாறு தனித்திருக்குமவைகளைச் சுட்டிக் காண்பிக்கும்படி செய்யலாம். அல்லது அந்தக் குழந்தை விளையாடிக் கொண்டிருந்தால், அவ்விளையாட்டுச் சாமான்களில் "ஒரு பம்பரம், ஒரு கயிறு, ஒரு பந்து, ஒரு கோல், ஒருசிறிய வண்டி, கூடை, பெட்டி" என்று சொல்லிவைக்கலாம். இவ்வாறாக அந்தக் குழந்தையின் கண்ணுக்கு அகப்படும் வஸ்துகளை எல்லாம் காட்டினபிறகு, தன் சரீரத்தையும், அதன்மேல் தரித்துக்கொண்டிருக்கும் வஸ்திரபூஷணங்களையும் பார்த்து, ஒவ்வொன்றாயிருக்குமவைகளையும் நினைக்கும்படி செய்யலாம். "ஒரு முகம், ஒரு வாய், ஒரு நாக்கு, ஒரு மூக்கு, ஒரு மேல்வாய், ஒரு கழுத்து, ஒரு தலை, ஒரு குல்லா, ஒரு சொக்கா, ஒரு கண்டசரம்" என்று சொல்லும். இப்படி ஒன்று என்பதைக் குறித்துச் சிறு குழந்தைக்குப் பூரண ஞானம் உண்டாய்விட்டால், மறுபாடத்தைச் சுலபமாய்க் கிரகித்துக்கொள்ளும்.

எண்முதல் விளக்கம்.

---

# MOSQUITO HONEY.
## கொசுத்தேன்.

204-ஆம். பக்கத் தொடர்ச்சி.

கிளைகள் அல்லது மரப்பொந்துகளிலாயின் அப்பொந்துகளின் மத்தியில் இருக்கும் சடைப்பற்றான பாகத்தைக் கொசுக்கள் தம் உமிழ்நீரால் கடினப்படுத்தித் தேன் சேர்க்க வாரம்பிக்கின்றன.

மற்ற ஈக்கள் தேனீட்டுவதற்கும் இக்கொசுக்கள் ஈட்டுவதற்கும் சிற்சில வகையில் வித்தியாசமுண்டு. பெரிய ஈக்கள் பூக்களிலுள்ள தேனையும், மகரந்தங்களையும் நுகர்ந்து தாம் அமைத்துள்ள மெழுகு அறைகளுட்சேர்த்து அவற்றினின்றும் கசியும் தேனை மத்தியபாகத்தில் சேர்க்கின்றன. இக்கொசுக்கள் சிறியதும் பெரியதுமாகிய பூக்களிலுள்ள தேனை விரும்பி யருந்துவதாகத் தோற்றவில்லை. அவற்றிலுள்ள தேனை பேரீக்கள் முதலில் அருந்தி விடுவதினாலாகிலும், அல்லது தேனை யுண்பதால் எழும் மயக்கத்தை இக்கொசுக்கள் சகிக்கவேலாமையாலாகிலுமிருக்கலாம். பெரும்பாலும் இக்கொசுக்கள் மிகச்சிறிய மலர்களையே மொய்த்து அவற்றிற்கிடைக்கும் மகரந்தப் பொடிகளையாங்குள்ள தேனில் அணைத்துச் சிறு உருண்டைகளாக்கித் தமது வாயில் முன்கால்களிரண்டின் உதவி கொண்டு



கவ்வி தாம் முன்னமே தயாரித்துள்ள விடத்திற்குக் கொணர்கின்றன. இவை வரிசை வரிசையாக பலவகை நிறங்களோடு கூடிய சிறு உருண்டைகளைக் கவ்விக்கொண்டு வருவதைக் காணும்போது அவற்றின் ஒழுங்கும், தாம் மேற்கொண்ட காரியத்தில் ஊக்கமும், விடாமுயற்சியும் ஒவ்வொருவர் உள்ளத்தையுங் கவராது போகாது.

இக்கொசுக்கள் தமது கூட்டுக்குப் போகும்வழியை இயற்கையில் மிகச்சிறியதாகவே யமைப்பதுண்டு; இரண்டு கொசுக்கள் ஏககாலத்தில் உள்நுழைய வேண்டுமாயின் கடினமாகவே இருக்கும். தொடர்ச்சியாய் வரும் கொசுக்கள் வழியில்லாமையால் உள்நுழைய வெகு நேரம் வெளியிற்காத்திருப்பதில்லை. அவற்றின் நேரம் வீண் போகாதபடி முதலிலிருக்குங் கொசு சிறிதும் ஆலசியமின்றி விரைவில் உள் நுழைகின்றது. ஒரு கொசு உள் நுழைந்ததும் வெளியில் வரவேண்டிய கொசுக்கள் சற்று தங்கி உள்ளே நுழையவேண்டியவை முழுதும் நுழைந்தபின்பே வெளிவர வாரம்பிக்கின்றன.

இவ்வாறு கொணர்ந்த மகரந்தப் பொடிகளின் சிறு உருண்டைகளை இக்கொசுக்கள் பேருருண்டைகளாக அமைக்கின்றன. வாயிற் கவ்வி வரும் உருண்டைகளில் இயற்கையில் தேன்பசையிருந்து ஒன்றோடொன்று பொருந்தும்படியான தன்மையிலிருந்தும் இவைதாமும் தம்முடைய உமிழ்நீரையுங் கூடச்சேர்த்து ஒரு உருண்டையோடு மற்றொரு உருண்டை பொருந்தும்படி செய்து பெரிய மிளகு அளவு பிரமாணத்திலமைக்கின்றன. இதனைச்சுற்றிலும் தமது உமிழ்நீரால் மெழுகி அடிப்புறத்தில் மாத்திரம் ஒரு சிறிய துவாரம்விட்டு அவ்வழியாய் உள்ளிருக்கும் மகரந்தங் கசிந்தொழுகுந்தேன் வெளிப்படும்படி விடுகின்றன. இம்மாதிரியான பேருருண்டைகள் பல ஆங்கு கூடும் கொசுக்களின் தொகைக்கேற்ப அமைத்து அவை ஒன்றின்மேலொன்றாய்ப் பொருந்தியிருக்கும்படியும், அவற்றின் வாய்கள் ஒரேபுறத்திலிருந்து அவற்றினின்றுங் கசியுந்தேன் பல விடங்களில் சிதறிப்போகாது ஒரே இடத்திற் கூடும்படியும் செய்கின்றன. இம்முட்டைகளிலிருந் தொழுகுந்தேன் முழுதும்வெளிப்படுவதற்குச் சில மாதங்கள் செல்லும்.

இவ்வாறு சேருந்தேனைக் கொசுக்கள் ஈக்களைப்போல செலவிடாமல் மீண்டும் உருண்டைகளாக்கி மகந்தரங்கிடைக்காத காலத்தில் உணவாகும்படி தமது கூட்டின் மற்றோர்புறத்தைப் பண்டசாலையாக்கி சேமித்துவைக்கின்றன. மகரந்தரங்களினின்றொழுகும் தேன் நின்றுவிட்டதும் முதலில் தாம் சேகரித்து வைத்த தேனை யருந்திக் காலங்கடத்துகின்றன. நாளேற்றத்தில் இத்தேன் முட்டைகள் அப்படியே கட்டிப்போய் சிறு சிறு கற்கண்டுப் பொடிகளாக மாறுவதுமுண்டு. இவற்றின் ருசி மிதமான இனிப்பைக் கொடுக்கும். மலைத்தேனவ்வளவு இனிப்பாயிராது.

பு-வே-சபாபதி முதலியார்.

## இஷ்டமான பாடங்கள்.

| பாடங்கள். | லோயர் பிரைமரி பாடசாலைகள். | | | | அ. பி. பாடசாலைகள் |
|---|---|---|---|---|---|
| | பாலர் வகுப்பு. | முதல் வகுப்பு. | இரண்டாம் வகுப்பு. | மூன்றும் வகுப்பு. | நான்காம் வகுப்பு. |
| 1. கிண்டர் கார்டன். (1) தொழில்கள். | (a) பரிட்சை யதிகாரி முன்னிலையில் மூன்று தொழில்கள் செய்வது. ஒவ்வொருதொழிலிலும் மூன்று மாதிரி அல்லது பொருள்களுக்குக் குறையாமல் செய்யப்பழகி இருத்தல். | (a) பரிட்சை யதிகாரி முன்னிலையில் நான்கு தொழில்கள் செய்வது. ஒவ்வொரு தொழிலிலும் நான்கு மாதிரி அல்லது பொருள்களுக்குக் குறையாமல் செய்யப் பழகி இருத்தல். | (a) பரிட்சை யதிகாரி முன்னிலையில் நான்கு தொழில்கள் செய்வது. ஒவ்வொருதொழிலிலும் ஆறு மாதிரி அல்லது பொருள்களுக்குக் குறையாமல் செய்யப்பழகி இருத்தல். | | |
| | (b) பிள்ளைகளால் செய்யப்பட்ட பொருள்களின் உருவம், நிறம் முதலிய முக்கிய தோற்றங்களைப் பற்றியும், அப்பொருள்களைப் பற்றிச்சொல்லப்படும் கதைகள், அபிநயப்பாடல்களைப் பற்றியும் கேட்கப்படும் மிகச் சுலபமான கேள்விகளுக்கு விடைகூறுவது. | (b) பிள்ளைகளால் செய்யப்பட்ட பொருள்களின் உருவம், நிறம் முதலிய முக்கிய தோற்றங்களைப் பற்றியும், அப்பொருள்களைப் பற்றிச்சொல்லப்படும் கதைகள், அபிநயப்பாடல்களைப் பற்றியும் கேட்கப்படும் சுலபமான கேள்விகளுக்கு விடைகூறுவது. | (b) பிள்ளைகளால் செய்யப்பட்ட பொருள்களின் உருவம், நிறம் முதலிய முக்கிய தோற்றங்களைப் பற்றியும் அப்பொருள்களைப் பற்றிச்சொல்லப்படும் கதைகள் அபிநயப் பாடல்களைப்பற்றியும் கேட்கப்படும் சுலபமான கேள்விகளுக்கு விடைகூறுவது. | | |
| (2) கதைகள். | தொழில்களிலும் பாட்டுக்களிலும் உதகரித்து உபாத்தியாயரால் சொல்லப்பட்ட சிறு கதைகளில் கேட்கப்படும் மிகச் சுலபமான கேள்விகளுக்குப் பதில்சொல்வது. குறைந்தது மூன்று கதைகள் போதிக்கப்பட்டிருக்கவேண்டும். | தொழில்களிலும் பாட்டுக்களிலும் உதகரித்து உபாத்தியாயரால் சொல்லப்பட்ட சிறுகதைகளில் கேட்கப்படும் சுலபமான கேள்விகளுக்குப் பதில் சொல்வது. குறைந்தது நான்குகதைகள் போதிக்கப்பட்டிருக்கவேண்டும். | தொழில்களிலும், பாட்டுக்களிலும் உதகரித்து உபாத்தியாயரால் சொல்லப்பட்ட சிறு கதைகளில் அல்லது அதற்குச்சம்மந்தப்பட்ட விஷயங்களில் கேட்கப்படும்கேள்விகளுக்கு பதில்சொல்வது. முன் கற்றுக் கொடாததாய், குறைந்தது நான்குகதைகள் பாடம் பண்ணிவைப்பது. | | |
| (3) அபிநயப் பாடல். | உபாத்தியாயரோடேயாயினும் அல்லது தாமேயாயினும் மிகச் சுலபமான அபிநயப்பாடல்களை அபிநயத்தோடு பாடுவது ஆறுபாடல்களை வரப்படுத்துவது. | உபாத்தியாயரோடேயாயினும் அல்லது தாமேயாயினும் சுலபமான அபிநயப்பாடல்களை அபிநயத்தோடுபாடுவது. முன்பாடம் செய்தது நீங்க ஆறு பாட்டுக்களைப் பாடம் பண்ணுவது. | உபாத்தியாயரோடேயாயினும் அல்லது தாமேயாயினும் அபிநயப்பாடல்களை அபிநயத்தோடு பாடுவது. முன்பாடம் செய்தது நீங்க ஆறுபாட்டுக்களைப் பாடம் பண்ணுவது. | | |

* பரிட்சை நடத்தப்படுங்காலத்தில் ஒவ்வொரு தொழிலுக்கும் உபயோகப்படுத்தப்படும் பொருள்கள் பாடசாலையில் சித்தமாயிருத்தல் வேண்டும். ஆண்பிள்ளைகள் பாடசாலையில், கிண்டர்கார்டன் சார்ட்டில் குறிக்கப்பட்டுள்ள மூன்று உட்பிரிவுகளில் (1)தொழில்களையாவது, (3) அபிநயப்பாடல்களையாவது நீக்கிவிடலாம்.

## A DEFECT IN QUESTION.

## வினாவழு.

நல்லாசிரியன் பத்திராதிபர் அவர்கட்கு வந்தனம். இதிற்கண்ட விஷயம், உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும் தங்கள் செந்தமிழ்ப் பத்திரிகையில் இடம் பெறுமென்று நம்பிவரைகின்றேம்.

நல்லாசிரியன் 6 ஆவது எண்ணுள்ள பத்திரிகையில் மதிவனப் புச்சேய் என்னும் புனைவுப் பெயர் கொண்ட ஒருவர் எழுதிய விநோதக் கூற்றுக்களைக்கண்டு வியப்புக்கொண்டோம்.

முதற் கூற்றில் இராயர் குளக்கரையினின்று தம் மந்திரிகளை நோக்கிப் பொதுவில் "இக்குளத்து நீர் எப்படி இருக்கிறது?" என்று வினவ அதற்கு "அது முத்துப்போல் இருக்கிறது" தென்றுர், "வெண்மையாகவிருக்கிறது" என்றும், "அழகாகவிருக்கிறது" என்றும், "சுத்தமாக விருக்கிருக்கிறது" என்றும், "நிறையவிருக்கிறது" என்றும் பற்பலவிதமாக அப்பாஜி என்னும் முதல் மந்திரி நீங்கலான மற்றையோர்கூற அப்பாஜியோ "நீர் கரையிலிருக்கிறது" எனக் கேட்ட அரசன் அகமகிழ்ந்து அவனைப் புகழ்ந்தனன் என்றனர்.

அப்பாஜியின் நுண்ணறிவை விளக்கத்தக்க சரித்திரங்கள் பல படித்தும் கேட்டுமிருக்கின்றோம். எனினும், ஈண்டு அரசன் கேட்ட வினவும் அதற்கு அப்பாஜி யளித்த விடையும் சற்றும் பொருத்த முடையனவாக ஏற்படவில்லை. குளத்து நீர் எப்படி யிருக்கிற தென்ற கேள்விக்கு ஆண்டு ஒவ்வொருவன்கூறியதும் பொருத்தமான விடையேயாம். மற்றையோர் விடையை நோக்கும்போது அப்பாஜியின் விடை சிறிது புறக்கணிக்கத் தக்கதே. நாய் எப்படியிருக்கிறதென்னும் கேள்விக்கு "நீளமாயிருக்கிறது" "உயரமாயிருக்கிறது" "கருமையாயிருக்கிறது" "செம்மையாயிருக்கிறது" "வெண்மையாயிருக்கிறது," "சுகமாயிருக்கிறது," "அசுகமாயிருக்கிறது" முதலிய பல்லாயிரம் விடைகளும் பொருத்தமுடையனவே.

இவ்வாறு பலவிடைகளையேற்கும் வினா, வினாவழுவின் பாற்படும். அஃதேபோல் இராயர் இறுத்தவினா, வினாவழுவின் பாற்படுமே யன்றி மற்றன்று. அவ்வினாவிற்கு இராயர் முதலெடுப்பில் உத்தரங் கூற வேண்டிவரின் அவரும் மற்றையோர் கூறிய விடைகளில் ஏதேனும் ஒன்றைக் கூறியிருப்பரே யன்றி முடிவில் தாம் கூறியவாறு கூறியிரார். மதிவனப்புச்சேய் என்பார் இவ்வினாவை வினாவழுவிற்குக் காட்டாகக்* காட்டினரோ? என ஐயுறுகின்றோம். அன்றி வினோதக் கூற்று வினாவோ? அறிகிலேம்.

* காட்டாக—திருஷ்டாந்தமாக.

இங்ஙனம்,
நெடியோன்.



## WHAT SHOULD FEMALE CHILDREN LEARN?

## பெண்கள் கற்கவேண்டியவை எவை?

பெண்பிள்ளைகளுக்கு ஆண்பிள்ளைகளைப் போலவே நூல்களை வாசிக்கவும், வாசித்தவைகளின் பொருளையறியவும், தமது அபிப்பிராயங்களை எழுதவுமான பலவும் சாதனமாய்ப்படி இலக்கிய இலக்கணங்களை இயன்றமட்டும் விசேஷமாகவே கற்பித்தல் அவசியம். பெண்களுக்குப் பகுத்தறிவையுண்டாக்கும் பலநூல் பயிற்சியோடு கணித பாகமும் பயிற்றப்படவேண்டும். இவையன்றி, தேசகாலவர்த்தமானங்களைத் தெரிவிக்கும் சரித்திரங்களையும், உலகவியற்கையையறிவிக்கும் பூகோளசாஸ்திரத்தையும், உண்மை விஷயங்களை விளக்கும் பிரகிருதிசாஸ்திரத்தையும், (இயற்கைப் பொருள்விளக்கநூல்) ஒழுங்கான நடக்கையையுணர்த்தும் நீதிநூல்களையும், கடவுள் மகிமையைக் காட்டும் அடியார் சரித்திரங்களையும், ஆண்பிள்ளைகள் போலவே பெண்களும் படியாராயின் அவர்கள் நாகரீக மற்று அறிவிற் குறைந்தவராகவே இருக்கும்படியாகும். இத்தகைய பெண்கள் பெற்றெடுத்துவளர்க்கும் பிள்ளைகளுக்கும் அவர்கள் குணம் அமையும்.

மேலே விவரித்தவைகளே யன்றி ஸ்திரீகள் தனிப்படக் கற்க வேண்டிய விஷயங்களும் பல உள. அவை வீட்டுக் காரியங்களை விளக்கும் இல்லற வொழுக்கமும் (Domestic Economy), கற்பைக் கற்பிக்கும் உத்தமிகளின் சரித்திரங்களும், வீட்டை யலங்கரிக்கும் விதங்களும், பாகஞ்செய்யும் பரிபக்குவங்களும், பிள்ளைகளைவளர்க்குந் தள்ளொணுத்தன்மைகளும், தையல்வேலையும் பிறவுமாம். இவற்றில் தையல் வேலை பெண்கள் தம்கையால் செய்யும் காரியமாக விருத்தலால் அதனை அவர்களுக்கு நேரில் செய்து காட்டிப் பழக்க வேண்டியதாக விருக்கின்றது. மற்றவைகளோ காலக்கிரமத்தில் இந்த நல்லாசிரியனைப் போன்ற அரிய புத்தகங்களில் கல்விகேள்விகளாற்சிறந்த அறிவாளிகள் எழுதிவரும் விஷயங்களைச் சரிவரவாசித்துணர்வதனால் கற்றுக்கொள்ளக் கூடியனவாகவிருக்கும். பெண்களுக்குச் சங்கீதமும் இன்றியமையாததேயாம்.

சரி, இனிப் பெண்கள் சங்கீதமும் கற்கவேண்டுமா? அவர்களென்ன சபைக்குப் போய்பாடப் போகிறூர்களா? ஆடப்போகிறூர்களா? என்று ஆக்ஷேபிப்பவருமுண்டு. அப்படியாக்ஷேபித்தல் சரியன்று. எப்படியெனின்? ஸ்திரீகள் சமுசார பாரத்தைத் தாங்கி அநேக கஷ்டங்களுக்குள்ளாகி மனோவியாகுலத்தினால் வருந்துங்

காலத்தில் தம்மனத்திற் குல்லாசத்தையுண்டு பண்ணி பல்லறங்களைப் பாலிக்கும் இல்லறத்தை நல்லறமாக்கி இன்பத்தைக் கொடுக்கும் சம்பத்து சங்கீதமேயாகும். உலகத்தில் ஒவ்வொருவரும் வெவ்வேறு விஷயங்களில் பின்னருசியைக் கொண்டிருப்பவரேயாயினும் சமஸ்தஜீவப்பிராணிகளும் சதா சங்கீதத்தில் பூரணருசியைக் கொண்டிருக்கின்றன வென்பதற்கு அத்தாட்சி அடியில் வரும்பாடலா மென்க.

### கலித்துறை.

“பாலுண் குழந்தை யொடுநற் பசுவும் பணியுமின்னும்
ஞாலத் தமர்பண் டிதயோ கிகளுடன் ஞானிகளும்
கோலத் தமரும நான்முகன் முக்கணன் கோவலனும்
சாலச் சுகமுற வோங்கிய நற்கலை சங்கீதமே.”

புருஷன் பகற்காலத்தில் வெளியேறிச் சென்று கஷ்டப்பட்டு வீடுவந்து சேர்ந்தகாலத்தில் மனைவி அன்னவனுக் கன்னபானாதிகளைப் பரிமாறி நாவிற்கினிய உருசியுள்ள பதார்த்தங்களால் பசியைத் தணிக்கும் வண்ணம் காதுக்கினிய கீதங்களையும் கழறி மனத்திற்கு உல்லாசத்தையுண்டு பண்ணி சாரமிலாச் சமுசாரமே சாரமெனத்தோன்றுமாறு செய்யுங் கடமையும் மாதர்க்குரியதாதலால் ஜீவகோடிகளுக்கின்பம் பயக்கும் மேலானசங்கீத வித்தையைப் பெண்கள் கற்றிருத்தல் மிகவும் மேன்மையைத் தரத்தக்கதேயாகும்.

இத்தகைய குணபூஷணிகளான பெண்மணிகளின் நன்முயற்சியாலன்றோ காசாசைவேசையரின் பாசத்திற் சிக்கி மோசம்போகும் நமது தேசதாசி தாச விசுவாச நேசர்களின் மதிமயக்கம் திருந்த வேண்டும்? இக்காலத்தில் சமுசாரிகளான நமது நாட்டுப் பெண்களின் தௌர்ப்பாக்கிய தசையினால் சங்கீதமென்னும் அரியகான வித்தை கற்கத்தகாதென் றுரைக்கத்தக்க துர்த்தசையில் விலைமாதரின் பெருமுயற்சிக் குள்ளாயிருக்கின்றது. எனினும், தாசிகள் அன்னத்தை உட்கொள்ளுகிறார்களென்னுங் காரணத்தால் சமுசாரிகள் அதனையேற்காது பட்டினி கிடந்து சாகலாகாதாகையால் சங்கீதம் தாசிகள் கற்றுவருகிறாளென்னும் காரணமாத்திரத்தாலேயே அந்த அரிய வித்தையை நாம் கைசோரவிடுவது ஞாயமாக மாட்டாது.

சிலர் சமையல் செய்யச் சாத்திரங் கற்கவேண்டுமா? என மொழிவாராயினும் நமது பெண்கள் அப்பியாசக்குறைவினால் வீடுகளிற்பெரும்பாலும் சோற்றை வெந்தும், வேகாமலும், அளிந்தும் புகைந்தும், காந்தியும் வடிப்பதும், உப்புமிஞ்சினால் தண்ணீரும்



தண்ணீர் மிஞ்சினால் உப்பும் என்றபடி காய் கறிபதார்த்தங்களைச் சமைத்து வைப்பதுமான குறைவுகளை நிறைவு படுத்தப் பாகசாஸ்திரம் சிறிது பாடசாலையிலேயே அப்பியசித்தல் பான்மையாகும். இந்நூல் பெண்கள் கற்பதினால் சமையற் குரிய வஸ்துக்களின் பாவங்களின்னவையெனக் கன்னிப் பருவத்திலேயே உணர்ந்திருப்பின் காரிய சாதகத்திற் கேற்றதாகும். பாகசாஸ்திரம் பாடசாலைகளிற் பயிலுஞ் சிறுமிகள் அந்நூலிற்சொல்லியபாகங்களை நேரில் அவ்விடத்தே சமைத்து ருசிபார்க்கும்படி செய்துணர்த்துவது மேலானமுறை. மனிதர் தேகசுகத்துடன் உயிர்பெற்றுவாழ்தற்குரிய உணவு பக்குவதசையில் பாகஞ்செய்யப் பெண்கள் கற்றிருப்பதே சாலச்சிறந்த சாதனம்.

சிசுபோஷணை ஸ்திரீகளுக்குரிய முக்கிய தருமமாகையால் குழந்தைகளுக்கு வியாதியுணுருங்கால் உடனேதக்க சிகிச்சை செய்வதற்குப் பெண்கள் வைத்தியமும் கற்றிருத்தல் இன்றியமையாதது. ஆண்பிள்ளைகள் எப்போதும் வெளியேறிக் காரியம் பார்ப்பவர்கள்; பெண்களோ எக்காலமும் வீட்டினிடமே தங்கியிருப்பார்களாகையால் அவர்கள் குழந்தைகளையும், விருத்தர்களையும் காலோசித சமயோசிதப்படி காக்கவேண்டியவர்கள். மேலும் வீட்டில்கர்ப்பிணிகளாயிருப்பவர்களைப் பாதுகாத்துப் பிரசவகால்த்தில் நடத்தவேண்டிய முக்கிய காரியங்களுக்கும் அவர்களே துணை. குழந்தைகளுக்கு அகஸ்மாத்தாய் நேரிடக்கூடிய காயம், சுளுக்கு, விஷக்கடி, அடி முதலிய அபாயங்களுக்கும் உபாயங்களை உடனுக்குடன் தேடவேண்டியவர்களும் அவர்களே. ஆகையால் ஒவ்வொரு வீட்டுப்பெண்களும் வைத்திய நூல்பயிற்சியு மடைந்திருத்தல் மிக உசிதம். ஆபத்காலங்களில் புருஷர்கள் வீட்டிலிருப்பார்களென்று நம்புவதற்கிடமில்லை. இதனால் வீட்டுப் பெண்கள் (கல்விகேள்விகளிற் பழகியிராதவர் களாயின்) சித்தப்பிரமைகொண்டு ஒன்றுந்தோன்றா திருக்கவும், ஆண்பிள்ளைகள் வந்தபிறகு நேர்ந்ததைச் சொல்ல அவர்கள் வைத்தியரைத் தேடவும், அதனாலாசியமாகவும் ஒருகால் பிராணாபத்து நேரவும் கூடும். அன்றியும் ஒவ்வொரு சொற்பவியாதிக்கும் வைத்தியரைத் தேடுவதாயின் விருதா கஷ்டமும், திரவிய நஷ்டமும் உண்டாகும். ஆகையால் ஸ்திரீகள் இயன்றமட்டும் வைத்திய நூல்களையும் வாசித்திருந்தால் சமயத்தில் எவ்வளவோ அநுகூலமாகவிருக்கும். சுபம்.

சி - வே. சண்முகமுதலியார்,
*Hd. M., L. F. School, Tiruvanure.*

# NASAL BREATH.

## மூக்கால் மூச்சுவிடல்.

வாயால் மூச்சுவிடும்போது காற்று பிரவேசிப்பதால் நுரையீரல் அகல்வதைவிட இரண்டத்தனை மூக்கால் மூச்சுவிடும்போது அகல்கின்றது. ஒருதரம் வாயால் மூச்சுவிட அதாவது காற்றை வாய் வழியாய் நுரையீரலுக்குள் செலுத்தி மறுபடியும் திருப்பிவிட எவ்வளவு நேரம் பிடிக்கின்றதோ அதைப்போல் சுமார் இரண்டத்தனை நேரம் ஒரு தரம் மூக்கால் மூச்சுவிடும்போது பிடிக்கின்றதென்பதை ஒவ்வொருவரும் அநுபவத்தில் தெரிந்துகொள்ளலாம். விநாடி முள்ளுள்ள ஒரு கடிகாரத்தை கையில் வைத்துக்கொண்டு வாயினால் ஒரு பெருமூச்சும், உடனே மூக்கினால் மற்றொரு பெருமூச்சும் விடுவதால் இவ்வித்தியாசம் நன்கு விளங்கும். ஆகையால் வாயால் மூச்சுவிடும்போது நுரையீரல் முழுதும் காற்றுப்பிரவேசிக்கிறதில்லை யென்பதும் மூக்கால் மூச்சு வருவதைப்பார்க்கிலும் வாயால் அதிசீக்கிரமாய் மூச்சுவிடலாமென்பதும் விளங்குகின்றன.

மூக்கால் மூச்சு விடுகிறவனுடைய நுரையீரல்களின் மூலைகளிலெல்லாம் காற்றுப் பிரவேசித்து அவைகளை பெருக்கச்செய்கின்றது. இதனால் அளவற்ற பயன் உண்டு. நுரையீரலின் மூலை மூச்சுவிடும்போது விரியாவிட்டால் அது சுருங்கி இறுகி நாளடைவில் கெட்டு இருமல் வியாதிக்கு ஏதுவாக்குகிறது.

மூக்கால் மூச்சுவிடும் ஒருவனுக்குப் பரந்த மார்பும், சுத்த இரத்தமுமுண்டு. அஃதெங்ஙனமெனில், மூக்கால் மூச்சு விடும் போது காற்று நுரையீரலுக்குள் முழுவதும் நன்றாய்ப் பிரவேசித்து மார்பை விசாலமாக்குகிறது. நுரையீரலுக்குள்ளிருக்கும் நுண்ணிய காற்றறைகள் ஒவ்வொன்றிலும் காற்றானது தங்கி அவ்வறைகளையடுத்திருக்கும் இரத்தத்தோடு கலப்பதனால் அசுத்தப்படுகிறது. மார்பு விரிந்திருப்பதால் நுரையீரலை அடுத்திருக்கும் இரத்தக்குழாய்களிலிருந்து சுத்த இரத்தம் விரைவாக உயிர்நிலையென்னும் குண்டிக்காய்க்கும் சென்று அதன் வேலையைச் செவ்வனே செய்வித்து தேகமுழுதும் சுத்த இரத்த ஓட்டத்தை உண்டாக்குகின்றது. ஓயாது வாயால் மூச்சு விடுகிறவர்களுடைய நுரையீரல்களுக்கு நாள் சுருங்குவதால் அவர்களுடைய மார்பும் சுருங்கி வனப்பற்றிருப்பதைக் கண்கூடாகக் காணலாம். இனிப் பணியாளர்கள் மூக்கால் மூச்சுவிடப் பழகினால் இவர்கள் நாளுக்குநாள் விருத்தியடைந்து முடிவில் தங்கள் பிணியை முற்றும் தொலைத்துச் சுகமே வாழ்வார்கள்.



மூக்கால் மூச்சுவிடும்போது முதலில் காற்று மூக்கிலிருக்கும் சிமிள்களில் தங்குகின்றது அங்கே காற்றானது தன் சீதோஷ்ணத்திற்குத் தக்கவாறு உலருகின்றது. சிலசமயங்களில் குளிர்கின்றது. இக்காற்றில் அணுவளவாயிருக்கும் கிரிமி முதலிய அசுத்தங்கள் நீக்கப்படுகின்றன. இங்ஙனம் சுத்தமான இக்காற்று தேகசௌக்கியத்திற்குத் தக்க அளவாக மூக்குத்துவாரவழியாய் நுரையீரலில் பிரவேசிக்கிறது.

வாயால் மூச்சுவிடும்போது காற்று இடையில் எங்கும் தங்காமலும், அதிலுள்ள அசுத்தங்கள் நீங்கி சிறிதேனும் சுத்தப்படாமலும், உஷ்ணகாலங்களில் முன்சொன்ன வண்ணம் குளிர்ச்சியடையாமலும், சீதகாலங்களில் உஷ்ணப்படாமலும் நேரேயாயின் அகன்ற குழாயின் வழியாய் நுரையீரலில் விரைவாகச் செல்லுகின்றது. இப்படிக் காற்று விரைவாக நுரையீரலில் செல்லுவதால் நுரையீரலின் மெல்லிய பாகங்களில் சில கிழிந்துவிட்டாலும் கிழிந்து விடலாம். ஆயின், வாயால் மூச்சுவிடும்போது காற்று நுரையீரல் முழுவதும் பிரவேசிக்கு முன் சிருஷ்டி பிராணிகளின்மேல் இரக்கங்கொண்டு அதனை வெளியே கொண்டுவந்து விடுகின்றமையால் இத்தகைய அபாயம் சாதாரணமாக நேரிடுகிறதில்லை.

மூக்கின் உட்புறத்தில் சளி உண்டாகிறது. இச்சளி மூக்கோடு சம்பந்தபட்டிருக்கும் குழாயின் மூலமாய் நுரையீரலுக்குட் செல்லாமல் மூக்கைச்சிந்தும்போது வெளியேவரும் தன்மையுடையது. இதனால் மூக்கால் சுவாசிக்கும்போது காற்றில் அணுவளவாய் சஞ்சரிக்கும் கிருமி முதலிய அசுத்தங்கள் மூக்கில்சென்று சளியுண்டாகும் இடத்தில் தங்கி. சளியைச் சிந்தும்போது இவ்வசுத்தங்கள் வெளியேவருகின்றன. சளி பிசின் போன்று தன்மேல்படும் நுண்ணிய அசுத்தங்களைப் பற்றிக்கொள்ளும் தன்மையும், தான் வெளியே வரும்போது தன்னுடன் அசுத்தங்களை வெளியே கொண்டுவரும் தன்மையுமுடையதாகிறது. மூக்கால் சுவாசித்தலால் இத்தகைய நுண்ணிய அசுத்தங்கள் சிறிதேனும் உட்செல்லாமல் சுத்தகாற்றுமாத்திரம் நுரையீரலிற் செல்லுவதால், தேகமுழுதும் பாயும் இரத்தம் சுத்தப்பட்டுத் தேகத்திற்கு வலிமையும் வனப்பும் கொடுக்கின்றது.

வாயில் எச்சில் சதா கசிந்து கொண்டிருக்கின்றது. இதனை வேண்டுமென்று வெளியே உமிழ்ந்தாலொழிய இது சதா வயிற்றுக்குள் செல்லுகின்றது. ஒவ்வொருவனும் தனக்குத் தெரியாமலே

எச்சிலை இடைக்கிடை விழுங்கிக் கொண்டிருக்கிறான். எச்சிலை ஒருவன் விழுங்காமல் சிறிது நேரம் வாயில் வைத்துக்கொண்டிருந்தால் அது அளகமாக வாயில் சுவறி அவனை விழுங்கச்செய்யும் அல்லது உமிழ்ந்துவிடச்செய்யும். எச்சில் ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாது வேண்டிய பல வஸ்துக்களில் ஒன்று. எச்சில் உண்ணும் உணவை ஜீரணிக்கச்செய்கின்றது. ஆதலின் எச்சில் சுத்தமாயிருக்க வேண்டுமென்பதேற்படுகின்றது. வாயால் மூச்சுவிடும்போது எச்சிலில் மேற் கூறிய நுண்ணிய கிருமி முதலிய அசுத்தங்கள் சேர்ந்து விழுங்கும்போது வயிற்றுக்குள் போகின்றன. வயிற்றில் சதா கசிந்து கொண்டிருக்கும் பலவகைத் திராவகங்களும், உணவை ஜீரணிக்கும் தம் வேலையினின்றும் விலகி இக்கிருமி முதலிய அசுத்தங்களைக் கொன்று ஜீரணிக்கும் வேலையிலிருப்பதனால் தேகத்தில் அரோசகம் அஜீரணம் முதலிய வியாதிகள் உண்டாகின்றன.

(இன்னும் வரும்)

---

## TIT-BITS.

### விநோதக் கூற்றுக்கள்.

அரசனுக்கு அருங்கலம் அமைச்சனேயாம். அறிவுள்ள அமைச்சனில்லாமல் அரசு செவ்வையாய் நடைபெறாது. அரசனுக்குச் சந்தர்ப்பநோக்கி வருவிஷயங்களைக் கூறி நன்மையுண்டாக்குவதே மதிமந்திரியின் மாண்பாம். இது நோக்கியே "மந்திரிக்கழகு வரும் பொருளுரைத்தல்" என்னும் முதுமொழியும் வழங்குகின்றது. எனினும், மந்திரியாவான் சிற்சில சமயங்களில் அரசன் மனஞ்சென்றவழி நடக்கவேண்டியும் வரும். அக்காலத்து மந்திரியின் மதிமிக்க வியக்கத்தக்கவாறாய் இருப்பதுண்டு. இதை அடியில் வரும் விஷயத்தால் விளக்குவாம்.

ஒருநாள் அரசனும் அமைச்சனும் அரண்மனை உப்பரிக்கையில் உலவிப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தனர். அப்போது வீதி வழியே ஒருவன் கத்தரிக்காய் கூடையைத் தலையிற் சுமந்துகொண்டு, "கத்தரிக்கா! கத்தரிக்கா! என்று கத்தி விற்றுக்கொண்டு போனான். அதுகண்ட அரசன் அமைச்சனை நோக்கி மந்திரீ! அஃதென்ன? அவன் விற்பது என்றான். அமைச்சன், அரசே! அதுகத்தரிக்காய், மிகருசியானது, காய்களில் மிகச் சிரேஷ்டமானது



என்று பலவாறு சிறப்பித்துக் கூறினன். அதன் மேல் அரசன் அப்படியாயின் இன்று நமது அரண்மனையில் இதனைச் சமைக்க அநுமதிகொடுக்கலாமே என்றான். மந்திரி அவ்வாறே உத்தரவு தந்து கத்தரிக்காயைச் சமைக்கச் செய்து அரசனோடு தானும் அமர்ந்து அருந்தினான். அரசன் விரும்பிச் செய்யச்சொன்னமையால் சுயம்பாகியும் தன்வண்மை தோன்றச் சமைத்தனன். அதனால் அரசன் அதனை அருந்தும்போது மிகச்சுவையாய் இருந்தமைகண்டு மந்திரியை நோக்கி, மந்திரீ! இப்பதார்த்தத்தைப்பற்றி நீர்சொல்லியது பற்றாது. இதன் சுவையைச்சொல்ல ஒருவராலும் முடியாது என்றான். ஆம் அரசே! அதற்குத்தடையா? மனிதர்களுக்குள் சீரும் சிறப்பும்பெற்று விளங்கும் தேவரீருக்கு முடியில் கிரீடம் விளங்குவது போலவே. பதார்த்தங்களில் தலைமைபெற்று விளங்கும் இந்தக் கத்தரிக்காயும் கிரீடத்தோடு விளங்குகின்றது என்று சொல்லி மனமகிழ்ச்சியோடு மறுநாளும் அதனையே சமைக்குமாறு மடையனுக்குக் கட்டளையிட்டனர்.

அவனும் மிகச்சந்தோஷத்தோடு மறுநாள் தன்முழுவண்மையையும் அரனுக்குக்காட்ட இதுவே சமயமென்று எண்ணி முழுமுழுக் கத்தரிக்காயைச் சமைத்துப் பாகப்பண்ணிவைத்தான். அரசன் அன்னமருந்தும்போது கத்தரிக்காயின் மீதுள்ள ஆர்வத்தினால் முழுக்கத்தரிக்காயை எடுத்து வாயில் வைத்துக்கடித்தான். அதன் காய்பிலுள்ள முள்ளொன்று அரசன் வாயில் தைத்தது. அரசன் துடிதுடித்து ஆவென்று அலறி மந்திரியை நோக்கி இந்தக்காயையா நீர் அவ்வாறு சிறப்பித்தீர்? என்று கடிந்து கேட்டான். உடனே மதிமந்திரி அரசே! இவ்வகையதர்க்குணம் அக்காய்க்கு இருப்பதாலன்றோ கடவுள் அதன் சிரசில் ஒரு ஆணியை அடித்துவைத்திருக்கின்றார் என்று பதில்சொன்ன உடனே அரசன் சினமெல்லாம் சிரிப்பாய் மாறிவிட்டது. அதுகண்ட மந்திரியும் மனமகிழ்ந்தான்.

---

## THREE PUZZLES.

### மூன்று மயக்க வினாக்கள்.

---

### I.

ஒரு வர்த்தகன் மூன்று அளவுக்கருவிகள் வைத்திருந்தான். அவை முறையே 3,5,8, ஆழாக்கு அளவுடையன. 8 ஆழாக்குப்படியில் நிறையப் பால் இருந்தது. அவன் தன்னிடத்திலிருந்த அளவுக்கருவிகளைக் கொண்டே மற்றொருவனுக்கு 4 ஆழாக்குப் பால் கொடுக்க வேண்டுமானால் எப்படி அளக்கவேண்டும்?

### II.

பொறாமைப் பேய்பிடித்த மூவர் தம் மனைவியரோடு பிரயாணஞ் செய்தனர். வழியில் ஓர் ஆறு குறுக்கிட்டது. அதைக் கடந்துசெல்ல அங்கு ஒரு சிறுபடகு விடப்பட்டிருந்தது. அதில் இருவர்க்கு மேல் ஏறினால் படகுமுழுகிவிடும். அங்குப் படகோட்டியுமில்லை. அதனால் அவர்களில் யாராவது படகை நடத்தவேண்டியிருந்தது. ஒருவனும் தன் மனைவியை மற்றவனிருக்குமிடத்தில் தனியே விட மனமில்லாதவன். இவர்கள் எவ்வாறு ஆற்றைக்கடப்பது?

### III.

ஒரு குடியானவன் ஒரு வாத்து, நரி, சிறிது தானியம் ஆகிய மூன்றையும் எடுத்துக்கொண்டு ஊருக்குப்போனான். இடையில் ஒரு சுங்கச்சாவடியிருந்தது. அதைக் கடந்து போகும்போது ஒருவன் ஒரு முறை ஒரு வஸ்துவையே கொண்டுபோக அநுமதியுண்டு. ஒன்றையொன்று அழிக்கும்படியான இரண்டு வஸ்துக்களை ஓரிடத்தில் வைத்தால் தகாது. அவன் அதனால் ஒன்றுந்தோன்றாது மயங்கித்தன்னுள் ஆலோசிப்பானானான். தானியம் வாத்தைத் தின்னாது. வாத்து நரியைத் தின்னாது. ஆயினும் வாத்து தானியத்தையும், நரி வாத்தையும் தின்றுவிடும். அவை ஒன்றையொன்று அழிக்காவண்ணம் எவ்வாறு தான் அவற்றைக்கொண்டு சாவடியைக் கடக்கக்கூடும்?

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்
மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

| வயது 1. | 1906௵ ஏப்ரல்மீ | மாதம் 11 |
|---|---|---|

## THE INDIAN KINDERGARTEN.

### செல்வச் சிறுவர் சிங்காரத்தோட்டம்.

*(From Editor's Diary.)*

---

யாம் இம்மாதக்கடையில் சைதாபேட்டையிலுள்ள போதனாப்பியாச கலாசாலை (Teachers' College) க்குக் சென்றிருந்தோம். ஆங்கு, கிண்டர்கார்டன் பாடம் நடத்துவதற்கென்றே புதிதாய் அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தையும், கிண்டர்காடன் வகுப்புக்களையும் ம-ா-ா-ஸ்ரீ. R. S. கிருஷ்ணசாமி ஐயர், பி.ஏ., எல்.டி., அவர்கள் அநுமதியினால் முற்றஞ் சுற்றிப்பார்த்தோம். அக்காலத்து எமக்குண்டாகிய உவப்பை முழுவதும் உரைக்க ஒண்ணாதெனினும் ஒருவாறு சுருக்கி யுரைக்கின்றோம்.

சிலவாண்டுகளுக்கு முன்பு கிண்டர்கார்டன் பாடம், மற்றைய பாடசாலைகளைப்போலவே இக்கலாசாலையிலும் குறை கூறும் வண்ணம் குறைவடைந்திருந்தது. இப்போழுதோ அது தலைசிறந்து விளங்கி நிற்கின்றது என்பதைக் களிப்புடன் அறிவிக்கின்றோம்.

பாலர், முதல், இரண்டு வகுப்புப் பிள்ளைகள் செய்தமைத்துள்ள பொருள்களைக் காணும்போதே அவர்களது மனோதத்துவம் இவ்வளவிற்கு விருத்தியடைந்திருக்கின்றது என்பது பார்ப்போர்க்கு விளங்காமற் போகாது. சித்திரம் வரைதல், களிமண் உருச் செய்தல் முதலிய தொழில்கள் மிக்கவும் விருத்தி யடைந்திருக்கின்றன.

சிறுவர்கள் சீமைச் சுண்ணாம்பினால் சித்திரம், கணிதம் முதலிய தொழில்களைச் செய்ய, அவர்களை யடுத்துள்ள சுவர்களே உபயோகப்படுகின்றன. அச்சுவர்கள் கண்டோர்கண்ணைக் கவரும் வண்ணம் செவ்வனே சாந்து பூசப்பட்டிருக்கின்றன. அவர்கள் அருமையாய்ச்செய்யும்தொழில்களில் சிலவற்றை யீண்டுக்கூறுகின்றோம். இவற்றை, நம் நல்லாசிரியனைக் கைக்கொண்டு வாசிக்கும் ஆசிரியரும் கைப்பற்றி யொழுகுவார்களென்று நம்புகின்றோம்.

தொழில்கள், கதைகள், பாட்டுக்கள் என்னும் மூன்று பெரும் பிரிவுகளில் இக்கலாசாலையில் தொழில்களும், கதைகளுமே கையாடப்படுவனவாகத் தோன்றுகின்றன. பாட்டுக்கள் ஒருவாறு விலக்கப்படுகின்றன. இதற்கு வித்தியாவிதியும் (Educational Rules) இடங்கொடுக்கின்றது.

உபாத்தியாயர் பிள்ளைகளை நோக்கி ஓர் இனிய கதையை இன்பமுறக் கூறுகின்றார். பிள்ளைகள் அக்கதையை நன்றாய் உணர்ந்த பிறகு உபாத்தியாயர் ஒவ்வொருபிள்ளைக்கும் ஒரு முரட்டுத்தாளும், ஒரு துண்டு சீமைச் சுண்ணாம்பும் கொடுக்கின்றார். பிள்ளைகள் அவற்றைப் பெற்றுக்கொண்டு, தாம் கேட்ட கதையிலுள்ள விஷயங்களுக்கு ஏற்க படங்களை வரைகின்றனர். வரையும் போது ஒவ்வொரு பிள்ளையினுடைய கருத்தும் வேறுபடுவதுபோல சித்திரப் படங்களும் உருவத்தில் வேறுபடினும் படத்தின் பொது நோக்கமாத்திரம் ஒன்றாகவே யமைந்திருப்பது சாலச் சிறப்பாம். அன்றியும் சித்திரம் வரையும் போது உருவங்களை ஒரேமுறையில் எழுதி யமைத்துவிடுகின்றனரேயன்றி அதைமென்மேலும் திருத்தி எழுதுவதில்லை. இது வியக்கத்தக்கதே. இம்முறையை யாவரும் கையாடுவது சாலச்சிறப்பாம்.

இனிக் களிமண் உருச் செய்வதில் கதைகளுக்கு ஏற்றவாறு உருக்களை யமைக்கின்றனர். பாலர் வகுப்பில் அதிகசுலபமான உருக்களையும் முதல் இரண்டு வகுப்புக்களில் முறையே சிறிது கடின உருவங்களையும் செய்ய முயல்கின்றனர். திருஷ்டாந்தமாக, ‘நரியும் திராட்சைப்பழமும்’ என்னும் கதையில் பாலர்கள் களிமண்ணால் திராட்சைப்பழத்தை மாத்திரம் செய்வதும், முதல் வகுப்பார் திராட்சை இலையைச் செய்வதும், இரண்டாம் வகுப்பார் நரியைச் செய்வதும் ஏற்புடைத்தாகு மன்றோ! இவ்விஷயத்தில் உபாத்தியாயர்கள் தம் அநுபவத்தினால் தொழில்களை யமைக்கவேண்டும்.



இவ்வாறே நிறங்களைப் போதிப்பதிலும் சிறந்தமார்க்கமொன்றைக் கையாடுகின்றனர். வர்ணமிட்ட சித்திரப்படம் ஒன்றை வகுப்பிற்கு எதிரில் மாட்டிவைத்துப் பிள்ளைகளை நோக்கி உபாத்தியாயர் இப்படம் எழுத உங்களுக்கு என்னென்ன வர்ணம் வேண்டும் என்கின்றார். பிள்ளைகள் படத்தைப்பார்த்து வேண்டும் வர்ணங்களைக் கேட்கின்றனர். அவற்றுள் முதல்வேண்டுவது இன்னதென்றும், பிறகுவேண்டுவது இன்னதென்று தெரிந்து சொல்லும்படி வற்புறுத்துகின்றனர். அவ்வாறே உபாத்தியாயர் வர்ணத்தைக் கொடுக்கப்பெற்றுச் சிறுவர்கள் லேகினியால் (Bright) காகிதத்தில் எழுதுகின்றனர். இத்தொழிலில் சிறுவர்கள் வர்ணங்களைக் கூட்டு முறைகளையும் செவ்வனே யுணர்கின்றார்கள். இவ்வகைய மாறுபாடுகளை நம் நாட்டுப்பிள்ளைகள் அறிவது அவசியமாதலால் உபாத்தியாயர்கள் இதுவிஷயமாய் ஊக்கங்கொண்டு நடத்துவார்கள் என்று நம்புகின்றோம். மற்றும் சில விஷயங்களை மறு பத்திரிகையில் எழுத வெண்ணுகின்றோம்.

---

## திரவிய மென்ப தென்ன?

திரவியம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகிற தென்பதும், உற்பத்தி செய்தவர்களுக்குள் அது எவ்வாறு பங்கிடப்படுகிறதென்பதும் விசாரிக்கிற நூல் அர்த்தசாஸ்திரம் என்னப்படும். திரவியமென்பது விற்கப்படும் பொருள். விற்கப்படும் பொருளெல்லாம் உபயோக முடையவைகளா யிருக்கும். ஏனெனில் உபயோகமற்றதை ஒருவரும் விலைக்கு வாங்க மாட்டார்கள். நிலம், வீடு, தானியம், வஸ்திரம் தட்டுமுட்டுக்கள் முதலாகிய பொருள்களெல்லாம் உபயோக முடையவைகளாதலால் விற்கப்படுகின்றன. விற்கப்படுவதால் திரவியமென்று சொல்லப்படும். விற்கப்படும் பொருளெல்லாம் உபயோக முடையவைகளென்று சொன்னோம். ஒரு பொருள் யாவருக்கும் உபயோகமாயிராது. படிக்காதவர்களுக்குப் புத்தகங்களால் யாதொருபிரயோசனமும் இல்லை. ஆங்கிலர் தலையிற்போடுகிற தொப்பியை இந்துக்களில் ஒருவரும் வாங்கமாட்டார்கள். காப்பிக்கொட்டையும் தேயிலையும் யாவருக்கும் உபயோகப்படமாட்டா. சன்னியாசிகளுக்கு இரத்தினங்

களாலும், கண்ணிழந்தவர்களுக்கு வர்ணப் படங்களாலும் உபயோகமில்லை. ஆயினும் புத்தகம், தொப்பி, காப்பிக்கொட்டை, தேயிலைமுதலிய பொருள்களை திரவியமல்லவென்று சொல்வது பிசகு. சில ஜனங்களுக்குப் பிரயோசனமில்லாவிடினும் வேறு சில ஜனங்கள் அவைகளை வாங்குவார்கள். உபயோகப்படுந் தன்மை அவைகளிடத்தி லிருக்கின்றது. ஆதலால் ஓரிடத்தி லில்லாவிடினும் வேறோரிடத்திலாவது அவைகள் விலைபோகும். விலைப் பண்டங்களெல்லாம் திரவியமென்பது சித்தாந்தம்.

விலைப்பண்டமெல்லாம் உபயோகப் படுமென்று முன்னமே சொன்னோம். ஆயினும் உபயோகமான எல்லாப் பொருளும் விலைபோகமாட்டாது. காற்றும் வெளிச்சமும் யாவருக்கும் உபயோகமாயிருந்தபோதிலும் அவைகளை விலைக்கு விற்பதில்லை. யாவருக்கும் பொதுவாய்ப் வருத்தமின்றி அகப்படக்கூடியதாயும் இருப்பதால் காற்றையாவது வெளிச்சத்தையாவது விலைக்கு விற்பதுமில்லை, திரவியமென்று சொல்வதுமில்லை. தண்ணீரும் அப்படியே. சில இடங்களில் மாத்திரம் தண்ணீருக்கு விலையுண்டு. சென்னபட்டணத்தைப்போன்ற சில ஊர்களில் நல்ல ஜலம் எவ்விடத்திலும் அகப்படமாட்டாது. தூரத்திலிருந்து கொண்டுவந்து விற்பார்கள். இப்பேர்ப்பட்ட விஷயங்களில் தவிரத் தண்ணீர் பொதுவாய் விலைப்பண்டமாகமாட்டாது.

முற்காலத்தில் ஜனங்கள் பொன், வெள்ளி, இவைகளைமாத்திரம் திரவியமென்றும், மற்றப்பொருள்களெல்லாம் திரவியமல்லவென்றும் எண்ணியிருந்தார்கள். வெளித்தேசங்களிலிருந்து வருகிற பளிங்கு சாமான்களுக்குப் பிரதியாய் நாம் பஞ்சு அல்லது நீலக்கட்டியை அனுப்புகிறோம். சில சமயங்களில் போதுமான பஞ்சும் நீலக்கட்டியும் இல்லாவிடில் பொன் அல்லது வெள்ளி நாணயங்களை அனுப்புகிறோம். பொன்னும் வெள்ளியும் போய் விட்டபடியால் நம்முடைய தேயத்தில் திரவியம் குறைந்ததாக நினைக்கிறார்கள். நாணயங்கள் வெளித்தேசத்துக்குப் போனபோதிலும் அத்தேசங்களி லிருந்து செலவான நாணயத்துக்குச் சரியான கண்ணாடிச்சாமான்கள் நமது தேசத்துக்கு வந்ததை யோசித்துப்பார்க்கிறதில்லை. இந்த ஏற்றுமதியான பணம் இறக்குமதியான பளிங்குச்சாமானுடைய விலை. பணத்துக்குப் பிரதியாகக் குளோப்புக்களும் கண்ணாடிகளும் இருக்கின்றன. நாமொன்றும் இழக்கவில்லை. அப்படியிருக்கப் பணமொன்றே திரவியமென்றும்,



பணமில்லாவிட்டால் திரவியமில்லையென்றும், பணம் அதிகமாயிருக்கிற தேசங்கள் மாத்திரம் திரவிய சம்பத்துடையவைகளென்றும் சொல்வது முற்றும் தவறு. இந்தத் தப்பெண்ணம் சாதாரணநடவடிக்கைகளிலும் காணலாம். நூறுரூபாய் கொடுத்து மேஜை நாற்காலிகளும், சரிகைச்சோமனும் வாங்கினால் அந்த நூறு ரூபாயை இழந்துபோனதாகவே நினைக்கிறார்கள். பணத்துக்குப்பதிலாக மேஜை, நாற்காலியும் சரிகைச்சோமனும் நமது வீட்டிலிருப்பதைச் சற்றேனும் யோசிப்பதில்லை. “பணத்தை வீட்டுக்குக் கொண்டுவருகிற வியாபாரமெல்லாம் நல்லதென்றும், பணத்தைக்கொடுத்துச் சாமானைக் கொள்ளுகிறதெல்லாம் நஷ்டமென்றும் பலர் எண்ணிவருகிறார்கள். இவர்கள் பணத்தின் உபயோகத்தை நன்றாய்க் கண்டறிந்தவர்களல்ல. நமக்குவேண்டிய பொருளை வாங்குவதற்கு ஒரு ஏதுவாயிருப்பதினாலேதான் பணத்தை நாம் யாவரும் விரும்புகிறோம். அந்தப் பணம் பொன் அல்லது வெள்ளியாயிருந்தாலும், நோட்டு அல்லது செக்கு ஆகிய காயிதத்துண்டாயிருந்தாலும் பிரயோஜனம் ஒன்றே. இந்தப் பிரயோஜனம் மற்றப் பொருளிலும் உண்டு. கடலைவியாபாரி கடலையை விற்றுத் தனக்குவேண்டிய அரிசியும் நெய்யும் வாங்குவான். சிலர் நெய்யைவிற்று வரகும் மிளகும் வாங்குவார்கள். சிலர் பாலை விற்றுக் கம்புவாங்குவார்கள். இந்துதேசத்தார்கள் பஞ்சு, நீலக்கட்டி, தோல், சர்க்கரை, இருப்புச்சன்னம் ஆகிய இவைகளைக் கொடுத்துத் துணி, பளிங்குச்சாமான், காயிதம் முதலான பொருள்களை வாங்குகிறார்கள். பிராஞ்சுதேசத்தார்கள் சாராயத்தையும் பழத்தையும் கொடுத்துச் சர்க்கரை, காப்பி, தேயிலை, புகையிலை, பஞ்சுமுதலான பதார்த்தங்களை வாங்குகிறார்கள். இந்த வியாபாரங்களில் பணமின்றி ஒரு பொருளை மற்றொரு பொருள்கொடுத்து வாங்குகிறார்கள். பணத்தின் பிரயோஜனமும் இதுதான். ஆகையால் பணத்தைமாத்திரம் திரவியமென்று சொல்லுவது பிசகு.

இந்துக்கள் திரவியத்தை ஐந்துவகையாகப் பிரித்திருக்கிறார்கள். (1) மலைபடுதிரவியம். மலையில் உண்டாகிற பொருள்கள்—மிளகு, கோஷ்டம், அகில், தக்கோலம், குங்குமம் முதலியன. (2) காடுபடுதிரவியம். காட்டில் உண்டாகும் பொருள்கள்.—தேன்கூடு, தேன், அரக்கு, மயிற்பீலி, நாவிமுதலியன. (3) நாடுபடுதிரவியம். நாட்டில் உண்டாகும் பொருள்கள்—செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர் முதலியன. (4) நகர்படுதிரவியம். பட்டணத்திலுண்டாகும் பொருள்கள்.—அரசன், பித்தன், கருங்குரங்கு, யானை, கண்

ணுடிமுதலியன. (5) கடல்படுதிரவியம். கடலில் உண்டாகும் பொருள்கள்:—உப்பு, முத்து, பவளம், சங்கு முதலியன.

மேற்சொல்லிய பொருளெல்லாம் அர்த்தசாத்திரமுறைப்படி திரவியமாகா. அரசன் விலைப்பண்டம் அல்ல. ஆகையால் அரசனைத் திரவியமென்று சொல்வது கூடாது. சில தேசங்களில் ஆட்களை விலைக்கு விற்பதுண்டு. அவ்விடங்களில் அவர்களைத் திரவியமென்று சொல்லலாம். நாகரீகமுடைய தேசங்களில் ஆட்களை விற்கிற வழக்கமில்லாமையால் திரவியமென்று அவர்களைச் சொல்லுவதில்லை. மேற்கூறிய திரவியவகுப்பில் அநேக பொருள்கள் விட்டிருக்கின்றன. பஞ்சு, மரம், துணி, ஆட்டுமயிர் முதலான கணக்கில்லாத பொருள்களும் திரவியங்களே.

ஜனவிநோதினி.

## HOW TO TEACH ARITHMETIC.

### இரண்டு என்னும் எண் பயிற்றுதல்.

இரண்டாவது பாடத்தை ஆரம்பிக்கும்போது முதற்பாடத்தில் வழங்கின வஸ்துக்களையே உபயோகித்துக்கொள்ளலாம். ஆனாலும் முன்போலவே பாடத்தைச் சொன்னால், சிறு குழந்தைக்குச் சீக்கிரத்தில் வெறுப்பு உண்டாகுமாகையால், வேறு வகையாற் சொல்லவேண்டும்.

எப்படியென்றால், பாடம் தொடங்குவதற்கு முன்னமே, தனக்கு ஒரு கற்பலகையும், மற்றொருபிள்ளைக்கு ஒரு பலகையும் கொண்டுவரும்படி குழந்தையைப் பார்த்துச் சொல்லி, அப்படியே அது கொண்டுவந்த பிறகு, ஆக எத்தனை பலகை நீ கொண்டுவந்தாயென்று அக்குழந்தையைக் கேட்கவேண்டியது. ஒருவேளை இரண்டு கொண்டுவந்ததாய் அதற்குத் தெரிந்திருக்கலாம். அப்படித் தெரியாமலிருந்தால், அதைச் சொல்லிக்கொடுக்கவேண்டியதுந் தவிர “ஒரு பலகை, ஒரு பலகையென்று இரண்டுதரம் சொல்லாமல், ஒரேதடவையாய் இரண்டு பலகையென்று நாம் சொல்லுகிறது வழக்கம் அப்பா” என்றும் தெரியச்சொல்லவேண்டியது. பிறகு விளையாட்டுக் கருவிகளை வைத்திருக்கும் பெட்டியைக் கையில் எடுத்துக்கொள்ளச் சொல்லி, முன்போலவே தான் கேட்டதைக் கொடுக்கச்சொல்லவேண்டும். ஆனால், கேள்விகளை இதன் அடியிற் கண்டிருக்கிறது போல வேறு மாதிரியாய்க் கேட்கவேண்டியது.



உபாத்தியாயர்—ஒரு பலகறை எடுத்துக்கொடு, இன்னும் ஒரு பலகறை எடுத்துக்கொடு உபாத்தியாயர் இப்படிக் கொடுக்கும் பலகறைகளைக் கீழே வைத்து “ஒரு பலகறையும், ஒரு பலகறையும் இரண்டு பலகறை” என்று சொல்லிக் காட்டவேண்டியது. இதே மாதிரியாய்க் கோலிக்குண்டு, வெள்ளைக்கல் முதலானவைகளைக் கேட்டு எடுத்துவைக்கும்போது, உபாத்தியாயர் “ஒரு கோலிக்குண்டும், ஒரு கோலிக்குண்டும் இரண்டு கோலிக்குண்டுகள். ஒரு வெள்ளைக்கல்லும், ஒரு வெள்ளைக்கல்லும் இரண்டு வெள்ளைக்கல்லுகள்” என்று அடுத்து அடுத்துப் பாட்டைப்போற் சொல்லவேண்டும். மறுபடி அக்குழந்தை தான் கொடுத்த வஸ்துக்களை இதே மாதிரியாய்க் கேட்டுவாங்கிக்கொள்ளும்படி செய்து, அவைகளை அப்பெட்டியில் வைக்கும்போது “ஒரு கோலிக்குண்டும், ஒரு கோலிக்குண்டும் இரண்டு கோலிக்குண்டு” என்று சொல்லிச் சொல்லி வைக்கும்படி செய்யவேண்டும். சிறுவர்கள் பாட்டில் ருசியுள்ளவர்களாயிருந்தால், தாய்தந்தை முதலானவர்கள் மேலே குறித்த வாக்கியங்களைப் பாட்டைப்போலத் தாங்கள் முன்னே பாடி, குழந்தைகளைப் பின்னே பாடும்படி செய்தால், பாடியாவது ஒரு வேடிக்கைபோலவே அவர்களுக்கும் பாடம் * ஏறிவரும். இப்படிப் பாடும்போது எண் வரும் இடத்தில் மாத்திரம் உறுத்திச் சொல்லிக்கொண்டு போனாற் குழந்தைகளின் மனத்தில் அவைகள் பதியும். பிறகு விளையாட்டுச்சாமான்களையெல்லாம் பெட்டியில் வைத்து, உபாத்தியாயர், அல்லது தாய்தந்தைகள் சரியாய் ஒரு அடி நீளமுள்ள ஒரு கொம்பு எடுத்துக்காட்டினால். உடனே சிறுவன் அது என்ன காரியத்துக்கு உபயோகமென்று கேட்பான். மனை, பாய், வீடுமுதலானதை அளக்கலாமென்று தெரியப்படுத்தவேண்டியது. திறமையுள்ள பிள்ளையினிடத்தில் அந்த அடிக்கோலைக் கொடுத்து, மற்றப் பிள்ளைகள் அவர்கள் அவர்கள் தாய்தந்தைகளைக்கேட்டு அப்படிப்பட்ட கோல்களை வாங்கிக்கொண்டு வரும்படி சொன்னால், காரியத்தை நன்றாய் விசாரிக்கவேண்டுமென்று ஒருபரபரப்பு உண்டாகும். அந்தக் கோல் சரியான ஒரு அளவுகோலென்றும், அதனால் மிகுந்த பிரயோசனம் உண்டென்றும் பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்தவேண்டியது. மேலும் தச்சன் வாசற்கதவைச் செப்பனிட வந்தபோதாவது அல்லது வீட்டில் ஏதாவது மரவேலை செய்ய வந்தபோதாவது அவன் தன்னுடைய அடிக்கோலால் இன்னது செய்தானென்றும் சொல்லிக்

* இவ்விஷயத்திற்கு பாலர் பாடம் 36-ஆம் பக்கம் பார்க்க.

காட்டலாம். இப்படி ஒவ்வொரு குழந்தையும் கண்ணாரப்பார்த்த சங்கதிகளைக்கொண்டே திருஷ்டாந்தப்படுத்த வேண்டியது. "இந்த அளவு கோலால் ஒரு தடவை அளந்தால் அப்படி அளக்கப்பட்ட தூரம் "ஓரடி" என்று சொல்லப்படும்; ஏனென்றால் அது மனிதனுடைய காலடிக்கு ஏறக்குறையச் சரியாய் இருக்கிறது" என்றும் சிறுவனுக்குச் சொல்லிக்காட்டவேண்டியது. இந்த விசேஷத்தைக் கேட்டமாத்திரத்தில் அதனுடைய உண்மையை அறியும்பொருட்டுச் சிறுவன் இருப்பிடத்தைவிட்டு எழுந்து, தன் கையில் இருக்கிற அடிக்கோலால் உபாத்தியாயருடைய பாதத்தை அளந்து பார்க்கப் பிரயத்தினப்படுவான். இப்படிச் சிறுவன் பாதிப்பாடத்தில் எழுந்திருந்ததைக் குறித்து அவன்மேலே கோபித்துக்கொள்ளாமல் அவனைப் பார்த்து, இன்னும் ஏதாவது சரியாய், அல்லது ஏறக்குறைய ஓரடி அளவுள்ளதைக் கிரமப்படி சொல்லவேண்டியது. அதற்குக் குழந்தை தன்னுடைய அளவு கோலுக்கு அகலத்திலாவது, நீளத்திலாவது சரியாயிருக்கும் ஒரு பீடத்தையாவது, கம்பத்தையாவது, அது பார்க்கும் எந்த வஸ்துவையாவது காட்டுமல்லவா? "அளவில் இரண்டு அடியுள்ள ஒரு வஸ்துவைக் காட்டு அப்பா" என்று கேட்க வேண்டும். இந்த வினாவைக் கேட்டவுடனே சிறுவன் மலைத்து என்ன சொல்லுகிறது, என்ன செய்யவேண்டியதென்று தனக்குள்ளே கவலைப்பட்டுக்கொண்டு மயங்கிநிற்பான். அப்போது இரண்டு பலகைகளை ஒன்றுக்கொன்று சமீபத்தில்வைத்துக் குழந்தையைச் சில கேள்விகள் கேட்கவேண்டும்.

உபா.—ஒரு பலகையும், ஒருபலகையும் எத்தனைபலகை?
கு.—இரண்டுபலகை.
(இரண்டு பலகறைகளைப் பெட்டியிலிருந்து எடுத்துக்காட்டி)
உபா.—ஒரு பலகறையும், ஒருபலகறையும் எத்தனை பலகறை?
கு.—இரண்டுபலகறை.
உபா.—ஓரடியும் ஓரடியும் கூடி எத்தனை அடி?
கு.—இரண்டு அடி.

உபா.—சரிதான்; ஆகையால் அடிக்கோலால் முன் ஒரு தரமும் பின் ஒரு தரமும் அளந்தால் இரண்டடி ஆகுமல்லவா?

அதற்கு திருஷ்டாந்தம் காண்பிக்கிறேன்பார். இதோ இந்தபாயின் அகலத்தை அளக்கிறதைப்பார் என்று சொல்லிக்காண்பித்தால், அப்போது அந்தபிள்ளை அளக்கவேண்டிய வழியை ஒருக்ஷணத்தில் அறிந்துகொண்டவனாய்த் தாய்தந்தை அல்லது உபாத்தியாயரிடத்தில் இருக்கிற அளவுக்கோலைக் கைநீட்டிக் கேட்டு வாங்கிக்கொண்டு



தன்னுடையபாடம், தான் எழுதும்பலகை, அல்லது தான் விளையாடும் சிறிய மரக்குதிரை முதலிய கருவிகள் இரண்டு அடி நீளம் இருக்கின்றனவாவென்றுபரபரப்புடன்அளந்துபார்ப்பான்.இப்படிபாடஞ் சொல்லி முடிந்தமாத்திரத்தில் சிறுவன் அளவுகோலைக் கைவிடாமல் கண்டதை எல்லாம் ஓடி ஓடி அளக்க ஆரம்பிப்பான். இப்படி அளந்து பார்ப்பதற்கு வரம்பு இருக்கமாட்டாது. தன் தகப்பனுடைய காலின்மேல் தொத்திக்கொண்டு தான் ஏறிப்பார்க்கும் படத்தையோ அல்லது வராசற்படியண்டை தூங்கிக்கொண்டிருக்கும் தன் நாய்க்குட்டி அல்லது பூனைக்குட்டியின் வாலையோ, தனக்கு இன்னும் எது இஷ்டமானதோ அவைகளை எல்லாம் துள்ளிக்கொண்டு துள்ளிக்கொண்டு அளந்து பார்ப்பான். இவ்வாறு "ஒன்றும், ஒன்றும் இரண்டு" என்கிற விஷயம் அவனுடைய மனதில் நன்றாய்ப்பதிந்துபோகுமல்லவா. அது சொற்பவிஷயமாய் இருந்தபோதிலும், அந்தச் சிறுவனுக்குத் தன்னுடைய சொந்த அனுபோகத்தில் யதார்த்தமானதென்று தெரியவந்தபடியால், பின்னேசொல்லப்போகிறபாடங்களில் இந்த ஞானம் மிகவும் உதவியாயிருக்கும். சிறுவர்கள் எண்களின் தன்மையை எந்த வழியில் பூர்த்தியாய் அறிந்து கொள்வார்களோ அந்த வழியில் அவர்களை உபாத்தியாயர் கொண்டுபோக வேண்டியது. மேலும் சிறுவன் எந்த வஸ்துவைக்கொண்டு எண்களை ஆரம்பத்தில் தெரிந்து கொண்டானோ, அந்தவஸ்து கண்ணுக்கு முன்னே இராமற்போனபோதிலும், அந்த வஸ்துவைக்குறித்து சம்பாஷணை செய்து அவனுடைய ஞாபகசக்தியை விருத்திசெய்யலாம். இதுவுமல்லாமல், இதனடியிற் கண்டிருக்கும் வினாக்களைப்போலச் சில வினாக்களையும் கேட்கலாம்.

உனக்கு எத்தனை கண் இருக்கிறது? எத்தனை காது? ஒரு கையைத் தூக்கு பார்ப்போம். மற்றொரு கையைத் தூக்கு. உனக்கு எத்தனை கை? எத்தனை தோள்? எத்தனை மணிக்கட்டு? எத்தனை முழங்கை? எத்தனை பெருவிரல்?

ஒருபாதத்தை எடுத்துவை, மற்றொருபாதத்தையும் எடுத்துவை. ஆக உனக்கு எத்தனை பாதம்? எத்தனை முழங்கால்? எத்தனை கணைக்கால்? கிளிக்கு எத்தனை கால்? அந்தப் பக்ஷிக்கு எத்தனை இறகு இருக்கிறது? எத்தனை கண்?

(தாய் தந்தைகள் வினா) இரண்டு கொட்டைப்பாக்கும் இரண்டு கிச்சலிப்பழமும் கொண்டுவா. அந்தப் பழக்கூடையை எடுத்துக்கொண்டு சுந்தரத்துக்கு ஒரு மாம்பழமும், உன்னுடைய அம்

மாளுக்கு இரண்டு மாதுளம்பழமும், அய்யாவுக்கு இரண்டு கிச்சலிப்பழமும் கொடுத்துவிட்டு நீ ஒரு வாழைப்பழம் எடுத்துக்கொள்.

உன்னுடைய வலதுகையில் ஒரு பைசாவும், இடதுகையில்ஒரு பைசாவும் வைத்தால், ஆக எத்தனை பைசா உன்கைகளிலிருக்கின்றது? ஒன்றும் ஒன்றும் சேர்ந்து எத்தனை ஆகின்றது? அதினாலே இரண்டு ஒன்று எத்தனை?

## CULTIVATION OF IMAGINATION.

## மனோதத்துவத்தை விருத்தி செய்யு முறை.

ஆறாவது ஏழாவது வகுப்புக்களில் வாசிக்கும் பிள்ளைகள் எழுதும் வியாசங்கள் ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகள் எழுதுவதைப் போலவே கருத்தமைதி நன்கமையா திருக்கின்றன. இது ஹோமர் என்னும் ஆசிரியர் எழுதியுள்ள பூர்வ (Fairy Tales) தெய்வதக்கதைகளைப் படித்து அதன்படி எழுத முயல்வதாலென்று தோன்றுகிறது. இதனால் இம்மூன்று வகுப்புப் பிள்ளைகள் எழுதும் வியாசங்களில் சிந்தித்தெழுதவேண்டிய முக்கிய விஷயம் குறைவுபடுகின்றது.

ஆதலின் வியாசபாடம் வார்த்தைகளைத் கொடுத்து வாக்கியமாக்கும் விதத்தைக் கற்பிப்பதுமல்லாமல் யோசிக்கும் சக்தியையதிகரித்து மனோதிடத்தை விருத்திசெய்வதிலும் பேருபகாரமாயிருத்தல் வேண்டும். பள்ளிக்கூடங்களில் ஐந்தாவது வகுப்பில் வியாசபாடத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள் சாதாரணமாய்ப் பாஷை நயமற்றிருக்கின்றன.

அப்புத்தகங்களி லெழுதப்பட்டிருக்கும் கற்பனைக்கதைகளோ அல்லது விநோதக்கூற்றுக்களோ ஒரு குறிப்பு மற்று வியாச பாடத்திற்கு இன்றியமையாத இலக்கணங்களற்றனவா யிருக்கின்றன. ஆதலின் அவற்றால் அறிந்துகொள்ளக்கூடிய விஷயமும் மிகச் சிறிதேயாம்.

உபாத்தியாயர் கையாளுகையிலிருக்கும் அநேக தெய்வதக்கதைகளில் பொதிந்து கிடக்கும் பெருஞ்சிறப்பனைத்தையும் நாம் சிந்தித்துப் பார்க்கையில் தற்காலம் இவ்வகுப்புக்களிற் காணுங்குற்றங் குறைகள் நிரம்பி யிருப்பதற்கு ஏது தோன்றவே இல்லை; (என்றால் கற்பிக்கவேண்டிய அநேக சிறந்த சரித்திரங்களிருந்தும் சரிவரக் கையாளப்படாமையே காரண மென்பதாம்) கற்பிக்கவேண்டிய முறை



யைப்பற்றிப் பேசுங்கால் அடியிற்கண்ட முறை மிக்க உபயோகமாயிருக்குமென்று நம்புகின்றேம்:—

1. இன்னகாலத்திற் குள்ளாகப் போதிக்கவேண்டு மென்று முதலில் சிலவிஷயங்களைக் குறிப்பிட்டு வரையறுத்துக்கொள்ளவேண்டும். பின்பு, அவற்றிற்குப் பொருத்தமான பெயரமைத்துக் கொள்ளுதல் அவசியம். (நான்காவது வகுப்புக்காயின் ஒருவருஷத்திற்கு 12 விஷயங்கள்போதுமானவை.)

2. இவ்வாறு தெரிந்தெடுக்கும் விஷயங்கள் கூடுமானால் ஒரே புத்தகத்திலிருந்து எடுக்கலாம். இப்படி ஒரே புத்தகத்திலிருந்தெடுப்பதால் பிள்ளைகளிற் சக்தியுள்ளோர் அம்முழுப் புத்தகத்தையும் வாங்கி வீட்டில் வாசித்துக்கொள்ள வசதியாகும்.

3. பின்பு, உபாத்தியாயர் அவ்விஷயத்தின் கதையைத் தமது சொந்த வார்த்தைகளால் இடையிடையே தன்மை முன்னிலைப் பொருள்களைப் பெய்து சிறப்பாக விளக்கிக் காட்டவேண்டும்.

4. இவ்வாறு விளக்கிக்காட்டும் விஷயங்களைப் பிள்ளைகள் கேட்டு உணர்ந்த பின்பு தங்கள் ஞாபக சக்தியால் கரும் பலகையில் சொல்லெழுதல் பாடத்திற்காக எழுதும் விதம் போலல்லாமல் வியாசபாடம் எழுதும் முறைப்படி முடிவில் தங்கள் சொந்தவாக்கியங்களால் எழுதவாரம்பிக்கலாம்.

இவ்வகையாகச் சில கதைகளை எழுதப் பயின்ற பின்பு கரும் பலகையில் முன்பின் பயிலாத புதிய கதையிலடங்கிய நாலைந்து முக்கிய குறிப்புக்களை எழுதுவிப்பது மிக்க நல்லமாதிரியாகும். இதனால் பிள்ளைகள் தாங்கள் படித்தும் கேட்டு மிருக்கும் விஷயத்தைக் கதையாகமுடித்து ஞாபக சக்தியை விருத்திபண்ணியதாக வமையும். இந்த விஷயங்கள் நன்றாய் விளங்குமாறு கூடுமானால் கரும்பலகையில் உருவங்களைக் குறிப்பிட்டாகிலும் அல்லது படங்களைக்கொண்டு விளக்கியாகிலும் வரைந்து வருவது நலம்.

இம்மாதிரி பிள்ளைகள் செய்ய முயல்வதை உபாத்தியாயர் கரும் பலகையில் திருத்திக்காட்டிப் பின்னர் அப்பிள்ளைகளை கற்பலகையிலாகிலும் காகிதத்திலாகிலும் எழுதச்செய்யவேண்டும்.

இவ்வாறு செய்து வருவதால் பிள்ளைகள் நான்காவது வகுப்பை விட்டு விலகுவதற்குள் வியாசம் எழுத முழுதும் தேறியிருப்பார்கள்.

பிள்ளைகள் ஐந்தாவது வகுப்புக்கு வந்ததும் தெய்வதக்கதைகள் (Fairy Tales) விஷயமாய் எழுதும் வியாசவழக்கத்தைக் கடந்து சற்

றுப்பெரிய விஷயங்களை எழுதக் கூடியசக்தியடைந்திருப்பதாக அவர்கள் நினைப்பதுண்டு. அப்போது ஹோமர் அல்லது வர்ஜில்(Homer or Virgil) கதைகளிலுள்ள அபூர்வ விஷயங்களில் மனஞ்செலுத்திச் சந்தோஷமடையுமாறு அவர்கள் அகக்கண்ணைத்திறப்பது ஆசியர் கடைமையாகும்.

புதிய விஷயங்களைக் கற்றுணரும் ஆர்வமுடைய பிள்ளைகள் மனத்தில் கடவுளரும் மனிதரும் வெற்றிப்போர் விளைத்துப் பிரதாபமெய்திய சரித்திரங்கள் உள்ளக்கிளர்ச்சியை யுண்டு பண்ணுமற்போகா. இச்சரித்திரங்கள் ஹோமர் யுத்தங்களை விளக்கிக் காட்டும் சரித்திரங்களிலும் கதைகளிலுமல்லாது பிறபுத்தகங்கள் அதிகமும் அறிவிக்குமென்று எண்ண இடமில்லை. நான்காம் வகுப்பில் கையூண்டமுறைப்படி இவ்வகுப்பிலும் மனோபலத்தையும், படம்வரைதலையும் திருந்திய தன்மையில் உபயோகிக்கலாம். கிங்ஸ்லீஸ் (Kingleys) வீரர்கள் அல்லது ஹோமர் கதைகள், அல்லது வர்ஜில் கதைகள் முதலிய இப்படிப்பட்ட புத்தகங்களை வாங்கிப் பிள்ளைகள் முழுதும் படித்துணர உபாத்தியாயர்கள் தூண்டவேண்டும்.

இங்ஙனம் படித்துணர்வதினும், பிறர் சொல்வதைக் கேட்டுணர்வதினுமுள்ள தாரதம்மியத்தையும் ஆய்ந்து அவற்றிற்காணுங் குணங்களைக்கண்டு வியக்கவும் பழகவேண்டும்.

பிள்ளைகள் படிக்கும் விஷயத்திற்குப் பொருத்தமான பிறவிஷயங்களைச் சிந்தித்துத் தெளியும் வழக்கத்தைஉண்டுபண்ணவேண்டும். இப்படிச் செய்வதால் தாம்படிக்கும் புத்தகங்களிற் றெளிந்துணர்ந்த விஷயம் பிற்காலத்தில் வேறு விஷயங்களைப் படிக்குந்தோறும் பிரயோசனமாகிப் பாஷாபிவிருத்திக்கும் அதிற்கண்டநலன்களையறிந்து மகிழ்வதற்கும் பொருத்தமாயிருக்கும். *Teachers' Aid.*

---

## DUTIES OF A VILLAGE SCHOOL-MASTER.

## கிராம உபாத்தியாயரின் கடமை.

'நல்லாசிரியன்' என்னும் நமது மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகையின் சந்தாதாரர்கள் சிறுபான்மையோர் வித்தியாதிகாரிகளும் பரீக்ஷாதிகாரிகளுமாக விருப்பினும், பத்திரிகையின் பெயருக்கேற்கப் பெரும்பான்மையோர் உபாத்தியாயர்களாகவே யிருக்கின்றனர்.



அவர்களிலும் அநேகர் கிராமபாடசாலைகளின் உபாத்தியாயர்களாகவிருப்பதனால் அவர்களின் உபயோகத்திற்கேற்ற விஷயங்கள் இதில் அடிக்கடி பிரசுரித்து வருவது இப்பத்திரிகைக் குரிய முக்கிய நோக்கமாதலால் இங்கு எமது அநுபவத்திற் றோன்றும் சில விஷயங்களை அடியில் வருமாறு எழுதலானோம்.—

### 1. ஒற்றுமை.

கிராம உபாத்தியாயர் கிராமத்திலுள்ள சர்வஜனங்களும், தம் உறுப்பிற்சிறந்த கண்ணேபோல், மதிக்குமாறு சாதிவேற்றுமையைப்பாராமலும், ஏழை பணக்காரரென்னும் வித்தியாசத்தைபெண்ணுமலும், எல்லோரோடும் ஒத்துநடந்து ஊரார்க்ஷேமத்தையும், அவர்கள் பிள்ளைகளின் வித்தியாபிவிருத்தியையும் தன்னோக்கத்திற்கொண்டொழுகவேண்டும். உபாத்தியாயர் தன்னிடம் படிக்கும் பிள்ளைகளின் பெற்றோரையே யன்றி மற்றோரையும் மதித்துஅன்னோர்பால் அடிக்கடி சென்று காணுதல், அவர்கள் தம்மக்களைப்பற்றிவிரைந்து வினவும் விஷயங்களுக்குத் தான் பொறுமையோடு ஏற்ற உத்தரம் உரைத்தல், அன்னோர் தமது பிள்ளைகளின் கல்வி விருத்திக் கேற்ற விஷயங்களைச்செவ்வனே உணரும்படி செய்தல், கேவலம் தன் ஊதியத்தையே கருதாமல் ஏழைகளின் நிலைமைக்குத் தக்கபடி அவர்கள் கொடுக்கும் குறைவையே நிறைவாகக்கொண்டு திருப்தி யடைதல் முதலிய இன்றியமையாக் குணங்களையுடையவராதல் வேண்டும்.

நாட்டுப்புறத்துக் காட்டுமிராண்டிகளிற் சிலர் கல்வியினேற்றத்தை யறியாராகையால் அக்கல்விக் கதிதேவதையாகக் கிராமத்தின் க்ஷேமத்துக்காய் உபாத்தியாயர் ஏற்பட்டிருத்தலை உணராமல்நாகரீகமின்றி ஏதோ ஆதாரமற்ற தமது அபிப்பிராயத்துக் கேற்றவாறு முரட்டுத்தனமாய் "எடுத்தேன் கவிழ்த்தேன்" என்பதாக உபாத்தியாயரைச் சிற்சில சமயங்களில் அவமதித்துப் பேசுவதுமுண்டு. அக்காலங்களில் உபாத்தியாயர் தமது கல்வி கேள்விகளின் சிறப்பும், லோகானுபவ நாகரிகமும், பெருந்தன்மைக்குரிய குணமுந்தோன்ற சமயோசித உத்தரங் கூறி எதிரியின் கோபாவேச முரட்டுப்பேயைத் தனது சாந்த வசனமென்னும் மந்திரோச்சாடனத்தால், வெருட்டியோட்டி 'ஆரியக்கூத்தாடினுலுங் காரியத்தின்மீது கண்வைத்து' வீரியம்பேசா வாரியராய் விளங்குவாராயின் அவரென்றும் மேன்மையடைவர்.

'எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்.' என்னும் பழமொழிக்கிணங்க உபாத்தியாயர் தாம் வாழும் ஊராருடன் மன

தொத்து அவர்கள் சுகதுக்கங்களிற் றானுங் கலந்து வாழாராயின் தன்னை ஊரார் மதிக்க இடமில்லாமல் வெவ்வேறு இடங்களைத் தேடிச்சென்று மனநிறைவில்லாமல் பலவகைக் கஷ்டங்களுக்குள்ளாகும்படியாகும். வயதும், அநுபவமும் முதிர்ந்த உபாத்தியாயர்கள் 'காரியம் பெரிதோ? வீரியம் பெரிதோ?' வெனத் தம் காரியத்திற் கண்வைத்து யாவருடனும் கலந்தொழுகுவார்கள். வாலிப உபாத்தியாயர்களோ சமீபகாலத்தில்போதனாப்பியாசபாடசாலையிற் (Normal Training School) பழகிவந்த முடுக்குந் திருப்பும் காட்டி முடிவில் பயனையிழப்பார்கள்.

உபாத்தியாயர் ஊராருடன் கலந்து வாழ முயல்வதன்முன் கல்விச் சாலையில் தன்னோ டொருதுறையில் ஒத்துழைக்கும் உதவி உபாத்தியாயர்கள், தலைமை உபாத்தியாயர், மானேஜர் முதலிய பலரிடத்தும் மனங் கலந்தவராய் அவர்களின் அபிப்பிராயத்தைத் தழுவி நடக்கவேண்டும். வேறெவ்வகையாலும் சாதிக்கத் தகாத பெருங்காரியங்கள் ஒற்றுமையென்னும் சிநேக தருமத்தால் சுலப சாத்தியமாய்க் காரியசித்தியாவதை யநுபவத்திற் கண்டிருக்கிறோம். ஆகையால் ஒருதுறையிற் றொழில்பயிலும் உபாத்தியாயர்கள் தமக்குள் யாரிடத்தெவ்வகைக் குறைவிருப்பினும் அதனைநிறைவாகக் கொண்டு வேற்றுமை பாராட்டாதொழுகவேண்டும். பிறரால் மதிக்கப் படவேண்டுமென்றெண்ணும் ஒருவன் தான் முந்தி அன்னோரைத் மதித்தாலன்றோ முன்கை நீண்டவாறே முழங்கையு நீளுவதொக்கும்?

ஊராரின் வில்லங்க வழக்குகளைத் தீர்த்தல், சண்டை சச்சரவுகளை விசாரித்தல், அவர்கள் நல்லொழுக்கத்தோ டொழுகுதல், இத்தியாதிகாரியங்களுக்கெல்லாம் கிராமாதிகாரி உத்தரவாதியாக சர்க்காரால் எதிர்பார்க்கப் படுவதுபோல ஒவ்வொரு கிராம உபாத்தியாயரும் தாம் கல்வி பயிற்றும் பிள்ளைகளுக்குப் பின்னால் நேரும் தீய நடக்கையைத் தவிர்த்து நன்னடக்கையைப் பாலிக்கும் பாலசிட்சைக் குரிய படிப்புக்கு உத்தரவாதியாக வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுவதினாலன்றோ கஷ்டத்துக்கேற்க அவர் வருடந்தோறும் கிராண்டு (Grant) என்னும் திரவிய சகாயத்தால் சன்மானிக்கப்படுவது.

ஆதலால், உபாத்தியாயர் இத்தகைய நல்லுணர்ச்சியைக்கொண்டு ஊரிலுள்ள எல்லாப்பிள்ளைகளுக்கும் ஏழையென்றும், இழிகுலத்தவனென்றும், முட்டியென்றும் வேற்றுமை பாராட்டாமல் கல்வி விரும்பினும் விரும்பாவிடினும், எவ்வகையாலாயினும் தன்னாலியன்றமட்டும் பிள்ளைகளது மடமையை நீக்கும் மனமுடையவராயிருத்தலே உத்தம உபாத்தியாயரின் கடமையாகும்.



(இன்னும் வரும்.)

சி. வே. சண்முகமுதலியார்,
*Hd. M., L. F. School, Tinnanur.*

---

# TIT-BITS.

## விநோதக் கூற்றுக்கள்.

ஓர் ஊரில் குடியானவன் ஒருவன் இருந்தான். அவன் பயிரிட்டு ஜீவனம் செய்துவருபவன். அவனுக்கு ஒரே குமாரன். அவன் இளமையாயிருக்கும்போதே தகப்பன் இறந்துவிட்டான். அவன் இறக்கும் தருவாயில் தன் உயிர்த்தோழன் ஒருவனைத் தன் பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு "என் அன்பனே! நாம் இருவரும் 'உயிரும் உடலும்,' 'மலரு மணமும்' போல ஒரு மனப்பட்டு இவ்வுலகில் நேசித்திருந்தோம். இனி, நான் உன்னைவிட்டுப்பிரியுங்காலம் நேர்ந்துவிட்டது. மரணத்தின்முன் ஒருவர் வல்லமையும் மாளாதல்லவா! நான் மரணத்திற்குச் சித்தமாயிருக்கிறேன். ஆயினும் ஒன்று என் மனத்தில் ஊசலாடுகின்றது. அஃது என்னவெனின்: என் புத்திரன் மிகச்சிறியவன். அவனை நல்வழிப் படுத்தி எனக்குள்ள சிறிது திரவியத்தைக்காப்பாற்றி அவனுக்கு யுக்தவயதுவரும்போது ஒப்பிக்க ஒருவரையும் காண்கிலேன். நடுக்கடலில் திகை தப்பி மயங்கும் மாலுமிக்கோர் துறை தோன்றினாற்போல உன் விஷயம் என் மனத்தில் பட்டது. ஆதலால் உன்னை வரவழைத்தேன். நீ எனக்குப் பிறகு என் புத்திரனைப் படிப்பித்து நல்வழிப் படுத்தி இதோ இருக்கும் என் திரவியம் பதினாயிரம் ரூபாயில் உனக்கிஷ்டமானதை அவனுக்குக் கொடு. மற்றதை உன் சிரமத்திற்காக நீ எடுத்துக்கொள்" என்றான். பிறகு சிறிது நேரத்திற் கெல்லாம் உயிர் விட்டான்.

அவனது நண்பன் திரவியத்தைக் கைக்கொண்டு சிறுவனைக் கொஞ்சகாலம் படிப்பித்தான். சிறுவனும் எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டு விவகார தசையை யடைந்தான். பிறகு தன் தந்தை தேடிய திரவியம் அவனது நண்பனிடத்தில் இருப்பதைச் சொல்லக்கேட்டு அதைத் தனக்குக் கொடுக்கும்படி வேண்டினான். அப்போது தன் தந்தையின் நண்பனுக்கு அப்பண முழுவதையும் அபகரித்து

விடவேண்டும் என்னும் பேராசை பிறந்தது. எனினும் பிறர் நகைப்பார்கள் என்று ஒருவாறு அஞ்சிப் பிள்ளையை நோக்கி "அப்பா! உன் தந்தை இறக்குந்தருணத்தில் அவர் தேடிய பொருளை என்னிடம் ஒப்பித்தது மெய்யே; ஆனால் உன்னைப் படிப்பித்து யுக்த வயது வந்தபிறகு அத்திரவியத்தில் எனக்கு இஷ்டமானதை உனக்குக் கொடுக்கும்படி சொன்னார். அப்படியே கொடுக்கிறேன்" என்று பதினாயிரம் ரூபாயில் ஓராயிரம் ரூபாயைப் பையனுக்குக் கொடுக்கப்போனான். பையன் திடுக்கிட்டு மனம்பதறி ஓர் ஆயிரம் ரூபாயைப் பெற்றுக்கொள்ளச் சம்மதமின்றி நீதித்தலத்தில் முறையிட்டான். நீதிபதி அவனை வரவழைத்து விசாரித்தார்.

அவன் நீதிபதியைநோக்கித் "துரையே! அப்பிள்ளையின் தந்தை பதினாயிரம் ரூபாயில் எனக்கு இஷ்டமானதைக் கொடுக்கச்சொன்னபடியே ஆயிரம் ரூபாய் கொடுத்தேன்" என்றான். நீதிபதி இவன் பேராசையை நன்குணர்ந்து தீர யோசித்துத் தீர்ப்புச் சொல்வானான்.

நீதிபதி — நல்லது இருக்கட்டும், அவன் தந்தை உன்னிடம் கொடுத்தது பதினாயிரம் ரூபாய்தானே.

நண்பன் — ஆம், ஆம், ஐயா.

நீதிபதி — இறக்கும்போது அவன் உன்னிடம் என்ன சொன்னான் ?

நண்பன் — எனக்கு இஷ்டமானதைச் சிறுவனுக்குக் கொடுக்கச் சொன்னான்.

நீதிபதி — நல்லது, நீ சிறுவனுக்கு எவ்வளவு கொடுக்கச் சம்மதிக்கிறாய்?

நண்பன் — ஆயிரம் ரூபாய்.

நீதிபதி — நீ எவ்வளவு எடுத்துக் கொள்ள இஷ்டப்படுகிறாய் ?

நண்பன் — ஒன்பதினாயிரம் ரூபாய்.

நீதிபதி — ஆனால் நீ இஷ்டப்படுவது ஒன்பதினாயிரந்தானே.

நண்பன் — ஆமாம், ஆமாம்.

நீதிபதி — நீ இஷ்டப்பட்டதைத் தன் மகனுக்குக் கொடுக்கச் சொன்னதுபோல் உனக்கு இஷ்டமான ஒன்பதினாயிரத்தைச் சிறுவனுக்குக் கொடுத்து மற்ற ஓராயிரத்தை நீ யடையவேண்டும் என்று தீர்மானித்தான்.

அதைக்கேட்ட நண்பன் பேராசை பெரு நஷ்டத்தை விளைத்ததே என்று மனங்கசிந்து போனான். சிறுவனோ ஒன்பதினாயிரமும் பெற்றுத் தென்புடன் சென்றான்.

பத்திராதிபர்.



## WHICH IS GREATER: LEARNING OR EXPERIENCE?

## படிப்புப்பெரிதா ? அநுபவம்பெரிதா ?

அறிவு படிப்பினாலும் அநுபோகத்தினாலும் அல்லது இரண்டினாலும் விருத்தியாகக்கூடியது. அந்நிய தேசங்களைப்போய்ப் பார்த்திராதவர்களும் அந்நியர்களோடு பழகாதவர்களுங்கூடப் புஸ்தகங்களைப்படித்து அத்தேசங்களைப்பற்றிப் பலவிஷயங்களை அறிந்துகொள்ளுகிறார்கள். ஆங்கிலேயர் வசிக்கும் இங்கிலாண்டு தேசத்தை நம்மவர்களில் பெரும்பான்மையோர் பார்க்காதவர்களாயிருந்தபோதிலும் படிப்பினாலும் கேள்வியினாலும் அத்தேசத்தினுடைய இயற்கை இலட்சணங்களையும் ஜனங்களுடைய குணகுணங்களையும் இராஜாங்க முறைகளையும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறே உலகத்தில் எத்தேசங்களைப்பற்றியும் மேற்சொன்ன படிப்பு கேள்வி ஆகிய இவைகளால் விசேஷமாய் எவரும் தெரிந்துகொள்ளக்கூடும். ஆயினும் படிப்பு கேள்வி இவைகளில்லாமலே அந்நிய தேசங்களில் யாத்திரை செய்து அங்கே அடையும் அநுபவத்தில் அவைகளைப் பற்றி அறிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்களை அறிந்துகொள்ளலாம். அறிவுக்கு உதவியாகிய படிப்பு, அனுபவமாகிய இரண்டு சாதகங்களும் சிலருக்கு அருமையாயமைந்திருக்கின்றன. இந்தியர்கள் விசேஷமாய்த் தாங்கள் பிறந்த விடத்தைவிட்டு அந்நிய ஸ்தலங்களுக்குப்போய்ச் சஞ்சரிக்கும் சுபாவ முடையவர்களல்லர், ஆகையால் அவர்களுக்கு அநுபோகத்தாற் கிடைக்கும் அறிவு குறைந்ததாகவேயிருக்கும்.

அறிவுக்குரிய இந்த இரண்டு சாதகங்களில் எது பெரிதென்று ஆலோசிக்கும்போது அநுபோகந்தான் பெரிதென்று சொல்லவேண்டும். நம்முடைய சமீபித்த பந்து ஒருவர் அந்நியதேசத்திற்குப் போயிருக்கையில் அவர் அங்கு நல்ல ஸ்திதியிலிருக்கிறாரென்று நமக்குத் தெரிந்து நாம் சந்தோஷப் படக்கூடுமானாலும் அப்படி நல்ல ஸ்திதியிலிருப்பவரை நாம் கண்ணாற்பார்த்துக் கூடப் பழகினால் எவ்வளவு சந்தோஷப்படக் கூடுமோ அவ்வளவு கடித மூலமாகச் சந்தோஷப்படுதல் கூடாது. அப்படியே கங்கைநதியில் காசிப்பட்டணம் வெகு நேர்த்தியாயிருக்கிறதென்று புஸ்தகத்தில் படித்தாலும் ஒருவர் சொல்லக்கேட்டாலும் அதை நேரே போய்ப் பார்ப்பதால் உண்டாகிற உணர்ச்சி உண்டாகாது.

மேலும் அநேக விஷயங்களில் படிப்பினால் உண்டாகக்கூடிய அறிவானது அநுபவத்தில் பிரயோஜனப்பட்டாலொழிய அந்த அறிவு இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒன்றேயாகும். சாஸ்திரங்களிலும், மற்ற நூல்களிலும் சத்தியம், தயை, சாந்தம் ஆகிய குணங்களைப்பற்றிப் புகழ்ந்து பேசியிருந்தாலும் அக்குணங்கள் அனுபவத்தில் காட்டப்பட்டாலொழியச் சிறக்கமாட்டா. மேலும் சித்திரமெழுதல், கட்டடங்கட்டுதல் முதலிய வித்தைகளைப் பற்றி ஒருவன் புஸ்தகத்தில் படித்ததை அநுபவத்தில் உபயோகித்தாலன்றிப் படித்ததினால் பிரயோசனமடையமாட்டான். அநேகர் கொஞ்சமேனும் படிப்பில்லாமலே உலகத்தில் கீர்த்தியடைகிறார்கள். 17ஆம் நூற்றாண்டில் மகாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்த சிவாஜி மஹாராஜ சக்கிரபதி எழுத வாசிக்க அறியாதவராயிருந்தாலும் டெல்லியினை ஆண்ட மகம்மதிய சக்கிரவர்த்திகளது வல்லமையையும் பெருமையையும் ஒருவாறு அடக்க சாமர்த்தியமுள்ளவரா யிருந்தார். அவ்வாறே மற்றதேசத்தை இந்து இராஜாக்களிடமிருந்து கைப்பற்றி ஆங்கிலேயர்களுடன் சரி சமானமாய்ப் போர் செய்த ஹைதர் ஆலிக்கு எழுத்து வாசனையே யில்லையென்று சொல்லப்படுகிறது.

இப்படிப் படிப்பைவிட அநுபோகம் பெரிதென்று சொல்வது புருஷர்களுக்கு மட்டுமல்ல ஸ்திரிகளுக்கு மொவ்வும். இந்து புராணங்களில் புகழப்படும் தமயந்தி, சீதை,! திரௌபதி ஆகிய ஸ்திரீகள் பதிவிரதைகளாயும், தைரியசாலிகளாயும், விவேகமுள்ளவர்களாயு மிருந்தபோதிலும் அவர்கள் புஸ்தகங்களை வாசித்து அக்குணங்களைப் பெற்றதாகச் சொல்லப்படவில்லை.

அவர்களுக்குச் சிறு பருவத்திலும் முதிர்ந்தபருவத்திலும் உண்டாயிருந்த தந்திரத்தால் கிடைத்த அனுபவத்தினாலேயே அவைகள் உண்டாயிருக்கவேண்டும். மகம்மதிய ஸ்திரீகளைப்போல் வீட்டுக்குள்ளேயே அடைபட்டிருக்கும் ஸ்திரீகளுக்கு அநுபவமுண்டாகி அதனால் புத்தி விசாலித்தல் சாத்தியமல்ல. ஐரோப்பிய ஸ்திரீகளைப் போலச் சுயேச்சையாய்ச் சஞ்சரிக்கும் ஸ்திரீகளுக்கு விசேஷபடிப்பில்லாமற் போனாலும் அநுபவத்தினாலேயே விசேஷ அறிவு உண்டாகக்கூடும். தற்காலம் இந்துஸ்திரீகள் இரண்டு வகைகளிலும் சேராதவர்களாயிருக்கிறார்கள். மகம்மதிய ஸ்திரீகளைப்போல வீட்டிற்குள் அடைபட்டிரா விட்டாலும் ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல சுயேச்சையாய்ச் சஞ்சரிக்கிறவர்களாயிருப்பதில்லை. அவ்விதம் சஞ்சரித்தல் நமது இந்துஸ்திரீகளுக்கு நல்லதென்று நாம் சொல்ல வரவில்லை. அல்லது புருஷ சாதியோடு ஐரோப்பிய ஸ்திரீகளைப்போல நெருங்கிப் பழக வேண்டுமென்று சொல்ல வரவில்லை. ஆயினும் அமைதி, நாணம் முதலிய குணங்களை மீறாமல் ஸ்திரீகள் ஸ்திரீகளுடனே பழகுதலும் அவர்களுடன் கூடிச் சஞ்சரித்தலும் ஸ்திரீகளுக்கு விரோதமென்று சொல்லக்கூடாது. உலகத்தில் கடவுள் சிருஷ்டிகளில் பலவேற்றுமைகளின் விநோதங்களையும் பார்த்து ஸ்திரீகள் அனுபவிப்பதில் என்ன தடை யிருக்கக்கூடும்? மலைகள், ஆறுகள், அருவிகள், காடுகள் இவைகளையும் மிருகங்கள், பக்ஷிகள் முதலியவைகளையும், மரங்கள், புஷ்பங்கள், கொடிகள் முதலியவைகளையும் புருஷர்கள் கண்டு சந்தோஷப் படுவதைப் போல ஸ்திரீகளும் கண்டு ஏன் சந்தோஷப்படக்கூடாது? அவ்வாறே பற்பல ஸ்தலங்களைப் போய்ப் பார்த்து இதர ஜனங்களுடைய நடை, உடை, பாவனைகளை அநுபோகத்தினால் தெரிந்து கொள்வதற்கும் தடை என்ன? இவ்விதம் ஸ்திரீகளுடைய அநுபோகத்தைப் பெருக்குவதில் பெற்றோர்களும் புருஷர்களும் சகாயம்செய்யக் கடமைப்பட்டவர்களென்பது நம் அபிப்பிராயம். இவைகளன்றி ஸ்திரீகள் சம்பாஷணைசெய்வதில் அவர்களுடைய அபிப்பிராயங்களை வெளிப்படுத்துவதிலும், நியாயமான காரியங்களில் அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதிலும் சுதந்தரம் கொடுப்பது அவசியம். இவ்வாறு ஸ்திரீகளுக்கு மிதமான சுதந்தரத்தைக் கொடுத்துக் கூடிய வரையில் அநுபவத்தை யுண்டாக்குவது அவர்களை வீட்டிற்குள்ளேயே யடைத்துப் புஸ்தகங்களை மாத்திரம் படிக்க இடங்கொடுப்பதை விடப் பலமடங்கு பெரிதென்னும் நமது அபிப்பிராயத்தை இங்கு சொல்லத் துணிந்தோம்.

# பொருட் பாடங்கள்.

| லோயர் பிரைமரி பாடசாலைகள். | | | | அப்பர் பிரைமரி பாடசாலை. |
|---|---|---|---|---|
| பாலர் வகுப்பு. | முதல் வகுப்பு. | இரண்டாம் வகுப்பு. | மூன்றாம் வகுப்பு. | நான்காம் வகுப்பு. |
| (a) கீழ்குறித்த 1, 2, 3 பிரிவுகளிலுள்ள பொருள்களடங்கிய ஒரு படத்திலிருந்தாவது, சேகரித்துள்ள தொகுதியிலிருந்தாவது வஸ்துக்களைச் சுட்டிக் காட்டிப் பெயர் சொல்லுவது. | (a) கீழ்குறித்த 1, 2, 3, 4 பிரிவுகளிலுள்ள பொருள்களடங்கிய ஒரு படத்திலிருந்தாவது, சேகரித்துள்ள தொகுதியிலிருந்தாவது வஸ்துக்களைச் சுட்டிக் காட்டிப் பெயர் சொல்லுவது. | (a) கீழ்குறித்த 1, 2, 3, 4 பிரிவுகளிலுள்ள பொருள்களடங்கிய ஒரு படத்திலிருந்தாவது, சேகரித்துள்ளதொகுதியிலிருந்தாவது வஸ்துக்களைச் சுட்டிக்காட்டிப் பெயர் சொல்லுவது. | (a) பிள்ளைகள் உண்மையில் கவனித்தறிந்த விஷயங்களில். | (a) மூன்றும் வகுப்பில் பிள்ளைகள் படித்துணர்ந்ததைப் பார்க்கிலும் முழு விஷயங்களையும். |
| (1) தினந்தோறும் வழக்கத்திலுள்ள சாதாரண பொருள்கள்- அதாவது- வீட்டுப்பொருள்கள், பள்ளிக்கூடச் சாமான்கள், உடைக்குவேண்டிய வஸ்துக்கள், பாடசாலையிருக்குமிடத்தில் சாதாரண தொழில்களுக்காக வழங்கும் ஆயுதங்கள், பாத்திரங்கள் முதலியன, (2) வழக்கமான பிராணிகள் அல்லது அவற்றின் உற்பத்திப்பொருள்கள், (3) வழக்கமான செடிகள் அல்லது அவற்றின் உற்பத்திப்பொருள்கள். | (1) தினந்தோறும் வழக்கத்திலுள்ள சாதாரண பொருள்கள்- அதாவது- வீட்டுப்பொருள்கள், பள்ளிக்கூடச் சாமான்கள், உடைக்குவேண்டிய வஸ்துக்கள், பாடசாலையிருக்குமிடத்தில் சாதாரண தொழில்களுக்காக வழங்கும் ஆயுதங்கள், பாத்திரங்கள் முதலியன, (2) வழக்கமான பிராணிகள் அல்லது அவற்றின் உற்பத்திப் பொருள்கள், (3) வழக்கமான செடிகள் அல்லது அவற்றின் உற்பத்திப்பொருள்கள், (4) வழக்கமான உலோகங்கள் அல்லது அவற்றின் உற்பத்திப்பொருள்கள். | (1) தினந் தோறும் வழக்கத்திலுள்ள சாதாரண பொருள்கள்-அதாவது - வீட்டுப் பொருள்கள், பள்ளிக்கூடச்சாமான்கள், உடைக்குவேண்டிய வஸ்துக்கள், பாடசாலை யிருக்குமிடத்தில் சாதாரண தொழில்களுக்காக வழங்கும் ஆயுதங்கள், பாத்திரங்கள் முதலியன, (2) வழக்கமான பிராணிகள் அல்லது அவற்றின் உற்பத்திப் பொருள்கள், (3) வழக்கமான செடிகள் அல்லது அவற்றின் உற்பத்திப் பொருள்கள், (4) வழக்கமான உலோகங்கள் அல்லது அவற்றின் உற்பத்திப் பொருள்கள். | (1) வழக்கமான பிராணிகள் அல்லது அவற்றின் உற்பத்திப்பொருள்கள், (2) வழக்கமான தாவரங்கள் அல்லது அவற்றின் உற்பத்திப்பொருள்கள், (3) வழக்கமான உலோகங்கள் அல்லது அவற்றின் உற்பத்திப் பொருள்கள், (4) வழக்கமான பருவகாலங்களின் விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொண்டிருக்கும் விஷயங்களைப் பிள்ளைகள் விளக்கவேண்டும். | (1) வழக்கமான பிராணிகள் அல்லது அவற்றின் உற்பத்திப்பொருள்களைப் பற்றியும், (2) வழக்கமான தாவரங்கள் அல்லது அவற்றின் உற்பத்திப்பொருள்களைப் பற்றியும், (3) வழக்கமான உலோகங்கள் அல்லது அவற்றின் உற்பத்திப் பொருள்களைப் பற்றியும், (4) பருவகாலவிஷயங்களைப் பற்றியும் தெரிந்திருக்கிறார்களென்று காட்டவேண்டும். |
| மேற்கண்ட உட்பிரிவுகள் ஒவ்வொன்றிலும்மும்மூன்றுக ஒன்பது பாடங்கள்கற்பிக்கப்பட்டிருக்கவேண்டும். | உட்பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் மும்மூன்றுகப் பன்னிரண்டு பாடங்கள் கற்பிக்கப்பட் டிருக்கவேண்டும். | உட்பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் நன்னான்கு பாடமாக பதினறு பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும். | உட்பிரிவு ஒவ்வொன்றுக்கும் ஐந்தைந்தாக இருபது பாடங்கள் கற்பிக்கப்படவேண் டும் | ஒவ்வொரு உட்பிரி வுக்கும் அவ்வாறுபாடமாக இருபத்திநான்கு பாடங்கள் கற்பிக்கப்படவேண்டும். |

# பொருட் பாடங்கள். (தொடர்ச்சி)

| | | லோயர் பிரைமெரி | பாடசாலைகள். | அப்பர் பிரைமரி பாடசாலை. |
|---|---|---|---|---|
| பாலர் வகுப்பு. | முதல் வகுப்பு. | இரண்டாம் வகுப்பு. | மூன்றாம் வகுப்பு. | நான்காம் வகுப்பு. |
| (b) ஒரு வருஷத்துக்குள் கற்பிக்கப்பட்ட பாடங்களில் பொருள்களின் அளவு, உருவம், நிறம், உபயோகம் ஆகிய இவைபோன்ற முக்கியவிஷயங்களின் சம்பந்தமாய்க்கேட்கப்படும் மிக எளியகேள்விகளுக்கு விடை சொல்வதும், பிராணிகள் தாவர வர்க்கங்களைப் பற்றி உண்மையாய்க் கவனித்தறியும் விஷயத்தைப் பற்றிக் கேட்குங் கேள்விகளுக்கு விடை சொல்வதும். | (b) ஒரு வருஷத்துக்குள் கற்பிக்கப்பட்ட பாடங்களில் (1) பிராணிகளின் உணவு, வழக்கம், அவற்றின் உபயோகம், (2) தாவரங்களைப் பயிரிடுவதைப் பற்றிக் கேட்கப்படும் சுலபமான கேள்விகளுக்கு விடை சொல்வதும், பிராணிகளைப் பற்றி உண்மையாய்க்கவனித்தறியும் விஷயங்களைப் பற்றியும், தாவரங்களைப் பயிரிடுவதில் உண்மையாய்க் கவனித்தறிந்ததைப்பற்றியும், கேட்கப்படுங் கேள்விகளுக்குப் பதில் சொல்வதும். | (b) கற்பித் திருக்கும் பாடங்களில், (1) ஒவ்வொரு நாளும் உபயோகத்திலிருக்கும் சாதாரணப் பொருள்களை உற்பத்தி செய்வதைப்பற்றியும், (2) பிராணிகளின் உணவு, வழக்கம், அவற்றின் உபயோகம், அவற்றின் அமைப்பைப் பற்றிவிளக்கமாய்த் தோற்றும் வித்தியாசமான குணங்களும், அவற்றின் உணவிற்கும், பழக்கத்திற்கு மேற்றபடி உறுப்புக்கள் அமைந்திருப்பதைப் பற்றியும், (3) தாவரங்களைப் பயிரிடுவதைப்பற்றியும், அவற்றின் உபயோகத்தைப் பற்றியும், (4) உலோகங்களின் உற்பத்திக்காரணம், அல்லது அவற்றின் சாரத்தைப்பற்றியும், அவற்றின் ஆக்கப்பொருள், உபயோகம், இவைகளைப் பற்றியும் கேட்குங்கேள்விகளுக்கு விடை சொல்வது.<br><br>பிள்ளைகள் ஒருவருஷத்துக்குள் உண்மையாய்க் கவனித்தறிந்த விஷயங்களைப் பற்றி பரீக்ஷாகாலத்தில் கேட்கப்படும். | (b) கற்பித் திருக்கும்பாடங்களில், (1) பிராணிகளின் உணவு, வழக்கம், அவற்றின் உபயோகம், அவற்றின் உணவுக்கும், வழக்கத்திற்கும் எற்றபடி அவற்றின் உறுப்புக்கள் அமைந்திருப்பதின் பாகுபாடுகளைப்பற்றியும், (2) தாவரங்களைப் பயிரிடும் முறை அல்லது அவற்றை வளர்க்கும் முறை, அவற்றின் பொதுவமைப்பு, உபயோகம் இவைகளைப்பற்றியும், (3) உலோகங்களின் உற்பத்திக்காரணம் அல்லது அவற்றின் சாரத்தைப் பற்றியும், அவ்வுலோகங்களில் அமைந்திருக்கும் முக்கிய ஆக்கப்பொருள்கள், உபயோகம் இவைகளைப்பற்றியும் கேட்கும்கேள்விகளுக்கு விடைசொல்வது.<br><br>பிள்ளைகள் ஒரு வருஷத்துக்குள் உண்மையாய்க் கவனித்தறிந்த விஷயங்களைப் பரீக்ஷா காலத்தில் கேட்கப்படும். | (b) மூன்றும்வகுப்பில்பிள்ளைகள்படித்துணர்ந்ததைப் பார்க்கிலும், (1) பிராணிகளின் உணவு, வழக்கம், அவற்றின்உபயோகம், அவற்றின் உணவுக்கும், பழக்கத்திற்கும்எற்றபடி அவற்றின் உறுப்புக்கள் அமைந்திருப்பதின் பாகுபாடுகளைப் பற்றியும்; (2) தாவரங்களைப் பயிரிடும் முறைஅல்லது அவற்றை வளர்க்கும் முறை, அவற்றின் பொதுவமைப்பு, உபயோகம் இவைகளைப் பற்றியும், (3) உலோகங்களின் உற்பத்திக்காரணம், அல்லது அவற்றின் சாரத்தைப்பற்றியும், அவ்வுலோகங்களில் அமைந்திருக்கும் முக்கிய ஆக்கப்பொருள்கள், உபயோகம் இவைகளைப்பற்றியும் கேட்கும் கேள்விகளுக்கும் விடை சொல்வது.<br>(c) வகுப்பில் படித்திருக்கும் பிராணிகள், தாவரங்கள், உலோகங்கள், எந்த வகுப்பில் சேருகிறதென்றும், அந்தவகுப்புக்குரிய முக்கிய குண வேறுபாடு இன்னதென்றும், இந்த வகுப்பிற்கும் இதைப்போன்றிருக்கும் மற்றவகுப்புக்கு முள்ள ஒற்றுமை முதலியவைகளைப் பற்றியும் கேட்கும் சுலபமான கேள்விகளுக்கு விடை சொல்வது.<br>(a) (b) (c) குறிப்புக் களிற் கண்ட பிராணிகள், தாவரங்கள், உலோகங்கள் பிள்ளைகள் படிக்கும் இடத்திற்கு அருகில் வழங்கும் பொருள்களிலிருந்து தெரிந்து எடுக்கவேண்டும், அவற்றைப் பற்றிப் பிள்ளைகளும் அனுபவத்தில் தெரிந்துள்ளன |

## பொருட் பாடங்கள். (தொடர்ச்சி)

| | அப்பர் பிரைமரி பாடசாலைகள். |
|---|---|
| மூன்றாம் வகுப்பு. | நான்காம் வகுப்பு. |
| | வாயிருக்க வேண்டும். பரீக்ஷையிலும் சிறிது பாகமாயினும் பிள்ளைகள் உண்மையில் அவ்வருஷத்தில் தங்கள் அனுபத்திற் கண்டறிந்த விஷயங்களைப்பற்றிக் கையாளும்படி இருக்கும். |

குறிப்பு:—பொருட்பாடத்துக்கு வேண்டிய போதனோபகரணங்கள் யாவும் பரிட்சை நடத்தப்படுங்காலத்தில் பாடசாலையில் சித்தமாயிருக்க வேண்டும்.

## NEWS AND NOTES.

### சமாசாரக் குறிப்புக்கள்.

சித்திரம் எழுதல் பாடத்தை (Drawing lesson) அளவு முதலிய எடுக்காமல் கற்பலகையின்மேல் துரிதமாய் எழுதும்படி பழக்குவது சிறந்தமுறையாம்.

***

இலக்கணபாடத்தை தனிப்படப் போதிக்காமல் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விஷயத்தை மனத்தில்வைத்துக் கொண்டு வாசகம், செய்யுள் பாடங்களின் மூலமாய் போதித்து வருவது தக்கதென்று இப்போது தீர்மானிக்கப் பட்டிருக்கின்றது.

***

பொருட்பாடத்திற்குப் புத்தகங்களைப் பிள்ளைகள் படிக்கவிடாமல் உபாத்தியாயர் பொருள்களைக்கொண்டே போதித்து வரவேண்டும். விஷயங்களைத்தெரிந்து கொள்வதற்கு உபாத்தியாயர்கள் தக்க புத்தகங்களைக் கையாடலாம்.

***

கசரத்துப்பாடம் (Drilling) சுதேச மாதிரியைக் கையாடிவருவதில் வித்தியாதிகாரிகள் மிக்க விருப்பங்கொள்கின்றனர். ஆகையால், பிள்ளைகளுக்குத் தண்டால் முதலியவற்றைப் பழக்கி வைப்பது நலம்.

THE REGISTRAR OF BOOKS, REGISTERED 27 JUN 1906 MADRAS.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 1. | 1906ஆம் மேமீ | மாதம் 12.

## THE INDIAN KINDERGARTEN.

### செல்வச்சிறுவர் சிங்காரத்தோட்டம்.

சென்ற மாதச் சஞ்சிகையில் கிண்டர்கார்டன் பாடம், சைதாபேட்டை போதாப்பியாச கலாசாலையில் நடத்தப்படும் முறைகளையும், ஏற்றத்தையும் ஒருவாறு கூறினோம். இனி இப்பாடம், தற்காலம் துரைத்தனத்தாரால் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டுவரும் கிராம பாடசாலை (Rural Schools) களில் நடத்தப்படும் நோக்கங்களையும் சிறிது கூறுவோம்.

கிராமபாடசாலைகளில் நடத்தப்படும் பாடங்கள் யாவும் கிராமவாசிகளுக்கு மிக்க உபயோக முள்ளனவாயிருத்தல் வேண்டும் என்பதே துரைத்தனத்தாரது உட்கருத்து. ஆனால் செய்யுள், இலக்கண முதலிய பாடங்களில் அதிகமாய் காலத்தைக் கடத்தாமல் வாசகபாடத்தை மாத்திரம் செவ்வனே நடத்தி எவ்வகையாலாகிலும் பொருளாராய்ச்சி யறிவை இயற்கையில் விருத்தி செய்யவேண்டும் என்று வித்தியாதிகாரிகள் வற்புறுத்தி வருகின்றனர். விவசாயம் முதலிய கைத்தொழிற் கல்வியை போதவும் விருத்திசெய்ய முயல வேண்டும். இவையனைத்தும் இதுகாறும் யாம் கூறிவந்த கிண்டர் கார்டன் பாடத்தையே நாடி நிற்பதை நம் நல்லாசிரியனை கைப்பற்றும் உபாத்தியாயர்களே யன்றி மற்றையோரும் அறியாமற் போகார்கள்.

ஆயினும் பெரும்பாலும் உபாத்தியாயர்கள் இக்கிண்டர்கார்டன் பாடத்தின் மெய்ப்பயனை இன்னும் உணரமாட்டாது வித்தியாதிகாரிகளது உபத்திரவத்திற்கு ஆற்றாமல் பாடசாலையில் பாடமாக நடத்தி வருகின்றனர். களிமண் உருச்செய்தல் முதலிய தொழில்களை பரிட்சை நடக்கும் நாளுக்குமுன் இரண்டொருதினத்தில் பல உருக்களைச் செய்து முடித்தும், தோட்டம் வைப்பதாக வேறிடத்திலுள்ள பல செடிகளை கொண்டு வந்து ஓரிடத்தில் நட்டு வைத்தும் வித்தியாதிகாரிகளைக் களிக்கச் செய்கின்றனர். இவர்களெல்லாம் உபாத்தியாயர் தொழிலை ஏற்கும் தன்மையுடையவராதல் எங்ஙனம்? வித்தியாதிகாரிகளை வஞ்சகமுறையால் களிக்கச் செய்வதற்காகவோ பாடசாலை யமைப்பது? அந்தோ நமது நாட்டின் நிலையைக் காணபலவகையிலும் பரிதாபமே உண்டாகின்றது.

இப்பாடங்களைப் போதிக்குமுறைகளைப்பற்றி வித்தியாதிகாரிகள் உபாத்தியாயர்களுக்குச் சொல்லும்போது அது தமது அநுபவத்திற்கு மாறாக இருக்கக்கண்டாலும் அவ்வுபாத்தியாயர் ஆம், ஆம், என்று தலையை அசைத்துவிட்டு அதிகாரிபோய் விட்டபிறகு தம்மைப்போன்ற உபாத்தியாயன் மாரிடத்துச் சொல்லிமுறையிட்டுக்கொண்டு 'என்ன செய்வது துரைத்தனத்தார் சொல்வதுபோல் செய்வது நமது கடமை' என்று கூறி வெறுப்படைகின்றனர். இது எவ்வாற்றானும் பொருந்தாது. அதிகாரியேயல்லது மற்று யாவரேனும் தன் அநுபவத்திற்கு மாறின விஷயம் ஒன்றைச் சொன்னால் அதில் தனக்கு நேரும் சந்தேகங்களைக் கேட்டுத் தெளியவேண்டும். தம்முடைய அனுபவம் தப்பிதமானதாயின் திருத்திக்கொள்ள வேண்டும். அன்றி, தம் அநுபவம் சரியானதாயின் அதை அவர்களுக்கு நன்றாய் எடுத்துரைக்கலாம். இவ்வகைய உபாத்தியாயர்களை விருத்திசெய்வதே வித்தியாதிகாரிகளது நோக்கம். அவ்வாறின்றி, அவர்கள் சொல்லும்போது மிகக் கீழ்ப்படிதல் உள்ளவர்போல் 'ஆமாம், ஆமாம், அப்படியே செய்கிறேன்' என்று தலையசைத்துப் பின்னால் வெறுத்துரைப்பது அதிகாரிக்கு அடங்குதலாகாது.

மேற்கண்டவாறேபோல் இக்கிண்டர்கார்டன் பாடம் விஷயமாய் பல உபாத்தியாயர்கள் எம்மிடம் நேரில் குறைகூறக் கேட்டிருக்கின்றோமாதலின் அதனை ஈண்டு வெளியிட்டு ஆசிரிய நண்பர்கள் அனைவர்க்கும் தெரிவித்தல் சாலச் சிறப்பென்றே எழுதலாயினேம்.



# HOW TO TEACH ARITHMETIC.

## எண்முதல் விளக்கம்.

### ஆறும் எண்வரையில் அடிக்கோலையும், விளையாட்டுக் கருவிகளையுங் கொண்டு பயிற்றுதல்.

இவ்வாறு விளையாட்டுக்காட்டிக்கொண்டு எண்களின் மூலாதாரங்களை அறியும் வழியைப் பரிஷ்காரமாய்ச் சிறுவனுக்குத் தெரிவித்தபிறகு, தாய்தந்தையர்களாவது, உபாத்தியாயராவது தினந்தோறும் அவனுக்கு எண்களைக் குறித்துச் சில வசனங்களைச்சொல்லப்போகிறதாயும், அந்தச் சமயத்தில் அவன் கவனமாய் ஓரிடத்தில் நின்று கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமென்றும் சொன்னால், அவன் அதைக் கேட்டுத் திகிலடையமாட்டான். மறு பாடம் சொல்ல ஆரம்பிக்கும்போது மிகவும் பிரயோஜனமான அளவுகோலையும், விளையாட்டுக் கருவிகளையுடைய பெட்டியையும் எடுத்துவைத்துக்கொண்டு இதன் அடியிற் கண்டிருக்கிற வினாக்களைக் கேட்கவேண்டியது.

உ. இரண்டு அடி எப்படி அளக்கிறது, காட்டு.

சி. (அளந்துகொண்டே) ஓரடியும், ஓரடியும் இரண்டு அடி.

உ. உன் பெட்டியிலிருந்துஇரண்டுகிளிஞ்சில் எடுத்துக்கொடு.

சி. ஒரு கிளிஞ்சிலும், ஒரு கிளிஞ்சிலும் இரண்டு கிளிஞ்சில்.

உ. சரி; உனக்கு இரண்டு வஸ்துக்களை எண்ணிக் காட்ட நன்றாய்த் தெரிந்துவிட்டது. இரண்டுக்கு மேற்பட்ட வஸ்துக்கள் இருந்தால், என்ன செய்கிறது (கெஜக்கோலைக்கையில் எடுத்துக்கொண்டு) இதோ பார்த்தாயா அப்பா, வஸ்திரமுதலானதை அளப்பதற்கு உபயோகப்படுகிற அளவுகோல் இதுதான்; நீ இதை உன்னுடைய அடிக்கோலால் அளந்துகாட்டு.

சி. (அளந்துகொண்டே) ஓரடியும், ஓரடியும் (உ.) மேலேஅளந்துகொண்டுபோ அப்பா (சி.) ஓரடியும்.

உ. சரி; ஓரடியும், ஓரடியும், ஓரடியும் மூன்று அடிகள்.

சிறுவன் இதைப் பின்னே சொல்லிக்கொண்டு போகவேண்டும்.

உ. இந்தப் பெட்டியிலிருந்து மூன்று வெள்ளைக்கற்களை எடுத்துக்காட்டு பார்ப்போம். நீ ஒவ்வொன்றாய்க் கொடுத்து, அதை நான் கீழே வைக்கும்போது நான் சொல்லுகிறபிரகாரம் நீயும் பின்

னாலே சொல்லவேண்டும். ஒரு கோலிக்குண்டும், ஒருகோலிக்குண்டும், ஒரு கோலிக்குண்டும் மூன்று கோலிக்குண்டுகள்.

இந்தப்பிரகாரம் ஒவ்வொரு விளையாட்டுக்கருவிகளையும் மூன்று மூன்றாய் எடுத்துக் கொடுக்கும்படி செய்ய வேண்டியது. இப்படி பல வஸ்துக்களையும் எடுத்துக் கொடுக்கும்போது, பிள்ளைகள், அலுத்துப் போனவர்களாய்ச் சில குறிகளினாலே தெரியவந்தால், பெட்டியைத் தூரவைத்து விட்டு, வேறொரு மாதிரியாய்ப் போதிக்க வேண்டியது.

உபாத்தியாயர் மூன்று விரல்களைக்காண்பித்து "ஒரு விரலும், ஒரு விரலும், ஒரு விரலும் மூன்று விரல்கள்" என்று சொன்னாலும் சொல்லலாம். இல்லாவிட்டால் சமீபத்தில் இருக்கும் வஸ்துக்கள் மூன்று ஒரு மாதிரியாய் இருக்கிறதைப்பார்த்து, அதுமூலமாயும் மேற்காட்டியிருக்கிற பிரகாரம் தெரிவிக்கலாம். இரண்டுக்கும், மூன்றுக்கும் இருக்கிற பேதத்தைத் தெரியக் காட்டிவைக்கும்பொருட்டு, குழந்தைகளுக்குச் சில்லறைவேலைகளை இடவேண்டியது. அதாவது நம்முடைய தோட்டத்துக்குப் போய், இரண்டு நந்தியாவர்த்தமும், மூன்றுரோஜாவும், சுந்தரத்துக்கு இரண்டு கொய்யாப்பழமும், ராமனுக்கு மூன்று மாதுளம்பழமும், வீட்டுக்குள்ளே போய் இரண்டு பொம்மையும், மூன்று கதைப்புஸ்தகங்களும் கொண்டுவரும்படி செய்யலாம். அல்லது பெட்டியிலிருந்து ஒரு கிளிஞ்சில், இரண்டு பலகரை, மூன்று கோலிகுண்டு இது முதலானதுகளை எடுத்து வைக்கும்படி செய்யலாம். இப்படி வைக்கும்போது சித்திர விசித்திரமாய்ச் சிலவற்றை வைத்துக் காண்பித்தால், குழந்தைகள் யுக்தி செய்து தாங்களேபலவிதமாய் வைத்துப் பார்த்துச் சந்தோஷிக்கும். தாயாவது, தந்தையாவது குழந்தை வீட்டில் இருக்கும்போது ஒரு சிறு கூடையில் பலவிதப் பழங்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு, தன்னால் எத்தனை பழம் கையிலெடுத்துக் காண்பிக்கப்படுமோ, அதைக்கவனித்துப் பார்த்து ஒரு இலந்தம் பழம், இரண்டு கிச்சிலிப் பழம், மூன்று விளாம்பழம், இரண்டு மாம்பழம், மூன்று வாழைப் பழம், ஒரு அனுசப்பழம் என்று சொல்லுவிக்கலாம்.

இதன் அடியிற்கண்டிருக்கும் கேள்விகளின் மாதிரியாய்ச் சிறுவர்களைப் பயிற்றுவிக்கலாம்.

மாணிக்கம், கந்தப்பன், மாசிலாமணி இவர்களுக்கு ஒவ்வொரு பழம் கொடுக்கவேண்டுமானால், என் கையில் எத்தனை பழம் இருக்க வேண்டும். ஜானகி என்பவள் தன்தம்பி அப்புராயனுக்கு இரண்டு



பழம் கொடுத்து, தனக்கும் ஒரு பழம் எடுத்துக்கொண்டாள். அவள் கையில் எத்தனை பழம் வைத்துக்கொண்டிருந்தாள்?

ஒரு எளியவனுக்கு இரண்டு குழந்தைகள். என் கையில் எத்தனை அணா இருந்தால் அவர்களுக்கு ஒவ்வொரு அணா கொடுக்கலாம்? கந்தனுடைய தகப்பனார் சவுளிக்கடைக்காரனுக்கும், வாணியனுக்கும், அரிசிக் கடைக் காரனுக்கும் ஒவ்வொரு ரூபாய் கடன் கொடுக்க வேண்டியிருந்தது. ஆக அவருக்கு எத்தனை ரூபாய் கடன் இருந்தது?

நீ திங்கட்கிழமை ஒரு மைல் தூரமும், செவ்வாய்க்கிழமை ஒரு மைல் தூரமும், புதன்கிழமை ஒரு மைல் தூரமும் நடந்துபோயிருந்தால், ஆக எத்தனை மைல் நடந்திருப்பாய்? ஒன்றும், ஒன்றும், ஒன்றும் எத்தனை? மூவொன்று எத்தனை?

இதே மாதிரியாய்க் குழந்தைக்கு நான்கு, ஐந்து, ஆறுவரையில் படிப்படியாய்ச் சொல்லிவைக்கலாம்.

இப்படிச் சொல்லும்போது முன்போலவே ஒரு கிளிஞ்சிலும், ஒரு கிளிஞ்சிலும், ஒரு கிளிஞ்சிலும் எத்தனை என்றும், ஒரு பொருளுடைய பெயருடன் கூட்டிச் சொல்லச் சொல்லி, நாலு ஒன்றுகூடி நாலு ஆகிறது என்றும், ஐந்து ஒன்று கூடி ஐந்து ஆகிறதென்றும் தெரிவிக்கவேண்டியது. இதுவுமல்லாமல் "ஒன்று, ஒன்று, ஒன்று, ஒன்று பலதரம் சொல்லி வாய்நோகாமல் ஒரே தரம் சுளுவாய் நாலு என்று சொல்லப்படும்" என்று தெரியப்படுத்தவேண்டியது. இவ்வளவு ஞானம் உண்டானவுடனே சிறுவர்களுக்குக் கழித்தல், வகுத்தல் இவ்விரண்டு கணக்குகளைச் சொல்லிவைக்கலாகாது. இந்த முதற்பாடத்தில் கூட்டுக்கணக்கை மாத்திரம் சொல்லி நிறுத்த வேண்டும். ஆறுவரைக்கும் பூரண ஞானமுண்டானால், அப்பொழுது விளையாட்டுச்சாமான் பெட்டியில் இருக்கும் கருவிகளையும், மற்றப் பொருள்களையும் இரட்டை இரட்டையாய் "இரண்டு பலகறையும், இரண்டு பலகறையும் நான்கு பலகறை" "இரண்டும், இரண்டும், இரண்டும் ஆறு" என்று ஆறுவரைக்கும் கூட்டும்படி செய்யலாம். இதன் அடியிற் குறித்திருக்கும் வினாக்களைப்போலச் சில வினாக்களையும் கேட்கலாம்.

இந்த மேஜைக்கு எத்தனை கால் இருக்கிறது? இந்த நாற்காலிக்கு எத்தனை? கட்டிலுக்கு எத்தனை? இந்தத் தம்பூருக்கு எத்தனை தந்தி இருக்கிறது? இந்த வீணைக்கு எத்தனை? பூனைக்கு எத்தனை கால்? நாய்க்கு எத்தனை? முயலுக்கு எத்தனை?

ஜானகி, கமலம், சுந்தரம் இந்த மூன்றுபேரும் ரங்கத்துக்கு ஒவ்வொரு பேரீச்சப்பழம் கொடுத்தால், ரங்கத்தின் கையில் ஆக எத்தனை பழம் சேர்ந்திருக்கும்? ஒரு தாயாருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவள் பெரிய பிள்ளைக்கு இரண்டு புத்தகங்களும், இரண்டாம் பிள்ளைக்கு ஒரு காற்றாடியும், மற்றொருவனுக்கு ஒரு மரப்பொம்மையும் வாங்கிக் கொடுத்தாள்? ஆக எத்தனை வஸ்துக்கள் அந்தத் தாய் வாங்கினாள். ரத்தினமென்னும் பையன் தன் தாயாருக்கு இரண்டு மாங்கனியும், தகப்பனுக்கு இரண்டும், தன் தங்கைக்கு இரண்டும் கொடுக்கப்போகிறதாகச் சொன்னான். அவன் எத்தனை மாங்கனிகள் வைத்துக்கொண்டிருப்பான்?

கந்தனுடைய வயது மூன்று, அவன் தங்கையினுடைய வயது இரண்டு. ஆக இரண்டுபேருடைய வயதும் கூடி எவ்வளவு?

இதுவுமல்லாமல் இரண்டு என்பதற்கும், சோடு என்பதற்கும், இரட்டை என்பதற்கும் பரஸ்பர பேதத்தைக் காட்டும்படி சிறுவர்களைக் கேட்கவேண்டியது.

இப்போது வழங்கிவரும் நாணயங்களையும் காண்பிக்கலாம். தாய் தந்தைகள் மேற்குறித்த விஷயங்களை வீட்டில் இருக்கும் பல வஸ்துக்களைக்கொண்டு சிறுவனுடைய மனதில் நன்றாய்ப் பதியும்படி செய்விக்கலாம். பாடஞ் சொல்லியானபிறகு போதித்த விஷயத்தை மறவாமல் இருப்பதற்காகக் கண்ணுக்குமுன் இருக்கும் பல பொருள்களையும் எண்ணும்படி செய்யலாம்.

---

## EDUCATION OF CHILDREN.

### சிறுவர் கல்விப் பயிற்சி.

ப்ரொபெல் என்னும் பாலபோதகருடைய சரித்திரத்தைச் சென்ற சஞ்சிகைகளில் ஒருவாறு தெரிந்துகொண்டோமல்லவா? பாலசிக்ஷை செய்விக்கும் விஷயத்தில் அவர் கொண்ட கொள்கைகளைப் பற்றி இனிக்கொஞ்சம் தெரிந்துகொள்ள முயல்வோம். அவர் சிறு பிள்ளைகளைச் சிறிய செடிகளுக்கு ஒப்பாகச்சொல்லி, அவர்களுக்குச் சிக்ஷைசெய்விக்கத் தாம் ஏற்படுத்திய பள்ளிக்கூடத்தைச் சிறுவர் சிங்காரத்தோட்டம், அதாவது சிறுவராகிய செடிகள் செழித்து விருத்தியடையும் தோட்டமென வழங்குகிறார். ஒரு சிறிய கெட்டியான மாங்கொட்டையை எடுத்து நல்ல சாரமான பூமியில் நட்டுச் செம்மையாகத் தண்ணீர்வார்த்தால், அந்தக் கொட்



டை முன்போல் கெட்டியாயிராமல் மெதுவாகிப் பருத்துத் தோல் உடைந்து முளைகிளம்புகின்றது. ஒரு முளை கீழ்முகமாய்ச்சென்று வேர் ஆகிறது; மற்றொரு முளை மேல்முகமாய்ப் புறப்பட்டுச் சூரியனுடைய உஷ்ணமும் மழையினுடைய குளிர்ச்சியும் பட்டுப் பூமிக்கு மேலே கிளம்பித் தாள் அல்லது தண்டாக நின்று அலைவிடுகிறது. அடிவேரில் தண்ணீர் ஊறி மேலே சூரியகிரணம் படப்பட இலைகள் அதிகமாக விடத்தலைப்பட்டுச் செடி வளருகின்றது. அப்புறம் இதழ்கள் விட்டுப் புஷ்பங்களாக மலர்ந்து பிறகு அவை வாடி வதங்கி உதிர்ந்தபின்பு பச்சென்று சிறிய காய்கள் தோன்றிப் பருத்துப் பழங்களாகின்றன. ஒவ்வொரு பழத்திலும் முதலில் நாம் நட்ட கொட்டையைப்போன்ற கொட்டை உண்டாகிறது; இவ்வண்ணம் ஒரு அற்ப விதையினின்று எவ்வளவு உண்டாகிறது? வேர், தண்டு, இலைகள், புஷ்பங்கள், பழங்கள், எண்ணிறந்த விதைகள் இவ்வளவெல்லாம் உண்டாகின்றனவல்லவா? நல்லது, விதையை முதலிலேயே உடைத்துப்பார்த்தால் என்ன கிடைக்கும், ஒன்றுமில்லை. மேற்சொல்லியபடி சாரமான பூமியில் நடுவது, நல்ல தண்ணீர் வார்ப்பது, சூரியகிரணம் படும்படி செய்வது முதலிய உபாயங்களைச் செய்தால்மாத்திரமே பலன் உண்டாகும். சிறுவர்களும் இத்தன்மையான செடிகளுக்குச் சமானமாம். அதெப்படியெனில் இலை புஷ்பம் பழம் விதை முதலியவெல்லாம் ஒரு சிறிய விதைக்குள் அடங்கியிருப்பதுபோலவே பிள்ளைகளினுடைய அறிவுகளும் சக்திகளும் இளங்குழந்தையினிடத்திலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன. தகுந்த காலத்தில் தகுந்தவழியாய்ப் பாலகர்களுடைய அறிவுகளையும் சக்திகளையும் தூண்டிவிட்டு அபிவிர்த்திபண்ணினால், பெரியவனாகுங்காலத்தில் தேகசவுக்கியமும், விவேகமும், பூததயை, பச்சாத்தாபமுதலிய நற்குணங்களுமுள்ள பெரிய மனிதனாவான். எல்லாச் செடிகளும் ஒரேதன்மையன அல்லவோ, அப்படியே எல்லாப் பிள்ளைகளும் ஒரேமாதிரியானவர்களல்ல. நல்ல தோட்டக்காரன் ஒவ்வொருசெடியினுடைய குணத்தையும் அறிந்து அதற்குத் தக்கபடி எருப்போட்டுத் தண்ணீர்வார்த்து வளர்க்கிறதுபோல, உபாத்தியாயரும் ஒவ்வொரு பிள்ளையினுடைய இயல்பையும் அறிந்து அதற்கு வேண்டியபடி ஒத்தாசை செய்யவேண்டும். குழந்தையினுடைய சுபாவத்தை எப்படி தெரிந்துகொள்ளுவதென்றால், உன்னிப்பாய்க் கவனித்தால் வெகு சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். சுபாசம் இன்னமாதிரியாக இருக்கும் என்பதைக் காட்டத்தக்க குறிப்புகளைக் குழந்தைகளிடத்தில் மிகச் சிறுபருவத்திலும் காணப்

படும். இங்கிலாந்து தேசத்தில் ஒரு பெருமாட்டி ஏழ்மையான பிள்ளைகள் விஷயத்தில் மிகவும் பாடுபட்டுப் பொதுவாய் எல்லோருக்கும் நன்மைசெய்துகொண்டு மிகக் கீர்த்திபெற்று விளங்கியிருந்தாள். பரோபகார சிந்தையும் சுறுசுறுப்பு முள்ள அவளுடைய இயல்பானது மூன்றுவது வயதிலேயே அறியும்படியாயிருந்தது. ஒருநாள் அந்தக் குழந்தையையும் அதனுடைய சகோதரியாகிய இன்னொரு குழைந்தையையும் தகப்பனார் அழைத்துக்கொண்டு வேலைக்காரர்கள் புல் அறுத்து அடித்துக்கொண்டிருந்த இடத்துக்குப் போயிருந்தபோது, தன்னுடைய சகோதரி சும்மாவேடிக்கைப் பார்த்து விளையாடிக்கொண்டிருக்க, மூன்றுவயதுள்ள இந்தக் குழந்தைமாத்திரம் நான் சும்மா விருக்கமாட்டேன், நான் சும்மாவிருக்க மாட்டேன் என்று சொல்லி அருகாமையிலிருந்த வேலியிலிருந்து ஒரு சிறிய தடி எடுத்துக்கொடுக்கச்சொல்லி வாங்கிக்கொண்டு அதனால் புல்லைத் தட்டிக்கொண்டிருந்தது. இப்படிக் குழந்தைகளினிடத்தில் காணப்படுகிற அடையாளங்களை அறிந்து அந்தந்தக் குழந்தைக்குத் தக்கபடி நடத்தவேண்டும்.

ஆகிலும் சாதாரணமாய் எல்லா குழந்தைகளுக்கும் பொதுவான குணங்கள் சில உண்டு. அவைகளுள் முதலாவது சுறுசுறுப்பு ஓரே இடத்தில் இருக்காமல் ஓடவும், குதிக்கவும் ஏறவும் விழவும், குழந்தைகள் ஆசைப்படுவதைத் தினந்தோறும் கண்ணெதிரே காண்கிறோமல்லவா? இப்படியெல்லாம் செய்வது நன்மையோ தீமையோ என்றுலோ, மிகவும் நன்மையானது. ஒவ்வொரு அசைவினும் நரம்புக்குப் பலமுண்டாகிக் கைகால்களினுடைய உபயோகங்களும் குழந்தைக்குத் தெரிகிறது. ஆகையாலே குழந்தைகளை அங்கு மிங்கும் நகரவொட்டாமல் சும்மாவிருக்கும்படி செய்வோமானால், நீங்கள் பலமுள்ளவர்களாகவும் அரோகிகளாகவும் இருக்கக்கூடாது, உங்களுடைய கைகால்கள் பரபரப்புள்ளவையும் சுவாதீனமாயும் இருக்கக்கூடாது. உங்களுடைய வாழ்நாள் முழுவதும் பலவீனப்பட்டு மெலிந்துகிடக்கக்கடவீர்கள் என்று சொல்லுவதுபோலாகும்.

குழந்தைகளினிடத்தில் காணப்படுகிற இன்னொரு பொதுவான குணம் யாதெனில், பொருள்களைக் கவனமாகப்பார்த்துப் பூராயமாய்த் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிற விருப்பமாம். புதிதாக வாசம்செய்யவந்த இந்த அற்புதமான உலகத்தில் கண்ணுக்குத் தென்படும் ஒவ்வொருவஸ்துவும் குழந்தைகளுக்கு விந்தை



யாகக் காணப்படுகிறதாதலால் அதை விவரமாக அறியவேண்டுமென்கிற ஆசை உண்டாகிறது. ஆகையாலேதான் குழந்தைகள் வஸ்துக்களைத் தொட்டுத் தடவித் தூக்கிப்பார்த்து அதென்ன இதென்னவென்று கேட்கின்றன. அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவது தொந்தரவென்று குழந்தைகளைச் சும்மாவிரு என்று சொல்லுவோமேயானால், இந்த உலகத்தைப்பற்றி நீங்கள் ஒன்றும் தெரிந்துகொள்ளவேண்டாம், ஒன்றையும் பார்க்கவும் கேட்கவும் வேண்டாம், மூடர்களாகவே இருங்கள் என்று சொல்லுவது போலாகும்.

குழந்தைகள் விளையாடும்போது மண்ணினால் வீடுகட்டுவதையும், மண்ணாலேயே பொம்மைபண்ணுவதையும், காகிதத்தினால் கூண்டுமுதலியவை செய்வதையும் காண்கிறோமல்லவா. ஆகையாலே நூதன சிருஷ்டியில் குழந்தைகள் உற்சாகம் அடைவதும் ஒரு பொதுவான குணமாம். இந்தக் குணத்தை மேன்மேலும் விருத்தி செய்துவந்தால் மாத்திரமே பிற்காலத்தில் சோம்பேறித்தனமாய்த் தூங்காமல் உழைப்பாளிகளும் உபயோகமுள்ளவர்களுமாவார்கள்.

பிரகாசமான தீபத்தைப் பார்க்கும்போதும், பளபளவென்றிருக்கிற வஸ்திரத்தைப் பார்க்கும்போதும், இனிப்பானசத்தத்தைக் கேட்கும்போதும் மிகச்சிறுகுழந்தையும் ஒருவிதமான களிப்பை அடைகிறதல்லவா? அழகினிடத்திலுள்ள இந்த இயல்பான ஆசையை மேன்மேலும் விருத்திசெய்வது மிகவும் அவசியம். பார்க்க வழங்காத வீடுவாயில்களை வைத்துக்கொண்டு விகாரமான நடத்தைகளையுடைய மனிதர்கள் இப்போது எத்தனையோபேர் இருக்கிறார்களே; பாலியம்முதல் சுசியான நல்லொழுக்கங்களையே அப்பியாசம் பண்ணி வந்திருந்தால் இப்போது காணப்படுகிற அருவருப்பான நடக்கைகளுக்குச் சற்றும் இடமிராதல்லவா?

குழந்தைகளினிடத்தில் உள்ள மற்றொருகுணம் என்னவென்றால் ஒருவரையொருவர் நேசித்திருக்க விரும்புவதாம். விளையாடுவதற்குக் கூட்டாளிகள் இருக்கும்போது பிள்ளைகள் தனிமையாக விளையாடுகிறதில்லை; தாங்கள் அனுபவிக்கும் வேடிக்கையைக் கூட்டாளிகளும் அனுபவித்தால் அது குழந்தைகளுக்கு அதிக உற்சாகத்தைக் கொடுக்கிறது. தங்களுடைய இஷ்டத்துக்குக் கொஞ்சம் மாறுயிருந்தாலும் கூட்டாளிகளின் இஷ்டத்துக்குச் சிலவேளைகளில் இணங்குகிறதுமுண்டு. இந்தக் குணமானது பிற்காலத்தில் பிறருடைய சுகதுக்கங்களைத் தம்முடைய சுகதுக்கங்களாகப்பாவிக்கும் பெருந்தன்மைக்குக் காரணமாகிறது.

அன்றியும் எல்லாக் குழந்தைகளுக்கும் வேடிக்கையிலும் விளையாட்டிலும் சந்தோஷம் உண்டு. இதுவும் ஒரு நல்லகுணமே. சூரியகிரணத்தினால் பூஞ்செடிகள் செழித்து மேனியடைவதுபோல் உற்சாகத்தினால் குழந்தைகள் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளரும். ஆகையாலே அவைகளினுடைய விளையாட்டைத் தடுக்காமல் அதை விருத்திபண்ணி அந்த விளையாட்டினாலும் போதிக்கக்கூடிய நல்ல விஷயங்களைப் போதிக்கவேண்டும்.

இது நன்மை, இது தீமை என்று அறியத்தகுந்த ஞானம் குழைந்தைகளுக்கு உண்டா என்றாலோ அதுவும் இயற்கையாகவே கொஞ்சம் உண்டு.

எல்லாக் குழந்தைகளுக்கும் சுபாவமாய் உள்ள மேற்சொல்லிய குணங்கள்யாவும் நல்லவையாகையால் அவைகளை நல்வழியில் விருத்திசெய்யவேண்டும். ஒவ்வொரு குணத்தையும் விருத்திசெய்வதற்கு வேண்டிய உபாயத்தையும் சுருக்கமாகக் காட்டுகிறோம். நாம் முதலாவதாகச் சொல்லிய குணம் சுறுசுறுப்பு. குழந்தைகள் ஒரே இடத்தில் உட்காந்திருக்கமாட்டா. அப்படி உட்காந்திருப்பதும் கெடுதி. ஆனால் பள்ளிக்கூடத்தில் சிறுவர்களை அப்புறமும் இப்புறமும் போகும்படிசெய்வது ஒழுங்கில்லாமையையும் உண்டுபண்ணும். மிகச்சிறந்த உபாத்தியாயரான ப்ரோபெல் இதற்கு என்ன உபாயம் செய்தாரென்றால், நாடகங்கள் ஆடுவதுபோல அநேகங் குற்றமற்ற விளையாட்டுகளைக் கற்பித்து, அதில் அப்படியும் இப்படியும் ஓடும்படியான சந்தர்ப்பங்களை நுழைத்து இனிப்பான பாட்டுக்களையும் துணையாகக் கற்பித்தார். அந்த விளையாட்டுக்கள் சுறுசுறுப்பைக் கொடுப்பதுமல்லாமல் காதுக்கு இனிப்பான இராகத்திலுள்ள ஆசையையும் தணியப்பண்ணிப் பலவிதமான ஜந்துக்கள், பொருள்கள், வேலைகள் முதலியவைகளைப்பற்றிய மாதிரிகளையும் சிறுவர்களுக்குத் தெரிவிக்கின்றன.

பொருள்களைச் சோதனைசெய்கிற சுபாவம் பாலர்களுக்கு உண்டென்று சொல்லியிருக்கிறோமல்லவா? அதைத் தூண்டிவிடுவதற்கும் தகுந்த உபாயம் ஒன்றுண்டு. பொருள்களினுடைய பேர்களைமாத்திரம் சொல்லிக்கொடுப்பதனால் குழந்தைகளுக்குப் பிரயோசனமில்லையாகையாலே கண்ணாலேபார்த்துக் கையாலேதொட்டுப் பொருள்களை அறியும்படி செய்யவேண்டும். பார்வையினாலும் பரிசத்தினாலும் இன்னவஸ்து இப்படிப்பட்டதென்று மனதில் விளங்கும்படிசெய்து, பிறகு அந்த வஸ்துவைச் சுட்டிக்காட்டும் பெயரைக் குழந்தைகளுக்



குச் சொல்லிக்கொடுக்கவேண்டும். இதற்காகப் புத்தி சூட்சுமமுள்ள உபாத்தியாயரான ப்ரோபெல் பல விளையாட்டுக் கருவிகள் பண்ணிப் பிள்ளைகளுக்குக் கொடுத்தார். அவைகளுள் முதலாவதாகக் கொடுத்தது வர்ணமிட்ட தோல்பந்து. இந்தப்பந்தை முதலில் கொடுப்பானேன் என்றால், மூலை முடக்கில்லாமல் ஒரே பரப்பாயிருப்பதுபற்றி அதைவிட எளிதாய்க் கிரகிக்கத்தக்க வஸ்து வேறு கிடையாது. வர்ணமிட்டிருக்கிறபடியால் கண்ணுக்கும் அழகாயிருக்கிறது, மெதுவாக இருத்தலால் கையினால் தொடுவதற்கும் நேர்த்தியாயிருக்கிறது, தப்பித்தவறிக் கீழே விழுந்தாலும் உடையத்தகுந்ததன்று, அன்றியும் கை படும்போதே உருள ஆரம்பிக்கிறது. இந்த ஒரு கருவியைக் கொண்டே அநேகம் விளையாட்டுக்கள் விளையாடலாம். அதற்குப் பிறகு கொடுக்கப்படும் பற்பலவிதமான கருவிகளினால் மூலைகளும் நுனிகளும் பக்கங்களும் கோணங்களும் கண்ணுக்குத் தென்பட்டு, அதேமாதிரியான வஸ்துக்களை இன்னும் எங்கேயாவது கண்டாலும் தெரிந்துகொள்ளச் சக்தியுண்டாகும்.

மூன்றாவது குணமாகச் சொல்லிய நூதன சிருஷ்டியில் உள்ள ஆசையை விருத்திசெய்வதற்கு, இலேசான சிறிய கம்பிகளை வரிசைவரிசையாய் அடுக்குவது, வர்ணமிட்ட எழுதுகிற பலகைகளில் சித்திரம்போடுவது, காகிதத்தினால் விந்தையான வஸ்துக்கள் செய்வது முதலிய பயிற்சிகள் உபயோகமாகும். இப்படிப்பட்ட பயிற்சிகளினால் இளமையான விரல்கள் வரவரத்தேர்ச்சியடைந்து, பிறகு எவ்விதமான நுட்பவேலைகளுக்கும் இணக்கமாகும். குழந்தைகள் கற்கிற இடமானது படங்களும் புஷ்பங்களும் மற்றும் விநோதமான பொருள்களும் அமைந்து கண்ணுக்கு ரம்மியமாய் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் குழந்தைகளுக்கு அழகினிடத்தில் உள்ள ஆசையானது நன்றாக நிறைவேறி விருத்தியாகும். விளையாடும்போது மற்றக் குழந்தைகளுடன் சேர்ந்திருப்பதால் பிறரை நேசிக்கவேண்டுமென்கிற ஆசையும் நிறைவேறும். உற்சாகத்தில் குழந்தைகளுக்கு நோக்கமிருப்பதால் பாடம் படிக்கும்போது உபாத்தியாயர் கடுமையாயில்லாமல் இனிப்பான பேச்சுக்களையே பேசிக் குதூகலத்தை உண்டுபண்ணவேண்டும்.

நன்மை தீமைகளைத் தெரிந்துகொள்ளுகிற சுபாவமும் குழந்தைகளுக்கு உண்டென்று கடைசியாய்ச் சொல்லியிருக்கிறோமல்லவா ? இந்த நுட்பமான விஷயத்தை உபாத்தியாயர் எப்போதும் மனதில் வைத்திருந்து பிள்ளைகளை நிர்ப்பந்தத்துக்குள் வைக்கா

மல் எதேச்சையாய்விட்டு நற்குணங்களையும் துர்க்குணங்களையும்
வெளிவிடும்படிசெய்து தீயதை அப்போதைக்கப்போது கண்டித்து
நல்லதை மேன்மேலும் விருத்தியடையத் தூண்டிவிடவேண்டும்.

சிறுவர்களை ப்ரோபெல் செடிகளோடு ஒப்பிட்டிருப்பதாக
முன் சொல்லியிருக்கிறோமல்லவா? ஒரு செடி முதலில் ஒரு அற்ப
விதையாயிருந்து பெரிய மரம் ஆகிறவரையில் அதனுடைய நிலை
மைகள் இப்படிப்பட்டவையென்பதையும் எடுத்துக்காட்டினோமே.
அத்தன்மையான அபிவிர்த்தி குழந்தைகளிடத்தில் உண்டாகும்
விதம் எப்படியென்று யோசித்துப்பார்ப்போம். முதலில் குழந்தை
பிறந்த இரண்டாவது மாதத்தில் மனிதர்களையும் பொருள்களையும்
குறிப்பாகப் பார்த்துக்கொள்ளுகிற சக்தி உண்டாகிறது; பிறகு தான்
உணருகிற சந்தோஷத்தை வெளியிடும் சிரிப்பும், அதற்குப்பிறகு
விசனத்துக்கு அடையாளமாயிருக்கிற அழுகையும் உண்டாகின்றது.
அப்புறம் மூன்றாவது மாதத்தில் ஞாபகசக்தி உண்டாகித் தாயை நன்
றாகத் தெரிந்துகொள்ளுகிறது. ஐந்து ஆறு மாதம் ஆனபிறகு பல்
முளைத்துக் கடிக்கக் கற்றுக்கொள்ளுகிறது. ஒன்பதாவது மாதத்தில்
பேச்சுப்பேசும் சக்தி உண்டாகிறது. எல்லாத் தேசங்களிலும் குழந்
தைகள் முதல்முதல் உச்சரிக்கிற சப்தம் 'மா' 'மா' என்பது, இந்
தச் சப்தத்தை அடிக்கடி அதிக உற்சாகத்துடன் உச்சரிப்பதை யாவ
ரும் காண்கிறோம். ஆகையாலேதான் அநேகமாய் எல்லாப் பாஷை
களிலும் தாயைக் குழந்தை அழைக்கின்ற பேர்கள் சற்றேறக்
குறைய ஒரேமாதிரியாகவே இருக்கின்றன. பேச்சுவரத் தொடங்
கினபின் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அசையும் சக்தி உண்
டாகி, முதலில் தவழ்ந்து பிறகு நின்று, கடைசியாக ஒரு வயது
ஆனபிறகு நடக்கிறது. ஆகையாலே முதலில் குழந்தை பிறந்த
போது உள்ள ஸ்திதிக்கும், ஒருவயது ஆனபிறகு சிரிப்பும் மழலைப்
பேச்சுமாய் நடந்து விளையாடிக்கொண்டு இருக்கும்போது உள்ள
ஸ்திதிக்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கிறது! இத்தன்மையான அபி
விர்த்தியானது செடி குழந்தை இவைகளிடத்தில் மாத்திரமேயல்ல
உலகம் முழுவதிலும் எப்போதும் ஓய்வும் ஒழிவுமில்லாமல் நடந்து
கொண்டேயிருக்கிறது. குழந்தை பெரியவனாவதும், ஒரு விதை மர
மாவதும், ஒரு முட்டை பட்சியாவதும், மற்றொரு முட்டை கம்பளிப்
பூச்சியாகவும் அதுவே வண்ணாரப்பூச்சியாகவும் மாறுவதுமாகிய
இந்த அபிவிர்த்தியெல்லாம் இதே நியாயத்தினாலேதான். இந்த உதா
ரணங்கள் ஒவ்வொன்றிலும் சிறியவஸ்து பெரியவஸ்துவாக மாறு
கிறதாயிருந்தும், மாறுதல்களினுடைய நிலைமைகள்மாத்திரம் இப்



படிப்பட்டவையென்று நமக்குத் தெரிகிறதில்லை; நாளுக்குநாள் வேற்
றுமை எவர்க்கும் தெரியாமல் அவ்வளவு மெதுவாக மாறுதல் நடந்
தேறிவருகின்றது. குழந்தைகளைக் கற்பிக்கிற விதமும் இம்மாதிரி
யாகவே மெதுவாய் இருக்கவேண்டும். முதலில் எளிதான விஷயங்
களைச் சொல்லிக்கொடுத்து, பிறகு சற்றுக் கடினமான விஷயங்களை
யும், அப்புறம் இன்னும் கொஞ்சம் கடினமான விஷயங்களையும் கற்
பித்துப் படிப்படியாய் உயர்த்தவேண்டும். செடியின் தண்டிலிருந்து
இலை கிளம்புவதுபோலவே, ஒரு விஷயத்தை மற்றொரு விஷயம்
இயல்பாகவே தொடர்ந்துவருகிறதாகவும், சங்கிலிகள் ஒன்றுக்
கொன்று பின்னிக்கொண்டிருப்பதுபோல விஷயங்களும் ஒன்றின்
பின் ஒன்றாக நெருங்கின சம்பந்தமுடையவைகளாகவும் இருக்க
வேண்டும்.

உலகத்தில் அநேகமாய் நாம் பார்க்கிற ஒவ்வொரு வஸ்துவுக்
கும் எதிரான வஸ்து ஒன்று உண்டு; ஆயினும் அவ்விரண்டையும்
புணைக்கிறதற்குச் சங்கிலிபோன்ற ஒரு வஸ்துவும் உண்டு; இருட்
டுக்கு எதிர் வெளிச்சம், இரண்டுக்கும் மத்தியிலிருப்பது காலைமாலைச்
சந்திவெளிச்சம், இறந்தகாலத்துக்கு எதிர் வருங்காலம், இரண்டை
யும் புணைப்பது நிகழ்காலம்; குளிர்ச்சிக்கு எதிர் உஷ்ணம், இரண்டுக்
கும் பொதுவான துசுகோஷ்ணம். இந்தநியாயத்துக்கு எதிர் உவமை
என்று பெயர். பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு ப்ரோபெல்
கொண்ட உபாயங்களுள் அநேகம் இதிலேயே அடங்கியிருக்கின்
றன. குழந்தைகளைப் படிப்பிப்பதில் இதை உபயோகித்தால் மிக
வும் அனுகூலமாயிருக்கும். எழுதும் பலகையில் ஒரு சித்திரத்தை
எழுதும்படிச் சிறுவர்களுக்குக் கற்றுக்கொடுத்துப் பிறகு அதற்கு
எதிரான சித்திரத்தை எழுதுங்களென்றால், நாலைந்து தடவை
தவறித் தவறிக் கடைசியாகச் செம்மையாய் எழுதும் திறமை உண்
டாகும். அப்புறம் இரண்டையும் சேர்த்து எழுதல் சொன்னால்
சுலபமாய் எழுதுவார்கள்.

கண்ணுக்குத் தெரிகிற சரீரம் மாத்திரமே குழந்தையல்ல, அறி
வதற்கும் யோசிப்பதற்குமான புத்தியும்; ஒருவரையொருவர் நே
சிப்பதற்கான இருதயமும் சேர்ந்து குழந்தையின் சுபாவம் மூவி
தமாயிருக்கின்றதென ப்ரோபெல் சொல்லுகிறார். ஆகையால் இம்
மூன்றையும் தக்கபடி திட்டமாய்ப் பயிற்சிசெய்விக்கவேண்டும்.
ஒரு அம்சத்தையாவது முற்றும் மறந்துவிடவும்கூடாது; மற்றிரண்
டிற்கும் குறைவுவரும்படி ஒன்றையே அதிக ஏற்றமாக நினைக்க

கூடாது. நம்முடைய குழந்தை வித்வான் என்று பெயர் எடுத்தால் போதும், மற்றொன்றும் வேண்டாம் என்று மனதைமாத்திரம் பயிற்றுவித்தால் சாமர்த்தியமும் விவேகமும் அற்றவனாக இருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை ; ஆனால் எப்போதும் வியாதியினால் தொந்தரவுபட்டுக்கொண்டும் ஈவு இரக்கமில்லாத நெஞ்சுள்ளவனாகவும் ஆவான். நம்முடைய குழந்தை படிக்கவும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம், ஆயுசுடன் செம்மையாய் இருந்தால் போதுமென்று, சரீரத்தைமாத்திரம் பாதுகாத்துவந்தாலோ, புத்தி எவ்வளவேனுமில்லாத மூடனாகவும், பிறரை நேசியாத கல்நெஞ்சனாகவும், தன்னுடைய தேகபலத்தைக்கொண்டு பிறரைத் துன்பப்படுத்திக் கொண்டும் இருப்பான். அப்படியன்றி நம்முடைய பிள்ளை நாலு பேருக்கு நல்லவனென்றும், பரோபகாரியென்றும் பேர் எடுத்தால் போதுமென்று நினைத்து, இருதயத்தைமாத்திரம் செம்மையாய்ப் பயிற்றுவித்தால், பெரியவனானபிறகு பாவத்தை வெறுத்துப் புண்ணியத்தையே நாடி, பிறருக்கு நன்மைசெய்யவேண்டுமென்கிற இச்சையுள்ளவனாக இருப்பான் ; ஆனால் இருந்த இடத்தைவிட்டு எழுந்திருக்கச் சக்தி இராது ; எதையும் செம்மையாகச் செய்து முடிக்க ஞானமும் இருக்கமாட்டாது. ஆகையாலே மூவித சுபாவத்தையும் கருத்துடன் ஞாபகத்தில் வைக்கவேண்டும். நோயற்றவனாகவும் பலமுள்ளவனாகவும் இருப்பதற்கு ஆரோக்கியமான உணவு, நல்ல காற்று, விளையாட்டு முதலான தேகப்பயிற்சிகள் முதலியவை அவசியம். எல்லா விஷயங்களையும் அறிந்து பரிசோதித்துப் பார்க்கும்பொருட்டு ஞானம் உண்டாகும்படி புத்தியைப் பண்படுத்தவேண்டும். கேவலம் தன்னுடைய சொந்தமான காரியத்தையே கருதிக்கொண்டிராமல், பிறருக்கும் இயன்றமட்டும் நன்மைசெய்யும் நற்குணம் உண்டாகும்படிக்கும் பழக்கிவைக்கவேண்டும். சுகசரீரமுள்ளவனாகவும், சூட்சுமபுத்திசாலியாகவும், பூததயை பச்சாத்தாபமுதலிய நற்குணங்களுள்ளவனாகவும் நம்முடைய குழந்தை இருக்கவேண்டுமென்று நாம் கருதுவோமேயானால், தேகம் புத்தி இருதயம் ஆகிய மூன்றையும் மேற்சொல்லியபடி பயிற்றுவித்து மேன்மேலும் அபிவிர்த்திசெய்விக்கவேண்டும்.

---



# DUTIES OF A VILLAGE SCHOOL-MASTER.

## கிராம உபாத்தியாயரின் கடமை.

---

### II. பல்விஷயப் பயிற்சி.

'கண்டது கற்கின் பண்டிதனாவான்' என்னும் பழமொழிக்கேற்க உபாத்தியாயர் சதா எதையாவது நூதன விஷயங்களை உணரும்படியான முயற்சியிலேயே இருக்கவேண்டும். உபாத்தியாயர் அறியாத விஷயம் ஒன்றுமிருக்கக்கூடாது. எதிலும் சிறிதேனும் தெரிந்திருத்தல் நன்று. பலவற்றை அரைகுறையாய்த் தெரிந்திருப்பதினும் ஒன்றை நன்றாயறிந்திருப்பது மேலென்னும் சாமானிய வசனம் உபாத்தியாயருக்குப் பொருந்தாது. பலவும் முற்றும் பயின்றிருப்பது யாவருக்கும் துர்லபம். ஆயினும் இயன்றமட்டும் முயன்று பாடுபடுவது உபாத்தியாயருக்குரிய கடமை. உபாத்தியாயர் அறிந்திருக்கவேண்டிய விஷயங்களாவன — தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் பாஷா ஞானமும், இலக்கண இலக்கிய கவித்துவ பாண்டித்தியமும், ராக தாள சங்கீதப் பயிற்சியும், பாரத பாகவதாதி புராணப் பழக்கமும், அடியார் சரித்திரங்களில் அப்பியாசமும், பயிர்த்தொழிற் பயிற்சியும், ஜீவவர்க்க விருக்ஷவர்க்க தாதுவர்க்கங்களின் குணகுணங்களும், தேகதத்துவ சுகாதாரபத்ததிகளும், வைத்தியமும், ஜோசியமும் ஆகிய பன்னூல் பயிற்சியுமாம்.

கிராம உபாத்தியாயர் போதனை முறைகளில்மட்டும் நன்கு பயின்றவராயிருத்தல் போதாது. உபாத்தியாயருக்கு லோகாநுபவ விஷயங்களும் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். தெரிந்தவரல்லராயின் அவருக்கு ஊரில் நல்ல மதிப்பிராது. முற்காலத்து உபாத்தியாயர்கள் பெரும்பாலும் பண்டிதர்களாக இருந்தனர். அவர்கள் எந்தநேரமும் ஏடும் எழுத்தாணியுமாகவே காலங்கழிப்பவர். கவிபாடவும் பரிசுபெறவுமட்டுமே கற்றிருந்தனரன்றி லௌகிகாநுபவத்திற் பயின்றவரன்று. அம்மாதிரிப் பிழைப்பு தற்கால நிலைமையில் தகாது. இப்போது ஆங்கிலம் (English) சற்றேனும் சிட், ஸ்டாண்ட் (Sit, Stand) முதலிய மொழிகளேனும் பயின்றிருத்தல் வேண்டும். (యథా రాజా తథా ప్రజా) 'யதா ராஜா ததா ப்ரஜா' என்றபடி 'அரசனெப்படியோ குடிகளுமப்படியே' இருக்கவேண்டுமாகையால் ஆங்கிலபாஷை கற்றிராத உபாத்தியாயர்கள் மதிக்கப்படுவதற்கு மார்க்கமில்லை. ஆதலால் ஒவ்வொரு கிராம பாடசாலை உபாத்தியாயரும் குறைந்தபட்சம் மேல்விலாசம் எழுதப்படிக்க, டெலக்கிராப்பு

வந்தால் அதன் அபிப்பிராயமின்னதென்று மொழியவாவது சற்று ஆங்கிலம் கற்றிருத்தல் அவசியம்.

கிராம உபாத்தியாயர்கள் தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ் ஆகிய மூன்று பாஷைகளிலும் நான்கு வகுப்புகளுக்கும் கல்வி பயிற்ற வல்லவர்களாக விருப்பது அவர்களுக்கு மேன்மையும் ஜீவனோபாயத்திற்குரிய சதுபாகயமுமாக விருக்கும், மூன்றில் இரண்டு பாஷைகளில் போதுமான பயிற்சி யிருந்தாலும் சாதகமே. பெரும்பாலும் நமது தென்னாட்டில் தெலுங்கைப் படிக்க விரும்புவோர்கள் பிராம்மணரும், கம்மாளருமேயாம். சிறுபான்மை இதர ஜாதியாரும் விரும்புவதுண்டு. ஆனால் தாய் தந்தையர் எந்தப் பாஷைக்குரியவர்களோ அதையே முந்தி பிள்ளைகளுக்குக் கற்பித்தல் நலம். இதைவிட்டு அநேகர் தமிழர்களாகவிருந்து வீட்டிலும் நாட்டிலும் தமிழ் பேசுவது சாதாரணமாயிருக்கப் பிள்ளைகளைமட்டும் தெலுங்கில் படிப்பிக்க முயலுகிறார்கள். தெலுங்கை முந்திப் படிப்பதினால் நாக்கு நன்றாய்த் திரும்புமென்றும், வாக்கு சொச்சமா யிருக்குமென்றும் பெற்றோர் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்வபிப்பிராயம் ஏற்றதன்று. அநேகம் பிள்ளைகள் தமிழைப் படித்துவரும் பாடசாலைகளில் இரண்டொருத்தர் தெலுங்கைக் கற்கப்புகுவது உபாத்தியாயர்களுக்கு வீண் சிரமமும், அப்படி கற்கும் பிள்ளைகளுக்கு கல்விக்குறைவும் நேரிடுகிறது. இப்படி விரும்பும் பெற்றோருக்கு அதிலுள்ள தீங்குகளை உபாத்தியாயர்கள் எடுத்துரைக்க வேண்டும்.

இதனோடு உபாத்தியாயர் சற்று விவகாரதசையும் பழகியிருந்தால் நல்ல ஜீவனத்திற்கிடம். அதாவது ஜனங்கள் அவசர நிமித்தமாய் கடன்பெறும் அண்டிமாண்டு, அடமானம், விற்பனை, அக்ரிமெண்டு முதலிய பத்திர ஷரத்துக்களையறிந்து அவற்றை எழுதக்கற்றிருத்தலால் சமயத்தில் ஏதோ சிறிது ஊதியம் அரை ஒன்று கிடைக்கும். இதைக் கருதியன்றோ கிராமாந்தரங்களில் கணக்கப்பிள்ளைகளே விசேஷமாக உபாத்தியாயர்களாக விருக்கக் காண்கிறோம். கணக்கப்பிள்ளைகளுக்கு இவ்வித விவகாரங்கள் தெரிந்திருப்பது சர்வசாதாரணம். அன்றியும் அவர்களில் பெரும்பாலும் கல்வி பயிலாதவரில்லை. மேலும் ரெவினியூசம்பந்தமான விஷயங்கள் சாதாரண குடிகளுக்குத் தெரியாதாகையால் கணக்கப்பிள்ளைகள் உபாத்தியாயர்களாக ஏற்படுவது அப்படிப்பட்டவர்களுக்கு அதிக உதவியாகும். உபாத்தியாயர்கள் கோர்ட்டு விவகாரங்களைத் தெரிந்தவராயின் குடிகளுக்கு அவர்களால் அதிக நன்மையுண்டு.



நிற்க, உபாத்தியாயர் வைத்தியராகவும் இருக்க நேருமாயின் சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்த தொக்கும். 'வாத்தியார் திரிந்து கெட்டார், வைத்தியர் உட்கார்ந்து கெட்டார்' என்னும் பழமொழிக்கு ஒருவரே யிலக்காகி இரு காரியங்களும் ஒருவராலேயே செய்ய நேருமாயின் பிள்ளைகளின் கல்வியபிவிருத்திக்கும், அவர்களின் சரீர சௌக்கியத்திற்கும் ஆதரவாகவிருக்கும். ஆனால், உபாத்தியாயர் இருவகையினும் நன்றாய்ப் பயின்றவராக விருக்க வேண்டுமேயன்றி (నా చేతి మాత్ర వైకుంఠ యాత్ర) 'என் கை மாத்திரை எமபுர யாத்திரை' என்னும் சாமானிய வசனத்திற்கிணங்க அரைகுறையாய் வயித்தியம் பயின்றவராயின் அவரால் அவ்வளவுக்கும் தீங்கே நேரிடும். பாடசாலைகளில் சுகாதாரவிஷயங்கள் சிறுகச் சிறுகக் கற்பிக்கப்படுமாயின் மிகவும் நன்மைக்கிடமுண்டு. இப்பாடம் கீழ்வகுப்புக்களில் பரிட்சைக் கிடந்தராவாயினும் சமயோசிதப்படி வாய்மொழியாக விஷய உணர்ச்சியை யுண்டுபண்ணுதலினால் பிற்காலத்திற் பிள்ளைகளுக்கு உபயோகமுண்டு.

கிராம பாடசாலை உபாத்தியாயர்கள் பெரும்பாலும் விவசாயத்திற் பழகினவராக விருப்பார்கள். அப்படிக்கிருத்தல் பயிர்த்தொழிலுக்குரிய நாட்டுப்பிள்ளைகளுக்கு நன்மைக்கிடமுண்டு. எப்படியெனின் ஏற்கெனவே பயிர்த்தொழிலில் பழகியிருக்கும் உபாத்தியாயர் அத்தொழில் விஷயமான உணர்ச்சியை அதுகாறும் பழகியிராத பிள்ளைகளுக்கு தான் பிள்ளைகளோடு சம்பாஷிக்கும்போது உணர்த்தாதிரார். கிராமாந்தரங்களில் விவசாய விஷயமான போதனை முக்கிய பிரயோசனகாரியமாதலால் கவர்ன்மெண்டாரும் இது சம்பந்தமாக நடத்தும் முயற்சிகள் அபரிமிதமாகவே யிருக்கின்றன. (Rural Schools) என்று ஆங்காங்கு விசேஷ பணச் செலவினால் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் நடப்பதும் விவசாயம் ஜனங்களுக்குச் சரிவரப் பயிற்றவேண்டுமென்னும் நோக்கமேயாம். சமஸ்த ஜீவப் பிராணிகளுக்கும் உண்டியை யுண்டுபண்ணத்தக்க பயிர்த்தொழில் நமது நாட்டில் மென்மேலும் விருத்தியடைய வேண்டியது அவசியமே.

சி. வே. சண்முக முதலியார்,
*Hd. Master, L. F. School, Tinnanur.*

---

## TIT-BITS.

### விநோதக் கூற்றுக்கள்.

ஒருவர் ஓர் ஊருக்குச் செல்ல சிறிது கட்டுச்சாதம் எடுத்துக் கொண்டு புறப்பட்டு நெடுந்தூரஞ் சென்றார். வழியில் அவரை வேறொருவர் சந்தித்து இருவரும் பேசிக்கொண்டே பிரயாணம் செய்து சுமார் 10-மணிக்கு ஓரிடத்தில் குளிர்ந்தநிழலும் குளமும் இருக்கக்கண்டு அங்குத் தங்கினர். பின்னர் அவ்விருவோரும் ஸ்நானஞ் செய்து ஜெபதபங்களை முடித்துக்கொள்ள ஆரம்பித்தனர். இரண்டாவான் தன்னிடத்து ஆகாரத்திற்கு ஒன்றும் ஆதரவின்மையால் முதலவன் வைத்திருந்த முடிப்பின் மீதிலேயே கவனமாயிருந்தான். முதலவன் தன் கருமங்களை முடிக்குமட்டும் இரண்டாவான் ஓயாது ஜெபம் செய்து கொண்டிருந்தனன். பின்பு முதலவன் ஓரிடத்திலமர்ந்து தன் தோட்கோப்பை யவிழ்த்து இலையை எடுத்தான். இதற்குள் இரண்டாவான் பரிந்து வந்து, நண்ப!

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று"

யென்னுங் குறளை எடுத்தோதி விருந்தினர் புறத்திருக்கத் தான் அவரோடு கூட இருந்துண்ணுமல் தானேயுண்ணுதல் சாவாமைக்குக் காரணமாகிய அமுதாயினும் அது விரும்பப்படுந் தன்மையுடையதன்று என்று விரித்துரைத்தான்.

அது கேட்ட முதல்வன், 'ஆ! ஆ! அப்படியா! நன்று சொன்னீர், இதனை முன்னரே அறியாமற் போனேன், என் நற்காலத்திற்கு இதனை இப்போது கூறி என்னைப் பழியினின்றும் நீக்கினீர்' என்று உபசார மொழிகள் பல சொல்லினன். ஆயினும் தன் தன்மையை முற்று மிருந்து அறியாது ஆத்திரத்தோடு தனக்கு அறிவு புகட்டிய அவனது அறியாமையை மனத்திலெண்ணி அங்கிருந்ததோர் புளியிலையை எடுத்துத் தண்ணீரில் அலம்பிவைத்து ஒரு சோற்றுப் பருக்கையை அதன்மீது வைத்து, "ஐயா! வாரும்; வந்து உட்காரும்! உண்டுகளிகூறும்" என்றுசொல்லி,

"தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்."

எனத் தானும் இக்குறளை மேற்கோள் கூட்டினன். அது கேட்ட இரண்டாவான் "ஓ! ஓ! இஃதேது கிணறு வெட்டப் பூதம் புறப்



பட்டது! கொல்லத் தெருவில் ஊசிவிற்க வந்தவாறு, வாசித்துள்ள இவனிடத்து நாம் வாதுசெய்து வகையற்று அகப்பட்டுக்கொண்டோம் என்று வெட்கித் தன் கருவ பங்கத்தைப் புறத்தேகாட்டாது நகைத்தான்.

அவனது அறியாமையைக் கண்ட முதலவன் மனமிரங்கி அவனைத் தன்னோடு அமரச்செய்து உண்பித்தனன்.

---

## NEWS AND NOTES.

### சமாசாரக் கொத்து.

தென்னாட்டில் பிரபல க்ஷேத்திரமாகிய மதுரைமாநகரத்தில் பாலவநத்தம் ஜமீந்தாரர் ம-ா-ா-ஸ்ரீ, பாண்டித்துரைத் தேவரவர்கள் நன்முயற்சியாலும், பொருட் சகாயத்தாலும் சில வருடங்களுக்கு முன் ஸ்தாபித்த செந்தமிழ்ச் சங்கம் இதுகாறும் இலக்கிய இலக்கண தேச சரித்திரவாராய்ச்சியில் மனஞ் செலுத்தியிருந்து இப்போது நம் நாட்டு இளைஞர்க்கு இன்றியமையாது திருக்கவேண்டிய பிரதம கல்வி போதிக்குமுறையைப்பற்றியும் ஆராய்ச்சி புரிந்து தக்கதோர் மார்க்கங் கண்டுபிடிக்க வேண்டு மென்று முற்பட்டிருப்பதைக் கேட்டு அகமகிழ்கின்றோம். முற்காலத்தில் தலை, இடை, கடையாகிய முச்சங்கங்களில் பல மேதாவிகளிருந்து பெருநூலியற்றியும், போற்றியும், ஆராய்ச்சி புரிந்தும் வந்தன ரென்பதுண்மை. இக்காலத்தில் எஞ்சி நின்ற சிலநூல்களையும் கற்கவும், ஆராய்ச்சி புரியவும் உதவியாயிருக்கும் தேசபாஷையபிமானமும், கற்கவேண்டுமென்ற ஆர்வமும் ஒழிந்து வருகின்றபோதாயினும் முற்படாதிருப்பது நலமன்றன்றே. துரைத்தனத்தார் சகாயம் பெற்று நடந்து வரும் பிரதம வித்தியாபாடசாலைகளில் போதிக்கப்படுமுறை சிறந்த முறையன்றென்று அவர்களே அனுபவத்திற் கண்டுள்ளாராதலின் சிறந்த முறையொன்றைத் தெரிந்து சொல்வது தெரிந்தோர் கடனாகும். அக்கடமையைமதுரைச் சங்கத்தினர் பூண்டு தாம் முன்வந்திருப்பதால் அனுபவம் நிறைந்த பெரியோர்களும், பிரதம வித்தியாபத்ததி கைவந்த உபாத்தியாயர்களும் தக்கவாறு யோசனைசெய்து நமக்காயினும், சங்கத்தின் தலைவர்க்காயினும் தெரிவித்தால் நலமாயிருக்கும்.

* * *

பஞ்சாப் மாகாணத்தில் உள்ள உயர்தரக் கலாசாலை ஒன்றில் பரிசளிக்கும் மகோற்சவகாலத்தில் அப்பாடசாலையின் தலைமை

யுபாத்தியாயராகிய மகம்மதியர் ஒருவர் பாடசாலையின் வாயில்முகப்பில் "நீங்கள் வாங்கும் ஒவ்வொரு வஸ்துவிலும் உங்கள் தாய்நாட்டு ஞாபகமிருக்கவேண்டும்" என்று எழுதி ஒட்டிவித்துப்பிள்ளைகளெல்லாம் தேசாபிமானம் பூண்டிருக்க வேண்டுமென்று வற்புறுத்தினராம். இதனால் பிள்ளைகள் உள்ளத்தில் நாட்டுச்செழுமைக்காதாரமான விஷயங்களை யடிநாளையிலேயே பதித்துவரவேண்டுமென்றேற்படுகின்றதன்றோ.

***

உயர்தரப் படிப்பு ஜனங்களெல்லோருக்கும் அநாவசியம், லௌகீகத்திற்குறிய படிப்பு இருத்தலே போதும், என்று எண்ணமேலிட்டுவரும் இக்காலத்தில் பங்காளராஜதானியில் அரசாட்சியினர் சகாயமில்லாமலே ஒரு பெரிய சர்வகலாசங்கமமைத்து அதன்கீழ் உயர்தரக் கலாசாலை யொன்று ஸ்தாபித்து அதன் மூலமாய் நம் நாட்டுப் பொருளாதாரச் செழுமைக்கு வேண்டிய தொழிற் படிப்பு, சாத்திரப்படிப்பு, ரசாயனமுறை முதலியவைகளைப் பயிற்றப் போவதாய்க் கேட்டு ஆனந்த மடைகின்றோம். வறிதே இலக்கிய இலக்கணவாராய்ச்சி மாத்திரம் இருப்பின் பிரயோஜனமாகாதென்றும், அத்துடன் பொருள்வருவாயை விருத்தி படுத்தற்கு வேண்டிய ஆற்றலும் அமைந்திருப்பது அவசியமென்றும் நம் நாட்டுப் பிரமுகர் யாவரும் தெளிந்து தம்மக்கள் இவ்விரண்டிலும் தேறும்படி முயல்வதே ஏற்றமுறையாம்.

---

## பத்திராதிபர் விண்ணப்பம்.

இப் பத்திரிகையோடு முதலாண்டு முடிவுறுகின்றது. இரண்டாம் ஆண்டின் முதற் சஞ்சிகை இம்மாத இறுதியிலேயே வெளிவரும் அன்றி இனி மாதந்தோறும் 10 தேதிக்குள் அந்தமாதத்திய பத்திரிகை வெளியாமாறு தக்க முயற்சி செய்திருக்கின்றோம். இதுகாறும் கையொப்பஞ் செய்துபத்திரிகை ஆதரித்து வந்த நண்பர் இனியும் சோர்வின்றிச் செய்வதன்றி தத்தம் நண்பர்களையும் தூண்டிக்கையொப்ப நேயராகச்செய்து இதனை விருத்திக்குக் கொண்டுவர வேண்டுகின்றோம். மறு சஞ்சிகை வி. பி. மூலமாய் அனுப்பப்படும். ஆதலால் அதனை நண்பர்கள் மறுக்காமல் ஏற்றுக்கொள்ள விரும்புகின்றோம்.

பத்திராதிபர்.

# நல்லாசிரியன்

1906௵ ஜூன்௴ முதல் 1907௵ மே௴ வரை.

## இரண்டாம் சம்புடம்.

161430.

பத்திராதிபர் — கா. நமச்சிவாய முதலியார்.

வெளியிடுவோர்
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்.
1907.
விலை 1 ரூபாய்.

PRINTED AT THE "CAXTON PRESS," MADRAS. — 1907.

# CONTENTS.

# பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | அணில் ... ... ... ... ... ... ... | 33 |
| 2. | இந்துதேசத்து விநோதக்காட்சி ... ... ... ... | 211 |
| 3. | இரண்டாம் வருடம் ... ... ... ... ... ... | 1 |
| 4. | இரத்தம் தேகமெங்கும் எவ்விதமாய் பரவுகின்றது ... ... | 251 |
| 5. | இவ்வுலகத்திற்குமேல் என்ன இருக்கிறது? ... ... ... | 217 |
| 6. | உபாத்தியாயரின் இராஜ சின்னம் ... ... ... ... | 234 |
| 7. | உருவங்களைப்பற்றிய பாடங்கள் ... ... ... ... | 121 |
| 8. | எண்முதல் விளக்கம் ... 41, 89, 113, 125, 160, | 178 |
| 9. | எறும்பு ... ... ... ... ... ... ... | 100 |
| 10. | எலிமெண்டரி பாடசாலையின் கிராண்டு ... ... ... | 189 |
| 11. | எலிமெண்டரி பாடசாலைகளுக்குரிய சட்டங்கள் ... ... | 205 |
| 12. | ஐவகை உபாத்தியாயர்கள் ... ... ... ... ... | 195 |
| 13. | ஒருவிண்ணப்பம் ... ... ... ... ... ... | 265 |
| 14. | ஒலியறி கருவி ... ... ... ... ... ... | 49 |
| 15. | கங்காரு ... ... ... ... ... ... ... | 185 |
| 16. | கடவுள் ஒருவர் உண்டென்பது ... ... ... ... | 63 |
| 17. | கட்டாயமான கல்வி அவசியம் ... ... ... 143, | 151 |
| 18. | கர்னல் ஆல்காட்துரையின் மரணமும் தகனமும் .. ... | 179 |
| 19. | கல்வியிலாகா விதிகள் ... ... ... ... ... | 17 |
| 20. | களிமண் வேலை ... ... ... ... ... ... | 8 |
| 21. | கழுகு ... ... ... ... ... ... ... | 209 |
| 22. | கிராம உபாத்தியாயரின் கடமை ... ... 15, 109, | 153 |
| 23. | கிண்டர்கார்டன் கட்டையடுக்குதல் ... ... ... ... | 226 |
| 24. | கிராண்டு ... ... ... ... ... ... ... | 119 |
| 25. | கிண்டர்கார்டன் ... ... ... ... ... ... | 266 |
| 26. | குளிர்ச்சி கெடுதிபயப்பது எப்போது? ... ... ... | 273 |
| 27. | கோயமுத்தூர் போதனாப்பியாச பாடசாலைகள் ... ... | 97 |
| 28. | சம்சாரம் ... ... ... ... ... 47, 96, 191, | 239 |
| 29. | சிறுவர் கல்விப்பயிற்சி ... ... ... ... ... | 3 |
| 30. | செல்வப் பொருளிலுங் கல்விப் பொருளே சிறந்தது ... ... | 31 |
| 31. | செல்வச் சிறுவர்சிங்காரத் தோட்டம் ... 25, 193, | 241 |
| 32. | சென்னை வித்தையிலாகா திரவியசகாய விதிகள் ... ... | 22 |

33. சென்னை இராஜாங்க வித்தியாசங்க விபவம் ... ... ... 157
34. சென்னை கல்வி ஆலோசனை சபை ... ... ... 145, 169
35. சென்னை வித்யாஇலாகா திரவியசகாயச் சட்டம் ... ... 36
36. சென்னை கல்விப்பொருட் காட்சிச் சபை ... ... 256, 276
37. தண்ணீர் ஒரு திரவபதார்த்தம் ... ... ... ... 284
38. திமிங்கிலம் ... ... ... ... ... ... ... 81
39. தூசியும் நோயும் ... ... ... ... ... ... 92
40. தேகாப்பியாசம் ... ... ... ... ... ... 244
41. நாணயங்கள் ... ... ... ... ... ... 67
42. பரமானந்த குருகதை ... ... ... ... ... 84
43. பட்டாணி வேலை ... ... ... ... ... ... 197
44. பனிக்கட்டி ... ... ... ... ... ... ... 261
45. பாய் முடைதல் ... ... ... ... ... ... 73
46. பால் ... ... ... ... ... ... ... 163, 178
47. பூகோள சாஸ்திரம் ... ... ... ... ... ... 270
48. பெண் கல்வி ... ... ... ... ... 130, 280
49. மரத்தின் பழம் ஏன் கீழே விழுகிறது? ... ... ... 137
50. யார் பெரியவன்? ... ... ... ... ... ... 268
51. ரகர, றகரபேதங்கள் ... ... ... ... ... 186
52. லண்டன் நகரத்தில் வைத்திருக்கும் இந்துதேசத்து விநோத காட்சிச் சாலை 57
53. வாக்கியம் ... ... ... ... ... ... ... 183
54. வாந்திபேதிக் காலத்தில் அனுசரிக்கவேண்டிய பரிகாரமுறைகள் 45
55. விநோதக் கூற்றுக்கள் ... 55, 123, 181, 236, 263, 286
56. ஸ்பென்ஸ் பருத்தி ... ... ... ... ... ... 116


Tm 211/m106
Nos. 1-2

OCT 1906
MADRAS.
161451
600 008

# நல்லாசிரியன்.

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

| வயது 2. | 1906 ௵ ஜூன்௴ | மாதம் 1. |
|---|---|---|


## OUR SECOND YEAR.
## இரண்டாம் வருடம்.

நமது நல்லாசிரியற்கு இம்மாதம் இரண்டாம் வருடம் பிறந்தது. முதலாண்டில் நமது நல்லாசிரியன், தமிழ்நாட்டிலுள்ள பாடசாலை யுபாத்தியாயர்கள், வித்தியாதிகாரிகள், தமிழ்ப் புலவர்கள் முதலிய பல்லாயிரம் அறிஞரைத் தானேசென்று தரிசித்தும் சுமார் ஐந்நூற்று வரே அவரை யாதரிக்க வெளிவந்தனர். இந்நல்லாசிரியர், பிரைமரி பாடசாலைகளுக்கு வேண்டிய, செல்வச்சிறுவர் சிங்காரத் தோட்டம், பொருட்பாடம், விஷயவாராய்ச்சி, வித்தியாவிதிகள், அவ்வப்பாடங் களைச் செவ்வனே நடத்துமுறைகள், கிராம உபாத்தியர்களின் கடமைகள், மனோதத்துவத்தை விருத்திசெய்து வியப்பையுண்டாக் கும் அரிய விநோதக் கூற்றுக்கள் முதலியபலவகைய விஷயங்களை நன்குணர்த்துபவர் என்பது, நம் தமிழ்நாட்டு உபாத்தியாயர்கள் அனைவரும், வித்தியாதிகாரிகளும் உணர்ந்தும் அவ்வாசிரியரை பாதுகாக்கப் பரிந்து வாராமை பரிதபிக்கத் தக்கதே.

சிலர், இந்நல்லாசிரியர் நெடுங்காலம் நமக்கு விஷயங்களை யுணர்த்த வல்லரோ என்னும் சந்தேக முடையவரா யிருக்கின்றனர் போலும்? இவ்வாசிரியர் எவ்வாற்றானுந் தடைபட்டுநிற்கார். அன்றி இவருக்குச் சமர்ப்பிக்கும் சம்பளம் வருடத்திற்கு ஒரே ரூபாய் ஆகை லால் இவரைப் பரிந்து பாது காப்போர் எவ்வாற்றானும் நஷ்ட மடையார் என்பது அவர்கட்கே நன்கு விளங்கும்.

நம் நல்லாசிரியர் சென்ற வருடத்தில் சென்று கண்டுவந்தவர்களில் நூற்றுக்கொருவர் அவரை யாதரிக்க முன்வந்திருப்பினும் ஓராயிரத்திற்குக் குறைவிருந்திராது. இருநூற்றுக்கு ஒருவரும் முன் வந்திலரென்று வருந்துகின்றனர். எனினும், தம் முயற்சியிற் சிறிதுங்குன்றாவண்ணம் இரண்டாம் வருடத்தொடக்கத்திலும் தமிழ்நாட்டுக் கல்விமான்களனைவரையுங் கண்டு தம் குறையை விண்ணப்பிக்க வெளிவந்திருக்கின்றனர்.

இவ்வருடமேனும் அவரை புறக்கணியாது ஆதரிப்பது தமிழரானார் அனைவருக்குங் கடமைப்பாடன்றோ?

இனி, நம் நல்லாசிரியர், தம்மையாதரித்த டிஸ்திரிக்ட் போர்டார், முனிசிபாலிடியார், வித்தியாதிகாரிகள், மானேஜர்கள், உபாத்தியாயர்கள், விஷயதானஞ் செய்த மேதாவிகள், சகோதர பத்திராதிபர்கள் முதலிய கனவான்களுக்கும், நண்பர்களுக்கும் தமது மனமுவந்த வந்தனம் புரிய வுரிமைபுற்றிருக்கின்றனர் என்பதைக் களிப்புடன் அறிவிக்கின்றனர்.

---

### விஷயதானஞ் செய்தோர்.

1. ம-ா-ஸ்ரீ. திருமணம் செல்வகேசவராய முதலியார், எம். ஏ., பச்சையப்பன் கலாசாலை, சென்னை.
2. ,, க. கோபால ஐயங்கார், துரைத்தன போதனாப்பியாச பாடசாலை, தஞ்சை.
3. ,, சி. வே. சண்முக முதலியார், தலைமை யுபாத்தியாயர், போர்ட்பாடசாலை, தின்னனூர்.
4. ,, பு. வே. சபாபதி முதலியார், ஏஜெண்டு, C. C. N. & Sons, சென்னை.
5. ,, சி. கோவிந்தசாமி முதலியார்.
6. ,, மதிவனப்புச் சேய்.

### மாற்றுப் பத்திரிகைகள்.

1. செந்தமிழ், மதுரை.
2. விவசாய தீபிகை, சைதாப்பேட்டை.
3. பூலோக வியாசன், சென்னை.
4. விஜயவிகடன், சென்னை.

பத்திராதிபர்.



## EDUCATION OF CHILDREN.

## சிறுவர் கல்விப்பயிற்சி.

(தொடர்ச்சி.)

இவ்வுலகத்தில் கடவுள் சிருஷ்டித்திருக்கிற ஜீவஜந்துக்களையும் பயிர் பூண்டு செடிகளையும் பொன் வெள்ளி முதலிய உலோகங்களையும் பற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்வதிலேயே ப்ரொபெல் மிகுந்த சந்தோஷமுள்ளவராய் இருந்தாரென முன் சொல்லியிருக்கிறோமே. அவ்வண்ணமே சிறுவர்களையும் சிருஷ்டிப் பொருள்களின் மத்தியிலேயே வளர்த்துவரவேண்டுமென்பதும், ஜீவ ஜந்துக்களும் பூஞ்செடிகளும் சிறுபிள்ளைகள் இருக்குமிடத்தைச் சுற்றிலும் இருக்கவேண்டுமென்பதும் ப்ரொபெலினுடைய கொள்கை. செடிகொடிகளிடத்திலும் ஆடுமாடு முதலிய மிருகங்களிடத்திலும் பாலர்களுக்கு இயற்கையாகவே விருப்பமுண்டு. அந்த மிருகங்களும் குழந்தைகளிடத்தில் பிரீதியுடையவைகளாய் இருக்கின்றன. புஷ்பங்களைக் கண்டாலும் பிள்ளைகளுக்கு ஒருவிதமான ஆனந்தமுண்டாகிறது. பூஞ்செண்டுகளையும் மாலைகளையும் வைத்துக்கொண்டு பாலகர் விளையாடுவதைப் பார்க்கவில்லையா? ஜந்துக்களிடத்திலும் புஷ்பங்களிடத்திலும் குழந்தைகளுக்குள்ள இந்தச் சுபாவமான விருப்பத்தை மேன்மேலும் நாம் விருத்திசெய்யவேண்டும். பூனையைத் தடவிக்கொடுக்கவும், நாயுடன் கூச்சமின்றிப் பழகவும், கிளியுடன் களிப்பாக விளையாடவும் சிறு குழந்தைக்கும் கற்றுக்கொடுக்கலாம். பள்ளிக்கூடத்துக்கு அருகாமையில் பூஞ்செடிகள் அமைந்து சாதுவான ஜந்துக்கள் வாசஞ்செய்யக்கூடிய தோட்டம் இருந்தால் பிள்ளைகள்கள் விளையாட அனுகூலமாயிருக்கும். தோட்டம் இல்லாவிடின் மண்தொட்டிகளிலாவது புஷ்பச்செடிகளை வைத்து வளர்க்கலாம். அந்த மட்கலங்களில் வளர்ந்த செடிகளைக்கொண்டு வந்து நடாமல், பிள்ளைகள் தங்கள் கையினாலேயே விதை விதைத்துத் தண்ணீர்வார்த்துப் பாதுகாத்துவரச் செய்தால், அவைகளிடத்தில் சிறுவர்களுக்கு அதிக ஆசை உண்டாகும். ஒரு கூட்டில் ஒரு கிளியைவைத்து அன்றாடம் கூட்டைச் சுத்திசெய்து கிளிக்கு நல்ல தண்ணீரும் ஆகாரமும் கொடுத்துவரும்படிச் சிறுவர்களைப் பழக்கலாம். அன்றியும் பள்ளிக்கூடத்துக்குச் சமீபத்தில் உள்ள சிறிய பட்சிகளுக்கு இரைகொடுக்கும்படி குழந்தைகளுக்கு வாடிக்கைபண்ணிவைத்தால் பழகினபின் அந்தப் பட்சிகளே சரியானகாலத்தில் வந்து ஆகாரத்தை வாங்கிக்கொண்டுபோய் விடும். பள்ளிக்கூடத்தில் பூஞ்செடிகள் வைக்கச் சரிப்படாவிட்

டால் பறித்த புஷ்பங்களையாவது சம்பாதித்துக்கொள்ளவேண்டும்; புஷ்பங்கள் ஏதாவது கிடைத்தால் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டு வரும்படி சிறுவர்களுக்கும் திட்டஞ்செய்யலாம். இம்மாதிரியான உபாயங்களைக்கொண்டு பற்பல ஜந்துக்களும், புற்பூண்டு செடிகொடிகளும், பொன் வெள்ளி இரும்பு முதலிய உலோகங்ளுகம் பிள்ளைகளுக்கு அடிக்கடி கண்ணில் தென்படும்படி செய்தால், உலகத்தில் கடவுள் சிருஷ்டித்திருக்கிற பதார்த்தங்களினிடத்தில் ஆசை பிறக்கும். பொருள்களைக் கண்ணால் பார்த்தலே பெரிதன்றாதலால் ஒவ்வொருநாள் ஒவ்வொரு பொருளை விஷயமாக வைத்துக்கொண்டு, அதனுடைய உற்பத்தியையும் உபயோகங்களையும் பற்றி உபாத்தியாயர் சொல்லிக்கொண்டுவரவேண்டும். எந்தெந்தப் பிள்ளைக்கு எந்தெந்தப் பொருளினிடத்தில் நோக்கம் அதிகமாய் இருக்கிறதோ, அந்தந்தப் பொருளைக் கொண்டுவரச்சொல்லி அதைப் பற்றிச் சொல்லவேண்டியதையும் சொல்லி, இப்படிச் சேர்க்கப்படுக்கிற பொருள்களைப் பத்திரமாய்க் காப்பாற்றி, பள்ளிக்கூடத்தில் ஒரு விநோதசாலைபோல உண்டாக்கினால், சிரமப்பட்டுச் சம்பாதித்த ஞானத்துடன் மற்றுமுள்ள பொருள்களையும்பற்றித் தாங்களே தெரிந்துகொள்ளவேண்டும் என்கிற அபேக்ஷையும் சிறுவர்களுக்கு உண்டாகும்.

புத்தகங்களைப் பார்த்துக் கண்ணினாலே அறிகிற ஞானத்தை விடக் காதினாலே கேட்டு அறிகிற ஞானம் சிறந்தது; ஏனென்றால் முன்னதைப்பார்க்கிலும் பின்னது நீடித்து நிற்கக்கூடியது. இரண்டு கண்ணும் தெரியாத குருடர்களானாலும் கேள்வியினாலேயே மிகுந்த ஞானம் சம்பாதித்துச் சிலர் பிரசித்தி அடைகிறார்கள்.

"செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை."

என்றும் சொல்லியிருக்கிறதல்லவா? ஆகையாலே கண்மாத்திரமல்ல, காதும் ஒரு ஞானக்கருவியென்பதற்குச் சந்தேகம் இல்லை. இந்த நியாயம் சிறுவர்களுக்கும் உரியதானதுபற்றி, புஸ்தகப்பாடங்கள் படிப்பிப்பதோடுகூட உபாத்தியாயர் வாயினாலும் கதைகள் சொல்லிக்கொண்டுவரவேண்டும். கதையென்றால் கட்டுக்கதையேயென்று அர்த்தமல்ல; வாஸ்தவமான விஷயங்களின் வரலாறும் கதைதான். மாட்சிமைதங்கிய பெரியோர்களையும் அவர்களுடைய மேன்மையான செய்கைகளையும் பற்றிக் கேட்கும்போது நம்முடைய மனது உருகி, நாமும் நீதிவழியில் நின்று கூடியமட்டும் நல்லபேர் எடுக்கவேண்டுமெனத் தோன்றுகிறதல்லவா? நமக்கே அப்படியிருக்கும்



போது பிள்ளைகளுக்கு இன்னும் எவ்வளவு இன்பமாயிருக்கும் என்பதை ஊகித்தறியலாம். ஆனதுபற்றிச் சிறுவர்களைச் சீர்திருத்துவதில் உபாத்தியாயருக்கு உற்ற உபாயங்களுள் கதைசொல்லுவதும் ஒன்று. கதையினால் என்ன உபயோகம், இந்தண்டை வாயினாலே சொல்லிக்கொண்டிருக்க அந்தண்டை காதினாலே வாங்கிவிட்டுவிடுவதுதானே என்கிறீர்களோ? அப்படியன்று; கதையினால் குழந்தைகளினுடைய இருதயத்தை வென்று சந்தோஷத்தையும் உண்டுபண்ணலாம், விசனத்தையும் உண்டுபண்ணலாம்; சிறப்பான காரியங்களை மெச்சிக்கொண்டாடவும் இழிவான செய்கைகளை வெறுக்கவும் செய்யலாம்; அவர்களுக்குத் தெரியாத சூட்சுமங்களைத் தெரிவிக்கலாம்; கண்ணுக்கெட்டாத தேசங்களில் மனதைச் செலுத்தி அங்குள்ளவைகளையும் மனக்கண்ணினால் அறியும்படி செய்யலாம்; முற்காலத்தில் வாழ்ந்திருந்த பெரியோர்களை மனதினால் சிநேகிக்கும்படி செய்யலாம்; எக்காலத்திலும் நன்மையை நாடித் தீமையை விலக்கும்படி செய்யலாம்; கதையினால் மனத்துக்கு ஒருவிதமான ஆநந்தத்தையும் உண்டுபண்ணலாம்.

கதை சொல்லுவது அத்தனை எளிதான காரியமல்ல; உபாத்தியாயர்கள் கதைசொல்லக் கற்றுகொள்ளவேண்டும். சிறுவர்களிடத்தில் தாரதம்மியமின்றி எல்லாவற்றையும் சொல்லிவிடக்கூடாது; உபாத்தியாயர் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது என்னவென்றால், தானே ஒரு குழந்தையாய் இருந்தால் என்ன ஸ்திதியிலிருக்கக்கூடும், என்னென்பதை அறியக்கூடும், எதெதில் ருசி இருக்கும் என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். எப்படிப்பட்ட சங்கதியைக் குழந்தைகள் அறியக்கூடுமோ அப்படிப்பட்டதைமாத்திரமே அவர்களிடத்தில் சொல்லவேண்டும். ஒருவரைப்பற்றிக் கதைசொல்லும்போது அவருடைய பெயரையும், ஊரையும், பிறப்பையும், அவர் உடைதரிக்கிற மாதிரியையும், அவர் படிக்கிற நோக்கத்தையும், அவர் புஸ்தகங்களைப் பத்திரமாய் வைத்துக்கொள்ளுகிற ஒழுங்கையும், அவர் புசித்து நித்திரைசெய்யும் கிரமத்தையும் விவரமாய்ச் சொல்லலாம். இவையெல்லாம் சிறுவர்களுக்குச் செம்மையாக விளங்குமாகையால், கேட்கக் கேட்க இன்பமாய் இருக்கும். கதைசொல்லுவதில் கெட்டசொற்களைச் சொல்லாமல் தெளிவான நல்ல சொற்களையே உபயோகிக்கவேண்டும்.

புதிது புதிதாகவே கதைசொல்லவேண்டுமென்பதில்லை. கேட்ட கதையையே கேட்பதில் சிறுவர்களுக்கு உள்ள சந்தோஷம் புதிய கதையில் இராது; ஆனால் ஒருதரம் சொன்னதை மறுபடியும்

சொல்லும்போது, முன்சொன்னதற்கும் பின்சொல்லுவதற்கும் வேற்றுமை தோன்றாதவிதமாய்ச் சொல்லவேண்டும். ஒருதரம் வெள்ளைக் குதிரையென்றும் ஒருதரம் கறுப்புக் குதிரையென்றும் சொன்னால், பிள்ளைகளுக்கு இரண்டினும் பிடிப்பில்லாமல் எல்லாம் பொய்யென்று தோன்றிவிடும்.

ஏழைப் பிள்ளைகளைக்குறித்துக் கதைசொல்லினால், அதைக் கேட்டு நல்லஸ்திதியிலுள்ள பிள்ளைகள், நம்மைப்போல் எல்லாருமே சௌக்கியமாக வாழ்ந்துகொண்டிருக்கவில்லை, உடம்பை ஒடித்து வேலைசெய்தாலொழியச் சிலருக்கு உணவுகிடைப்பது வருத்தம். கடவுளினுடைய கிருபையால் நாம் பாக்கியம் பெற்றிருக்குமளவில் ஏழைகளிடத்தில் இரக்கம்வைத்துக் கூடியவரையில் உபகாரம்செய்ய வேண்டுமென்று தெரிந்துகொண்டு, பணம் காசுகொடுத்து உபகரிக்கத் தங்களால் ஆகாவிட்டாலும், தாங்கள் புசிக்கிற பழத்தில் கொஞ்சமும், தாங்கள் உடுத்துப் பழகின உடையும், தாங்கள் படிக்கிற புத்தகத்தைச் சற்று இரவலும் கொடுத்து உதவுவார்கள்.

மந்த சுபாவமும் சோம்பேறித்தனமும் உள்ள பிள்ளைகளுக்கும் கதை கேட்பதினால் சுறுசுறுப்பாய் இருக்கவேண்டும் எனத் தோன்றும். ஒரு வாரத்தின் ஆரம்பத்திலே ஒரு கதையைச் சொல்லிவிட்டால் அந்த வாரமுழுவதும் சந்தர்ப்பங்கள் நேரும்போதெல்லாம் அந்தக் கதையைச் சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கலாம். எப்படியென்றால் தேனீயைப்பற்றின கதையைச் சொல்லுகிறதாக வைத்துக்கொள்ளுவோம். பிறகு பாடம் நடத்துங் காலத்தில் சுறுசுறுப்புள்ள பிள்ளைகளுக்குச் சிரமப்பட்டு தேனைச் சேர்த்துவைக்கிற பெண் தேனீக்களென்றும், சோம்பேறிப் பிள்ளைகளுக்கு வேலை செய்யாதிருக்கிற ஆண் தேனீக்களென்றும் பேர்வைக்கலாம்; இப்படி பேர் வைத்தால் சோம்பேறிகளுக்கு முயற்சியில் ஊக்கம் உண்டாகும். பிள்ளைகள் விளையாடும்போது தேனீக்கள் அம்பென்று இசைபோட்டுக்கொண்டு தேனைப் பானம்பண்ணுகிற பாவனையாக விளையாடும்படி செய்யலாம். தேனீக்களைப்போலத் தங்கள் தாய் தகப்பன்மார்கள் பாடுபட்டுச் சம்பாதித்துப்போட, யாதொரு சிந்தையும் இல்லாமல், தாங்கள் உடுத்துத் தின்று களிப்பாய்த் திரிந்துகொண்டிருக்கிற சங்கதியையும் உறைக்கும்படி செய்யலாம். அன்றியும் தாங்கள் புசிக்கிற உணவு இன்னாருடைய பிரயாசத்தால் உற்பத்தியாகிறதென்றும் உடுக்கிறதுணி இன்னாராலே நெய்யப்படுகிறதென்றும், குடியிருக்கிற வீடு இன்ன வேலைக்காரராலே கட்டப்



பட்டதென்றும் சொல்லலாம். விளையாடும்போதும் ஒரு பிள்ளை குடியானவனைப்போலவும், ஒரு பிள்ளை கைக்கோளனைப்போலவும், ஒரு பிள்ளை தச்சனைப்போலவும், பாவனைபண்ணிக்கொண்டு விளையாடும்படி செய்யலாம். இதுவும் தவிர அந்தந்த வேலைக்காரர்கள் வேலைசெய்கிற இடத்திற்குக் குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய்க் காட்டிப் பார்க்கும்படி செய்வது மிகவும் நல்லது. குழந்தைகளுக்குப் பேசுவதில் இஷ்டமுண்டாகையால் அவர்களைப் பேசச்சொல்லிக் கேட்கவேண்டும். கேட்டிருக்கிற கதைகளை அவர்களையே சொல்லச்சொல்லலாம். இப்படிச் செய்தால் புதிய வார்த்தைகள் கற்றுக்கொள்ளுவதுமல்லாமல், மனதில் தோன்றும் அபிப்பிராயங்களை வாயினால் வெளியிடும் சக்தியும் உண்டாகும்.

குழந்தைகளுக்கு ஏற்றபடி கதைசொல்லும்பொருட்டு நல்லதாக அநேகம் கதைகளைப் பொறுக்கிச் சித்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். புஸ்தகங்களில் இருந்து சிலவற்றை எடுக்கலாம்; நாம் எங்கேயாவது நல்ல விஷயமொன்று கேட்டால் அதைக் குறித்துக்கொள்ளவேண்டும், நம்முடைய சொந்த அனுபவத்திலேயே நேர்ந்திருக்கிற சங்கதிகள் குழந்தைகளுக்குத் தக்க கதைகளாயிருக்கும். நம்முடைய பாலியக் கதைகள் அவர்களுக்குப் பின்னையும் உற்சாகத்தைக் கொடுக்கும். நம்முடைய வாய்ச்சொல்லினால் குழந்தைகளுக்கு எவ்வளவு இன்பம் உண்டாக்கக்கூடுமோ அவ்வளவு புஸ்தகத்திலிருந்து ஒரு கதையைப் படித்துக் காட்டுவதனால் உண்டாகாது. ஆனதுபற்றி எப்போதும் கதையை நம்முடைய சொந்த வார்த்தைகளினாலேயே சொல்லவேண்டும். கதை பெரிதாயிருந்தால் இரண்டு மூன்று பாகமாகப் பிரித்துச்சொல்லலாம். ஒரு பாகத்தைச் சொல்லி நிறுத்தும்போது அப்படி நிறுத்துகிற இடமானது சாரமான சந்தர்ப்பமாய் இருந்தால் மறுநாள் அக்கதையின் மிச்சத்தைக் கேட்பதற்குச் சிறுவர்கள் ஆவலுடன் காத்திருப்பார்கள்.

பிள்ளைகளினுடைய வயதுக்குத் தக்கபடி கதை சொல்லவேண்டும். அதிபாலியமான குழந்தைகளுக்குத் தெரியும்படி சொல்லுவது மிகவும் வருத்தமானகாரியம். குழந்தைகள் படிக்கிற பாட்டுகளையும் கேட்கிற கதைகளையும் உதாகரித்துக் காட்டுவதற்குப் படங்கள் இருந்தால் நல்லது; பலகையில் படம் எழுதுவதற்கு உபாத்தியாயருக்காவது தெரிந்திருக்கவேண்டும். கதை முடிந்த பிறகு படத்தைக் காட்டவேண்டுமேயல்லது முன்னதாகக் காட்டக்கூடாது.

கதை சொல்லும்போது வாயினாலே பேசுவதல்லாமல் கை கால் கண் முதலியவற்றாலும் சமிக்கைகள் காட்டவேண்டும். முகத்தைப் பார்த்தும் சமிக்கைகளைப் பார்த்தும் நமது அபிப்பிராயத்தைப் பிள்ளைகள் தெரிந்துகொள்ளக்கூடும். வார்த்தைகளினுடைய பொருளை நன்றாக விளக்கி உறுதிப்படுத்துவது சமிக்கைகளின் பிரயோசனம். கதை சொல்லும்போது இடையிடையே குழந்தைகளைக் கேள்விகேட்கக்கூடாது; அவர்களே ஏதாவது சொல்லவந்தாலும் அதற்காகக் கதையை நிறுத்தவும்கூடாது: ஏனெனில் மத்தியில் நிறுத்தினால் ரசம் கெட்டுப்போகும். கதையைச் சொல்லவேண்டியபடி சொன்னால் குழந்தைகள் அதிக ஆவலாய்க் கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

பிள்ளைகளின் இயற்கையான குணங்களைப் பற்றிக்கொண்டு அவர்களைப் படிப்பிக்கும் வழியைக் கொஞ்சம் எடுத்துக்காட்டினோம். அவர்களுடைய சரீரரக்ஷணையில் கருத்துவைத்துப் பிற்காலத்தில் அவர்கள் ஒருவருக்கொருவர் நடந்துகொள்ளவேண்டிய மாதிரிகளையும் கற்றுக்கொடுத்து வித்தையையும் படிப்படியாய் ஏற்றுவோமேயானால் அவர்கள் மேன்மேலும் விர்த்தியடைந்து மேன்மை பெறுவார்கள் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

ஜனவிநோதினி.

## CLAY MODELLING.

### களிமண் வேலை.

பிள்ளைகளின் சுபாவ உணர்ச்சிகளில் ஒன்று மண்ணினாலோ, மணலினாலோ பலவித உருவங்களைச் செய்தலைக் குறிக்கும். அவ்வித உணர்ச்சியை சரிவர நிறைவேற்றவும் ஒரு உருவத்தினின்று மற்றொரு உருவம் எளிதில் அமையும்படியாகவும் அடியிற்கண்ட களிமண் விளையாட்டு வேலை அமைக்கப்பட்டுள்ளது. அதற்கு பாலர், 1-வது 2-வது வகுப்புக்களில் ஒவ்வொரு பிரத்தியேகமான சிறு கதைகளை பிள்ளைகளின் மனதைக் கவரும்படியாய் இனிப்புடன் சொல்லி, பிறகு அதிலுள்ள விஷயங்களை பிள்ளைகளைக்கொண்டே, வேடிக்கையாய் நடித்துக்காட்டி அதன்பிறகு உருவங்களை களிமண்ணால் உபாத்தியாயர் செய்துகாட்டி, பிள்ளைகளையும் அவ்வாறு பின்பற்றும்படி செய்து, தொழிலை முடிக்கவேண்டும். இதற்கப்பால் மேற்படி கதைக்குச் சம்பந்தப்பட்டதாக, அல்லது தொழிலுக்-



குச் சம்பந்தப்பட்டதாயோ இருக்கும் எளிய நடையுள்ள பாட்டுக்களை அபிநயத்துடன் பிள்ளைகளுக்குச் செய்துகாட்டி, பிறகு, அவர்களையே ஏகோபித்து அவ்விதம் பாடச்சொல்லவேண்டும். அடியிற்கண்ட அபிநயப்பாட்டுகள் தொழில் சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழில்கள் செய்யுங்காலத்து ஒவ்வொரு உருவத்தின் நீளம், அகலம், உயரம் முதலானவைகளையும் பக்கம், ஓரம், மூலை, கோணம் முதலியவைகளையும் பிள்ளைகளிடமிருந்து வருவிக்கவேண்டும். இவ்விதம் செய்த உருவங்களுக்கு பலவித வர்ணங்கள் பூசி, அதன் மூலமாய் பிள்ளைகளுக்கு நிறத்தைப்பற்றியும் போதிக்கலாம். பிரோபல் என்பவரின் கொடைகளில் சிறந்தவற்றுளொன்றாகிய இத்தொழிலால் பிள்ளைகளுக்கு (imitative) அநுகரண சக்தியும், சிருஷ்டிக்கும் சக்தியும் கைதேர்ச்சியும் உண்டாகிறது.

## பாலர் வகுப்பு.

### களிமண் வேலை.

கதை.

முன் ஒரு காலத்தில் அரிச்சந்திரன் என்ற அரசனொருவன் இருந்தான். இவ்வரசன் மிக்க சத்தியசந்தன். இவனுக்கு கஷ்டகாலத்தினால் தன் பெண்சாதியை விற்கும்படி நேரிட்டது. அதற்காக காசிநகரில் போய் தன் மனைவியையும் பிள்ளையையும் விலைகூறினான். காளகண்டன் என்னும் பிராமணன் அவர்களை வாங்கிக்கொண்டான்; உடனே, அவன் அரசன் மனைவியாகிய சந்திரமதியை வீட்டிற்கு அழைத்துப்போய் நெல் குத்தச்சொல்லியும், அம்மியில் மா முதலானது அரைக்கச்சொல்லியும் மிக்க அவஸ்தைப்படுத்தினான். கடைசியில் தெய்வாநுகூலத்தால் இக்கஷ்டங்களெல்லாம் நீங்கி, திரும்பவும் ராஜ்யத்தையடைந்து சுகமாயிருந்தார்கள்.

விளையாட்டு.

ஒரு பையனை அரிச்சந்திரனாகவும் மற்றொருவனை சந்திரமதியாகவும், மற்றொருவனை காளகண்டனாகவும் வைத்து கதையிலுள்ளபடி நடித்திக் காட்டவேண்டும்.

தொழில்.

முதலில் உபாத்தியாயர் நன்றாய்ப் பிசைந்த களிமண்ணை தயார் செய்து வைத்திருக்கவேண்டும். பிறகு, பையன்களை வரிசையாய் உட்காரவைத்து ஒவ்வொருவருக்கும் ஒரு கொட்டங்கச்சியில் களிமண் வைத்து பாகித்துக் கொடுக்கவேண்டும். ஒவ்வொருவருக்கும்

உருவங்களைச் செய்ய ஒரு பலகை கொடுக்கவேண்டும். பிறகு, உபாத்தியாயர் அடியிற்கண்ட உருவங்களைப் பிள்ளைகளுக்குத் திருத்தமாகவும் தெளிவாகவும் செய்துகாட்டி அவர்களையும் அம்மாதிரி செய்யச் சொல்லவேண்டும்.

### செய்யவேண்டிய உருவங்கள்.

1. உருண்டை.
2. கோழிமுட்டை.
3. குழவி.
4. அம்மி.
5. உலக்கை.
6. ஸிலிண்டர்.
7. உரல்.
8. சரிசதுரம்.
9. கியூப்.
10. நீண்டசதுரம்.
11. செங்கல்.

## நோட்டு.

பாட்டு.

சாக சாக கமககரி பாபா மகரி பமகரி சா
களிமண் கொண்டு முதற்றொழிலாய்
கைய ளவு உருண்டை செய்வோம்
பிரம தேவன் சிருஷ்டி செய்த
பூகோள உருண்டை யென்பர்
ஒரு புறமாய் சற்று நீட்ட உரு வாகும்
கோழிமுட்டை
அதைத் திரட்டி உருட்டி விட்டால்
அமிய ரைக்கும் குழவியென்பர்
நெல்லுக் குத்தும் உலக்கையிது
நேராம் ஆங்கில பாஷையில்
சொல் லம்மையும் ஸிலிண்ட ரிது
சுற்றி நடுவில் வெட்டிவிட்டு
ஒரு பக்கம் பள்ளம்செய்ய
உண்மை யான உரலா கும்
மா விடிக்கும் உரலிதுவே
மற்று மிதை மட்டம் தட்டி
சரி யளவாம் அகல நீள சரி
சதுரம் செய்திடு வோம்
உயர மொன்றி ருப்பதனால்
உருவி லிதைக் கன மென்பார்
உயர நீள அகலமெல்லாம்



ஓர ளவா யிருப்ப தற்கு
தொப்பிக் காரன் பாஷையிலே
செப்பு வார்கள் கியூப் என்று
நீளத் தை அதிகமாக்க
நீண்ட சதுர மாகி விடும்
பக்கத் தைஎண் ணிப்பார்த்தால்
பத்தில் நான்கு குறைந் திருக்கும்
ஓரத் தைக்க ணக் கிட்டால்
ஒன்ப தோடு மூன்றுகும்
மூலை களைக் கணக் கிட்டால்
முன்தெரி பவை எட்டாகும்
கோணங் களைக் குறிப்பி ட்டால்
குணிதம் ஆறில் நான்காகும்
சீரான உருவ மிது
செங்கல் லாகும் நமக் குள்ளே
அழ கான இவ்வுருவை
ஆப்ளாங் கென் றழைத்திடு வார்
மேற்றி சையில் வாழு கின்ற
மேதாவி ஃரோ ப்பியர்.

## 1-ஆம் வகுப்பு.

### களிமண்வேலை.

கதை.

ஒரு நாள் ஒரு குயவன் தான் சூளைபோட்ட சால், பானை, சட்டி, பல்லாய், தாலம், மொந்தை, செம்பு, தோண்டி, குடம், மடக்கு, ஜாடி முதலிய சாமான்களை, விற்க சந்தையில், பரப்பிவைத்தான், அதில் ஜாடி சட்டியை விட அழகாயிருந்தது, ஜாடி சட்டியைப் பார்த்து, அடே மூடா! நீ தாழ்ந்தஜாதியான், ரொம்பவும் இழிவானவன், ஜனங்கள் உன்னைக் கேவலமாய்க் கையாளுகிறார்கள். நான் உயர்ந்த ஜாதியான், என் மேல் பொன், வெள்ளி, நகைகளும், மல்லிகை, முல்லை, முதலிய புஷ்பங்களும் போட்டு அதிக அலங்காரமாக வைத்திருப்பார்கள், என்று வாதாடி வீண் பெருமை பாராட்டிற்று. இதை யெல்லாம் சட்டியானது பொறுமையாய்க் கேட்டுக்கொண்டிருந்தது, ஜாடியைப்பார்த்து, 'ஏ மூடா, உனக்குப் புத்தியில்லையா'. நீயும் நானும் ஒரு குழிமண். ஒரே குயவனால் செய்யப்பட்டு ஒரே சூளையில் வெந்தோம். அவனுக்கு இஷ்டமிருந்தால் உன்னை என்

னைப்போலவும் என்னை உன்னைப்போலவும் செய்திருக்கலாம் உயர்வானாலும் தாழ்வானாலும், கைதவறிவிழுந்தால், இருவரும் உடைவோம். அப்பொழுது உயர்வு தாழ்வு பாராத ஜனங்கள் வெளியே எறிந்துவிடுவார்கள். அப்பொழுது நீயும் நானும் நடப்பவர்கள் காலில் மிதிபடுவோம். உனக்குப் பெருமை பேச வாயேது?' என்றது. கடவுளுடைய அமைப்பில் சமமாயிருந்தும் ஒருவரை யொருவர் உயர்வு தாழ்வென்று, இகழ்வது புத்தியில்லா ஜாடியைப்போன்றது.

விளையாட்டு.

ஒரு பையனை குயவன்போல் சட்டிமுதலானவைகளைப் பரப்பி வைக்கச்சொல்லியும், ஒருவனை சட்டியாகவும், மற்றொருவனை ஜாடியாகவும் சட்டி, ஜாடியண்டை இருக்கச்சொல்லி மேற்கண்ட கதையில் கண்டபடி சம்பாஷணை மூலமாய் நடித்துக்காட்டுக.

தொழில்.

உபாத்தியாயர் நன்றாய்ப் பிசைந்த களிமண்ணை தனித்தனி கொட்டங்கச்சியில் வைத்து பிள்ளைகளுக்கு பாகித்துக் கொடுத்துத் தொழில்களைச் செய்ய ஒவ்வொரு பையனுக்கும் சதுரப்பலகை ஒன்று ஏற்படுத்தி உபாத்தியாயர் முதலில் அடியில் கண்டிருக்கிற உருவங்களை திருத்தமாகவும் தெளிவாகவும் செய்து காட்டி, பிள்ளைகளையும் அப்படியே செய்யச் சொல்லலாம்.

செய்யவேண்டிய உருவங்கள்.

1. உலக்கைப்பூண்.
2. தட்டான் குழல்.
3. உழக்கு.
4. உண்டி.
5. தவலை.
6. தாலம்.
7. டபிளர்.
8. கிண்ணம்
9. வெண்ணெய்வைக்கும் பாண்டம்.
10. வட்டில்.
11. சக்கரம்.
12. வண்டியுருளை.
13. அடுப்பு.
14. கனப்புச்சட்டி
15. சட்டி
16. ஜாடி.
17. பானை.

## நோட்டு.

பாட்டு.

சாக சாக கமககரி பாபா மகரி பமகரி சா
மேல்வகுப்பில் கற்றுக்கொண்ட
மேன்மை யான் செங்கல்லை
நீளத்தில்வளைத்திடவே
நேரான உலக்கைப்பூணும்.
அகலத்தில் வளைக்க அது
அமையும் தட்டான் குழல் போல.
உழக் காகும் தபிர ளக்க
உண்டி யாகும் காசு போட.
தவலை யாகும் தாலமாகும்
தண்ணீர் குடிக்கும் டபிள ராகும்.
எண்ணெய் வைக்கும் கிண்ண மாகும்
வெண் ணெய் வைக்கும் பாண்ட மாகும்.
வட்டி லாகும் சக்கர மாகும்
வண்டி யுருளை வண்ண மாகும்.
அட்டு உண்ணும் அடுப்பாகும்
அனலி ருக்கும் கனப் பாகும்.
சட்டி ஜாடி பானையாகும்
சகல வித ஏன மாகும்.
இத்தனை என்றெடுத் துரைக்க
எவ ராலும் முடியாத
சித்திர மான சுவர்ண பாத்திரம்
செய்தி டுவீர் சிறுவர்களே.



## 2-ஆம் வகுப்பு

### களிமண் வேலை.

கதை.

ஒரு ஊரில் ஒரு குருவும் ஒரு சீஷனும் இருந்தார்கள். ஒருநாள் குரு சீஷனிடத்தில் ஒரு ரூபாய் கொடுத்து, கடையில் சாமான் வாங்கிக்கொண்டு வரச்சொன்னார். அவன் அதை எடுத்துக்கொண்டு கடைக்குப்போனான். கடைத்தெருவில் ஒருவன் காய் கறிவைத்துக்கொண்டிருந்தான். சீஷன் பூசினிக்காயைப் பார்த்ததில்லை யாதலால் கடைக்காரனை அது என்னவென்று கேட்டான். கடைக்காரன் வேடிக்கையாக குதிரை முட்டை என்றான். சீஷன் அதன் விலையை கேட்க, ஒருரூபாய் என்றான். சீஷன் குதிரை முட்டை வாங்கினால் குருவுக்கு உதவு மென்று எண்ணிரூபாயைக் கொடுத்து வாங்கி தலையில் அதை எடுத்துக்கொண்டுபோனான். வழியில் ஒரு மரக்கிளை இடிக்க பூசினிக்காய் கீழே வீழ்ந்து உடைந்தது. அப்படி விழுந்ததில் உண்டான சப்தத்தினால் அருகில் ஒரு புதரில் இருந்த முயலானது

பரந்து ஓட்டம் பிடித்தது. சீஷன் அதைப்பார்த்து இது தான் முட்டைக்குள்ளிருந்த குதிரை யென்று எண்ணி,வெகுதூரம் ஓடியும் பிடிக்க முடியாமல் குருவிடத்திற்குபோய் சங்கதியைச் சொன்னான். குரு தன் சீஷனுடைய முட்டாள் தனத்தைக் கண்டு மனம் வருந்தி அவனுக்குப் புத்திமதி சொன்னார்.

விளையாட்டு :—

ஒரு பையனை குருவாகவும், இன்னொருவனைச் சீஷனாகவும், இன்னொருவனைக் கடைக்காரனாகவும் வைத்துசீஷன் குதிரைமுட்டை வாங்கி வரும்போது மரக்கிளைகள் நடுவில் நட்டு மரம் தடுக்கினது போலவும் ஒவ்வொன்றையும் பிள்ளைகளைக்கொண்டே நடித்துக் காண்பிக்க.

தொழில் :—

ஒவ்வொரு பையனுக்கும் களிமண் கொடுத்து உபாத்தியாயர் அடியில் கண்டிருக்கும் உருவங்களைச் செய்து காட்டி பிள்ளைகளையும் அப்படியே செய்யச் சொல்லுக.

செய்யவேண்டிய உருவங்கள்.

| | |
|---|---|
| 1. கத்தரிக்காய். | 5. புடலங்கால். |
| 2. பரங்கிக்காய். | 6. பாகற்காய். |
| 3. பூசனிக்காய். | 7. வாழைக்காய். |
| 4. வெண்டைக்காய். | 8. மாதுளம்பழம். |

## நோட்டு.

பாட்டு.

ஸாக ஸாக கமககரி பாபா மகரி பமகரி ஸா.

கத்த ரிக்காய் பரங்கி க்காய்
கன மான பூசனிக்காய்
வெண்டை க்காய் புடலங்காய்
வேண்டிய பா கற்காய்
வாழை மா துளம் பழங்கள்
வள முள்ளோர் வாங்குவார்கள்
பார்ப்ப வர்கள் கண்பறிக்கும்
பண்ணு ருட்டி வேலை யிவை
ஆரி யர்கள் வமிசத்தான்
ஆதி சேஷத் தலைவன்
கூரி யவா றமைத்திட்ட
கோ பாலன் பாட்டி துவே.



பாலர் வகுப்பிற்கு அரிச்சந்திரன் கதையுடன் உரல் மதளத் தட்ன் முறையிடும் கதையையும் கூறலாம்.

சி. கோபால ஐயங்கார்.

# DUTIES OF A VILLAGE SCHOOL - MASTER.

## கிராம உபாத்தியாயரின் கடமை.

### கட்டாய பாடம்.

கணக்கு:—நாட்டுப் புறங்களில்சாதாரணமாய் மனக்கணக்கு வெகுவாய் மதிக்கப்பட்டு, சிறிது கல்வி பயின்றவரும் குறைந்த பட்சம் இரண்டொரு கேள்விகளை யாயினும் கட்டுக்கதைபோல் கற்றிருந்து விநோதமாய் வினவுதல் வழக்கம். ஆகவே பிள்ளைகளும் மனக்கணக்கில் செவ்வனே தேர்ந்திருக்கவேண்டுமென்பது பெற்றோர் விருப்பமாதலால் அவர்கள் அடிக்கடி உபாத்தியாயரிடம் தமது பிள்ளைகளுக்குக் கணக்குத் தெரியவில்லை யென்று குறைகூறுவார்கள். ஆனதால், இவ்விஷயத்தில் உபாத்தியாயர்கள் கவனம் வைத்துப்பிரதிதினமும் மனக்கணக்கை வெவ்வேறு வகையில் பிள்ளைகளுக்கு அப்பியசித்து வருவது நலம். இதைக் கற்பிக்க ஏற்கனவே இப்பத்திரிகாசிரியரால் பெரிதும் விளக்கமாகச் சுலபவழிகளைக் காட்டி ஒவ்வொரு வகுப்பிற்கும் கணிதங்கள் எழுதப்பட்டு இதனை வெளியிடுவோரான குமாரசாமி நாயுடு சன்ஸ் என்பவர்களால் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன. மனக்கணக்கு, பிள்ளைகளுக்கு மனதிற்பிடிக்க நமது தமிழ்க் கணக்கின் எண்சுவடியிற் குறித்த முக்கால், அரை, கால், அரைக்கால், வீசம், ($\frac{3}{4}$, $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{1}{8}$, $\frac{1}{16}$) முதலிய வாய்பாடுகள் மனப் பாடமாயிருக்கவேண்டும்.

எழுத்து:—கிராம வாசிகள் தம்பிள்ளைகளின் கையெழுத்தைப் பற்றியும்பெரிதுங்கவலைப்படுதலை யநுபவத்திற் கண்டிருக்கிறோம். இவ்வித்தை,பாலபிராயத்திலேயே அப்பியசிக்கப்பட்டு நன்னடையிற்பழக்கப்பட்டாலன்றி பின்னால் சீர்திருந்துவதுகஷ்டசாத்தியமாய் முடிகிறது. இது முக்கியமாய் உபாத்தியாயரின் கையெழுத்தின் குணத்தைப் பொருத்ததாயிருக்கிறது. உபாத்தியாயர் கையெழுத்து நன்றாயிருக்குமாயின் அதன்படி பிள்ளைகள் தாமே எழுத்தில் அபிவிருத்தியாவது நிச்சயம். அநேக உபாத்தியாயர்கள் பெரும்பாலும் ஆங்கிலபாஷையிற் பயின்றவர்கள் சாவகாசமின்றித் தாம் வாசித்த கல்விச் சாலைகளில் அவர்களுக்குக் கொடுக்கப்படும் அநேகவகைப்

பாடங்களைப் படிக்கவே பொழுதின்றி கையெழுத்தைப் படியவைத்துக் கொள்ளக் கூடாமல் பிற்காலத்தில் வருந்துகிறார்கள். இவ்வகையோர் உபாத்தியாயராகத் தெரிந்தெடுக்கப்பட்டபோது அவர்களின் கீழ்ப்பழகும் பிள்ளைகளுக்குக் கைப்படிவது கஷ்டம். பிள்ளைகள் உபாத்தியாயர் செய்யும் ஒவ்வொரு வேலையையும் கண்ணுற்பார்த்து, மனத்தாற் கிரகித்து, கையாற் செய்யுங்காரியத்தில் குரங்கின் குணத்துக் கொத்தவராகின்றனர். குரங்குகள் ஒருவர் செய்யும் காரியத்தை உடனே செய்து காட்ட முயல்வது யாவருக்கும் தெரியும். ஆதலால், இவர்களுக்கு சிறுவயதிலேயே நல்லபழக்கம் வேண்டும். ஊருக்கூர் உபாத்தியாயர்கள் கையெழுத்து வேறுபட்டிருக்குமாகையால், பிள்ளைகளின் கையெழுத்து எங்கும் ஒரேவிதமாக அச்செழுத்தைப்போலவே பழக்கமாகவேண்டுமென்னுங் கருத்தால் பரீக்ஷாதிகாரிகள் சிலவருஷகாலமாக ஆங்கிலபாஷையை எழுதிப் பழகுவது போலவே, தமிழெழுத்தும் அச்சுக்காபிகளின் மூலமாகவே படியவேண்டுமென்று அபிப்பிராயப் படுகிறார்கள். இது நல்ல மாதிரியென்றே யாவரும் கொள்ளத்தக்கது.

சொல்வதெழுதலினால் (Dictation) கையெழுத்து படியுமென்று சிலர் அபிப்பிராயப் படுவது பிசகு. சாதாரணமாய் சொல்வதெழுதல் சற்றுவேகமாகவே சொல்லப்படும். அதைத்தொடர்ந்தெழுதும் பிள்ளைகள் கையெழுத்தைக் கவனிக்க மாட்டார்கள். சிறிது பழக்குவதினால் நன்மையுண்டெனினும் அது அசாத்தியமான காரியம். இது உபாத்தியாயரின் திறமையைப் பொருத்தது. ஆயினும் கையெழுத்து தனிப்படப் பழக்குவதே நலம். சொல்வதெழுதலினாலாயபயன், பெற்றோரில் அநேகருக்குத் தெரியாது. இதைவெறுப்போருமுண்டு. இதைக்குறித்து, கணக்கையும் எழுத்தையுங் கவனிப்பது போல் ஒருவரேனுங் கவலைப்பட்டதை நாம் எமதநுபவத்திற் கண்டிலேம். கையெழுத்து, பெரும்பாலும் சட்டம் நிதானமாய் எழுதுவதினால் படியும். பிள்ளைகள் சட்டத்தைச் சாதாரணமாய் நெடுக முதல்வரியிலிருந்து ஆரம்பித்து கடைசிவரியிற் கொண்டுபோய் எழுதி முடிக்கிறார்கள். இதனால் கெடுதியுண்டு. எப்படியெனின் பிள்ளை முதல்வரியை எழுதும் போது அச்சிட்டிருக்கும் மேல் வரியைப்பார்த்தெழுதுகிறது வழக்கமாகையால் அதன் பிறகு அவன் அதைத் தொடர்ந்தெழுதும் இரண்டாவது மூன்றாவது வரிகளுக்கு நேர் மேலாக நிற்கும் தான் எழுதிய வரிகளையே பார்த்தெழுத நேரிடுவதினால் கையெழுத்து படிய மார்க்கமில்லை. பிள்ளை காபியின் கடைவரியைத் தொடர்ந்தெழுதுவதானால் அந்த கஷ்டமிராது.



இப்படிச் செய்வதனால் காபி எழுதிமுடிகிற வரையில் அவன் எதிரே நிற்பது மேல்வரிச்சட்டமாகவே யிருக்கும். ஆகையால், காபி எழுதுவதில் இம்முறையே சிறந்ததெனக் கொள்ளத்தகும்.

வாசிப்பு:—வாசிப்பைப் பற்றி எங்கும் சர்வசாதாரணமாய் கேவலம் குறைகூறத்தக்க விதமில்லாமல் நடந்தேறிவருகிறது. ஆயினும் கீழ்தரச்சாதிவகுப்பினரில் இக்குறை மிகவும் கவனிக்கத்தக்கதேயாகும். பெரும்பாலும் பஞ்சமபாடசாலைகளில் கல்விபயிற்றும் உபாத்தியாயர்கள் இதனிடத்திற் சற்றுக்கவனம் செலுத்தவேண்டியதே. வாசிப்பு என்னும் பாகத்தோடு சம்பந்தப் படுத்தப்பட்ட செய்யுள்வரிகள் சரிவர உச்சரிக்கப்படாத குறை பஞ்சமபாடசாலைகளிற் பெரிதும் காணப்படுகிறது. தவிர இலக்கணபாகத்தைப் பாடப்புத்தகம் வாசிக்கும் போதே வினாவும் பழக்கும் உபாத்தியாயர்கள் அநேகருக்குக் குறைவுபட்டிருக்கிறது. இப்பாடம் தனிப்படநடத்தும் வழக்கத்தை இனி தவிர்த்தற்பாலதே. அன்றியும் இக்காலத்திய அநேக சீர்திருத்த ஏற்பாடுகளில் இது முக்கியமென்று வித்தியாதிகாரிகளால் வற்புறுத்தப்பட்டு வருகிறது. மூன்றாவது, நான்காவது வகுப்பில் போதிக்கும்போது இதனைக் கவனித்தல் நலம். பாட்டை ஒப்பிக்கும்போது அர்த்தம் விளங்கும்படியாகச் சிலவிடங்களில் சந்திபிரித்துக் குரலோசைகேட்க இனிமையாயிருக்கும்படி ஏதாவது இசையோடு கூட்டிச் சொல்லவேண்டுமென்று சென்னை வித்தியாவிதி (Madras Educational Rules) கூறுகின்றது.

சி-வே. சண்முக முதலியார்,
*Hd. Master, L. F. School, Tinnanur.*

# GRANT-IN-AID CODE (*Revised.*)

## கல்வியிலாகா விதிகள்.

நவீனமாகப் பிரசுரிக்கப்பட்ட கிராண்டு-இன்-எயிடு கோட்டு (Grant-in-aid code) விஷயமாகப் பலர் பலவிதமாக யோசிக்கின்றார்கள். சிறுவர்களது வித்தியாபிவிருத்திக்குத் தடையாக, இப்புதியகோட்டு ஏற்பாடுசெய்யப்பட்டதென்றும், தற்காலம் இருக்கிற பள்ளிக்கூடங்களின் தொகை வெகு சீக்கிரத்திலேயே குறைவடையுமென்றும் சிலர் எண்ணுகிறார்கள். இவ்வெண்ணம் முற்றும் பிழையானதென்றே சொல்லலாம். நமக்கெல்லாம் கல்வி கற்பித்து நாகரிக

முள்ளவராகச் செய்யவெண்ணும் கவர்ன்மெண்டார், அதற்கு மாறான குற்றமுள்ள காரியங்களைச் செய்வாரென்று கனவிலும் நினைக்கலாமா? கூடாது, கூடாது. இதுவேயல்ல, கவர்ன்மெண்டார் பிரசுரித்த ஒவ்வொரு விதியையும் நன்றாகப் படித்து அதின் உத்தேசத்தையும், கருத்தையும், அதனால் உண்டாகும் பயனையும், அதின் ஆவசியத்தையும், அறிந்தபிறகு அவ்விதியைப்பற்றி நமது அபிப்பிராயத்தை வெளியிடவேண்டுமேயன்றி ஒன்றையும் ஆராய்ந்து பாராமல் மனம் போனவாறு பேசக்கூடாது; நமது தேசத்தில் அநேகருக்குப் பல விஷயங்களைக் குறித்து உண்மையான அபிப்பிராயமேயில்லை. மிகப் பேசக்கற்றவர்களாவது பணக்காரராவது சொல்லும் வார்த்தையையே வேதவாக்கியமாக எண்ணுகிறவர்கள் பலர் உண்டு. அதனால், அறிவோரெல்லாரும் தாம் சொல்லவேண்டியதைப்பற்றி நன்றாக யோசித்த பின்பே பிறருக்கு தெரிவிக்கவேண்டும். இப்படிச் செய்யாவிடின் தேசத்துக்கும் நமது நாட்டைப் பரிபாலிக்கும் பிரிடிஷ் கவர்ன்மெண்டாருக்கும் அபகாரஞ் செய்தவர்களாவார்.

கல்விப் பயிற்சியினால் ஒவ்வொரு மாணாக்கனும் தனக்கு வயது வந்தபொழுது, தான் ஏற்பாடு செய்துகொள்ளும் வேலையை கௌரவமாக நிறைவேற்றுவதற்குத் தக்கசாமார்த்தியமுள்ளவனாகவேண்டும். ஆகையால், மாணாக்கருடைய ஸ்திதியோடும் தேசாசாரங்களோடும் அநுசரித்துப் பாடங்களின் பட்டி ஏற்பாடு செய்யப்படவேண்டும். கிராமங்களிலுள்ள பிள்ளைகளுக்கு அவசியமான விஷயங்கள் நகரங்களிலுள்ள பிள்ளைகளுக்கு அவசியமாக மாட்டா. உத்தியோகஸ்தருடைய பிள்ளைக்கு வேண்டுவதுபோல தட்டானுடைய பிள்ளைக்கும் கிருஷிகனுடைய பிள்ளைக்கும் பட்டப்பரீக்ஷையினால் அவசியமில்லை! பின்சொல்லப்பட்டவர்களுக்கு முறையே கருவிகளை நேர்த்தியாக உபயோகிக்கவும், விவசாய சாஸ்திரப்பயிற்சியும் இன்றியமையாதவை. கூலிவேலை செய்து ஜீவிக்கிறவர்களுக்கு காலநிர்ணய பத்திரிகை தனியாகவிருக்கவேண்டும். இப்படிப்பட்ட குறைவுகளைத் திருத்திக் கல்வியிலாகா சட்டங்களெல்லாம் ஜனரஞ்சகமாக விருக்கும்படி செய்ய நினைத்துப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் டைரக்டரான **டாக்டர் போரன் பிரபு சிங்கன்** சீர்த்திருத்தங்களைச் செய்தார். முன்பு பள்ளிக்கூடத்திலிருக்கும் வகுப்புகளைப் பார்த்து அப்பள்ளிக்கூடம் லோயர் ப்ரைமரியோ, அப்பர் ப்ரைமரியோவென்று பிரிக்கப்பட்டது. இப்பொழுது பாடசாலைகளெல்லாம் அவற்றில் கற்பிக்கும் கல்வியின்சுபாவத்தைப்பற்றி (1)எலிமெண்டரி (2)ஸெகண்டரி (3)கலா



சாலைகள் (4) விசேஷமான கல்விப்பயிற்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட பள்ளிக்கூடங்கள் என்று நான்குவகுப்புகளாக விவரிக்கப்பட்டன. விசேஷமாக மூலர்தாரமான வித்தையைக் கற்றுக்கொள்ளும் பிள்ளைகளையுடைய பாடசாலைகளெல்லாம் எலிமெண்டரீ பாடசாலைகளென்றும், மேற்படிப்புக்கு வேண்டிய விஷயங்களை கற்பிக்கும் பள்ளிக்கூடங்கள் ஸெகண்டரீ பாடசாலைகளென்றும் ஏற்பாடு செய்யப்பட்டன.

எல்லாப் ப்ரைமரீ பாடசாலைகளும், ஏறக்குறைய எல்லா லோவர் ஸெகண்டரீ பாடசாலைகளும் எலிமெண்டரீ பாடசாலைகளே. சில லோயர் ஸெகண்டரீ பாடசாலைகளும், எல்லா ஹைஸ்கூல்களும் ஸெகண்டரீ பாடசாலைகளாம். டாக்டர் போரன் துரையவர்களுக்கு ஸெகண்கிரேட் காலேஜ்கள் இருக்கிற திஷ்டமில்லையென்று தோன்றுகிறது. நான்காவது வகுப்பு முதல் எலிமெண்டரீ பாடசாலைகளில் சொல்லிக்கொடுக்கும் விஷயங்கள்ஸெகண்டரீ பாடசாலைகளில் கற்பிக்கும் விஷயங்களாகா. ஆதலால், எலிமெண்டரீ பாடசாலையில் படித்த பையனொருவன் ஸெகண்டரீ பாடசாலையில் நான்காவது வகுப்புக்கு மேற்வகுப்பில் சேரமுடியாது. சென்னையில் மாத்திரம் எலிமெண்டரீ பாடசாலைகளுக்கும் ஸெகண்டரீ பாடசாலைகளுக்கும் மிகவும் வித்தியாசம் இராததனால் மேற்கூறிய விதி இந்நகரத்தில் வழங்காதபடியும், எலிமெண்டரீ பாடசாலையை விட்டு ஸெகண்டரீ பாடசாலையைச் சேர்ந்த பையனை பிரதமோபாத்தியாயர் தக்க வகுப்பில்சேர்க்குபடி போரன் துரையவர்கள் உத்தரவு கொடுப்பாரென்று எதிர் பார்த்திருக்கிறோம். எலிமெண்டரீ பாடசாலைகளின் நிர்வாகிகளுக்கு முன்னைப்பார்க்கிலும் மிகவும் ஸ்வேச்சை கொடுக்கப்படும். முன்போல் கணக்கில்லாத சட்டங்களுமில்லை. ஒவ்வொரு வகுப்பிலும் கற்பிக்கவேண்டிய விஷயங்களைப்பற்றி நிர்பந்தமில்லை. எலிமெண்டரீ பள்ளிக்கூடங்களை கல்வியிலாகா ஒப்புக்கொள்ளுதலிலும் முன்போல நஷ்டம் இராது. ஆனாலும், இதுமுதல் ஸெகண்டரீ பாடசாலைகளை கல்வியிலாகா ஒப்புக்கொள்ளும் விஷயத்தில் கடினமான சட்டங்கள் ஏற்படும். இதற்குக் காரணம் யாவருக்கும் தெரியும். பல ஹைஸ்கூல்களுக்கு மூலதனம் கிடையாது. பாலகருடைய கணக்கு குறைந்தால் உபாத்தியாயருக்குப் பாதி சம்பளமே. கருவிகளால் திருஷ்டாந்தப் படுத்தாமலே ரஸாயன சாஸ்திரத்தைப் போதிக்கும் பாடசாலைகள் மிகுதியாக விருக்குமென்று நாம் அறிவோம். சம்பளம் விருத்திசெய்தால் பாடசாலைக்குச் சீக்கிரத்தில் முடிவு

வருமென்றெண்ணி, நூதனமாகப் பட்டபரீக்ஷைகளில் தேர்ந்து எவ்விலாகாவிலும் கிரமமாக வேலைசெய்ய இஷ்டமில்லாதவர்களுக்கு அநுபவமில்லாத உபாத்தியாயர்களாக நியமித்து ஒவ்வொரு ஆறுமாதத்துக்கும் வேண்டியபடி உபாத்தியாயரை மாற்றுகிற ஹைஸ்கூல்களின் ஸ்திதி நமக்கு தெரிந்தவிஷயமே. இப்படிப்பட்ட பாடசாலைகள் இல்லாதொழிதலே நன்று. ஆகையால், ஸெகண்டரீபாடசாலைகளையாளும் நிபந்தனைகள் மிகவும் கடினமாயிருக்கவேண்டுமென்பது நாம் விரும்பத்தக்கதே.

மற்றச் சீர்திருத்தங்களைப் பற்றியும் சிறிது பேசுவோம். நெடுங்காலமாக பள்ளிக்கூடங்களில் பரீக்ஷையே முதன்மையான விஷயமாக வந்திருந்ததுண்டு. பரீக்ஷையில் தேறுவது எப்போதும் அறிவாளியினுடைய பாக்கியமேயல்ல. அர்த்தப்புத்தகங்களைப் படிக்காமல் தேற முடியவில்லை. தேகப்பயிற்சிக்காக பிரயாசப்படாமல் தினந்தோறும் இருபத்துநான்கு மணிநேரமும் படித்துக்கொண்டேயிருந்து பரீக்ஷையில்தப்பிப்போய் ஆத்மஹத்தியைச்செய்துகொண்டவர்களைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். பரீக்ஷையில் தேறுவிடின் உபாத்தியாயருக்குத் திரவியசகாயம் வராமலிருந்ததனால்சிக்ஷகரும் மேற்சொன்ன கெட்டவழக்கத்தையே ப்ரோத்ஸாஹப்படுத்தி பரீக்ஷைநாளுக்குமுன் பையன்களைத் தொந்தரவுசெய்து சாப்பாட்டுக்காவது க்ரமமான ஒய்வு கொடாமல் நிர்பந்தப்படுத்தி வந்தார்கள். டாக்டர் போரன்துரையவர்களின் புதிய முறைமையாலிப்படிப்பட்ட லோபங்களெல்லாம் உருவில்லாமல்போய்விடும். எப்பள்ளிக்கூடத்தின் பொது ஸ்திதி சந்தோஷகரமாகவிருக்குமோ அப்பள்ளிக்கூடம் நல்ல சகாயத்தை அடையும். பரீக்ஷாதிகாரிகளனைவரும் பள்ளிக்கூடங்களில் ஸர்டிபிகேட்டை பொருந்திய உபாத்தியாயர் இருந்தால் போதுமென்றெண்ணாமல் அவர்களெல்லாரும் உபாத்தியாய விருத்திக்கு தக்கவர்களாய்ப் பார்த்து தம்மெதிரில் ஒரு விஷயத்தைப்பற்றி பிள்ளைகளுக்கு கற்பிக்கும்படிச் செய்யவேண்டும். ஸார்வீஸ் ஸர்டிபிகேட்டு என்னும் ஸர்டிபிகேட்டு நல்ல வுத்தேசத்துடன் ஏற்பாடுச் செய்யப்பட்டாலும் சோம்புத்தனத்தை விருத்தி செய்ததென்று தோன்றுகிறது. போதனாப்பியஸன பாடசாலையில் படிக்காமல் இருக்கிறதற்கு இடம்கொடுக்கும் என்றெண்ணி சிலர் ஸர்வீஸ் ஸர்டிபிகேட்டை அடைந்தாரென்று கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பொழுதோ ஸர்வீஸ் ஸர்டிபிகேட்டை யடைந்த வுபாத்தியாயர் கிழவனானாலும் பிள்ளைகளுக்கு பாடங்களை சொல்லுவதில்



அசமர்த்தனாக தோன்றினாலும் அவ்வுபாத்தியாயரை விட்டு விடும்படி வித்தியா விசாரணாதிகாரி கட்டளையிடலாம். அவ்வுபாத்தியாயர் மேற்சொன்னபடியில்லாமல் போதனாமுறையில் அறிவிலானாகவிருந்தால் அவருக்கு ஸர்வீஸ் ஸர்டிபிகேட்டிருந்தாலும் டிரெய்னிங்கு பாடசாலைக்கு அனுப்பலாம், என்றும் புதிய சங்கதிகளை கற்றுக்கொள்ளும் உபாத்தியாயரே உத்தமர். இதைப்பற்றி ஆர்னால்டு துரையவர்கள் "நீர்தங்கின குளத்தைவிட்டு பாய்கின்ற பிரவாஹோதகத்தையே எனது குழந்தைகள் அருகவேண்டுமென்று நான் கோருகிறேன்' என்றுச் சொன்னார்.

பிரைமெரி கல்விப்பயிற்சிக்காக அதிகப் பணம் செலவுசெய்யவேண்டுமென்று லார்டு கர்ஜன்பிரபு கட்டளையிட்ட சங்கதிதெரிந்தும் முன்னைவிட பாடசாலைகளின் சகாயத்துக்காகப் பட்ஜட்டில் அதிக பணம் போடப்பட்டதென்று தெரிந்தும் புதிதாக வேற்பாடு செய்யப்படும் விதிகளினால் 'கிராண்டு' குறையுமென்று நினைக்கக்கூடாது. ஒவ்வொரு வுபாத்தியாயருக்குவருஷத்துக்கு 36-ரூபாயும், க்ரமமாக வருகிற பிள்ளை ஒவ்வொருவனுக்கும் $\frac{1}{2}$-ரூபாயும் கொடுக்கப்படுமென்னும் விதி பழைய பள்ளிக்கூடங்களுக்கு வழங்காததனால் பழைய மானேஜர்கள் பயப்படவேண்டிய விஷயமேயல்ல. நவீனமாக ஒரு ப்ரைமெரி வுபாத்தியாயர் நாற்பது பிள்ளைகளோடு பாடசாலை ஸ்தாபித்தால் 56-ரூபாய் கவர்ண்மெண்டார் கொடுப்பர். வருஷத்துக்கு 50-ரூபாய்க்கு குறையாமல் சம்பளங்களால் வந்தால் ஏறக்குறைய மாதத்துக்கு 9-ரூபாய் ப்ரைமெரி வுபாத்தியாயருக்குக் கிடைக்கும். போர்டு பள்ளிக்கூடங்களிலும் இதற்கு மிஞ்சி கொடுக்கிறதில்லை. நன்றாக வேலைச்செய்யும் பாடசாலைகளை விருத்திசெய்யவேண்டுமென்னு மெண்ணம் போரன்துரையவர்களுக்கிருக்கிறபடியால் மேற்சொன்ன விதியைத் தவறிக் கொஞ்ச மதிகபணத்தை உத்தம பாடசாலைக்கு, கான்பெரன்ஸுக்காகச்சேர்ந்த வித்தியாவிசாரணாதிகாரிகள் கொடுத்தாலும் போரன்துரையவர்கள் ஒன்றும் சொல்லமாட்டாரென்று நினைக்கிறேன்.

புதிய விதிகளினால் கவர்ண்மெண்டு சகாயம் குறையுமென்று நினைக்காமல் சமர்த்தரான வுபாத்தியாயரை நியமித்துப் புதிய போதனா முறையை யநுசரித்து பிள்ளைகளின் பரிசீலன விவேகனா சத்திகளை விருத்தி செய்யும்படி விஷயங்களைக் கற்பித்து வரவேண்டுமென்று உபாத்தியாயரெல்லாரையும் நான் பிரார்த்திக்கிறேன்.

M. S.

# THE GRANT-IN-AID CODE.

## சென்னை வித்தையிலாகா திரவியசகாய விதிகள்.

சென்னை வித்தையிலாகாவிலே சமீபத்தில் இரண்டு பெரிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுவரை ஐரோப்பிய பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் ஒரே திரவிய சகாய விதிகள் ஏற்பட்டிருந்தன. இப்போது ஐரோப்பிய பள்ளிக்கூடங்களுக்குத் தனியாய் வேறு திரவிய சகாயவிதிகளும்,இந்தியப்பிள்ளைகள் வாசிக்கும் பள்ளிக்கூடங்களுக்குத் தனியாய் வேறு திரவியசகாய விதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இரண்டு வருஷத்துக்குமுன்னால் ஐரோப்பிய பள்ளிக்கூடங்களைச் சுற்றிப்பார்ப்பதற்கென்று தனியாய் ஒரு இன்ஸ்பெக்டரை நியமித்தார்கள். இப்போது, அப்பள்ளிக்கூடங்களுக்கு தனியாகவே திரவியசகாய விதிகளையும் ஏற்படுத்திவிட்டார்கள். ஆனால், ஐரோப்பியப் பள்ளிக்கூடங்களைப்பற்றிய திரவியசகாய விதிகளைப்பற்றி இங்கு பேசுவதாக நமக்கு உத்தேசமில்லை. இந்தியப் பள்ளிக்கூடங்கள் சம்பந்தமாய் புதிதாய்ச்செய்யப்பட்டிருக்கும் விதிகளைமட்டும் இங்கு கவனிக்கிறோம்.

இதுவரையிலும் அனுஷ்டானத்திலிருந்த திரவிய சகாயவிதிகளுக்கும் இப்போது புதிதாய்ச் செய்யப்பட்டிருக்கும் திரவியசகாய விதிகளுக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. பழையவிதிகளின்படி பள்ளிக்கூடங்களுக்கு மூன்றுவிதமான திரவிய சகாயஞ் செய்யப்பட்டு வந்தது. காலேஜ்கள், ஹைஸ்கூல்கள் இவ்விரண்டுக்கும் ஸாலரிகிராண்டுகள் கிடைத்துவந்தன. அதாவது காலேஜ் வகுப்புகளிலும், ஹைஸ்கூல் வகுப்புகளிலும் பாடஞ்சொல்லும் உபாத்தியாயர்களுக்கு ஏற்பட்டிருந்த சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதியோ நான்கிலொருபகுதியோ கொடுக்கப்பட்டு வந்தது. போதனைமுறைக் காலேஜிலோ பள்ளிக்கூடத்திலோ படித்து போதனைமுறைப் பரிட்சையில் தேறியிருப்போருக்கு மூன்றிலொருபங்கு கிராண்டும், போதனைமுறைப் பள்ளிக்கூடத்தில் வாசியாமல் போதனைமுறைப் பரீட்சையில் தேறியிருப்போருக்கு நான்கில் ஒருபங்கு கிராண்டும் கிடைத்துக்கொண்டுவந்தது. அந்த கிராண்டுகள் சம்பளத்தின்மேல் கொடுக்கப்பட்டு வந்தபடியால் அவைகளுக்கு ஸாலரி கிராண்ட் அதாவது சம்பளத்தின்மேல் ஏற்பட்ட கிராண்ட் என்ற பெயர் வழங்கிவந்தது. மற்ற ஸ்கூல்களுக்கு அதாவது லோயர் செகண்டரி பள்ளிக்கூடங்களுக்கும் பிரைமரி பள்ளிக்கூடங்களுக்கும்



ரிஸல்ட் கிராண்டுகள், அதாவது பள்ளிக்கூடம் பரிட்சைக்கு வந்த காலத்தில் இன்ஸ்பெக்டர் செய்யும் பரிட்சையில் தேறிய பிள்ளைகளின்மேல் ஒரு பிள்ளைக்கு இவ்வளவு கிராண்ட் என்று கொடுக்கப்பட்டுவந்தன. இவ்விரண்டு வகைக்கிராண்டுகளையுந் தவிர சில போர்ட் பிரைமரி ஸ்கூல்களில் ஸாலரி-ரிஸல்ட் கிராண்டு என்று சம்பளத்தின்மேல் கொஞ்சமும் இன்ஸ்பெக்டர் செய்யும் பரிட்சையில் தேறிய பிள்ளைகளின்மேல் கொஞ்சமுமாக ஒருவகை கிராண்டு கொடுக்கப்பட்டுவந்தது.

பள்ளிக்கூடங்கள் ஹைஸ்கூல்களென்றும், லோயர் சகெண்டரி ஸ்கூல்களென்றும், பிரைமெரி ஸ்கூல்களென்றும் மூன்று தகுதியாய்ப் பிரிக்கப்பட்டிருந்தன. இப்போதைய புதிய விதிகளின்படி இன்ஸ்பெக்டர் பரீட்சையில் தேறிய பிள்ளைகளின்மேல் ரிசல்ட் கிராண்டு கொடுக்கப்பட்டு வந்த வழக்கமே ரத்தாய்ப்போய்விட்டது. பள்ளிக்கூடங்களும் எலிமெண்டரி (Elementary) ஸ்கூல்களென்றும், சகெண்டரி (Secondary) ஸ்கூல்களென்றும், காலேஜ்களென்றும், ஸ்பெஷல் ஸ்கூல்களென்றும், நான்கு பிரிவாய் வகுக்கப்பட்டிருக்கின்றன. இனிமேல் எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் டீச்சிங் கிராண்டுகள் (Teaching Grants) என்று ஒருவகை கிராண்டு கொடுக்கப்படும். உயர்தரப் படிப்புப் படிக்கும் யோசனையேயில்லாத பிள்ளைகள் வாசிக்கும் பள்ளிக்கூடங்கள் எலிமெண்டரி பள்ளிக்கூடங்கள் எனப்படும். என்று சொன்னாலும் பொருந்தும். உயர்தரப்படிப்புக்கு அஸ்திவாரம் ஏற்படுத்துகிற பள்ளிக்கூடங்கள் சகெண்டரி ஸ்கூல்கள் என்று சொல்லப்படும். இப்போதுள்ள ஹைஸ்கூல்களெல்லாம் புதிய விதிகளின்படி சகெண்டரி ஸ்கூல்களேயாகும். புதிய விதிகளின்படி எலிமெண்டரி ஸ்கூல்களுக்கு வாத்தியார், பிள்ளைகள் இந்த இரண்டு அம்சங்களையும் கவனித்து கிராண்டு கொடுக்கப்படும். ஒரு வருஷத்துக்கு ஒரு வாத்தியாருக்கு 36-ரூபாய் வீதமும்,' ஒரு பிள்ளைக்கு 8-அணா வீதமும் கணக்கு போட்டுக் கொடுக்கப்படும். சகெண்டரி பள்ளிக்கூடங்களுக்கு மற்ற வகைகளில் அவைகளுக்குக் கிடைக்கும் வரும்படியை உத்தேசித்து கிராண்டுகள் கொடுக்கப்படும். ஆனால் கவர்ன்மெண்டார், ஒரு பொடி வைத்திருக்கிறார்கள். சகெண்டரி பள்ளிக்கூடங்களுக்குக் கிடைக்கும் வரும்படி செலவுக்குக் கட்டிக்கொண்டு போகிறபடியால், அந்தப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தமட்டில் திரவிய சகாயவிதிகள் சிறிதும் தளர்த்தப்பட மாட்டாவென்று' சொல்லியிருக்கிறார்கள்.

காலேஜ்கள் விஷயத்திலும் ஸ்பெஷல் ஸ்கூல்கள் விஷயத்திலும் வித்தையிலாகாத் தலைவர் சகல விஷயங்களையும் யோசித்து இவ்வளவு திரவியசகாயம் செய்யலாமென மதிப்புப் போட்டு அந்த மதிப்பு திட்டத்தின்படி ஒரு வருஷத்துக்கு இவ்வளவென்று மொத்தமாய்க் கொடுப்பார்.

புதிய திரவியசகாய விதிகளில் வேறொரு விசேஷமுண்டு. பழைய விதிகளின்படி லோகல் போர்டாராலும், முனிசிபாலிடியாராலும் நடத்தப்படும் பள்ளிக்கூடங்கள் பிரைவேட் மானேஜர்களால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்குச் சமானமாக பாவிக்கப்பட்டு அவைகளுக்கு மற்றப் பள்ளிக்கூடங்களுக்குச் திரவியசகாயம் செய்யப்பட்டது போலவேயே திரவிய சகாயமும் செய்யப்பட்டுவந்தது. இனி போர்ட் முனிசிபல் பள்ளிக்கூடங்கள் கவர்ன்மெண்டில் திரவிய சகாயம் பெறும் பள்ளிக்கூடங்களாக பாவிக்கப்படமாட்டா. அந்தப் பள்ளிக்கூடங்களை சகல செலவுக்கும் பணம்போட்டு நடத்தும் பொறுப்புலோகல் போர்டாரையும் முனிசிபாலிடியாரையும் சேரும். அவர்களுக்குப் பணத்தட்டு ஏற்பட கவர்ன்மெண்டாரால் ஏதேனும் பணவுதவி செய்யப்படுமானால் அவ்வுதவி திரவியசகாய விதிகளையனுசரித்துச் செய்யப்படும் உதவியாகமாட்டாது. வித்தையிலாகா புதிய திரவியசகாய விதிகளைப்பற்றிய விசேஷங்கள் இவைகளேயாகும். அவ்விதிகளைப்பற்றிப் பின்னொரு சமயம் மறுபடியும் பேசுவோம்.

சு. மி.

## குறிப்பு.

புதிதாக வெளியிடப்பட்ட திரவிய சகாயவிதிகளின் (Grant-in-Aid Code) விஷயங்களையும், அவற்றைப் பற்றி வெளிவந்துள்ள அபிப்பிராயங்களையும் அடுத்த சஞ்சிகையில் விரிவாகக் காணலாம்.

பத்திராதிபர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
20 OCT 1906
MADRAS.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 2. | 1906 ஹு ஜூலைமீ | மாதம் 2.

## THE INDIAN KINDERGARTEN.

## செல்வச்சிறுவர் சிங்காரத் தோட்டம்.

(காகிதம் மடித்தல்.)

பிள்ளைகளின் சுபாவ உணர்ச்சிகளில் ஒன்று காகிதத்தினால் பலவித உருவங்களைச் செய்தல். அவ்வித உணர்ச்சியை சரிவர நிறைவேற்றவும் ஒரு உருவத்தினின்று மற்றொரு உருவம் எளிதில் அமையும்படியாகவும் அடியில்கண்ட காகிதம் மடித்தல் விளையாட்டு வேலை அமைக்கப் பட்டுள்ளது. அதற்கு பாலர் I வது II வது வகுப்புக்களில் சில பிரத்தியேகமான சிறுகதைகளை பிள்ளைகளின் மனதைக் கவரும்படியாய் இனிப்புடன் சொல்லி, பிறகு அதிலுள்ள விஷயங்களைப் பிள்ளைகளைக் கொண்டே வேடிக்கையாய் நடித்திக் காட்டி, அதன்பிறகு உருவங்களைக் காகிதத்தினால் உபாத்தியாயர் செய்துகாட்டி, பிள்ளைகளையும் அவ்வாறு பின்பற்றும்படி செய்து தொழிலை முடிக்கவேண்டும். இதற்கப்பால் அக் கதைக்குச் சம்பந்தப் பட்டதாயோ அல்லது தொழிலுக்கு சம்பந்தபட்டதாயோ இருக்கும் எளிய நடையுள்ள பாட்டுக்களை அபிநயத்துடன் பிள்ளைகளுக்கு செய்துகாட்டி, அவர்களை ஏகோபித்து அவ்விதம் பாடச்சொல்ல வேண்டும். அடியிற்கண்ட பாட்டுக்கள் தொழில் சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழில் செய்யுங்காலத்து ஒவ்வொரு உருவத்தின் நீளம், அகலம், உயரம் முதலியவைகளையும், பக்கம், ஓரம், மூலை, கோணம் முதலிய விஷயங்களையும் பிள்ளைகளிடமிருந்து வரு

விக்கவேண்டும். இந்த உருவங்களை வர்ணக்காகிதங்களால் செய்து அதன் மூலமாய் பிள்ளைகளுக்கு நிறத்தைப்பற்றியும் போதிக்கலாம்.

உபயோகம் :— சுத்தம், ஜாக்கிரதை, கைப்பழக்கம் முதலிய உண்டாவதுடன் க்ஷேத்திர கணிதசாஸ்திரப் பயிற்சிக்கும் அஸ்திவாரமாகிறது.

---

## பாலர் வகுப்பு.

**கதை.**— திரிசிராப்பள்ளியிலிருந்து ஸ்ரீரங்கத்துக்குப் போகவேண்டுமென்று ஒரு குரங்காட்டி பல குரங்குகளுடன் போனான். வழியில் காவேரியைக் கடந்து செல்லும்படி நேரிட்டது. ஆற்றில் ஜலம் சாஸ்தியாயிருந்ததால் இறங்கிப்போக சரிப்படவில்லை. அங்கே ஓடக்காரன் ஒருவன் இருந்தான். அவனைக்கண்டு அப்பா என்னை அக்கரை கொண்டுபோய்விடு, நான் அதற்குக் கூலிதருகிறேன் என்றான். அதற்கு படகுக்காரன் ஜனங்கள் சேரட்டும் கொண்டுபோய் விடுகிறேன் என்றான். அப்படியே ஜனங்களும் ஒரு துஷ்டபையனும் வந்து சேர்ந்தார்கள். படகோட்டி எல்லாரையும் படகில் ஏற்றினான். குரங்காட்டியும் ஒருசுமை துடைப்பக்கட்டையோடு படகிலேறினான். படகுக்கு முழுச்சுமை யுண்டானதும் படகைவிட்டான். படகு போய்க் கொண்டிருக்கும்போது அப்படகிலிருந்த துஷ்டப்பையன் துடைப்பத்தில் இரண்டைப்பிடுங்கி குரங்கின் பின்பக்கத்தில் குத்தினான். குத்தினவுடன் குரங்கு வெருண்டு சமபாரமாய் நின்ற ஜனங்களின் மேல்விழுந்து கடிக்கப்போயிற்று. உடனே ஜனங்கள் ஒருபுறமாய் ஒதுங்கினார்கள். உடனே படகு கவிழ எத்தனித்தது. படகுக்காரன் கெட்டிக்காரனாகையால் நிரம்பகஷ்டப்பட்டு வெகு தந்திரமாய் ஜனங்களை யெல்லாம் காப்பாற்றிக் கரையேற்றினான். ஆகையால் துஷ்டர்களுடைய சகவாசம் கூடாது.

**விளையாட்டு.**— இரண்டு பெஞ்சுகளைப்போட்டு படகுபோலவும் ஒருவனைக் குரங்காட்டியாகவும், இன்னொருவனைப் படகுக்காரனாகவும், இன்னொருவனை துஷ்டப்பையனாகவும் வைத்து குரங்கைக் குச்சியால் குத்தினது போலவும், ஜனங்கள் வெருண்டதுபோலவும், படகுக்காரன் காப்பாற்றினது போலவும் நடித்துக் காட்டச் சொல்க.

**தொழில்.**— உபாத்தியாயர் சதுரமான காகிதங்களைப் பிள்ளைகளுக்கு வீதித்துக் கொடுத்து ஓரம், மூலை முதலியவைகளைக் காட்டி அடியில்கண்ட உருவங்களைச் செய்யச்சொல்க.



**கதைக்கும் தொழிலுக்கு முள்ள சம்பந்தம்—ஓடம்.**

செய்யவேண்டிய உருவங்கள்.

(1) சதுரம்.
(2) புத்தகம்.
(3) கூரை.
(4) கைக்குட்டை.
(5) கோணம்.
(6) சிறுசதுரம்.
(7) தொப்பி or குல்லாய்.
(8) கப்பல் or ஓடம்.

### பாட்டு.

நோட்டு.

*ககரிகக காரிகக கமபதபா மகரி*
*ரீரிரிரீ ரீசரிக காமகாரி சாசா.*

*சதுரத்துண்டு காகிதத்தை சரியளவாய் எடுத்து*
*சட்டமதாய் புத்தகமும் கூரையாக மடிப்போம்.*
*அடுத்தபடி அறிவுடைய அருமை துரைமார்கள்*
*அன்புடன் முகர்ந்துடைக்கும் இன்பமுள்ள கைகுட்டை*
*மடித்த பின்பு மூன்றுமூலை வண்மையுள்ள தோற்றம்*
*அடுத்தமடி நான்குமூலை யானதே இவ்வாட்டம்.*
*ஆகியபின் ஸோல்ஜியர்கள்அணியும்குல் லாயாக*
*அமைந்ததே நல்லோடமாக முடிந்ததே இப்பாடம்.*

## 1-வது வகுப்பு.

*காகிதம் மடித்தல்.*

**கதை.**— முன் ஒரு காலத்தில் அயோத்தி மாநகரத்தை அரசாண்ட தசரதர் என்ற சக்கிரவர்த்தி ஒருவர் இருந்தார். அவருக்கு கோசலை, சுமித்திரை, கைகேசி என மூன்று மனைவிகள். கோசலைக்கு ராமன் என்ற ஒரு புத்திரனும், சுமித்திரைக்கு இலக்குமணனும் சத்துருக்கினனும், கைகேசிக்கு பரதன் என்றவனும் பிறந்தார்கள். பிள்ளைகளுக் கெல்லாம் வயதுவந்த பிறகு மூத்த குமாரனாகிய இராமனுக்குப் பட்டங் கொடுக்கவேண்டு மென்று தசரதர் எண்ணங்கொண்டார். கைகேசி, என் குமாரன் பரதனுக்குத் தான் பட்டம் கொடுக்கவேண்டும் ராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லுங்கள் என்றாள். தசரதருக்கும் மனைவி வார்த்தைக்கு உடன் படவேண்டியதாயிற்று. இராமன் தன் தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்துகாட்டுக்குப் போகப்புறப்பட்டான். இலக்ஷுமணனும் கூடவருவதாகப் புறப்பட்டான். இராமன் மனைவியாகிய சீதை என் பர்த்தாவைக் காட்டிலும் என்ன சுகம் வேண்டியது, தங்களை விட்டால் என்ன கதியிருக்கிறது, நானும் வருவேன் என்று

புறப்பட்டாள். இம் மூவரும் போகும் வழியில் ஒரு நதியைக் கடந்துபோக நேரிட்டது. அதற்கு கங்கை என்று பெயர். அங்கே படகோட்டி நின்றான். அவனைப் பார்து எங்களைக் கரைகொண்டு சேர்க்கிறாயா என்று கேட்கவும், அவன் இம்மூவர்களையும் படகி லேற்றி அக்கரை கொண்டுபோய்ச் சேர்த்தான், பிறகு அஸ்தமித்து விட்டது. அங்கிருந்த ஒரு குடிசையில் தங்கி மறுநாள் புறப்பட்டுப் போனார்கள். அவர்கள் போனகாட்டில் கரடி, சிங்கம், முட்பன்றி முதலிய மிருகங்கள் வசித்தன.

விளையாட்டு.— ஒரு பையனை இராமனாகவும் மற்றொருவனை சீதையாகவும் மற்றொருவனை லக்ஷ்மணனாகவும் பாவித்து ஒரு படகில் உட்காரவைத்தும், மற்றொருவனைப் படகோட்டியாக வைத்தும் கதையில் சொல்லியபடி நடித்துக்காட்டுக.

தொழில்.— பிறகு சதுரமான காகிதத்துண்டுகளைப் பிள்ளைகளுக்கு வீதித்துக் கொடுத்து அதைப் பின் கண்டிருக்கிற மாதிரி மடிக்கச்சொல்க. முதலில் உபாத்தியாயர் செய்து காட்டுக. செய்யும் பொழுது ஏற்படும் கோணம் முதலான உருவங்களின் பெயரைப் பிள்ளைகளிடமிருந்து வருவிக்க.

தொழில்கள்.

| | |
|---|---|
| (1) சதுரம் | (7) குடிசை |
| (2) புஸ்தகம் | (8) கண்ணாடி யுறை |
| (3) கூரை | (9) ஷெல்ப் (Shelf) |
| (4) கண்ணாடி ஜன்னல் | (10) தையற்காரன் பெட்டி |
| (5) நீளமேஜை | (11) இரட்டைப் படகு |
| (6) சதுரமேஜை | (12) பன்றி (ஏனம்) |

கதைக்குச் சம்பந்தப்பட்ட உருவங்கள் — படகு, குடிசை, பன்றி.

பாட்டு.

இராகம் — மோகனம்.

சதுரம்புஸ்தகம் கூரைக் கண்ணாடி ஜன்னல் நீளமேஜை
சட்டமெழுதவித்து மெத்தவுதவுமதால் சந்துஷ்டியாச் செய்வோம்.
திருப்பவும் மடித்தால் சதுரமேஜை குடிசைக் கண்ணாடி யுறையாம்
அதைச்சிறிய ஷெல்ப் தையற்பெட்டி இரட்டைப் படவெனசெய்திட
இப்பாட்டத்தில் இவைகளைக் கற்று இறுதித்தொழிலாக [லாம்.
எழுந்திருக்குமுன் ஏனமொன்றை நாம் இலகுவாய்ச் செய்திடுவோம்.



## 2-வது வகுப்பு.

### காகிதம் மடித்தல்.

கதை.— ஜினோவா பட்டணத்தில் அதிக ஏழையான ஒரு குடியானவன் இருந்தான். அவன் ஆட்டு மயிர் சிக்கெடுத்து ஜீவித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு கொலம்பஸ் என்று ஒரு மகன் பிறந்தான். கொலம்பஸ் எழுதவும், படிக்கவும், சித்திரம் எழுதவும் கற்றுக்கொண்டான். அவனுக்குக் கப்பலேறிக் கடலைக்கடந்து நூதனதேசம் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஆவல் உண்டாயிற்று. சிறு பிராயமுதல் இந்த எண்ணம் அவன் மனதில் குடிகொண்டிருந்தது. அவன் தரித்திரனானகையால் தான்கொண்ட கருத்தை நிறைவேற்றமுடியாமலிருந்தது. அவன் மிகக்கவலை கொண்டு அந்த எண்ணத்தை நிறைவேற்ற சமயம்பார்த்துக் கொண்டிருந்தான். அவன் லிஸ்பன் நாட்டுக் கப்பற்காரன் மகளைக் கலியாணம் செய்து கொண்டான். இதன் மூலமாயாவது பலநேசர்களைக்கொண்டு தன் எண்ணத்தை நிறைவேற்றலாம் என்று எண்ணியிருந்தான். இவன் துர் அதிர்ஷ்டத்தினால் இவன் மனைவி சில குழந்தைகளைப் பெற்றுக் கடைசியில் இறந்தாள். கொலம்பஸ் நிற்க இடமில்லாமல் தன் சிறு மகனுடன் மடம்போய் சேர்ந்து,பிச்சையெடுத்து ஜீவித்தான். அப்படியிருக்கையிலும் அவனது எண்ணம் மாறவில்லை. அவன் ஸ்பெயின் தேசத்து இராணியிடம்போய்த் தன் எண்ணத்தைத் தெரிவித்தான் அவளால் போதுமான உதவி பெற்று 1492ஆ ஆகஸ்டுமீ 3உ கப்பல்களோடு கொலம்பஸ் கடலில் சென்று வழியில் பல கஷ்டங்களை அநுபவித்துக் கடைசியாக அமெரிக்கா கண்டத்தைக் கண்டு பிடித்து அதனால் தனக்கும் தன்னை அடிமையாகக் கொண்ட இராணியார்க்கும் பெரும் கீர்த்தியை உண்டுபண்ணினான். இவன் அந்த தேசத்து ஜனங்களுக்குக் கைசட்டை, கால்சட்டை முதலியவற்றின்உபயோகங்களைத் தெரிவித்தான்.

விளையாட்டு.— ஒருவனைக் கொலம்பஸ் போலவும் மற்றவனை ஸ்பெயின் தேசத்து இராணியாகவும் செய்து கதையில் சொல்லியபடி நடித்துக் காட்டுக.

தொழில்.— பிறகு சதுரமான காகித்துண்டுகளைப் பிள்ளைகளுக்கு வீதித்துக் கொடுத்து உபாத்தியாயர் அடியில் கண்டதொழில்களைப் பிள்ளைகளுக்குச் செய்துகாட்டி அவர்களையும் செய்யச்சொல்ல வேண்டும் செய்யும் பொழுது உண்டாகும் கோணம்முதலானவைகளைப் பிள்ளைகளிடமிருந்து வருவிக்க.

கதையில் வரும் கப்பல், அரைச்சட்டை, கால்சட்டை, கைசட்டை, முதலியவை தொழிலுக்குச் சம்பந்தப்படுகின்றன.

செய்யவேண்டிய உருவங்கள்.

| | | | |
|---|---|---|---|
| (1) | சதுரம் | (11) | வீடு |
| (2) | கப்பல்காரன் தொப்பி | (12) | இங்கி புட்டி |
| (3) | சால்வை | (13) | சிலுவை |
| (4) | கப்பல் | (14) | அரைச்சட்டை |
| (5) | வீடு | (15) | கைசட்டை |
| (6) | திறந்த கவர் | (16) | கால் சட்டை |
| (7) | மூடின கவர் | (17) | காற்றூடி |
| (8) | கப்பல் | (18) | கண்ணாடி யுறை |
| (9) | வீடு | (19) | இரட்டைக்கப்பல் |
| (10) | கப்பல் | (20) | பாய்க்கப்பல் |

இராகம் - உசேனி - தாளம் - பருகம்.

பல்லவி.

நாம், காகிதங்கள் மடிப்போம் — நாம், காகிதங்கள் மடிப்போம்

அநுபல்லவி

ஏகநற் சதுரகாகிதம் கொண்டு நாம்
வேகமுடன் மிக யூகம தாகவே (காகி)

சரணங்கள்.

(1) கப்பல் காரன் தொப்பி சால்வை கப்பல் வீடு
ஒப்புந்தபால் கவர் மிக்க இரண்டென்று (காகி)

(2) கப்பலும் வீடும் கவர் களிரண்டும்
ஒப்புடனே எதிர்பக்கம் திருப்பி (காகி)

(3) மூன்றுந் தரமதைமுன் போல் மடிக்க
முக்கியமாம் க்ஷேத்திர கணிதங்கள் காட்டும் (காகி)

(4) இப்படியான பின் அத்தர் இங்கிபுட்டி
அரைச் சட்டை சிலுவை என்றுரு மிவ்வேடிக்கை (காகி)

(5) கைச் சட்டை கால் சட்டை காற்றூடி என்னும்
கண்ணாடி யுறைகப்பல் இரட்டை விதமாகும் (காகி)

C. GOPALA IYANGAR,
*Tanjore.*



## EXCELLENCE OF EDUCATION TOWARDS WEALTH.

## செல்வப் பொருளிலுங் கல்விப்பொருளே சிறந்தது.

### (இரண்டு சிநேகிதரின் கதை.)

முன்னொருகாலத்திலே மலையாளதேசத்தில் இராஜகலக முண்டாயிற்று. அத்தேசத்தின்கண் ஜனார்த்தனபுரமென்னும் ஓர் பட்டணமுளது. ஆங்கு வசித்த சுமுகன், சுபுத்தி என்னும் வாலிபத் தோழர்களிருவர் 'கருப்புக்கிருந்து பிழை, கலாபத்துக் கோடிப் பிழை' என்னும் முதுமொழிக்கிணங்க அந்நேரத்தில் தமக்குநேர்ந்த ரொக்கத்தொகையைமட்டும் எடுத்துக்கொண்டு மிக்க விரைவிற் பாதசாரிகளாய் நாட்பட நடந்து முடிவில் வாசயோக்கியமான காசிமாநகரிற் றங்கினார்கள். தங்கி தம்கையிலுள்ள பொருளைக்கொண்டு சுமுகன் வாணிபஞ்செய்யத் தொடங்க, சுபுத்தி அப்புண்ணிய க்ஷேத்திரத்தின் வித்துவஜன சமூகத்தோடிணங்கி கலையிலு முறையிற்றன் பொருளனைத்தும் செலவிட்டுப் பண்டிதனாய்ப் பாங்கனையடுத்துச் சீவனஞ் செய்துவந்தான்.

இப்படிக்கிருக்க, நண்பரிருவரும் காசியில் கங்காதீரத்துக்கருகில் வசித்தகாரணத்தால் அந்நதியில் அவ்வருடத்திய கோடைகால * வெள்ளப்பெருக்கினால் சுமுகனிட வியாபார சாமக்கிரியைகளிற் பெரும்பாகம் நஷ்டமாயினது. ஆயினும் காலக்கிரமத்தில் வர்த்தக மூலத்திலேயே அதிருஷ்ட வசத்தால் பழையபடி அவனுக்குச் செல்வம் பெருகியதாகியது. இத்தகைய ஐசுவரிய பாக்கியத்தையடைந்த அவன்பால் அசூயைகொண்ட சிலர் இவனது காரியஸ்தானத்தைக் கனலிட்டெரித்தனர். எரித்தும் திருப்பவும் தெய்வாநுகூலத்தால் சுமுகன் விசேஷ விபவத்தோடு விளங்கினானெனினும் விலக்கொணு விபத்தொன் றிவனுக்கு விளைந்தது.

பண்டைக்காலப் பழக்கத்தின்படி காசிதேச விராசன்மீது மாற்றலனை வேற்றரசனொருவன் படையெடுத்தான். ஆனமுதலிலதிகஞ் செலவிட்டு மானமழிந்து மதிகெட்ட வம்மன்னன் வருவாயின்றி அத்தருணம் சுமுகன்பால் பொருளுதவியை நாடி மதியிற்குறைந்த சதியிற்சிறந்த மந்திரியைப்போக்கி வரவிடுத்தான். சூதையறிந்த சுமுகன் வந்த மந்திரிக்கு வாய்க்காசு வழங்கி அன்றே அந்த நாட்டைவிட்டு சொந்தநாட்டைத் தொட்டுத் தன் நேயனோடும் புறப்பட்

* கங்காநதி இமையமலையினின்றும் உற்பத்தியாகி பிரவகித்தலால் அம்மலையிலுள்ள பனிக்கட்டிகள் வேனிற்காலத்தின் சூரியவெப்பத்தினால் உருகிப் பிரவாகம் மேலிடல் இயற்கைச் செய்கையேயாம்.

டான். எனினும், திரவியாபேக்ஷையாற் றொடர்ந்த சோரர் வழியிற் பொருளைக் கொள்ளையிட்டு சுமுகனையுந் துன்புறக் காயப்படுத்தினர். பணத்தைப் பறிகொடுத்த பாங்கனைப் பண்படுத்தி வீட்டிற் சேர்க்க சுபுத்திக்குப் பெரிதும் பிரயாசையால் முடிந்தது.

இஃதிவ்வாறாக, சுபுத்தி தன்னாட்டையடைந்த சின்னாட்களிலேயே அவனது கல்விப் பெருமையைச் செவிமடுக்க காதலித்த மலையாளதேச மன்னன் அவனைத் தன் சமுகம் வரச்செய்து, உசிதாசனத்திருத்தி, முகமன்கூறி சம்பாஷித்தான். சுபுத்தியும் 'தான் கற்ற நூலளவேயாகு நுண்ணறிவு' என்றபடி தன் கல்வித்திறமைக்கேற்ப குணந்தோன்றக் குரிசில் வினவும் விஷயங்களுக்குக் காலோசித சமயோசித உத்தரங்கூறி மன்னன் மகிழ இடையிடை நேர்ந்த விஷயங்களுக்கேற்ற விசேஷங்களை நவரச கற்பனாலங்காரந் தோன்ற உபந்நியசித்து சபையை யலங்கரித்தான். அரசன் அன்று முதல் அவனைத் தன் சமஸ்தான வித்துவானாகக்கொண்டு மானியம் விட்டு மரியாதை செய்தானாகையால் செல்வப்பொருளைப்போல் கல்விப்பொருள்,

"வெள்ளத்தாற் போகாது, வெந்தணலால் வேகாது, வேந்தராலுங்
கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலு நிறைவொழிய குறைபடாது,
கள்ளர்க்கோ வதுவரிது, காவலோ மிகவெளிது, கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்க உலகெலாம் பொருள்தேடி யுழல்வதேனோ?"

(இன்னும் வரும்)

சி. வே. சண்முக முதலியார்.
*Hd-M., Board School, Tinnanore.*

---





# அணில்.

அணில், நாற்கால் பிராணி வர்க்கத்தில் ஒன்று. அது சாதாரணமாய், காட்டகங்களிலும், தோட்டங்களிலும், வீட்டையடுத்த விருக்ஷங்களிலும் வசிக்கும்.

2. அணில் தோற்றத்தில் சிறிய உருவினதாகவும், அழகியதாகவும் காணப்படும். அணில் எப்பொழுதும் களிப்போடும், சோம்பலற்றும் இருக்கக் காணலாம். அதனால், அதிக சுறு சுறுப்புள்ள சிறுவர்களுக்கு அணிலை ஒப்புமை கூறுவது உலகவழக்கம்.

3. அணில் பூரணவளர்ச்சி யடைந்தால் சிறியதோர் பூனை அல்லது குழிமுயலை ஒத்திருக்கும். அதன் தேகமுழுதும் அடர்ந்து கவிந்துள்ள மெல்லிய உரோமம், பெரும்பாலும் சாம்பல் நிறமாயிருக்கும். அதன் வயிற்றுப் புறத்திலுள்ள உரோமம் மிக்க வெண்மையானது. அணிலுக்குத் தேகம் சிறுத்து, எட்டுமுதல் பத்தங்குலம் வரையில் நீண்டிருக்கும். அதன் வால் மிக்க மயிர் அடர்ந்தியிருக்கும். சாதாரணமாய் அணில் தன்வாலை மேற்புறமாயுயர்த்தி அங்கு மிங்கும் ஓடித்திரியும். அது தன் தேகத்தின் நீளத்தினும் நீண்டிருப்பது முண்டு.

4. அணிலின் தலை உருண்டை வடிவானது. அதன் காதுகள்மேலுயர்ந்து முனை குவிந்திருக்கும். கண்கள் பெருத்து ஒளிமிக்குடையன. அணிலுக்குப் பூனை, நாய், முயல் முதலிய பிராணி

களுக் கிருப்பதுபோல மீசை மயிருண்டு. அம்மீசை மயிரின் உதவியால் அணில் குறுகிய விடங்களிலும் வழியுணர்ந்து போக்கு வரவு செய்யும்.

5. அணில், முயல் இனத்தைச் சேர்ந்த பிராணி. இவ்வினத்திற்கு இயற்கையா யமைந்துள்ள முன்னம் பற்கள் அணிலுக்குமுண்டு. இப்பற்களினுதவியால் அணில் கடினமான கவசமுள்ள கொட்டைகளையும் கொத்தித் தின்னும். இம் முன்னம் பற்களேயன்றி, உணவை மென்று தின்பதற்கான அகன்ற கடைவாய்ப் பற்களு முண்டு.

6. கொட்டைகளைக் கோதும் பற்கள், தச்சனது உளியேபோல் நீண்டும், அகன்றும், கூர்மையாயு மிருக்கும். அப்பற்கள் அணிலுக்கு மிகுதியும் உபயோகப் படுவதால் அவை குறுகுவதுமில்லை, கூர்மழுங்குவது மில்லை. அப்பற்களின் மேற்புறத்தைப் பார்க்கிலும் அடிப்புறம் விரைவில் தேய்ந்துவிடு மாயினும், அதனால் கெடுதியொன்றும் நேராது. அணிலுக்கு ஆயுள் காலமுழுதும் பற்கள் வளர்ச்சி யடைவதனால் தேய்ந்த பாகம் கூடிக்கொண்டே வரும். அணிலுக்கு மேலிதழ் பிளவு பட்டிருப்பதனால், அதன் முன்னம் பற்கள் மேலுதட்டினின்றும் வெளிப்பட்டுதவும்.

7. அணிலின் முன்னங்கால்க ளிரண்டும், பின்னங் கால்களை விடக் குறுகியவை. அதனால், அது பூமியின்மீது நன்றாய் நடப்பதில்லை. பூனை முதலிய பிராணிகளைப்போல் அது நடப்பது மின்று. முயலைப்போற் குதித்துப் பாய்ந்தோடும். அணிலின் பின்னங்கால் ஒவ்வொன்றிலும் ஐந்து விரல்களும், முன்னங்கால் ஒவ்வொன்றிலும் நான்கு விரல்களு முண்டு. அவ் விரல்களின் நுனியிற் கூரிய நகங்க ளமைந்துள்ளன. அணில் ஒரு விதையையாயினும், கதிரையாயினும் தின்னும்போது அது தன் பின்னங்கால்களின்மே லுட்கார்ந்து வாலை வளைத்து உயர்த்தி முன்னங்கால்க ளிரண்டிலும் விதையைப் பற்றிக்கொண்டு தின்னும். இதனால் முன்னங்கால்கள் அதற்குக் கைகளாகவும் உபயோகமாவதை யுணரலாம்.

8. பெரும்பாலும் அணில் தரைமீது தவழ்ந்து செல்வதின்று. பறவைகளைப்போல் அது மரங்களில் வசிக்கும். ஒரு மரத்தினின்று மற்றோர் மரத்திற்குக் கிளைகள் மூலமாய்ப் பாய்ந்து செல்லும். இவ்வாறு அணில் தரையின்மீது இறங்காமலே நெடுந்தூரம் மரக்கிளைகளில் ஒன்றிச்செல்லும் சுபாவமுடையது.



9. அணில் உருவத்திற் சிறியதா யிருப்பதால் விரைந்து விருக்ஷங்களின் மீதேறி, ஓரிடத்தினின்று மற்றோரிடத்திற்கு எளிதிற் பாயும் தன்மையுடைய தாகின்றது. பக்ஷிகளைப்போல், அதற்குப் பறக்குந்தன்மை யில்லா தொழியினும், அது தன் வாலை ஏற்றவாறு அசைத்தசைத்துக் குறித்த விடத்தில் தட்டாமல் தாண்டிக் குதிக்கும். சிறு கொடிகளின்மீது செல்ல நேர்ந்தாலும், அது தவறி விழுந்து விடாதபடி தன் வாலினுதவியால், உடற் சுமையைச் சமப்படுத்திக் கொள்கின்றது. வேறு சில நாடுகளில் ஒருவகை அணில் உண்டாம். அதற்குப் பறக்கும் அணில் என்று பெயர். அது பறக்கும் அணிலென்று பெயர் பெறினும், உண்மையில் பறக்குந் தன்மையுடையதன்று. அது சாதாரணமாய் மரங்களின் மத்தியிலுள்ள இடைவெளியில் யாதோர் ஆதரவுமின்றித் தாவிச் செல்லும். இதன் முன்னங்கால், பின்னங்கால்க ளிரண்டிற்கு மிடையில் இயைந்துள்ள மிருதுவான சருமமே தாவிப் பிடிப்பதற்குத் தக்கவாறு உதவுகின்றது.

10. மரப்பொந்திலும், கவர் கிளைகள் இணைந்துள்ள இடுக்குகளிலும் அணில் தன் கூட்டை யமைக்கும். அது சருகு, புல், கொடி முதலியவற்றால் கூடு கட்டி, கந்தை, மயிர், பஞ்சு, பாசி முதலியவற்றை உள்ளீடாக அடைக்கும். அணில் பெரும்பாலும் நாலைந்து பிள்ளைகளை யீனும். அப்பிள்ளைகள் பிறந்த ஒன்பது நாட்களுக்குப் பிறகு கண் விழிக்கும்.

11. மாரிகாலத்தில் அணில் தன் கூட்டில் நெடுநேரம் நித்திரை செய்யும். பசி வந்தகாலத்தில் எழுந்து அங்கு மிங்கும் பாய்ந்தோடி இரையைத் தேடித்தின்று திரும்பிவந்து உரக்கங்கொள்ளும்.

12. அணில் பெரும்பாலும், கதிர், கொட்டை, பழவகை, மரப்பட்டை, தளிர் முதலியவற்றைத் தனக்கு இரையாகக் கொள்ளும். கனிவர்க்கங்கள் அமிதமாய்க் கிடைக்கக்கூடிய வேனிற்காலத்தில் மாரிகாலத்திற்கு உபயோகமாகும்படி சில விதைகளையும் கொட்டைகளையும் சேமித்துவைக்கும்.

13. சிலர் அணிற் பிள்ளையைக் கூட்டி லமைத்து வளர்ப்பதுண்டு. ஓவியக்காரருக்கு இன்றியமையாத தூரி (Brush) அணிலின் வால்மயிராற் கட்டப்படும்.

# THE GRANT IN AID CODE OF THE MADRAS EDUCATIONAL DEPARTMENT.

# சென்னை வித்யா இலாகா திரவியசகாயச் சட்டம்.*

குறிப்பு — இச்சட்டம் 1906ஆ ஏப்ரல்மீ 1உ முதல் (மறுபடியும் துரைத்தனத்தாரால் மாறுதல் செய்யப்படு மளவும்) அமுலுக்கு வரும்.

## CHAPTER I. — INTRODUCTION

## 1. ஆவது அத்தியாயம்.

## முன்னுரை.

### 1: திரவிய சகாயம்.

கல்வியைப் பரவச்செய்து அதனால் விருத்தியை யுண்டுபண்ணத்தக்க எவ்வகைய சுதேச பாடசாலை (School under private Management) களுக்கும் இதிற்கண்ட விதிகளுக் கிணங்க வருஷவாரி திரவிய சகாயஞ்செய்யும் பொருட்டு ஒரு தொகை தனிப்பட வைக்கப்படும். அத்தொகை லௌகிக சம்பந்தமான கல்வியைப் (Secular instruction) பயிற்றும் எல்லாக் கல்விச்சாலைகளுக்கும் யாதொரு மதபேத போதனைகளையும் பாராட்டாமல் பக்ஷபாதமின்றிப் பகிர்ந்துபகரிக்கப்படும். இப்படிச் செய்கையில் இனி ஏற்படக்கூடிய நிபந்தனைகளையும், அவ்வவ்விடங்களுக் குரிய ஆவசியங்களையும், பாடசாலைகளின் குறைபாடுகளையும், கை யிருப்புத் தொகையையும் சரிவர யோசித்துத் தீர்மானித்துக் காரியம் நடத்தப்படும்.

இவ்விதிகள் ஐரோப்பியர் பாடசாலைகளுக்குப் பொருந்தா.

*குறிப்புக்கள் — (1) இதுகாறும் ரிசல்ட் கிராண்டு சகாயம் பெற்றுவந்த எல்லாப் பாடசாலைகளுக்கும் முன் ரிசல்ட்டு கிராண்டு மூலமாகக் கொடுக்கப்பட்ட தொகையை யனுசரித்தே தற்காலமும் திரவியசகாயம் செய்யப்படும்.

(2) இதுகாறும் பிக்ஸெட் கிராண்டு சகாயம் (Fixed grant system) பெற்று வந்த பாடசாலைகளுக்கு எலிமெண்டரி (Elementary) பாடசாலை அல்லது இதரமான பாடசாலை என்று பகுத்தறியப் படுமெனவும் IV ஆவது அதிகாரத்தில் குறித்தபடி திரவிய சகாயஞ் செய்யப்படும்.



### 2. துரைத்தனத்தாரின் இஷ்டம்.

துரைத்தனத்தார் தமதிஷ்டப்படி கிராண்டுகளை நிராகரிக்கவும், தள்ளவுமான அதிகாரத்தையே யன்றி சட்டங்களிற் குறித்த யாதொரு நடக்கையையும் நடத்தற்குரிய அதிகாரத்தையும் தாமே வகித்திருக்கின்றனர்.

யாதொரு கல்விச்சாலையின் மனேஜராவது அல்லது அவரால் நியமிக்கப்பட்ட உபாத்தியாயர்களாவது அரசாட்சிக்கு மாறான விஷயங்களிற் றலையிட்டுக் கொண்டாலும், அல்லது மாணாக்கருக்குத் துரைத்தனத்தின் துரோக சிந்தனைக்குரிய எண்ணங்களை உண்டாக்கினாலும் அவ்வகைய பாடசாலைகளுக்குத் திரவிய சகாயம் நிவர்த்திக்கப்படும்.

### 3. இன்னவார்த்தைக் கிந்தப்படி அர்த்தமென்பது.

டைரக்டர் (Director) என்னும் வார்த்தை வித்தியாதிகாரியைக் குறிக்கும். இன்ஸ்பெக்டர் (Inspector) என்னும் வார்த்தை பெண்கல்விச் சாலைகளின் விசாரணைத்தலைவி (Inspectress) யையும் குறிக்கும். லோகல் போர்ட (Local Board) என்னும் வார்த்தை முனிசிபாலிடி அல்லது முனிசிபல் கவுன்ஸில், ஜில்லா அல்லது தாலூகா போர்டுகளையும் குறிக்கும். லோகல் பண்ட்ஸ் (Local Funds) என்னும் வார்த்தை முனிசிபல், ஜில்லா அல்லது தாலுக்கா பண்டுகளைக் குறிக்கும். பிரசிடெண்ட் (President) என்னும் வார்த்தை முனிசிபல் சேர்மெனை (Municipal chairman) யும் குறிக்கும். மானேஜர் (Manager) என்னும் வார்த்தை மானேஜர்களின் கூட்டத்தையும் குறிக்கும்.

### 4. எதற்குச் சகாயம் செய்யப்படுமென்பது.

(i) கல்வி கற்பிப்பதற்கும்.

(ii) கீழ் குறித்த விஷயங்களுக்கும் —

(1) போதனாப்பியாசம் (Training) பயிலும் உபாத்தியாயர்களுக்குச் சம்பளமாகவும்,

(2) பாடசாலைகள் கட்டவும், விசாலப்படுத்தவும், கல்விச்சாலைக் கட்டடங்களையும், அவற்றைச் சார்ந்த மாணாக்கர்களின் வீடுகளையும் வாங்கவும்,

(3) பாடசாலைக்கும் அதைச்சார்ந்த விடுதி வீட்டிற்கும் (Hostels) வேண்டிய சாமான்களும் (Apparatus, Chemical and Appliances) புத்தகசாலை (Library) க்கு வேண்டிய புத்தகங்களும், சிற்பசாலை (Laboratory) தொழிற்சாலை (Work-shop) க்கு வேண்டிய செடி கொடிகளும், வஸ்துக்களும், கருவிகளும் வாங்கவும்,

(4) தையல் கைத்தொழில் அல்லது வேறு பொருட்காட்சி (Exhibitions) களுக்குச்செல்லும் செலவை யடையவும்,

(5) பாண்டித்தியம் (Professorship) பிரசங்கம் (Lecturship) போதனை (Teachership) வித்தியா விதானம் (Scholarship) சிற்பசாலை (Laboratory) தொழிற்சாலை (Work-shop) வஸ்து தரிசனசாலை(Museum) மற்றும் வித்தியா சம்பந்தமான வஸ்துக்களைப் பெறவும்.

5. எம்முலமாய் சகாயம் செய்யப்படுமென்பது.

எலிமெண்டரி பாடசாலைகளில் கல்வி கற்பிப்பதற்காக லோகல் பண்டு (Local Fund) லிருந்தும், மற்றெல்லாவகைத் திரவிய சகாயங்களும் புரொவின்ஷியல் பண்டு (Provincial Fund) லிருந்தும் பணம் கொடுக்கப்படும்.

6. கிராண்டு கொடுக்கும் அதிகாரி.

துரைத்தனத்தாரின் அநுமதி பெறவேண்டிய விஷயங்களிற் றவிற புரொவின்ஷியல் (Provincial Fund) லிருந்து சகாயஞ் செய்யப்படும் எல்லாவித கிராண்டுகளும் டைரெக்டர் (Director) ரால் கொடுக்கப்படும். லோகல் பண்டு (Local Fund) லிருந்து கொடுக்கப்படும் பணம் அந்த லோகல் போர்ட்டு அதிகாரிகளால் (Presidents of Local Boards) கொடுக்கப்படும். அப்படி இவர்களால் கொடுக்கப்படும் திரவியம் வித்தியாயிலாகா தலைவர்களின் சிபாரிசின் பேரிலேயே உபகரிக்கப்படும்.

8. விண்ணப்பம் யாரால் தீர்மானிக்கப்படுமென்பது.

சட்ட திட்டங்களை மாற்றவிரும்பும் விண்ணப்பங்களை உத்திரவு செய்யும் அதிகாரி (Sanctioning authority) யால் தீர்மானிக்கப்படும்.



9. அநுபந்தங்களும் சட்டங்களை யொத்து வழங்கு மென்பது.

சட்டத்தின் விதிகளை அநுசரிப்பதுபோலவே அவற்றின் அநுபந்தங்களும் (Appendices) அநுசரிக்கப்பட வேண்டும். அவ்வநுபந்தங்களைச் சட்டத்தின் ஓர் பகுதியாகவே கொள்ளவேண்டும்.

## II. ஆவது அத்தியாயம்.

## திரவியசகாயப் பொதுவிதிகள்.

10. மானேஜ்மெண்டு.

திரவியசகாயம் பெறும் ஒவ்வொரு பாடசாலையும் வித்தியா இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்கதிகப்பட்ட விசாரணைக்காரர்களுக் குட்பட்டிருக்கலாம். அங்ஙனம் உட்பட்டு பாடசாலை ஓர் சங்கத்தின் பாதுகாப்பிலிருக்குமாயின் அச்சங்கத் தலைவர்கள் (Proprietors) அல்லது காரிய நிர்வாகத்தலைவர் (Trustees) அல்லது அங்கத்தினர்கள் (Members) பொறுப்பாளிகளா யிருக்கலாகும். இப்பொறுப்பாளிகள் காலக்கிரமத்தில் பாடசாலைகளுக்கென ஏற்படக்கூடிய நல்லொழுக்கச் சீர் திருத்தங்களை உள்ளிட்ட அங்கீகாரதிரவியசகாய நிபந்தனைகளை நிறைவேற்றக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும்.

பாடசாலையின் மானேஜ்மெண்டார் வித்தியா இலாகாவின் அநுமதியைப்பெற்று கரெஸ்பாண்டெண்ட் (Correspondent) என்னும் ஒருவரை டிபார்ட்டுமெண்டாருடன் பள்ளிக்கூடச் சம்பந்தமான கடிதப் போக்குவருத்துக்களுக் குரிய காரியம் பார்க்கும்படி நியமித்துக் கொள்ளலாம்.

பள்ளிக்கூடங்களின் மானேஜ்மெண்டு மாற்றிக் கொள்ளும் விண்ணப்பங்களை டைரெக்டர் (Director) ருக்குச் செய்துகொள்ள வேண்டும்.

11. மானேஜ்மெண்டாரின் உறுதிமொழி.

திரவியசகாயம் பெறுவதற்காகச் செய்யும் விண்ணப்பங்கள் அப்போதைக்கப்போது ஏற்படுத்தப்படும் விண்ணப்ப நமூனாக்களில் தயார் செய்து அனுப்பப்படவேண்டும். அதில் கரெஸ்பாண்டெண்டு (Correspondent) கல்விச்சாலைக்குரிய நடவடிக்கையிலுள்ள; ஸ்திரமும், உண்மையுமான கணக்குகள், அதன் ஸ்தாபிதம், காலநிர்ணயப் பட்டி (Time-table) ரிஜிஸ்தர்கள் (Registers) முதலியவற்றை பரி

சோதிக்கும்படி காட்டவும், இடத்துக்கு தக்கபடி நிர்ப்பந்த விதிகளினின்றும் விலக்கப்பட்டது போக மற்றைய திரவியசகாய விதிகளையும் (Grant-in-aid-Code) சென்னை வித்தியா விசாரணைச் சட்டங்களையும் (Madras Educational Rules) அனுசரித்து நடந்து வருவதாகவும், இனிமேலும் அநுசரிப்பதாகவும் கையொப்பஞ் செய்யப்பட்ட உறுதிமொழி யொன்றடங்கி யிருக்கவேண்டும்.

### 12. பாடபுத்தகங்களைபற்றி.

பாடசாலைகளிலும் காலேஜுகளிலும் உபயோகிக்கும் புத்தகங்களைத் தள்ளவும், கொள்ளவுமான அதிகாரம் கவர்னமெண்டாருக்குரியதாகும்.

அங்கீகரிக்கப்பட்ட புத்தகப் பட்டி (Approved List of Text books) யில் அடங்காத யாதொரு புத்தகமும் சர்க்காரின் உத்திரவின்றி யாதொரு திரவிய சகாயம் பெறும் பாடசாலையின்மானேஜர் உபயோகப்படுத்தலாகாது.

### 13. திரவியசகாயம் வித்தியா விஷயமாய்ச்சேலவிடல்.

திரவிய சகாயம்பெறும் பாடசாலை அப்பணத்தின் யாதொரு பாகமும் வித்தியாவிஷயங்களுக் கன்றி வேறுவகையில் செலவிடலாகாது.

### 14. உபாத்தியாயர்களை நியமிக்கும் அதிகாரம்.

தக்க விசாரணையின் பேரில் அல்லது டைரெக்டரால் விசாரித்து யோசிக்கப்பட்டு ஒருவர் உபாத்திமைத் தொழிலுக் கினியுரிவராகாரென்று தீர்மானிக்கப்பட்டு அவர் பெற்றுள்ள யோக்கியதாபத்திரம் (Certificate) நீக்கப்படுமாயின் அப்படிப்பட்டவர் காலேஜ் அல்லது பாடசாலைகளில் தொழில் பார்க்கக்கூடாதென்னும் உத்திரவைப் பிறப்பிக்கும் அதிகாரம் அரசாங்கத்தினருக் குரியதாகும்.



# HOW TO TEACH ARITHMETIC.

## எண்முதல் விளக்கம்.

ஆறுவரையில் சிறுவர்களுக்கு நன்றாய்த் தெரிந்தபிறகு முன்சொன்ன தராசுக்கோலையும், நிறை குண்டுகளையும் உபயோகித்துக் கொள்ளலாம். இந்தப் புதிய வஸ்துவைப் பார்க்கும்போது, சிறுவனுக்குச் சந்தோஷம் உண்டாகும். ஒரு பலத்துக்கு எத்தனை குண்டுகள் போட்டு நிறுக்கவேண்டியது? இரண்டு பலத்துக்கு எத்தனை பலகறை போட்டால் சரிப்படும்.

நாலு வெள்ளைக்கல்லுக்கு நிறை என்ன?

ஐந்து கோலிக்குண்டுக்கு என்ன நிறை?

என்று தனக்குத் தானே வினவிக்கொண்டு அந்த வஸ்துகளைத் தான் கையில் நிறுத்துப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுவான். ஆறு பலத்துக்கு மேற்பட்ட நிறை குண்டுகளை யாவது, இன்னும் எந்த வஸ்துக்களையாவது உபயோகித்துக் கொள்ள வேண்டியிருந்தால் ஆறுக்கு மேற்பட்டவை என்று சொல்ல வேண்டியதே யொழிய அவனுக்குத் தெரியாத எண்களைப் பாடம் நடக்கும்போது சொல்லலாகாது. எப்படி யெனில், சிறுவன் ஓரடிக்கோலால் முன்னே சிறிய பொருள்களை அளந்து பார்த்து எப்படி களிப்பை யடைந்தானோ, அப்படியே தராசையும், ஆறு குண்டுகளையும், வைத்துக்கொண்டு பல பொருள்களை நிறுத்துப் பார்த்து, நிறையில் வித்தியாசப் படுவதை ஆராய்வதினாலும் அவனுக்குச் சந்தோஷம் உண்டாகும். இப்படிப் பாடஞ்சொல்லிவைக்கும்போது, பிள்ளைகளை உல்லாசப் படுத்தும்படியான காரியத்தை உபாத்தியாயர்களும், தாய்தந்தைகளும் கேட்கவேண்டியது அவுசியமாயிருக்கிறது. மேற்கண்ட அளவுகோல், தராசு குண்டுகள் இவைகளை வைத்துக்கொண்டு பலவிதமாய் விளையாடலா மாகையாலும், இவைகளினாலே மிகுந்த பிரயோசனம் இருக்கிறதென்று தெரிந்திருக்கிற படியாலும், பெரியவர்கள் இவைகளை அடிக்கடி உபயோகிக்கிற படியாலும், சிறியவர்கள் விலையுயர்ந்த விளையாட்டுக் கருவிகளை அலக்ஷியஞ்செய்து, இந்த வஸ்துக்களிடத்தில் அதிக கவனம்வைத்துச் சந்தோஷிக்கிறார்கள். இதுவரையிற் குறித்துக்காட்டின பலவிதக் கருவிகளைக் கொண்டு அளவற்ற கேள்விகளைக் கேட்டுச் சிறுவர்களைப் பயிற்றலாம். தினந்தோறும் பாடம் முடிந்தவுடனே விளையாட்டுச் சாமான்களைக்

கண்ணுக்கு மறைவாய்த் தூரத்தில் வைத்துப்போட்டு, பிள்ளைகளின் ஞாபகசக்தியைப் பலப்படுத்துவதற்காகச் சில கேள்விகளைக் கேட்கவேண்டியது.

ஒரு கிளிஞ்சிலும், ஒரு கிளிஞ்சலும் எத்தனை ?

இரண்டு வெள்ளைக்கல்லும், ஒரு வெள்ளைக்கல்லும் எத்தனை ?

இரண்டு கோலிக்குண்டும் இரண்டு கோலிக்குண்டும் எத்தனை ?

ஒரு பலகறையும், இரண்டு பலகறையும் எத்தனை ?

இரண்டு குன்றுமணியும், ஒரு குன்றுமணியும் எத்தனை ?

மூன்று கொட்டைப்பாக்கும், மூன்று கொட்டைப்பாக்கும் எத்தனை ?

நான்கு பலகறையும், ஒரு பலகறையும் எத்தனை ?

சிறுவர்கள், முன்னே பாடங்களில் பொருள்களைக் காட்டிக் கேள்விகளைக் கேட்டபோது, சுறுசுறுப்பாக விடைகொடுத்தது போல, கருவிகளைக் காட்டாமல் கேட்ட மேற்கண்ட வினாக்களுக்கு விடை கொடுக்க மயங்குவார்கள். ஆகிலும், முன் பாடங்களில் கண்ணுக்கு முன் வைத்திருந்த பலகறை, கோலிக்குண்டு முதலான பல பொருள்களை ஞாபகப் படுத்திக்கொண்டு, பிள்ளைகள் சரியான விடைகளைக் கொடுத்து அதற்குமேல் பொருள்கள் கண்முன் இல்லாமலே எண்களின் தன்மையைப் படிப்படியாய் உணர்ந்து கொள்ளுவார்கள். ஒருவேளை கேட்கப்பட்ட வினாக்களில் சிலவற்றிற்கு விடை கொடுக்கத் தெரியாமல் சிறுவன் கலக்கப் பட்டுக் கொண்டிருப்பானேயாகில், சில வஸ்துக்களை அவன் கையில் கொடுத்து எண்ணிப் பார்த்துக் கொள்ளும்படி செய்யலாம்.

## இதற்கு உதாரணம்.

"இரண்டு கிளிஞ்சலும், மூன்று கிளிஞ்சலும் எத்தனை என்கிற வினாவுக்கு விடை கொடுக்கத் தெரியாமற் போனால், அப்போது விளையாட்டுச் சாமான் பெட்டியிலிருந்த இரண்டு கிளிஞ்சிலையும் எடுத்துக் கூட்டிப்பார்க்கும்படி செய்ய வேண்டியது. இப்படிப்பட்ட உதவியைப் பெற்றுத் துரிதமாய்ச் சிறிய எண்களைக் கூட்டக் கற்றுக்கொண்டால், யாதொரு வருத்தமில்லாமல் பெரிய எண்களைக் கற்றுக் கொள்ளலாமல்லவா ? இப்படிச் சொல்லப்பட்ட முதற் பாடங்களை அவசரப்படாமல் கொஞ்சங் கொஞ்சமாய் நடத்தவேண்டியது. இந்த விஷயத்தை உபாத்தியாயரும் தாய்தந்தைகளும் நன்றாய் ஞாபகத்தில் வைக்கவேண்டியது. முன் சொன்ன மாதிரியாய்ப் பின் பாடத்தைச் சொல்லாமல், அந்தந்தப் பாடத்தில் வெவ்வேறு ரசமுண்டாகும் படியாய்ப் போதிக்க வேண்டியது. ஆனால் இதற்காக அவசரப்பட்டு மேலான எண்களைக் கொண்டுவராமலே ஒரே விஷயத்தைப் பல தரம் பலவாறாய்ப் போதிக்கவேண்டியது. சிறுவனுக்கு ஆறு வரையில் நன்றாய்க் கூட்டத்தெரிந்தபிறகு, அந்த எண்ணைக்குறித்தே முன் பிரஸ்தாபித்திருக்கும் கருவிகளைக்கொண்டு அளவற்ற கேள்விகளைக் கேட்கலாம். அப்படிக் கேட்பதினால் ஒரே எண்ணையும், அது எத்தனை விதமாய் மாறுகிறதென்பதையும் சிறுவனுக்கு நன்றாய் விளங்கும்படி செய்யலாம். இவ்வாறு ஒரு எண்ணினுடைய பலவித ரூபங்களைச் சிறுவன் பூர்த்தியாய் அறிந்துகொண்ட பிறகு தான், ஏழு எட்டு என்னும் எண்களைக் குறித்துப் பேசவேண்டியது. இப்போது முன் கொடுத்திருக்கும் நிறை குண்டுகள் தவிர, இன்னம் இரண்டு குண்டுகளைக் கொடுத்து, தராசினால் முன் நிறுத்ததைப் பார்க்கிலும் அதிகமாய் நிறுத்துப் பார்க்கும்படியாயும், அளவுகோலால் முன் அளந்ததை விட நீண்ட பொருள்களை அளக்கும்படியாயும் செய்யலாம். ஏழு, எட்டு என்னும் புது எண்களைச் சொல்லுவிக்க ஆரம்பிக்கும்போது பலகறையிலாவது கிளிஞ்சிலிலாவது, மற்ற எந்த வஸ்துவிலாவது அவ்வாறு எடுத்துக் காட்டச்சொல்லி, சிறுவனுக்குத் தெரிந்திருக்கும் எண்ணைக் கொண்டே தெரியாத எண்களை அறிவிக்க வேண்டியது.

எப்படியெனில் மேஜைப் பலகையின்மேல் முன் எடுத்து வைத்த ஆறு பலகறையுடன், இன்னம் ஒரு பலகறையை எடுத்து வைக்கச் சொல்லி, ஆறு பலகறையும், ஒரு பலகறையும் ஏழு பலகறை, அப்படியே ஒரு கிளிஞ்சிலை எடுத்தவைக்கச் சொல்லி ஆறு கிளிஞ்சலும், ஒரு கிளிஞ்சலும், ஏழு கிளிஞ்சில் என்று ஒவ்வொரு வஸ்துவாலும் சொல்லுவிக்க வேண்டியது. இப்படி ஏழு என்னும் எண்ணைக்குறித்து இரண்டு பாடங்களைச் சொல்லிப் பிள்ளைகள் பயின்றபிறகு விளையாட்டுக் கருவிகளை எவ்வேழாய் எடுத்து வைத்து, பின்பு ஒவ்வொன்று அதிகமாக வைத்து, ஏழு கோலியும் ஒருகோலியும் எட்டுக்கோலி, ஏழு குன்றுமணியும் ஒரு குன்றுமணியும் எட்டுக் குன்றிமணி என்று போதிக்கவேண்டியது.

இதற்குப் பின்பு அடியிற் கண்டிருக்கும் கேள்விகள் மாதிரியாய்ச் சில வினாக்களையும் கேட்டு, சிறுவர்களைப் படிப்பிக்க வேண்டியது.

சுப்பராயனிடத்தில் இரண்டு பழமும், உன்னிடத்தில் இரண்டு பழமும் இருந்தால் ஆக எத்தனை ?

ராமலிங்கனிடத்தில் மூன்று கொஞ்சிப்பழமும், உன்னிடத்தில் இரண்டு கொஞ்சிப்பழமும் இருந்தால் ஆக எத்தனை பழம் ?

சிங்காரத்துக்கு நாலு கொய்யாப் பழம் கொடுத்து, நீ இரண்டு வைத்துக் கொண்டால், ஆக எத்தனை பழம் ?

ராமனுக்கு இரண்டு இலந்தம் பழமும், கோவிந்தனுக்கு இரண்டும், கொடுப்பேனேயாகில் என்னிடத்தில் எத்தனை இருந்திருக்க வேண்டும் ?

கமலத்துக்கு ஒரு மாம்பழமும் உன்னுடைய தகப்பனுக்கு மூன்றும், தாய்க்கும் இரண்டும் நீ வாங்கிக்கொடுத்தால் எத்தனை வாங்கியிருப்பாய் ?

ஒரு பிச்சைக்காரிக்கு இரண்டு பைசாவும், அவள் பிள்ளைக்கு ஒன்றும், அவள் பெண்ணுக்கு ஒன்றும் கொடுத்தால் எத்தனை பைசா நாம் கொடுத்ததாகும் ?

ஒரு ஏழைச் சமுச்சாரிக்கு மூன்று மரக்கால் நெல்லும், இன்னும் மூன்று சமுசாரிகளுக்கு ஒவ்வொரு மரக்காலும் கொடுத்தால் எத்தனை மரக்கால் நெல்லு கொடுக்கப்பட்டது ?

நாலு சின்ன பிள்ளைகளையும், மூன்று பெண்களையும் உங்கள் வீட்டு விருந்துக்கு அழைத்தால் ஆக எத்தனை விருந்தாளிகள் வருவார்கள் ?

தங்கம் என்பவள் மூன்று ஏழைப் பெண்களுக்கும், ரத்தினம் என்பவள் மற்றொரு ஐந்துபேருக்கும் பாவாடை தைத்துக் கொடுத்தால் இரண்டு பேரும் எத்தனை பாவாடை தைத்திருக்கவேண்டும் ?

ஒருவன் தன் நாலுபிள்ளைகளுக்கு ஒவ்வொரு மாதுளம் பழமும், தன் பெண்சாதிக்கு இரண்டும், தனக்கு இரண்டும் கடையில் வாங்கிக்கொண்டு போனால் ஆக எத்தனை பழம் வாங்கினான் ?

ஒரு தோட்டத்தில் மூன்று மல்லிகைச் செடியும், இரண்டு சாமந்திச்செடியும், ஒரு நந்தியாவட்டச் செடியும், இரண்டு ரோஜாச் செடியும் தோட்டக்காரன் வைத்து வளர்த்தான். ஆக எத்தனை பூஞ்செடிகள் அவ்விடத்தில் இருக்கும் ?

இதே மாதிரியாய்ப் பத்துவரையில் சொல்லிவைக்கவும். இதுவரையில் போதித்த விஷயங்களைச் சிறுவர்களுடைய ஞாபகத்தில் நன்றாய் நிலைநிறுத்துவதற்கு வேறு விதமான சாதனம் வேண்டியிருக்கிறது.



## REMEDIAL MEASURES TO BE ADOPTED DURING THE PREVALENCE OF CHOLERA.

## வாந்திபேதிக்காலத்தில் அனுசரிக்கவேண்டிய பரிகார முறைகள்.

### முன்னே கவனிக்க வேண்டியவை.

வீடு, தெரு, ஊர்ப்புறங்களில் மலமூத்திராதிகளும் அழுகத் தக்க பதார்த்தங்களும், துர்வாடையும் இல்லாமல் சுத்தமாயிருக்கச் செய்ய வேண்டும்.

குப்பை கூளங்களை எரித்து, மலமூத்திரங்களைத் துர் ஆவி எழாதபடி மண் இட்டு மூடவும்.

வீட்டின் சுவர்களை வெள்ளையடித்து, தளங்கள் ஈரமில்லாமல் உலர்ந்திருக்கவும், காற்று வீடுகளுக்குள் தாராளமாய் வீசவுந் தக்க பிரயத்தனங்கள் செய்யவேண்டும்.

உணவுப்பதார்த்தங்கள் எளிதில் ஜீரணிக்கத் தக்கவைகளாயிருக்கவேண்டும். முற்றின மரக்கறிகள், நோய்கொண்ட மிருகங்களின் மாம்சம், அழுகின மீன், நொந்த சாதம், பழங்கறிகள், மற்றும் குடலைப் பின்னப்படுத்திப் பேதி இளக்கத்தக்கவைகளையும் தவிர்ப்பது உத்தமம்

நல்ல ஊற்றிலுள்ள சுத்த ஜலத்தை சமையலுக்கும் பானத்துக்கும் உபயோகிக்கவேண்டும். குளங் குட்டைகளிலுள்ள ஜலம் மாத்திரம் கிடைத்தால், அதைத் தேற்றாப்பால் இட்டு சுத்திசெய்து, நன்றாய்க்காய்ச்சி மணலும் கரியும் இட்ட ஒரு பாத்திரத்தில் வார்த்து அதின் தூரில் இருக்கிற இரண்டு மூன்று சிறு துவாரங்களில் ஈர்க்குகளைச் செலுத்தி, அதின் வழியாய் இறங்கும் தண்ணீரை வேறோர் பாத்திரத்தில் வாங்கி உபயோகிக்கவும்.

ஆகாரத்தில் தாராளமாய் உப்பிடவும். கறிகளைத் தாளிக்கும் எண்ணெய் தோஷமற்றிருக்கவும் வேண்டும்.

ஒரு கழஞ்சுக் கறியுப்பைக் கொஞ்சம் தண்ணீரில் கலக்கி, காலைதோறும் சாப்பிட்டுவருவது இவ்வியாதிக்குத் தகுந்த தடையென்று சில வைத்தியர்கள் அபிப்பிராயப் படுவதால், அப்படிச் செய்வதும் பலனா இருக்கும்

### ரோகங்கண்டவுடன் செய்யவேண்டிய பரிகாரங்கள்.

ஆரம்பத்தில் தானே குமட்டலோடாவது, வாந்தியோடாவது ரோகம்தொடங்கினால், ஒரு கழற்சி கொட்டை அளவு அரைத்த கடுகைக் கொஞ்சம் தண்ணீரில் கலக்கிச் சாப்பிடவும். அது வாந்தியால் எடுபட்டுப் போனால், வாந்தி நிற்கிறவரைக்கும் மறுபடியும் சாப்பிடவும். கடுகை அரைத்துத் துணியில் தடவி நெஞ்சுக்குழியின்மேல் எரிவு உண்டாகிறவரையும் வைத்தெடுத்தால் வாந்தி நிற்கும். கடுகை ஆரம்பத்திலேயே சாப்பிடுகிறதாயிருந்தால், அது ரோகத்தின் வர்த்தனையைக் குறைக்கும்; ஒருவேளை பேதியையும் நிறுத்தும். வாந்தி நின்றவுடன் கூவைநீறுக் கஞ்சியையாவது, நன்றாய்க்கடைந்து வடிகட்டின பொடியரிசிக் கஞ்சியையாவது (கோழிரசத்தோர்) கொஞ்சம் கொஞ்சமாய்க் கொடுத்துவரவும். தாகிக்கிறபோதெல்லாம் குளிர்ந்தஜலம் கொடுப்பதே முக்கிய பரிகாம்.

கால்கைகள் சிலிர்த்து தேகம் குளிர்ந்துவர ஆரம்பித்தால், பொடிசெய்த கர்ப்பூரத்தையும் கடுகையும் கைகால்களில் தேய்த்து, மணல்வறுத்து ஒற்றவும். மேலும் ரோகிக்குச் சூடுண்டாகக் கம்பளியால் மூடி, அன்னபானங்கள் கொடுக்கும்போது தலையைத் தூக்காமல் படுக்கையில் கிடத்தித் தானே கரண்டியால் ஊட்டவும்.

வேறு.—கிராம்பு, கருவாப்பட்டை, சாதிக்காய், சுக்கு, காந்தாரி மிளகு வகைக்கு 3 கழஞ்சு நன்றாய்ப் பொடித்து, ஒரு குப்பிப் பிராந்திபிலாவது காரமான சாராயத்திலாவது இட்டு, ஒரு நாழிகைவரை அடிக்கடிகுலுக்கி, 30 நாழிகையானபின் தெளிந்திருக்கும் மேல் நீரில் இரண்டு தேக்கரண்டி எடுத்து, ஒரு பிட்டு தண்ணீரில் கொடுக்கவும்; இரண்டு நாழிகைக்குள் குணம் வராவிடில் மறுபடியும் கொடுக்கலாம். இப்படி இரண்டு விசைக்குமேல் கொடுக்க அவசியம் இராது. இம்மருந்தை முன் கூட்டிச் செய்து வைத்துக் கொள்ளுதல் உத்தமம்.

☞ தேர்ந்த வைத்தியர்கள் சர்க்கார் வைத்திய சாலைகளில் இருக்கும்போது அவர்களிடத்தில் பரிகாரஞ் செய்து கொள்ளுதலே தகுதியாயிருக்கும். அதக்கு இடமில்லாத பட்சத்தில் மேற்படி முறைகள் குடிகளுக்கு லகுவானது.

### பின்னே கவனிக்க வேண்டிய முறைகள்.

ரோகியின் மல மூத்திராதிகளை அப்போதைக்கப்போது மண் இட்டு எடுப்பதுந் தவிர, ரோகி இருக்கும் அறையில் தீச்சட்டியும் வைத்து சாம்பிராணி முதலியவை புகைக்கலாம்; சுண்ணாம்பு நீர் தெளிக்கவும் வேண்டும்.

ரோகியின் படுக்கை, வஸ்திரம் முதலானவைகளை வெந்நீரில் கழுவிக்கொள்ளவோ எரித்துப்போடவோ செய்தல் உத்தமம்.

இந்த வியாதி அதிகரித்து மற்றவர்களுக்கும் பகர்ந்து மோசஞ் செய்யாதபடி பிரயத்தனங்கள் செய்து கொள்வதே எல்லார் பேரிலுமுள்ள கடனாகும்.



## NEWS & NOTES.

### சமாசாரம்.

மால்டா என்னும் தீவிலுள்ள விந்தையான நாய்கள்:—உலகத்தில் மனிதர்களைப்போல பதார்த்தங்களைப் பகுத்தறியும் குணமும், பிறர் சொல்லுவதைக் கேட்குந் திறமையும் மிருகங்களுக்கு இல்லையென்று ஒருவேளை நமக்குத் தோன்றலாம். நன்றாய் ஆராய்ந்து பார்த்தால் சில மிருகங்களும் மனிதர்களைப்போலவே விவேகம் உடையவர்களாய் இருக்கின்றன. மால்டா என்னும் தீவிலே சில நாய்கள் மனிதர்களைப்போலவே எல்லாக் காரியங்களையும் தாமே அறிந்துகொண்டு நடத்துகின்றன. அவைகளுள் ஒரு நாய் யாவரும் கண்டு வியக்கத்தக்க அற்புதச் செயல்களைச் செய்ய அனேகர் கண்டிருக்கிறார்கள். அந்த விநோதமான சிறு ஜந்துவானது நீண்டு பட்டுபோல் மெதுவான மயிரும் காய்ச்சின மணல்போன்ற நிறமும் கறுத்து அகன்ற கண்களும் நீல நிறமுள்ள நாசியும், சிறிய நேர்த்தியான உள்ளங்கைகளையும் உடையது. அதை ஜர்மனிதேசத்துத் துரைசானி யொருத்தி வளர்த்துத் தான் சொல்வதை யெல்லாம் அறிந்துகொண்டு உள்ளபடி நடத்தும்படியாக எல்லா விஷயங்களையும் அதற்குக் கற்பித்துக் கொடுத்தாள். அந்த நாயானது நமது விக்டோரியா மஹாராணியார் சன்னிதானத்திற்கும், இன்னும் ஐரோப்பாவிலுள்ள பற்பல ராஜாக்கள் கனவான்கள் முதலிய பல மேலானவர்களிடத்திற்கும் போய்வந்தது. அவர்களெல்லாரும் அதன் சாமர்த்தியத்தைக் கண்டு வியந்து தத்தமக்குத் தக்கபடி வெகுமதி செய்தனர்.

ஒன்று முதல் ஆயிரம் வரையில் கணக்குள்ள சீட்டுகளை ஒரு மேசைமேல் தாறுமாறாய்ப் பரப்பி அங்கே அந்த நாயைக்கொண்டு விட்டு பிறகு யாராவது இத்தனையாவது எண்ணுள்ள சீட்டைக்

கொண்டுவா வென்று ஏவினுல், அது கம்பீரமாய் அச்சீட்டுகளைப் பார்த்துகொண்டே இக்கோடிக்கக்கோடி நடந்து கடைசியாய் அவன் கேட்ட கணக்குள்ள சீட்டை வாயினுல் கவ்விக்கொண்டு வந்து கொண்டுவந்து கொடுக்கும். இந்த நம்பருக்கு கூட்டல்தொகை, பெருக்கல்தொகை, வகுத்தல்தொகை இவைகளென்னவென்று கேட்டால் உடனே எடுத்துத்தரும். பத்தாவது கணக்குள்ள சீட்டை கொண்டுவா வென்று கேட்டால் அந்த நாய் அச்சீட்டு அகப்படும் அளவும் ஒவ்வொன்ருய்த் தேடி அது அகப்பட்டவுடனே எடுத்துக் கொண்டுவரும். அப்படியே இருபதுக்கு வேண்டிய கூட்டல் எண்கள் எவையென்ருல், அதற்குச் சரியான கணக்குகளைக் கொண்டு வருமே யன்றி, அதுவன்றி இதுதான் என்று பலர் தடுத்தாலும் வேருென்றையும் தொடாது. இவ்வகையாக அது அவரவர்களிஷ்டப்படி எல்லாக் காரியங்களையுஞ் செய்து அதற்குத் தக்கபடி பரிசு பெறும். இதுவன்றியில் அதற்கு ஏதாவது ஒரு கடிகாயந்திரத்தைக் காட்டிவிட்டால் அதன்படி சரியாகக் காலவளவை குறிக்கும். இப்போது பத்துமணியும் பதினைந்து நிமிஷமுமென்று அறிவிக்க வேண்டுமானுல், அதற்கு முதலில் பத்து என்னும் சங்கியை யுள்ள சீட்டையும் பிறகு பதினைந்தாவது கணக்குள்ள சீட்டையும் எடுத்துக் கொடுக்கும். பலபேர்களுடைய பிரதிமைகளை அதற்குக் காட்டிக்கொடுத்தபின்பு, இது யாருடையதென்று கேட்போமாகில் இன்னருடையதென்று விவரமாய்க் காட்டும்.

---


# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்

## மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 2. | 1906 ௵ ஆகஸ்டுமீ | மாதம் 3.


## ஒலியறி கருவி — *TELEPHONE.*

ஒலியறி கருவி இன்னதென்று நம்மவரிற் பெரும்பாலார் உணர்ந்திரார். இக்கருவி மிகுதியும் நகரங்களிலேயே உபயோகிக்கப் படுவதால் நகரமல்லாத பிறவிடங்களி லுள்ளோர் எளிதில் பார்த்துணர ஏதுவில்லை.

2. ஒலியறி கருவி தந்தித் தபாலை ஒத்ததென்னலாம். தந்தித் தபால் பெருகி எங்கும் வழங்குவதனுல் அதனை யாவரும் கண்டிருக்கலாம். தூரதேசங்களுக்கு அவசரமாய்த் தெரிவிக்கவேண்டிய சபாசாரங்களைத் தந்தித்தபால் மூலமாகவே அனுப்புவது வழக்கம். நகர வாசிகளில் செல்வவந்தர்கள், உத்தியோகஸ்தர்கள் அவ்வப்போது தெரிவித்துக் கொள்ளவேண்டிய விஷயங்களை ஆட்களின் மூலமா யறிவித்துக் கொள்வதற்குப் பதில் ஒலியறி கருவியின் மூலமாய்த் தெரிவித்துக் கொள்வது வழக்கம்.

3. தந்தித்தபால், வலம் இடம் காட்டும் சைக்கினையாலும் கட, கட் என்று மிருதுவாயும், கடினமாயும் ஒலிக்கும் ஒலியாலும் எழுத்துக்களைக் குறிப்பிட்டு விஷயங்களை யுணர்த்தும். ஒலியறி கருவி நாம் ஒருவர்க்கொருவர் நேர்முகமாய் நின்று சம்பாஷிப்பதே போல அறிவிக்கும். தந்தித்தபால் மூலமாய் விஷயத்தை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளக் கூடுமென்பது சாத்தியமன்று. இன்ன





சைக்கினைக்கு இன்ன எழுத்து, இன்ன சத்தத்திற்கு இன்ன எழுத்தென்று ஒருவரன்முறை யுண்டாக்கி இருத்தலின் பழகினோர்மட்டும் தந்தித்தபால் மூலமாய் விஷயமறிய ஏற்றவராவார். ஒலியறிகருவி மூலமாய்ப்பேச இவ்வகைய பயிற்சியொன்றும் வேண்டுவதின்று. எவரும் எளிதில் பேசிப் பிறருக்கு அறிவிக்கலாகும். அதனினும் நாம் பேசும் குறலோடும், உச்சரிக்கும் திறத்தில் எடுத்தல் படுத்தல் முதலிய அமைதியோடும் பிறர் கேட்பது வியப்பன்றோ ?

4. ஒலியறி கருவியால் நாம் பேசும் விஷயம் பிறருக்குக் கேட்கும் விஷயத்தில் சிலருக்குச் சந்தேகமெழலாம். இச்சந்தேகத்தை யொழிக்க முதலில் மனிதர் பேசுஞ் சத்தி அவர்களுக் கெப்படி யமைந்ததென்று விசாரித்துத்தெளிவோமாயின் ஒலியறி கருவியின் சக்தியும் எளிதில் புலப்படும். பேசுஞ் சக்தி மனிதர்களுக் கமைந்திருத்தலினாலேதான் மனிதர் சகலபிராணிகளிலும் தலைமைத்தன்மை யடைந்திருக்கின்றனர். மனிதருக்கமைந்த உயிரின் முயற்சியே பேச்சுக்குக் காரணமாகின்றது.

5. ஒலியறி கருவிகள் செய்கையும் இதையொத்திருக்கின்றதென்னலாகும். இரண்டு கம்பங்களுக்கு நடுவே ஒரு தந்திக்கம்பியை நீட்டி இறுகப்பிணித்து அதனை மெல்லென மீட்டினால் ஒருவகைய நாதமுண்டாவதை நீங்கள் அறிந்திருக்கலாம். இதனை வீணை, தம்புரு முதலியவைகளில் தெளிவாயுணரலாகும். இந்த நாதம் எப்படி யுண்டாகின்றதென்பீர்களாயின் ? கம்பியை மீட்டுதலினாலெழும் ஒலி, வெளியே பரந்துள்ள காற்றினியக்கத்தால் பக்குவப்பட்டுப் பட படவென்று சத்தங்கொடுத்து முடிவில் இனிய கீதமாக எண்ணப்படுகின்றது. குறலின் உயர்வு தாழ்வினால் பேச்சின் தாரதம்மியம் மாறுபடுவது போன்றே இக்கம்பியின் மீட்டலுக்கேற்ப ஒலியும் மாறுபட்டு வழங்கும்.

6. வீணைமுதலிய கருவிகளுக்குள்ள தந்திக்கம்பியைப்போல் மானிடர்க்குள்ளும் யாது கருவியிருந்து ஒலியை யுண்டாக்குகின்றதென்பீர்களாயின், கூறுவோம். நமது சுவாசக் குழாய்க்குள் தந்திக்கம்பிபோல் நன்றாய் இருகக்கட்டியுள்ள கருவியொன்றிருக்கின்றது. இக்கருவியின்மீது நாம் பேசும்போது எழும்வாயு உள்ளிருந்து தாக்குவதால் தந்தி சலனமுற்று ஓசைகொடுக்கின்றது. இவ்வோசை உதடு, நாக்கு, பல், அண்ணம் முதலியவைகளின் துணையால் வெவ்வேறு வகையாகிப் பொருள்படுகின்றது.

7. சிறுவர்கள் சில சமயங்களில் ஒலியறிகருவியைச்செய்து வீதிகளில் விளையாடுவது முண்டு. தடித்த கடிதத்திலாயினும் தகரத்திலாயினும் இரண்டு குழாய்கள்செய்து அவற்றின் ஒருபுறத்தை வாத்தியகருவிகளுக் குபயோகிக்கும் மெல்லிய தோலால் மூடி, இடையில் கம்பியையாயினும் நூலையாயினும் பிணித்து தூரத்தேநின்று இருவர் இருகப் பிடித்துக்கொண்டு ஒருவன் குழையை வாயில் வைத்துப் பேசவும், மற்றவன் காதில்வைத்துக் கேட்கவும் பரீக்ஷித்தால் பேசும்விஷயம் முழுதும் மற்றவன்காதிற் கேட்கும். இது குழையின்மூலமாய்ப் பேசுகிறவனுடைய கண்டநாளம் ஆடுவதால் குழையில் மூடியுள்ள தோலில் தாக்கி, அத்தோலோடு சம்பந்தப்பட்டிருக்கும் கயிறு அல்லது கம்பிமூலமாய் எதிரிலிருக்கும் குழைக்குப்போகிறது. அங்கு அக்குழையைக் காதில்வைத்திருப்பதால் அக்காதில் ஓசைதாக்கி பேசியவிஷயம் தெற்றெனப் புலப்படுகின்றது.

8. இவ்வகைய பரீக்ஷை சிறிதுதூரத்திற்கு மாத்திரமே உபயோகப்படுமாதலால், சற்று அதிகதூரத்திற்கு இது உதவாது. இதற்காக செப்புக்கம்பி, காந்தக்கம்பி, இருப்புக்கம்பி முதலியவைகளால் வேண்டிய தூரத்திற்கு உபயோகமாகும்படி செய்யலாம்.

9. ஒலியறி கருவிக்கு முக்கிய உபயோகமானது காந்தம். இந்த காந்தம் இரும்பைக் கிரகிக்குஞ் சக்திமாத்திர மிருக்கின்றதென்று கொள்ளக்கூடாது. அதற்கு அநேக சக்திகள் உண்டு. காந்தஞ் சம்பந்தப்பட்ட இரும்பு, செம்புக் கம்பிகளில் மின்சார மிகுதியும் பிரவேசிக்கும். காந்தம் சம்பந்தப்பட்ட செம்புக் கம்பியின் முன்பாக ஒரு இருப்புக் கம்பியை யசைத்தால், அந்த அசைவு காந்தத்தால் கிரகிக்கப்பட்டு அதன்மீது சுற்றியிருக்கும் செம்புக் கயிற்றில் தாக்கி அதனின்று மெழும் மின்சார சக்தியால் வேண்டுந்தூரம் விரைந்து செல்கின்றது. ஒலியறி கருவியால் பேசவேண்டிய தூரமளவும் காந்தம் சம்பந்தப்பட்ட இரும்பு செப்புக் கம்பிகளைத் தொடுத்து இருமுனையிலும் விளையாட்டுக்காகக் கட்டிய தோலுக்குப்பதிலாக இந்தியரப்பர் அல்லது வேறு உலோகத்தாலாகிய தகட்டைக் கட்டவேண்டும். இத்தகட்டினிடையில் காந்தக் கம்பியைப் புகுத்தி அதினின்றும் மேலே குறிப்பிட்ட இரும்பு, செம்புக் கம்பியைப் பிணித்து வேண்டிய தூரமளவும் வழியில் நடமாடுவோரால் இடைஞ்சல் நேராவண்ணம் தலைமீதோ, பூமியினடிப்புறத்திலோ



நீட்டி இறுகப் பிணித்துவிட்டால் ஒலியறி கருவியால் பேசுவதற்கு வழியமைத்து விட்டதாகும்.

10. இதன் மூலமாய்ப் பேசுதற்கு இரண்டு கருவிகளை யமைத்துக் கொள்வது வழக்கம், இவ்விரண்டு கருவிகளைத் தான் இப்பாடத்திற் காட்டியுள்ள படத்திற்கண்ட புருஷன் காதிலும் வாயருகிலும் வைத்திருக்கின்றனன். வாயருகிலிருக்கும் குழையில் ஒருவன் தன் விஷயத்தைப் பேசினால் அது கம்பியின் வழியே சென்று அக்கம்பியின் முடிவிடமாகிய பெட்டியில் செல்கின்றது. காதருகில் வைத்திருக்கும் கருவி மற்றோர் கம்பியோடு பிணிக்கப்பட்டிருப்பதால் தோற்றுமிடமாகிய பெட்டியினின்றும் வருகின்றது. இவ்விரண்டு கம்பிகளுக்கும் வேண்டும்போது சம்பந்த முண்டாக்கவும், வேண்டாதபோது பிரித்து வேறிடத்திற் போக்கவும் அதற்கென்று வேறு கருவிவைத்து முறுக்காணியா லியக்குவதுண்டு. இவ்வியக்கக் கருவியால் பேசுவோனுடையகாதுக்கே சம்பந்தப்படுத்தப்பட்டிருப்பதால் தான் பேசும் பேச்சே மீட்டும் தான் கேட்பதா யமைகின்றது.

11. இவ்வாறே பிறர் பேசும் பேச்சைக் கேட்கவேண்டுமாயினும் இயக்குங் கருவியால் உத்தேசித்த விடத்திற்குச் சம்பந்தப்படுத்துவோமாயின் ஒரு சிறிதும் வித்தியாசமின்றி ஒவ்வொரு பேச்சும் தெளிவாய்க் கேட்கும். கேட்பவனருகில் யாரிருப்பினும் சிறிதும் அவனுக்குக் கேட்காது.

12. ஒலியறி கருவி மூலமாய்ப் பேசுவோர் ஞாபகத்தைக்கிரகிக்குமாறு ஒருவகை மின்சார மணியை ஒவ்வொரு ஒலியறி கருவிப் பெட்டியிலும் அமைப்ப துண்டு. வெளியே சம்பந்தப்பட்ட யாராகிலும் பேசவேண்டுமாயின் அவர்க ளிடமிருக்கும் பெட்டியிற் பிணிக்கப்பட்ட மணியை யடிக்கின் அது குறித்த விடத்திலுள்ள பெட்டியின் மணியை முற்கூறிய சக்தியால் அடிக்கும். மணிச் சத்தங் கேட்டதும் இரண்டு குழைகளை எடுத்து வாயண்டையொன்றும் காதண்டையொன்றும் வைத்துக்கொண்டு உற்றுக் கேட்டு வேண்டியதைப் பேசிக்கொள்வர்கள். பேச்சு முடிந்ததும் மணியாற் சமிக்கைகாட்டி முடிந்துவிட்டதென்று அறிவித்த பின்னர் கருவிகளை அததன் இடங்களில் அமைத்துவிடுவர். சம்பாஷணை நடப்பதற்கு ஆதாரமாகிய இருப்புச் செம்புக் கம்பிகளினின்றும் எழும் மின்சாரசக்தி வெளிப்போகாதபடி அக் கம்பியைப் பட்டால்

சுற்றிப் பாதுகாப்பதுண்டு. பட்டுக்கு மின்சாரசக்தியைக் காக்குஞ்
சக்தி மிகுதியுமுண்டாம்.

13. இவ்வளவற்புதமான கருவி, சுமார் 40 வருடங்களுக்கு ந
முன் முதல் முதல் இங்கிலாந்தில் தான் கண்டு பிடிக்கப்பட்டது.
அவசியம் நேரிட்ட விடத்து ஆராய்ச்சியில் ஆர்வமுண்டாகுமன்றே?
'ஆராய்ச்சி யுண்டான விடத்து அரியவிஷயம் வெளிப்படும்' என் று
னும் ஆங்கில பழமொழிகளுக் கேற்ப இக்கருவியைக் கண்டுபிடிச் ல் டிக்
நேர்ந்ததற்குக்காரணம் முழுச் செவிடாயுள்ளோர் பிறர் சொ ற்வ
தைக் கேட்க உபாய முண்டாக்க வேண்டுமென்பதே.

14. இங்கிலாந்தில் ஒருவர் இருபதுவருடகாலம் மு முழுச்
செவிடா யிருந்தார். அவர் நுட்ப அறிவு மிகுதியும் உடையவராத லால்
பிறர் பேசும் விஷயங்களைக் கேட்பதற் கேற்ற வோர் கருவி யைக்
கண்டுபிடிக்க வேண்டுமென்று பலகால் பயின்று வந்தார். ஒருந ாள்
தமது கைகடிகாரத்தை வாயில் வைத்து பற்களாற் பற்றினர். த ாம்
அதற்குமுன் காதால் கேட்டிராத டிக் டிக் என்னுஞ் சத்தம் கடி கா
ரத்தினின்றும் வெளிப்பட்டுப் பற்களுக்குத் தோற்றியதால் ஆ அதி
சயமடைந்து யோசிக்கலாயினர். 'நமக்கு இதுகாறுங் காதுகே ளா
திருந்தது காதில் அமைந்திருக்க வேண்டிய நாதமேளம் அல் லது
சிரவண நாடி பழுது பட்டமையால் இருக்கலாம். இப்பே ாது
பற்களின் மூலமாய்ச்சத்தங் கிரகிக்கப் பட்டமையால் சிரவண நாடி
யின் தொழிலைச் செய்யும்படியான புலன் அதனையேற்று அறி வுண்
டாக்கியது. இதனால் காதின்வழியே யன்றி வாயிலுள்ள பற்க ளின்
வழியாகவும் சத்த உணர்ச்சியை யனுபவிக்கலாகு' மென்று அ றிந்து
கொண்டார்.

15. இதற்கேற்ப முழுதும் பரிக்ஷித்தறிய வேண்டுமென் று பற்
பல கருவிகளைச் செய்து பார்த்தார். முடிவில் இந்தியரப்ப ரே சத்
தத்தைக் கிரகிக்கும் தன்மை மிக்குடைய தென்று க ண்டார்.
அதன்பின்பு தந்தித்தபாலை யனுசரித்து மின்சாரக் கம்பிக ள் மூல
மாய்ப் பேசிக்கொள்ளலாகுமென்று கண்டறிந்தார்.

16. இக்கருவியைப் பற்றி நாம் நுட்பமாய் ஆராய்வே ாமாயின்
தேகத்ததுவத்திற்கு மிகவும் பொருந்தி யிருக்கின்றதென் று காண்
போம். எவ்வகைய கருவிகள் கண்டுபிடிப்பதற்கும் தேகத த்துவமே
காரணமா யிருப்பதால் அதனை நன்குணர்ந்தோர் எ வ்வகைய
அரிய காரியத்தையும் எளிதில் செய்து முடிக்கும் ஆற்ற லுடையவ
ராவார் என்பது இதனால் போதரும்.



# TIT-BITS.

## விநோதக் கூற்றுக்கள்.

ஔவையார் இன்னாரென்று நீங்கள் அறிவீர்களன்றோ? அவர் ஒருமாது சிரோமணி; நமது நாட்டில் கல்விகற்ற பெண்பாலார் அனைவரினும் சிறந்தவராகக் கருதப்படுகின்றனர். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை முதலிய அறநூல்கள் இவர் இவரியற்றினவே யாம்.

இந்த ஔவையார் ஒரு நாட்டிலும், ஒரு வீட்டிலும் தங்கி வசியாமல் பல விடங்களில் சென்று கல்வி நலம் பரவுமாறு செய்து வருவதே தம் வழக்கமாகக் கொண்டிருந்தனர். அவ்வாறு செல்லுமிடங்களில் வேந்தர், வறியர் என்னும் வேற்றுமையின்றியாவரையும் ஒரு படித்தாய் எண்ணி யடைந்து வந்தனர். அவர்கள் பரிந்திட்டது கூழேயாயினும் அருந்தி யகமகிழ்வர்.

ஒருகாலத்து ஔவையார், ஒரு கிராமத்தின்கண் செல்லும்போது அவ்வம்மையாருக்குப் பசிப்பிணி யதிகரித்தது. அதனால் அம்மூதாட்டி,

ஒருநா ளுணவை ஒழியென்றா லொழியாய்
இருநாளைக் கேலென்றா லேலாய் — ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

எனத் தன் வயிற்றோடு முரண்பட்டு அங்கோர் குடியானவன் வீட்டைக் குறுகித் தெருத்திண்ணையின் மீது சோர்வுற்றுக் கிடந்தனர்.

அக்குடியானவன் பசித்தோர் முகத்தைப் பார்க்க சகியாத பண்புடையவன். எனினும், அவனது இல்லாள் ஏற்றோர்க்கு ஒன்றிடக் கண்டால் இறந்துபடும் இயல்புடையவள். அவன் அவளது குணத்தைக் கண்டும் 'பேயோடு பழகுவதே போல்' அவளை மனைவியாகக்கொண்டு காலந்தள்ளி வந்தான்.

குடியானவன் தன் வயற்புறஞ்செல்ல வெளிவந்தபோது, நரைத்த மயிரும், பழுத்தவுடலும், குழித்த கண்களுமுடையவளாய் தன் தெருத்திண்ணையில் விழுந்து கிடந்த ஔவையாரைக் கண்டனன். கண்டு மனமிரங்கி, "அம்மையே! நீ யார்? உனக்கு என்னுற்றது?" என்று வினவினன்.

அப்பரிவு மொழியைக் கேட்ட ஔவையார், அவன் முக நோக்கி, "அன்பனே! பசி காதடைக்கின்றது; சிறிது நேரத்திற் பிராணன் பறந்துவிடும்போ லிருக்கிறது; கூழாயினும் ஒரு கை கொடுத்தால் குடித்துக் களை தீர்வேன்" என்றார். அதுகேட்ட குடியானவன் மனமிரங்கி, ஐயோ! யாதுசெய்வோம்; பிடாரியைப் பெண்ணாகக் கொண்டிருக்கின்றோமே! ஆயினும் பார்ப்போம்; இன்சொல்லால் யாதும் இனிதாய் முடியுமன்றோ?

— "நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாரை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்"

ஆதலால் நமது இல்லாளை இன்சொற் கூறி இரத்தலே கடமை என்று கருதி தான் மாத்திரம் உள்ளே சென்றான். சென்றவன் தன் மனையாளுக்குக் களிப்புண்டாக இச்சகம் பல பேசி அருகிருந்து, தலையில் ஈருருவி, பேன்பார்த்து காதருகில் தன் வாயை வைத்து, மெய்ந்நடுக்குற்று, நாக்குழற உதடோடு உதடசைய 'பெண்மணீ! ஒரு பழுத்த கிழவி சிறிது கூழுக்கு வருந்துகின்றாள்' என்றான்.

எனலும், அப்பெண்பேய் எழுந்து பேரிடிமுழக்கம்போல் கூவி நாயேபோல் உறுமி, "அடா பாவீ! உன் பவிஷுக்கு ஒரு விருந்தா! குடிப்பது கூழ் கொப்பளிப்பது பனிநீரா? உனக்கழுவ தல்லாமல் ஊருக்கும் அழுவா? என்று கத்தி கழநீர்ப்பானையைக் கையிற் கொண்டு அவன் தலையில் அபிஷேகஞ்செய்து, திருவலகு கொண்டு வெண்சாமரை வீசி, சுளகெடுத்து ஆலவட்டம் பறிமாறி பரிவேட்டை விடுவதுபோல் அவனை வீட்டிற்குந் தெருவிற்குமாக துரத்தி துரத்தி யடித்தாள். அது கண்ட ஔவையார் பெண்டாட்டி கொண்டு திண்டாட்டப்படும் பேதைக்கிரங்கி,

இருந்து முகந்திருத்தி யீரோடு பேன்வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப — வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினா ளோடினான் தான்.

என்றொரு செய்யுள் கூறினாள். அதனைக் கேட்ட குடியானவன் இவர் ஔவையார் என்றறிந்து, பின்னும் தன்மனைவி காலில் விழுந்து வேண்ட அவளும் மனமிரங்கி ஔவையாரை வீட்டிலழைத்து அன்ன மிட்டாள். அப்போது தமிழ் மூதாட்டி,



காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே — வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ
அன்பில்லா ளிட்ட வமுது.

என்றொரு பாட்டுப் பகர்ந்தாள். அப்பாட்டைக் கேட்ட குடியானவன் பரிந்து ஔவையைப் பணிந்தனன். அதன்மேல் ஔவையார் இவன் இல்வாழ்க்கையைப் பழித்து இப்படிப்பட்டவன் இல்லறம் விட்டுத் துறவற மடைதலே ஏற்றதென்னுங் கருத்தால்,

பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானால்
எத்தாலுங் கூடி யிருக்கலாம் — சற்றேனும்
ஏறுமா றாக விருப்பாளே யாமாயின்
கூறாமற் சந்நியாசங் கொள்.

ஏசி யிடலில் இடாமையே நன்றெதிர்
பேசு மனையாளிற் பேய்நன்று — நேசமிலா
வங்கணத்தி னன்று வலிய பகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாவதே நன்று.

என்னும் அருங்கவிகளை இயம்பிச்சென்றனர். அவனும் அத்துட்ட மனைவியைத்தொலைத்துத் துறவறம் பூண்டு இன்பமடைந்திருந்தனன்.

---

## A BRIEF ACCOUNT OF THE EAST INDIA MUSEUM.

## லண்டன் நகரத்தில் வைத்திருக்கும் இந்துதேசத்து விநோதக் காட்சி சாலை.

ஈஸ்டு இந்தியா கம்பெனி என்னும் சங்கத்தார் சென்ற 1857-ம் ௵ வரையில் ஜனங்களுக்கு எவ்விதத்திலும் நன்மையையே பாராட்டிக்கொண்டு வெகு சிறப்புடன் நமது தேசத்தை அரசாண்டுவந்தார்களல்லவா? இப்போது அவ்வரசாட்சி ராஜாங்கத்தைச் சேர்ந்துபோய் சுமார் 50 வருஷம் ஆய்விட்டபோதிலும், ஸாதாரண ஜனங்கள் அநேகமாய் இன்னும் கம்பெனியார் அரசாட்சியென்றே வியவஹரித்து வருகிறார்கள். அவ்வளவு மேன்மையுடன் அவர்கள் அரசாண்டகாலத்தில் அவர்களுக்கு லண்டன் நகரத்தில் லீடன் ஹால் என்னும் தெருவில் உத்தியோகசாலை ஒன்றிருந்தது. இப்போது அந்தச் சாலை அழிந்துபோயிருந்தாலும்,

பத்திகளை ராஜாங்கத்தாருக்கு அறிக்கைசெய்ய வேண்டுமென்று அந்த உத்தியோகத்தையும் அவருக்கே ஏற்படுத்தினார்கள். அப்போது ராஜாங்கத்தாருக்கு எப்படியாவது நியாயமானவழியாய் இந்தியாவைப் பலப்படுத்தவேண்டுமென்பது அவசியமாயிருந்தது. பின்னால் சாமான்கள், காகிதம் முதலிய அநேக காரியங்களுக்குத் தக்கதான நார்வகைகள் அநேகமாய் இவ்விந்தியாவில் விளைகின்றனவென்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். வயல்களில் பயிர்செய்யப்பட்ட தானாவுஞ்சரி, அல்லது காடுகளில் கிடைத்த தானாவுஞ்சரி, சகலவிதமான நார்களும் எவ்வளவு விலைக்கு இங்கிலாந்தில் வாங்கக்கூடும் என்று நிதானிக்கவேண்டுவது அவசியம். முன்னே அதற்கு விசாரணைத்தலைவராயிருந்த டாக்டர் ராயல் என்பவர் அதை விருத்திபண்ணுவதற்காக அநேக காரியங்கள் செய்தார். இவ்விந்துதேசத்திலுள்ள நார்வகைகளையெல்லாம் சேகரித்து அவைகளின் குணங்களையும் ஒரு புத்தகத்தில் பிரசித்தப்படுத்தினார். முதலில் அவைகளை வெவ்வேறுவகையாகப் பிரித்து அவைகள் விளையும் பூமிகளையும், அவைகளைப் பயிர்செய்யும் விதங்களையும், ஒவ்வொன்றுக்குமுள்ள வலிமையையும், அவை இந்தியாவில் விற்கக்கூடிய விலையையும் நன்றாய்த் தெரிவித்து இங்கிலாந்தில் அவைகள் இன்னின்ன வகையான கைத்தொழிலுக்கு உபயோகப்படுமென்பதையும், இவ்வளவு செலவழித்தால் அந்தச் சரக்குகள் இங்கிலாந்துபோய்ச் சேருமென்பதையும், இன்னும் அவைகளுக்கு உபயோகமான பல விஷயங்களையும் விவரமாய் எழுதிப் பிரசித்தப்படுத்தினார். அதன்படியே அந்தக் காட்சிசாலை பைப்ஹௌஸில் வைத்திருக்கும்போது பலவகையான தினுசுகள் வரவழைத்து ஒழுங்காய் வைத்திருந்தார்கள்.

அந்தக் காட்சிசாலை பைப்ஹௌஸில் வைத்திருந்த காலத்தில் இந்துதேசத்து உத்தியோகசாலை என்று ஒரு சிறந்தமாளிகை கட்டும்படி உத்தேசித்து, அப்படியே அநேகம் தொழில்கள் செய்ய உபயோகமாகும்படி அதிக விசாலமாய் வெண்மாளிகை என்னும் இடத்தில் ஒரு சாலை கட்டினார்கள். ஆயினும் அப்போது கலகங்கள் உண்டாயிருந்ததனால் இந்தக் காட்சி வைக்கத்தக்கதாயும் இவ்விந்துதேசத்துப் புத்தகங்களைச் சேகரித்துச் சிறந்த புத்தகசாலை ஒன்று ஏற்படுத்தத்தக்கதாயும் விசாலமாய் அதைச்சார்ந்த ஓரிடம் கட்டக்கூடாமற்போயிற்று. பைப்ஹௌஸ் என்னும் இடம் வேறொரு காரியத்திற்கு அவசியமாய் வேண்டியிருந்ததனால் அதிலிருந்த காட்சிசாலையை அதைவிட்டு எடுத்துவிடவேண்டியதாயிற்று. அக்காலத்



தில் ஏற்பட்ட ஒழுங்குப்பாடு சிறந்ததாயிருக்கவில்லை. அந்த உத்தியோகசாலையின் மேற்புறத்தில் பலகையறைகள் ஏற்படுத்தி அதிலே அவைகளை வைக்கும்படி ஏற்பாடாயிற்று. அதற்கு ஏறிப்போகவேண்டியவழி வெகு நெருக்கமாயிருந்தது. மேற்புறமெல்லாம் கண்ணாடியாலேயே மூடியிருந்தபடியால் பிரகாசமாத்திரம் அதிகமாயிருக்குமாயினும் காற்றுப்போக்கு இல்லாமையால் வெயிற்காலங்களில் தாபம் மிகவும் அதிகரிக்கும். அவ்விடத்தில் சென்ற 1975-ம் ௵ ஜூன்-மீ 1௳ வருஷாந்தக் காட்சிவைத்தார்கள். அதன் மேற்றளங்களெல்லாம் மேலே கண்ணாடியால் மூடப்பட்டிருக்கிறபடியால் நன்றாய்ப் பார்க்கத்தக்க விடந்தான். அடிப்புறங்களுக்கு மாத்திரம் ஒரு பக்கத்துப் பலகணி வாயில்களால்மாத்திரம் ஒளிவரவேண்டியிருந்ததனால் அவ்வளவு நன்றாயிருக்கவில்லை.

அப்போது அவர்கள் வைத்திருந்த பொருள்கள் எல்லாவற்றையும் வெளியில் காட்டவில்லை. இடமில்லாமையால் வெளியிற் காட்டாமல் அநேகம் உள்ளேயே போட்டுக்கிடந்தன. காட்சிப் பொருள்கள் முன்னிருந்ததைவிட அப்போது அதிகமாயிருந்ததுமன்றி, வரவர அதிகமாய்ச் சேர்ந்துகொண்டேயிருந்தன. இதனால் இவ்விந்துதேசத்திலுள்ள நானாவிதமான வஸ்துவகைகளும் அவ்விடத்தில் போய்ச் சேர்ந்து இருக்கின்றனவென்று யாவர்க்கும் தெரியலாம். ராஜாங்கத்துக்குரிய சாமான்கள், வர்த்தகச் சாமான்கள், பயிர்த்தொழிற் சாமான்கள், வீட்டுவேலைக்குரிய சாமான்கள், அந்தந்த ஜாதிக்குரியவை மதத்துக்குரியவை முதலிய எவ்வகைச் சாமான்களும் அபரிமிதமாய் அவ்விடத்தில் நிறைந்திருக்கின்றன. இத்தேசத்தாருக்குரிய ஆயுதவகைகளில் துப்பாக்கி, சிறுதுப்பாக்கி, கைத்துப்பாக்கி, உடைவாள், குத்துவாள், ஈட்டி, வேல், கத்தி, கேடயம், மழுமுதலிய எல்லா ஆயுதங்களுக்கும் மாதிரிகள் காணலாம். கீதவாத்தியங்களுக்குரிய கருவிகளில் பேரி, தம்பட்டம் முதலிய பேரொலிவாத்திய முதற்கொண்டு வீணை தம்புருவரையிலுமுள்ள எல்லா வகைகளையும் காணலாம். ஹிந்துக்களும் மஹமதியர்களும் உடுக்கும் எல்லாவுடைகளும், அந்தந்த உடைகளாகவும், அதே. அழகோடு சித்திரித்த படங்களாகவும் காணப்படுகின்றன. அவைகளுள் பட்டு, பருத்தி, சணல், உரோமம் முதலியவைகளால் நெய்யப்பட்ட பற்பலவித ஆடைகளின் மாதிரிகளையும் காணலாம். நார் விதைமுதலிய விருக்ஷவகைகளின் மாதிரிகளும், பிராணிவர்க்கம் தாதுவர்க்கம் இவைகளிலுண்டான பொருள்களின்

மாணிக்கம்—அந்தோ ! என் அரிய நண்ப! உனக்கென்ன விபரீத ஞானம் உண்டாகி விட்டது ! "அவனன்றி ஓரணுவு மசை



யாது" என்னும் முதுமொழியைக் கேட்டிரியாயா ? காரண மில்லாமல் காரிய முண்டாகுமா ? தெய்வமின்றிச் செகமுண்டா ? அன்றியும்,



"தீட்டுவோன் இன்றி ஆமோ சித்திரம் ?
திகழ் பொன் பாவை
ஆட்டுவோன் இன்றித் தானே
ஆடுமோ ? திவவியாழின்
மீட்டுவோன் இன்றிக் கீதம் விளையுமோ ?
சரா சரங்கள்
நாட்டுவோன் ஒருவன் இன்றி
நன்கமைந்து ஒழுகுங் கொல்லோ ?"

என்னும் பாடலையேனும் படித்ததில்லையா ? அன்றிக் கேட்டது மில்லையா ?

சுந்தரம்—இஃதெல்லாம் வீண் பேச்சும், கட்டுக் கதையுமே யன்றி, காட்சிப் பிரமாண மில்லையே.

மாணிக்கம்—அப்படியா ! காட்சிப் பிரமாணமோ வேண்டும்? புகையைக் கண்டவிடத்தில் தீயுண்டென்று அநுமானிக்க வில்லையா? அதுபோல் சிருஷ்டிப் பொருள்களைக் கண்டவிடத்து அவற்றைப் படைத்த இறைவனுண்டென்று உணரவேண்டுவ தில்லையா ?

சுந்தரம்—மறுபடியும் பழையபாடமே படிக்கிறாய். இயற்கைப் பொருளுக்கு இறைவனென்ன ?

மாணிக்கம்—பொருள்கள் இயல்பானவையாகக் காணப்படுமே யன்றி, எதுவும் தனக்குத் தானே இயல்பாய் உண்டாயிருக்கமாட்டாது. அப்படி உண்டான பொருள் ஏதேனும் உண்டாயின் சொல் பார்க்கலாம்.

சுந்தரம்—இது தானா ? ஒன்றென்ன ? எல்லாம் இயற்கையாய் உண்டானவைகளே. இதோ நிற்கும் விருட்சமும் இயற்கையா யுண்டானதே !

மாணிக்கம்—நன்று, நன்று ! விருட்சம் இயற்கையா ? நல்லது, விருட்சம் எதினின்றும் உண்டாயிற்று ?

சுந்தரம்—நல்ல கேள்வி ! இது தெரியாதா ? விருட்சம் வித்தினின்றும் உண்டாயிற்று.

மாணிக்கம்—சரி, வித்து எதினின்றும் உண்டாயிற்று ?

சுந்தரம்—என்ன ! யாரும் கேட்காத கேள்வி கேட்கிறாய் ? உனது கேள்வியைப்போலவே உனது சித்தாந்தமும் இருக்கும். இருக்கட்டும், வித்து விருட்சத்தினின்றும் உண்டாயிற்று.

மாணிக்கம்—அன்ப! அவசரப்படாதே. கருத்தைக் கவனி; விருட்சம் வித்தினின்றும் உண்டாயிற்று; வித்து விருட்சத்தினின்றும் உண்டாயிற்று என்றால் இவற்றுள் முதல் உண்டானது வித்தோ? விருட்சமோ?

சுந்தரம்—(தனக்குள் ஓ! ஓ! இதேது ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டோம். முதல் வித்து உண்டாயிற்று என்போமானால், அவ்வித்துண்டான ஆதி விருட்சமிருந்திருத்தல் வேண்டும். விருட்சம் முதல் உண்டாயிற்று என்போமானால், அவ்விருட்சம் உண்டாவதற்கு முன் வித்து இருந்திருத்தல் வேண்டும். இஃதென்ன, இரண்டிடத்தும் இடர்ப்படுகின்றதென்று சிறிது போழ்து வாய்வாளாமை மேற்கொண்டிருந்து முடிவில் ஈனசுரத்தோடு) எனக்கொன்றுந் தோன்றவில்லை.

மாணிக்கம்—சுந்தர! கல்வி நலம் வாய்ந்த நீயே கடவுளில்லை என்று கருதுவையேல், புல்லறிவாளர் புகல்வதற்கு ஐயமென்ன? யாதும் தலைவனின்றித் தானே அமையாது. மெய்யறிவே தம் வடிவமாக வுடைய கடவுள், ஆன்மாக்கள் பொருட்டு வழங்கியுள்ள பொருள்களை யுன்னுந்தோறும் அப் பரமபிதாவினது கருணைத்திறம் நன்கு விளங்கும். ஆதலின், அப் பெருமானிடத்து நீங்காத அன்பு பூண்டு, மனத்தால் நினைந்தும், வாக்காற் பாடியும், காயத்தால் வழிபட்டும் வணங்குவதே இம்மானிடப் பிறவி எடுத்ததன் மாண்பாகும். அவ்வாறு இயற்றாதவர் அரிதிற்பெற்ற அமுதத்தைக் கமரில் உகுப்பதேபோல், இவ்வுடலைப் பல்வகையினும் பாழாக்கி அல்லலுற்று அழிந்துபடுவர்.

சுந்தரம்—மெய்தான், மெய்தான். அந்தோ என் செய்வேன்! என் வாணாளை வீணாளாக்கிக் கழித்தேனே. யான் முன்பு தெய்வ நிச்சய முடையவனாகி, பாவத்தை நீக்கி, புண்ணியத்தைக் கைக்கொண்டு நடந்து வந்தேன். பூதபௌதிக சாத்திரங்களைப் பயின்ற பின்னர், எல்லாம் இயற்கையே யென்றெண்ணி இறுமாந்தேன். இறுமாப்பெல்லாம் இன்றோடொழிந்தன. இன்று நீ கற்பித்த நற்புத்தியால் நன்னெறி யறிந்தேன்.

மாணிக்கம்—தோழ, சுந்தர! சென்றன வுன்னிக் கன்றுவது நன்றன்று. நீ மாத்திரமேயன்று, சிறுவரிற் சிலர், ரசாயன முதலிய நூல்களிற் சிறிது கற்ற மாத்திரத்தானே முற்று முணர்ந்தவர்போல் தருக்கி, தம்மைத் தாமே மதித்து, "கடவுளேது, கிடவுளேது? கட்டுக்கதை; எல்லாம் ஏட்டுச் சுரைக்காய்" என்று வாசாஞானம்



பேசும் வழக்குடையவர்களாகின்றனர். இஃது நிரம்பாக் கல்வியால் நேரும் தீக்குணமாம். அன்றி தாம் அழிவதற்கே இது வழியாகும்.

சுந்தரம்—என் கண்ணிற் சிறந்த கருமணியன்ன நேயனே! மாணிக்கமென்னு மாண்பமர் பெயருக்கேற்க மொழிந்த மாணிக்க வாசகத்தை, என் வாழ்நாள்வரையிலும் மறவேன். என்னை ஈடேற்ற மொழிந்த இனிய மொழிக்குமாறு யாது புரிவேன். மழைக்குக் கைம்மாறு செய்வாரிலரேபோல் நின் நட்பை என்றும் நாடியிருத்தலன்றி மற்றொன்றும் செய்வதறியேன். வந்தனம், விடை கொடு.

மாணிக்கம்—யாதும் கேட்டதனாற் பயன் படாது. கேட்டவற்றைச் சிந்தித்தலால் விளையும் பயனுக் களவில்லை; ஆகலான், என்றும் நன்னூல்களைக் கையாடி, அவற்றிற் கூறியவாறே விதிவிலக்குகளை யறிந்தொழுகி, எல்லாம் வல்ல இறைவனை உவப்பித்து, இன்பமடைந்து வாழ்தல்வேண்டும். போய்வருக, வந்தனம்.

## THE COINS.

## நாணயங்கள்.

பொன் வெள்ளி முதலிய லோகங்களுக்கு இப்பொழுது உண்டாயிருக்கிற விலை இயல்பாயுண்டானதேயன்றி ஏற்பாடாய் வந்ததல்ல. மற்றப் பொருட்களுக்கு எவ்வாறோ, அவ்வாறே இவைகட்கும் இவற்றைச் சம்பாதித்தற் பொருட்டுண்டாகும் உழைப்பு முதலியவற்றிற்குத் தக்கபடி விலை நிருமாணிக்கப்படுகிறதே தவிர, ராஜாங்கத்தாராவது மற்றியாராவது தங்கள் இஷ்டப்படி இவைகளுக்கு விலை ஏற்படுத்துகிறதில்லை. அப்படியே இவற்றால் செய்யப்படும் நாணயங்களுடைய விலையும் துரைத்தனத்தாருடைய ஏற்பாடல்ல. எப்படியெனில், ஒரு ரூபாயும் ரூபாயெடை வெள்ளியும் சற்றேறக் குறையச் சரிவிலையுள்ளனவாம். அப்படியே ஒரு பவுனுக்கும் பவுன் எடை பொன்னுக்கும் வித்தியாசமில்லை. அப்படியானால் லோகங்களை நாணயங்களாக அடிப்பதில் பலனென்ன? இரண்டிற்கும் ஒரு விலைதானே. அவ்விரண்டில் எதைக்கொடுத்தாலும் பலன் ஒன்றாய்த்தான் இருக்கிறது. பின்னை லோகங்களைத்தானே பண்டமாற்றுக்கு உபயோகப்படுத்தினால் என்ன? நாணயங்களைச் செய்வதிற் பிரயாசத்தையும் காலத்தையும் வீணாய்ச் செலவழிப்பானேன் என்று சிலர் கேட்பார்கள். ஆனால் நாணயங்களால் பண்டமாற்றுக்கு மிகுந்த பிரயோஜன முண்டென்ப

தற்குச் சந்தேகமில்லை. பூர்வத்திலிருந்த ஜனங்கள் பொன் வெள்ளிமுதலியவற்றைத்தான் நிறுத்துக்கொடுத்து வியாபாரமுதலிய காரியங்களை நடத்திவந்தார்கள். ஆனால், ஜனங்கள் அறிவில் தேறி நாகரீகவிர்த்தியடைந்து, பல தொழில்களிலும் சமர்த்தராகவே, மேற்கூறிய முறை கால நீடிப்பும் வசதியின்மையு முள்ளதென்று அநுபவத்திற் கண்டு, அதைவிட்டு நாணயங்களை உண்டு பண்ணி வழங்கத் தலைப்பட்டனர்.

லோகங்களை நாணயங்களாகச் செய்யாமல் அந்தப்படியே வழங்கவேண்டு மானால், நாம் போகும் எவ்விடங்களுக்கும் தராசும் படியும் சுமந்துக்கொண்டு போகவேண்டும். அன்றேல் கொள்வன கொடுப்பன ஒன்றும் நடவாது. கோலும் நிறையும் கூடக் கொண்டுபோனாலும் அது எவ்விடங்களிலும் ஒரே அளவாயிரா விட்டால், ஓயாத சங்கடத்துக்கும் சந்தேகத்துக்கும் இடமுண்டாகும். படியெல்லாம் எங்கும் ஒன்று போலவேயிருக்கிறதென்று பாவித்துக்கொண்டாலும், வெள்ளியும் பொன்னும் விலையுயர்ந்தனவாதலால், வஞ்சகர் அவற்றுடன் விலைதணிந்த லோகங்களைக் கலந்துருக்கி மோசஞ்செய்ய ஏதுவுண்டு. இந்த வஞ்சனைக்குள் அகப்படாதிருக்கவேண்டுமானால், லோகங்களை உரைத்து பாற்றுப்பார்த்து நிதானிக்கும் சக்தி ஒவ்வொருவருக்கும் இருந்தால் அல்லது முடியாது. அசாத்தியமான இந்த விஷயங்களெள்லாம் சாத்தியமென்றே வைத்துக்கொண்டாலும், வாங்கும் போதும் கொடுக்கும் போதும் ஒவ்வொரு சமயத்திலும் நிறை உரை பார்த்து நிதானிப்பதில் எவ்வளவுகாலம் வியர்த்தமாகும், எத்தனை சங்கடங்கள் உண்டாகும். தொழில் எவ்வளவு மந்தமாய் நடைபெறும். ஆதலால் இப்படிப்பட்ட இடையூறுகள் ஒன்றுக்கும் இடமில்லாமல், பார்த்தவுடனே பண்டிதபாமராளனைவரும் இவ்வளவென்று ஐயமற அறிந்துகொள்ளத்தக்க நாணயங்களைச் செய்து உபயோகப்படுத்துகிறது எவ்வளவு அதிசயமும் பிரயோசனமுமான காரியம்.

அப்படியானால் அவரவரே நாணயங்களை அடித்து வழங்கலாமே அவற்றைத் துரைத்தனத்தார் தான் செய்யவேண்டுமென்கிற நியதி என்னத்துக்கு? மற்றவர்களும் அவைகளைச் செய்தாலென்ன? என்று விசாரித்தால், இது காரியம் அடியில்வரும் நியாயங்களால் தெளிவாகும்.

முதலாவது: நாணயங்களுக்கு இருக்கவேண்டிய பிரதான லட்சணங்கள் இரண்டு. அவை ஒரே பரிமாணமும் ஒரே நிறையுமாம். இவ்வளவென்று ஒரே பார்வையில் எவருக்கும் எளிதிற் புலப்படும்



படி நாணயங்களெல்லாம் தன் தன் இனப்படி ஒரளவுள்ளனவாயிருப்பது அவசியம். அவரவரே அவற்றைச் செய்கிறதானால் நாணயங்களெல்லாம் ஒன்றுபோலிருப்பது அருமை. ஒரு வேளை அது சாத்தியமாயினும், அந்த நாணயங்களை சுத்த நாணயங்களென்று யாவரும் நம்பி நிறை உரை பாராமல் அங்கீகரிப்பது அசாத்தியமே. ஒவ்வொரு மனுஷனும் பழுதற்ற உண்மையும் பரிபூரண யோக்கியதையும் உடையவனாயிருக்கிறானென்று எல்லோருக்கும் நம்பிக்கையிருந்தாலொழிய இது காரியம் கிஞ்சித்தும் நடந்தேறாது. இப்பொழுது நாம் காண்கிறபடி மனுஷர்களுக்குள் எவ்வளவு திருட்டும் வஞ்சகமும் இருக்கின்றன. இந்த ஸ்திதியில் நம்பிக்கை யுண்டாவது எப்படி? எவரும் நாணயங்களை அடிக்கலாமென்றிருந்தால் மிகவுஞ் சொற்பப்பேரைத் தவிர மற்றெல்லாரும் சொந்தலாபத்தை இச்சித்து நாணயங்களை எடையிற் குறைக்கவும், அவற்றோடு விலைதணிந்த வேறு லோகங்களைக் கலந்து கள்ள நாணயஞ் செய்யவும் துணிவார்களென்பதற்குக் கொஞ்சமென்கிலுஞ் சந்தேகமுண்டா? மேலும் அப்படி செய்கிறபட்சத்தில் நாணயங்களின்மேல் நம்பிக்கையில்லாமல் நமது கைக்கு வருகிற ஒவ்வொன்றையும் நிறுக்கவும், உரைக்கவும், விலை பார்க்கவும் ஆரம்பிப்போம். அப்பொழுது நாணயங்களுக்கு பதிலாக லோகங்களை வழங்குகிறதில் எவ்வளவு நஷ்டமும் சங்கடமும் உண்டாயிருந்தனவோ, அவ்வளவு நஷ்டமும் சங்கடமும் மறுபடியுமுண்டாகும். அதனால் நாணயங்களைச் செய்வதில் கொஞ்சமும் பலனில்லையென்று முடியும். ஆனால் இம்முறையைவிட்டு ராஜாங்கத்தார் தாமே பொறுப்புதாராயிருந்து நாணயங்களையெல்லாம் அதனதன் இனப்படி ஒரே அளவும் நிறமுமுடையனவாகச் செய்து, அதை யாவருக்கும் உறுதிப்படுத்திக் காட்டும்படி அவைகளின்மேல் ராஜமுத்திரையும் பதித்து நாணயங்களை வழங்குவார்களாகில், அப்பொழுது மேற்காட்டிய வஞ்சனை சூது ஒன்றுக்கும் இடமில்லாமல், யாவரும் நாணயங்களை பார்த்தவுடனே இவ்வளவு என்று திட்டமாய் அறிந்து நல்ல நம்பிக்கையோடே வியாபாரமுதலிய காரியங்களை நடத்திவர வகையுண்டு; தொழில்களும் வெகு துரிதமாய் நடந்தேறும்; வஞ்சனைக்கும் திருட்டுக்கும் இடமிராது. காரியம் இப்படியிருப்பதினாலே தான், ராஜாங்கத்தார் நாணயம் அடிக்கும் பாத்தியதையை தங்களிடத்தில் வைத்துக் காத்துவருகிறார்கள். இக்காரியம் தேசத்திற்கு இவ்வளவு பெரும்பயனுள்ளதாயிருப்பதினாலே தான் இந்த ஒழுங்குக்கு மாறாகத் தாமே நாணயமடிக்கத் துணியும் மனிதர்களுக்குக் கொடியதண்டனை விதித்திருக்கிறது. இதனால் சகலமான பேர்

களுக்கும் மிகுந்த நன்மையும், காரியாதிகளை நடத்துவதற்கு அதிக அநுகூலமு முண்டேயொழிய, கொஞ்சமேனும் 'கேட்டுக்காவது அசியாயத்திற்காவது இடமில்லை.

---

## NEWS & NOTES.

### சமாசாரக் கொத்து.

திருத்தப்பட்ட திரவிய சகாய சட்டமும், வித்தியாவிதியும் வெளியிடப்பட்டுள்ளன அவற்றுள் மாறுதல் மிக்குக் காணப்படு மாதலின் உபாத்தியாயரானோர் அனைவரும் அதனை ஏற்று வாசித்து தக்கனபுரிதல் இன்றியமையாத கடனாகும்.

* * *

இக்காலத்தே வித்தியாதிகாரிகள் கிண்டர் கார்டன் விஷயமாய் மிக்கு உழைத்து வருகின்றனர். அவ்வுழைப்பை உபாத்தியாயர் களும் நன்குணர்ந்து பிரயாசப் படுவார்களாயின் இப்பாடம் தலையெடுத்து விளங்கும். இதனில் களிமண் உருச்செய்தல் முதலிய தொழில்களை அமைப்பது சாலச் சிறப்பாம்.

* * *

எலிமெண்டரி உபாத்தியாயர்கள் சங்கம்.—சென்னையில் சென்ற மாதம் 22உ மேற்கண்ட சங்கத்தின் கூட்டம் நடந்தேறப்பெற்றது. அக்காலத்து சங்கம் செவ்வனே நிறைவேறுவதற்கான பல சட்ட திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. பின்பு ம-ா-ா-ஸ்ரீ. எம். சுப்பிர மணிய சாஸ்திரியார் பி. ஏ. எல். டி., (சென்னை ஜார்ஜ் டவுன் ரேஞ்சு சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்) பிரோபல் துரையவர்களது அபிப்பிராயத்தை அநுசரித்து ஒரு வியாசம் வாசித்து அப்பாடத்தின் குணங்களை உபாத்தியாயர் அனைவரும் அறிந்து கொள்ள உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டினர். இவரைபோல் மற்றையோரும் ஆங்காங்கு உழைத்துவரின் உத்தமமாம். இக் கூட்டத்திற்கு. பிரெஸிடென் சிடிவிஷன் அஸிஸ்டெண்டு இன்ஸ் பெக்டர் காலகன் துரையவர்கள் சபாநாயகராக விருந்தனர்.

* * *

குறிப்புப்புத்தகங்களை உபயோகித்தல் கூடாதென்று டைரெக்டர் துரையவர்கள் மிகக் கடுமையான உத்தரவுகளை ஏற்படுத்தி வருகிறார். அதனால் உபாத்தியாயர்கள் இது விஷயமாய்க் கவலை செலுத்துவது அவசியமாகும். உபாத்தியாயர்கள் வீட்டில் சிறிது நேரம் பாடத்தைப் பார்த்துக்கொண்டு வந்துவிட்டால் இக்குறிப்புப் புத்தகத்தின் உதவியை உபாத்தியாயர்களேனும் பிள்ளைகளேனும் தேட வேண்டிய அவசியம் இராமலே ஒழியும். இதைப்பற்றி மறுமாத சஞ்சிகையில் பரக்கக் காட்டுவோம்.



* * *

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட பாடபுத்தகங்களின் பட்டியொன்று சுதேசபாஷையில் வெளியிடப்படாமை பெருங் குறைவே. இதனால் ஆங்கிலமறியாத கிராம பாடசாலை உபாத்தியாயர்கள் பெரிதும் இடர்ப்படுவதன்றி தங்கள் சுயேச்சையை அநுசரியாமல் மற்றையோருடைய அபிப்பிராயத்தைக் கொண்டு நடக்க வேண்டியவராகின்றனர். இதனை யகற்ற, துரைத்தனத்தார் தக்கது புரிவர் என்று நம்புகின்றோம்.

* * *

தற்காலத்தில் பல பிரைமரி பாடசாலைகளிலும் உயர்தரப் பாடசாலைகளிலும் சிறுவர்களின் உபயோகத்திற்கென சிறு தோட்டங்கள் வைத்துப்பரிபாலித்து வருகின்றனர். ஆனால் உபாத்தியாயர்கள் தாவர சாத்திரத்தைப்பற்றிய அறிவு சிறிது மில்லாதவர்களாக இருப்பதனால், அத்தோட்டத்தினால் உபாத்தியாயருக் காயினும் பிள்ளைகளுக்காயினும் எவ்வகைய பயனும் உண்டாவதாகக் காணப் படவில்லை.

* * *

தற்காலம் வெளியிடப்பட்டுள்ள வித்தியா விதிப்படி பாடசாலைகள் மூன்றுவகைப் படுமாம். அவை, எலிமெண்டரி, செகண்டரி பாடசாலைகளும், கலாசாலைகளும் என்பனவாம். எலிமெண்டரி பாடசாலையில் ஏழாம் வகுப்பு வரையில் உண்டு. எலிமெண்டரி பாடசாலையின் ஏழாம் வகுப்பில் வாசித்த ஒரு மாணுக்கன் செகண்டரி பாடசாலையில் சேர விரும்பினால் நான்காம் வகுப்பில் சேர வேண்டுமாம். ஆதலால் பெற்றோர் இது விஷயமாய்க் கண்விழித்துக் கவனித்துப் பார்க்கவேண்டும். அதாவது ஆரம்பத்தில் தன் குமாரனை எவ்வளவுவரையில் படிப்பிக்கக்கூடும் என்பதைத் தீர்மானிக்கவேண்டும். ஏழாம் வகுப்பு வரையில்தான் படிப்பிக்கக் கூடும் என்றுணர்ந்தால் எலிமெண்டரி பாடசாலையில் விடவேண்டும். மேலும் படிப்பிக்கக் கூடுமானால் முதலெடுப்பிலேயே செகண்டரி பாடசாலையில் சேர்க்கவேண்டும்.

அவ்வாறின்றி தம் மனம் போனவாறு ஆராய்ந்தறியாமல் செய்வார்களாயின் கால நஷ்டமும், பணச்செலவும் நேரிடும். மற்றும் இதனால் உண்டாகும் குண குணங்களை மறு சஞ்சிகையில் அறியலாகும்.

---

## முக்கிய கவனிப்பு.

பத்திராதிபருக்கு நேர்ந்த எதிர்பாராத சில அசந்தர்ப்பங்களால் இவ்விரண்டு சஞ்சிகைகளையும் ஒன்று சேர்த்து அனுப்பவேண்டிய காலதாமதம் நேரிட்டது. ஆகலின் கையொப்ப நேயர்கள் வருந்தாது மன்னிக்க வேண்டுகின்றனர். ஆனால் தமக்கு நேர்ந்த இடையூற்றை ஒரு கார்ட்டின் மூலமாய்க் கையொப்ப நேயர்களுக்குத் தெரியாமல் விட்டமைக்கும் சாலவருந்துகின்றனர். லாபத்தைக் கருதாது உபகாரார்த்தமாகவே இப்பத்திரிகை நடத்தப்படுதலின் இது எவ்வாற்றானும் தடைபடாதென்பதை மனக்களிப்போடும் அறிவிக்கின்றனர்.

---

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
1 NOV 1906
MADRAS.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்
மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 2. | 1906ஆ செப்டம்பர்மீ | மாதம் 4.

## MAT PLAITING.

### பாய் முடைதல்.

இத்தொழிலின் நோக்கமும் பிரயோஜனமும் :— பிரோபலின் கொடைகளுள் சிறந்தவற்றுள் இதுவுமொன்று. இரு கைகளும் உபயோகப்படுவதால் கைப் பழக்கத்திற்கு ஏற்றது. பலவித வர்ணத் தாள்களால் ஆக்கப்பட்டு அழகா யிருப்பதால் குழந்தைகளுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது. எண் அறிவிற்கு மிகவும் ஏற்றது. எழுத்துக்கள் போலவும் முடையலாம்.

வர்ணக் காகிதங்களால் பின்னுவதை ஒவ்வொரு பிள்ளையையும் அதற்கென்று ஏற்படுத்திய ஓர் புஸ்தகத்தில் ஒட்டிக்கொள்ளச் சொல்லலாம். அல்லது காகித அட்டைகளில் ஒட்டி வகுப்பில் தொங்கவிடலாம். ஓலைகளால் முடையும் மாதிரிகளை கயிற்றில் கோர்த்து கழிகளில் தொங்கவிடலாம். வர்ணக்காகிதங்களைவிட பனைஓலை முதலியவை நமது நாட்டில் சுலபமானதால் அவற்றால் செய்யப் பழகுவது நலம் அவை உபயோகமுள்ளவை.

### பாலர்வகுப்பு மாதிரிகள்.

**காகித மாதிரியில் :—**

1. ஒன்று மேல் ஒன்று கீழ்
2. இரண்டு மேல் இரண்டு கீழ்
3. மூன்று மேல் மூன்று கீழ்

ஓலை மாதிரி

4. ஒன்று மேல் ஒன்று கீழ்
5. இரண்டு மேல் இரண்டு கீழ்
6. ஒரு பறவைக் கூடு

கதை.

முன்னொரு காலத்தில் ஒரு அணிற்பிள்ளையானது கடற்கரை யோரத்திலிருந்த ஒரு மரத்தில் தானும் தன் மனைவி மக்களும் வசிப்ப தற்காக கூடு கட்டிற்று. அந்தக் கூட்டில் தன் பிள்ளைகளையும், பெண் சாதியையும் வைத்துவிட்டு மழை காலத்திற்கு வேண்டிய ஆகா ரத்தைத் தேடுவதற்கு ஆண் அணில் வெளியே போயிருந்தது. அத் தருணத்தில் ஒரு பெருங்காற்று அடித்து மரம் சாய்ந்து சமுத்திர ஜலத்தில் விழுந்து விட்டது. பெண் அணிலும் அதன் குழந்தைகளும் கூட்டிற்குள் இறந்துபோய் ஜலத்தில் மிதந்துக்கொண்டிருந்தன. சில நாள் சென்று ஆண் அணில் வந்தது. மரம் சாய்ந்துபோய் மனைவி மக்களுடன் கூடு ஜலத்தில் மிதந்துக் கொண்டிருப்பதைக் கண்டு துக் கப்பட்டது. பிறகு யாதொரு தீங்கும் செய்யாத தன் பெண்ஜாதி யும் குழந்தைகளும் இறந்தது கடவுளுக்குத் தகாதென்று நினைத்து கடவுளைப் பற்றித் தவம் செய்ய ஆரம்பித்தது. விடா முயற்சியினால் எந்தக் காரியத்தையும் ஜெயித்துவிடலாம் என்று உறுதிகொண்டு கடல் நீரை எல்லாம் வற்றச் செய்யக் கருதித் தன் வாலை ஜலத்தில் நனைத்து நனைத்து தரையிலே உதிர்த்து சிவனை தியானம் செய்து தபசுபண்ணிற்று. அணிலின் விடா முயற்சியையும் பக்தியையும் கண்டு சந்தோஷப்பட்டு பரமசிவன் மரத்தை கூட்டிலுள்ள அணில்களுடன் எழுப்பிக்கொடுத்து அணிலின் முதுகைத் தடவிக்கொடுத்தார். அன்று முதல் அணில் இனங்களுக்கெல்லாம் முதுகில் கோடு உண் டானதாக சிலர் சொல்லுகிறார்கள். விடாமுயற்சியினால் எந்தக் காரி யத்தையும் ஜெயிக்கலாம்.

கதைக்கும் தொழிலுக்கு முள்ள சம்பந்தம் :— அணில் தன் கூட் டிற்குள் குழந்தைகள் படுத்துக் கொள்வதற்காக மேலே காட்டி யிருக்கும் பலவித பாய்கள் பின்னிப்போட்டதாக சம்பந்தப் படுத்த லாம்.

விளையாட்டு :— ஒருவனை ஆண் அணிலாகவும் சில பையன்களை பெண் அணிலும் குஞ்சுகளாகவும் வைத்து ஆண் அணில் வெளியில் போயிருப்பது போலும், மற்றவர்கள் செத்துக் கிடப்பது போலும், தவம் செய்வதுபோலும், சிவன் வேஷம் பூண்ட ஒரு பையன் இறந் தவர்களை எழுப்பிக் கொடுப்பதுபோலும் கதையிலுள்ள படி நடத்திக்காட்டச் செய்க.



பாட்டு.

இராகம் :— செஞ்சுருட்டி.

1. சமுத்திரத்திற் கடுத்த மரத்தில் சககுடும்பமாய்
கூடுகட்டி வசித்து வந்த குணமுள்ள அணிலும்
மனைவி மக்கள் வீடுவிட்டு மாரிகாலத்து
வேண்டும் பொருள் தேடிவர வெளியில் போயிற்றும்

2. சூரைக்காற்று சுழற்றி வீச கூட்டுடன் மரம்
வேருடனே விழுந்து கடலில் மிதக்கக்கண்ட அணில்
ஐயோ பாவம் மனைவிமக்களும் அழிந்தாரே என்று
சம்போ சிவ சிவா வென்று தபசு பண்ணிற்றும்.

3. ஐயன் சிவன் அணில் தபசுக்கு ஆனந்தப் பட்டு
கையால் அதன் முதுகைத் தடவி கட்டி யணைத்துதன்
மனமிரங்கி மனைவி மக்களை மரத்துடன் எழுப்பி
இன்பமான உன் சுற்றத்துடனே இனிது வாழ்க என்றார்

4. கடவுள் தனை நம்பினோரை கைவிடா ரெனும்
அடையாளமாய் அணிலின் முதுகில் அமைத்தகுறி என்று
புடவிதனில் வாழுகின்ற பூர்வ சைவர்கள்
இடைவிடாது எடுத்து ஓதும் இனிய கதையிதே.

அபிநயக் குறிப்புகள்.

1. வலது கையைத் தூக்கி தலையை அண்ணாந்து பார்க்க.
2. வலக்கையை நீட்டி வலது பக்கம் ஆட்டுக.
3. விரலால் சுழற்றிக் காட்டுக.
4. மிதைப்பதைப் போல இருகையாலும் காட்டுக.
5. இருமுழங் கைகளையும் பக்கங்களில் இருத்திக் கொண்டு ஜெபம் பண்ணுவது போலக் காட்டுக.
6. கையால் தடவுவது போலக் காட்டுக.
7. மூன்று விரல்களால் கோடு கிழிப்பது போலக் காட்டுக.

முதல் வகுப்பு மாதிரிகள்.

**காகித மாதிரியில் :—**

1. ஒன்றுமேல் இரண்டு கீழ்,
2. ஒன்று கீழ் ஒன்று மேல்

3. இரண்டு மேல் ஒன்று கீழ்
4. இரண்டு கீழ் ஒன்று மேல்

ஓலையால் :—

5. இரண்டு மேல் ஒன்று கீழ்
6. ஒன்று கீழ் இரண்டு மேல்
7. ஒரு கிலு கிலுப்பை
8. ஒரு சிறிய புட்டி
9. ஒரு கிளி

## கதை.

ஒரு அரசனுடைய படுக்கை யறையில் கட்டில் போடப்பட்டிருந்தது. அக்கட்டிலின் மேல் பஞ்சணை மெத்தைகளும் சில நேர்த்தியான சித்திரப் பாய்களும் பரப்பப்பட்டிருந்தன. ஒரு பாயின்மேல் ஒரு சீலைப்பேன் வசித்தது. அரசன் அரண்மனையை சுத்தம் செய்து வெள்ளையடித்தார்கள். அவ்வீட்டில் வசித்த அனேக மூட்டுப் பூச்சிகள் அதனால் இறந்துபோயின. இதற்குப் தப்பி பிழைத்த ஒரு மூட்டுப் பூச்சி எங்கும் தங்குவதற்கு இடம் அகப்படாமல் பாயிலிருந்த சீலைப் பேனிடத்திற்குப்போய் தனக்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. அதற்கு சீலைப்பேனனது " நீ சமயோசித மறியாத மூடன்; உன்னைச் சேர்த்தால் விபரீதம் வந்துவிடு " மென்றது. அதற்கு மூட்டுப்பூச்சி " நான் தாங்களிட்ட கட்டளைப்படி நடக்கிறேன்; யாதொருதீங்கும்செய்வதில்லை " என்றது. சீலைப்பேன் பிறகு இடம் கொடுத்தது. அன்று இராத்திரி அரசன் படுக்கைக்கு வந்து படுத்தான். உடனே மூட்டுப்பூச்சி கடிக்க ஆரம்பித்தது. அரசன் திடுக்கிட்டு எழுந்தான். வேலைக்காரர்கள் பாயை எடுத்து உதரிப் பார்க்க ஆரம்பித்தார்கள். மூட்டுப்பூச்சி அதிவேகமாய் ஓடி கட்டில் காலில் ஒளித்துக் கொண்டது. சீலைப்பேன் வேலைக்காரர்கள் கையில் அகப்பட்டுக் கொண்டது. இதுதான் நமது அரசனை கடித்தது என்று அதைக் கொன்று போட்டார்கள். சாகுந்தருவாயில் அந்த சீலைப்பேன் தான் துஷ்டனாகிய மூட்டுப்பூச்சிக்கு செய்த உபகாரத்தினால் உயிரிழப்பதாகிய இந்தக் கஷ்டம் தனக்கு நேர்ந்ததென்று சொல்லிக் கொண்டே பிராணனை விட்டது. துஷ்டர்களுக்கு உபகாரம் செய்வதால் தீங்கு நேரிடுமே யொழிய நன்மை நேராது.

**கதைக்கும் தொழிலுக்கு முள்ள சம்பந்தம் :**—மாதிரியில் வரும் நானாவித பாய்கள் அரசன் படுக்கை யறையின் கீழ் பரப்பப் பட்டிருந்த தாகவும் ஒரு நேர்த்தியான பாய் மெத்தையின் மீது போட்டிருந்ததாகவும் அதில் சீலைப்பேன் வசித்ததாகவும் சம்பந்தப் படுத்தலாம்.



**விளையாட்டு :**— பையன்களால் செய்யப்பட்ட சில பாய்களை பெஞ்சியின்மேல் பரப்பி அதன் கீழ் ஒரு பையனை சீலைப்பேன்போல் தங்கியிருக்கச்சொல்லி மூட்டுப் பூச்சி வேஷம் பூண்ட ஒரு பையனை இடம் கேட்பதுபோலும் ராஜன் வந்து படுப்பது போலவும் மூட்டுப் பூச்சிக் கடிப்பது போலும் பாவனை பண்ணி பிறகு பாய்களை தரிப்பார்ப்பது போலவும் சீலைப்பேனைக் கண்டுபிடிப்பது போலவும் நடத்திக்காட்டுக.

## பாட்டு.

இராகம் : நாதநாமக்கிரியை (சம்பாஷணையாய்)

மூட்டுப்பூச்சி :— தனியாக வந்து தவிக்கிறேன் சற்று
தங்கவிடம் தருவீரோ

சீலைப்பேன் :— சமயமறியாத மூடனும் உன்னைச்
சேர்பவன் வீண்பெருங் கேடனும்.

மூட்டு :— உந்தன் சொற்படி கேட்டு நடக்கிறேன் நான்
சும்மா ஒடுங்கி நடக்கிறேன்

சீலை :— அப்படியாகில் நீ தூங்கிவிடு உன்றன்
ஆத்திரச் செயல்களை நீங்கிடு

மூட்டு :— வந்தனம் வந்தனம் தந்தனன் உன்றன்
வள்ளல் குணத்தை நான் மெச்சியே
அப்புறம் ராஜன் படுக்கையில் அவன்
ஒப்புடன் வந்து சயனித்தான்.

## முடுகு.

பொரிக்கு பொடுக்கென மூட்டுப் பூச்சியும்
வெடுக்கு வெடுக்கென கடிக்க அரசனும்
திடுக்கு திடுக்கென திரும்பி பார்த்திட
சடுக்கு சடுக்கென வேலைக்காரர்கள்
படுக்கை உதறியே தட்டிக் கொட்டிட
ஒடுக்கில் மூட்...டையும் ஒளிந்து போய் விட
நடுக்கை வேட்டை...யில் நலிந்த சீலைப்பேன்
பிழைக்க வழியின்றி அவர்கள் கைப்பட

அநியாய மரணம் அடைந்ததே அது
தனியாக அகப்பட்டு மாண்டதே
துஷ்டர்க்கு உபகாரம் செய்திட்டால் இந்த
கஷ்டம் வந்திடுமென்று காட்டியே

### அபிநயக் குறிப்புக்கள்.

1. இரண்டு விரல்களின் நுனியை கட்டைவிரலால் தொட்டு சிறிது இடம் கேட்பது போலக்காட்டுக.
2. இரு கைகளையும் கூப்பி நமஸ்காரம் செய்வது போல் காட்டுக.
3. வலது கையில் தலையைச் சாய்த்து படுப்பதுபோலக் காட்டுக.
4. இருவிரல் நகங்களை ஒன்றாய்ச் சேர்த்துக் கடிப்பது போல் காட்டுக.
5. முதுகை நெளித்து முகத்தைப் பின்பக்கம் திருப்பிக் காட்டுக.
6. இரு கைகளாலும் படுக்கை உதருவதுபோலக் காட்டுக.
7. உள்ளங் கைகளை ஒன்றின்மேல் ஒன்றைவைத்துக் காட்டுக.

### 2-வது வகுப்பு மாதிரிகள்.

**காகிதத்தில் :—**

முதலில் சொன்ன வாய்பாடுகளை மாற்றி உபயோகிப்பதால் வரக்கூடிய ஏதாவது ஆறு அழகிய மாதிரிகள்.

ஓலையால்:—

| | |
|---|---|
| 1. ஒரு சிறிய கூடை | 4. தாமரைப் பூ |
| 2. ஒரு தட்டு | 5. சதுரப் பெட்டி |
| 3. ஒரு குல்லாய் | 6. [illegible] மூடி |

### 7. கூந்தல்.

### கதை.

ஒரு ஊரில் அநேக குறவர்கள் குடிசைபோட்டுக் கொண்டு வசித்து வந்தார்கள். அவர்கள் தினந்தோறும் காலையில் தங்கள் ஜாதித்தொழிலாகிய கூடை, புட்டி, தட்டி, பாய் முதலியவைகளை பின்னுவது வழக்கம். இப்படி அவர்கள் ஒருநாள் தெருவில் உட்கார்ந்து கொண்டு பலவித சாமான்களை பின்னிக் கொண்டிருந்தார்கள்.



அவர்கள் குடிசைக் கருகாமையி லிருந்த ரஸ்தாவின் வழியாய் அவ்வூரிலுள்ள ஒரு முரட்டுப் பிரபுவானவர் உலாவவந்தார். தன்னைக் கண்டவுடன் குறவர்கள் எழுந்து மரியாதை செய்யவில்லை யென்று கோபங்கொண்டு அங்கிருந்த குறவர்க ளெல்லாரையும் அடித்து குடிசையைப் பிரித்து நெருப்புவைத்துவிட்டார். இதைக் கண்ட குறவர்களின் தலைவன் வருத்தப்பட்டு அவ்வூர் அரசனிடம் போய் முறையிட்டுக் கொண்டான். அரசன் பிரபுவை வரவழைத்து விசாரணை செய்தார். பிரபு புத்தியில்லாமல் செய்தார் என்று அரசன் அறிந்து கொண்டு அவனுக்கு அறிவுபுகட்டும் பொருட்டு அவனையும் வாதியாகிய குறவனையும் கப்பலேற்றி நரமாம்சபக்ஷணிகள் வசிக்கும்படியான ஒரு தீவில்கொண்டு போய் விடும்படி உத்திரவு பண்ணினார். அவ்வாறே பிரபுவையும் குறவனையும் காட்டு மனிதர்கள் வசிக்கும் தீவாந்திரத்தில் கொண்டுபோய் விட்டார்கள். இவர்களைக் கண்ட காட்டு மனிதர்கள் முதலில் குறவனை தின்னவந்தார்கள். குறவனுக்கு அவர்கள் பாஷை தெரியாததால் அவர்களுக்கு ஜாடைகாட்டி தான் ஒருவேடிக்கை செய்யப்போவதாகச் சொல்லி, அங்கிருந்த ஈச்சமரத்தின் ஓலைகளை வெட்டி ஒரு குல்லாய்பின்னி அதைக் காட்டுமனிதர்களில் முதன்மையாயிருந்தவன் தலையில்வைத்தான். இதைக்கண்ட மற்றவர்கள் ஆச்சரியப்பட்டு தங்கள் ஒவ்வொருவருக்கும் ஒன்றுசெய்து கொடுக்கும்படி கேட்டுக் கொண்டதோடு குறவனுக்கு வேண்டிய ஆகாராதிகளைக் கொடுத்து உபகாரஞ் செய்தார்கள். இது நிற்க யாதொருவேலையும் செய்யாமல் நின்றுக் கொண்டிருந்த பிரபுவை மிரட்டி அடித்துத் தின்ன வந்தார்கள். அவன் பயந்து குறவனிடத்திற்கு ஓடித் தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று அவன் காலைப்பிடித்துக்கொண்டான். குறவனும் மனமிரங்கி இவனைத் தன் மனுஷன் என்று அவர்களுக்குத் தெரிவித்து இவனுக்கும் [illegible] தொழில்களைக் கற்பித்தான். இப்படியாக சில காலம் கழிந்த பிறகு ஒரு கப்பல் வந்தது. அதில் ஏறி இருவரும் தங்கள் சொந்த ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். பிரபுவானவர் பிறகு எல்லாத்தொழிலிலும் கைத்தொழில் சிலாக்கியமானதென்றும் மனிதர்களுக்குள் உயர்வுதாழ்வு இல்லை என்றும் சொல்லிக்கொண்டிருந்ததோடு குறவனுக்கு அத்தியந்த சிநேகிதராய்விட்டார்.

**கதைக்கும் தொழிலுக்குமுள்ள சம்பந்தம்:** — ஓலைமாதிரிகளெல்லாம் குறவர்கள் செய்தவை.

**விளையாட்டு:** — ஒருவனை குறவன்போலவும் மற்றவனைப் பிரபுவாகவும் இருக்கச்செய்து குறவனை அடிப்பதுபோலவும் பிறகு இராஜ

னாக ஒரு பையனை ஏற்படுத்தி அவனிடத்தில்போய் குறைசொல்லிக்கொள்வதுபோலவும் பாவித்து தீவாந்திரத்திற்கு அனுப்புவதுபோலவும், அங்கே குறவன் கைத்தொழில்செய்து எல்லாரையும் கைகொண்டதுபோலவும் கதையின் ஒவ்வொரு அம்சத்தையும் நடத்திக்காட்டுக.

## பாட்டு.

இராகம்: கும்மிமெட்டு.

1. கைத்தொழில் மகிமை காட்டுகிறோம் அதன்
கண்ணியத்தை என்னென் றெடுத்துரைப்போம்
மண்ணில் பிறந்த மனிதரின் வாழ்க்கைக்கு
எண்ணிய மெய்த்துணை கைத்தொழிலே.

2. குறவன் குடிசையில் கூடை பின்னான் அங்கே
காற்றாட வந்த கனவானும்
மரியாதை மட்டுகள் இல்லையென் றவனை
மட்டை யடிகள் அடித்தானும்.

3. ஐயோ, ஐயோவென் றலறிக் குறவன்
அரசனிடம் முறை செய்து கொள்ள
வெய்ய பிரபுவை வரவழைத்தே ராஜன்
விசாரணைகள் முடித்தானும்.

4. தானென்னும் கர்வம் தலைமேல் கொண்டுபிரபு
தப்பான காரியம் செய்தா னென்று
ஞானம் பெரும்படி தீவாந் திரத்திற்கு
ஈனனோ டேகவும் தீர்ப்பு செய்தான்.

5. காட்டு மனிதர்கள் கொன்று தின்னவரக்
கண்ட குறவன் உபாய மதாய்
வாட்டமாய் நேர்ந்த நல்சச்சம் ஓலைகளை
வாரி முடைந்து குல்லாய் பின்னினான்.

6. எல்லோரும் கண்டு வியக்க அக்குல்லாவை
எஜமானன் தலைதனில் வைத்திடவே
பல்லோரும் வந்து பரிந்து பணிவிடை
பல விதம் செய்தார் குறவனுக்கு.

7. கதையில் வந்த கனவானையு மப்போ
காட்டு மனிதர்கள் சூழ்ந்து கொள்ள
உதையால் பயந்தவன் ஓடிக் குறவன்
உபய பாதங்களை கட்டிக் கொண்டான்.



8. கருணை மிகுந்த குறவன் அவனுக்
கபயந் தந்தாங் கணைத் தெடுத்து
உலக வாழ்க்கைக் குதவியான சில
உத்தம கைத்தொழில் கற்று வைத்தான்.

9. காலஞ் சென்றே ஒரு கப்பல்வர அதில்
சால இருவரும் நாடுவந்து
ஞாலத்தில் மிக்கது கைத்தொழிலே என்று
சீலப் பிரபுவு மெடுத் துரைத்தார்.

## அபிநயக் குறிப்புகள்.

1. குந்தி உட்கார்ந்து கூடை பின்னுவதுபோல கையால் காட்டுக.
2. இருகைகளையும் வீசி இரண்டடி முன்னுக்கும் பின்னுக்கும் போக.
3. வலதுகையை ஓங்கி இடது உள்ளங்கைமேல் அடிப்பது போல சப்தம் செய்க.
4. வலதுகையால் வாயை இரண்டுதரம் தொடவும்.
5. தலைகுனிந்து கையை மேலே குல்லாபோல் வைக்க.
6. குனிந்து இரு கைகளாலும், இருபாதங்களையும் தொடவும்.

C. GOPALA IYENGAR,
*Training School, Tanjore.*

---

# WHALES

## திமிங்கிலம்.

பிராணி வர்க்கத்தில் மிகவும் பெரியதென்று பெயர் பூண்டுள்ள ஜெந்துக்களனைத்தினும் பெரிய உருவமுள்ளது திமிங்கிலமென்னும் நீர்வாழ் பிராணியே யாம். விலங்கினத்தில் பருத்த உருவமுள்ள வேழத்தை யேனும், ஊர் வனவற்றில் முதலையை யேனும், பறவைகளில் தீப்பறவையேனும், திமிங்கிலத்திற்கு ஒப்பிட்டுரைத்தில் சற்றும் பொருந்தாது.

2. பண்டைக் காலத்தில் திமிங்கிலத்தை மீனினத்திற் சேர்த்து அதனையும் பருத்ததோர் மச்சமாக மதித்து வந்தனர். திமிங்கிலம் தோற்றத்தில் பெரும்பாலும் மீனை யொத்திருப்பினும் அது மீனாகாது.

3. திமிங்கிலம் விலங்கினத்திற் சேர்ந்ததென்று நாம் சொல்லப்புகுவோமாயின், அதனைக் கேட்போர் பலர்க்கும் வியப்புண்டாகாமற் போகாது. ஆயினும் அதனை மச்சமென்பதற்குக் காட்டியுள்ள ஆதாரங்களினும் மிருகமென்பதற்குப் போதிய ஆதாரங்கள் மிக்கவுண்டு. இதனை நிரூபிக்க மீனினத்திற்குரிய செய்கையில் திமிங்கிலம் எவ்வளவு வித்தியாசப்பட்டிருக்கின்றதென்பதை இங்கெடுத்துக் காட்டுவோம்.

4. திமிங்கிலம் குட்டிபோடும்; மீனோ முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். திமிங்கிலத்திற்கு உதிரம் உஷ்ணமாயிருக்க, மச்சத்திற்கு அது தண்ணென்றிருக்கிறது. திமிங்கிலத்திற்கு மிருதுவாகிய சருமமுண்டு; மச்சத்திற்குத் தேகமுழுதும் செதில்களே யுண்டு. திமிங்கிலம் இரத்தாசய முயற்சியால் நீர்ப்பரப்பிற்கு மேலேவந்து மூச்சுவிடும்; மச்சமோ நீர்க்குள்ளேயே மூச்சுவிட்டு முகிழ்க்கும். திமிங்கிலத்தில் ஆணைக் கடாவென்றும், பெண்ணைப் பிணாவென்றும், குட்டியைக் கன்றென்றும் கூறுவது மரபு; மச்சத்திற் சிறு பிராயமுள்ளதை மீன் குஞ்சு எனப்படுதலன்றி ஆண் பெண் என்னும் பேதத்திற்குப் பெயர் வகையால் வேற்றுமை ஏற்பட்டிலது.

5. திமிங்கிலத்தில் பல வகையுண்டு. அவற்றில் முற்றும் வளர்ந்தது சுமார் நூறடிக்கு மேல் நீண்டும், உடலிற் பருத்த பாகத்தின் சுற்றளவு அறுபதுமுதல் எழுபதடி பருத்துமிருக்கும்.

6. திமிங்கிலத்தின் தோல் கருமையாய்த் தடித்து வயிற்றுப்புறத்தில் வெளுத்திருக்கும். அதன் அதளின் அடியில் கொழுப்படையென்னும் கொழுவியபாகம் பதினைந்தங்குல கனத்திற்குத் தேகமுழுதும் படிந்திருக்கும். இதனால்தான் திமிங்கிலம் நீர் மீது மிதக்கவும், தன் தேகத்தை உஷ்ணத்தோடு வைத்திருக்கவும் வல்லதாகின்றது.

7. திமிங்கித்தின் தலை மிகப் பெரிது. அத் தலை உடலின் மூன்றிலொரு பகுதி யளவிற்குச் சமமென்னலாம்படி யிருக்கின்றது. இத்தகைய பெரியமிருகத்திற்குக் கண்ணுங் காதும் சிறியனவா யமைந்திருப்பது வியப்பே. இதன் சிரத்தின் மேற்புறத்தில் துவாரங்களமைந்திருக்கின்றன. அது சுவாசிக்கையில் நாசித்துவாரத்தில் நீர் நிரம்பியிருக்குமாதலின் சுவாசம் வெளிப்படுங்கால் நீர் மொக்குளிக்கும். திமிங்கிலத்தின் வாயோ பெருத்து அகன்றிருக்கும். இவ்வாயில் பற்களுக்குப் பதில் ஒருவகைய சீப்புப் போன்ற என்பு மேலுதட்டினின்றுந் தொங்கியிருக்கும். இவ்வென்பு நெய்யரி போன்றிருந்து அதன் வாயில் நிரம்பியிருக்கும் நீரை வடித்து அந்நீரோடு கலந்திருந்த உணவுப் பொருள் தடைப்பட்டு அதற்கு உணவாக வமைக்கும்.



8. திமிங்கிலத்தின் வாய் மிகப் பெரிதாயினும் அதன் தொண்டை நீர் வாழ்வனவற்றில் சிறிய பிராணிகளை மட்டும் ஒரு கவளமாக விழுங்கத் தக்கவாறு மிகக் குறுகியிருக்கின்றது. திமிங்கிலத்தின் கண்களுக்கருகில் இருமருங்கினும் ஏறக்குறைய ஒன்பதடி நீண்டும், நாலடி அகன்றும் வளர்ந்துள்ள இவற்றை மீன்களுக்குள்ள செதிளென்று சொல்லுதல் இயலாது. கால்களே பூரண உருவமடையாது குறுகி வளர்ந்திருக்கின்றன வென்று கூறுதல் அமைவுடையதாம்.

9. திமிங்கிலத்தின் வால் நீண்டிருத்தலன்றி மிக்க வலிமையுமுடையதா யிருக்கின்றது. அது ஏறக்குறைய இருபதடி நீண்டிருக்கும். மீன் தன்வாலை மேலுங் கீழும் அசைப்பதேபோல் திமிங்கிலம் அசைக்க வியலாது.

10. சாதாரணமாய்த் திமிங்கிலம் நீர் மட்டத்திற் கிடந்து நித்திரை செய்யும். அவ்வாறு துயிலும்போது அஃதொரு கருங்குன்று போன்று காணப்படும். அதனை எவரேனு மெதிர்த்தால் விரைந்து நீருள் மூழ்கி அங்குச் சிறிதுநேரந் தங்கியிருக்கும். பின்னர் தான் முன்னிருந்த விடத்திற்குச் சற்றப்பால் போய் மேலெழும்பி மூச்சு விடும்.

11. திமிங்கில வேட்டை யாடுவோர் அதற்கென்றே நிருமிக்கப்பட்டுள்ள கலங்களிலேறி, சீதம் மிகுந்துள்ள வடகடலை நாடிச் செல்வார்கள். அங்கு திமிங்கிலத்தின் மீது முனை கூரி வளைந்து ஈட்டிபோலிருக்கும் பெரிய தூண்டில் முட்களை எய்தும், அம்முட்களைத் துப்பாக்கியினிடத் தமைத்து இலக்குவைத்துச் சுட்டுப் பாய்ச்சியும் வேட்டையாடிக் கொல்வதுண்டு. இவ்வாறு எய்யும் தூண்டில்களின் கடையில் உறுதியாகிய கயிற்றைத் தொடுத்திருக்குமாகலின், திமிங்கிலம் தப்பிப் போவதருமை. அது மூச்சுவிடுவதற்கு வெளிவருந்தோறும் இவ்வீட்டிகளை எய்து கொல்வது வழக்கம்.

12. திமிங்கிலத்தின் தோலடியிற் படிந்துள்ள நிணம் மெழுக்குவர்த்தி செய்ய மிகுதியும் உபயோகமாகின்றது. அதன் உடலென்பும், வாய்முள்ளும் அதிக விலைபெறப் பெற்றவை. சுமார் அறுபதடி நீளமுள்ள திமிங்கிலம் ஒன்று ஆயிரத்திருநூறு ரூபாய் விலையுள்ள பொருள்களைக் கொடுக்குமென்றால் அவற்றை மிகுதியும் வேட்டையாடி பொருளீட்டுமாறு அநேகர் முற்படுகின்றனர் என்பது வியப்பாகாது.

பத்திராதிபர்.

# PARAMANANDA—AN UNWORTHY TUTOR.

## விசேஷ விநோதார்த்த பரமானந்த குருகதை.

### (I. ஆற்றைக் கடந்த அதிசயம்.)

---

அந்தகாரமென்னுந் தேயத் தமங்கல புரமென்றோ ரணிநகருண்டு. ஆங்கு அசுத்த கிரியென்றழைக்கப்படும் மடமொன்றுளது. அம்மடத்தின் கண் பரமானந்த குருவென்னுந் திருநாமம் வாய்ந்த ஆசிரியரொருவர் வாசமாயிருந்தனர். அவர்பால் அக்ஞான சிரோமணி, அசேதனதிலகன், மூடஜனேந்திரன், விபரீத நிபுணன், நிரக்ஷரகுக்ஷி என்னும் ஐவர் கல்வி பயில்பவராயினர். ஆசான் ஒருநாள் தமதைந்து மாணவருடனும் சிஷ்யார்ஜ்ஜனத்தின் பொருட்டு கிராமாந்தரங்களிற் சென்று வழிதவறித் தமதிருக்கைக் கெழுந்தருளுங் காலத்து ஆங்கோராறு குறுக்கிட்டது.

அப்போதாசிரியர் அவ்வாற்றை யுற்று நோக்கியறைவார் — இயற்கையினே யிவ்வாறு கபடங்கொண்டியங்கு கின்றது. ஆதலால் இது விழித்திருக்கும் இப்பகல் நேரத்தில் நாம் இதிலிழிந்து கடக்கக்கருதலாகாது. ஆறு தூங்குமளவும் அதோதெரிகிற ஆல



நிழலில் அனைவருமமர்ந்திருத்தற்பாலதென் றழைத்துச் சென்றார். செல்லுங்கால் சீடசிரோமணியான விபரீத நிபுணனைவிளித்து நீ யவ்வாற்றின் நித்திரை யறிந்து வா போ வென்றனுப்பினர். அவனும்



தேசிகனாணை சிறமேற்கொண்டு ஆற்றையணுகி ஆங்கெரியும் பிணக்கொள்ளிக்கட்டை யொன்றெடுத்து தண்ணீரை எட்டநின்று தொட்டுப்பார்த்தான். தொடவே தண்ணீர் சுர் என்றிரைந்தது. அப்போது விபரீத நிபுணன் (தன் இயற்கைப் பெயருக் கேற்ற விபரீத குணந்தோன்ற) திடுக்கிட்டு, தட்டுகெட்டுத் தடுமாறி, கீழே விழுந்து, கீச்சிட்டெழுந்து, உள்ளங்கால் புட்டத்தி லடிபடவோடி ஆசானடியிலலறிவிழுந்தான். விழுந்தவனைத் தேற்றி யாசான் விளைந்த விபத்தை வினவலும் அவன் விளம்புவான் — ஐயா, ஆறு விழித்துக்கொண்டிருக்கிறது. அதிலிறங்க இது சமயமன்று. நான் மெல்லத்தான் தொட்டுப்பார்த்தேன். அவ்வளவிலேயே அது விஷநாகம்போற் சீறி எரிந்து கரிந்து, எழுந்து புகைந்து என் மேற்பாய்ந்தது. தேவரீர் ஆசீர்வாத பலத்தினால் அடியேன் தப்பிவந்தடைந்தேனென்றான். அதற்காசாரியர் அவனை யணைத்து அக்ஷதையிட்டு, ரக்ஷாபந்தனஞ் செய்து அவனன்றி யோரணுவு மசையாதென் றாசீர்வதித் தருளினார். அப்போது அக்ஞான சிரோமணி அவ்வாற்றின் கொடிய கபட குணங்களைத் தான் கேட்டிருந்த கர்ணபரம்பரையான கதையால் விளக்கிக்காட்டுவானாயினான்.

ஐயா, இந்நதியின் தந்திரோபாயத்தை என் பாட்டன் சொல்லக் கேட்டிருக்கிறேன். இற்றைக் கைம்பதாண்டின் முன் ஓர் நாள் என் பாட்டனார் மாடுகளின்மேல் உப்பு மூட்டைகளை யேற்றித் தன் கூட்டுவர்த்தகரோடு ஆற்றினடுவிலோட்டிக் கொண்டுவருகையில் இதன் குணந்தெரியாமல் வேனிற்கால வெப்பந்தணிய இருவம் ஆற்று நீராடி எருதுகளை ஆழத்திற் செலுத்தி நிறுத்தி நன்றாய்க் கழுவிக்குளிப்பாட்டிக் கரையேறுந் தருவாயில் மூட்டைகளின் தைத்தவாய் தைத்தபடிக்கிருக்க யாதொரு சந்தடியுமின்றி எவ்விதமாகவோ உள்ளே யிருந்த உப்பை யெல்லாம் உறிஞ்சிக் கொண்டதாம். அவ்வளவு உப்பையும் ஒருமிக்கத் தின்று தெவிட்டியதாலன்றோ நம்மை விழுங்காமல் விட்டது என்று என் பாட்டன் வீட்டிற் பாட்டியிடஞ் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆகையால் நாம் ஆத்திரப்பட்டு ஆற்றில் உபாயமின்றி யிறங்கினால் அபாயமே நேரிடுமென்றான். இதை யெல்லாங் கேட்டிருந்த மூடஜனேந்திரனென்னும் மற்றொரு மாணவன் வழுத்துவானாயினான்.

ஐயா, இம் முரட்டாறு திருட்டாறென்பதற்கோர் திருட்டாந்தமுண்டு. ஒரு நாள் என் தகப்பனார் இக்கரையில் ஒண்டியாயகப்பட்டுக்கொண்டு ஆற்றைக்கடக்க அஞ்சி நிற்கையில் வாயில் மாமிசத்துண்டைவைத்திருந்த நாயொன்று ஆற்றினருகிற் சென்று ஆழம்

பார்த்ததாம். அப்போது நாய் வாயில் மாமிசத்துண்டைக் கண்ட இவ்வாறு தன்னிடத்து அதனினும் பெரிய தொன்றிருப்பதாகக் காட்டி யேமாற்றி அதை யபகரித்துக் கொண்டதாம்.



நாயோ தன் வாயைச் சப்பிக்கொண்டே நின்றதாம். இதைக் கண்ட என் தந்தை ஆற்றிலிறங்காமல் அதன் எதிர்முகமாய் நீளச் சென்று நாட்பட நடந்து முடிவில் சிறிய கால்வாயாக முடிந்த தோரிடத்தில் ஆறு தூங்கும் சமயமறிந்து:—

“ முன்னுக நீரளக்கும் முடிமன்னர் காத்திருக்கும் முனிகளென்னை
மன்னு மலோட்டுவிக்கும் மாதரைசொற் கேட்பிக்கும் மடக்கும் மூட்டைப்
பைந்நாகத்தலை நறுக்கும் பாலரை சொற்கேட்பிக்கும் படிப்புண்டாக்கும்
எந்நாளுங் கிழவருக் கோரிருப் பாகும் நடைகொடுக்கு மென்கைக்கோலே”

என்பதற் கிணங்கத் தன் கையிலிருந்த தடியால் முன்னுக நீரளந்து கொண்டே வெகு தந்திரமாய்த் தாண்டிக் கரையேறினாராம். ஆதலால் ஆறு விழித்திருக்கையிலேயே ஆழந்தெரியாமல் காலிட்டுக் கொள்வோமாயின் அது நம்மிலொருவனை யாவது உள்ளுக் கிழுத்துக்கொள்ளாமற் போகாதென்றான்.

இப்படி யிவர்கள் பேசிக்கொண் டிருக்கையில் அக்கரையில் அக்கரையினின்றும் ஓராள் குதிரை யேறி அனுயாசமாக ஆற்றைக்



கடந்து வந்திறங்கி கடிவாளம் பிடித்துக் கரையில் நின்றான்.



அதைக்கண்ட அக்ஞான சிரோமணி ஐயர்பா லோடி நமக்குமோர் குதிரை யிருந்தால் நலமென்றுரைத்தான். குருவும் அப்படியே அதைக்குறித் தப்புறம் யோசிக்கலாமென்றார்.

இப்படி யிவர்கள் சாம்பாஷித்துக் கொண்டிருக்கையில் சூரியாஸ்தமனகாலம் நெருங்கிற்று. அப்போதாற்றின் தூக்கத்தை யறிந்துவரும்படி அசேதனதிலகன் அனுப்பப் படலும் அவனை ஆற்றை யணுகி ஆங்கு ஆறிக்கிடந்த கொள்ளிக்கட்டையால் தூரவிருந்து தொட்டுப்பார்த்தான். முன்சொன்னபடி அதினின்றும் யாதொரு சத்தமு முண்டாகாமையுணர்ந்து — ஐயா, நதியைத் தாண்ட நல்ல சமய மிதுவே; யாவருமெழுந்திருமென்றான். உடனே எல்லோரும் ஒருவர் பின்னொருவராய் அதிசாக்கிரதையாய் அடிமேலடிவைத்து, தண்ணீரசையாமல் சந்தடி செய்யாமல், உள்ளங்கலங்க உடைகள் விளங்க, நெஞ்சந்துலங்க நின்றுடல் நடுங்க ஆற்றைக் கடந்தார்-அக்கரையடைந்தார்.

அடைந்து அனைவருமானந்தங் கொண்டிருக்கையில் கடையிற் கரையேறின நிரக்ஷரகுக்ஷி என்பவன் தன்னை விட்டு மற்றவரை

யெண்ணிப் பார்த்து ஐயோ ! ஒருவனை ஆறு கொண்டதென்றலறினான் — (சந்தேஹாத்மா வினஸ்யதி) என்றபடி இயற்கையினே சந்தேகமுள்ள குருநாதரும் தன்னைக் கூட்டி எண்ணினாரில்லை. அப்படியே மற்றெல்லாச் சீடரும் (யதாகுரு ததாசிஷ்யா) ஆசானெவ்வழி யவ்வழி மாணவர் என்னும் வாக்கியத்துக் கொத்தொழுகினர். அப்போதாசிரியர் ஆற்றைப் பார்த்துத் தூற்றத் தொடங்கினார் — ஓ ! அறுவரிலொருவரை யகட்டிற்புகட்டிய அநியாயவாறே ! உன்னைச் சிலர் உலகத்துக் குபகாரியென்றுரைக்குஞ் சொல் ஊழலே. கருணையற்ற கன்னெஞ்சக் காட்டாறே ! இனி யுன்னூற்றுக் கண்கள் சேற்றாலழியாவோ ! நீ உண்ணநீரற்றுஉடல்நீண்டொழியாயோ! உன் பள்ளந்தூர்ந்து அதில் முள்ளுகளடையாவோ ! சூரியன்சுடவுன் பேருடலெரியாதோ ! நீ ஈரமற்று, சாரமிற்று, கோரமுற்று நின்றவிடந்தெரியாமல் நிலையழிந்துப் போவாயாக என்று சபித்தார்.

அத்தருணம் அவ்வழியே சென்ற பிரயாணிக னொருவன் சங்கதியுணர்ந்து அவர்களின் மதியீனத்துக் கிரங்கி 'போனதை நினைப்பான் புத்தி கெட்டவன்' என்பதாக நீங்கள் போனவனைக் குறித்துப் புலம்புவானேன் ? ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ ? ஆயினும் எனக்கிப் போதேதாகிலும் பரிசளிக்க இசை வீரேல் இத்தக்ஷணம் என் மந்திர பலத்தால் அவனையிங்கு வருவிப்பேனென்றான். அதைக் கேட்ட பரமானந்தகுரு பரமசந்துஷ்டராய் அவனைக் கட்டித் தழுவி எங்கள் குலதெய்வங் குறுக்கிட்டது போல்வந்த குணசீலனே ! நீ செப்பியவாறே செய்ய வல்லையேல் இதோ வழிச்செலவுக்காக வைத்திருக்கும் நாற்பது பணமும் உனக்கு கொடையளிப்பே னென்று வாக்களித்தார். அப்போதவன் தன் கையிலிருந்த தடியைக் காட்டி, இதோ அந்த மந்திர மிதிலடங்கியிருக்கிறது. நீங்களெல்லோரும் வரிசையாய் நின்று ஆளுக்கோரடியேற்று அவரவர்களின் பெயரை யறைவீர்களாயின் அறுவரு மிவ்விடத்தடையச் செய்யத்தடையில்லையென்றான். அதற்கவர்கள் அப்படியே சம்மதிக்க முந்திக்குருவின் முதுகில் ஓங்கியோரடிவாங்கி நின்றான். குருவும் அப்பா ! நான் குருவென்றலறினார். இந்தப்படிக் கொவ்வொருவர்க் கோரடிகொடுத் தெண்ணி அறுவரிலொருவருங் குறையாதிருக்கக் குறித்துக் காட்டினான். பரமானந்த குருவும் முன் பகர்ந்தபடி நாற்பது பணமும் நன்கொடையளித்து மந்திரவாதியை மதித்துக் கொண்டாடினார். ஆதலால் அறிவிலார்ச் செய்கைக் களவுமுண்டோ ?

(இன்னும் வரும்.)

சி. வே - சண்முக முதலியார்,
*Hd. M., L. F. School, Tinnanur.*



# HOW TO TEACH ARITHMETIC.

## எண்முதல் விளக்கம்.

பிள்ளைகளுக்குப் பத்துவரையில் எண்ணிச்சொல்லவும், அதற்கு உட்பட்ட எண்களை ஒன்றோடொன்று சரியாய்க் கூட்டவும் தெரிந்த பிறகு, எண்கள் முன்னும் பின்னுமாயும், மேலும் கீழுமாயும் இருப்பதால், முதலாவது, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது என்றும் சொல்லுகிற வழக்கமுண்டு என்று உபாத்தியாயர், அல்லது தாய்தந்தைகள் சொல்லிக்கொடுக்க வேண்டியது. முன் பாடங்களில் பிள்ளைகளுக்குத் தோன்றிய உற்சாகமும், ஆசையும் விருத்தியாகும் பொருட்டு, நூதனமாய் ஒரு வஸ்துவை உபயோகிக்கவேணும். ஆகையால் பத்துப் படிகள், அல்லது நெம்புகளையுடைய ஒரு சிறிய ஏணியைச் செய்து, அதைச் சாதனமாக வைத்துக்கொள்ளவும். இதை யாதொரு கஷ்டமு மில்லாமல் செய்து கொள்ளலாம். நீளத்தில் ஏறக்குறைய ஒன்றரை அடியும், அகலத்தில் நாலு அங்குலமும் இருந்தாற்போதும். இதனுடைய ஆகாரம் எப்படி இருந்தாலும் இருக்கட்டும். படிகள் அல்லது நெம்புகள் மாத்திரம் பத்துக்கு மேற்படக்கூடாது. இளைஞருக்குப் போதிக்கத் தொடங்கினவர்கள் இந்த ஏணியையும், முன் சொல்லியிருக்கிற மற்றவிளையாட்டுக்கருவிகளையும் சம்பாதித்து வைத்துக் கொள்ளவேண்டியது என்று நாம் சொல்வதை இதென்ன சோம்பேறிக்காரியம், என்னத்துக்கு இவ்வளவு வீண்பிரயாசை என்று நினைத்து அசட்டை செய்யக்கூடாது.

அனேகர் கண்ணுக்குமாத்திரம் பகட்டாயும், காரியத்துக்கு உதவாததாயும் இருக்கிற விளையாட்டுச்சாமான்களை அதிக பிரயாசை எடுத்துக்கொண்டு பணத்தை வீணாக இறைத்தாவது வாங்கிப் பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார்களல்லவா ? அவர்கள் அந்தப் பிரயாசையிலும், திரவியத்திலும் சொற்ப பாகத்தை உபயோகிப்பார்களானால், இளைஞருக்கு வருத்தமில்லாமல் எண்களுடைய ஞானத்தை உண்டு பண்ணுவதற்கு அகத்தியமாய் வேண்டிய இப்புத்தகத்தில் குறித்திருக்கிற கருவிகளைச் சேகரித்துக் கொள்ளலாமே. சிறுவர்கள் பொருள்களைக்கண்முதலிய இந்திரியங்களால் உணர்ந்து அதனால் எவ்வளவு சீக்கிரத்தில் ஞானத்தைச் சம்பாதித்துக் கொள்ளுவார்களோ, அவ்வளவு சீக்கிரத்தில் புத்தகங்களை மாத்திரம் படிப்பதால சம்பாதித்துக் கொள்ள மாட்டார்கள். மேலும் அப்படிப் பொருள்களை ஆராய்ந்து சம்பாதித்த ஞானம் ஞாபகத்தில் நன்றாய்ப் பதிந்து

திலைபெற்றிருக்கும். குழந்தைகள் கணக்குப்பாடம் கேட்கும் சமயத்தில் சிறியதாயும் அழகாயுமிருக்கிற இந்த ஏணியை எடுத்துக்காட்டினால், இதற்குமுன் வழங்கிக்கொண்டு வந்த பொருள்களில் திருப்தியாய்ப்போன சிறுவர்களுக்கு அது மிகவும் இதமாய் இருக்கும். இதுவுமல்லாமல், பலகருவிகளைத் தேடிக்கொண்டு போகாமல் இந்த ஏணி ஒன்றைக்கொண்டே பல பாடங்களை நடத்தலாம்.

இந்த ஏணியினால் என்னபிரயோஜனமென்றும், கணக்குப் பாடத்துக்கும், இதற்கும் என்ன சம்பந்தமென்றும் முக்கியமாய்ப் பாடம் சொன்னபிறகுதான் அந்த ஏணியைச் சொந்தமாக எடுத்துக் கொள்ளலாமா வென்றும் குழந்தை தாய்தந்தைகளை, அல்லது உபாத்தியாயரைப் பலகேள்விகள் கேட்கும். இந்தக் கேள்விகளுக் கெல்லாம் தகுந்த சமாதானங்கள் சொல்லியானபிறகு, ஏணியினால் உண்டாகும் பிரயோஜனங்களைக்குறித்துத் தீர்க்கமாய்ச் சம்பாஷணை செய்து, அதற்குத் திருஷ்டாந்தமாய்ச் சில சிறிய கதைகளையும் சொல்லலாம். இதற்குப்பிறகு ஏணியில் இருக்கும் படிகளை எண்ணச் சொல்லவேணும். அப்போது சிறுவன் ஒன்று, இரண்டு, மூன்று என்று பத்துவரைக்கும் எண்ணுவான். உடனே அடிப்படியைக் காண்பித்து "இது எத்தனையாவது படி" என்று கேட்கவும், அதற்கு அடிப்படிஎன்று சொல்லலாம். உபாத்தியாயர், அல்லது தாய்தந்தைகள் "ஆம் அப்பா, நீ சொன்னது சரிதான். ஆனால் இந்தப் படியை முதற்படி என்றும் வழங்குகிறார்கள். ஏனென்றால் நீ இதன்மீது ஏறக்கூடுமானால் முதலில் இந்தப் படியின்மீது நீ பாதத்தை வைப்பாயல்லவா? இந்த ஏணியின்மேல் நீ தொத்தி ஏறுவாயானால், (மேற்படியைக்காட்டி) இவ்விடத்தில் ஆரம்பித்து ஏறுகிறதா, அல்லது (அடியிற்காட்டி) இவ்விடத்தில் ஆரம்பிக்கவேண்டியதா" என்று கேட்டால்,

சிறுவன். இதோ அடிப்பக்கத்தில் தான். அடியிலே யிருந்து ஏறிப்போனாற்றானே மேலே இருக்கும் படியை எட்டலாம் என்று சொல்வான்.

உபாத்தியாயர். ஆம். ஆகையால் இந்த அடிப்படியை என்னவென்று சொன்னேன்?

சிறுவன். முதற்படி.

உபா. சரி; நீ இந்த ஏணியின்மேல் ஏறவேண்டுமென்று முதற்படிமேல் காலைவைத்தால், அப்புறம் எத்தனையாவது படிமேல் காலை எடுத்து வைக்க வேண்டும்?



சிறுவன் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்று அன்னியர்கள் அடிக்கடிசொல்லக் கேட்டிருப்பானாகையால், கேள்விக்கு உடனே உத்தரவுசொல்லலாம். அப்படிச்சொல்லத் தெரியாமற்போனால், ஏணியைக் காண்பித்து, சிறுவன் விரலினால் முதலாவதுபடி இரண்டாவதுபடி, மூன்றாவதுபடி, நான்காவதுபடி என்று ஒவ்வொரு படியாய்த்தொட்டுக் காண்பிக்க வேணும். இப்படி மேலே இருக்கும் படிவரையில் எண்ணினபிறகு தலைகீழாய்ப் பத்தாவது படியிலிருந்து ஒன்பதாவது படி, ஒன்பதாவது படியிலிருந்து எட்டாவது படி என்று இப்படித் திருப்பிக் காண்பிக்கும் போது "இதெத்தனையாவதுபடி, இதெத்தனையாவதுபடி" என்று கேட்டால், மெதுவாய்த் தான் உத்தரவுசொல்லுவான். அடியிலிருந்து மேல் தட்டுவரையில் யாதொரு தடங்கலுமில்லாமல் எண்ணத் தெரிந்தால் தான் தலைகீழாய்ச் சொல்லும்படி செய்யலாம். அப்படி ஆரோகணமாய் எண்ணத்தெரியாமலிருந்தால், ஒரு பாடத்தில் வேறே ஒன்றையும் சொல்லிக்கொடாமல் ஏணியின் பத்துப் படிகளுக்கும் இப்படிப் பெயரைமாத்திரம் கற்பித்துக் கொடுக்க வேணும். கணக்கில்தவிர இன்னும் இதரவிஷயங்களில் இந்தப்பெயர்கள் எப்படி வழங்கிவருகிறதோ, அதைச் சில கேள்விகளைக்கேட்டுச் சிறுவன் வாயினாலேயே சொல்லும்படி செய்யலாம். இதெப்படி என்றால் "வாரத்தில் முதலாவது கிழமை எது?

இன்றையதினத்தில் முதலாவது போஜனம் எது? இதை ஏன் முதலாவது போஜனமென்று சொல்லுகிறாய்?

வாரத்தில் இரண்டாவது கிழமை எது?

மூன்றாவது கிழமை எது?

நான்காவது கிழமை எது?

ஐந்தாவது கிழமை எது?" என்று இவ்வாறு கேட்கலாம்.

# DUST AND DECEASE.

## தூசியும் நோயும்.

இருட்டறையில் சூரியகிரணம் படுகையில் அதிலே பரமாணுக்கள் மினுமினென்று மின்னிப் பறந்துகொண்டிருப்பதை நாம் காணலாம். விளக்கொளியில் பார்க்கவொண்ணாத பரமாணுக்கள் சூரியகிரணத்தில் நன்றாய்ப் புலப்படும். நோய்களெல்லாம் அத்தன்மையான அணுமயமாகவே இருக்கின்றன. அதிலும் வாந்திபேதி, என்புருக்கிக் காய்ச்சல் முதலிய பலவகைக் கொள்ளை நோய்கள் அணுத்திரளின் கூட்டமா யிருக்கின்றமையால், இவை ஒட்டுவாரொட்டியாய்ப் பரவுகின்றன. ஆதலினால், அந்நோயுள்ளவர்களிடத்தில் அதிகமாகக் கிட்டிச்சென்று அவர்களோடு எப்பொழுதுங் கூட இருத்தலானது தீதுபயக்கும். "விரையொன்று போடச் சுரையொன்று முளைக்காது" என்ற வண்ணமாய், நாம் எந்த நோயையுடையோரை அணுகுகிறோமோ அந்நோய்த் தவிர மற்றொரு நோய் நம்மைப் பற்றாது. நல்லமரத்தில் புல்லுருவி முளைப்பது போல, நோயில்லாத மானிடர் விலங்கு முதலிய ஜீவகோடிகளுக் கெல்லாம் பரமாணுக்களின் மூலமாய் ஒட்டுவாரொட்டியாய் நோயுண்டாவதுண்டு. ஒட்டு வியாதிகளைப்பற்றி வெகு காலமாய் எவர்க்கும் ஒன்றும் தெரியாமலே எல்லாம் மறைபொருளா யிருந்தன. அதிகமாக ஜனங்களடர்ந்த இடங்களிலும், நாற்றச் சாக்கடைகளுள்ள விடங்களிலும் கொள்ளைநோய்கள் மிகவும் மலிந்திருக்குமென்று பிரசித்தமாகச் சொல்லிக் கொள்ளுகிறதுண்டு. கொள்ளை நோய்கள் உண்டாவதற்குக் காரணம் கெட்டகாற்றென்று சிலரும், ஒவ்வொரு வியாதிக்கும் அந்த வியாதிமயமான பரமாணுக்களே முதற்காரணமென்று வேறுசிலரும் சொல்லுகிறார்கள். இவ்வாறு இரண்டுபேரும் பிரிவினராகித் தத்தம் கொள்கையே சரியென்று வாதித்துச் சாதிக்கிறார்களெனினும், ஒரு வகுப்பாரின் கோட்பாடு மட்டுமே உண்மையெனத் தோற்றுகிறது. "வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை" என்றபடி, எதற்கும் மூல காரணமுண்டென்று சொல்லுவதைத்தான் சரியென்று யாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஊன்றிப் பார்த்தால் இவ்வுலகத்திலுள்ள எந்நோய்க்கும் மூல முண்டு. எந்த வியாதியும் புதிதல்ல; எவ்வகைத்தான பிணியும் ஆதிமுதற்கொண்டு இருக்கின்றனவே யாம்; இப்பொழுது ஒவ்வொரு கால விசேஷங்களிலுண்டாகிற விநோதமான நோய்கள் இதற்கு முன்னும் உள்ளவையாம். இன்னும் நன்றாய் ஊன்றிப் பார்க்குமளவில், எந்நோயும் எக்காலத்தும் கெடாதிருக்கின்றனவெனவும் சொல்லலாம். ஐந்நூறு வருஷத்திற்கு முன் திடீரென்று தேகமெல்லாம் தீப்பட்டது போலக் கன்னங்கரேலென்று கறுத்து மனிதர் அநேகர் இறந்து போனார்கள்; அதே விதமான அற்புதநோய் இக்காலத்தில் இன்றைக்கும் இந்தியாவின் வடமேற்கு நாட்டிலுண்டாகி ஜனங்கள் மரிப்பது முண்டு. அழுகற் சாக்கடையும், மலமூத்திராதிகளினின்றெழுகின்ற கெட்டவாயுவும் நோய்க்குத் துணையா யிருக்குமாயின், காற்றும் நெருப்பும் கலந்தடிப்பது போல விஷநோய் வரையில் எங்கும் பரந்தெழும். கெட்ட வாயுவானது கொடிய நோயைப் பெருக்கச் செய்யுமேயன்றி அதை உற்பத்திசெய்ய அதற்குத் திறனுமில்லை; அதனிடத்தில் அந்த வித்துமில்லை. சாக்கடைநாற்றம் முதலிய தீநாற்ற மில்லாமல் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்ட இடங்களிலும் வியாதி உண்டாகிறதல்லவா? நமது புலத்தில் முட்செடி முளைத்திருக்கக்கண்டு, எங்கிருந்தோ முள்ளின் விதையொன்று அங்குவந்து விழுந்து முளைத்து வேர்க்கொண்டிருக்கிறதென்று எண்ணுமாறே, நோய்களும் பரமாணுமயமான வித்தின் வழியாய்ப் பரம்புகின்றனவென்று நிதானிக்கவேண்டும். கொள்ளைநோயுள்ள விடத்தில் அதன் வித்திருக்குமாதலால், அங்குள்ள பாய் படுக்கை கட்டில்முதலிய எல்லாம் நன்றாய்ச் சுத்திசெய்யப் படாவிடின், எவ்வளவு காலமாயினும் அவற்றின் வழியாய் அந்நோய் மற்றவர்களிடஞ் செல்வது ஆச்சரியமன்று; இவ்வாறு நோய்கொண்டு மாண்டவர் அனந்தகோடி வியாதிகளுக்கெல்லாம் முதற்காரணமொன்று உண்டென ஆயுள்வேதியர் கொண்டிருக்கும் கோட்பாடு சரிதானென்று நிபுணர்களாயிருக்கிற ரணவைத்தியர்களும் உறுதிகூறுகிறார்கள். இவ்வாறு வியாதிக்கு மூலமுண்டென் றறிந்திருப்பவர்கள், பெருவாரிக் காய்ச்சல்களுண்டாவதும், பதார்த்தங்கள் அழுகிப்போவதும், கெட்ட காற்றினாலன்று; ஆகாயத்திலுள்ள ஏதோ ஓர்வகை அணுமயமான வித்தினாலென்றே கூறுகிறார்கள். அது இன்னவிதமான பதார்த்தமென வரையறுத்துக் கூறவேண்டுமென்று அவர்களைக் கேட்டால் அதற்கு அவர்கள், அது ஆவியுமன்று, வாயுவுமன்று, சிறுதிரளுமன்று, அதி சூட்சமான அணுவடிவுள்ளதென்கிறார்கள்; மிகவும் சிறிதாகையால் அதன் பரிமாணத்தை இத்தனையென்று அளவிட்டுச்சொல்ல வாய்க்கவில்லை யென்றும் சொல்லுகிறார்கள். தேகத்திலுள்ள புண்களையறுத்து உள்ளே யிருக்கிற சீ முதலிய மலங்களை வெளிப்படுத்திப் புண்ணையாற்றுகிற நிபுணர்களான ரணவைத்தியர்கள், அப்புண்ணின் வித்தாகிய அணுரூபமான நுட்ப பதார்த்தங்கள்

மற்றவர்களிடத்திலாவது அல்லது தேகத்தின் மற்ற இடங்களிலாவது பட்டுப் புண்ணுண்டாகாதிருத்தற் பொருட்டு வெகு ஜாக்கிரதையாய் நிணம், தசை, நரம்பு, ஊன் தண்ணீர் முதலியவற்றை எடுத்தெறிந்து குணப்படுத்துகிறார்கள். இவ்வளவு பத்திரமாய்ச் செய்யாமல் சற்றே அஜாக்கிரதையாய் இருந்து விட்டால், அவற்றின் சம்பந்தத்தினாலும் குரங்குப்புண்ணாய் ரணம் ஆறுகிறதில்லை.

நாம் பருகும் நீரின் வழியாகவும், உட்கொள்ளுகிற உணவின் வழியாகவும், தூசி உள்ளே புகுகின்றது. ஜலத்தை எத்தனை தரந்தான் கருத்தாய் வடிகட்டினாலும் அதிலுள்ள கல்மிஷமெல்லாம் நீங்குவதரிது. பனிக்கட்டியைத் தண்ணீராக்குவதிலுங் கூட தண்ணீரிலுள்ள குற்றம் முற்றும் நீங்காது. ஆனால் நல்ல கட்டியாய்ப் பார்த்தெடுத்துத் தூசி படியாமல் கழுவி நீராக்கினால் அந்த ஜலமட்டும் ஒருவாறு மாசின்றியிருக்கும். அசுத்தமான பனிக்கட்டியினின்று இறக்கிய நீரினின்றும் ஒரு துளியை எடுத்து, அதைச் சூரிய கிரணத்திற் கெதிரே நேர்கோணமாகப் பிடித்தால் அதிலிருக்கிற மாசெல்லாம் தெரியும். நிர்மலமான ஜலமாயிருந்தால் அதைச் சூரிய கிரணத்தின் வழியாகப் பார்க்கையில் ஆகாயத்தின் நிறத்தினுஞ் சிறந்த நீல நிறமுடையதாயிருக்கும். நாம் உட்கொள்ளும் காற்றானது சுவாசாசயத்துக் குட்சென்ற பின்னர் அங்கே அழுகுந் தன்மையுடையதன்று; ஏனெனில், சுவாசாசயத்திலுள்ள பல மெல்லிய மயிர்போன்ற யந்திரங்களினால் தூசிகளெல்லாம் நன்றாய் அரித்துத் தடைசெய்யப் படுகிறதினால், அந்த வாயு ஈரலில் கெடுபடாமலிருக்கிறது.

நாம் இரத்தத்தைச் சிறிதேனும் தூசிபடியாமல் வெகு ஜாக்கிரதையாய்ப் பொதிந்துவைத்திருப்போமானால் அது அப்படியே கெடாதிருக்கும். இந்த விதியை அறிந்த சாஸ்திரக்ஞர்கள் இரத்தத்தைப் பத்திரமாய்த் தக்க பாத்திரத்தில் பொதிந்து வைத்திருந்து பரீக்ஷித்துப் பார்த்ததில், அது ஐந்துவார காலமட்டும் கெட்டுப்போகாமலிருக்கக் கண்டிருக்கிறார்கள். ஒருவர் ஒரு தவளையின் வயிற்றினின்றும், அதன் ரக்தாசயத்தைமட்டு மெடுத்து வைத்திருந்ததில், ஒரு வாரமட்டும் அது துடித்துக் கொண்டிருக்கக் கண்டார். கோடையில் நீர் வற்றியகுளத்தில், நீர் நிறைந்த சில தினங்களுக்குள் தவளைகள் கூடுவதற்குக் காரணம் இதுதான். தண்ணீரில்லாத இரண்டு மூன்று மாதமளவும் அவை யோகாப்பியாசஞ் செய்கிறவர்களைப்போல உடம்பெல்லாம் ஒட்டிக் கிரசமாய்ச் சாவாதிருந்து



மீண்டும் முன்போலாகின்றனவென்று காண்கிறது. இவ்வாறே வேறு பல ஜந்துக்களுமாகலாம்.

எங்கெந்த வித்தை நிலத்திலிடுகிறோமோ அந்தந்த ஜாதியான செடிகொடிகளே உண்டாவது போலவே, எங்கெந்தநோயின் கூறான பரமாணுக்கள் நம்முள் சம்பந்தப்படுகின்றனவோ அந்தந்த நோய்களேயுண்டாகும். வியாதி தேகத்திற்குள்ளே சென்று முளைத்து வேரூன்றுவதற்கு முன்னமே அதை அப்படிச் சென்று முளையிடாதிருக்கும்படி நம்மால் இயன்றமட்டும் பார்த்துவரவேண்டும். வியாதிகளெல்லாம் அணுமயமாயிருத்தலால், நாம் தூசியை உள்ளே போகவிடாதிருக்கும்படி என்னென்ன வழிகளைத் தேடவேண்டுமோ அவை அனைத்தாலும் கருத்தாய்ப் போற்றவேண்டும். பஞ்சு யந்திரசாலைகளில் வேலைசெய்கிறவர்களுக்குப் பஞ்சின் பெருங்கேட்டைத் தருவதாகும்; அந்த யந்திரங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு அருகேயுள்ளவர்களும் பஞ்சின் மெல்லிய தூளிகளை உட்கொள்ளாமற் போகார்கள். கொல்லுலையில் வேலை செய்கிறவர்களுக்கு, அவ்வுலைத் தீயினாலுண்டாகுங் கேட்டினும் பல மடங்கு அதினின்றெழும்புகின்ற புகையால் விளையும். அப்புகை முழுதும் தேகத்திற்குப் பிரதிகூலத்தை விளைக்கின்ற அணுத்திரளின் கூட்டமேயாம். இவ்வாறே பிராணிகளுக்குத் தீங்கிழைக்கின்ற தூளிகள் எத்தனையோ வகையாம். ஆயினும் நாம் புசிக்கும் அன்னபானாதிகள், உட்கொள்ளும் காற்று, உடுக்குமுடை, படுக்குப்பாய், இருக்குமிடம், நடக்கும்வழி முதலியவற்றில் இயன்றமட்டும் தூசியில்லாமல் வைத்திருப்பதானது நமது தேகாரோக்கியத்துக்கு மிகவும் நன்றி பயக்குவதாம்.

## NEWS AND NOTES.

### சமாசாரக் கொத்து.

கனந்தங்கிய நமது சென்னைக் கவர்னர் ஸர். ஆர்தர் லாலி அவர்கள் காஞ்சிமாநகரத்திலுள்ள பச்சையப்பன் உயர்தரக் கல்விச் சாலை, பிரீ சர்ச்மிஷன் உயர்தரக் கல்விச் சாலைகளுக்குச் சென்று உபந்நிய சித்தபோது கல்வி விருத்தி செய்வதில் தாம் மற்றவிஷயங்களிலும் மிக்க விருப்பமுடையவராயிருத்தலை வெளியிட்டு நம்மெல்லோர் மனத்திலும் களிப்பை யுண்டாக்கினர்.

ஸெஷனல் ஸ்கூல்களில் பயிலும் உபாத்தியாயர்களுக்கு பூகோளபாடத்தில் சென்னை இராஜதானியைப் பற்றிய முக்கியாம்சங்களும், ஜில்லாவைப் பற்றிய பூரணவிஷயமும் தெரிந்திருத்தல் வேண்டுமென்று மிஸ்டர் ஆர்தர் மேஹ்யூ துரையவர்கள் வற்புறுத்து கின்றனராம். இது நல்ல முயற்சியே எனினும் இதுபோலவே சரித்திரபாடத்திலும் முற்றுகை படையெடுத்தல் முதலிய விஷயங்களைப் பற்றியும் விவரித்தல் நன்றாகும். ஏனெனில், மெட்ரிகுலேஷன் வகுப்பில் வாசிக்கும் ஒரு பிள்ளையை அவ்வகுப்பு உபாத்தியாயர் "குடகு ஆங்கிலராஜ்ஜியத்தோடு சேர்க்கப் பட்டது" என்றால் என்னவென்று கேட்டாராம். அதற்கு அப்பிள்ளை குடகு கோட்டைக்கும் ஆங்கிலராஜ்ஜியத்திலுள்ள கோட்டைக்கும் ஒரு நீண்ட இருப்பு சங்கிலிபிட்டுக் கட்டுவது என்று பதில் சொன்னதும். இதனால் பிள்ளைகளுடைய அபிப்பிராயம் எவ்வாறு இருக்கும் என்றும் ஊகிக்கலாம்.

கிண்டர்கார்டன் முறைகள் பிரோபல் துரையவர்கள் காட்டியவை என்று கூறினால் நமதுதேய உபாத்தியாயர்கள் அது என்னமோ என்று மயங்குகின்றனர். ஆகையால் அக்கிண்டர்கார்டன் முறைகளை நமது தேயத்து முறைகளோடு ஒற்றுமை காட்டி வழக்கப்படுத்துவதே நன்றாகும்.

கோயமுத்தூர் துரைத்தன பெண்பாலர் போதனைப் பியாச பாடசாலையில் ஈச்சங்கசங்குகளால் தட்டுக்களும், சிறு கூடைகளும் சிறுமிகளே செய்யுந் திறமுடையவர்களாக விருக்கின்றனர். இது மேலான தன்மை யென்றே சொல்லலாம். மற்றும் இப்பாடசாலையிலுள்ள சிலவிஷயங்களை மறு பத்திரிகையில் எழுதுவோம்.

---

MADRAS
சென்னை-600 008.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 2. | 1906 ௵ நவம்பர் ௴ | மாதம் 6.

## LESSONS ON FORMS.

### உருவங்களைப் பற்றிய பாடங்கள்.

உருவங்களைப்பற்றிய இம்முதற்பாடத்தில் சாதாரண கோடுகளைப்பற்றிபோதிக்கலாம். மாணாக்கர்களில் ஒவ்வொருவருக்குங் கற்பலகை, எழுதுக்கோல், நூல் கழி வேண்டும்.

பின்னர் உபாத்தியாயர் கீழ்குறித்த விதமாக இப்பாடத்தை ஆரம்பிக்கலாம்.

இரண்டு பிள்ளைகளை வகுப்பிற்கு முன்னே கொண்டுவந்து ஒரு சிறு கயிற்றைக்கொடுத்து ஒருவனை ஒரு முனையையும், மற்றொருவன் மற்றொரு முனையையும் பற்றிக்கொள்ளும்படி செய்க. வகுப்பிலுள்ள மற்றப்பிள்ளைகளை இதனை நன்கு கவனிக்கச் செய்க. வகுப்பின் பிள்ளைகளை யாதொரு விஷயமும் கேட்க முயலுமுன், முன்னிற்கும் இரண்டு பிள்ளைகளை கயிற்றைச் சிறிது தளர்ச்சியாய்ப்பிடிக்கச் செய்க.



உபாத்தியாயர் — பிள்ளைகளே! இப்போது இக்கயிற்றைப் பற்றிக் கவனியுங்கள், (கயிற்றைப்பிடிக்கும் பிள்ளைகளைப்பார்த்து, நீங்

கள் கயிற்றை இழுத்துப்பிடியுங்கள். நான் இப்போது இந்த ரூல் கழியை எடுத்துக்கொண்டுகரும்பலகையில் இந்த கயிறு நீண்டிருப்பதுபோல் ஒருகோடு இழுக்கின்றேன்.

---

இந்தக் கோடு எப்படியிருக்கிறது ?

பிள்ளைகள் — அந்தக் கோடு நேராக இருக்கிறது.

உபா — சரி, இந்த ரூல் கழி எப்படி இருக்கிறது ?

பிள் — ரூல் கழியும் நேராகவே இருக்கிறது.

உபா — இந்தக்கயிற்றை இருவர் இழுத்துப் பிடித்தால் எவ்விதமான கோட்டைத் தெரிவிக்கின்றது ?

பிள் — அது ஒரு நேர்கோட்டைத் தெரிவிக்கின்றது ?

உபா — சரி, சரி, இங்குள்ள பொருள்களில் எதெது நேர் கோட்டைத் தெரிவிக்கும் ; யோசித்துச் சொல்லுங்கள்.

பிள் — எழுதுகோல், கற்பலகையின் சட்டங்கள், மேஜையின் ஓரங்கள், வாசக்கால்களின் சட்டங்கள், ஜன்னல்களின் சட்டங்கள்.—

குறிப்பு — இவைபோன்ற வஸ்துக்களின் பெயர்களை வருவிக்க.

உபா — பிள்ளைகளே ! நீங்கள் இப்போது உங்கள் கற்பலகைகளை எடுத்துக்கொண்டு ரூல் கழியை வைத்து எழுதுகோலால் சில நேர்கோடு கிழியுங்கள் பார்ப்போம்.

குறிப்பு — குழந்தைகள் தம் முன்னுள்ளவரது செய்கையைக் கவனித்தபிறகு இயற்கையாகவே தானும் அவ்வாறு செய்ய ஆவல் கொள்ளும் ஆகையால், ஆசிரியராயினோர் ஒவ்வொருவரும், குழந்தைகளுக்கு இயற்கையில் உண்டான இவ்வித ஆவல், விருத்தியடைவதற்கான செய்கைகளையே செய்யுமாறு பழக்குதல் வேண்டும். இவ்வளவு இளமைப்பருவத்திலும், சிறுவர்கள், தங்கள் உபாத்தியாயர் செய்யும் செய்கையைப் பார்த்து தாமும் அவ்வாறே செய்ய முயல்வதில் சந்தோஷங்கொண்டிருப்பார்கள். சிறுவர்கள் தப்பில்லாமல், வெகு சுத்தமாக அப்பியாசங்களைச் செய்யவேண்டுமென நினைத்து இவ்வப்பியாசங்கள் கொடுக்கப்பட்டனவென்று நினைத்தல் கூடாது.

சிறுவர்கள் இடைவிடாது ஏதாவது ஒரு காரியத்தை செய்வதற்கு ஆவல் கொள்வதால் அவர்கள் அவ்வப்போது ஏதாவது செய்வதற்காக இவ்வப்பியாசங்கள் கொடுக்கப்பட்டன. சிறுவர்கள் வேடிக்கையான அப்பியாசங்களை கஷ்டப்படாமல் அதிக ஆசையோடு செய்யுமாறு அவர்களைப் பழக்கி, அவர்கள் எண்ணம் ஓரிடத்தில் நிலைத்து, அறிவு விருத்தியடையும்படி செய்யவேண்டும்.



# TIT BITS.

## விநோதக் கூற்றுகள்.

சந்நியாசி ஒருவர் ஒருநாள் ஒரு நகரத்திற் பிரவேசித்து வீதிகள் தோறு சுற்றிப்பார்த்துவந்தார். அங்கு ஒரு நாய்வெகு அமைதியோடு படுத்துக்கொண்டிருந்தது. அப்போது அந்தச் சந்நியாசி அந்நாயைப் பல்முறை சுற்றிவந்து தீர்க்கதண்டம் சமர்ப்பித்தார். அந்நகரவாசிகளில் சிலர் அந்தப் பெரியோருடைய தெய்வீகம் விளங்கிய முகப்பொலிவையும், அவர் அசேதனமான இந்நாயை வணங்குவதையுங்கண்டு ஆச்சரியமுற்று அவரை அணுகி நமஸ்கரித்து வெகு விநயமாய், ஐயா ! சுவாமிகளே ! தாங்கள் கேவலமாகிய இந்நாயை இவ்வாறு பன்முறை வணங்கிய காரணம் யாதோ ? எமக்கு அருள வேண்டும் என்று வேண்டினர்.

அவர்கள் வேண்டுகோளுக்கிரங்கிய அப்பெரியோர், அன்பர்காள் ! நீங்கள் என்னை வினவியது உண்மையே. இது கேவலமான ஒரு மிருகமேயாயினும் இதனிடத்தில் மேலோரும் கற்கவேண்டிய சில நீதிகள் உண்டு. அதனாலேயே, நாயினும் கீழான மிருகங்கள் பலவிருந்தும் அவற்றையெல்லாம் கொள்ளாமல் மெய்ஞ்ஞானியாகிய பெரியோர் தம்முடைய தோத்திரப்பாக்களில் “ நாயினுங்கடையேன் ” என்கின்றனர் என்றார். அந்நீதியைக் கேட்ட பிரஜைகள் பெரியவரை மறுபடியும் பணிந்தது அத்தொடர் மொழியின் பயனை விளக்குமாறு வேண்டினர். சந்நியாசியார் அவர்கள் விரும்பியவாறே விடை கூற ஆரம்பித்தனர்.

நாயினிடத்துப் பல நற்குணங்கள் காணப்படினும் அவற்றில் தலைமையான மூன்று குணங்களை ஈண்டுக் கூறுவோம். அவையாவன :—

(1) நாய் தனக்கு ஒரு கவள மிட்டவனிடத்தும் அன்புபாராட்டி அவனது வீட்டை அல்லும் பகலும் அகலாது ஆர்வத்தோடு காவல் செய்கின்றது.

(2) நாய் தன் எஜமானன் ஒரு மகாசபையின்கண் இருக்கையில் அச்சபையில் உருவம், உடை முதலியவற்றால் தன் எஜமானனை ஒப்பவர் பலர் இருப்பினும் தன் தலைவனை உய்த்துணர்ந்து அடைகின்றது.

(3) நாய் தன் எஜமானன் கட்டளைக்கு ஒரு சிறிதும் பிழையாமல் அவன் ஒரு புலியைக்காட்டி அதன்மீது பாய்ந்து போர்புரிக என்றேவின், தன் உயிர்க்கு ஆபத்து நேருவதையும் கவனியாது உடனே அவ்வனம் செய்யும்.

இஃது இவ்வனமாக, நமக்கு முக்காலத்தும் வேண்டுவன கொடுத்து ரக்ஷிக்கும் கடவுளிடத்துப் பத்தி செய்து அவன் கோயிலை அடைந்து வணங்குகின்றோமில்லை.

இரண்டாவது எங்கும் பரந்து விளங்கியுள்ள அக்கடவுளது உண்மை யுருவை ஆராய்ந்தறிந்து அடைகின்றோமில்லை.

மூன்றாவது கடவுளது ஆணையாயுள்ள வேதாகமங்களில் கூறியுள்ள விதிவிலக்குகளை அறிந்து நடக்கின்றோமில்லை. நாம் உயர்வாகிய மானிடப் பிறவியை எடுத்தும் யாது பயன் என்றார்.

ஐயா ! தேவரீர் கூறிய இவ்விஷயங்களால் நாயினிடத்துள்ள நற்குணங்களும், நாம் ஈசுவரனிடத்து நடந்துகொள்ள வேண்டிய முக்கியாம்சங்களும், "உள்ளங்கை நெல்லியங்கனிபோல்" விளங்கின. ஆயினும் இதுவிஷயமாய் மற்றுமோர் சந்தேகம் நிகழ்கின்றது. அதனையும் தயைசெய்து விளக்கியருளினால் அதுகொண்டு நாங்கள் நன்னெறியைக் கடைப்பிடித்துய்வோம் என்றனர்.

சந்நியாசியார், அஃது யாது? என; இப்போது தேவரீர் "நாயினுங் கடையேன்" என்னுந் தொடருக்கு விஷயம் தெரிவித்தீர்கள். சில அடியார்கள் தம் பாடல்களில் "நாயனேயேன்" எனக் கூறியிருக்கின்றனர். அதன் கருத்து யாதோ ? என்றனர்.

அதுகேட்ட பெரியோர், ஆ! ஆ ! அப்படியா ? அஃதும் ஏற்ற கேள்வியே. அது யாம் அனைவரும் அறியத்தக்கதே. அதனைக்கூறுகின்றேன்.

நாய் தான் உண்ட உணவை மறுபடியும் கக்கி அதனையே மறுபடியும் விருப்பியுண்ணும் குணமுடையது. நாம் உண்டு கழித்தது தானே என்று அதனிடத்தில் வெறுப்புண்டாகாமல், புதியதோர் வஸ்துவைப்போல மறுபடியும் அதனையே உண்ண அவாக்கொள்கின்றது. அதுபோலவே பகுத்தறிவுள்ள மானிடர்களாகிய நாமும்,



ஒருநாளைப்போலவே உண்டதையே உண்ணவும், உடுத்ததையே உடுத்தவும், கண்டதையே காணவும், அநுபவித்ததையே அநுபவிக்கவும் அவாவும் மனமுள்ளவர்களாய் பாசபந்தத்திற்கட்டுண்டு உழல்கின்றோம். அதனால் நாயனேயேன் என்பர் பெரியோர் எனப் பதிலுரைத்தார்.

அதுகேட்ட பிரஜைகள் அவற்றின் உட்பொருளை யுணர்ந்து உண்மையறிந்து மகிழ்ந்து பெரியோரைப் பெரிதும் வணங்கினர்.

## HOW TO TEACH ARITHMETIC.

### எண்முதல் விளக்கம்.

முன் பாடங்களில் குறித்திருக்கும் வஸ்துக்களைக் கொண்டு கிரமமாய்ப் பிள்ளைகளைப் பயிற்றுவித்தால், பத்துவரையில் எண்களை எண்ணிச்சொல்லவும், கூட்டவும் அவர்களுக்கு நன்றாய் வழக்கப்பட்டுப்போகும். கண்ணுக்கு முன் வஸ்துக்களில்லா எண்களைக் குறித்த வினாக்களுக்கு விடைகள் சொல்லும்படி இதுவரையில் பழக்கிவைத்திருக்கிறது. ஒரு எண்ணில் ஒரு பாகத்தைக் கழித்துவிட்டால் அப்போது அந்த எண் வித்தியாசப்படுகிறதையும், ஏணியைக் கொண்டு தெரிவித்திருக்கிறது.

அது எப்படி என்றால், ஏணியில் இரண்டாம்படிமேல் ஏறியிருந்தால் எத்தனைபடி ஏறியாயிற்று. இன்னும் எத்தனை படி ஏறவேணும் என்று கேட்டாலும், பத்திலிருந்து இரண்டு எடுத்து விட்டால் மீதி என்னென்று கேட்டாலும் ஒன்றுதான். ஆகையால் ஒரு பெரிய எண்ணிலிருந்து சிறிய எண்களைக்கழிக்கும் வழியையும் அதனுடைய நீக்கு இப்படிபட்டதென்பதையும் சிறுவர்களுக்கு எளிதில் தெரிவிக்கலாம். வீட்டில் தாய் தந்தைகள் இந்த மாதிரி பாடம் முதல் தடவை சொல்லும்போது, சிறுவர்களுக்கு ருசியுண்டாகும்படிசெய்வதற்காகஒருசின்னக்கூடையில்முந்திரிக்கொட்டையாவது சேர்த்துவைத்துக்கொண்டு பல சிறுவர்களையும் விளையாட்டுக்காக வரும்படி செய்யவேணும். பெரிய பிள்ளைகள் கேட்ட கேள்விக்கு உடனே பளிச்சுப்பளிச்சென்று விடை சொல்லுவார்கள். ஆகையால் அவர்களிலும் சிலர் சிறு குழந்தையுடன் வந்து உட்கார்ந்திருந்தால், மிகுந்த சகாயமிருக்கும். இந்தக் கொட்டைகளில் ரத்தினத்துக்கு ஒன்றும், விஜயத்துக்கு இரண்டும், மாணிக்கத்துக்கு மூன்றும், வேலாயுதனுக்கு நாலும், பாலுக்கு ஐந்தும், எங்கள் பிள்

ளைக்கு ஆறும் கொடுத்தால், உங்களில் யாரிடத்தில் இரண்டு கொட்டையும், இரண்டு கொட்டையும் இருக்கிறது ? (வேலாயுதம்) என்னிடத்தில் இருக்கிறது, ஈரிரண்டு நான்கு (தந்தை) யார் ஒரு கொட்டையும், ஒருகொட்டையும் வைத்துக்கொண்டிருக்கிறது ?

(விஜயம்) நான். ஈரொன்று இரண்டு.

த. யார் மூன்று கொட்டையும் மூன்று கொட்டையும் வைத்துக்கொண்டிருக்கிறது ?

கு. நான் வைத்துக் கொண்டிருக்கிறேன்.

த. மற்றப்பேரைப்போல் இருமூன்று ஆறென்று சொல் ?

கு. இருமூன்று ஆறு.

த. இருமூன்று என்றால் இன்னதென்று உனக்குத் தெரியுமா அப்பா ?

அது ஒருமூன்றும், ஒரு மூன்றும் என்பதையே சுருக்கமாகச் சொல்வதாம். ஆகையால் உன் கையில் இருக்கும் கொட்டைகளைப் பார்த்து, இரு மூன்று ஆறு என்று சொன்னால், மூன்று கொட்டையும் மூன்று கொட்டையும் என்பதற்குச் சமானமல்லவா ?

கு. ஆமாம்.

இப்போது அவனவன் கையிலிருந்து ஒவ்வொரு கொட்டை எடுத்துக்கொள்ளப்போகிறேன். அப்புறம் அவனவன் கையில் மீந்திருப்பதைப் பிசகில்லாமல் சொல்லவேணும். முதலில் ரத்தினத்தின் கையிலிருந்து ஒன்று எடுத்துக்கொள்ளுகிறேன்.

ரத்தினம். ஒரு கொட்டையில் ஒரு கொட்டை எடுத்துவிட்டால் மீதி ஒன்றுமில்லை.

த. விஜயத்தின் கையிலிருந்து இதோ ஒன்று எடுத்துவிட்டேன்.

விஜயம். இரண்டு கொட்டையிலிருந்து ஒரு கொட்டையை எடுத்துவிட்டதால் மீதி ஒன்று.

த. அப்புறம் மாணிக்கத்தின் கையிலிருந்து ஒன்று எடுத்துவிட்டால்,

மாணிக்கம். மூன்று கொட்டையில் ஒரு கொட்டை எடுத்துவிட்டால் மீதி இரண்டு.

த. இதோ வேலாயுதன் சையிலிருந்து ஒன்று எடுத்துக்கொண்டேன்.

வேலாயுதன். நாலு கொட்டையில் ஒரு கொட்டை எடுத்துவிட்டதால் மீதி மூன்று.



த. பானு கையிலிருந்து ஒன்று எடுத்துவிட்டால்.

பானு. ஐந்து கொட்டையிலிருந்து ஒன்று எடுத்துவிட்டால் மீந்தது நாலு.

த. இதோ எங்கள் குழந்தைகையிலிருந்து ஒரு கொட்டை எடுத்துவிடுகிறேன்.

குழந்தை மற்றவர்கள் சொன்னதைக் கவனித்துக் கேட்டு, தன் வரிசை வந்தபோதும் “ஆறு கொட்டையில் ஒரு கொட்டை எடுத்துவிட்டால் மீதியான கொட்டை ஐந்து” என்று சொல்லிற்று.

த. சரி; நன்றாய்ச் சொன்னாய். இன்னும் ஒரு தடவை நாம் இந்த விளையாட்டை விளையாடும்போது, இன்னும் அதிகமாய் முந்திரிக்கொட்டை கொடுத்து இரண்டு இரண்டாய் அவன் அவன் கையிலிருந்து எடுத்துக்கொள்ளுவேன். அப்புறம் இன்னும் அதிகமாய்க் கொடுத்து மூன்று மூன்றாய் எடுத்துக்கொண்டு போவேன். இப்போது இது இம்மட்டும் நடந்தது போதும். அப்பா, இதோ பார், இந்தக் கூடையில் கொய்யாப்பழமும், மாம்பழமும்வைத்திருக்கிறது இதை எடுத்துகொண்டு உன் கூட்டாளிகளுக்கு சரியாய்ப் பங்கிட்டு, இந்த முந்திரிக்கொட்டையிலும்பத்து பத்தாய்க்கொடுத்துஎல்லாரும் சாப்பிட்டுப்போகும்படி செய். மேலே காட்டியபடியே தாய் தந்தைகள், அல்லது உபாத்தியாயர் போதிக்க வேணுமென்கிற அகத்தியமில்லை. நம்முடையவழி தெரிவதற்காகவே பாடம் ஒன்றைத் தோராயமாய்க் காட்டினோம். பிள்ளைகளுடைய ருசிக்குத் தக்கபடி வேறுபடுத்திச் சொல்லலாம். அவர்களுக்கு இந்தப்பாடம் விளையாட்டைப்போலச் சந்தோஷத்தை உண்டாக்கத் தக்கதாய் இருந்தால், உடனே மேலே சொல்லியபடி பத்து, அல்லது பத்துக்குக்குறைந்த எண்களிலிருந்து இரண்டு மூன்று முதலான எண்களை ஒவ்வொன்றாய்க் கழிக்கும்படி செய்யவேணும். இதே பிரகாரம் பல பிள்ளைகளைக் கூட்டி வஸ்துகளைப் பத்துக்குக் குறைந்த பாகங்களாகப் பாகிக்கச்சொல்லி, சிறு குழந்தைக்கு எண்களை குறித்துச் சுலபமாய்த் திருத்தமான ஞானத்தை உண்டாக்கி வைக்கலாம்† இதனடியில் குறித்திருக்கும் வினாக்களையாவது, அவைகளுக்கு ஒப்பான வினாக்களையாவது இந்தச் சமயத்தில் சிறுவர்களைக் கேட்கலாம்.

நான் உனக்கு ஐந்து இலந்தைப்பழம் கொடுத்து, நீ அவைகளில் இரண்டை உன்னுடைய சகோதரிக்குக் கொடுத்துவிட்டால், உனக்கு நின்றது எவ்வளவு?

நான் எழு கொய்யாப்பழத்தை உனக்கும், உன்னுடைய சகோதரிக்கும் பங்கிட்டுக் கொடுக்கும்போது, அவளுக்கு உன்னைவிட ஒரு பழம் அதிகமாய்க் கொடுத்திருந்தால், அவளுக்கு எத்தனை கொடுத்திருப்பேன் ?

ராமசுவாமி கையிற் பத்து மாம்பழம் கொடுத்து, அவன் மூன்று தங்கைமாருக்கும் ஒவ்வொரு பழம் கொடுக்கச் சொன்னால், அவனுடைய பங்குக்கு வந்த பழம் எத்தனை ?

விஜயம் நாயிற்றுக்கிழமை தவிரத் தினந்தோறும் தன் சிறுவண்டியில் ஒரு மைல் தூரம் சவாரிபோய்வந்தால், ஒரு வாரத்தில் எத்தனை மைல் சவாரி போயிருக்கவேணும் ?

ஜானகி என்பவள் ஒன்பது சிறு பெண்களையும், பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு விளையாடப்போனவிடத்தில், நாலு பேர் முன்னதாய் வீட்டுக்குத் திரும்பி விட்டார்களானால், அக்கூட்டத்தில் நின்றவர்கள் எத்தனை பேர் ?

வேனு, பானு, கமலம் இம்மூன்று பேருக்கும் ஒன்பது நாவற்பழத்தைச் சரியாய்ப் பங்கிட்டால், ஒவ்வொருவருக்கு எத்தனை பழம் வந்திருக்கும் ?

சுந்தரமுதலி பொங்கற்பண்டிகைக்குத் தன் தம்பிக்கும், தங்கைமார் இருவருக்கும் புது வஸ்திரம் வாங்கிக்கொடுக்க ஆள் ஒன்றுக்குச் சோடு வஸ்திரம் கிடைத்தது. ஆக எத்தனை வஸ்திரம் வாங்கிக் கொடுத்தார் ?

ஒரு மஹாராஜி வாரம் ஒன்றுக்கு இரண்டு ஏழைக்குடித்தனங்களைப் போய்ப்பார்த்துத் திரவிய சகாயம் செய்து கொண்டுவந்தாள். ஒரு மாசத்தில் (நாலு வாரம்) எத்தனை ஏழைக் குடித்தனங்களைப் பார்த்திருப்பாள் ?

பத்துக் கோலியை நாலு பிள்ளைகளுக்குச் சரியாய்ப் பங்கிட்டுக் கொடுக்கலாமா ?

சேஷனுக்கும், ராஜத்துக்கும் எழு வாதுமைக் கொட்டைகளை எத்தனை விதமாய்ப் பங்கிடலாம் ?

ஒரு கடியாரத்தில் ஒன்றின் பின்னால் ஒன்றாக வெவ்வேறு காலத்தில் அடிக்கிற மணிகளுடைய மொத்தம் பத்து ஆகவேணுமானால், நாம் எத்தனையாவது மணியிலிருந்து ஆரம்பித்து எண்ண வேண்டியது ?



உங்கள் அப்பாவுக்குச் சென்னப்பட்டணத்திலிருந்து ஒருபெட்டி புதுப்புஸ்தகம் வந்தது. அதை உடைத்துப் பார்க்கும்போது பத்துப் புஸ்தகம் இருந்தது. அதில் பெரிய பிள்ளைக்கு ஒன்றும், சின்னப்பெண்ணுக்கு ஒன்றும் கொடுத்துவிட்டார். ஆகக் கொடுத்த புஸ்தகம் எத்தனை ? மீதி எனைத்த?

ராமசுவாமி என்பவன் ஒரு தோப்பில் ஒன்பது மரம் இருக்கக் கண்டான். அதில் ஒரு பலாமரமும், ஒரு கிச்சிலி மரமுந் தவிர மற்றதெல்லாம் மாமரங்களா யிருந்தால், ஆக எத்தனை மாமரம் இருந்தது ?

எங்கள் வீட்டுப் புறக்கடையில் பத்துமரம் இருக்கிறது. அதில் ஒன்று வேப்பமரம், ஒன்று மாமரம், இரண்டு புன்னைமரம், மற்றதெல்லாம் வாழைமரமானால், அவ்விடத்தில் எத்தனை வாழைமரம் இருக்கவேண்டியது ?

சிங்காரம் பூங்காவனத்தில் பத்து ரோஜாபுஷ்பம் மலர்ந்திருப்பதைப் பார்த்து எண்ணிக்கொண்டு போனான். உடனே தோட்டக்காரன் மூன்றைப் பறித்துகொண்டுபோய்விட்டால் மீதி எத்தனை?

என்னிடத்தில் பத்துக் கிச்சலிப்பழம் இருந்தது. அதை நாலு பிள்ளைகளுக்குப்பங்கிட்டுக்கொடுக்கவேணும். அப்படிப்பங்கிடுவதில், இரண்டாம் பிள்ளைக்கு முதற்பிள்ளையைப்பார்க்கிலும் அதிகமாயும், மூன்றாம் பிள்ளைக்கு இரண்டாம் பிள்ளையைப்பார்க்கிலும் அதிகமாயும், நான்காம் பிள்ளைக்கு மூன்றாம்பிள்ளையைப் பார்க்கிலும் அதிகமாயும் கொடுக்கவேணும். அதை எப்படி கொடுக்கிறது.

# The Female Education.

## பெண் கல்வி.

(வெண்பா.)

எல்லைமார்த் தாண்ட னிருள்சீக்கு மாறுபிழை
யில்லையெனச் செய்திங் கிசைபெறவே — வல்லகலை
சொல்லா சிரியர் துணைவனெனத் தோன்றினனால்
நல்லா சிரியன் நனி.



தனக்குப் படிக்கத் தெரியாதென்று பரிதாபத்துடன் கையைவிரித்துக் காட்டும் ஓர் பெண்ணின் படம்.

நாகரீகத்துக் கென்றும் இருப்பிடமாயுள்ளது நமது நாடு. இத்தகைய கீர்த்திபெற்ற நம் நாட்டுப் பெண்களிலனேகர் படியாதிருத்தல் பெரிதும் பரிதபிக்கத் தக்க விஷயம். இப்பெருங்குறையைக் கற்றோரிற்பலரும் மற்றோரிற்சிலரும் காலக்கிரமத்தில் நன்குணரப்



பெற்றனர். ஆகவே, சிலவாண்டுகள் தொடங்கி நாடெங்கும் பெண்கள் கல்வி பயிலப் பாடசாலைகள் ஸ்தாபிக்கப்படலாயின. இக்காரியத்தில் துரைத்தனத்தார் ஊக்கங்கொண்டுழைக்கும் நோக்கமும் பெரிதே. பெண்கல்விக்கென இவ்வாறு இடைவிடாது முயலும் நற்கால மாகிய இக்காலத்தும் சிலர் பெண்கள் படிக்கக் கூடாதென்று ஆக்ஷேபிக்கத்துணிதலாச்சரியம். அவர்களின் சாமானிய துராக்ஷேபனைகளாவன:—

சட்டிசுறண்டும் பெண்களுக்குப் பட்டமடையும் படிப்பேன்?
அவர்களென்ன உத்தியோகஞ் செய்யப்போகிறார்களோ?
பெண்கள் படிப்பது சாம்பிரதாயவிரோதமல்லவா?
பெண்டுகள் படித்தால் கொண்டவனை மதிப்பார்களா?
கல்விகற்ற பெண்களின் நடையுடைபாவனை நாமறியோமா?
கள்ளப் புருடருக்குக் கடிதமெழுதத்தானே பெண்கள் கல்வி கற்பது?
ஸ்திரீகள்புருஷருக்குப்பணி விடைசெய்யத்தானேபடைக்கப்பட்டனர்?
ஆகையால், அடுப்பூதும்பெண்களுக்குபடிப்பாலென்னபிரயோசனம்?

என இன்னன பலவும் பன்னியுரைத்த லன்னவருக் கியல்பு.

இனி இவ்வகைத் துராக்ஷேபனைகள் எவ்வகையினும் பொருந்தா வென்னும் சமாதான விடையை —



* பல்லாசிரியமு
நில்லாசிரியரை
வல்லோசையுரைப்
பொல்லாசனனினை
யல்லாசிரியனுஞ்
சொல்லாசிகளிசை
வில்லாசிரியனு
மெல்லீசனுமாய்க்
கல்லாசயகுண
உல்லாசிகளென
மல்லாசனமிடு
நல்லாசிரியனில்—
மாதந்தோறுந் தனித்தனி நன்காராயப் புகுவோமாக.

* (இ-ள்.) பல்லாசிரியமும் = பலவிடங்களிலும், நல்லாசிரியரை = நிலைபெற்றிருக்கும் உபாத்தியாயர்களை, வல்லோசைகளிசை = வசைச்சொற்களை யுரைக்கும், பொல்லாசனன் = தீய(குணத்தினையுடைய அசுர குருவாகிய) சுக்கிரன், இணையல்லாசிரியனும் = (தனக்குச்) சமானமாகாத (தேவகுருவாகிய பிரகஸ்பதி யென்னும்) ஆசானும், சொல்லாசிகளிசை வில்லாசிரியனும் = ஆசீர்வாதஞ்செய்யும் (இயற்கைக்குரிய அந்தணர்குலத்திற்பிறந்த) வில்வித்தையிற்

சிறந்த (துரோணாசாரியரென்னும்) ஆசிரியரும், எல்லீசனுமாய் = பகற்காலத்துக்கிறைவன் (நவவியாகரணபண்டிதனான) சூரியனும் இணையெனச் சொல்லத்தக்கதாய், கல்லாசயகுண உல்லாசிகளென்ன = (கல்வி) கற்குஞ் சுபாவகுண விசேஷத்தினையுடையவர்களென்று (மதிக்குமாறு), மல்லாசனமிடும் = (சரஸ்வதீ பீடமென்னும் வெண்டாமரை மலராகிய) வளம்பொருந்திய ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்யும் (வல்லமையுடைய) நல்லாசிரியனில் = நல்லாசிரியன் (என்னும் மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை) வாயிலாக—(எ-று.)

கருத்து—நல்லாசிரியனைக் - கல்லாசிரியர்கள்
பல்லாசொழிக்கும்- நல்லாசிரியரே.

வெண்பா.

அன்னை தயைபு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னவணி
வேசி துயிலும் விறல்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்.

కార్యేషు దాసీ, కరణేషు మంత్రీ। రూపేషు లక్ష్మీ, క్షమయా ధరిత్రీ
స్నేహేషు మాతా, శయనేషు వేశ్యా। షట్కర్మయుక్తా కులధర్మపత్నీ॥

என்னும் பாடல்களிற் குறித்த கருத்துக் கிணங்கிய குணங்கள்பலவும் நிலவுந்தன்மை பெண்களுக்குப் பிறப்புடன் ஒருங்கே சிறப்பொடுமமையச் சரிப்படாவாகையால் அவை அறிவின் விருத்தியாலடையற்பாலனவாகின்றன. அவ்வறிவின்விருத்திக்குக் காரணமாயுள்ளது கருத்தைத்திருத்தி, வருத்திப்பொருத்துங் கல்வியேயன்றோ? அக்கல்வி ஆடவருக்கேயன்றி மனத்தாலும் குணத்தாலு இனத்தாலும் வேற்றுமையுறு அரிவையருக்கும் பிரிவரும் பிரயோசனகாரியேயாமென்பதனை ஏன் ஒப்புக்கொள்ளலாகாது?

மேற்கூறிய பாக்களின்படி மனைவிமற்றெல்லாவகையானுங்கணவனுக் கிணைசொலற்குரிய துணைவியாகப் புணைப்படுபவளேயாயினும், கல்வி கேள்விகளாற் சிறந்து அதனால் அறிவில் மிகுந்த அமைச்சனைப்போலும் தன் நாயகனுக்குச் சமயோசித புத்தியும் புகட்டவல்லவளாயிருத்தற்குக் கல்லா மடந்தையர்பால் குணந்தோன்றுமா? இது, ‘புல்லுண்ணுப் பசுவும்வேண்டும், பூரணமாய்க் கறக்கவும்வேண்டும்’ என்னும் பழமொழிக் கொக்கும். பேதைமையென்பது மாதர்க்கணிகலமல்லவா? இயற்கையினே அறியாமையென்னும் அணிகலம் பூண்டொழுகும் மாதற்குச் செயற்கையாற் சிறிதளவு கல்வி துணைப்படுதலால் குணப்படுமேயன்றி மற்றென்னை? ஆதலால் சட்டிசுறண்டும் பெண்களாயினும் (பி-யே, எம்-யே முதலிய பட்டமடையும்



படிப்புக்கெட்ட முடியாதாயினும்) திட்டமறிந்தொழுக எட்டுணையேனுங் கல்விகற்றிருத்தல் ஞாயமற்றதாமா? நிற்க.

பிரபஞ்சத்தின் பெருநிலபாகத்தில் சதாம்சத்திலும் (நூற்றுபங்கிலும்) குறைந்ததான இச்சிறு பூபாகமாகிய இவ்விந்துதேசத்தில் மட்டுமே பெண்பாலார்கள் கற்கலாகாதெனு மாக்ஷேபனை பெரிதாயுளது. இனியவ்வாக்ஷேபனைகளின் சாதகபாதகங்கள் சிறிதாராய்வோம்.—

அன்னியநாட்டுச் சீமாட்டிகள் அனைவரும் கல்விபயிலும் கமலாசனிக்கிணையாயிருக்கின்றனர். அன்னோர் கற்றறிந்த கல்வியாலாய பயனைக்கொண்டு செழிக்குஞ் செய்கைகளை அத்தேச சரித்திரங்களாலும், வர்த்தமானப் பத்திரிகைகளாலும் அறிந்து வெட்கிப் பெருமூச்செறியாநின்ற நமது பேதைப் பெண்களின் பரிதாப வாழ்க்கை இத்தகைய ஆக்ஷேபனைக்காரர்களின் முன் எத்தகையால் நன்னிலை பெற்றொழுகும்?

புற நாட்டினியற்கையமைப்பே அன்னோருக்குப்பெரிதும் சகல நன்மைகளுக்குஞ் சாதகமாயுள்ளது. எப்படியெனின் ஐரோப்பா ஆஸ்திரேலியா, வட அமெரிக்கா முதலிய பூபாகங்கள் சீதள மிகுந்த பிரதேசங்களாதலால் அந்நாட்டுப் பெண்கள் 18, 20-வயதாயினவும் மங்கைப் பருவமடையாமல் சுவேச்சையாய் நெடுநாள் கல்வி பயிலவும், அதனாலவர்களுக்கறிவதிரிக்கவும், வயதேற வேற அன்னோரின் தேகதாருட்டிய மும்மி சேஷிக்கவும், முதலிய அநந்த லோகாநுபவ குணவிசேஷங்களைப் பெறப் பாத்திரராக விருக்கின்றனர்.

நம் நாட்டுப் பேதைப் பெண்களென்னிலோ உட்டண மிகுந்த நமது தேயவியற்கையால் 10, 12 வயதான இளம் பிராயத்திலேயே பருவதசை யடையுந்தன்மைக் குள்ளாகும்படி நேருவதால் இவர்களின் வித்தியாபி விருத்திக் கவகாசமின்றி அரை குறையாய்ப்படித்து அனியாயமாய்ப் போகின்றனர். பெண்களுக்குப் பாலியத்திலேயே விவாகஞ்செய்தல் நமது நாட்டின் துர்வழக்கம் பெரிதாயுள்ளது. ‘விவாஹம் வித்ய நாசனம்’ என்னும் சாமானிய வசனத்திற் கிணங்க இவையாவும் அவர்களின் வித்தைக் கிடையூற்றை விளைவிப்பதன்றி குடும்பத்திலும் பல துன்பத்திற்குள்ளாக்குகின்றது.

(அகவல்.)

“மாமியின் போரும் - மைத்துனர் கடுப்பும்
“ஓமலிட் டுழலும் - ஓரகத் திகளின்
“சில்லரைச் சண்டையுந் - தியகர்த் திகளின்

" வல்லடி வழக்கும் - வரன்முறை யின்று
" மாமா நடுவில் - வாட்டுங் கொடுமையும்
" ஆமா மெனவே - யவரோடு சேர்ந்து
" புருஷனு மொருகால் - போடீ யென்று
" பருஷமாய்த் திட்டிப் - பாவதோ ஷத்திற்
" கஞ்சா தடித்தே - யடக்கி நடத்தும்
" வஞ்சனை யோடு - வயிற்றை வளர்க்க
" வீட்டினிற் சேர்ந்து - வீண்வார்த்தை யாடிக்
" காட்டிக் கொடுத்து - கௌரவ மடையும்
" அற்பர் மனப்படி - யடங்கி நடந்தும்,
" சொற்பமா யவர்சொலும் - சொல்லுக் கிசைந்தும்,
" ஈனருக் கெல்லா - மீளக்கார மாகி
" மானத்துக் கஞ்சி - வாய்திற வாமல்
" பருவ மனைத்தும் - பாயோடு போக்கி
" உருவங் குலைந்தே - உண்மையா யென்றுஞ்
" சுகமெனும் பொருளைத் - துரும்புந் தெரியா
" தகலும் பெண்கள் - அனந்தங் கோடியே."

என்னும் இவ்வகைப் பெருங்கஷ்டங்களை யெல்லா மேற்று, சம்சார துக்க சாகரத்திலமிழ்ந்து தட்டுகெட்டுத் தடுமாறிக் கரைகாணுதலைந்து, வாணாளுலைந்து, அகமெலிந்து, சுக நலிந்து, நிலைகுலைந்து, உலழிகொழிந்து போகின்றனர்- அந்தோ! இது பெரிதும் பாவம்! இது நிற்க - இனி—

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்

என்னுங்குறள் மொழிக்கிணங்கக் கண்களுக் கிணையான கல்வியைப் பெண்கள் துறக்கும்படி இரக்கமில்லாதுரைக்கும் வார்த்தைகள் இனிச் சிறக்குமா? ஆதலால் அடுப்பூதும் பெண்களேயாயினும் படிப்பாலடையும் பயன் பெரிதேயாகும்.

விரிவஞ்சி விடுத்தோம். இனி, மறுமுறை பெண்கள் கல்வி பயில்வது சாம்பிரதாய விரோதமன்றென்றும், அஃது சர்வ சாதாரண சாமானியச் செய்கையே யென்றும் பெரிதும் பேசத்துணிந்துளோம். இவ்வகையே இவ்வியாசத்தின் முன்னுரையிற் கண்ணுறும் அன்னியர் செய் யாக்ஷேபனைகளுக்குச் சமாதானம் முறையே பகரல் நாளடைவிற் றொடர்ந்து வருவது காண்க.

சி-வே. சண்முகமுதலியார்,
*Ag. Head Master,*
*Board Sessional School,*
*Chingleput Dist.*

*Sriperumbudur,*
*20—12—06.*





KANGAROO.

கங்காரு.

உலகத்தில் விளங்கியிருக்கும் மிருகவகையில் கங்காரு என்னு மிருகம் மிகவும் விந்தையானது. அது நாற்கால் மிருகமே யாயினும், ஏனைய மிருகங்களைப்போல் தன் நான்கு கால்களாலும் நடப்பது மின்று. ஓடுவது மின்று. படத்திற்காட்டியபடி அது தன் பின்னங்கா லிரண்டிலும் வாலினடிப் புறத்திலும் அமர்ந்திருக்கக் கண்டோரனைவரும் முக்காலியின் மீது உட்கார்ந்திருப்பதாக எண்ணுமற் போகார்.

2. கங்காரு என்னும் விலங்கினத்தில் பலபகுதிகளுண்டு. அவையனைத்திலும் மிகப்பெரியது சாம்பனிறக்கங்காருவே. அஃது கபில நிறமுடைய பெரிய வேட்டைநாய் போன்ற பரிமாண முடையது. இவ்விலங்கின் தேக முழுதும் கவிந்துள்ள தோல் மிக மிருதுவானது. அத்தோல் மங்கிய சாம்பல் நிறமுடையது. இவற்றில் சிற்றினக் கங்காரு காட்டு முயலைக் காட்டினும் பெருத்திராது.

3. இவ்விந்தை யாகிய பிராணிக்குத் தடித்ததேக முண்டு. அத்தேகம் அடிபருத்து புயங்களிலிருந்து தலைவரையில் நுனிப்பாகம் சிறுத்திருக்கும். அதன் உடல்நீளம் ஏறக்குறைய ஐந்தடி; அதன் வால் நீளமும் ஏறக்குறைய உடலளவுக்குச் சமமானதே. அவ்வா

வின் அடிப்பாகம்மிகவும் கனத்துப் பின்காலிரண்டுடன் சேர்ந்து மூன்ருகி, வேண்டும்போது காலாக உபயோகமாகி வருகின்றது.

4. கங்காருவின் தலை, அளவிலும் உருவிலும் மிகுதியும் மான் தலையை யொத்திருக்கும். காதுகள் நீண்டகன்று நுனி சிறுத்திருக்கும். கண்களும் பெருத்துப் பிரகாசிக்கும். வாய்சிறுத்து, அணிலுக்கிருப்பதேபோல் மேலுதடு பிளவுபட்டிருக்கும். முன்னங்கால்கள் மிகக் குறுகியவை. அவைகளைக் கங்காரு பெரும்பாலும் கைபோல் உபயோகிக் கின்றன. பின்னங்கால்களோ வெனின் மிகவும் நீண்டிருத்தலே யன்றி அதிகவன்மையுங் கொண்டுள்ளன. அப்பின்னங்கால் ஒவ் வொன்றிலும் நன்நான்கு விரலுண்டு. அவ்விரல்களிலொன்றில் வளைந்த குளம்பினையொத்த வலிய நகமொன்று அமைந்திருக்கின்றது. ஒரு மனிதனையும் கொல்லும் வன்மை யந்நகத்திற் குண்டென்று கூறுகின்றனர்.

5. கங்காரு ஏனையவிலங்குகளைப்போல நடப்பதும், ஓடுவதுமில்லையாயினும், பின்கால், வால் இவற்றின் உதவி கொண்டு கம்பீரமான தோற்றத்தோடு, அதிவேகமாய் நெடுந்தூரந்தாண்டிச் செல்ல வல்லது. அது சாதாரணமாய் இருபது முப்பதடி தூரத்தை ஒரே முறையில் தத்திப்பாயுந் தன்மை யுடையது. சிற்சில சமயங்களில் அஃது ஒன்பது பத்தடி உயரம் உயரத்தாண்டுவது முண்டென்கின்றனர்.

6. இவ்விலங்கு தோற்றத்திலும், செய்கையிலும் விந்தையாகக் காணப்படுவதே போல் உடலுறுப்பிலும் ஒருவகை விந்தை காணப்படுகின்றது. பெண் கங்காரு தன்குட்டியைச் சுமந்து செல்ல வயிற்றில் ஒருவகைப் பையுண்டு. தன்குட்டி தத்திச் செல்லும் பருவமடைந்து தானே யிரைதேடித்தின்று ஜீவிக்கும் வன்மை யடையுங்காறும், அக்குட்டியைத் தன் பையிற்சுமந்து, தாய்க்கங்காரு காப்பாற்றுவது வழக்கம். கங்காருவின் குட்டி பிறந்த உடனே ஓர் ஒலியளவினதாயிருக்கும். ஆதலின், சின்னாள்வரையில் அதனைத் தாய்க் கங்காரு அதிக ஆர்வத்தோடு தாங்கிக் காத்தற்குக் கடமைப் பட்டிருக்கின்றது.

7. இயற்கையில் கங்காரு மிக்க சாந்த மானது. அது யார்க்கும் எவ்வகைய் ஊறுமிழைப்பதில்லை. அதனைத் துன்புறுத்த நிமித்தம் யாரேனும் எதிர்க்கின் சண்டை செயயாமல் தப்பி யுய்யுமாறு தூண்டிக் குதித்து அப்புறத்தகலும். அவ்வாறின்றி எதிர்த்தே சண்டையிட்டுத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம்



அமையும்போது. கங்காரு தன் பின்னங் கால்கள், வால் ஆகியமூன்றுறுப்புக்களின் உதவியால் மிகவும் சாதுரியமாய்த் தடுத்துச் சண்டையிட்டு தப்பித்துக் கொள்ளும்.

8. இவ்விலங்கினம் ஆஸ்திரேலியா தேயத்திலும், அதனை யடுத்துள்ள தீவுகளிலும் அமிதமாயுண்டு. அவை, கூட்டமாக வசிக்கும். அவற்றிற்கு உணவு புல்லும் இலைகளுமாம்.

9. இவற்றின் மாமிசத்தைச் சிலர் உணவாகக் கொள்வார். தோலைப் பதனிட்டும் மயிரை ஆடையாக செய்தும் உபயோகிப் பார்கள்.

## WHY THE APPLE FALLS?

## மரத்தின் பழம் என் கீழேவிழுகிறது?

பிள்ளை : மரத்திலிருந்து பழம் கீழேவிழுவதைப் பார்த்து யாரோ ஒரு பெரிய வித்வான் நூதனமான சில விஷயங்களைக்கண்டு பிடித்தாரென்று சொல்லியிருக்கிறதே, பழம் கீழேவிழுவதில் என்ன அவ்வளவு அதிசயம் இருக்கிறது ?

தகப்பன் : அதிசயம் ஒன்றுமில்லை; அதென்னவோ அந்தவிஷயம் அவர் மனத்தில் ஊன்றி யோசனைக்கிடமாயிற்று.

பி. எதைப்பற்றி யோசனை செய்தார் ?

த. அந்தப் பழம் கீழே விழவேண்டிய காரணத்தைப் பற்றி.

பி. இதுதானு ? எனக்குக் கூடத் தெரியுமே ; கிளையிலிருந்து பழம் நெகிழ்ந்துபோனல் அதைத் தாங்க ஒன்றுமில்லை.

த. இல்லாவிட்டா லென்ன ?

பி. கீழே விழத்தானே வேண்டும்.

த. ஏன் விழவேண்டும் ? அதற்குக் காரணம் அறியவேண்டி இருக்கிறது. நல்லது; மரத்தின் பழத்துக்கு ஜீவனுண்டா ?

பி. இல்லை.

த. ஜீவனில்லாத வஸ்துக்கள் தாங்களே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போகுமா ?

பி. போகமாட்டா.

த. ஜீவ்னில்லாத மரத்தின் பழம்மாத்திரம் தானய்க் கீழே விழுமா ?

பி. விழமாட்டாது; வேறே ஏதோ ஒன்றுதான் காரணமா யிருக்கவேண்டும்.

த. சரி, வெளிப்புறத்திருந்தல்லவோ ஏதோ ஒன்றினால் கீழே இழுக்கப்படுகிறது. அப்படியில்லாவிட்டால்,மரத்தினின்றுநெகிழ்ந்த பிறகும் என்றென்றைக்கும் அங்கேயே யிருக்கும்.

பி. அப்படியா ?

த. ஆம், ஏனெனில் ஒரு வஸ்து ஓரிடத்தினின்று மற்றோரிடத் திற்குப் போவது தன் சக்தியாலாவது, அல்லது மற்றொன்றின் சக் தியாலாவது இருக்கவேண்டும். இவ்விரண்டில் முன்னது மரத்தின் பழத்துக் கில்லையென்று உனக்குத் தெரியுமே ; ஆகையால் அது விழுவதற்குக் காரணம் பிறகூறியதாய்த் தானிருக்க வேண்டும். இது இன்னதென்று கண்டறியவேணுமென்று அந்த வித்வான் சிந்தித் தார்.

பி. பிடிப்பில்லாமற்போனால் மரத்தின்பழம்மாத்திரமா, மற்றெ ல்லா வஸ்துவும் விழுகிறது.

த. மெய்தான், பொதுவாய் எல்லாவற்றையுமே இழுக்கத்தக்க வஸ்து ஒன்று இருக்கவேண்டும்.

பி. அதென்ன ?

த. நீயே பார்; தரையோடு சம்பந்தப்படாத வஸ்துக்கள் அதி லே விழுமானால், அவை பூமியினால் இழுக்கப்படுகின்றன என்று சொல்லாமற்போனால், வேறென்னகாரணம் அமைக்கக் கூடும்?

பி. அந்த வஸ்துக்களைப்போலப் பூமியும் ஜீவனற்றதல்லவா? அப்படியிருக்க அது என்னமாய் இழுக்கும் ?

த. நன்றாய் ஆட்சேபித்தாய் ? இந்த ஆட்சேபம் உண்மையான விஷயத்தை அறிவதற்குச் சாதகந்தான் ; கேள் சொல்லுகிறேன்: மேற்சொன்ன வித்வான் நன்றாய் ஆராய்ந்து, காந்தக்கல் இரும்பை இழுப்பதுபோல, ஒவ்வொரு வஸ்துவும் மற்றெல்லா வஸ்துக்களையும் இழுத்துக்கொண்டேயிருக்கிறதென்று கண்டுபிடித்தார். ஒரு வஸ் துவை ஆகர்ஷிக்கப் பெரும்பொருள்களைப்போலச் சிறுபொருள் களுக்கு அவ்வளவு வலிமையில்லை. ஆகையால் பூமி அதிலுள்ள வஸ்துக்கள் எல்லாவற்றிலும் வலிமையானதாதலால், அது அரு காமையிலுள்ள பொருள்களையெல்லாம் இழுத்துக்கொண்டே யிருக் கிறது. ஆதலால் அவைகளுக்குத் தரையில்விழும்படியான தன்மை உண்டாகின்றது. இப்படியிருப்பதற்கு ஆகர்ஷண சக்தி என்று



பேர். இதனாலே தான் வஸ்துக்கள் பளுவாயிருக்கின்றன. ஒரு வன் ஒரு வஸ்துவைத் தூக்குகிறதாக வைத்துக்கொள் ; அப்போது அவன் பூமியின் கவர்ச்சிக்கு எதிர்பக்கமாயல்லவோ இழுக்கிறான் ஆகையால் அது அவனுக்குப் பளுவாக தோன்றுகிறது. இப்போது ஒரு திருஷ்டாந்தம் பார் ; பார்த்தனையா. நல்லது ; மறுபடியும் தூக்கு. இப்போது நான் இதைக் கீழ்முகமாய் இழுக்கிறேன். இதைத்தூக்க முன்னிலும் இப்போது அதிக பளுவாயிருக்கவில் லையா ? இந்த அதிக வருத்தம் (அதிக பளுவு) எப்படியுண் டாயிற்று. நான் கீழே இழுப்பதனால்தானே உண்டாயிற்று இப்படி அதிக பளுவுக்குக் காரணமாயிருப்பது போல, சாதாரண மாய் எல்லாவற்றிற்கும் உள்ள பளுவுக்கும் காரணம் ஒன்று இருக் கவேண்டாமா ? அந்தக் காரணந்தான் பூமியின் கவர்ச்சி. நான் சொன்னது தெரிந்ததா ?

பி. தெரிந்தது; அப்படியானால் இப்போது உம்மையும் என் னையுங்கூட பூமி இழுக்கவேண்டு மல்லவா ?

த. இழுக்கவே இழுக்கிறது.

பி. ஆனால் ஏன் நாம் பூமியோடு ஒட்டிக்கொண்டே யிருக்க வில்லை ?

த. நாம் ஜீவனுள்ளவர்க ளாகையால், நமக்கு நகரும் சக்தி யுண்டு. இச்சக்தி பூமியின் ஆகர்ஷணசக்தியைச் சற்று அடக்கு கிறது. நாம் ஒரு அடி உயரம் எழும்பக்கூடியது போல, இன்னும் இன்னும் அதிக உயரம் ஏன் எழும்பக்கூடாது. எழுப்புகிற சக்தி நமக்குக்கொஞ்சமாகையால், அது ஓய்ந்துபோனவுடனே, பூமியின் கவர்சியினால் இழுக்கப்பட்டுக் கீழே விழுகிறோம். அப்படியே ஒரு வஸ்துவை உயர எறியவேண்டுமானால், ஏதோஅவனவன் சக்திக் கேற்றபடிகொஞ்சதூரம் எறிவானேயல்லாமல், ஒருமைல் இரண்டு மைல் உயரம் எறியமாட்டான்.

பி. நமக்கு நேராய் பூகோளத்தின் மற்றொரு பக்கத்திலுள்ள ஜனங்கள் தலைகீழாயிருந்தும், எப்படி விழாமலிருக்கிறார்களென்று இதுவரையில் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தேன். பூமி இழுத் துக்கொண்டிருக்கிற படியால் விழாமலிருக்கிறார்க ளென்று இப் போது தெரிகிறது.

த. இந்தப் பூமி சூரியனும் நட்சத்திரங்களும் உதிக்கிறதும் அஸ்தமிக்கிறதுமாக நமக்குத் தோன்றும்படி அந்தரத்தில் சுற்றிச் சுற்றி ஓடிக்கொண்டிருக்கிற ஒரு பெரிய திரண்ட உருண்டை

யான அண்டம். சூரியன் உச்சத்தில் வந்து நமக்கு நடுப்பகலாயிருக்கும்போது பூமியின் அப்புறத்திலுள்ளோர்க்கு நடுராத்திரியாகவும், அவர்களுக்குப் பகலாயிருக்கும்போது நமக்கு இரவாகவும் இருக்கும். பூமி உருளும்போது அதனோடுகூட நாம் சுற்றுகிறதுபோல, அவர்களும் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்க, நாம் விழாமலிருக்க, அவர்கள் மாத்திரம் விழுவானேன்? நம்மைப்போல அவர்கள், அவர்களைப்போல நாம்.

பி. நாம் மேலே இருக்கிறோம், அவர்கள் கீழே இருக்கிறார்களே ?

த. மேலாவதென்ன, கீழாவதென்ன, எங்கே யானாலுஞ் சரி, தரைமுகம் கீழ், தரை எதிர்முகம் மேல். நம்மைப்போல அவர்களும் கால் தரைமேலும் தலை ஆகாயமுகமாயு மிருக்கிறார்கள். அவர்களுடைய காலின்கீழ் நாமிருக்கிறோம், நம்முடைய காலின் கீழ் அவர்கள் இருக்கிறார்கள்.

பி. நல்லது பூமி அந்தரத்தில் நிற்கிறதே, அதைத் தாங்குகிறது எது ?

த. அது போனால் எங்கே போகவேண்டும் ?

பி. கீழேவிழவேண்டும்.

த. கீழெது மேலெது ? அந்தரத்தில் எப்புறமும் ஒன்றுதான். நாம் பூமியில் இழுக்கப்பட்டு அதன்மேலிருப்பதுபோல, இப்பூமியும் அதை எது இழுக்கிறதோ அதன்மேல் போய் விழவேண்டும்.

பி. பூமியை இழுப்பது எதாவதுண்டா ?

த. உண்டு ; சூரியன் அதை இழுத்துக்கொண்டிருக்கிறது.

பி. அப்படியானால் பூமி சூரியனண்டை என் போய்ச்சேரவில்லை ?

த. சூரியன் மாத்திரம் பூமியை இழுக்குமானால், பூமி அதனண்டையே போய்ச் சேரும். சூரியன் மாத்திரமல்ல, மற்றுமுள்ள பல கிரகங்களும் தத்தமக்கேற்ப முறையே பூமியை இழுக்கிறபடியால் ஒன்றினிடத்திலும் கிட்டப்போகாமல், பொதுவான ஒரு வழியி[illegible]ய்க்கொண் டிருக்கிறது. இப்பொதுவான வழி சூரியனைச்சு[illegible] ஒரு வட்டம். இவ்விஷயம் நன்றாய் விளங்கும்படி உதாரணஞ்சொல்லுகிறேன். கயிற்றின் ஒரு நுனியில் பந்தைக்கட்டி மற்றொரு நுனியைக் கையிற் பிடித்துக்கொண்டு உன் தமயன் சுற்றிச்சுற்றி ஆடுகிறானே, பார்த்ததில்லையா ?



பி. பார்த்திருக்கிறேன் ; நானும் ஆடியிருக்கிறேன்.

த. அப்படியா, ஆனால் பின்னும் விசேஷம். ஆடும்போது பந்து அப்புறம் தப்பி ஓட முயலுவதுபோல் இழுக்கிறதாக உனக்குக் காணப்பட்டிருக்குமே ?

பி. ஆம், பந்து பலமாய் வலிக்கிறது மெய்தான். ஒருதடவை என்னண்ணன் சற்று பராக்கினால் கயிற்றைத்தளர்த்த, பந்து கயிற்றுடன் வாரிக்கொண்டு வெகுதூரம் போய்விட்டது.

த. ஆ! பார்த்தையா ? ஒரு மையத்தைச் சுற்றிச்சுழலும் ஒரு வஸ்துவுக்கு அம்மையத்தினின்றும் ஓடிப்போகும்படியான தன்மை உண்டென்பதற்கு அது உதாரணம். இத்தன்மை அதற்கு முதல் முதல் எவ்வளவு பலத்தோடு எறியப்படுகிறதோ, அந்தப் பலத்தின் வேகத்தால் உண்டாகிறது. இப்படி ஓடிப்போகும் வலிக்கு எதிரிடையாய் அந்த வஸ்துவைப்பற்றிக்கொண்டிருக்கும் கயிறு மையத்தின் முகமாய் அதை இழுக்கிறது. ஆகவே அது வெளிப்புறத்திலும் உட்புறத்திலுமாய் இருபக்கத்திலும் எதிர்க்கெதிராய் இழுக்கப்பட்டு ஒருமுகமாயும் போகாமல், இரண்டுக்கும் பொதுவாய்ச் சுற்றிச்சுற்றிப் போகிறது. நன்றாய்ச் சுழற்றினால்மாத்திரந்தான் இப்படிப் போகும். கயிறு சற்று நெகிழ்ந்தாலுஞ்சரி, அறுந்துபோனாலுஞ் சரி, பந்து பறந்துபோம். அப்படியன்றி சுழற்றும்வலி, குறைந்து போனால், பந்து கையின்மேல் வந்துவிழும், தெரிகிறதா ?

பி. நன்றாய்த் தெரிகிறது.

த. இன்னுமொரு உதாரணஞ்சொல்லுகிறேன் : குதிரைப்பந்தயத்தில் அதிவேகமாய்ச் சவாரிசெய்யும்போது ஜீனியின்மேல் ஒரு காலால் நின்றுகொண்டு, சிறு உண்டைகளை ஆகாசத்தில் எறிந்து அவைகள் விழும்போது கையில் பிடித்துக்கொள்ளுகிறதுண்டு.

பி. நான்கூட பார்த்திருக்கிறேன்.

த. அவ்வளவு வேகமாய்ச் சவாரிசெய்கிறபடியால், அவ்வுண்டைகள் பின்னாலே விழுந்துவிடுமென்று நீ நினைத்திருந்தாலும் இருப்பாய்.

பி. அப்படியே நான் எண்ணியிருந்தேன்.

த. ஒரே இடத்தில் சும்மா நின்றுகொண்டிருந்தால் எப்படியோ, அப்படியே அவ்வுண்டைகள் கையில்வந்து விழவில்லையா ? அதேனென்றால் எறியும்போது குதிரை ஓடுகிறபடியால் குதிரையின் நேர்வேகத்தையும், உயரப்போவதனால் எறியும் வேகத்தையும்

பெற்று அவைகள் அவ்விரண்டுக்கும் நடுவில் ஒரு சாய்ப்பான வழியாய்ச் சென்று கையில் வந்து விழுகின்றன.

பி. இது மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது.

த. அதுபோலவே வண்டி வேகமாய்ப் போகும்போது வண்டியினின்று எதையாவது கீழேவிட்டால், விட்ட இடத்துக்கு நேராகக் கீழேவிழ வேண்டுமே. அப்படியின்றி கீழே நேராக எறியும் வேகத்தோடு வண்டியின் நேர்வேகத்தையும்பெற்று, சற்றுச் சாய்ந்து விழுகிறது.

பி. எப்போதாவது வண்டியின்மேல்போக நேர்ந்தால் அப்படிச் செய்து பார்க்கிறேன்.

த. இதேமாதிரியாய்ப் பூமியும் சூரியனுலும் பிறகிரகங்களாலும் இழுக்கப்பட்டு ஒன்றின்முகமாயும் செல்லாமல், அவைகளுக்கெல்லாம் பொதுவான ஒருவழியாய் அதாவது சூரியனைச்சுற்றி வட்டமாய்ப் போய்க்கொண்டிருக்கிறது.

பி. பொதுவான வழியாவதென்ன ?

த. ஒரு பெரிய பாறையைக் கிழக்காகவும் தெற்காகவும் கயிறு கட்டி ஒருவன் ஒருபக்கமும், மற்றொருவன் மற்றொருபக்கமுமாய் இழுக்கிறதாக நினைத்துக்கொள். அப்போது அப்பாறை கிழக்குப் பக்கமாய்ப் போகுமா, தெற்குப்பக்கமாய்ப் போகுமாவென்றாலோ, ஒரு திக்கிலும் நேராய்ப்போகாது. மற்றெப்படிப் போகுமெனில் இரண்டுக்கும் நடுவான தென்கிழக்குப்பக்கமாய்ப் போகும். இப்படிப்பட்டதை நீ பரிட்சைசெய்து பார்க்கலாம். இதைத்தான் பொதுவழி பொதுவழி என்று சொன்னேன்.

பி. இப்போது தெரிந்தது. நல்லது, பூமி சூரியனைச்சுற்றிவருகிறதே, எத்தனை நாளைக்கு ஒரு சுற்றுவரும் ?

த. ஒருவருஷத்துக்கு ஒருதரம். சூரியனைச்சுற்றிய பூமியின் கதியை அனுசரித்துத்தான் வருஷக்கணக்கு ஏற்பட்டிருக்கிறது.

பி. சூரியன்கதி எப்படிப்பட்டது ?

த. சூரியன் அசையாமல் ஒரே இடத்திலிருக்கிறது.

பி. பூமிமாத்திரந்தானு சூரியனைச்சுற்றிவருகிறது ? இன்னும் ஏதாவது உண்டா ?

த. இன்னும் சில உண்டு. சூரியனும் அவைகளும் சேர்ந்து சூரிய மண்டலமாகின்றன. இவ்விஷயம் இம்மட்டும்போதும் ; முதல்முதல் நாம் எடுத்த சங்கதியென்ன ?



பி. மரத்தின் பழம் விழுதல்.

த. மரத்தின்பழத்திலிருந்து எவ்வளவுதூரம் வந்துவிட்டோம் பார் ?

பி. சூரியமண்டலமட்டும் வந்தோம்.

கருத்து.

இதனுல் ஒவ்வொரு வஸ்துவினிடத்திலும் அதன் பரிமாணத்திற்குத்தக்க ஆகர்ஷணசக்தியுண்டென்று விளங்குகின்றதல்லவா வென்று முடித்தான்.

## WANT OF COMPULSORY EDUCATION.

## கட்டாயமான கல்வி அவசியம்.

'கல்வியே கருந்தனம்' 'கல்வியில்லார் கண்ணில்லார்' முதலிய சிறந்த வசனங்கள் கல்வியின் இன்றியமையாமை உணர்த்துவன. கல்வி மேம்பட்டுள்ள நாடுகளே தற்காலம் தலைசிறந்து விளங்குகின்றன. இந்தியா தேசம்போல் வேற்றரசர் கைப்பட்டதேசமல்லாது சுய அரசுக்குட்பட்ட எல்லாத்தேசங்களிலும் கல்வி வியாபித் திருக்கின்றதென்றே சொல்லலாம்.

கல்வி விருத்தியாவதால் நாகரிகம் விருத்தியாகும், அதுவிருத்தியாகவே உலகிலுள்ளளவும் இன்பமடைந்திருக்கவழிவகைகளையுண்டு பண்ணிக் கொள்ள ஏதுவாகும். இதனை நமக்கு அரசாளுவோர் அமைத்துக் கொடுக்கவேண்டும். அவர்கள் அப்படிச் செய்வதாகத் தோன்றாமையல் நாமே செய்துகொள்ள வேண்டியதுதான்.

இந்துக்கள் தொன்றுதொட்டுக் கல்வி விருப்புடையோர் என்பது தேற்றம். இவ்விருப்பை யதிகரிக்கவும், அதனுல் நேரும்அதிக செலவை ஏற்கவும் நமக்குத் திரவியம் வேண்டும். நமது திரவியம் முழுதும் நமது நாட்டிலில்லாது அந்நிய நாட்டிலுள்ள பிறர் கைப்படுவதால் நமக்கியற்கையில் உள்ள எண்ணத்தை ஈடேற்ற வகையின்றி யொழிகின்றோம். இருப்பினும் சற்று ஊன்றிப் பார்த்து எப்படியும் வழி செய்யவேண்டு மென்று கருதவோமாயின் கைகூடுவது அரிதல்ல.

நாம் நம்முடைய அரசற்கு அரசிறையாகக் கொடுக்கும் பணத்தில் நூற்றுக்கு ஒன்றுதான் நம்முடைய விருத்திக் காதாரமாகிய

கல்விக்காகச் செலவிடப்படுகின்றது. ஜப்பான் முதலிய தேசங்களில் நூற்றுக்குப்பத்துக்கு மேற்பட்டும் கொஞ்சம் குறைந்தும்செலவிடப்படுகின்றது. அதனால் தான் அந்நாடுகளில் கல்வி யதிகரித்து நாகரிகம் மிகுந்து க்ஷேமத்தோடு குடிகள் வாழ இடங்கொடுக்கின்றது.

இவ்வாறு அதிக விரயம் நமது கல்விக்காக அரசாங்கத்தார் செலவிடமுடியாதவர்களா யிருத்தலால் நாமே அதனை ஏற்கவேண்டியவராகின்றோம். நாம் அரசிறையே யல்லாது வேறுவகையிலும் பொருள் விரயம் பெரிதுஞ் செலவிடுகின்றோ மல்லவா? கல்யாண முதலிய காரியங்களிலும், விதண்டாவாதங்களிலும், வீண்டம்பத்திலும், ஆடை அணிகலன்களிலும் செலவிடுவதற் களவில்லையன்றோ? இவ்வீண் செலவுகளில் ஒரு சிறு பாகத்னத ஒவ்வொருவரும் தம் நாட்டுக்காகவும், பலவந்த கல்விக்காகவும் செலவிடுவோமாயின் நாளேற்றத்தில் ஒவ்வொரு கிராமம், சீறூர், பேரூர், பட்டணம், நகரம் ஆகிய விடங்களிலெல்லாம் உள்ள ஆண்பாலரும் பெண்பாலரும் கல்வியுணர்ந்தவர்களாகி விடுவார்களன்றோ? இவ்வாறே தான் பிற நாட்டுவாசிகளும் கல்வி நிரம்பப் பெற்றனர்.

இப்போது உதாரணமாகப் பம்பாய் ராஜதானியிலுள்ள பரோடா சிற்றரசர் தம்நாட்டிலுள்ள எல்லாக் கிராமவாசிகளுக்கும் கட்டாயமானகல்வி உண்டாக்கவேண்டுமென்று கங்கணங்கட்டிக் கொண்டு கிராமங்கள்தோறும் கல்விச்சாலைகளையமைத்து வருகின்றனர். இச்செய்கையால் சில வருடங்களில் அவர் நாட்டுக் கிராம முழுவதிலும் கல்விச்சாலைகள் நிறம்புவதன்றிக் கல்வியில்லாதோரும் அரிதாகிவிடுவர். இதனால் அரசுக்கு முதலில் கொஞ்சம் அதிக செலவுக்கு, இடமுண்டாகுமாயினும் இச்செலவு முழுதும் நாட்டின் செழுமைக்கேதுவான எருப்போட்டதுபோலாமென்று அத்தேர்ந்த அரசர் அபிப்பிராயங்கொண்டுள்ளார். இன்னும் இவ்வரசரைப் பின்பற்றி வடநாட்டுச் சிற்றரசர் பலரும் தம் நாடுகளிலும் பலவந்த கல்வியை யமைப்பரென்று கொள்ள இடமிருக்கின்றது.

(இன்னும் வரும்.)

குறிப்பு.—துரைத்தனத்தாரும் எல்லாப் பிரைமெரி பாடசாலைகளிலும் சம்பளமின்றி கல்வி போதிக்கவேண்டிய விதத்தை ஏற்பாடு செய்ய யோசித்திருக்கிறார்கள்.

OFFICE OF THE REGISTRAR OF ...
REGISTERED
2 FEB 1907
MADRAS.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 2. | 1906 ஆம் டிசம்பர் மீ | மாதம் 7.

## THE MADRAS EDUCATIONAL CONFERENCE.

## சென்னை கல்வி ஆலோசனை சபை.

1906-ஆம் டிசம்பர் மீ 17௳ திங்கட்கிழமை பகல் 2-மணிக்கு இச்சபை கூடியது. ம-ா-ா-ஸ்ரீ, M. அரங்காசாரியார் அவர்கள் M.A. சபாநாயகராக வீற்றிருந்தார். அக்காலத்து சைதாப்பேட்டை டீசர்ஸ் காலேஜிலுள்ள (Teachers' College) மிஸ். கில்லிங்காம்அம்மாள்.

"கின்டர்கார்டன் கற்பிக்கும் மாதிரி" யைப்பற்றி ஓர் அரிய வியாசம் வாசித்தனர். அவ்வியாசத்தின் விஷயமாவது:—

சிறிதுகாலமாக நான் இத்தேசத்தில் வசித்தும் பழகியும் வருவதில், "கின்டர்கார்டன்". என்பதை மிக்க தப்பாய் உபயோகிப்பதைப்போல வேறெந்த பதத்தையும் உபயோகிப்பதில்லை என்பது தோன்றுகிறது. பத்தில் ஐந்து உபாத்தியாயர்களுக்கு மேற்படாமல் இப்பதத்தின் உண்மையான அர்த்தத்தை அறியக்கூடாதவர்களாயிருக்கிறார்கள். அப்படி அவர்கள் தெரிந்துகொண்டாலும், சம்பாஷிக்கும் போதாவது, கற்பிக்கும் போதாவது, அவ்விதந்தெரிந்து கொண்டதை நிரூபிக்கச் சக்தியற்றவர்களாய் இருக்கிறார்கள். ஆனாலும் அன்னியர்கள் இவ்விஷயத்தைப் பற்றி பேசும்போது கேட்க உண்மையில் களிப்பை யுண்டாகின்றது. ஒரு காலத்து ஒருவர் என்னை கின்டர்கார்டனுக்கு வேண்டிய சாமான்கள் முழுமையும்

அடங்கிய “ஒரு கின்டர்கார்டன் பெட்டி”யை வாங்குவதற்கு வேண்டிய பணம் எவ்வளவு என்று வினவினுர். இவ்விதம் கேட்ட கேள்வியின் அபிப்பிராயம் யாதோ ? இக்கேள்விகேட்டு ஒருவருடமாகிறது. இவ்வினுவை கேள்விப்பட்டது முதல் “கின்டர்கார்டன் பெட்டி” என்பதின் அபிப்பிராயத்தை யறிய எனதறிவு குழப்பங் கொண்டிருக்கிறதே யொழிய எவ்விதமான திருப்திகரமான முடிவு மடைந்ததில்லை. தாவரம் பிராணிகள் இவைகளை பாதுகாப்பது போல, கின்டர்கார்டன் முறையில் கல்வி, இயற்கைப் பார்வை அடங்கியிருப்பதால் “கின்டர்கார்டன் பெட்டி”யில் மரங்கள் பட்சிகள், காற்று, மழை, பசுக்கள், குதிரைகள் முதலியவற்றை ஒன்றுய்ச் சேர்த்து ஒரு பெட்டியில் அடைப்பது அசாத்தியமான விஷயமன்றோ. கிண்டர்காரடன் போதனை, பாடசாலையின் பாடகாலத்தில் ஓர் பாகமென்பது அநேகரின் அபிப்பிராயமாக விருந்தது. அவ்வித அபிப்பிராயம் அனேகர் இன்னமும் கொண்டிருக்கிறுர்கள். இவ்விஷயத்தை ஒரு பாடசாலையின் காலநிர்ணயப்பட்டியில் குறித்திருப்பதை சாதாரணமாய்க் காணலாம். அதாவது.—

காலை 9 மணிமுதல் 10 மணி வரையில். கணிதம்
„ 10 „ 11 „ வாசகம்
„ 11 „ 12 „ கிண்டர்கார்டன்

இவ்வித கால நிர்ணயப்பட்டியை வரைந்த தொன்றே அந்த உபாத்தியாயர் கிண்டர்கார்டன் என்னும் பதத்திற்கு உண்மையான பொருளை யறியாதவர் என்பதற்கு போதுமான திருஷ்டாந்தமாயிருக்கிறது. கிண்டர்கார்டன் என்பது ஒருபாடமல்ல; அது ஒரு போதனுமார்க்கம். கிண்டர்கார்டன் என்னும் பதத்திற்கு ஆங்கில பாஷையில் (Children's garden) குழந்தைகள் தோட்டம் என்பது பொருள். ஒரு தோட்டக்காரன் தன் பயிர்களைப் பாவிப்பதுபோல, கிண்டர்கார்டன் போதனையில் நமது பிள்ளைகளைப் பாவிக்க நாம் பிரயத்தினப்படுகிறேம். அதாவது குழந்தைகளை மானிடத் தாவரங்களாகப் பாவித்து இயற்கையாய் வளரும்படி விடுவதே. இவ்விதம் செய்யாமல் சிறிய இயந்திரங்களில் வேலை வாங்குவதைப் போல, குறித்தகாலத்தில் இன்னவிஷயம் முடிவுபெறவேண்டுமென்று எதிர்பார்ப்பதுபோலவும் இச்சிறுவர்களிடத்தில் எதிர்பார்த்தல் கூடாது. ஒரு தோட்டக்காரன் ஏதாவது ஒருவிதை நடுவதற்குமுன் நிலத்தை தக்கப்படி சீர்படுத்திக்கொள்கிறுன். மேலும் படரக்கூடிய கொடிகளுக்கு ஏற்ற பாதுகாப்புக்களும் செய்கிறுன். இவ்விதம் செய்வதால், தோட்டக்காரன் ஒரு விஷயத்திற்கு முயலுமுன்பே இயற்கை சுபாவத்தின் உண்மையான நிலைமையை யோசிக்கின்றுன். ஆனல் உபாத்தியாயர்களில் தாங்கள் செய்யப்புகும் காரியங்களுக்கு முன் இயற்கை குணத்தின் தன்மையை யோசிக்கும் நிலைமையற்றவர்களாயிருக்கிறுர்கள். இவ்விதம் யோசியாதவர்கள் உண்மையில் அநேகரிருக்கின்றுர்கள். எப்படியெனில், நாம் தீர யோசித்துப் பார்க்குமிடத்து 4 அல்லது 5 வயதுள்ள சிறுபிள்ளைகளை, புத்தகம் வாசிக்கவும், கற்பலகை அல்லது கடிதத்தில் எழுதவும் கற்பிக்க பிரயத்தனப்படுகிறுர்கள். இம்மாாக்கமாய் கற்பிக்கும் உபாத்தியாயர்கள் இயற்கை சுபாவத்திற்கு விரோதமாய் கற்பிக்கிறவர்களாக ஏற்படுகிறுர்கள். ஒரு பிள்ளைக்கு ஆறுவயதாமளவும், வாசகம், கையெழுத்து, கணிதம் இவைகளில் பழக்கமான பாடங்கள் கூடா. இம்மூன்று பாடங்களில் பழக்கமில்லாவிட்டால் படிப்பில் குறைவடைவார்களென ஆட்சேபிக்கலாம். அப்படியாயின், ஆறு அல்லது ஏழுவயதுள்ள இரண்டு பிள்ளைகள் இருக்கிறுர்கள். இவர்களில் ஒருவன் 4 வயதுமுதல் பாடசாலையில் கற்கிறுன், மற்றவன் பள்ளிக்கூடமே போகாமலிருக்கிறுன். இவர்களின் தன்மையைப்பற்றி பரிட்சிப்போமாகில், 7 வயது வரையில் பாடசாலைக்குப்போகாமலிருந்தவன் பாடசாலைக்கு சென்றவனைப் பார்க்கிலும் சுறு சுறுப்பு புத்தி கூர்மையுமுள்ளவனு யிருக்கின்றுன். இஃது என் அனுபவத்தில் கண்ட விஷயம். இவ்வித வித்தியாசத்திற்குக் காரணம் யாதெனில், பாடசாலைக்குப் போகாத சிறுவன் சாதாரண அறிவை பெற்றுத் தானே தன் சுய முயற்சியால் வஸ்துக்களை யறிய வல்லவனுயிருக்கிறுன். அதனுல் தனக்குத் தானே தன் அறிவை விருத்தி செய்துகொள்ளுகிறுன். பாடசாலைக்குச் சென்ற பிள்ளையின் நிலைமையோ! அவன் நல்லமாதிரியான கிண்டர்கார்டன் பாடசாலைக்குப் போகாதவனுயின், அவனது அறிவெல்லாம் புத்தகத்திலும் கற்பலகையிலுமே முடிவு பெறுகிறது. இவ்விதமாய் அப்பிள்ளை புத்தகத்திலும் பலகையிலும் காலத்தை செலுத்தியதால் தன்னை சுற்றிலுமுள்ள வஸ்துக்களின் தன்மையை அறியாமல் போய்விடுகிறுன். இவ்வித பழக்கத்தால் அவன் புத்திசாலியாயும் பகுத்தறிவுள்ளவனுயுமிருப்பதற்கு பதிலாக ஒரு சிறிய இயந்திரத்தைப் போல் கற்பித்தவு தெரிந்துகொண்டவனு யிருக்கிறுன்.

உபாத்தியாயர்களில் அநேகர் தங்கள் பிள்ளைகளை மனிதர்களாகவும் ஸ்திரீகளாகவும் பாவித்து அதற்கேற்ற வண்ணம் கற்பிக்

கப் பிரயத்தனப் படுகிறார்கள். அவ்விதம் செய்வது தகுதியன்று. சிறுபிள்ளைகள் அவ்வித நிலமையற்றவர்கள். அவர்கள் சிறு பாலகர்கள், அவர்களுக்கு எல்லா குணங்களோடு பிரயத்தனம், புதுமை, மகிழ்ச்சி, ஒளி இவைகளிடத்திலும் பிரியமுண்டு. ஒரு சிறு குழந்தைக்கு ஒருநாள் முழுதும் சாப்பிடுவதிலும், கைகால் உதைத்துக் கொள்வதிலும், அழுகையிலும் சரியாப் போய்விடுகிறது. நமக்குத் தெரிந்தவரையில், குழந்தைகள் பிறந்த சிலகாலம் வரையில் மனமுயற்சி என்பது கிடையாது, சிறுபிள்ளைகள் கிண்டர்கார்டன் கற்கும் காலத்து இந்நிலமையானவர்களே. ஆகையால் சிறுவர்களுக்கு அறிவு சம்பந்தமானகல்வியை முன்பு கர்பிக்காமல் மனமுயற்சியைப் பற்றிய விஷயங்களை போதிப்பது அறியாத்தன்மையாகிறது. இம்மாதிரியாகவே அநேக உபாத்தியாயர்கள் ஒரு பிள்ளைக்கு கல்வி ஆரம்பிக்கும்போதே புத்தகத்தை வாசிக்கவும், கற்பலகையில் கணக்குப்போடவும் மிக்கசிறுவயதிலேயே ஆரம்பிக்கிறார்கள். இவ்விதஞ் செய்யாமல் அறிவு சம்பந்தமான கல்வி முந்தி ஆரம்பஞ்செய்யவேண்டும். இக்காரணத்தானே ப்ரோபல் கொடைகளையும் தொழில்களையும் உண்டாக்கினார். இவ்விஷயத்தை அநேகர் அறியாமலிருக்கிறார்கள். இவ்விதம் தெரிந்துகொள்ளாமலிருக்கிற விஷயம் வேறொரு வியப்பைத் தருகிறது. அதாவது ப்ரோபலின் கொடைகள், தொழில்கள் இவைகளிலேதான் கிண்டர்கார்டன் அடங்கியிருக்கின்றனவென்று நினைக்கிறார்கள். இவ்விதம்நினைப்பதும் பெருந்தவறு. ஜனங்கள் சாதாரணமாய் "கிண்டர்கார்டன் பாடம்" என்று சொல்லக்கேள்விப்படுகிறோம். கிண்டர்கார்டன் விஷயமாய்ப்பழுதும் உபாத்தியாயர்களுக்கு உபந்நியாசமாயிருந்தாலொழிய "கிண்டர்கார்டன் பாடம்" என்று ஒன்றும் கிடையாது. ஆனால் இயற்கைப்பாடம், பொருட்பாடம், சித்திரம் வரையும்பாடம் கிண்டர்கார்டன் தொழில் என்று சொல்வது நன்கு பொருந்தும். ஒரு பிள்ளைக்கு "கிண்டர் கார்டன் பாடம்" என்று சொல்வது நகைக்கத்தக்க விஷயம். நான் முன் சொல்லிய வண்ணம் கிண்டர்கார்டன் என்பது ஒரு முறை. இதனால் வாசகம், எழுத்து, கணிதம் முதலிய விஷயங்களும் கற்பிக்கலாம் "கிண்டர் கார்டன் பாடம்" என்பதனால் உபாத்தியாயர்கள் அக்காலத்தில் கிண்டர்காட்டன் கொடையும் தொழிலும் நடப்பதாக எண்ணுகிறார்கள். அன்றியும் இவர்கள் கிண்டர் கார்டனில் கொடையும் தொழிலுமாத்திரந்தானென்று தப்பாகக் கொள்கிறார்கள். இத்தவறுண்டாவதற்குக்காரணம் யாதெனின் அநேக கிண்டர் கார்டன் புத்தகங்களில்



இக் கொடைகளையும் தொழில்களையும் பற்றியெழுதியிருக்கின்றனர். அன்றி அநேக கிண்டர் கார்டன் பாடசாலைகளிலும் கையாடி வருகிறார்கள். இதைப்பார்த்து அநேக உபாத்தியாயர்கள் இப்புத்தகங்கள் நல்ல கிண்டர் கார்டன் போதனைக்கு உரித்தானவை யென அபிப்பிராயப் படுகிறார்கள்.

ஆனால் ப்ரோபல் கொடைகளையும் தொழில்களையும் உண்டாக்கியதின் கருத்தென்னவெனில், இயற்கை விதிகளை யனுசரித்து சிறுபிள்ளைகளின் அறிவின் மூலமாய்க் கல்விகற்பிப்பதற்கு தான். பிள்ளைகள் வஸ்துக்களை தொடவும், உணரவும் ஆவலுள்ளவர்கள். இவைகளினால் விசாலமான இயற்கை அறிவு விருத்தியடைகின்றது. இவ்விதமான ஆவலை தீர்த்துக் கொள்ளும்படி பிள்ளைகளுக்கு, வஸ்துக்களைத் தொடவும் பழகவும் நாம் தொழில்களை கற்பிக்கிறோம். ப்ரோபல் கற்பித்த தொழில்களையே நம் நாட்டுப் பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டுமென்பது அனாவசியம். ப்ரோபல் ஜெர்மன்பிள்ளைகளோடு பழகி ஜீவித்தவர். அவர்களின் வழக்கங்களும் சுற்றுப் பக்கங்களும், நம் இந்து தேசச் சிறுவர்களின் வழக்கங் களுக்கும் சுற்றுப்பக்கங்களுக்கு, மிக்க வித்தியாசமானவை. ஆகையால் அவர் கர்பித்தமாதிரிகளையே நாம் கற்ப்பிக்கமுயல்வது நியாயமன்று. கிண்டர்கார்டன் போதகாசிரியர்களாகிய நாம் செய்ய வேண்டியதாவது அவரதுபோதனையின் கருத்தை கிரகித்து அவ்வாறு நாமே செய்ய வழக்கப்படவேண்டும். அவர் தன்பிள்ளைகளுக்குபாய்முடையும் தொழிலுக்காக கடிதத்தை உபயோகித்தார். வாஸ்தவத்தில், இவ்வபிப்பிராயம் அவருக்குண்டாவதற்கு ஜெர்மன் சுற்றுப் பக்கங்களிலுள்ள ஏதோ ஒன்றினால் உண்டாயிருக்கலாம். இத்தேசத்திலோ நமது பிள்ளைகளுக்கு அதே பாய்முடையும் தொழிலை கடிதத்தால் செய்வதற்கு பதிலாக பனை ஓலையால் கற்பிக்கலாம். இவ்விஷயம் கூடை முடைபவர்களினால் தோன்றுகிறது. இவ்விதம் செய்வதால் நாம் பிள்ளைகளுக்கு வஸ்துவைத் தொடவும் உணரவுமான எண்ணத்தை பூர்த்தி செய்ய இடமாகிறது. மேலும் செய்த வஸ்துவினால் அறிவுப் விருத்தியடைகின்றது. இந்தியாவிலுள்ள வழக்கங்களை நமது பிள்ளைகளுக்கு உபயோகமாகும்படி செய்யக் கூடியவைகளில் நாம் அனுசரிக்கக் கூடியவற்கு இது ஒரு திருஷ்டாந்தம்.

கிண்டர் கார்டன் விஷயமாக அநேக புத்தகங்கள் அமெரிக்கா ஐரோப்பா பாடசாலைகளுக்காக எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளினால் நாம் மிக்க தெரிந்துகொண்டாலும் அவைகளின் போதனை

முறையை இத்தேசத்தில் கையாடக்கூடாது. நமது நாட்டு வழக்கங்களை அனுசரித்ததாய் மாற்றிக் கொள்ளவேண்டும். நமது கிண்டர் கார்டன் முறைக்கு வேண்டிய மிக்க விலைபெற்ற கருவிகளை ஐரோப்பாவிலிருந்து வரவழைப்பது முற்றும் அனவசியம். வேண்டிய சாமான்களில் பெரும்பான்மை மிக்க விலைக்குறைவாக உள்ளூர் கடைகளிலேயே வாங்கிக்கொள்ளலாம், கடிதம், பென்சல், சீமைச் சுண்ணாம்பு, மணிகள், கம்பிகள், மற்றும் பல வஸ்துக்களும் கடையில் கிடைக்கக்கூடியவை. கிண்டர்கார்டன் முறையில் அதிகபணச் செலவென மற்றொரு தப்பபிப் பிராயம் சிலருக்குண்டு. அதைப் போன்றபெருந்தவறு வேறொன்றுங் கிடையாது. மாறாக,இம்முறையில்செலவென்பது கிடையாது. எப்படியெனில் நாம் கூடியவரையில் இயற்கை வஸ்துக்களினால் நமது பிள்ளைகளுக்கு கற்பிக்கிறோம். மற்றவர்கள் அநேக புத்தகங்களுக்காகச் செலவழிப்பதுபோல நாம் செலவழிப்பதில்லை. பிள்ளைகள் பார்த்தும் கையாடும்படியான புல் பூண்டுகளுக்காகவும் பிராணிகளுக்காகவும் நாம் செலவு செய்யக்கூடியது ஒன்றுமில்லை. மேலும் இவைகளைப்பற்றிய போதனைதான் கிண்டர் கார்டன் போதனையில்மிக்க முக்கியாம்சமாக விருக்கின்றது. களிமண் உருச்செய்வதற்கு களிமண்ணும் மணல் விளையாட்டுக்கு மணலும் கூட இயற்கையில் எவ்விதசெலவுமின்றிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படியிருந்தும் இந்த இரண்டு தொழில்களையும் கையாடாத.பாடசாலைகளுமிருக்கின்றன. இதற்கு காரணம்கேட்கும் போது களிமண் மணல் இவைகளினால் பிள்ளைகளின் உடை அதிக அழுக்கடைகிறதென்று உபாத்தியாயர்கள் விடையளிக்கிறார்கள். இதனால், பிள்ளைகள், உடைக்காக படைக்கப் பட்டார்களா ? அல்லது உடைகள் பிள்ளைகளுக்காக உண்டாக்கப்பட்டனவா ? என்னும் கேள்விக்கு இடமுண்டாகின்றன. இவ்வித வீண்பதில் சொல்லும் போதகாசிரியர்கள், பிள்ளைகளுக்கு இயற்கை பூகோளபாடத்தை திருஷ்டாந்தப் படுத்தி கற்பிப்பதற்கு பதிலாக மனப்பாடம்செய்யும்படி பயிற்றுவிக்கும் உபாத்தியாயர் களுக்கு சமானமானவர்களென எண்ணயிடமுண்டு. சோப்பும், தண்ணீரும் எளிதில் கிடைக்கக்கூடியவையாயிருந்தும் அநேக உபாத்தியாயர்களும்பெற்றோர்களும் தங்கள்பிள்ளைகளை சுத்தமாயிருக்கும்படி அடிக்கடிபயமுறுத்துகிறார்கள். இது ஓர் பரிதாபமானகாரியம். கற்பிக்கும் உபாத்தியாயர் கவலையற்றவராயிருந்தாலொழிய களிமண்தொழிலும் மணல்விளையாட்டும்வாஸ்தவத்தில் அழுக்காகும் விளையாட்டுகளல்ல. சில பாடசாலைகளில் மண் உருக்கள் செய்யும் நாட்களில் பிள்ளைகள் மேலே போட்டுக்கொள்ள



ஒரு துண்டு வஸ்திரம் கொண்டுவருகிறார்கள். அதனால் தங்கள் உடுப்புகளில் களிமண் படுவதில்லை. அன்றியும் தொழில் முடிந்தவுடன் கைகளை கழுவிக்கொள்ளுகிறார்கள். முக்கியமாய் மணல்விளையாட்டினால் அழுக்காகிறதென்று சொல்லக்கூடாது. இத்தொழிலினால் உடைகள் சிறிது அழுக்கடைந்தபோதிலும் குதித்தல் முதலிய தேகாப்பியாசவிளையாடல்களினால் அழுக்கைப் போக்கிவிடலாம். குழந்தையின் மலர்ச்சி மானிடஜாதியின் நாகரீகமலர்ச்சிக்கு ஒத்திருக்கின்றதென்று நாம் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறோம். ப்ரோபல் அபிப்பிராயப்படி பிள்ளைகளைத்தக்கபடிகற்பிப்பதற்கான அநேக நல் மாதிரிகளில் இது ஒன்று. முற்காலத்தில் மனிதர்கள் தங்கள் அபிப்பிராயங்களை கற்களின்மேல் செதுக்கிய ஒழுங்கற்றவடிவங்களினாலும் மணலில் வரைந்தும் தெரிவித்தார்கள். சமையலுக்கு வேண்டிய சாமான்களும் மண்ணினால் செய்துகொண்டார்கள். நமது பிள்ளைகள் மண் உருக்கள் செய்வதினாலும் மணல் விளையாட்டு விளையாடுவதினாலும் நாகரீகத்தின் விருத்தியை அனுசரிக்கின்றோம். பிள்ளைகள் வழக்கமான பாடங்களை பலகையிலாவது கடிதத்திலாவது எழுதுவதற்கு முந்தி மணலில் எழுதுகிறார்கள். (இன்னும் வரும்.)

## WANT OF COMPULSORY EDUCATION.

### கட்டாயமான கல்வி அவசியம்.

(144-ம் பக்கத் தொடர்ச்சி.)

நம்முடைய இராஜதானியிலும் இவ்வகைய முயற்சி செய்ய வேண்டியது முக்கியமானதே. ஏனைய இராஜதானிகளைப்பார்க்கிலும் நம் இராஜதானிகல்வி மலிந்துள்ளதென்று பிரசித்த மடைந்துள்ளது போலவே இப்புதுமுறையிலும் முற்பட்டு பிரதமபாடசாலைகளை விருத்திசெய்து, அப்பாடசாலைகளில் ஏழை எளியவர்க்கு இனாமாகப் படிப்பளிக்க ஏதுபுரிவோமாயின் இப்போது நமக்குள்ள கஷ்ட நஷ்டங்கள் நிலைத்திரா. நெட்டால், டிரான்ஸ்வால், மோரீஸ், கண்டி, சிங்கப்பூர் முதலிய அயல்நாடுகளுக்குப்போய் ஏழைமாக்கள் அடிமைப்பட வேண்டியிரா. தம் நாட்டிலே ஜீவன விருத்திக்காதாரமான ஏதுகரங்களைச் செய்துகொள்ள வியலும்.

இதற்கு முதலில் தனவான்களும், கோயில் தர்மகர்த்தர்களும், மடாதிபதிகளும் முற்படவேண்டும். தனவான்கள் சிறிது திரவியம் கல்விவிருத்திக்காக உதவமுற்படுவாரென்பது எமதனுபவம். தருமகர்த்தர்கள் மிகவுங் கவனிக்க வேண்டியவராகின்றார்கள். தாங்கள்

காரியம் பார்த்து வரும் கோயில்களில் செலவாகும் ஏராளமான பொருளில் எத்தனையோ பாடசாலை வைத்து நடத்தலாகுமன்றோ? கல்வியில்லாமல் கடவுள் வழிபாடுகுறைந்து ஆலயங்களைக் கருதுவாரே இல்லாதொழிவதற்கு உதவியாயிருப்பது மடமையாதலால் அதனை யகற்றுவதற்காகச் செலவிடும் செல்வமும் கடவுளுக்காகச் செலவிட்டதாகவே கருதவேண்டும். மடாதிபதிகள் பணம் பொதுப் பணமே. அதனைப் பொதுக்காரியங்களில் செலவிடவேண்டுமென்பது யாவருமுணர்ந்த விஷயம். அதனை விடுத்துகோர்ட்டுக்கும், கூத்துக்கும், டம்பத்துக்கும் அழித்துவருகின்றனர். இவர்கள் கவனித்துக் கல்வி விருத்திக்குச் செலவிடுவார்களாயின் எத்தனையோ பாடசாலைகள் தோன்றலாகும்.

இவ்வகையால் துரைத்தனத்தாரால் முடியாத காரியம் குடிகளால் முடிவதாகுமென்பதற்கேற்பவே சிற்றரசர்கள் பாலுள்ள நாடுகளுக்கும் ஒருவகையில் பிரயோஜனமுண்டாக்கும். முக்கியமாய் சிறிய அரசாயிருப்பது கொச்சியும் திருவாங்கூருமாம். இவ்விரு அரசிலும் பலபாஷை பேசும் குடிமக்களில்லை. உள்ள குடிகளும் கல்வி விருப்புடையோர். அரசரும் குடிகளை யாதரிக்கின்றவர்கள். இவ்வரசினர் தம் குடிகளுக்குப் பலவந்த கல்வியைபுண்டாக்குவது எளிது. அதிகமாகச் செல்லும் செலவை ஏற்க ஒருவாறு கஷ்டப்படுவரெனின்? இப்போது அன்னசாலைகள் பிராமணருக்காக வைத்து நாளும் பல்லாயிரக்கணக்கான பிராமணர்களுக் கன்னம் போடுவது மிகையென்று பலபுத்திமான்கள் எண்ணுகின்றனர். இது சோம்பலுக் கிடங்கொடுப்ப தன்றி பிரயோஜனம் பயக்கவில்லை. இந்த வகையிற் செலவாகும்பணத்தைக் கல்விக்காக உபயோகிக்கின் போதுமானதாகும். இவ்வகைய முபற்சி சிறிதளவு செய்வதாகவுங் கேள்விப்படுகிறோம்.

இதுவன்றி மைசூரிலும் இக்காரியம்முடிவதெளிதாகும். அங்கு தற்காலம் திவானாக இருப்பவர் முன்னர் திருவாங்கூரிலிருந்தவராகலின் பலவந்த கல்வியில் விருப்புடையவரென்பது சொல்லாமேயமையும். அவரும் பரோடாவைப் பின்பற்றித் தம் நாட்டிலும் தமது பெயர் என்றும் நிலவ இப்பலவந்த கல்வியை யமைப்பாராயின் ஆங்கில அரசுக்கு வழிகாட்டியதாகும். அப்போதாயினும் நமது துரைத்தனத்தார் பலவந்த கல்வி நமக்களிப்பது சாத்தியமானதுதான் என்று நினைப்பார்களோ அல்லவோ என்பது விளங்கும்.

பு. வே. சபாபதி முதலியார்.



## Duties of a Village School-Master.

### ( *Dictation for Class*—I. )

## கிராம உபாத்தியாயரின் கடமை.

### (சொல்வதெழுதல்—முதல் வகுப்புக்கு.)

சொல்லப்படுவதைப் பாராமல் கேட்டெழுதும்பாடத்திற்குச் சொல்வதெழுதல் என்று பெயர். இப்பாடம் பிள்ளைகள் பிழையற வெழுதும் நிமித்தம் அடிக்கடி பெரிதும் உபாத்தியாயர்களால் பழக்கப்படுத்தப்பட்டு வரும் சிறுவர்களுக்கு எழுத்துக்கூட்டலும் (Spelling) உண்டாயிருப்பது சகஜமாயினும், அதனை யெழுதும் பொழுது பிழைசெய்வதும் அவர்களுக்குச் சகஜமே. வாயால் சரியா யெழுத்து கூட்டின பையன், கையால் பிழையாக வெழுதுவதைப் பலமுறையும் கண்டிருக்கிறோம். ஆகையால் இப்பாடம் பெரும்பாலும் பழக்கத்தால் சாதகப்பட வேண்டியதாக விருக்கின்றது. சொல்வதெழுதலைப் பரிட்சித்தறியும் பாடம் (Testing Lesson) என்றே சொல்லத்தகும். ஆகையால், இதனை நாடோறும் பழக்குவதில் நன்மையுண்டு. சிறியோர் பெரியோராகி விவகார சம்பன்னர்களாய் விளங்கும்போது அவர்களால் கடிதம், பத்திரம் முதலியன எழுதப்படுகையில் இப்பாடத்தின் இன்றியமையாப் பயன் இனிது விளங்கும். இதன் பிரயோசனம் பெற்றோரிற் பலர் அறியார்கள். ஆகவே இதைக்குறித்து, அவர்கள் தம்பிள்ளைகளின் கையெழுத்துக்கும் கணக்குக்குங்கவலைப் படுவதுபோல் ஒருபோதும் ஒருவரும் உபாத்தியாயர்களிடம் குறை கூறக்காணோம்.

தெருப்பள்ளிக்கூடங்களில் சொல்வதெழுதல் சொல்லப்படுவது, பிள்ளைகள் எழுத்துக் கூட்டிப்படிக்குஞ் சிறுவயதில் மண்தரையில் ஒவ்வொரு வார்த்தையாக சொல்லி யெழுதச்செய்வதேயன்றி, பிள்ளைகள் சிற்று மேலாகவாசிக்கப்புகும் தருணத்தில் வாக்கியங்களைத் தொடர்ந்தெழுதும் வழக்கத்தைக் கையாளச் செய்வதாகக்காணோம். ஆகவே தெருப்பள்ளிக் கூடங்களிற் படித்துக் கெட்டவர் பலருளர். இப்போது நாடுகளில் விவகார புருஷர்களாய் விளங்கும் வயதால் முதிர்ந்தவர்களி லநேகர் வல்லின இடையின (ற,ர) ங்களின் வேற்றுமையறியாதெழுதும் வழக்கமே போதுமான சாக்ஷியமாகவிருக்கும். அன்றியும் அவர்கள் மெய்யெழுத்து (க், ங், ச், ஞ் முதலியன) களுக்குப் புள்ளிவைக்காமலும், மற்றும் பலவாறாக கைக்குவந்த படிக்

செல்லாம் எழுதுவதும் அவர்களுக்கு அடிநாளிற் சொல்வதெழுதல் என்னும் பாடம் பழக்காக் குறையினாலேயே நேர்ந்ததாகும். இப் பெருங்குறை நீங்கும் பொருட்டே வித்தியாதிகாரிகள் ஏற்படுத்திய பாடப்பட்டி (Curriculum) யில் வகுப்புவாரி.—

பாலர் வகுப்புக்கு—ஓரெழுத்துப் பெயர்களும்— (பூ, மா, பை முதலியனவும்) ஓரசைச் சொற்களும்— (கால், பூண், செய் முதலியனவும்.

முதல் வகுப்புக்கு— பழக்கச்சொற்களும் (கோணி, பழம், புத்தகம் முதலியனவும்.)

மற்றும் வகுப்புகளுக்குப் பிள்ளைகளின் சக்திக்கேற்ற 6, 8, 10-வரிகளிலடங்கிய வாக்கியங்களாகவும் சொல்வதெழுதல் பாடத்தினை வகுத்திருக்கின்றனர்.

இவற்றில் முதல் வகுப்புக்குப் பரிட்சைகாலத்தில், படித்தபுத்தகத்திலிருந்து பழக்கமான 8-வார்த்தைகள் பிள்ளைக்குப் பரீக்ஷாதிகாரிகளாற் சொல்லப்படுவதால், உபாத்தியாயர்களும் அவ்வழியே தடவைக்கு 8-வார்த்தைகளாக ஒன்றின் கீழொன்றாய்ப்பெரிய எழுத்துகளில் அவர்களை எழுதப்பழக்கவேண்டும். சாதாரணமாய்ப்பிள்ளைகளுக்கு அவர்கள் படித்த புத்தகத்திலிருந்துமட்டுமே வார்த்தைகளைச்சொல்லிப் பழக்குவது அவர்களின் அபிவிருத்திக்குப் போதாமலிருப்பதையநுபவத்தி லறிந்திருக்கிறோமாகையால் இனி அடியில் குறித்தவை போன்ற சிறுவர்களின் உற்சாகத்துக்கேற்ற சிறு வார்த்தைகளையும் சொல்லிப் பழக்குவது விளையாட்டாகவே விஷயஞானமுண்டுபண்ணும் கிண்டர் கார்ட்டன் முறையைச் சிறிதொக்கும்:—

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| ஒன்று | கோழி | பொட்டு | தங்கம் |
| இரண்டு | வாத்து | சாந்து | வெள்ளி |
| மூன்று | குருவி | நாமம் | பித்தளை |
| நான்கு | மயில் | விபூதி | இரும்பு |
| ஐந்து | காக்கை | சந்தனம் | செம்பு |
| ஆறு | கொக்கு | ஜவ்வாது | ஈயம் |
| ஏழு | கழுகு | கஸ்தூரி | தகரம் |
| எட்டு | பக்ஷி | திருமண் | துத்தநாகம் |



| (5) | (6) | (7) | (8) |
|---|---|---|---|
| ஞாயிறு | கணக்கு | தச்சன் | பருப்பு |
| திங்கள் | கூட்டல் | தட்டான் | பச்சடி |
| செவ்வாய் | கழித்தல் | கருமான் | வறல் |
| புதன் | பெருக்கல் | வண்ணான் | பொரியல் |
| வியாழம் | வகுத்தல் | அம்பட்டன் | கூட்டு |
| வெள்ளி | எண்ணல் | குயவன் | குழம்பு |
| சனி | வாய்பாடு | பறையன் | இரசம் |
| விடுமுறை | பூஜ்ஜியம். | சக்கிலி | பாயசம் |

| (9) | (10) | (11) | (12) |
|---|---|---|---|
| மேஜை | ஜன்னல் | நாயுடு | பாக்கு |
| நாற்காலி | வாசற்கால் | பிள்ளை | வெற்றிலை |
| பெஞ்சு | செங்கல் | பத்தர் | சுண்ணாம்பு |
| பேனா | சதுரக்கல் | ஆசாரி | ஏலக்காய் |
| பேனாமுள் | மண்சுவர் | கிராமணி | லவங்கம் |
| போர்ட்டு | தேக்குமரம் | ஐயங்கார் | வால்மிளகு |
| நூல்கட்டை | தாழ்ப்பாள் | முதலியார் | ஜாதிக்காய் |
| இங்கிபுட்டி | கூடல்வாய் | செட்டியார் | ஜாதிபத்திரி |

| (13) | (14) | (15) | (16) |
|---|---|---|---|
| பண்டிகை | கச்சேரி | சிறுமணி | அவரைக்காய் |
| நோன்பு | கோர்ட்டு | செம்பாளை | புடலங்காய் |
| தீபாவளி | சாக்ஷி | பிசானம் | பாகற்காய் |
| கார்த்திகை | சம்மன் | வாடச்சம்பா | சுரைக்காய் |
| ஏகாதசி | குற்றவாளி | மணக்கத்தை | பூசனிக்காய் |
| ஆருத்ரா | பிரதிவாதி | செங்கோவை | கத்தரிக்காய் |
| பொங்கல் | வாய்தா | அருஞ்சோதி | முருங்கைக்கா[ய்] |
| ஆயுதபூஜை | விசாரணை | மடுமுழுங்கி | பீர்க்கங்காய் |

| (17) | (18) | (19) | (20) |
|---|---|---|---|
| மருந்து | மாம்பழம் | கலியாணம் | மிளகு |
| மாத்திரை | மலாம்பழம் | நலங்கு | மிளகாய் |
| எண்ணெய் | பலாப்பழம் | பந்தக்கால் | புளி |
| தைலம் | பனம்பழம் | பரதேசம் | உப்பு |
| பஸ்மம் | கிச்சிலிப்பழம் | பாதபூஜை | வெங்காயம் |
| லேகியம் | மாதளம்பழம் | அருந்ததி | கடுகு |
| கஷாயம் | ஈச்சம்பழம் | ஆசீர்வாதம் | பூண்டு |
| திராவகம் | முந்திரிப்பழம் | ஓமகுண்டம் | தனியா |

மேற்குறித்த வார்த்தைகளை முறையே சொல்லி எழுதுவிக்கு முன் அவற்றை யுபாத்தியாயர் கரும்பலகையிலெழுதி பிள்ளைகளைக் கொண்டு ஒவ்வொன்றாய் முந்தி எழுத்துக் கூட்டச் செய்வதினால் காரிய சாதகமாக விருக்கும். பிள்ளைக ளெல்லோரும் பிழையற வெழுதக் கூடுமென்று உபாத்தியாயருக்கு நிச்சயப்பட்ட பிறகுதான் வார்த்தைகளை யவர்களுக்குச் சொல்லி எழுதச்செய்ய வேண்டும். பிள்ளைகள் எழுதும் பொழுது ஒருவரை யொருவர் பார்த்தெழுதும் (Copying) பழக்கத்தை விலக்கும் பொருட்டு அவர்களை யெதிரெதிராய் நிற்கச் செய்யும் வழக்கம் உபாத்தியாயர்க ளறிவார்கள். சில சமயங்களில் பிள்ளைகளை யொருவனைமாற்றி யொருவனை உட்காரச் செய்வது முண்டு. இப்படி செய்வதானால் 4- வார்த்தைகள்சொல்லி முடிந்த பிறகு அது பரியந்தம் நின்ற பிள்ளைகளை உட்காரச் செய்ய வேண்டும். முக்கியமாய் இவ்வழக்கம் 10, 15 - வரிகளை எழுதும் பெரிய வகுப்புக் களில் நெடுநேரம் நிற்கவேண்டிவரும் சமயங்களில் மட்டுமே கையாளப்படும். பார்த்தெழுதும் கெட்ட பழக்கத்தை யுடைய பிள்ளைகளை விலகி நிற்கச் செய்யவேண்டும். எழுதச் செவ்வனே யறியாதவர்களை உபாத்தியாயர் தன்னருகில் நிறுத்தி யவர்களுக்குத் துணைப்படவேண்டும்.

சொல்லும் வார்த்தைகளை ஒரே தடவை நிதானமாகவும், தெளிவாகவும் சொன்னால் போதும். சிறுவகுப்புகளில் ஒரு முறைக் கதிகம் சொல்வதானால் பிள்ளைகளுக்குக் கலவர முண்டாக நேருவதுமன்றி, சிலர் எழுதினதையே பின்னும் பலமுறையாக வெழுதவுமிடமாகின்றது. 8- வார்த்தைகளும் எழுதி முடிந்ததும் பலகைகளைக் கீழே வைக்கச் செய்து பிழையா யெழுதக் கூடிய பிள்ளைகளைக் கொண்டு அவற்றைச் சரியாய் தனித்தனி கரும்பலகையில் எழுதச் செய்யவேண்டும். பலகைகளை உபாத்தியாயரே பிள்ளையை நேரில் தன்னருகில் நிறுத்திப் போர்ட்டி லெழுதி யிருப்பதைக் கொண்டு திருத்தி விளக்கிக் காட்டவேண்டும். கடைசியில் ஒவ்வொருபிள்ளையையும் போர்ட்டி லெழுதி யிருக்கும் வார்த்தைகளை மனப்பாடம் செய்து அவற்றை யவர்களே பாராமலெழுதி மறுபடியும் உபாத்தியாயருக்குக் காட்டவும் செய்யலாம். இதுபோன்ற சதுபாயங்களைக் கையாளும் பாட சாலைகளிற் படிக்கும் பிள்ளைகள் இப்பாடத்தில் மிகவும்தேர்ந்து அவர்களின் பிற்காலத்தில் தம் எழுத்துக் காரியங்களை சரிவர நடத்தக் கூடியவர்களா யிருப்பது மன்றி உலகத்திற்கும் உபகாரிகளாக விளங்குவார்கள்.

சி. வே. சண்முக முதலியார்.

Tinnanur<br>6th Jan. '07 } Hd. Master, L. F. Board School.



## CHRISTMAS VACATION CLASSES, MADRAS.

## சென்னை இராஜாங்க வித்தியாசங்க விபவம்.

### 1906-07.

அகவல்

சென்னை மாகாணம் சிறப்புற் றோங்கி
நன்னயம் பொருந்தி நலமாய் வாழ
அறிவின்மை யென்னும் இருளைப் போக்கி
பரிவுடன் பலரும் படித்து விளங்கக்
கருதியே மனத்தில் கருத்துடன் நிறுத்தி
நிறுவிய வித்தியா இராஜாங்க சங்கம்
பெற்றதோர் ஆண்டு பெருமையாய் மூன்று— அதில்,
உற்றதோர் செய்கை உரைத்திடக் கேளாய்;—
இருபதாம் நூற்றாண் டிருமூன்று வருடம்
ஒருபதோ டிரண்டு உகந்த மாதம்
இருபதில் நான்கு இயைந்த தேதியில்
பெருகு போதகர்கள் பலரும் பொருந்தி
கைகளை கோத்து கட்டித் தழுவி
உள்ளதை உரைத்து உளம்கொண் டாட
இத்துட னன்றி இவ்வாண் டதனில்
உத்தம விருத்தியாம் உபாத்திமைத் தொழிலை
மெய்த்துணை யாக மேவிய தெரிவைமார்
சிற்சிலர் வந்து சிறப்பாய்க் கூடி
பற்பல விதமாய் பயின்றதோர் மிக்க
அற்புத அறிவின் அழகைச் சற்று
ஒப்புட னெடுத்து உரைப்பேன் கேளாய்
உக்கண்டி உண்ணி உத்தம நாயர்
மெய்க்கொண்ட தத்துவம் மேவி யுரைத்தார்
அரனுக் கரிய அரும்புதல் வன்பேர்
மரபா யுடைய மகனும் மணியன்
அளவுநூல் சாத்திரம் அன்புட னளித்தான்
க்ஷேத்திர கணிதம் தெளிவாய் விளங்க
அனுபவ மார்க்கம் அறைந்தான் ஸ்டோனும்
போதனா முறையின் புகழ்ச்சியைக் கூறி
மேவினன் ஆர்தர் மேஹியூ என்போன்

அன்னிய பாஷையாம் ஆங்கில மதனை
நன்னிலந் தன்னில் நாட்டு மார்க்கத்தை
சொன்னயம் பொருணயம் சொலிக்கச் செய்தே
இன்பமாய் ஈந்தான் எட்ஸ் என்போனும்
கின்டர் கார்டன் கேளிக்கை பலவும்
காட்டினன் ஒருநாள் கிகே துரையும்,
அதை— மீண்டும் எடுத்து மிகுதியாய்க் காட்ட
கோட்டு ரைட்டம்மை கூர்ந்தாள் ஒருநாள்.
நிற்க இக்—குழவிச் சங்கம் குதித்தே ஆடித்
தழுவிய காண்பரென்ஸ் சாற்றுவேன் கேண்மின்,
பள்ளிக் குரிய பல்விஷ யங்களை
தெள்ளியே பலரும் தெளிந்தே உரைக்க
புல்லறி வுடைய என்போன் ரேனும்
குழறு சொல்கேட்டு கோபி யாது
மனமது உவந்து மகிழ்ந்து புகழ்ந்து
பெருமைப் படுத்திய பெரியோர் பலருள்
மேலே கூறிய மேதகர் நீங்க
கோலமா மெமது குரு சுப்ர மணியன்,
சாதுர்ய வசனச் சமார்த்திய ஹாலும்,
கண்ணிய கணவான் காளில்ஸ்டு வர்ட்டும்,
நண்ணியமிடில் மாஸ்ட் நல்லறிவோனும்,
நம்மாழ் வாரின் நாமம் பெற்று,
கோள்குறி காட்டிய குணசட கோபனும்,
எண்ணிட முடியா ஏனையோர் பலரும்
பண்ணிய வியாசம் பலவும் கேட்டு
மகிழ்ந்தனம், மகிழ்ந்தனம், மகிழ்ந்தன மையே
மேலும்,
கண் காட்சியாகக் காட்டிய விநோதக்,
கைத்தொழில் களையும் கூறுவா மீங்கு
ஸ்ரீகா குளமும் சிறந்த பல்லாரியும்
ராயச் சுடியாம் தெலுங்கு நாடும்
தமிழிற் சிறந்த சோழ நாடாம்
தஞ்சையும் திரிசிர புரமும் கூடி
விந்தையா யளித்த வேடிக்கை பலவும்
கண்டனர் பலரும் களித்தனர் மனத்தில்



இதுவன்றி—
வித்தியா விசாரணை விதிகளைச் சமைத்துச்
சரிவரப் பார்க்கும் டைரக்டர் தரிசனம்
பத்தியாய்க் கொண்டு பலபேரும் கண்டோம்,
மேலும்,
அரசற்கு பதிலா யமைந்த கவர்னராம்
பெருமான் லாலி பெருமாட்டி யோடு
பேட்டிகள் கொடுத்த பெருமையை எடுத்துத்
தீட்டிட முடியா திறமையின் திறத்தை
என்னென் றுரைப்பேன் எவ்வித மறைவேன்!!
இத்துடன்;
தென்னிந்தி யாவின் பிரிவுக ளனைத்தும்
மன்னியே ஒருங்காய் மகிழும் வண்ணம்
உன்னிய ஹோஸ்டலின் உரிமையைக் கேளாய்,
மேற்றிசை துவக்கி கீழ்த்திசை வரைக்கும்,
மேவிய கொங்கணர் கன்னடர் குடகர்
வடக்கில்,-
கஞ்சம் தொடங்கி காஞ்சியா யமைந்த
ஒட்டிரர் தெங்கணர் உயர்ந்த தெலுங்கர்
தெற்கில், சோழர் பாண்டியர் சுகித்த நாட்டின்
அமுதெனும் பாஷையை அருந்திய தமிழர்,
இந்துஸ் தானி இயம்பிடும் சிலருமாய்,
ஒருங்கே கூடி உரிமையாய் வாழ்ந்து
உல்லாச மாக உலாவித் திரியப்,
பண்ணின பண்பின் பாங்குகள் பல்வாம்— அவற்றுள்
அடையா றடைந்து அன்னையாம் பெஸண்டின்,
அற்புத மொழியை அருந்தினர் பலரே
செங்குன்ற நீரில் செம்மையா யாடி
பொங்கு மனத்தராய் பொலிந்தோர் பலரே
அண்ணலே— உனது ஆட்சியின் திறத்தையும் ஆண்மை
யின் திறத்தையும்,
காட்சியாய்க் கண்டு களித்து உள்ளத்தில்
மெச்சினம், மெச்சினம், மெச்சினம் மிகவும்
இச்சங் கத்தின் அழகே அழகு, அது

கண்ணோச் சியின்றி களைத்தோங்கு மாறும்
அதன், அங்கத் தினராம் அனைவரும் வாழ,
அண்ணலாம் எமது அருமைக் கடவுள்
கன்றின மேய்த்த கண்ணன் கழலை
பற்றியே அனைவரும் தொழுவோம் யாமே.
பள்ளிப் பரீட்சகர் பலரும் பொருந்தினர்.

C. GOPALA AIYANGAR,
*1st Asst, Govt. Training School,*
**TANJORE.**

## HOW TO TEACH ARITHMETIC.

### எண்முதல் விளக்கம்.

இதற்குமுன் இருக்கும் பாடங்களில் சிறுவன் எண்ணினுடைய ஞானத்தைப் பல பொருள்களைக் கொண்டே சம்பாதித்துக் கொண்டான். மேலும் அப்போது பொருள்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு உபாத்தியாயர், அல்லது தாய் தந்தைகள் கேட்ட கேள்விகளுக்கு உத்தரம் கொடுத்தானல்லவா? இந்தப் பாடத்தில் இன்னும் கொஞ்சம் மேலே போகும்படி செய்யவேண்டியது.

அதாவது ஒலி வடிவாய் அறிந்த எண்களுக்குச் சரியாய்ச் சில குறிகளை உபயோகித்து வரிவடிவாயும் எழுதிப் பார்க்கும்படிசெய்ய வேண்டும். ஆனால் அதைச் சுருக்கமானதாயும் கஷ்டமானதாயுமிருக்கும் க, உ, ங, ச, முதலான குறிகளைக் கொண்டு கற்பிக்க வேண்டியதில்லை.

இந்தப் பாடத்தில் பலகைப் பலபங்களைச் சிறுவன் கையில் கொடுக்கவும். எழுதவாவது, பலபத்தைச் செவ்வையாய்ப் பிடித்து நேராக ஒரு கோலைக் கீறுவதற்காவது தெரியாமலிருந்தாலும், அவன் இதுகளைக் கையில் கொடுத்தவுடனே தனக்கு ஒரு பெருமையானது கிடைத்ததுபோலச் சந்தோஷிப்பான். இந்த இரண்டு கருவிகளைக் கொண்டு எண்ணினுடைய ஞானத்தைச் சம்பாதித்துக் கொள்வது கஷ்டமான காரியமன்று. ஆகையால் வெகு சீக்கிரத்தில் இதுகளை உபயோகித்துக் கொள்ளச் சக்தியுண்டாய் நாம் சொன்னதை யெல்லாம் எழுதிக்காட்டுவான். உபாத்தியாயர், அல்லது தாய்தந்தைகள் பலகையை விளையாட்டுச் சாமான்கள் அடங்கிய பெட்டியுடன் கீழே வைத்து, பலகை பலப்பங்களைப் பிள்ளைகளிடத்திற்கொடுத்து அந்தப் பெட்டியிலிருந்து ஒரு கோலிக்குண்டை எடுத்துக்காட்டி, பலகை



நடுவில் பலப்பத்தால் அந்தக் குண்டுக்குச் சமானமாய் ஒரு சுழி இடும்படிசொல்லி, தாம் காட்டின கோலிக்குண்டையும் ஓரிடத்தில் அவர்கள் பார்க்கும்படி வைக்கவேண்டியது.

இப்படிவைத்தால் வஸ்துவைப் பிள்ளைகள் பார்த்துப் பலகையில் அதற்குச் சமானமாய் ஒரு புள்ளியைப் போடுவார்கள். அப்புறம் இரண்டு பலகறையை எடுத்துக் கோலிக்குண்டின் கீழே வைத்து, அதற்குச் சமானமாய்ப் பலகையில் முன்போட்ட புள்ளியின் கீழே இரண்டு புள்ளிகளைப் போடும்படி செய்யவும்.

இதற்குப்பிறகு மூன்று குன்றுமணிகளை எடுத்து பலகறையின் கீழேவைத்து, தான் வைக்கும் மாதிரியாய் மூன்று புள்ளிகளை போடும்படி செய்து, அப்புறம் நாலு கிளிஞ்சில், ஐந்து மரத்துண்டு, ஆறு வெள்ளைக்கல், ஏழு பாக்கு, எட்டுப் புளியங்கொட்டை, என்று பத்து வரிகள் ஏற்படுத்தி, பிள்ளைகளும் தான் ஏற்படுத்தும் வரிகளுக்குச் சமானமாய் எழுதும் பலகையில் வரிவரியாய்ப் புள்ளிகளைப் போடும்படி செய்யவேண்டியது. அப்படி புள்ளியிட்டால் பலகையில் இதன் அடியில் குறித்திருக்கும் உருவம் ஏற்படும்.



இந்த உருவத்தில் இருக்கும் புள்ளிகள் சில வஸ்துகளுக்குச் சமானமென்றும் பலகையில் இருக்கும் புள்ளிகள் கோலிக்குண்டு முதலான ஒரேமாதிரி வஸ்துகளால் செய்தவரிகளுக்குக் குறியாக நிற்கிறதென்றும் சிறுவர்கள் அறிந்துகொள்வார்கள். இப்பொழுது அந்தந்தவரியில் எத்தனை புள்ளி இருக்கிறதென்று கேட்டால், ஒரு புள்ளி, இரண்டுபுள்ளி, மூன்றுபுள்ளி, நான்குபுள்ளி, என்று பிள்ளைகள் சொல்லிக்காட்டுவார்கள். இப்படிச்சொல்லத் தெரிந்தபிறகு இதனடியிற் கேட்டிருக்கிறப்போல, சில வினாக்களைக் கேட்க வேண்டியது.

ஏழு புள்ளியுள்ள வரி எது?

நாலு புள்ளியுள்ள வரி எது?

ஒன்பது புள்ளியுள்ள வரி எது ?

மூன்று புள்ளி ?

ஐந்து புள்ளி ?

பிறகு, பலகையைத்திருப்பிகொள்ளச்சொல்லி, இதன் அடியில் வருமாறு வினவவேண்டும்.

உபா. அப்பா, உனக்கு எத்தனை கண் இருக்கிறதோ அத்தனை புள்ளியிட்டுக் காட்டு பார்ப்போம்.

சிறுவன் இரண்டு புள்ளிகளைப் போடுவான்.

உபா. அந்த இரண்டு புள்ளிகளின்கீழே உனக்கு எத்தனைகாது இருக்கிறதோ அத்தனைபுள்ளிபோடு ?

ஒரு கையில் எத்தனை விரல் இருக்கிறதோ அத்தனை புள்ளி போடு ?

சிறுவன் ஒருவேளை தன் கையைப் பார்த்து நாலு புள்ளிகள் போடலாம்.

உபா. அது சரியல்ல, பெருவிரலைக் கூட்டிக்கொள்ளவேண்டுமே ஆகையால் ஐந்துபுள்ளி போடவேண்டும்.

சிறுவன் அப்படியே போடுவான்.

உபா. மற்றக் கையில் பெருவிரல் உட்பட எத்தனை விரல் இருக்கிறதோ அத்தனை புள்ளிகள் போடு.

சிறுவன். ஐந்து புள்ளிகளைப் போடுவான்.

உபா. உனக்கு எத்தனை பாதங்கள் இருக்கின்றனவோ அத்தனை புள்ளிகள் போடு.

இவ்விடத்தில் எத்தனை நாற்காலி, படம், பாய், கம்பம் இருக்கின்றனவோ அத்தனை புள்ளிகளை வெவ்வேறாய்ப் போடு.

எப்போதும் புள்ளிகளையே போடாமல் சிறிய கீற்றுகளைக் கீறும்படி செய்யலாம். ஒரு சமயத்தில் முன்போல முன் இருக்கும் வரியைப்பார்க்கிலும் பின்வரியில் ஒரு புள்ளி அதிகமாக இருக்கும்படி புள்ளிகளைப் பார்த்துப் போட்டுவைத்து இரண்டு புள்ளிகளையுடையவரியில் ஒரு புள்ளியைப் பலப்பத்தால் அடித்து விட்டு, இந்த இரண்டு புள்ளிகளில் ஒருபுள்ளியை அடித்துவிட்டால் மிகுந்த புள்ளி எத்தனையென்று வின்வினால், சிறுவன் சொல்வான்,—



சிறு. ஒரு புள்ளி. ● ○

உபா. மூன்று புள்ளிவரியில் ஒன்றை அடித்துவிட்டால் மீதி என்ன ?

சிறு. இரண்டு புள்ளிகள். ● ● ○

உபா. ஏழுபுள்ளிவரையில் இரண்டு புள்ளிகளை அடித்து விட்டால் அப்போது இருக்கிறது எத்தனை ?

சிறு. ஐந்து. ● ● ● ● ● ○ ○

இதேபிரகாரம் பத்துப்புள்ளியுள்ள வரிவரையில் கேட்கலாம்.

மேற்காட்டியபடி புள்ளிகளை அடிக்கவேண்டியதேயல்லாமல், கலைத்துப்போகக்கூடாது. ஏனென்றால் முதல் இருந்த மொத்தத்தில் எடுத்துவிட்டது இத்தனையென்றும், நின்றது இத்தனையென்றும் சிறுவர்களுக்குப் பிரத்தியக்ஷமாய்த் தெரியும். இந்தப் பாடம் சொல்லும்போது இன்னும் ஒரு வழியிலும் சொல்லலாம்.

(இன்னும் வரும்)

## MILK.

### பால்.

கடவுள் பிராணிகளுக்கு உணவாகப் படைத்த வஸ்துக்களில் பாலையும் ஒன்றாய்ப் படைத்திருக்கிறார். இது ஆடுமாடுகள் முதலான ஜந்துக்கள் விஸ்தாரமாய்ப் பரிபாலிக்கப்படும் தேசங்களிளெல்லாம் அதிகமாய்க் கிடைக்கின்றது. இது மிகநேர்த்தியான உணவாய் இருப்பதுமன்றி, இதை உண்போர்களுக்கு மிக்கபலத்தையுங்கொடுத்து அவர்களுடைய சுகவிர்த்திக்கும் ஏதுவாயிருக்கின்றது. பிராணிகளுக்கு உணவாய் ஏற்படுத்தியவைகளில் இவ்வளவு குணமுள்ள வேறொரு வஸ்துவுங்காணோம். ஆதலால், இதன் குணங்களில் சிலவற்றையாவது யாம் அறிந்திருப்பது அவசியம்.

உயர்ந்த ஜாதிகளுக்குத் தாழ்ந்தஜாதியான வஸ்துக்களையே கடவுள் உணவாய் ஏற்படுத்தியிருக்கிறார். கந்தமூலபதார்த்த முதலாய் மனிதஜாதி வரையிலுமுள்ள வஸ்துக்களை நாம் நன்றாய்ப் பரிசோதித்துப் பார்ப்போமானால் இது செவ்வையாய் விளங்கும். ஆனால் மிருகஜாதிகள் தம்மிலுமுயர்ந்த மனிதஜாதியைச் சிலவேளைகளில் புசிக்கின்றன; ஆனாலும் அவைகளுக்கு உணவாய் நியமிக்

கப்பட்டவை அவைகளிலும் தாழ்ந்தவைதான். புல்பூண்டுமுதலியவைகளுக்கு அமிலவாயு ஜலமாகிய செயலற்ற வஸ்த்துக்களே ஸாதாரண உணவாயிருக்கின்றன. இப்புல்பூண்டு முதலியவைகள் சில ஜீவன்களுக்கு உணவாயிருக்கின்றன. மேலும் இப்புல்பூண்டுகளைத் தின்றால் பசியடங்குவதுமன்றி, அதின் ஸத்து அதைத் தின்கிற பிராணிகளின் தேகத்திலூறி அவைகளுக்குப் பலத்தையுண்டாக்கித் தானும் அந்தத் தேகத்தில் ஓர் அம்சமாய் மாறுகின்றன. அந்தப் பிராணிகளையும் அவைகளுக்கு உயர்ந்த சாஜாதிகள் புசிக்கின்றன. இவ்வாறே மேலுமேலும் உயர்ந்த ஜாதிகள் தாழ்ந்தவைகளைப் புசிக்கக் கடவுள் கட்டளைசெய்திருக்கிறார்.

இப்படிப்பட்ட போஜனங்களால் பிராணிகளின் உறுப்புகள் வளருகின்றன. அதெப்படியென்றால் இவ்வுணவுகளில் சில அம்சங்களுண்டு. அவைகள் கடவுளின் செயலால் இரண்டிரண்டாய்க் கூடி நமது அவயவங்களில் ஓர் பாகமாகின்றன. மேலும் இவ்வணுக்கள் பல ஒன்றாய்ச்சேர்ந்து ஓர்வகைப் புதிய சத்தாகமாறி அதை உண்போர்களுக்கு மிக்க பலங்கொடுக்கின்றன. ஆனால் இந்த ஸத்து நம்முடைய தேகத்திலேயே இவ்வணுக்கள் பல ஒன்றுகூடி உண்டாகவேணுமென்னும் அவசியமில்லை. முன்னமே இந்த சத்து உண்டாயிருக்கிற வஸ்துக்களை நாம் புசித்தாலும் அது நமது தேகத்தில் வந்துசேரும். பின்பு அதை நம்தேகத்திலுள்ள சில கருவிகள் தன்வண்ணமாக்கிக்கொள்ளும். அக்கருவிகள் சிலதேசங்களில் மிதமாயிருக்கிறதுமுண்டு; இது மாமிசாசனிகளின் தேகக்கூறுபாட்டையும், தானியாசனிகளின் தேகக் கூறுபாட்டையும் யாம் பரிசோதித்துப்பார்த்தால் செவ்வையாய்த் தெரியவரும்.

நமது மேற்பார்வைக்கு அநேகபிராணிகள் வெகு வித்தியாசமுள்ளனவாய்த் தென்பட்டபோதிலும், இச்சத்து அவைகளுக்கெல்லாம் ஒன்றாயேயிருக்கும். அப்படிப்பட்டவைகளெல்லாம் ஓர்வகை ஜெந்துக்களென்றே அறியவேண்டியது. இச்சத்து சர்க்கரைச்சத்து என்றும், எண்ணெய்ச்சத்து என்றும், வெள்ளைக்கருச்சத்தென்றும் மூன்றுவிதம். சக்கரைச்சத்து என்பது ஸ்தாவரங்களில் இயல்பாயிருக்கின்றது. எண்ணெய்ச்சத்து ஸ்தாவரங்களிலும் மற்றுமுள்ள சில ஜீவஜந்துக்களிலும் வியாபித்திருக்கின்றது. இச்சத்துள்ள வஸ்துக்கள் தோற்றத்திலும் வடிவத்திலும் ஒன்றற்கொன்று வித்தியாசமுடையனவாயிருந்தபோதிலும் அவைகள் ஓர்விதச் சத்துடையனவென்பதையும், இவைகளுக்கும் சர்க்கரைச்சத்துள்ள வஸ்துக்களுக்



கும் பலவித வேறுபாடுகளிருக்கின்றனவென்பதையும் யாம் எளிதில் கண்டுகொள்ளலாம். வெள்ளைக்கருச்சத்து என்பது ஜீவஜந்துக்களின் தேகங்களிலெல்லாம் வெகுவாய்ப் பரவியிருக்கின்றது. இவ்வாறு குறித்த இம்மூன்று சத்துக்களும்கலந்ததனாலுண்டாகியமுக்கிய தத்துவமானது மாறிப்போகாமலே அநேக சாயலடைகிறதுமுண்டு. அப்படியல்லாமல் அவைகள் ஒன்றாய்ச் சேர்ந்துபோகிறதுமுண்டு. இவ்வகைச் சத்துக்கள் ஜீவப்பிராணிகளுக்கு ஆகாரமாய்க் கடவுள் நியமித்த சகல வஸ்துக்களிலும் பரவியிருக்கின்றன.

இச்சத்துக்களின் தன்மைகள் யாதொரு மாறுதலுமின்றி கடவுள் அமைத்தபடியிருக்கிற பாலிலுள்ள சத்துக்களைப் பரிசோதித்துப் பார்த்தால் நன்றாய்விளங்கும். பால்தவிர பிராணிகள் உணவாய்க்கொள்ளும் மற்றப் பொருள்களெல்லாம் ஜந்துக்களுக்கு உணவாவது தவிர, இன்னும் அநேக பிரயோசனங்களைக்கருதி உண்டாக்கப்பட்டிருக்கின்றன. பாலோ அப்படியல்ல; உணவு ஒன்றற்காகவே படைக்கப்பட்டிருக்கின்றது. எந்த ஆகாரமாகட்டும், பிராணிகளுக்குப் பலங்கொடுத்து அதை வளரச்செய்யுமானால் அதில் இப்பாலினது குணம் நன்றாய்ப்பொருந்தியிருக்கவேண்டும். இப்பாலின் குணங்களெல்லாம் அதைப்பற்றி விரித்தெழுதிய ஒவ்வொரு புத்தகத்திலும் செவ்வையாய் விவரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அதில் இம்மூன்று சத்துக்களும் நிறைந்திருக்கின்றன. 'பாற்பாகு' என்று சொல்லுகிறார்களே அதுவே, அதில் சர்க்கரைச் சத்து இருக்கிறதென்று தெரிவிக்கிறது. பாலினின்றும் வெண்ணெயுண்டாகிறதே அதுதான் எண்ணெய்ச்சத்து. அதிலுள்ள வெள்ளைக் கருச்சத்தால்தான் பாலடைக்கட்டி உண்டாகிறது. எந்த ஜந்துவின் பாலாகட்டும் அதில் அவசியம் இம்மூன்று சத்துக்களும் கலந்தேயிருக்கும். ஆனால் ஒன்றைப்போல் ஒன்று இராமல் சிலவற்றில் குறைந்தும் அதிகப்பட்டும் பலவாறாய்க் கலக்கப்பட்டிருக்கும். ஓர் பண்டிதர் சொல்லியது,—'பூரண தத்துவத்தையடைந்த பிராணிகளின் உணவுக்குரிய வஸ்துக்களில், முற்கூறிய மூவிதச் சத்துக்களுள் எல்லாமேனும் குறைந்தபட்சம் இரண்டேனும் அமைந்திராதபொருள் உண்டெனச் சாதிக்கக்கூடாது. மனுஷன் தன் உணவுக்கென்று சமைக்கும் போஜனத்திலும் முக்கியமான இம்மூவகைச் சத்துக்களும் கலந்திருப்பது மிகவும் பிரத்தியட்சமாயிருக்கின்றது. கடவுளின் அமைப்பினால் இயற்கையாய்க் கிடைக்கும் போஜனத்தில் மனுஷன் ரம்மியப்படாமல் அதே ருசியுள்ளதாக யோசிக்கிறான்.

அவன் தனது இயற்கையறிவாலும் யுத்திபுத்திகளாலும் கூடிய பிரயத்தனம் செய்து பற்பலவிதமாய்ப் பிரயாசப்பட்டுத் தன் ஆகாரத்தைச் சமைத்தபோதிலும், அம்முக்கிய ஆகாராதாரமான மூவகைச்சத்துக்களும் அவ்வாகாரத்தில் கலந்து பொருந்தியிருக்கவே பிரயாசப்படுவதாய்நேரிடுகிறது. இதுவே அவனது உழைப்பின் முக்கியநோக்கம். அவன் இதை ஒத்துக்கொள்ளாமல் தன் யோசனையே பெரிதென்றெண்ணி அதில் சார்ந்து, தன் போஜனத்தைச் சமைக்கிறான். இப்படி அவன்சமைப்பதில் இம் மூன்றுசத்துக்களும் அதில் கலந்திருக்கும்படி பிரயாசப்பட்டு அவற்றைச் சரியான அளவினை யுடையவைகளாக எவ்வளவாய்ச் சேர்க்கிறானோ அவ்வளவுக்குத்தக்கதாய் அவனது போஜனம் பூரண மதுரபோஜனமாகிறது. அவன் சாப்பிடும் சர்க்கரை, மா, முட்டை, வெண்ணெய் முதலியவற்றைத் தனித்தனியாய்ச் சாப்பிட்டாலுஞ்சரி, ஒன்றோடொன்றைக் கலந்து சாப்பிட்டாலுஞ்சரி, இயற்கையாய் மனுஷனுக்குக் கொடுக்கப்படும் ஆகாராதாரமான இம் மூன்றுசத்துகளும் கலந்து இருக்கப்பெற்ற பாலையே மாதிரியாகவைத்துச் சத்துக்களுள்ளதாய்ச் சமைத்துச் சாப்பிடுவது போலவே இருக்கிறது'' என்பதே.

பாற்பாகு என்பது பாலில் கலந்திருக்கிற சர்க்கரைச் சத்திலிருந்து உண்டாக்கப்படுகிறது. இப்பாற்பாகு ஆடையெடுக்கப்பட்ட பாலிலிருந்து அல்லது பாலாடைக்கட்டி செய்வதற்கென்று, பாலிலிருந்து தயிரைப் பிரித்தெடுத்த பின்பு அதில் மீதியாயிருக்கின்ற தயிர்த்தண்ணீரென்று சொல்லப்படும் ஓர்வித வெண்ணீரினின்று செய்யப்படும். பாற்பாகைச் சிற்சில வேளைகளில் நோயாளிகளுக்கு ஔஷதமாகப் பிரயோகிப்பதுமுண்டு. அது சுவிற்சர்லாந்து தேசத்திலும் பாலாடைக்கட்டி அதிகமாய்ச் செய்யப்படுகிற சில நாடுகளிலும் உண்டாக்கப்படுகின்றது. பாலிலிருந்து தயிரைப் பிரித்தெடுத்தபின்னர் மீதியாய் நிற்கின்ற தயிர்த்தண்ணீரை தேன்பதமாகிறவரையில் சூரியவெப்பத்தில் வைத்து இறுகச்செய்து அப்புறம் அச்சுகளில் வார்த்துத் திரும்பவும் சூரியவெப்பத்தில் காயவைப்பார்கள். பாற்பாகு செம்பாகமற்றதாயிருக்கும். இந்த ஸ்திதியில் அதைத் தண்ணீரில் கரைத்து முட்டையின் வெள்ளைக் கருவைத் தெளித்து, சூரியபுடமிட்டுப்பாணியாகும் வரையும் காயவைத்ததின்மேல் அது வெண்ணிறமுள்ள சர்க்கரை மணிகளாகத்திரளும். இதைத்தான் வைத்தியர் ஔஷதமாகப் பிரயோகிப்பார்கள். இச்சர்க்கரை மணிகள் தண்ணீரில் கரையும் இயல்பினையுடையன வாகவும், மிதமான ருசியுள்ளவைகளாகவும் இருக்கின்றன.



திராட்சரசமுதலிய மதுபானங்களைப்போல் பொங்கி நுரைக்கத்தக்கசக்தி இப்பண்டத்திற்கில்லாததால், ஓர் ரசாயனசாஸ்திரி இது பாற்பாகு என்றழைக்கப்படுவது சரியல்லவென்றும், இதுசரியான சர்க்கரையாயிருப்பது கூடாதென்றும் ஆட்சேபித்தார். இதுகாரணத்தால் சிலர் பாலிலிருந்து லாகிரியுள்ளபானம் எடுப்பது கூடாதென்று எண்ணினார்கள்.

ஆயினும் தர்த்தாரியர், கால்மக்ஸ் என்னும் ஜாதியாரால் உபயோகிக்கப்பட்ட ஆர்க்கி, அராபியர் பிரயோகித்த லாபான், துருக்கியர் பருகிவந்த யோவர்ட் என்னும் லாகிரியுள்ள பானங்கள் பாலிலிருந்தே எடுக்கப்பட்டனவாய் அத்தேசங்களுக்குப் போயிருந்த பிரயாணிகளில் பலர் சாட்சியிட்டதால், ஆசரெற்ஸ்கவுக்கி என்கிற உருஷியரசாயனசாஸ்திரி இதின்உண்மையைப் பரிசோதிக்கமுயன்று கடைசியாய் வெண்ணெயும் பாலாடைக் கட்டியும் பாலிலிருந்து நீக்கப்பட்டபின்பு லாகிரியுண்டாகத்தக்க பொங்குந்தன்மை அதற்கில்லை என்றும், பாற்பாகெல்லாம் தயிர்த்தண்ணீராகிய வெண்ணீரிலேயே கலந்திருந்தபோதிலும் அதில் பிரையூற்றினாலும் அது நுரைக்கிறதில்லை என்றும் கண்டுபிடித்தார்.

பாலில் கலந்திருக்கிற எண்ணெய்ப்பசையுள்ள சத்து, எங்கும் வழக்கமாயிருக்கிறபடியால் பாலைக்கடைவதால் அதினின்று பிரித்தெடுக்கப்படுகின்றது. பாலைக்கறந்து அதைக்கொஞ்சநேரம் ஓர் பாத்திரத்தில் வைத்திருந்தால் அப்பாலின்மேல் ஓர்வித ஆடை பற்றுகின்றது. அந்த ஆடையை எடுத்துப்போட்டு அப்பாலைக் கொஞ்சநாள் வைத்துவைப்போமானால் அப்பாலில் கலந்து அதைப் புளிப்பாக்கும் சத்துவாகிய ஓர் ஜயநீர் அளவில் அதிகப்படுகின்றது. மேற்படி பாலைப் புட்டியில்விட்டு குலுக்குவதினால் வெண்ணெயின் அணுக்கள் ஒரு கூட்டமாய்ச்சேர மோர் கீழேதங்கி நிற்கின்றது.

ஓர்விதத் திராவகத்தைப் பாலில் கலப்பதால் அதிலுள்ள வெள்ளைக்கருச்சத்து பிரித்தெடுக்கப்படுகிறது. அது பிரிக்கப்பட்ட பின்பு ஒன்றாய்த்திரண்டு தயிராகிறது. பாலாடைக்கட்டிசெய்வதுஇத்தயிரை இறுகச்செய்வதால்தான். இத்தயிர் நீக்கப்பட்டபின்பு பாலில்கலந்திருக்கும் ஜலம் தயிர்த்தண்ணீராகிய வெண்ணீராகும்.

ருஷியதேசத்து ரசாயனசாஸ்திரி ஒருவர் பால் கெட்டுப்போகாமல் அதை வெகுகாலத்திற்கு வைத்துக்கொள்வதற்கு விநோதமான முறை ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது, பால் பொடியாகுமட்டும் அதை வெயிலில் வைத்து உலர்த்தி, அப்பொடி

யைப் புட்டியில்போட்டு காற்று உட்செல்லாதபடி அப்புட்டிகளுக்குக் கார்க்கு (குச்சு) ப்போட்டு இறுக்கி, கம்பிகளால் கட்டவேண்டும். இப்படிச் செய்வதால் பாற்பொடி வெகுகாலத்திற்குக் கெட்டுப்போகாதிருக்கும். இப்பொடியைச் சரியான அளவுப்படி தண்ணீரில் கலக்குவதா லுண்டாகும் பால் இப்பொழுதுதான் கறந்த பால் போலிருக்கும். அநேக பிரயாணிகளும் கப்பல் யாத்திரை செய்பவர்களும் தங்களுக்கிருக்கிற ஆகாரங்களுடன் எங்கும் கொண்டு போகத்தக்கதும், வெகுகாலமட்டும்கேட்டுப்போகாதிருப்பதுமான இப்பாற்பொடிகளும் தங்களுக்கு கிடைத்திருப்பதால் மிகவும் சந்தோஷ முடையவர்களா யிருக்கிறார்கள். –

இன்னும் ஒருவகையாயும் பாலைக் கெட்டுப்போகாமல் வைத்து வைக்கலாம். பாலைப்புட்டிகளில் வார்த்து கார்க்கு (குச்சு) ப்போட்டடைத்துக் கம்பிகளால் இறுக்கிக்கட்டி அதைக் குளிர்ந்த ஜலத்தில் வைத்திருக்கவேண்டும். இவ்விதமாய்ப் பாகம்செய்யப்பட்ட பால் இரண்டொரு வருஷமட்டும் கெட்டுப்போகாதிருக்கும்.

சில பெரிய பட்டணங்களில் பால் அதிகமாய்ச் செலவாகிறபடியால் அப்பட்டணங்களில் வாசம்செய்யும் பால் வியாபாரிகள் பாலோடு சில வஸ்துக்களைக் கலந்து இவ்விதமாய்ப் பாலின் சுயமான தன்மையைக் கெடுத்து விற்பனை செய்கிறார்கள்.

லண்டன் பட்டணத்துப் பால் வியாபாரிகள் ஒரு விதவிளைசுண்ணும்பையும், கோதுமைமா முதலியவற்றையும் பாலில் கலந்து விற்பதாய்க் கேள்வி. முக்கியமாய் அவர்கள்பாலோடுதண்ணீர்கலப்பது யதார்த்தம். மேற்படிவிளைசுண்ணும்பு பாலில் கரையக்கூடிய தன்மையற்றதாயிருப்பதால் அது பாலில்கலந்து விற்கப்படக்கூடிய வஸ்துவல்லவென்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். பாலானது கோதுமைமாவோடுகலந்து விற்கப்படுகிறதென்பதை ஒருவாறு நம்பலாம். பாலில் விசேஷமாய் ஜலம்விட்டுக் கலந்து சரியான ருசியுண்டாவதற்கு அளவுப்படி அதில் சர்க்கரையைக்கரைத்து, ஒருபாத்திரத்தில் வைத்துக்கொண்டு, சலத்தில் கலக்கிய கோதுமை மாவை அடுப்பில் வைத்துக் காய்ச்சியதனாலாய பசைமேற்கூறிய பாத்திரத்திலுள்ள ஜலங்கலந்த பாலில் ஒன்றிப்போகும் இயல்பினை உடைத்தாயிருப்பதனால் அப்பசையை அதனுடன் கலந்து விடுகிறார்கள்.

(இன்னும் வரும்)

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 18 MAY 1907 MADRAS.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர் கட்கெனவே உலவிவரும்
மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 2. | 1907 ஞு ஜெநுவரி மீ | மாதம் 8.

## THE MADRAS EDUCATIONAL CONFERENCE.

## சென்னை கல்வி ஆலோசனை சபை.

(151-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஜெர்மன் தேசத்திலும் இங்கிலாந்தின் சிங்காரத் தோட்டங்களிலும் பிள்ளைகள் விளையாடுவதற்காக ஒருபாகம் ஏற்படுத்தப்பட்டு மணலினால் நிரப்பப்பட்டிருக்கும். இது, பிள்ளைகள் விளையாடவும் தங்கள் மனத்தில் தோன்றிய வண்ணம் வீடு முதலியவைகள் கட்ட உபயோகமா யிருப்பது மன்றித் தமக்குண்டான ஆவலை பூர்த்தி செய்து கொள்ளவும் ஏற்றதாகின்றது. இம்மாதிரியான முறையை நமது இந்தியநாட்டுப் பாடசாலைகளின் தோட்டங்களில் மிகச் சுலபமாய்ச் செய்துகொள்ளலாம். சாதாரணமாய் நிழலுள்ள இடத்தை கடற்கரையேபோல மணலிட்டு நிரப்பிப் பிள்ளைகளுக்கு உபயோகமாகும்படி செய்யலாம்; அன்றியும், தோட்டம் வீடு முதலியவைகளும் அமைக்கலாம். மேலும் மாணுக்கர்கள், மலைகள் நதிகள் தீவுகள் முதலிய மாதிரிகளை மணலினால் செய்து பழகுவதால் பூகோள பாடத்தின் இயற்கை யமைப்புகளைக் கற்கவும் ஏதுவாகும்.

இவ்விஷயத்தில் யாருக்காவது சந்தேக முண்டாயின் சென்னை கடற்கரைக்குப் போய் அவ்விடத்தில் ஆங்கிலேயப் பிள்ளைகளும், இந்தியப் பிள்ளைகளும் செய்யும் விஷயங்களைப் பார்த்தால் இச்சந்

தேகம் நிவர்த்தியாகும். நல்ல கின்டர்கார்டன் முறைக்கு மணல் விளையாட்டும் களிமண் உருச்செய்தலும் முக்கியமா யிருப்பது போல் சித்திரம் வரைதலும் இன்றியமையாததா யிருக்கின்றது. காகிதம் கத்தரித்தல், அட்டை வைத்தல், பாய் பின்னல், காகிதம் மடித்தல் முதலியவைகளைப் போன்ற தொழில்களைக் கற்பிப்பதில் உபாத்தியாயர்களில் அநேகர் மிக்க கவலை செலுத்துகின்றனர். இவ் விஷயங்களை நன்குபயின்ற நல்லாசிரியரொருவரிடத்துக் கற்பது மிக்க இன்பகரமாயிருப்பினும் இவை மற்றெவ்விதத்தினும் முக்கிய உபயோகமுள்ளனவாகக் காணப்படவில்லை. உண்மையாய், இத் தொழில்களின் பெரும்பாகத்தைக் கின்டர்கார்டன் முறையை ஆரம்பஞ் செய்யும்போதகாசிரியர்கள் கையாடாமலிருப்பதே நலம். இக் காலத்திலும் சில பாடசாலைகளில் சித்திரம் வரையும் பாடத்தைக் கையாடாமலே யிருப்பதாக எண்ணுகின்றேன். பாடசாலைப் பிள்ளைகளுக்கு இயற்கையிலேயே இப்பாடத்தில் ஊக்கமுண்டானால் உபாத்தியாயர் தங்களைக் காணாதபோதும் கற்கக்கூடியவர்களாவார்கள். முற்காலத்தில் ஒரு பிள்ளை கிழவன் என்று சொல்லக்கூடிய ஓர் உருவத்தை எழுதக்கண்ட உபாத்தியாயர் அப்பிள்ளையின் துன்மார்க்க தன்மைக்காக நிந்திப்பது வழக்கம். இக்காலத்திலோ அறிவுள்ள உபாத்தியாயர்கள் அப்பிள்ளைக்கு சித்திரம் வரைவதில் அவாவுண்டென் றறிந்து பழக்கமான வஸ்துக்களையும் ஜந்துக்களையும் எழுதப் பழகுவிப்பார்கள். இம்மார்க்கத்தால் பிள்ளைகள் வாயினாற் சரிவர விளக்கக் கூடாத விஷயங்களை வரைந்து காட்டி நன்றாய் நிரூபிக்கலாம். பிள்ளைகள் படங்களைத் திருத்தமாய் வரைய நாம் எதிர்பார்த்தல் கூடாது. மேன்மையான வேலையை அடைய வேண்டுமென்பதும் இப்பாடத்தின் நோக்கமன்று. ஆனால் பிள்ளைகள் தங்கள் பழைய பாடத்தில் கற்றதையாவது, நேரில்கண்டதையாவது கடிதத்தில் எழுதித் தெரிவிக்கத் தூண்டுவதே இப்பாடத்தின் நோக்கமாம். பிள்ளைகள் சித்திரமே தமக்கு வேலையாக வுடையவர்களைப்போல் பழகினவர்களல்ல. ஆகையால், எவ்விதக் குறைவுமின்றி வரைய வேண்டுமென்னும் நோக்கம் உபாத்தியாயர் கொள்ளுதல் கூடாது. உருக்கள் செய்யும் பாடத்தில் பிள்ளைகள் சித்திரக்காரர்களைப்போல் பழகினவர்களல்ல. நாமும் அவர்கள் செய்யும் வஸ்துவின் சரியான மாதிரியை எதிர்பார்த்தல் கூடாது. ஆனால், அவர்கள் செய்யும் உருக்களின் தன்மையை அவர்களே பார்த்து உணரும்படி செய்ய வேண்டும். இது நிற்க,



"இவ்வித நூதன முறைகளைக்கொண்டு கற்பிப்பதினால் அடையக் கூடிய பயன் இன்னதென விளங்கவில்லை. பழைய மார்க்கங்களே தனக்கும் தன் முன்னோர்களுக்கும் போதுமானவையா யிருந்தனவென்றும், ஏன் வித்தியா அதிகாரிகள் சிறுவர்களின் கல்வி விஷயத்தில் இவ்விதமான குழப்பங்களை செய்கின்றனர்," என்றும் சிலர் சொல்லுகின்றனர். கின்டர்கார்டன் முறை நூதன மல்லவென்பது ஒரு புறமிருக்க, இவ்வித வேறுபாட்டைப் பேசுபவர்களின் தன்மை வியப்பா யிருக்கின்றது. முற்காலத்தில் நமது முன்னோர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நடந்தும் வண்டியிலும் சென்றனர்; சௌகரியமாய் போக்குவரவுக்குரிய மோடார் கார், ரயில்வண்டி முதலிய சாதனங்கள் ஏற்பட்ட இக்காலத்தில், இவ்வித வேறுபாடுகளைப் பேசுபவர்கள் தங்கள் முன்னோர்கள் அநுசரித்தவண்ணம் கையாடாமலிருப்பதைக்காண வியப்படைகின்றேன். மற்றெல்லா மார்க்கங்களிலும் விருத்தியடைந்திருப்பதுபோல கல்வியிலும் விருத்தியாகவேண்டுமல்லவா? கின்டர்கார்டனில் புதிய விஷயம் ஒன்றுமில்லை. போதகாசிரியர்களான நாம் மிக்க அறிவடைந்து நமது பிள்ளைகளை இயற்கைத் தன்மைக்கு விரோதமாய் கற்பிப்பது பயனற்றவை என அறிகின்றோம். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை கின்டர் கார்டன் முறையில் கற்பிக்கிறார்கள். இதனால் பிள்ளைகளே விஷயங்களை அறிய வேண்டுமென்பதே இம் முறையின் கருத்தென்பது இதன் தேற்றப் பொருளாம்."

---

பிறகு, மிஸ்டர் C - M - பாரோதுரையவர்கள் கின்டர்கார்டன் விஷயமாய் அறியக் கூடியவர்கள் சிலர் தானென்றும் தான் டீசர்ஸ் காலேஜுக்குச் சென்று 10 தினத்தில் கின்டர்கார்டன் போதனைமுறையிலுள்ள அநேக நன்மைகளை அறிந்ததாயும் சொல்லினர். மேற்கண்ட காலேஜில் கின்டர் கார்டன் போதனைக்காகவே சீர்மையிலிருந்து வரவழைக்கப்பட்ட மிஸ் கில்லிங்காம் அம்மாளது முயற்சியால் சிறந்த வேலைப்பாடுகளமைந்த தொழில்கள் நடைபெற்று வருகின்றனவென்றும் இப் மாது கின்டர்கார்டன் புத்தகம் ஒன்று கூடிய சீக்கிரத்தில் வெளியிடுவாரென்றும் பேசினர்.

பின்பு ம-ா-ா-ஸ்ரீ K. B. ராமநாத ஐயரவர்கள் கின்டர்கார்டன் போதனைமுறையில் பிள்ளைகள் அடைந்த நன்மைகளைப்பற்றி தனக்குப் போதுமானநம்பிக்கை யுண்டென்று சொல்லினர்.

கடைசியாக, மிஸ் கில்லிங்காம் அம்மாளுக்கு வந்தனோபசாரம் சொல்லி, அவ்விடத்தில் வீற்றிருந்தவர்களில் ஒருவர் கேட்டுக்கொண்ட வண்ணம் சிலர் டீசர்ஸ்காலேஜிலுள்ள கின்டர்கார்டன் மார்கத்தை பார்க்க கடந்த டிசம்பர் மீ 19உ புதன்கிழமைபோவதாய் பேசி முடித்தனர்.

---

## HOW TO TEACH ARITHMETIC.

### எண்முதல் விளக்கம்.

(163-ம் பக்கத்தொடர்ச்சி)

அதாவது முன்போலவே கோபுரம்போல் புள்ளிகளைப் போட்டு இதனடியில் காட்டியிருக்கிறப்போல் இரண்டு புள்ளிகளை, அல்லது மூன்று புள்ளிகளை வட்டவடிவமாய் இருக்கும் வரியால் சேர்க்கச்சொல்லலாம்.

இப்படி சேர்ப்பதால் ஆறும்வரியில் இத்தனை இரண்டு இருக்கிறதென்றும், ஒன்பதாம் வரியில் இத்தனை மூன்று இருக்கிறதென்றும், சில வரிகளில் வட்டத்தில் கூட்டக் கூடாமல் ஒரு புள்ளி தனித்து நின்று போகிறதென்றும் சிறுவனுக்கு நன்றாய் விளங்கும். முன் பாடங்களிலேயே ஒற்றை இரட்டை என்கிற விஷயத்தை விளையாட்டு மூலமாகத் தெரிவித்து இருக்கலாம். எப்படியெனில் சில பலகறைகளை ஒரு பிள்ளையை இரண்டு கைகளில் மூடிவைத்துக் கொள்ளச்சொல்லி, மற்றொருவனை எந்தக்கையில் ஒற்றையாய் இருக்கிறது, எந்தக்கையில் இரட்டையாய் இருக்கிறதென்று கேட்கச் சொல்லலாம். இப்படி விளையாட்டில் தெரிவிக்கத்தக்க விஷயங்களை சிறு வயதில் பாடமாகச் சொல்லவே கூடாது. இப்படியே புள்ளிகள், வட்டவரிகள் முதலானதுகளைக்கொண்டு தாய்தந்தைகள் வினவுகிற தொந்தரவில்லாமல் பிள்ளைகளுக்குக் கணக்குச் சொல்லிவைக்கலாமல்லவா? இதற்கு உதாரணம் கற்பலகையில் இதனடியில் கண்டிருக்கிற மாதிரி எழுதிக்காட்டிச்

சிறுவனை பார்த்தால், அவன் வழக்கப்பட்டிருப்பதினாலே மூன்றும் ஒன்றும் நாலு என்றும்,

அல்லது நாலும் மூன்றும் ஏழு என்றும்,

ஐந்திலே இரண்டுபோனால் மூன்று என்றும்,



எட்டிலே நாலுபோனால் நாலு என்றும் சொல்லுவான்,

சிறுவர்களுக்குக் கற்பிக்கும்போது அவர்கள் கேட்கிற அளவற்ற கேள்விகளுக்கு விடைசொல்லுகிற வருத்தத்தை அறிந்திருப்பவர்களுக்கு மேற்குறித்த மாதிரியாய் வார்த்தை சொல்லாமலே வினாக்களைக்கேட்கச் சந்தோஷமாயிருக்கும். இடையில் மௌனத்தைவிட்டு, சிலவினாக்களை வாக்கினாலும் கேட்டால், மௌனத்தினால் உண்டாகும் வெறுப்புச் சிறுவர்களுக்குத் தோன்றமாட்டாது.

மேலே காட்டியிருக்கிற பிரகாரம் எண்களைப் புள்ளிகளாலாவது, இன்னும் சுலபமான வேறு அடையாளங்களாவது பலகையில் குறித்துக் காண்பிக்கும்படி செய்வதால், வஸ்துக்களைச் சில சங்கேதக் குறிகளால் அறிந்துகொள்ளலாமென்று சிறுவர்களுக்குத் தெரிவதுந் தவிர, பாடஞ் சொல்லும்போது அவர்கள் கவனிக்கத்தக்க காரியங்கள் அனேகத்துக்கு இடமும் உண்டாகிறது. இது முக்கியமான விஷயம். ஏனென்றால் சிறு குழந்தைகளுக்கு ஒரு வேலையுமிடாமல் கைகால்களை அசைக்கவொட்டாமல் ஒரே இடத்தில் இருக்கும்படி செய்வோமாகில், உடனே வெறுப்பு உண்டாய், “நம்மைக் கட்டிலிருந்து எப்போது விட்டுவிடுவார்கள், நாம் இந்த இடத்தைவிட்டு எப்படித் தப்பித்துக் கொண்டு ஓடிப்போவோம்” என்று நினைப்பார்கள். கைகால்கள் பரபரத்துக் கொண்டிருக்கிற சிறு குழந்தைகளை ஓரிடத்தில் நிற்கும்படி செய்யவேணுமானால், ஒரு விநோதமான கதையையாவது சொல்லவேணும் அல்லது அதிசயமான படங்கள்: அல்லது சித்திரப் பிரதிமைகளையாவது காட்டவேணும். இப்படிச் செய்தபோதிலும் பத்து நிமிஷத்துக்குள் அவர்களுடைய ஞாபகம் வேறு வியாபாரங்களில் பிரவேசிக்கும். இந்தச் சொற்பகாலத்தில் கைக்கு எட்டின வஸ்துகளையெல்லாம் தொட்டுத் தொட்டுச் சேஷ்டை செய்வதை நாம் பார்த்துப் பார்த்து அதிசயித்திருக்கிறோம். தொடவேண்டாமென்று எத்தனை தரம் சொன்னாலும் அதை மறந்து போகிறது குழந்தைகளுடைய சுபாவம்.

மேற்காட்டிய புள்ளிகளைப் போட்டு வைப்பதினால் இன்னம் ஒரு பிரயோஜனமுண்டு. அதாவது பாடம் ஆரம்பித்து முடிப்பதற்குமுன்னே பலதரம் பத்துச் சுழிகளை வரி வரிவாய்ச் சுழிக்க வேண்டியிருந்தால், சிறுவர்கள் அலுத்துப்போகிறதற்குச் சந்தேகமில்லை. அப்படி அலுப்பு உண்டாகிற சமயத்தில் எண்களைச் சுருக்கமாய் எழுதிக்காட்டுவதற்கு வேறு சில அடையாளங்கள் அகத்தியமாய் வேண்டியிருக்கிறதென்பதை அவர்களுக்குத் தெரி

வித்து, பிறகு பலகறை, கிளிஞ்சல், அடிக்கோல், அளவுகுண்டுகள், ஏணி, சுழிகள் முதலான பொருள்களை வைத்துக்கொண்டு கேட்கும் வினாக்களுக்குத் தப்பிதமில்லாமல் விடைகள் சொல்லத்தெரிந்தால், அப்போது ஒரு எண்ணில் எத்தனை ஒன்று இருக்கிறதோ அத்தனை சுழிகள் சுழிக்காமற் சுருக்கமான குறிகளை உபயோகிக்கக் கற்பிக்கப் போகிறதாயும் அவர்களுக்குச் சொல்லவேண்டியது.

இதுவரையிற் சிறுவனுக்குக் கற்றுக்கொடுத்த விஷயங்களில் அவனுக்குப் பூரணஞானம் உண்டாகும் பொருட்டு இன்னும் சில வினாக்களை இதனடியில் கேட்டிருக்கிறது. இந்த வினாக்களையும் இதற்குமுன்னே கண்டிருக்கிற வினாக்களையும் கேட்டிருக்கிற மாதிரியைக்குறித்து இந்த இடத்தில் ஒரு விசேஷம் சொல்லவேண்டும்.

அதாவது, சாதாரணமாய்க் கணக்குப் புஸ்தகங்கள் இதனடியில் குறித்திருக்கிற மாதிரி பல வினாக்கள் போட்டிருக்கிறது வழக்கம்.

“சுந்தரம் என்பவன் ஒரு வாரத்தில் நாலுதினம் பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் தெருத்திரிந்துக் கொண்டிருந்தான். இரண்டாம் வாரத்தில் மூன்று தினம் போகவில்லை. ஆக எத்தனை தினம் சுந்தரம் பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லை?”

இப்படிப்பட்ட வினாக்களைக் கேட்கக்கூடாதென்று நமக்குத் தோன்றுகிறது. ஏனென்றால் இந்த வினாவைக் கேட்டமாத்திரத்தில் சிறுவன் சுந்தரம் என்கிற பேர் உதாரணத்துக்காக வரவழைத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதென்று தெரிந்துகொள்ளாமல் சுந்தரம் என்கிற பிள்ளை அத்தனை தினம் பள்ளிக்கூடத்துக்குப் போகாமலிருந்தானென்று வினவிக்கொள்வான்.

எத்தனை தினம் சுந்தரம் பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லை என்பதை யோசிக்காமல், சுந்தரம் ஏன் பள்ளிக்கூடத்துக்குப்போகவில்லை? வியாதியினாலே நின்றுபோய் விட்டானா? அல்லது அவன் துஷ்டப்பையனா? அந்தப் பையன் எந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போகிறான்? அவன் வீடு நாம் இருக்கும் இடத்திற்குச் சமீபத்தில் தான் இருக்கிறதோ? சுந்தரத்தை நீர் பார்த்திருக்கிறீரா? என்று மிகுந்த அக்கறையுடன் விசாரிப்பான். சொல்லப்பட்ட பாடம் ஒன்றாயிருக்க, சிறுவன் கேட்கிற விஷயம் வேறாயிருப்பதும் தவிர அந்தச் சுந்தரமென்கிற பையனை நான் அறியேன்; திருஷ்டாந்தத்



துக்குக்காகச் சுந்தரம் என்கிற பெயரைக் குறித்திருக்கிறது; இப்படிப் பிள்ளைகள் அடிக்கடி நின்று போகிறதுண்டு; என்று சிறுவனுக்குச் சொன்னால், அவன் தான் மோசம்போனதாய் நினைப்பான். அவனுக்குப் பிறகு என்ன சொன்னாலும் அஸ்வாரஸ்யம் உண்டாகிவிடும். பாடஞ்சொல்லிக் கொடுப்பவரிடத்தில் அவநம்பிக்கை உண்டாய், பிறகு எந்தச் சமாசாரம் சொன்ன போதிலும் சந்தேகப்பட்டு அதை யதார்த்தம் தானாவென்று கேட்பான். ஆகையால் நாம் இப்புத்தகத்தில் குறித்திருக்கிற கேள்விகளைக் கேட்கும்போது பிள்ளைகளுக்குச் சந்தேகம் தோன்றாமலிருக்கும்படி ஏற்படுத்தி இருக்கிறோம். எந்த வினாவிலாவது பேர்கள் வந்தால், எந்தச்சிறிய கணிதபுஸ்தகத்தை உபயோகிக்கப் போகிறவர்கள் அவைகளை மாற்றித் தங்கள் தங்கள் பிள்ளைகளுக்கு அனுகூலமாய் இருக்கிறவர்களுடையபேர்களைப் போட்டுக்கொள்ளவேண்டியது. உன்னுடைய தம்பி சுந்தரம் ஒரு வாரத்தில் நாலு தினமும் மற்றொரு வாரத்தில் மூன்று நாளும் பள்ளிக்கூடத்துக்குப் போகாமல் தெருத் திரிந்துகொண்டிருந்தால்; ஆக இரண்டு வாரத்திலும் எத்தனைதினம் போகவில்லை?

உன்னிடத்தில் ஆறு பலம் கற்கண்டு கொடுத்து உன்னுடைய சிறிய தராசினால் உன் மூன்று சகோதரர்களுக்கு ஒவ்வொரு பலமும் எனக்கு இரண்டுபலமும் நிறுத்துக்கொடுக்கும்படி சொன்னால், உன் பங்குக்கு எவ்வளவு நிற்கும்?

உன்னுடைய ஓரடிக்கோலால் இந்த மேஜைப்பலகையின் நீளம் அகலத்தை அலந்து பார், எத்தனை அடி நீளம்.

எத்தனை அடி அகலம்.

உன்னுடைய ஓரடிக் கோலில் நடுவில் மூன்று கீற்று என்கிழித்திருக்கிறது?

(அரையடி, காலடியைக் காட்டுவதற்காக) ஒன்றரை அடியை அளந்துகாட்டு?

ஒன்றேமுக்கால் அடியை அள?

இரண்டு அடி எவ்வளவு?

கஜக்கோலை எடு, அது எத்தனை அடி நீளம்?

ஒரு ஜோடு பாதரக்ஷை என்றால் எத்தனை பாதரக்ஷை?

ஒரு சோடு வேஷ்டியென்றால் எத்தனை வேஷ்டி?

இரட்டைக்குதிரை என்றால் எத்தனை குதிரை ?

தம்பதி என்றால் என்ன ?

இரண்டு ஜோடு கடுக்கன் என்றால் எத்தனை கடுக்கன் ?

ஐந்து இரட்டைக் குதிரைவண்டியில் எத்தனை குதிரை கட்டி இருக்கவேண்டியது ?

ஒருவன் நாலு தம்பதிகளுக்கு விருந்திட்டானென்றால் எத்தனை பேர் விருந்து சாப்பிட்டிருக்கவேணும் ?

எத்தனை சால்வைகள்சேர்ந்து மூன்று ஜோடி ஆகிறது ?

ஆறு கிச்சிலிப்பழத்தில் பாதி என்ன ?

நாலு மாம்பழத்தில் பாதி ?

இரண்டு தேங்காயில் பாதி ?

எட்டு நாவற் பழத்தில் பாதி ?

பத்துப் பலாப்பழத்தில் பாதி ?

ஆறு, நாலு, எட்டு, பத்து இந்த எண்கள் ஒற்றை எண்களா, மாட்டைஎண்களா ? ஒருகோதுமை அடையை இரண்டு சரிப்பாக இரகப் பிட்டால்ஒவ்வொன்று எவ்வளவு ?

அதை நாலுசரிப்பாகமாய்ப் பிட்டால், அப்போது ஒவ்வொரு பாகம் எவ்வளவு ?

இந்தக் காகிதத்தை நாலு சரித்துண்டுகளாகத் தரித்தால், ஒரு துண்டு காகிதத்தில் எவ்வளவு பாகம் ? (நாலிலொருபாகம்)

மற்றொரு காகிதத்தில் மூன்று சரிப்பாகங்களாகத் தறித்து, ஒரு பாகத்தை உனக்குக் கொடுத்தால், அது எவ்வளவு பாகம் ? (மூன்றிலொன்று)

எட்டு வாழைப் பழத்தில் கால் பங்கு எத்தனை ? (நாலத்தொன்று)
எட்டுக் கொய்யாப்பழத்தில் கால் பங்கு எத்தனை ?

எட்டுப் பலத்தில் கால் பங்கு எவ்வளவு ? அல்லது நாலத்தொன்று எவ்வளவு ?

ஆறு பலத்தில் மூன்றத்தொன்று எவ்வளவு ?

பத்துப் பலத்தில் அரைப்பங்கு எவ்வளவு ?

ஒரு கசத்தில் மூன்றத்தொன்று எவ்வளவு ?

நீ தினந்தோறும் காலை சாயங்காலம் இரண்டு வேளையிலும் அரை மைல் தூரம் நடந்துபோய்த் திரும்பி வீட்டுக்கு வந்தால் நாளொன்றுக்கு எத்தனை மைல் நடந்திருப்பாய் ?



ஒரு அணாவில் பாதி என்ன ?
ஒரு அணாவில் நாலத்தொன்று என்ன ?
ஒரு அணாவில் எத்தனை காலணா இருக்கிறது ?
எத்தனை பைசா சேர்ந்தால் ஒரு துக்காணி ?
காலணாவுக்கு எத்தனை பைசா ?
அரையணாவுக்கு எத்தனை ?
முக்காலணாவுக்கு எத்தனை ?
ஐந்து பலத்துக்குப் பிரதி எவ்வளவு !
மூன்று பலத்துக்கு ?
ஏழு பலத்துக்கு ?
ஒன்பது பலத்துக்கு ?
ஒன்பது மைலில் மூன்றத்தொன்று என்ன ?
பத்தில் எத்தனை இரண்டு இருக்கிறது ?
எத்தனை மூன்று ?
எத்தனை நாலு ?
எத்தனை ஐந்து ?
எத்தனை ஒன்று ?
ஒருவாரத்தில் எத்தனை கிழமை இருக்கிறது ?
கிழமை களின் பேர் என்ன ?
முதல் கிழமை ?
மூன்றாம் கிழமை ?
ஏழாம் கிழமை ?
இரண்டாம் கிழமை ?
ஐந்தாம் கிழமை ?
நாலாம் கிழமை ?
ஆறாம் கிழமை ?

ஒரு வருஷத்தில் முதலாறு மாசங்களுக்கும் பேரென்ன ?

வைகாசி எத்தனை யாவது மாதம் ? ஆடிஎத்தனையாவது ? சித்திரை ? ஆனி ? புரட்டாசி ? ஆவணி ?

மூன்று ஏழைப்பிள்ளைகளுக்கு எட்டுத் துக்காணியைச்சரியாய்த் தானம்பண்ணமாட்டுவாயா ?

இரண்டு பிச்சைக்காரருக்கு ஐந்து அணாவைச் சரியாய்ப் பங்கிட்டால், ஒவ்வொருத்தருக்கு எவ்வளவு வரும் ?

ஆறு அணாவுக்கு நாலு மாம்பழம் வாங்கினால், ஒரு பழத்துக்கு என்ன கிரயம் ?

இரண்டுபேர் கூட்டாகப் பத்து அணாவுக்கு ஒரு கூலிவண்டி வைத்துக்கொண்டு திருநாளுக்குப் போனால், ஒவ்வொருவன் வண்டிக்காரனுக்கு எவ்வளவு கொடுத்திருப்பான் ?

சோமு, மாணிக்கம், சுந்தரம், ஜானகி இவர்கள் ஏழைகளுக்கு இரண்டு அணாவீதம் வருஷப்பிறப்பு அன்றைக்குக் கொடுத்தார்கள்; ஆக எவ்வளவு கொடுத்தார்கள் ?

ராமலிங்கம் என்பவன் பொங்கல் பண்டிகையின்போது தன் மூன்று சகோதரிகளுக்கும், தன் தாய்தந்தைமார்களுக்கும், மூன்று அத்தான்மாருக்கும் புது வஸ்திரம் வாங்கி வெகுமதிசெய்தான். ஆக எத்தனை வெகுமானங்கள் கொடுத்தான்.

சிங்காரம் ஆறு மைனாக்குருவிகளும், ராஜம் நாலும்கூண்டுகளில் வைத்து வளர்த்தார்கள். ஒருநாள் ஒவ்வொரு கூண்டிலிருந்து மூன்று குருவி பறந்து ஓடிப்போய்விட்டால், சிங்காரத்தின் கூண்டில் எத்தனை இருக்கும்?

ராஜத்தின் கூண்டில் எத்தனை இருக்கும்?

ராமன் ஒரு கூண்டில் ஐந்து முயலும், மற்றொன்றில் நாலு கோழிக்குஞ்சும் வைத்துவளர்க்க, ஒரு தினம் மூன்று குஞ்சு முசற் கூண்டில் போய்ப் புகுந்துகொண்டது. ஒவ்வொரு கூண்டிலும் எத்தனை ஜெந்துக்கள் இருக்கும்?

## MILK.

## பால்.

(163-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பாரிசிய பால்வியாபாரிகள் பாலில் ஓர்விதக் கலப்புச்செய்ததாகவும், அக்கள்ளத்தனத்தைப் பரிசோதனை செய்யுமளவில் அவர்கள் ஒரு பிராங்கு செலவிட்டுப் பால்நிறமுள்ள வாதுமைக்கொட்டையை வாங்கி அதை அரைத்து ஏறக்குறைய முப்பது புட்டித் தண்ணீரில் கலந்து அதைப்பாலாகமாற்றினதாகவும், நாளாவர்த்தியில்வாதுமைக் கொட்டையிலும் சொற்பவிலைக்குக் கிடைக்கக்கூடிய சணற்பருப்பை உபயோகித்துக் கள்ளத்தனம் கண்டுபிடிக்கும்வரையில் கொஞ்சம் பாலில் இவ்வித வஸ்துக்களைக் கலந்து அதைப் பெருக்கி விற்றுவந்ததாகவும், பரூவல் என்பவர் சில வருஷங்களுமுன் பாலைக்குறித்துப் பிரசுரம்செய்த ஓர் பிரபந்தத்தில் சொல்லியிருக்கிறார். மேலும் அவர்களில் சிலர் பால் ஒருகாலும் புளியாதிருக்கும்படி அதைப்பாகப் படுத்தி விற்பதில் பேர்போனவர்களாயிருந்தார்கள். அவர்கள் தங்கள் வழக்கப்படி செய்த பாலோடு இலவணசாரமுள்ள கரித்திராவகத்தில் கொஞ்சம் சேர்ப்பதால், அது உறைந்து தயிராகாமலும் புளிப்பேறாமலும் காக்கப்படுகிறது.

பாலானது தனக்கே உரிய விசேஷருசியுள்ளதாயிருப்பதனால் மேற்கூறிய எவ்விதமான கலப்பாவது அதில் சேர்ந்திருக்குமாயின் அக்கள்ளத்தனத்தை எளிதில் கண்டுகொள்ளலாம்.



# THE LATE COL: OLCOT.

## கர்னல் ஆல்காட்துரையின் மரணமும் தகனமும்.

1907௵ பிப்ரவரி௴ 17௳ ஞாயிற்றுக்கிழமை காலை 7-17க்கு சென்னை அடையாரில் கர்னல் ஆல்காட் துரையவர்கள் (President-Founder Theosophical Society,) இறைவனது திருவடி யடைந்தார். அப்போது மிஸர்ஸ் அனிபெஸண்ட் அம்மாளும், மிஸர்ஸ் ரஸக் அம்மாளும், மிஸ். ரண்டெல் அம்மாளும், மிஸ். உல்சன் அம்மாளும் அவர்பக்கத்திலிருந்தார்கள். 16௳, 17௳ அடையாரில் நடக்கவேண்டிய பிரசங்கம் இதனால் நிறுத்தப்பட்டது. ஆல்காட் துரையவர்களுக்கு அடையாறு கட்டடத்திற்கு உள்ளேயே தன்னை தகனஞ் செய்யவேண்டு மென்று எண்ணமிருந்த படியால், இந்துக்களிலுள்ள வழக்கத்தைப்போல் பாடைகட்டி அதில் துரையவர் பிரேதத்தை வளர்த்தி, சபையின் பிராமண மெம்பர்களால் மெத்தையிலிருந்து கப்பிகளால் இறக்கப்பட்டு திரையிலுள்ள கூடத்திற்கு பிரேதம் கொண்டுவரப்பட்டது. பிளா வட்ஸ்கி அம்மாள் பதுமைக்கு அருகில் பிரேதத்தைவைத்தார்கள். பிரேதத்தைச் சுற்றி பூஞ்செடிகள் வைக்கப்பட்டன. பிரேதத்தின் தலைப்பக்கத்தில் 4 டீபாய்கள் போட்டு அவைகளில், வேதபுத்தகம், குரான் (Koran) பைபில் (Bible) இன்னும் பலதேவ சம்பந்தமான புத்தகங்கள் வைக்கப்பட்டன. பகல் 1 மணிக்கு ஜனங்களை உள்ளே விட்டார்கள். ஜனங்கள் துரையவர்கள் பக்திக்காகவும், பிரிவாற்றாமையாலும் புஷ்பமுதலிய வற்றை சமர்ப்பித்தார்கள். பகல் $3\frac{1}{2}$ மணிக்கு சடங்கு ஆரம்பித்தபோது ஜனங்களால் பூஜிக்கப்பட்ட புஷ்பம் குன்றைப்போல பிரேதத்தை மூடிக்கொண்டது. சடங்கு ஆரம்பித்தபோது Sir. S. சுப்ரமணிய ஐயர் அவர்களும், டாக்டர் நஞ்சுண்டராயர் அவர்களும், V. C. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களும், W. கோபாலாசாரியர் அவர்களும். V. C. சேஷாசாரியர் அவர்களும் V. சுந்தராம ஐயர் அவர்களும், A. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களும், Lt. Col. அர்கு ஹார்ட்(Lt. Col. Urguhcrte) அவர்களும் இன்னும் வெகுபேருமாகவிருந்தார்கள். அப்போது சிங்கள குருக்கள் ஒருவர் பௌத்தவேத பாராயணம் செய்தார். இது முடிந்ததும் ஒருவர் துரையவர்கள் பௌத்த மதத்திற்காக உழைத்ததைப்பற்றிபேசினார். இதன்பிறகு இந்துக்கள் இருவர் உபநிடதம்வாசித்தார்கள். இது முடிந்ததும் Sir. S. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் துரையவர்கள் இந்து மதத்திற்காக உழைத்ததைப்பற்றி பேசினார். பிறகு ஆர்ய

என்பவர் பார்ஸி பாஷையில் சில சுலோகங்கள் படித்துப் பிறகு துரையவர்கள் வர்த்தகத்தில் பார்ஸிகாரர்கள் ஊக்கங் கொள்ள வேண்டுமென முன் தூண்டின விஷயங்களை எடுத்துப் பேசினார் கிறிஸ்தவர்களுக்காக மிஸர்ஸ் ரஸக் அம்மாள் பைபில் படித்தார்கள்.

பிறகு அனிபெஸன்ட் அம்மாள் எல்லோருடைய மனமும் உருகும்படியாக துரையவர்கள் நடத்திவந்த விஷயங்களைப் பற்றி பிரசங்கம் செய்தார்கள். அவைகளை முற்றும் மொழிபெயர்த்தால் பெருகும். துரையவர்கள் ஒரு மதத்திற்கும் விரோதியல்ல வென்றும் சகல மதத்தாருக்கும் சிநேகர் என்றும் அவர் இஷ்டப்படியே சகல மத வேத புத்தகங்களும் தலைமாட்டில வைக்கப்பட்டதென்றும், துரையவர்கள் தமது குருநாதர்களுடைய கட்டளையை ஒரு காலத்து மீறி நடந்ததில்லையென்றும், அன்று காலை குருநாதர்களுடைய தரிசனம் துரையவர்களுக்கு கிடைத்ததென்றும், துரையவர்களுடைய ஆத்துமா ஸ்தூல சரீரத்தை விட்டு குருநாதர்களது ஆஸ்ரமத்தை யடைந்த தென்றும், அவர் வழியில் எல்லோரும் நடந்து சங்கத்தைவிருத்தி செய்யவேண்டுமென்றும், அவர் சூட்சும சரீரத்தோடு இருந்து இன்னும் சங்கத்தின் விருத்திக்காக, வேண்டிய காலங்களில் ஆலோசனைகள் செய்து உதவுவார் என்றும் பேசினார்கள்.

பிறகு இந்துமதக்கொள்கைக்கிணங்க பிரேதத்தைபிராமணர்கள் தூக்கிக் கொண்டு அத்தோட்டத்திலுள்ள பெரிய குளத்து வடகிழக்கு மூலையில் சந்தனமரம் முதலியவற்றால் அக்னிவளர்த்தி வேண்டியமட்டும் நெய்யைக்கொட்டி துரையவர்கள் பிரேதத்தை தகனஞ் செய்தார்கள். மறுநாள் காலைகுளக்கரையில் ஏற்படுத்தின சுடலைக்கு எல்லோரும்போய் தணலை அவித்து எலும்பை பொறுக்கி அதில் ஒருபாகத்தை பெட்டியில் அடக்கஞ்செய்து கங்கையில் போடும்படி காசிக்கு அனுப்பினார்கள். மற்றப்பாகத்தை சமுத்திரத்தில் சேர்த்தார்கள். சமுத்திரத்திற்கு அனிபெஸென்ட் அம்மாள் முதலியவர்கள் போனார்களாம்.

---



# TIT BITS.

## குரங்குப் பாலம்.

புதியவுலகமென்று பெயர்பெற்ற அமெரிக்கா கண்டம் இரண்டு பிரிவினை யுடையது. அவை, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா என்பனவாம். தென் அமெரிக்காவில் ஒருவகை வானரமுண்டு. அது சிறிது செம்மை கலந்த நீல நிறமுடையது. இவ்வானரத்திற்கு வால் மிகவும் நீண்டு உறுதியுள்ளதா யிருக்கும்.

ஒருகாலத்தில் இக்குரங்குகளில் பல ஒன்று கூடி ஓரிடத்தினின்றும் மற்றோரிடத்திற்குப் பிரயாணஞ் செய்யத் தலைப்பட்டு, அமேஜான் நதியின் கரைவழியாய்ச் செல்லுகையில் இடையில் ஓடையொன்று குறுக்கிட்டது. அவ்வோடையைக் கடந்து அக்கரை சேர்வது அவசியமென அவ்வானரங்கட்குப் புலப்பட்டதாயினும் அந்நீரோடை சுமார் இருபத்தைந்து அடியினும் அகன்றிருந்தமையால் அவற்றிற்கு அதனைக்கடப்பது அசாத்தியமென்றே புலப்பட்டது. அதனால் வானரங்கள் மனமுளைந்து ஒன்றுந் தோன்றாது மயங்கிநின்றன. நீரில் நீந்திச்செல்லும் ஆற்றல் வானரங்களுக் கில்லாமையால் அவை அந்நீரோடையைக் கடந்து செல்ல முடியாதெனத் தீர்மானித்தன.

சிறிது நேரத்தில் வானரங்களெல்லாம், ஓரிடத்திற் குழுமி ஓடையைக் கடக்க ஒரு சூழ்ச்சியை உன்னின. அக்கூட்டத்திலிருந்த சுமார் ஐம்பது வானரங்களில் பெரும்பாலன பெண் குரங்குகளாம். இவையன்றிச் சில குரங்குக்குட்டிகளு மிருந்தன. பின்னர் அவையனைத்தும், அருகில் ஓங்கி உயர்ந்துநின்ற விருக்ஷத்தின் உச்சியிலேறின. பிறகு அக்குரங்குக் கூட்டத்தில் தலைமை பூண்டிருந்த பெருவானரம் ஒன்று தன் தோழர்களை நோக்கி ஏதோ சில விஷயங்கள் சொல்ல, மற்றவானரங்கள் அவற்றை அமைதியோடிருந்து கேட்டுக் கொண்டிருந்தன. சில மந்திகள் குட்டிகளின வாயைத் தம் கையாற் புதைத்து, சிறிதும் அரவமின்றி அமைந்திருந்தன. தலைமைக் குரங்கு; தன் எண்ண முழுதும் வெளியிட்ட பின்பு, மற்றைய வானரங்களெல்லாம் தத்தம் கருத்துக்களைத் தலைவனுக்கு விண்ணம்பஞ் செய்வன போல் பேரிரைச்சலிட்டுக் கூவின. அக்காலத்து அக்கூடம் அரசனது மந்திராலோசனை சபையேபோல் காணப்பட்டது.

வானரங்கள் ஏறியிருந்த மரத்தின் கிளைகளில் ஒன்று நீரோடையின் குறுக்கில் சென்றிருந்தது. அவ்வகை மரம் எதிர் கரையிலும் ஒன்று இருந்தது. அவ்விரண்டு விருக்ஷங்களுக்கும் மத்தியில் சுமார் இருபது அடி இடைவெளி யிருக்கலாம். தலைக்குரங்கு எதிரெதிராயுள்ள அவ்விரண்டு கிளைகளையே நெடுநேரம் உற்று நோக்கிற்று.



முடிவில், அத்தலைக்குரங்கு ஒரு கட்டளையிடக் கேட்ட வலிய குரங்குகளெல்லாம் அம் மரக்கிளையின் நுனியில் வந்து சேர்ந்தன. சேர்ந்தவுடன், ஒரு குரங்கு அக்கிளையில் தன் வாலைச் சுற்றிக்கொண்டு தலை கீழாய்த் தொங்கிற்று. பின்பு, மற்றொரு குரங்கு முன் தொங்கிய குரங்கின் முன்னங் கால்களிலும் கழுத்திலும் தன் வாலைச் சுற்றிக்கொண்டு அதன் கீழ்த் தொங்கிற்று. இவ்வாறே ஒன்றின் கழுத்தில் மற்றொன்றின் வாலைச் சுற்றிக்கொண்டு அடிவரையில் தலை கீழாய்த் தொங்கின. இவ்வாறமைந்த குரங்குச் சங்கிலி, கடிகார யந்திரத்திலுள்ள லப்பம்போல் சிறிது சிறிதாக அசைந்து ஆடத் தலைப்பட்டது. கடைசியில், ஊக்கமாய் ஊசலாடிச் சங்கிலியின் இறுதியிலிருந்த குரங்கு எதிர்கரையிலிருந்த மரக்கிளையைத் தாவிப் பிடித்துக்கொண்டது. இதனால், இரண்டு மரங்களுக்கும் இடையே குரங்குப் பாலமொன்று ஏற்பட்டது. ஏற்படவே, எஞ்சிய குரங்குகளெல்லாம் குதூகலத்தாற் கூத்தாடிக் கூவத் தலைப்பட்டன.



தன் கருத்து முற்றியது கண்ட தலைக்குரங்கு அப்பாலத்தின் வழியாய் கடந்து செல்லக் கட்டளையிடக் கேட்ட இரண்டொரு குரங்குகள் அப்பாலம் எவ்வளவு உறுதியுடையதென்று பரிசோதிக்க அதன்மேல் நடந்து சென்றன. அதன் பின்னர், தாய்க்குரங்குகள் தங்குட்டிகளோடும் நடந்து செல்ல, மற்றவைகளும் அவ்வாறே தொடர்ந்து சென்றன. அவையனைத்தும் சென்றபின்னர், தலைக்குரங்கு ஒரு பெரிய அரசன்போல் வெகு கம்பீரமாய் நடந்து கடந்தது.

குரங்குகள் யாவும் சென்றுவிடவே, பாலத்திற்பட்ட குரங்குகள் மாத்திரம் இடுக்கணிற்பட்டு வருந்திக்கொண்டிருந்தன. அவை எவ்வாறு அக்கரை சேர்வது? தலைவன் கட்டளைக்கு எதிர்பார்த்திருந்தன. அக்காலத்தில் குரங்குத் தலைவன் பேரிரைச்சலிட்டு இரண்டாம் மரத்தைப் பற்றிக்கொண்டிருக்கும் வானரம் வலிவாய்ப் பிடிக்கவேண்டுமென்றும், முதன்மரத்திலுள்ள குரங்கு வாலை விரைவில் விட்டுவிடவேண்டுமென்றும் கட்டளையிட்டது. முதன் மரத்துக் குரங்கு தன் வாலை சடுதியில் அவிழ்த்துவிடவும் குரங்குச் சங்கிலி இரண்டாம்மரத்தில் தொங்க நேர்ந்தது. பின்பு ஒவ்வொன்றும் முறையே தத்தமக்கு இயன்றவாறு குதித்தோடி கூட்டத்திற் சேர்ந்துகொண்டன.

பிள்ளைகளே! எவ்வகைய அரிய காரியமும் நுட்பமாய் ஆராய்ந்துசெய்தால் அனுகூலமாய் முடியுமென்பது இதனால் விளங்குகின்றதன்றோ?

## SENTENCE.
## வாக்கியம்.

மனிதர் தம் கருத்தை மற்றொருவருக்குத் தெரிவிப்பதற்குப் பாஷை இன்றியமையாததாக விருக்கின்றது. பாஷை ஒலிவடிவென்றும், வரிவடிவென்றும் இருவகைப்படும். ஒலிவடிவு பேசுவது. வரிவடிவு எழுதுவது. எழுதுவதற்கு எழுத்தே முதற்காரணமாம். அவ் வெழுத்தினாற் சொற்களும், சொற்களால் வாக்கியங்களும் இயைக்கப்படுகின்றன.

ஒரு கருத்தை முற்றுந் தெரிவிக்கப் பதங்கள் இயைக்கப் படுவது வாக்கியமாம். பதங்கள் பல சேரினும் கருத்து முற்றுமலுமிருக்கும். அதாவது,

"யான் வீட்டையடைந்து தந்தையைக் கண்டு"

என்பதில் பல பதங்கள் ஒன்று சேரினும், கருத்து முற்றுப் பொருமையால் அது வாக்கியமாகாது. இனி,

"யான் வீட்டை யடைந்து தந்தையைக் கண்டு பேசினேன்".

என்பதில் ஒரு விஷயம் முடிவுற்றதென்பது விளங்குகின்றது. அதனால் இஃதொரு வாக்கியம் எனப்படும்.

ஒரு வாக்கியத்தில் முக்கியமாய் மூன்று விஷயங்கள் காணப்படும். அவை,

ஒரு தொழிலைச் செய்ய முயலும் முதல்வன்,

அவன் செய்யுந் தொழில்,

அத்தொழிலை யேற்கும் பொருள் என்பனவாம்.

காரியம் செய்ய முதன்மையாக நின்ற முதல்வன் எழுவாய் எனவும்,

அவன் செய்த தொழில் பயனிலை எனவும்,

அவன் செய்த தொழிற்பயனை யடைந்தபொருள் செயப்படு பொருள் எனவும் இலக்கணவகையாற் கூறப்படும்.

எழுவாய் என்பது, (எழு = உண்டாகும், வாய் = இடம்) உண்டாகுமிடம் எனப் பொருள்படும். அதாவது வாக்கிய முண்டாவதற்கு முதலிடம் என்பதாம்.

பயனிலை என்பது (பயன் = பிரயோஜனம், நிலை = நின்றவிடம்) பிரயோஜனம் நின்றவிடம் என்பதாம். அதாவது, கருத்தாசெய்த காரியத்தின் நிலை என்பதாம்.

செயப்படுபொருள் என்பது (செயப்படு = செய்தலை யடையும், பொருள் = வஸ்து) கருத்தா செய்யும் காரியத்தின் பயனை யடையும் பொருள் என்பதாம்.

வாக்கியத்தின் பிரிவுகளாகிய, மேற்கூறிய மூன்றில் எழுவாயும் பயனிலையுமின்றி வாக்கியம் எவ்வாற்றானும் ஏற்படாது. செயப்படு பொருள் இருத்தலும் இல்லாதொழிதலுங் கூடும்.

"முருகன் வந்தான்" என்னும் வாக்கியத்தில் கருத்தாவும் அவன் செய்த தொழிலுமே காணப்படுகின்றன அதாவது:—

முருகன் - எழுவாய், வந்தான் - பயனிலை.



சில வினைச்சொற்களுக்குச் செயப்படுபொருள் வரும்; சிலவற்றிற்கு வருவதின்று. செயப்படுபொருள் உள்ள வினை செயப்படுபொருள் குன்றாவினையென்றும், செயப்படுபொருள் இல்லா வினை "செயப்படுபொருள் குன்றியவினை" என்றும் பெயர் பெறும். யாரை அல்லது எதை என்னும் பதங்களில் ஏற்ற ஒன்றை முன் வைத்துக் கேள்விகேட்டால் விடைவரக் கூடிய வினைகள் செயப்படு பொருள் குன்றாவினைகளாம்.

படித்தான் — (எதைப் படித்தான்?—)
தைத்தாள் — (எதைத் தைத்தாள்?—)
மேய்ந்தது — (எதை மேய்ந்தது?—)
அடித்தான் — (யாரை அடித்தான்?—)

இக்கேள்விகள் முறையே பாடத்தை, சட்டையை, புல்லை, மாட்டை முதலியவற்றைப் போன்ற ஒருவிடையை அவாவி நிற்கின்றன. ஆகையால், இவை செயப்படுபொருள் குன்றா வினைகளாம்.

யாரை, எதை என்னும் பதங்களில் ஏற்ற ஒன்றை முன்வைத்து வினவினால் விடைவரக்கூடாதவை செயப்படுபொருள் குன்றிய வினைகளாம்.

நடந்தேன், வந்தான், நின்றீர், துயின்றனர் இவற்றை யாரை, எதை என்பவற்றில் ஒன்றைக்கொண்டு வினவின் விடையொன்றும் ஏற்படாதாகையால் இவை செயப்படுபொருள் குன்றிய வினைகளாம். இதனால் செயப்படுபொருள் குன்றிய வினைகட்குச் செயப்படுபொருள் இல்லை என்றும், குன்றா வினைகளுக்கு அஃது உண்டென்றும் விளங்கும்.

எழுவாயும், செயப்படுபொருளும் பெயர்ச்சொற்களாகவும், பயனிலை வினைச்சொல்லாகவும் இருக்கும். அதனால், ஒரு வாக்கியத்தில் எழுவாய் பயனிலை, செயப்படு பொருள்களைக் காணவேண்டுமாயின் முதலில் பயனிலையையும், பின்னர் எழுவாய், செயப்படு பொருள்களையும் ஆராய்வதே ஏற்ற முறையாகும். ஒரு வாக்கியத்தில் முற்று வினையே பயனிலையா மாதலால், முதலில், பயனிலையை எடுத்துக் கொண்டு அதன்முன் யார் அல்லது எது என்பவற்றில் ஏற்றவொன்றை வைத்து வினவினால் வரும் விடையே எழுவாயாகும். அவ்வினைக்கு முன் யாரை, எதை என்பவற்றில் ஏற்றவொன்றைவைத்து வினவினால் வரும் விடையே செயப்படு பொருளாகும்.

“இராமன் மிதிலையில் ஜானகியை மணந்தான்” என்னும் வாக்கியத்தில் முற்றுவினை ‘மணந்தான்’ என்பதாகலின் மணந்தான் என்பதே பயனிலை. மணந்தான் என்பதன்முன் “யார்?” என்று வைத்து வினவினால் வரும் விடை இராமன் ஆகையால், ‘இராமன்’ என்பது எழுவாய். மணந்தான் என்பதன்முன் “யாரை” என்று வைத்து வினவினால் வரும் ‘ஜானகி’ ஆனதால் ஜானகியை என்பது செயப்படுபொருளாம்.

உயர்திணைக்கு “யார், யாரை” என்பவைகளையும், அஃறிணைக்கு “எது, எதை” என்பவைகளையும் வைத்து வினவவேண்டும்.

---

## ரகர, றகர பேதங்கள்.

அரம் - ஓர் ஆயுதம்
அறம் - தருமம்
அரல் - கருமணல்
அறல் - அறுதல்
அரி - விஷ்ணு, அரிதல்
அறி - தெரி
அருகு - சமீபம்
அறுகு - அருகம்புல்
ஆர - நிறைய
ஆற - தணிய
இரத்தல் - பிச்சை எடுத்தல்
இறத்தல் - சாதல்
இரங்கு - மனமிரங்கு
இறங்கு - கீழிறங்கு
இரு - உட்காரு
இறு - உடை
இரை - ஆகாரம், ஒலி
இறை - வரி, அரசன்
உரல் - ஓர் யந்திரம்
உறல் - அடைதல்
உரவு - வலிமை
உறவு - பந்துத்துவம்
உரம் - மார்பு
உறம் - உறுதி
உரை - சொல், தேய்
உறை - பை
ஊர - நகர
ஊற - நனைய
எரி - தீ யெரி
எறி - வீசு
ஏரி - பெரிய நீர் நிலை
ஏறி - ஏறுபவன்
ஒரு - ஒன்று, ஒப்பற்ற
ஒறு - தண்டி
ஒருத்தல் - யானை
ஒறுத்தல் - கோபித்தல்
கர - ஒளி
கற - பால்கர
கரி - யானை, அடுப்புக்கரி, சாட்சி
கறி - பதார்த்தம்
கரை - ஓரம், கரை
கறை - குற்றம், மாசு
கருப்பு - பஞ்சம்
கறுப்பு - கோபம், ஒருவகைநிறம்
கருகல் - தீய்ந்துபோதல்
கறுகல் - கோபித்தல்
குரங்கு - வானரம்
குறங்கு - தொடை
குரவர் - ஆசாரியர்
குறவர் - ஒருசாதியார்
குரு - ஆசாரியன்
குறு - குறுகிய



குருகு - கொக்கு
குறுகு - சமீபி
குரை - ஒலி
குறை - குறைவு
கூர - நிறைய
கூற - சொல்ல
கூரிய - கூர்மையான
கூறிய - சொல்லிய
கூரை - வீட்டுக்கூரை
கூறை - கோடி வஸ்திரம்
சாரு - சார்ந்திரு
சாறு - ரசம்
சுரா - கள்
சுறா - ஒருவகை மீன்
சுருக்கு - சுருக்கம்
சுறுக்கு - சீக்கிரம்
சூரன் - வீரன்
சூறன் - மூஞ்சூறு
சேரல் - கிட்டல்
சேறல் - சொல்லுதல்
சோரு - தளர்
சோறு - சாதம்
தரி - அணிந்துகொள்
தறி - வெட்டு
திரை - அலை
திறை - கப்பம்
திரம் - நிலை
திறம் - வல்லமை
துரவு - பெருங்கிணறு
துறவு - துறத்தல்
துரத்தல் - செல்லுதல்
துறத்தல் - நீக்குதல்
துரை - தலைவன்
துறை - நீர்த்துறை
தேர - பழக
தேற - ஆற்றிக்கொள்ள
நரை - நரைமயிர்
நறை - வாசனை
நிரை - வரிசை
நிறை - நிறைவு
நெரி - அழுத்து
நெறி - வழி
பரவை - சமுத்திரம்
பறவை - பக்ஷி
பரி - தாங்குதல், குதிரை
பறி - பிடுங்கு, பொன்
பாரை - கட்டப்பாரை
பாறை - கற்பாறை
புரம் - பட்டணம்
புறம் - பக்கம்
புரவு - காத்தல்
புறவு - புறா
பொரி - நெற் பொரி
பொறி - ஐம் பொறி
பொரு - சண்டைசெய்
பொறு - பொறுத்திரு
பொருப்பு - மலை
பொறுப்பு - சாக்கிரதை
மரம் - விருக்ஷம்
மறம் - கோபம், பாபம்
மரி - சா
மறி - ஆடு, மறி என்னேவல்
மரு - வாசனை
மறு - குற்றம்
மரை - தாமரை, மான்
மறை - வேதம், மறைஎன்னேவல்
முரி - கெடு
முறி - இலை
வரை - மலை, எல்லை
வறை - துவட்டல் கறி
விரகு - உபாயம்
விறகு - கட்டை
விரல் - ஓர் உறுப்பு
விறல் - வல்லமை

# Teaching Grants on behalf of Elementary Schools.

## எலிமெண்டரி பாடசாலையின்* உபாத்தியாயர்களுக்கு போதனைக்கிரான்டு.

### 1. கிரான்டு விகிதம்.

தற்சமயம் எலிமெண்டரி பாடசாலையிலுள்ள உபாத்தியாயர்கள் ஒவ்வொருவருக்கும், வருடத்திற்கு 36 ரூபாயும், தினசரிவந்தபிள்ளைகளின் கணக்கின்மேல் பிள்ளை ஒன்றுக்கு வருடத்திற்கு 8 அணு வீதமும் கிரான்டு கொடுக்கப்படும்.

மேலும், எந்தப்பாடசாலையிலாவது பெரும்பாலான பிள்ளைகள் பஞ்சமர், கைக்கோளர், வள்ளுவர், உப்பரவர்கள்முதலியவகுப்பினர்களாயிருந்து, கிரான்டு கொடுக்கும் அதிகாரிக்கு இஷ்டமிருந்தால் பிள்ளை ஒன்றுக்கு 100 க்கு .25 ரூபாய்க்கு மேல்படாமல் அதிக கிரான்டு கொடுக்கலாம்.

### 2. கிரான்டுத்தொகை ஏற்படுத்தல்.

எந்தப் பாடசாலையிலாவது ரெஜிஸ்டர், உபாத்தியாயர்களை நியமித்தல், பிள்ளைகள்ஆஜராதல், பாடசாலையின் ரெகக்னிஷன் அல்லது திரவிய உதவிக்குரிய நிபந்தனைகள் ஆகிய இவ்விஷயங்களில் ஏதாவது தப்பிதங்களாவது அல்லது இன்னம் எவ்விஷயத்திலாவது தவறுதல்களிருந்து அவைகளை பரிட்சை அதிகாரி கிரான்டுதரும் அதிகாரிக்குத்தெரிவித்தால் அவர் விசாரணையின்பேரில் அப்பாடசாலைக்குண்டான கிரான்டை குறைக்கவும் அல்லது சிறிது காலம் கிரான்டை நிறுத்திவைக்கவும் கூடும். பரிட்சை அதிகாரிகள் ஆலோசனை சபை (Conference.) கூடும்போது எந்தப்பாடசாலையிலாவது ஒழுங்கீனம், போதனைக்குறைவு, கட்டடக்குறைவுகளிருந்தால் அப்பாடசாலைக்கு ஏற்பட்டுள்ள கிரான்டில் 100 க்கு 25 ரூபாய்க்கு மேற் படாமல் குறைக்க ஆலோசிக்கலாம். அன்றியும்பாடசாலை நாட்களில் குறைவாயிருந்தாலும், பாடசாலைக்காலத்தில் குறைவிருந்தாலும், அம்மைகுத்தாத பிள்ளைகளை சேர்த்திருந்தாலும் போதுமான திரவியம்

* எலிமெண்டரி பாடசாலை :— இப்பாடசாலையில் வாசிக்கும் பிள்ளைகள் தங்கள் ஊதியத்திற்குத்தக்க கல்வியைக்கற்பவர்கள். இப்பாடசாலைகளில் பாலர் வகுப்பு முதல் 7 வது வகுப்பு வரையில் வைக்கலாம். இங்கிலீஷ் இஷ்டமான பாடமாக 4 வது வகுப்பு முதல் 7 வது வகுப்பு வரையில் கற்பிக்கலாம். ஆனால் போதனை பிள்ளைகளினது சுயபாஷையாக விருக்கவேண்டும்.



(Funds) இல்லாதிருந்தாலும் மேற்குறித்த வண்ணம் கிரான்டை குறைக்கலாம். ஆனால் பரிட்சை அதிகாரி பாடசாலையின் பரிட்சை காலத்தில் மானேஜரிடத்தில் தான் கிரான்டை குறைப்பதற்கு சிபார்சு செய்யப்போவதையும் அதற்குண்டான காரணங்களையும் சொல்லவேண்டும்.

அன்றியும் எப்பாடசாலையாவது நன்றாய் விருத்தியடைந்திருந்தால் அப்பாடசாலைக்கு ஏற்பட்டுள்ள கிரான்டுத் தொகையோடு 100க்கு 25 ரூபாய்க்கு மேற் படாமல் அதிக கிரான்டு கொடுக்க சிபார்சு செய்யலாம். முக்கியமாய் பிள்ளைகளின் மனோசக்தி, பேச்சு, உற்றுணர்தல் முதலியவைகள் விருத்தியடைவதற்கான போதனா மார்க்கத்தை அநுசரித்திருத்தல் வேண்டும். இதனோடும் தேக அப்பியாசத்தில் தகுதியான கவலையும், பிள்ளைகள் தாங்கள் வாழ்நாட்களில் உபயோகமாகக் கூடிய விஷயமாய் முயற்சியுமிருந்தால் அதிக கிரான்டு கொடுக்கலாம்.

எந்தப் பாடசாலைக்காவது கிராண்டு தவிர வேறு எவ்விதமான வரும்படி இல்லாமலிருப்பது நன்றாய்த் தெரியவருமானால் கிரான்டு கொடுக்கும் அதிகாரி டைரக்டருடைய இஷ்டத்தின்பேரில் அதிக கிரான்டு கொடுக்கலாம்.

### 3. திரவிய சகாயத்திற்கு விண்ணப்பம்.

எந்த வருடத்திற்கு திரவிய சகாயம்பெறவேண்டுமோ அவ்வருடத்திற்கு முந்திய வருடம் ஜூலை மீ 1௳ க்குள் (அதாவது 1908 ௵த்தில் திரவிய சகாயம்பெறவேண்டுமானால் 1907௵ ஜூலைமீ 1௳ க்குள்) சப் அஸிஸ்டன்டு இனிஸ்பெக்டருக்கு, ஏற்படுத்தியுள்ள பாரத்தை பூர்த்திசெய்து அனுப்பவேண்டும்.

### 4. திரவியசகாயத்திற்காக ஏற்படுத்தும் பட்டி.

செப்டம்பர்மீ முதலில் பரிட்சை அதிகாரிகள் ஆலோசனைசபை கூடும்போது ஷை விண்ணப்பங்கள் சரியாக பூர்த்தி செய்திருக்கிறதா வென்றும் அவைகளில் குறித்துள்ள விஷயங்கள் யாவும் சரிதானா வென்றும் தணிக்கை பார்க்கவேண்டும். பிறகு திரவிய சகாயத்திற்கு எடுத்துக்கொண்ட எல்லா எலிமெண்டரி பாடசாலைகளையும் ஏற்படுத்தியுள்ள பாரத்தில் எழுதவேண்டும். இவ்விதம் எழுதும்போது ஒவ்வொரு ஜில்லாவிற்கும் தனித்தனி பட்டி எழுதவேண்டும். இப்பட்டி தயாரானவுடன் இனிஸ்பெக்டர் மூலமாக டைரக்டர் துரைக்கு அக்டோபர்மீ 1௳ க்குள் அனுப்பவேண்டும்.

இத்துடன் திரவிய சகாயத்திற்கு எடுத்துக்கொள்ளாத பாடசாலைகளின் பட்டியொன்று தயார் செய்து அனுப்பவேண்டும். இதற்கு காரணமும் கூறவேண்டும்.

இவ்விதம் தயார்செய்த பட்டியிலுள்ளபாடசாலைகளில் லோகல் பண்டிலிருந்து சகாயம் பெறக்கூடிய பாடசாலைகளின் பட்டியொன்று தயார் செய்து தாலுக் போர்டு பிரசிடென்டுகளுக்கு அனுப்பவேண்டும். ஆண்பிள்ளைகளின் பட்டி அஸிஸ்டன்டு னிஸ்பெக்டராலும், பெண்பிள்ளைகளின் பட்டி இனிஸ் பெக்டரஸ் (Ins pectress.) ஆலும் அக்டோபர்மீ 1வ க்குள் அனுப்பவேண்டும்.

### 5. திரவிய சகாயத்திற்கு சேர்த்துக்கொள்ளல்.

கிரான்டுகொடுக்கும் அதிகாரி, பரிட்சை அதிகாரிகளின் சிபார்சுகளை ஆலோசித்தபின், எந்தப்பாடசாலைகளை திரவிய சகாயத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை தீர்மானிக்க வேண்டும். இவ்விதம் தீர்மானிக்கும்போது, பாடசாலைகளின் தொகையையும், நிலைமைகளையும், திரவிய நிலைமையும் கவனித்தல் வேண்டும். அன்றியும் அந்தந்த விடத்திற்கு வேண்டிய கல்வியும் திரவிய சகாயத்திற்குண்டான தொகையையும் கவனித்தல் வேண்டும்.

லோகல் போர்டு பிரசிடென்டுகள் தங்களுக்கனுப்பிய பட்டிகளை அங்கீகரித்தபின் டிசம்பர்மீ 1வக்குள் டைரக்டருக்கு பட்டியை அனுப்பவேண்டும்.

### 6. பட்டிவெளியிடல்.

திரவியசகாயத்திற்கு எடுத்துக்கொண்ட யாவத்து பாடசாலைகளையும் ஏற்படுத்தியுள்ள பாரத்தின்படி ஒவ்வொரு ஜில்லாவிற்கும் தனித்தனி பட்டி அச்சிட்டு டைரக்டர் வெளிப்படுத்தவேண்டும். இவ்விதம் வெளியிட்ட பட்டியை ஏப்ரல்மீ 1வக்குள் தாலுக் போர்டு பிரஸிடென்டுகளுக்கும், ட்ரெஷரி ஆபீஸர்களுக்கும் பரிட்சை அதிகாரிகளுக்கும் அம்மை குத்தும் இனிஸ்பெக்டர்களுக்கும் அனுப்பவேண்டும். தாசில்தார், டிப்டி தாசில்தார், ஸ்டேஷனரி சப்மாஜிஸ்ட்ரேட், முக்கியமான தபால் ஆபீஸ் முதலிய இடங்களில் ஷை பட்டியை கட்டித் தொங்கவிடவேண்டும்.

### 7. பாடசாலைகளின் வருஷாந்த பரிசோதனை.

பரிட்சை அதிகாரி ஓர் பாடசாலையை சாவகாச முண்டானபோது தணிக்கைசெய்வதல்லாமல் வருடாந்தபரிட்சை யொன்று நடத்தவேண்டும். வருடாந்த பரிட்சைக்கு ஏற்படுத்திய நாளை 7



நாள் முந்தி மானேஜருக்குத் தெரிவிக்கவேண்டும் அப்போது பரிட்சைக்குவேண்டிய் கணக்குப்பாரம் ஒன்று அனுப்பவேண்டும். இப்பாரத்தை மானேஜர் பூர்த்திசெய்து பரிட்சைகாலத்து பரிட்சை அதிகாரியிடத்தில் கொடுக்கவேண்டும். அதை பரிட்சை அதிகாரி பாடசாலையின் ரெஜிஸ்தருடன் பரிசோதனை செய்து அதில் குறித்துள்ள விஷயங்கள் சரிவர இருக்கின்றனவா வென்று பார்க்கவேண்டும்.

### 8. கிராண்டு கொடுத்தல்.

2-வது பாராவில் கூறியவண்ணம் பரிட்சை அதிகாரிகள் ஆலோசனை சபை கூடி பாடசாலைகளுக்கு கிராண்டு ஏற்படுத்திய பிறகு ஒவ்வொரு பாடசாலைக்கும் கிராண்டுபில் தயார் செய்யவேண்டும். இவ்விதம் பில் தயார் செய்யும்போது ஒரு மானேஜருக்கு ஒரே யிடத்தில் 2-3 பாடசாலைகளிருந்தால் இப்பாடசாலைகளுக்கெல்லாம் ஒரே பில் தயார்செய்யலாம். இப்பில்களை அஸிஸ்டெண்டு இனிஸ்பெக்டர் பரிசோதனைக்கையெழுத்திட்டபின் லோகல்பண்டு பிரஸிடெண்டுகளுக்கு அங்கீகாரத்திற்கு அனுப்பவேண்டும். பிரசிடெண்டுகள் அங்கீகரித்து அனுப்பியபின் பிப்ரவரிமீ முடிவுக்குள் கரஸ்பான்டென்டுகளுக்கு பில்களை அனுப்பிவிடவேண்டும்.

இவ்விதம் பெற்ற பில்களை கரஸ்பான்டென்டுகள் கையெழுத்திட்டு தடை செய்யாமல் கஜானாவில் கொடுத்து பணம் பெற்றுக்கொள்ளவேண்டும். எவ்விதத்திலும் மார்ச்சுமீ 15வக்குள் பணம் பெற்றுக்கொள்ளவேண்டும்.

## WANTED.

## வேண்டும்.

சென்னை முத்தியாலுபேட்டை தம்புசெட்டிவீதி 130-நெம்பர் வீட்டிலுள்ள இந்து பெண்கள் பாடசாலைக்கு இரண்டு பிரைமரி கிரேட் இந்து உபாத்தியாயினிகள் வேண்டும். இஷ்டமுள்ளவர்கள் ஷை பாடசாலையின் மானேஜருக்கு விண்ணப்பம் அனுப்பவேண்டும். திறமைக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். விண்ணப்பத்தில் தற்கால அலுவல் மதம் வேண்டிய சம்பளம் முதலியவைகளை குறித்திருக்கவேண்டும்.

## NEWS AND NOTES.

### சமாசாரக்கொத்து.

ஐந்தாவது சர்கில் இனிஸ்பெக்டர் ராவ் பகதூர் நாகோஜிராவ் அவர்கள் அடுத்த மார்ச்சு மீ உபகாரச்சம்பளம் பெற்று வேலையினின்று நீங்குவார்.

* * *

சென்டரல் சர்கில் பெண்பிள்ளைகளின் பாடசாலை இனிஸ்பெக்ட்ரஸ் மிஸ். பர்னர்ட் அம்மாள் அடுத்த மாதம் ராஜாவின்பேரில் இங்கிலாந்துக்குப் போகின்றனர்.

* * *

டெக்னிகல் ஸ்கூல் இனிஸ்பெக்டர் (Inspector of Techinical School) Mr. A. சார்டர்டன் துரையவர்களை டைரக்டர் ஆப் அக்ரிகல்சரல் இன்கொய்ரிஸ் (Director of Agricultural and Techinical Inquiries) ஆக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

* * *

ஆப்கானிஸ்டான் அமீர் அவர்கள் வருடத்தில் தமது நாட்டுப் பிள்ளைகளில் 100 பேரை வெளிதேசங்களுக்கு கல்விகற்பதற்காக அனுப்பத்தீர்மானித்திருக்கிறார்.

### பிழைதிருத்தம்.

சென்ற மாதத்திய சஞ்சிகையில் "சென்னை இராஜாங்க வித்தியாசங்க விபவம்" என்னும் தலைப்பில்உள்ள பாடலில் கடைசிவரியாகிய

"பள்ளிப்பரிட்சகர் பலரும் பொருந்தினர்" என்பதைப் பதினைந்தாம் வரியாகிய "இத்துடனன்றி இவ்வாண்டதனில்" என்பதன்பின் வாசித்துக்கொள்க.

OFFICE OF THE REGISTRAR ... 13 MAY 1907 MADRAS

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட் கெனவே உலவிவரும்
மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது 2. | 1907 ஃபிப்ரவரி மீ | மாதம் 9

## THE INDIAN KINDERGARTEN.

### செல்வச் சிறுவர் சிங்காரத் தோட்டம்.

சிறுவர் சிங்காரத்தோட்டம் என்னும் கிண்டர்கார்டன் பாடம் இக்காலத்தே எங்கெங்கும் தலைவிரித்து ஆடுகின்றது. அதனால் இப் பாடவிஷயமாய் வித்தியாதிகாரிகளும், உபாத்தியாயர்களும் கொண்டிருக்கும் ஊக்கம் மிகுந்து வருகின்றது என்பது நன்கு விளங்குகின்றது. சென்ற டிசம்பர் மாதத்தில் மிஸர்ஸ் கோட்ரைட் அம்மாள் மேற்பார்வையிலுள்ள பாடசாலைகளில் மிஸ்டர் ஆர்தர் மேஹியூ, M. A. துரையவர்கள் சபாநாயகராக வீற்றிருந்துநடத்திக் காட்டிய விஷயங்கள் பெரும்பான்மையான உபாத்தியாயர்கள் தத்தம் ரேஞ்சு சூபர்வைசர்கள் மூலமாய் அறிந்திருப்பார்கள் என்று நம்புகின்றோம். எனினும் அவற்றில் சில விஷயங்களை ஈண்டு வரைவோம்.

பாடபுத்தகத்தில் ஏதேனும் ஒரு கதையை எடுத்துக்கொண்டு அக்கதைக்கேற்கப் பிள்ளைகள் நடித்துக்காட்டுதல், அதில் வந்த விஷயங்களைப் பற்றிப் படம் வரைதல், பொருள்களுக்கேற்ற நிறமிட்டு எழுதல், பொருள்களைப் போல் களிமண்ணால் உருக்கள் செய்தல், அதிலேயே பொருட்பாடம் நடத்துதல் முதலியனவாம். இது ஒரு சிறந்த போதனை முறை என்று கொள்வதில் யாதொரு ஐயப்பாடுமில்லை. கதைகளைத் தேர்ந்தெடுத்தலும், அதற் கேற்ற பாடல்களைச் செய்தலும் மட்டும் உபாத்தியாயர்களுக்குச் சிரமமாகவிருக்கும். பாட்டைச்செய்வதில் உபாத்தியாயர்களில்பெரும்பாலார்

இடர்ப்படுவார்கள் என்பது ஒருவரும் மறுக்கக்கூடாத நிச்சயம். இப்பாட்டுக்கள் அந்தந்த வகுப்புக்களுக்கு ஏற்றவாறு சொற்பொருத்த முடையனவாய், இன்னிசை யுடையனவா யிருத்தல் வேண்டும். இவ்வாறு செய்வது பாவலர்க்கும் சிரமமாகவேயிருக்கும். இது விஷயமாய் அதிகாரிகள் சற்றுச் சிரமம் எடுத்துக்கொண்டு கிண்டர் கார்டன் பாடத்தின் தன்மைகளை முற்றுமுணர்ந்த பண்டிதர்களைத் தேடித் தம் கருத்துக்களை அவர்களுக்குக் கூறி சுலபமான பாடல்களைச் செய்து மாதிரியாக வெளியிட்டால் பின்பு உபாத்தியாயர்களும் அவ்வாறு செய்ய முயலுவர். அவ்வாறின்றி உபாத்தியாயர்களைச் செய்யும்படி வற்புறுத்துவதனால் அவ்வளவு நன்மையுண்டாக மாட்டாது. ஏதேனும் ஒரு விஷயத்தை ஒருவர் புதுமுறையாக வெளியிட வேண்டுமானால் அவர் அம்முறைக்கேற்ற மாதிரிகளை முதலில் வெளியிட்டுக்காட்டுவது அவரது கடமையே யன்றோ? அப்படியிருக்க துரைத்தனத்தார் இக்கிண்டர்கார்டன் முதலிய பாடங்கள் நடைபெற வேண்டுமென்று நெடுங்காலமாய் ஊக்கங்கொண்டு வந்தும் இதுவரையில் மாதிரியாக ஒரு விஷயத்தையேனும் வெளியிடாமை யாது காரணமோ அறியேம்.

இவ்விராஜதானியில் சிறந்து விளங்கும் சென்னைச் சிங்காரத்தோட்டமாகிய பீபில்ஸ்பார்க்கில் (People's park) ஒருகிண்டர் கார்டன் பாடசாலை துரைத்தனத்தார் ஏற்படுத்தித் தக்க உபாத்தியாயர்களை அமைத்து ஒரு மாதிரி பாடசாலை (Model-School) ஏற்படுத்தலாகாதா? அந்த இடம் செடி கொடிகள் நிறைந்துள்ள சிங்காரவனமாக இருத்தலே யன்றி, பட்சிகள், மிருகங்கள், மற்றும் பொருள்கள் நிறைந்திருப்பதனால் எவ்வகைய பாடமும் இடையூறின்றி நடைபெறுவதற்கு ஏற்றதாகும்.

இதுநிற்க, இப்போது ஆங்காங்கு கிண்டர்கார்டன் பாடத்தைப்பற்றி உபந்நியாசங்கள் நடைபெறுகின்றன. அவ்வாறு நடைபெறுவது சாலச் சிறப்பே. எனினும் யாம் அறிந்த மட்டில் கிண்டர் கார்டன் உபந்நியாசமென்றால் ஒவ்வொருவரும் எடுத்துக் கூறுவது பிரோபல் துரையவர்களுடைய சரித்திரமே. உடனே அவர் கூறியிருக்கும் முறைகள் ஜெர்மனிதேசத்திற்கு ஏற்றவை; இந்து தேசத்திற்கு ஏற்றவை யன்று; ஆகையால் நாம் அவற்றை ஏற்றபடி மாற்றிக்கொள்ளவேண்டும் என்கின்றனர். இவ்வாறு உபந்நியசிப்பதால் கேட்கும் உபாத்தியாயர்கள் பிரட்சியடைந்து அப்பாடத்தில் வெறுப்பும் சலிப்பும் கொள்கின்றனரேயன்றி மற்றொன்று



மில்லை. நூற்றில் தொண்ணூற்றொன்பது உபாத்தியாயரும் இப்பாடத்தைப்பற்றிக் குறை கூறுகின்றனர். பின்னும் என்னசெய்வது வித்தியாதிகாரிகளைத் திருப்திசெய்விக்கவேண்டும் என்று விதியோ வென்று முறையிடுகின்றனர். இவையனைத்தும் இப்பாடத்தினாலுண்டாகும் உண்மைப்பயன்களை ஏற்றவாறு உணராமையால் கொள்ளும் அபிப்பிராயங்கள் என்பது விளங்குகின்றதன்றோ?

அதனால் இப்பாடத்தைப்பற்றி உபந்நியாசிப்பவர்கள் இப்பாடத்தின்பயன்களையும், அதனைபோதிக்கும் முறைகளையும் அப்பாடத்தினாலேயே எல்லாப்பாடங்களையும் நடத்தலாம் என்னும் மார்க்கத்தினையும் மற்றும் விஷயங்களையும் குறித்துப்பேசவேண்டும். தற்காலம் வித்தியாதிகாரிகள் கொண்டுள்ள முறைப்படியே இனி மாதந்தோறும் ஒவ்வொருபாடம் காட்டிவருவோம்.

## THE FIVE KINDS OF TEACHERS.

## ஐவகை உபாத்தியாயர்கள்.

உபாத்தியாயர்களை அவரவர்களின் தேகதத்துவத்திற் கிணங்க அடியிற் குறித்த ஐந்து வகையினராகப் பிரிக்கலாகும்:—

### I. இரத்தகுண உபாத்தியாயர்கள்.

இவ்வகைக்குணம் விசேஷித்த உபாத்தியாயர்களுக்கு உடலில் இரத்தவோட்ட மதிகமாகவிருக்கும். முகம் சிவந்து பளபளவென்றிருக்கும். கண்கள் ஒளிமிகுந்து பிரகாசிக்கும். நகங்கள் சிவந்து காட்டும். உருவமும் அழகாகவிருக்கும். இவர்கள் பிள்ளைகளிடம் தயையுள்ளவர்களாய் உற்சாகத்தோ டிருப்பார்கள். ஆனால் முன்கோபிகளா யிருப்பார்கள். இவர்கள் யாவும் சீக்கிரத்திற் கற்றுக்கொள்ளும் நுட்பபுத்தியும், போதனாசக்தியு முள்ளவர்கள். இப்படிப்பட்டவர்கள் கல்வியிற் பாண்டித்திய முள்ளவர்களாய் கவிபாடுந் திறமையும், சங்கீதப் பயிற்சியும், ஏனைய நற்குணங்களும் வாய்ந்து கீர்த்திபெற்று விளங்குவார்கள். இவர்கள் அபிநயப் பாட்டுகள் (Action Songs) பொருட்பாடங்கள் (Object Lessons) செல்வச் சிறுவர் சிங்காரத்தோட்டத் தொழில்கள் (Kindergarten Occupaticns) முதலிய அருமையான பாடங்களை பிள்ளைகளுக்குக் கற்பிப்பதில் சமர்த்தர்களாயிருப்பார்கள்.

### II. பித்தகுண உபாத்தியாயர்கள்.

இக்குண முடையவர்களுக்குக் கோபமதிகமாக விருக்கும். பிள்ளைகளை எந்நேரமுங் கண்டித்தல், தண்டித்தல் முதலிய கடுமையான காரியங்களாற் றுன்புறுத்திக்கொண்டே யிருப்பார்கள். ஆயினும் இவர்கள்பால் கற்கும் பிள்ளைகள் சுருசுருப்புள்ளவர்களாய் சீக்கிரத்தில் முன்னுக்கு வரக்கூடியவர்களா யிருப்பார்கள். இவ்வகை உபாத்தியாயர்கள் அவ்வளவாய் முகக்களை யுள்ளவர்களன்று. இவர்களின் தேகநிறம் சற்று வெளுத்துக்காட்டும். தேகம் சுஷ்கித்திருக்கும். கண்கள் சற்று மஞ்சள்நிறமாய் அழகாய்த்தோன்றும். இவர்கள் ஒருவர் சொல்வதைக்கேட்டு நடக்கவிசையாமல் தம்மிஷ்டப்படி நடக்கப் பிரியப்படுவார்கள். இத்தகையோர் தலைமை உபாத்திமைத்தொழிலுக்கே யன்றி உதவி உபாத்திமைத்தொழிலுக்குதவார்கள். இவர்கள் சூக்குமபுத்தியும், யுக்தியும், கல்வித்திறமையும் பெற்று விளங்குவார்கள். இப்படிப்பட்ட திறமைவாய்ந்த இன்னோர் சற்று 'முன்யோசனையோடு நிதான குணத்திற் பழகுவாராயின் மேன்மை யடையக்கூடும்.

### III. சிலேத்துமகுண உபாத்தியாயர்கள்.

இந்தக் குணமுடைய இவர்களின் முகம் சற்று வெளுத்து நீர் கொண்டிருக்கும். மேலும் அம்முகம் ஒளி மழுங்கி குழிக் கண்களைப் பெற்றிருக்கும். இவர்கள் சரீரத்தில் ஜலபாகம் அளவுக்கு மிஞ்சியிருக்கும். இவர்களின் கைதாது அதிக மெதுவாய் மந்தப்பட்டிருக்கும். இவர்கள் தாம் செய்யவேண்டிய கடமைப்பட்ட காரியங்களில் ஊக்கமின்றி சோம்பலடைந் திருப்பார்கள். இவர்கள் தமது இடத்தை விட்டெழுந்து கரும்பலகை (Black-Board) யில் எழுதவும், அன்றி வகுப்பிலுள்ள சிறுவர்பால் செல்லவும் பிரயாசமென்றே நினைப்பார்கள். இவர்களிடம் கற்கும் சிறுவர் தமக்குரிய இயற்கைச் சுருசுருப்பிழந்து கல்வியிற் குறைந்தவர்களாவார்கள். ஆதலால் இப்படிப்பட்டவர்கள் உபாத்திமைத் தொழிலுக்குரியவராகார்கள்.

### IV. துக்ககுண உபாத்தியாயர்கள்.

இத்தகைய குணத்தினர் ஏறக்குறைய பித்தகுண உபாத்தியாயர்களுக் கொத்த நடையுடையவர்களா யிருப்பார்கள். இவர்கள் சோம்பலுள்ள சுஷ்க சரீரமுடையவர்களாகக் காணப்படினும் தேகவியற்கையில் பலசாலிகளாகவே யிருப்பார்கள். இவர்களின் முகக்



குறி சற்று மஞ்சள் நிறமுடையதாகக் காணப்படும். மார்பும் விசாலமுள்ளதாயிருக்கும். முகம் சற்றுத் தெளிவாகத் தோற்றுமாயினும் தூங்குமூஞ்சியாகவேயிருக்கும். இவர்கள் பட்டம்பகலில் படுத்துறங்க இஷ்டப் படுவார்கள். பாடசாலையிலும் தமது பீடத்திற்சாய்ந்து நித்திரை செய்வார்கள். இவர்கள் சதா சந்தேக மனதுடையவர்கள்; பிறரை தூஷிப்பார்கள். இவர்களின் எண்ணங்களுங் கொடியவைகளே !

### V. தாதுகுண உபாத்தியாயர்கள்.

இக்குணமுள்ளவர்கள் பலமுள்ளவர்கள். இவர்களின் தேகம் பூசினாப்போலும், பருத்தும் இருக்கும். இவர்கள் சோம்பலற்று, சாக்கிரதையோடுங் கூடியிருப்பார்கள். இவர்கள் சபாரஞ்சிதப் பிரசங்கங்களிலும், சம்பாஷணைகளிலும் சதுரர்கள். இத்தன்மை உபாத்தியாயர்கள் ஊன்றிவேலைசெய்யும் ஊக்க முடையவர்கள். இவர்கள் வலிவானவேலை செய்யக் கூடியவர்கள். இவர்கள் தேக கஷ்டத்தால் செய்து நிறைவேற்றக் கூடிய கவாத்து (Drill) கசரத்து (Gymnastics) முதலிய பாடசாலைச் சிறுவர்களுக்கின்றியமையா சரீராபிவிருத்திக்குறிய காரியங்களை வெகு நன்றாய்ப் பயிற்றக் கூடியவர்கள்.

மேற்குறித்த ஐவகை உபாத்தியாயர்களின் இலக்கணங்கள் பெரும்பாலும் தேகதத்துவ சாமுத்ரிகா வைத்திய சாஸ்திரங்களின் ஆதாரங்களைக்கொண்டு அறியலாகும். இவற்றில் எதேனுங் குணங்கள் ஏகதேசமாய் வித்தியாசப் படவுங்கூடும். அவ்வகை வேற்றுமைக் குணங்கள் தோற்றுவதாயின் அத்தகையினரை மிசிரகுணத்தினராகக் கொள்க.

சி-வே. சண்முக முதலியார்,
*Head Master, Board Elementary School,*
*Tinnanur, Chingleput Dst.*

## PEAS WORK.

## பட்டாணி வேலை.

### இத்தொழிலின் நோக்கமும் பிரயோஜனமும்.

கோடுகளாலாகும் தோற்றங்களை உருவகப்படுத்தி மூலைகளைக் காட்டவும், உபயோகத்திலுள்ள அநேக பொருள்கள்போல செய்யவும், க்ஷேத்திர கணித ரூபங்களும், எழுத்துக்களும் அமைக்கவும் உபயோகமாகும்.

இத்தொழிலில் ஒவ்வொரு வகுப்பிலும் செய்யும் மாதிரிகளை ஒரு மூங்கில் கழியில் நூலினால் கட்டி வகுப்புகளில் தொங்கவிடலாம்.

### பாலர் வகுப்பு மாதிரிகள்.

1. சமகோட்டுத் திரிகோணம்
2. ஒரு நேர்கோணத் திரிகோணம்
3. ஒரு சரி சதுரம்
4. ஒரு நீண்ட சதுரம்
5. ஒரு சதுர வேலி
6. ஒரு வட்டமான வேலி
7. உயிரெழுத்துக்கள்

### கதை.

ஒரு காக்கையும் நரியும் சிநேகமாயிருந்தன. அவை இரண்டுங் கூடி ஆற்றங்கரைக்கு சமீபத்தில் ஒரு படுகையில் வெள்ளரித் தோட்டம் வைத்தன. தோட்டத்துக்கு வேண்டிய வேலி முதலானது போட்டுக் குழிதோண்டி விதைபோட்டு ஆற்றுத்தண்ணீரை எடுத்தூற்றி வளர்த்துவந்தன. செடி பெரிதாகிப் பூத்துக் காய்க்குங் காலத்தில் ஆற்றில் வெள்ளம் வந்துவிட்டது. அதனால் குள்ளநரிக்கு ஆற்றைக் கடந்துபோக முடியாமல் போய்விட்டது. காகம் தினந்தோறும் பறந்துபோய் தோட்டத்தை காத்துவந்தது. பிரதி தினமும் பழுத்திருக்கும் பழங்களை யெல்லாம் சாப்பிட்டுவிட்டு தோலுக்குள் மண்ணைத் திணித்து முன்னிருந்த பழம்போல் மூடிவைத்தது. இவ்விதமாக அத்தோட்டத்தில் பழுத்த வெள்ளரிப்பழம் எல்லாவற்றையும் தின்றுவிட்டு நரியினிடத்தில் பழங்களை யெல்லாம் உனக்காக காப்பாற்றி வைத்திருக்கிறேன் என்று பொய்சொல்லி வந்தது. கடைசியாக வெள்ளம் வடிந்த பிறகு நரிபோய் பார்த்து பழத்தை ஒவ்வொன்றையும் விண்டு பார்க்கையில் உள்ளே மண்ணிருக்கக்கண்டு காகம் மோசம் செய்ததென்று தெரிந்து கொண்டு அதன் சிநேகத்தை விலக்கிவிட்டது. அற்பர்களுடன் சிநேகம் செய்தால் மோசம் உண்டாகும்.

### தொழிலுக்கும் கதைக்குமுள்ள சம்பந்தம்.

வெள்ளரிக் குழிகளில் ஒன்று சமகோட்டுத் திரிகோண உருவமாயும், வேறொன்று நேர்கோணத் திரிகோண உருவமாயும், மற்றொன்று சரிசதுர உருவமாயும், இன்னொன்று நீண்ட சதுர வடிவாயும்,



இருந்ததாகவும் இத்தோட்டத்தைச் சுற்றி இருவித வேலிகள் அதாவது சதுரவேலி, வட்டவேலி இரண்டும் பந்தோபஸ்திற்காகப் போடப்பட்டிருந்ததென்றும் சம்மந்தப்படுத்தலாம்.

விளையாட்டு:— பிள்ளைகளில் ஒருவனை குள்ளநரியாகவும், மற்றொருவனை காக்கையாகவும் வைத்து கதையிலுள்ளபடி வேடிக்கையாக நடத்தச் சொல்லலாம்.

### பாட்டு.

இராகம் : கும்மிமெட்டு.

குள்ள நரியும் காக்கையுமாக
வெள்ளரித் தோட்டம் வைத்ததாம்
தோட்டத்திற்கு 1. வேலிபோட
காட்டு முள்ளைக் கொணர்ந்ததாம்
ஆற்றுத் தண்ணீர் எடுத்து 2. ஊற்றி
நேர்த்தியாக வளர்த்ததாம்
3. குறுக்கில் வெள்ளம் பெருக்கிடவே 4.
குள்ளநரிக்கு வழியில்லை
காகமாத்திரம் 5. பறந்துபோய்
காத்து வந்ததாம் தோட்டத்தை
பூத்துக் காய்த்து பழுத்திருக்குது
6. பூர்த்தியாக மூடினேன்
என்றுசொல்லி காகமானது
ஏய்த்து விட்டதாம் நரியையும்
தோலிருக்கப் பழம் விழுங்கி 7.
திணித்து வைத்ததாம் மண்ணையும்
வெள்ளம் வாடி வழி விடவே
குள்ள நரியும் வந்ததாம்
வந்து நரியும் பழத்தைபார்த்து
வெந்து மனம் நொந்ததாம்
நம்பி மோசம் செய்யும் நண்பர்
நாசமடைவர் என்றதாம்.
காக்கை போன்ற 8. கயவர் சிநேகம்
யார்க்குங் கூடாதென்றுமே
பார்க்குளுள்ள மனிதர்க்கெல்லாம்
ஏற்கவழி காட்டிற்றும்.

## அபிநயக் குறிப்புகள்.

1. சதுர வேலிபோல் ஆள்காட்டிவிரலால் காட்டுக.
2. இருகைகளாலும் ஜலம் கொட்டுவதுபோல் காட்டுக.
3. மார்பிற்கு நேரில் முழங்கைவரையில் படுக்குங் கோடாக வைத்துக்காட்டுக.
4. மேலே சொன்ன கையை உயரத் தூக்கிக் காட்டுக.
5. வலது கையால் மேலே பறப்பது போலக் காட்டுக.
6. விரல்களால் பூத்திருப்பதுபோலக் காட்டுக.
7. வலது கையைத்திறந்து வாயினிடத்திற்கு கொண்டுபோக.
8. கையால் ஆட்டி கூடாதென்று காட்டுக.

## முதலாவது வகுப்பு.

### மாதிரிகள்.

1. குறுக்களவுள்ள சரிசதுரம்.
2. நான்கு சிறுசதுரங்களாலான ஒரு பெருஞ் சரி சதுரம்.
3. உள்நான்கு சதுரங்கள் திரிகோணங்களாகப் பிரிக்கப்பட்ட ஒரு பெருஞ்சரி சதுரம்.
4. குறுகோணத் திரிகோணம்.
5. விரிகோணத் திரிகோணம்.
6. ஒரு வட்ட வளையம்.
7. நான்கு திரிகோணங்களின் உச்சிகள் ஒன்றாய்ச் சேர்த்தல்.
8. ஒரு மேளம்.
9. மெய்யெழுத்துகள்.

### கதை.

நாகரீகம் என்பது கொஞ்சமேனுமில்லாத நாட்டுப்புறத்து உறவினர் இரண்டுபேர் பட்டணத்தில் வசித்த ஒரு பந்து வீட்டுக் கல்யாணத்துக்காக வந்தார்கள். அவ்வீட்டில் நடந்த பற்பல விநோத பதார்த்தங்களால் ஆக்கப்பட்ட விருந்துண்டார்கள். பிறகு கல்யாணப்பந்தலில் நடந்த மேளதாள நாட்டியங்களைப்பார்த்து பரவசமானார்கள். மேளமென்பதை ஒருநாளும் அறியாதவர்கள். மற்ற வாத்தியங்கள் எல்லாவற்றிலும் மேளம் அதிகமாய் சப்திப்பதைக் கேட்டு அதற்குள் ஒரு மனிதன் இருந்து இவ்விதம் கத்துகிறான் என்று தங்கள்மனதிற்குள் ஊகித்தார்கள். வாத்தியகோஷம்முடிந்து சபையிலுள்ளோர்களெல்லாரும் கலைந்துவிட்டார்கள். மேளக்காரன் மேளத்தை ஒரு மூலையில் வைத்துவிட்டு வீட்டுக்குப்போய்



விட்டான். அச்சமயத்தில் இவர்களிருவரும் மேளத்திற்கு சமீபத்தில் போய் அதற்குள்ளிருக்கும் திருடனைப்பிடிக்க பக்கத்திற்கு ஒருவராய் நின்றுகொண்டு கைநுழையும்படியாகத் தோலைக்கிழித்துக் கைவிட்டார்கள். ஒருவன் மற்றவன் கையைப் பிடித்துக்கொண்டு திருடன் அகப்பட்டு விட்டான். திருடன் அகப்பட்டு விட்டான் என்பதாக இரைச்சலிட்டார்கள், உள்ளிருந்த ஜனங்களெல்லாம் இந்த இரைச்சலைக்கேட்டு ஓடிவந்தார்கள். இவர்கள் முட்டாள் தனத்தைக்கண்டு சிரித்துப் பரிகாசம் செய்தார்கள். இதற்குள் மேளகாரனும் வந்துசேர்ந்தான். தனக்குநேர்ந்த நஷ்டத்திற்காகக் கோபங்கொண்டு அவர்களை அடித்தான். இந்த மூடர்களிருவருக்கும் தாங்களிவ்விதம் செய்தது அறிவின்மையின் காரணமென்று தெரியவந்தது. உடனே மேளக்காரன் நஷ்டத்திற்கு பிரதியாக போதுமான பொருள் கொடுத்துத் தாங்கள் முட்டாளாயிருப்பது பிசகென்றும் அறிவை விசாலப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமென்றும் படிக்க ஆரம்பித்தார்கள்.

தொழிலுக்கும் கதைக்குமுள்ள சம்பந்தம்:— முதல் ஐந்து மாதிரிகளும் ஏழாவது மாதிரியும் பட்டணவாசத்தான் வீட்டில் கல்யாணத்தில் ஜோடித்திருந்த பற்பல பந்தல்மாதிரிகளென்றாவது அல்லது கல்யாண மேடையில் போடப்பட்டிருந்த மாக்கோல உருவங்களென்றாவது அல்லது கல்யாணக்காரன் சிற்ப சாஸ்திரி என்றும் அவன் தொழில் சம்பந்தமான இவ்வித ஆயுதங்கள் அவன் வீட்டுக் கூடத்தில் வைக்கப்பட்டிருந்ததென்றாவது சொல்லலாம். ஆறாவது மாதிரிபோன்ற தங்கத்தால் செய்த மோதிரம் கல்யாணப் பிள்ளைக்குப் போடப்பட்டதென்றும், எட்டாம் மாதிரியாகிய மேளத்தை நாட்டுப்புறத்து முட்டாள்கள் கிழித்த மேளம் போன்றதென்றும் சம்மந்தப்படுத்தலாம்.

விளையாட்டு:— ஒரு பையனை பட்டண வாசத்தானாகவும், ஒருவனை மேளக்காரனாகவும் இருவரை நாட்டுப்புறத்தார்களாகவும் வைத்து மேற்சொல்லிய கதையிலுள்ளபடி பிள்ளைகள் நடத்திக் காட்டவும்.

### பாட்டு.

இராகம். ஆரபி - தேவாரப்பண் - ஈரடித்தாழிசை.

1. நாகரீக மில்லாத நாட்டுப்புறத் ¹. திருமனிதர்
வேகமுடன் பட்டணத்து விருந்தாளி வீடுவந்தார்.

2. பாகமதாய் படைத்திருந்த பலவுணவு 2. புசித்தபின்பு
மேகமென சப் 3. திக்கும் வாத்தியங்கள் பலகேட்டார்.

3. மேளமெனும் வாத்தியமும் மிகமுழங்க அதுகேட்டு
ஆளொருவன் உள்ளிருப்பான் எனக்கருத்தில் நினைத்தார்கள்.

4. சொந்தக்காரன் இல்லாத சமயத்தில் அருகில்வந்து
பந்தமுடன் பார்த்தார்கள் பக்கம் 4. ஒவ்வொருவர்நின்று.

5. உள்ளிருக்கும் கள்ளனையும் ஓடாமல் பிடிக்க எண்ணி
மெள்ளமெள்ளகரம்நுழையும் வழி 5 சென்றுகைநுழைத்தார்.

6. அவன்கையை 6. இவன்பற்றி அகப்பட்டான் திருடனென்று
அவணுள்ளோர் அனைவருமே பரிகசிக்க இறைச்சலிட்டார்.

7. மேளக்காரன் வந்துகண்டு மிகவருந்தி தன்நஷ்டம்
தாளமுடியாதென்று தவடை 7. சுத்தி பண்ணிவிட்டான்.

8. அறிவின்மை காரணமென் றறிந்த இருமூடர்களும்
பரிவாகப் பணங்கொடுத்து பரந்துசென்றார் பலபடிக்க.

## அபிநயக்குறிப்புகள்.

1. இரண்டு விரல்களைக் காட்டுக.

2. கையை வாயினிடங்கொண்டு போய் சாப்பிடுவது போலக் காட்டுக.

3. இரண்டு உள்ளங்கைகளையும் சேர்த்துச் சத்தம் உண்டாக்கும்படி தட்டுக.

4. பிள்ளைகள் ஒருவருக் கொருவர் முகமுகமாய்த் திரும்ப வேண்டும்.

5. சுட்டுவிரலால் ஒருவட்டமான துவாரம் போலக் காட்டுக.

6. பிள்ளைகள் தங்கள் இரு உள்ளங்கைகளையும் சேர்த்து இரு பக்கமும் இழுப்பதுபோலக் காட்டுக.

7. இருகைகளாலும் தாடைகளைத் தடவவும்

## 2-வது வகுப்பு மாதிரிகள்.

1. நீண்ட சதுரப்பெட்டி
2. சரி சதுரப்பெட்டி
3. கோபுரம்
4. கல்யாணப் பணியாரம்
5. குடிசை



6. நாற்காலி
7. பெஞ்சி
8. கழுத்துப்பட்டை
9. மணிகட்டிய கழுத்துப்பட்டை
10. உயிர்மெய் யெழுத்துகள்

## கதை.

ஒரு பட்டணத்திலிருந்த ஒரு பிரபுவின் மாடியில் அநேக எலிகள் நெடுங்காலமாய் தங்களுக்கு இஷ்டமான வஸ்துக்களை புசித்து காலங்கழித்துவந்தன. இப்படியிருக்கையில் ஒரு நாள் அவ்வீட்டிற்கு ஒரு பூனை வந்தது. ஏராளமாய் எலிகள் திரள் திரளாயிருப்பதைக்கண்டு மிக சந்தோஷப்பட்டு தானும் அவ்வீட்டிலேயே நிரந்தரமாக வசிக்க ஆரம்பித்தது. பிரதி தினமும் தன் ஆகாரத்திற்கு வேண்டியளவு இரண்டொரு எலிகளைக்கொன்று தின்று வந்தது. இதைக்கண்ட மற்ற எலிக்கூட்டங்கள் இந்த விபத்திலிருந்து விலக்கிக்கொள்ள என்ன செய்யலாம் என்பதைப்பற்றி யோசிக்கும்பொருட்டு ஒரு நாள் ஒரு தனி அறையில் ஒரு சங்கம் கூடின. ஒரு வயது சென்ற கிழ எலியை அக்கிராசனாதிபதியாக ஆசனத்தில் உட்காரவைத்து மற்றவைகள் யோசிக்க ஆரம்பித்தன. சற்று நேரம் வரையில் எல்லா எலிகளும் மௌனமாயிருந்தன. பிறகு அவசரப்பட்ட ஒரு சிறு எலி எழுந்து நின்றுகொண்டு அக்கிராசனாதிபதியவர்களே, சபையோர்களே, இதைப்பற்றி இவ்வளவுநேரம்யோசிப்பானேன். நமது பகையாளியாகிய பூனையினின்று தப்பித்துக்கொள்ள ஒரு சுலபமான யோசனையிருக்கிறது. அதாவது பூனையின் வருகையை நாம் அறிந்துகொண்டால் நாம் ஒவ்வொருவரும் ஓடி ஒளிந்து கொள்ளலாம். அவ்விதம் செய்வதற்கு ஒரு சிறு யுக்தியிருக்கிறது, அது என்னவென்றால் அப்பூனையின் கழுத்தில் ஒரு சிறு மணியைக் கட்டிவிட்டால் அதன் வரவை நாம் சுலபமாயறிந்து தப்பித்துக்கொள்ளலாம் என்றது. இதைக்கேட்ட மற்ற எலிகளெல்லாம் சபாஷ், சபாஷ், நல்லயுக்தி என்பதாக ஆமோதித்தன. அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்த கிழ எலி உடனே எழுந்து "யுக்தி சொல்லியாய்விட்டது. எல்லோரும் ஒப்புக் கொண்டும் விட்டீர்கள். எல்லாம் சரிதான். நீங்கள் சொல்லும்படியான மணியை, பூனையின் கழுத்தில் கட்டுவதற்கு யார் முதலில் அதனிடத்திற்குப் போகக்கூடும். எழுந்திருங்கள் பார்ப்போம்" என்று

சொல்லிற்று. உடனே ஒவ்வொரு எலியும் திகில் அடைந்து. "இது என்னால் முடியாது, இது என்னால் முடியாது" என்று சொல்லிவிட்டது. பிறகு ஆசனத்தில் வீற்றிருந்த கிழ எலி இந்தவீட்டைவிட்டு வேறு வீட்டுக்குப் போவதுதான் சரியான யுக்தி என்று முடிவு சொல்லிற்று.

---

கதைக்கும் தொழிலுக்குமுள்ள சம்பந்தம் :— எலிகள் வசித்த பிரபுவின் மாளிகை வாசற்படிக்குமேல் ஒருகோபுரம் கட்டப்பட்டிருந்ததாகவும், பலவித பெட்டிகளும், நாற்காலி, பெஞ்சிகளும் பணியாரங்களும் அவ்வீட்டிலிருந்ததாகவும், குடிசையில் வசித்த ஒரு பூனை அவ்விடம் வந்ததாகவும், அதின் கழுத்தில்கட்ட கழுத்துப்பட்டையும், மணியும் எலிகளால் வாங்கப்பட்டதென்றும் சம்பந்தப்படுத்தலாம்.

விளையாட்டு:—அநேக பிள்ளைகளை எலிகளாகவும் ஒருவனை பெரிய எலியாகவும் வைத்து சபைகூட்டி ஒரு சிறு துடுக்குப்பையனை சிறிய எலிபோல யோசனைசொல்லி இவ்விதம் கதையிலுள்ளபடி நடத்திக்காட்டுக.

## பாட்டு.

இராகம் - ஆரபி தேவாரப்பண் - ஈரடித்தாழிசை.

1. வெகுநாளாய் விருந்துண்டு விளையாடும் எலிக்கூட்டம்.
   பகையாளி இல்லை 1. யென்று பலவிடமுந் திரிந்தனவாம்.
2. புலங்கண்ட பூனையொன்று புசிக்க இரைஉண்டென்று
   நலங்கொண்டு தங்கி அங்கு நாளொன்றாய் தின்றது 2. வாம்.
3. எலிக்கூட்டம் இதைக்கண்டு என்னசெய்வோம் எனத் தியங்கி
   கிலிநீக்கும் வழிகாண தலம்ஒன்றில் 3. கூடிற்றாம்.
4. சங்கத்துள் ளோர்பலரும் 4. சப்தமின்றி யோசிக்கையில்
   அங்கத்தின் இளஎலியொன் றாலோசனை கூறிற்றாம்
5. கண்ட 5. மொன்றைக் கண்ட 6. த்தில் கட்டிவிட்டால்பூனைக்கு
   அண்டையினில் வரும்போது அறிந்திடலாம் அனை வருமே.
6. ஆலோசனை அழகென்றே ஆமோதிக்க அனை வருமே
   காலங்கண்ட கிழஎலியும் காட்டிற்றாம் அதன் கஷ்டம்.
7. சாலுமிது சாலுமிது சாற்றினீர்களெல்லோரும்,
   கோலமணி கட்டும்விதம் கூறுமென்று கூறியதாம்.



8. முடியாதீ யுக்தி தன்னை முன்னறிவோர் செயற்கவென்று
   அடியோடே அவையனைத்தும் அயலகத்திற்கே கினவாம்.

### அபிநயக்குறிப்புகள்.

1. வலது கையைத்தூக்கி விரல்களால் இல்லை என்பது காட்டுக.
2. சாப்பிடுவதுபோலக் கையால் காட்டுக.
3. வலது கையைநீட்டி வட்ட உருவம்போலக் காட்டுக.
4. கையால் வாயை மூடிக்கொள்க.
5. கையில் மணிபிடித்தாட்டுவதுபோல ஆட்டிக்காட்டுக.
6. கையால் கழுத்தைத்தொடுக.

C. GOPALA AIYANGAR,
*Govt. Training School, Tanjore.*

# RULES FOR ELEMENTARY SCHOOLS.

## எலிமெண்டரி பாடசாலைகளுக்குரிய சட்டங்கள்.

---

### 1. அங்கீகாரம். (*Recognition.*)

எலிமெண்டரி பாடசாலைகளின் அங்கீகாரம் இனிஸ்பெக்டருடைய அதிகாரத்திற்குட்பட்டது. மூன்றாவது வகுப்பிற்குமேல் ஒவ்வொரு வகுப்பையும் தனித்தனியாக அங்கீகாரஞ் செய்யப்படும். இப்பாடசாலைகளின் அங்கீகாரம், அவ்வவ்விடத்திற்கு கல்விச்சாலை இன்றியமையாத தென்பதற்கு போதுமான காரணங்களையும், இவ்வதிகாரத்தில் சொல்லியிருக்கும் நிபந்தனைகளையும் பொருந்தியிருக்கின்றன. அங்கீகாரத்திற்கு, ஏற்படுத்தியுள்ளபாரத்தில் விணப்பித்துக் கொள்ளவேண்டும்.

குறிப்பு:— "இனிஸ்பெக்டர்" என்பது பெண்பாடசாலைகளின் "இனிஸ்பெக்ட்ரஸ்" ஐயும் குறிக்கும்.

### 2. உபாத்தியாயர்களின் யோக்கியதையும், தொகையும். (*Qalifications and Number of Teachers.*)

எலிமெண்டரி பாடசாலைகளின் உபாத்தியாயர்கள், போதனை முறைக்குத் தகுந்தவர்களென்று அங்கீகரிக்கப்பட்டவர்களாவது ட்ரெயின்டு டீசர்ஸ் ஸர்டிபிகேட் (Trained teachers' certificates) பெற்றவர்களாவது இருக்கவேண்டும். நான்காவது வகுப்பிற்கு மேற்பட்டுள்ள எலிமெண்டரி பாடசாலைகளின் தலைமை உபாத்தியாயர்கள் ஸெகண்டெரி ட்ரெயின்டுஸர்டிபிகேட் (Secondary trained teachers' certificate) பெற்றவர்களாயிருக்கவேண்டும்.

போதனைக் கல்விச்சாலையில் பயிலாத 35 வயதிற்குட்பட்ட உபாத்தியாயர்களை (Untrained Teachers) சீக்கிரத்தில் ட்ரெயினிங் பாடசாலைக்கு அனுப்பவேண்டும்.

இனிஸ்பெக்டரால், தக்க விசாரணையின்பேரில், உபாத்திமைத் தொழிலுக்கு தகுதியற்றவரென்று மதித்த ஒருவரை எந்தப்பாடசாலையிலாவது நியமித்திருந்தால் அப்பாடசாலையின் அங்கீகாரத்தை மறுக்கவாவது நீக்கவாவது அதிகாரமுண்டு.

பாடசாலையிலுள்ள மொத்த பிள்ளைகளில், 50 பிள்ளைக்கு ஓர் உபாத்தியாயரை நியமிக்க வேண்டும்; என்றாலும், 30 பிள்களைகளுக்கு ஓர் உபாத்தியாயரை வைத்தல் மிக்க நலம்.

3. கட்டடம், மரச்சாமான் கருவிகள்.

(*Building, Furniture and Appliances.*)

பாடசாலைக்கு உபயோகிக்கும் கட்டடம் தகுதியானதாயிருக்க வேண்டும். அக்கட்டடம் சுத்தமாயும், போதுமான வெளிச்சமுடையதாயும் காற்று போக்கு வரவுக்குரியதாயு மிருக்கவேண்டும்.

அதிகமான மரச்சாமான் இருக்கவேண்டு மென்கிற அவசியமில்லை. ஆனால் தகுதியான படங்களும் கருவிகளு மிருக்கவேண்டும்.

4. பாடபுத்தகங்கள். (*Text Books.*)

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்படாத எவ்விதமான புத்தகங்களையும் (மதவிஷயமான புத்தகங்கள் தவிர) பிள்ளைகளாவது உபாத்யாயர்களாவது உபயோகிக்கவாவது பாடசாலைக் காவது கொண்டு வரக்கூடாது. எலிமெண்டரி பாடசாலைகளின் பாடபுத்தக (A list of approved text-books) ஒன்று அப்போதுக் கப்போது வெளியிடப்படும்.

5. ரெஜிஸ்தர்கள். (Regiters.)

கீழ் குறித்துள்ள ரெஜிஸ்தர்களை, ஏற்படுத்தியிருக்கும் பாரத்தில் தயார்செய்து பரிட்சை அதிகாரிகள் வேண்டும்போது ஆஜர்படுத்த வேண்டும் :—

1. அட்மிஷன் ரெஜிஸ்தர் (*A Register of admissions & withdrawals.*)
2. பிள்ளைகளின் ஆஜர்பட்டி (*A Register of Attendence of pupils.*)
3. உபாத்தியாயர்களின் ஆஜர் பட்டி (——— *do* ——— *masters.*)
4. பிள்ளைகளின்விருத்தி, நடக்கைப்பட்டி (—*do*—*Pogress & Conduct.*)
5. இனிஸ் பெக்ஷன் புத்தகம் (*An inspection book.*)



முதல் மூன்று ரெஜிஸ்தர்கள் தலைமை உபாத்தியாயரால் வைக்கப்பட்டிருக்கவேண்டும். இவைகளில் பரிட்சை அதிகாரி பாடசாலைக்கு வரும்போது தணிக்கை கையெழுத்திடவேண்டும் (Counter signature.) இனிஸ் பெக்ஷன் புத்தகத்தில் பரிட்சை அதிகாரி தவிர யாரும் ஒன்றும் எழுதக் கூடாது. இப்புத்தகத்தில் பரிட்சை அதிகாரியால் எழுதப்படும் ஷராக்கள் உபாத்தியாயருக்கு தெரிந்தபாஷையாகயிருக்க வேண்டும். இதோடு "விஸிடர்ஸ்புக்" (Visitor's book) ஒன்று வைக்கவேண்டும். இதில் ஜில்லா உத்தியோகஸ்தர்களாவது இன்னம் யாராவது பாடசாலைக்கு வருபவர்களை அவர்களது அபிப்பிராயத்தை எழுதுவிக்கச் செய்யலாம்.

6. (பிள்ளைகளை) சேர்த்தலும் மேல்வகுப்பிற்கு மாற்றலும்.

(*Admission and Promotion.*)

எலிமெண்டரி பாடசாலையில் சேரவரும் எவ்விதமான பிள்ளையையும் * மாறுதல் சீட்டு (Transfer certificate) கொண்டு வரும்படி கேட்கக்கூடாது. அப்பிள்ளையை தலைமை உபாத்தியாயர் எந்த வகுப்பிற்கு தகுதியென்று நினைக்கிறாரோ அவ்வகுப்பில் சேர்க்க வேண்டும். பரிட்சை அதிகாரிக்கு இஷ்டமானால், ஒரு பிள்ளையை ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்கு மாற்ற உத்திரவு செய்யலாம். அவ்வித மாறுதலை பிள்ளைகளின் விருத்தி நடக்கைப் பட்டியில் (A register of progress and conduct) குறிக்க வேண்டும்.

* இது முந்தி விடுதலைச்சீட்டு (Leaving certificate) என்று வழங்கப் பட்டது.

7. பாடசாலையை விடும்போது கொடுக்கும் நற்சாட்சிப் பத்திரம்.

(*School Leaving Certificate.*)

ஒரு பிள்ளை நான்காவது அல்லது அதற்கு மேல்பட்ட வகுப்பில் தேறி, பாடசாலையை விடும்போது விண்ணப்பஞ் செய்துக் கொண்டால், அங்கீகரித்த பாரத்தில் பாடசாலை விடுதலைச் சர்டிபிகேட் (School Leaving Certificate) கொடுக்கப்படும். இச்சர்டிபிகேட், டைரக்டரால் ஏற்படுத்தியுள்ள நிபந்தனைகளுக்கு மாணக்கன் சுதந்தரவாளு யிருந்தால் பரிட்சை அதிகாரியால் கொடுக்கப்படும். இது "எலிமெண்டரிபாடசாலை விடுதலைச் சர்டிபிகேட்" (Elementary School Leaving Certificate) என்று சொல்லப்படும். இச்சர்டிபிகேட், டைரக்டரால் நெம்பரிட்டு வெளியிட்டுள்ள பாரத்திலிருக்க வேண்டும்.

### 8. போதனை மார்க்கம். (*Medium of Instruction.*)

போதனை பிள்ளைகளினது சாதாரண சுயபாஷையாக விருக்க வேண்டும். இம்மாதிரியை எல்லாமார்க்கத்திலும் கூடிய வரையில் அநுசரிக்க வேண்டும். மகமதிய பிள்ளைகளும், போதிக்கப்படும் பாஷைக்கு அந்நியமான பாஷைப் பிள்ளைகள் சிறுகி இருப்பதும் ஒருவாறு கவனிக்கப் படமாட்டா.

### 9. கல்விக் கிரமம். (*Course of Studies.*)

கல்வி போதிக்கும் வழியை ஏற்படுத்திக்கொண்டு, பரிட்சை அதிகாரியின் அபிப்பிராயத்தின் பேரில் காலநிர்ணயப்பட்டி (Time-table) தயார் செய்ய வேண்டும். எலிமெண்டரி பாடசாலைக்காக பாடப்பட்டி (Curriculum) ஏற்படுத்தாம லிருப்பதால் கல்விகற்பிக்கும் வகை அப்போதுக்கப்போது டிபார்ட்டுமெண்டாரால் வெளியிடப்படும். பரிட்சை அதிகாரிகள் இனிஸ்பெக்ஷன் புத்தகத்தில் (Inspection Book) ஒவ்வொரு உபாத்தியாயரும் எந்தெந்த பாடங்களை கற்பிக்க யோக்கியதை யுள்ளவரென்றும் எந்தெந்த பாடங்களை கற்பிக்கப் பிரயத்தனப்படக் கூடாதென்பதைப் பற்றியும் தன் அபிப்பிராயத்தை குறிக்கவேண்டும். இம்மாதிரியில் இங்லீஷ் கற்பிக்கும் விஷயத்தில் விசேஷமான கவலை எடுத்துக்கொள்ளவேண்டும்.

### 10. பாடசாலை நாள், வருஷம். (*The School Day & Year.*)

நான்குமணி போதனைக்காலம் ஒரு பாடசாலை நாளாகும். ஆனால் குறைந்தது இரண்டுமணிக்கொரு சந்திப்பு இருக்கவேண்டும். அவ்வித சந்திப்பு ஒரே நாளிலாவது இதரநாளாகவாவது இருக்கலாம். எந்தப் பாடசாலையையாவது வகுப்பையாவது, தகுதியானகாரணங்களின்பேரில், நான்குமணிபோதனைக் காலத்தை குறைக்க இனிஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. அவ்விதம் குறைத்த காலத்தை ஒரு பாடசாலை நாளாகக் கருதவேண்டும். முதல் மூன்று கீழ்தர வகுப்புகளுக்கு ஏககாலத்தில் இரண்டுமணி நேரத்திற் கதிகப்படாத போதனை, தகுதியான சாவகாசஞ் கொடாமல் கொடுக்கக்கூடாது.

தினசரி சராசரி வந்தவர்களின் சங்கியை குறைந்தது வருஷத்தில் 150 பாடசாலை நாட்களாகக் கொள்ளப்படும்.

---





## EAGLE.

## கழுகு.

மிருகங்களுள் மிருகேந்திர னிருப்பது போலவே பறவைகளுள்ளும் புள்ளரசனுண்டு. கழுகு, பறவைகளுள் உருவினுற் பெரியதன்றாயினும், வலிமையால் தலைமைத் தன்மை வகித்துள்ளது. சிங்கம் மிருகங்களுள் பெரிய உருவமுடைய தன்றாயினும், மிருகங்களனைத்தையும் அடக்கி யாண்டு மிருகேந்திர னென்னும் பெயர் பூண்டு விளங்குவதேபோல், கழுகும் தன் ஆண்மையால் பக்ஷிஜாலங்களுள் திறமை பூண்டு விளங்குகின்றது.

இவ்விரண்டுஜந்துக்களும் அதிக கம்பீரமான தோற்றமுடையன. சிங்கமும் கழுகும் தமது தேகவன்மையினுல் தாம் செய்யுங் காரியங்களினும், பகைவரை எதிர்க்கும் சமர்களிலும் சற்றும் பின்னிடைவதில்லை. எனினும், இவை இரண்டும் முரட்டுத் தன்மை மிகுதி உடையன. சிங்கத்தைப் போலவே கழுகும் மாமிச பக்ஷணியாக விருக்கின்றது.

கழுகுகளில் பலவகையுண்டு. அவற்றுள் இப்பாடத்தின்தலைப்பிற் காட்டியுள்ள கழுகு ஒருவகையிற் சேர்ந்தது. இஃது சாதாரணமாய் எல்லாத்தேயங்களிலும் வசிப்பதுண்டு. இங்கிலாந்து, ஸ்காத்லாந்து, அீயர்லாந்து முதலிய தேசங்களில் ஒருவகைப் பொன்னிறக் கழுகுகள் உண்டாம்.

இப்பறவை சுமார் மூன்றடி நீளமிருக்கும். அதன் சிறகை அகலவிரித்து ஓர் முனையினின்றும் மற்றோர் முனைவரையில் அளவிட்டால் ஏழெட்டடி நீண்டிருக்கும். அது பல்வகைய நிறங்களோடு தேசவேறுபாட்டிற்கேற்ப அமைந்திருக்கும். கழுகின் உடல், வேறுசில பறவைகளின் உடலேபோல் பெருத்திராவிடினும், அதன் நீண்ட சிறகுகளின் சிறப்பினால் பெரியதோர் பறவைபோலக் காணப்படுகின்றது.

கழுகிற்குத் தலைசிறியது. குரூரமே குடிகொண்ட அதன் கண்கள் மிக்க பிரகாசமாய்க் காணப்படுகின்றன. அதற்கு வெகு கூர்மையான பார்வையுண்டு. அப்பார்வையால் அது நெடுந்தூரம் பார்க்க வல்லது. அதற்கு நுண்மையாய் மோப்பம் பிடிக்குஞ் சக்தியுமதிகம். அதன் அலகு கூறியதாய் முனை வளைந்து மிக வன்மையாயிருக்கும். அதன் கால்கள் மிக்கவலிமை யுடையன. அக்கால்களின் அடிவரையில் சிறகடர்ந்திருக்கும். ஒவ்வொரு காலிலும் நான்கு விரல்களுண்டு. அவ்விரல்களினுனியில் நீண்டு கூறிய நகங்களுண்டு.

கழுகுகள் தம்மினத்தோடு கூடி வசிப்பதின்று, அவை தனித்து ஆணும் பெண்ணுமாய், மலைக்குவட்டினும், சாரல்களிலும் கூடுகட்டி வசிக்கும். அவை தம் கூட்டை மரக்கிளைகளாலும், வளார் முதலியவற்றாலும் உறுதியாக வமைக்கும். அதில் பெட்டைக் கழுகு இரண்டு முட்டைகளிட்டு அடைகாத்துக் குஞ்சுபொறிக்கும். அக்குஞ்சுகளுக்குத் தந்தை தாயாகிய இரண்டு பறவைகளும் இறை தேடிக் கொணர்ந்து அன்புடனருந்தும்.

கழுகு, ஆகாயத்தில் அதிகதூரஞ்சென்று, முபல், ஆட்டுக்குட்டி முதலியவற்றைப் பற்றிக் கொன்றுதின்னும். அது அதிவேகமாகவும் பறக்கவல்லது. அது ஆகாயத்தில் நிகரற்றுப் பறந்து திரியும்போதுத் தன் செட்டைகளின் வன்மையைத் தானேயுணர்ந்து சந்தோஷித்து உலவுவது போன்று தோற்றும்.

கழுகு அண்மையிலேனும், சேய்மையிலேனும் பறவை அல்லது விலங்கைக்காணுமாயின், உடனே தன் சிறகுகளை விரித்துத் தலை கீழாகக் கவிழ்ந்து ஒரேமுறையில் அதன் மீது பாய்ந்து, அப்பிராணியைக் கால்களிலுள்ள வலிய நகங்களாற் பற்றிக்கொண்டு கீழே பாய்ந்த வேகமேபோல், மேலுயர்ந்து செல்லும். அது தான் பார்க்கும் குறிப்பை ஒருபோதும் தப்புவதில்லை. ஏதேனும் இரையகப் பட்டதும் அதனைப் பற்றிக்கொண்டு தன் கூட்டை யடையும்.



## A BRIEF ACCOUNT OF THE EAST INDIA MUSEUM.

## லண்டன் நகரத்தில் வைத்திருக்கும் இந்து தேசத்து விநோதக் காட்சிசாலையின் வரலாறு.

ஈஸ்டு இந்தியா கம்பெனி என்னும் சங்கத்தார் சென்ற 1857-ம் ௵ வரையில் ஜனங்களுக்கு எவ்விதத்திலும் நன்மையையே பாராட்டிக்கொண்டு வெகு சிறப்புடன் நமது தேசத்தை அரசாண்டு வந்தார்களல்லவா? இப்போது அவ்வரசாட்சி ராஜாங்கத்தைச் சேர்ந்துபோய் பற்பல வருஷம் ஆய்விட்டபோதிலும், ஸாதாரண ஜனங்கள் அநேகமாய் இன்னும் கம்பெனியார் அரசாட்சியென்றே வியவஹரித்துவருகிறார்கள். அவ்வளவு மேன்மையுடன் அவர்கள் அரசாண்டகாலத்தில் அவர்களுக்கு லண்டன் நகரத்தில் லீடன் ஹால் என்னும் தெருவில் உத்தியோகசாலை ஒன்றிருந்தது. இப்போது அந்தச் சாலை அழிந்துபோயிருந்தாலும், அது சிறப்புற்றிருந்தகாலத்தில் இவ்விந்தியாவிலுள்ள விநோதங்களைக் கொண்டுவைப்பதற்காக அதில் சில அறைகள் கட்டி வைத்திருந்தனர். இத்தேசத்திற்கு வந்திருந்த கம்பெனி உத்தியோகஸ்தர் அநேகர் தங்களுக்குக் கிடைத்த இத்தேசத்துச் சிறந்த மாதிரிகளைக் கொண்டுபோய் அதிகாரிகளுக்குக் கொடுத்தார்கள். சுதேச ராஜாக்களும், சிறந்த பல ஆயுதங்களையும், பலவர்ணமான பட்டாடைகளையும், பல தையல்விநோதங்களையும் வெள்ளியாலும் தங்கத்தினாலும் செய்த தகடுகளையும், இன்னும் அநேக விலையுயர்ந்த வஸ்துக்களையும் அவர்களுக்கு வெகுமதிகளாகக் கொடுத்தார்சள். மேலும் அவர்கள் தாங்கள் வெற்றி கொண்ட அரசர்கள் நாட்டியிருந்த ஜயஸ்தம்பங்களையெல்லாம் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். இவ்வகையாய்ச் சேர்ந்த பல காட்சிப்பொருள்களெல்லாம் 1798-ம் ௵ வரையில் ஒழுங்கற்றுத் தலைகாலில்லாமல் போட்டுக்கிடந்தன. அதன்பிறகு ஒருவர் அதற்கு விசாரணைத்தலைவராய் ஏற்பட்டு அதை ஒரு விநோதக் காட்சிசாலையாய்ச் சீர்திருத்தினார். அதற்காகச் சிலர் அநேகம் அற்புதவேலைகளுக்கு உபயோகமான விருட்சவகைகளைக்கொடுத்து உதவினார். வளர்கிற விருட்சங்களையன்று. விதைகளும் வேர்களும், கிழங்குகளும், இலைகளும், கிளைகளும் கொடிகளும், கொட்டைகளும் பட்டைகளும், பூக்களும் பூந்தாதுகளும், காய்களும் கனிகளும், பலகைகளும் இன்னும் அநேக மாதிரிகளும் கொண்டுசேர்த்து ஸ்தாவரசாஸ்திரத்தை

நன்றாய்ப்படித்து ஒவ்வொரு வஸ்துவின் குணகுணங்களையும் நன்றாய் அறிந்துகொண்டார்கள். சூலாஜி என்பவர் இத்தேசத்திலுள்ள பற்பல பக்ஷிகளுடைய மாதிரிகளையும் நாற்கால் ஜந்துக்களின் மாதிரிகளையும் தேடிக்கொடுத்ததுமன்றியில், அவைகளுடைய தன்மையையும் உபயோகங்களையும் திருஷ்டாந்தத்தோடு சேகரித்துக்கொடுத்தார்.

அந்த இந்துதேசத்து விநோதசாலையில் வைத்திருந்த காட்சிகள் முற்காலத்தில் ஒன்றோடொன்று ஒவ்வாதவைகளாயிருந்தன. மேலும் முன்னாளில் அந்தச் சாலையை நன்றாய்ப்பார்த்த பெரியோர்கள் அந்தச் சாலை அவ்வளவு விநோதக்காட்சிகள் வைத்துக் காட்டுவற்குத் தகுதியானவிடமாய் இருக்கவில்லையென்று துணிவாய்ச் சொல்லுவார்கள். அங்கே ஐந்தாறு அறைகள்தான் இருந்தன. அதைச்சுற்றி மதில் எடுக்கப்பட்டிருந்தது. அது முதலில் பலபொருட்காட்சிசாலை என்று உத்தேசித்துக் கட்டப் படாமையால் அதற்குப் பொருந்தியிருக்கவில்லை. அதனால் அந்தச் சாலை வந்து பார்ப்போர்களுக்கு மனதில் ஓர் அற்புதத்தை உண்டாக்காமல் இருந்ததுமன்றி, அதில் விசாரணைத்தலைமை நடத்திவந்தவருக்கும் திருப்திகரமாயிருக்கவில்லை. காட்சிப்பொருள்களும் ஒழுங்காய்ச் சீர்ப்படுத்தப்படவில்லை. பல சித்திரவேலை, வர்ணவேலை, நாநாவர்ணவேலைப்பாடுகள், தந்தவேலை, தச்சுவேலை, கல்வெட்டுகள் இவை முதலிய பல சிற்பவேலைகளும் வர்ணம்கொடுத்து அழகுசெய்த வைரக்கற்கள், முத்துக்கள், சிறந்த ரத்னங்கள், பொன் வெள்ளி முதலியவைகளால் செய்த பூஷணங்களும், பட்டுப்புடவைகள் பட்டுவஸ்திரங்கள், தகடுகள், சிறந்த தவாணிகள், சால்வைகள் முதலான ஆடைவகைகளும் இவைமுதலியவெல்லாம் ஒன்றோடொன்று வேறுபாடில்லாமல் ஒன்றின்மேலொன்றாய்ப் பரப்பிக்கிடந்தன. இவைகள்மாத்திரமேயல்ல, மைசூரில் திப்புசுல்தான் அரசாண்டுவந்தகாலத்தில் தன் விநோதத்திற்காக ஓர் அற்புதமான வேங்கையொன்று வைத்துக்கொண்டு இருந்தான். அது இவ்விந்ததேசத்திலிருந்த விநோதங்களுள் வெகு ஆச்சரியகரமானது. அது ஒரு இங்கிலாந்துப் போர்ச்சேவகன்மேல் பாய்ந்து கடித்துப் பீறுவதுபோல மரத்தினால் செதுக்கி வெகு விநோதமாய்ச் சித்திரவேலைகளும் செய்யப்பட்டது. இதுவன்றியில் அதின் வயிற்றில் ஒரு யந்திரமுண்டு. மேலே வைத்திருக்கிற திறவுகோலை முடுக்கினால் புலி மனிதன்மேல் பாயும்படி உறுமுவதுபோலவும், அதைக்



கேட்டு மனிதன் சிணுங்கி அழுவதுபோலவும் இரண்டுவகையாய்த் தொனி கிளப்பும். திப்பு, தான் கண்டு களித்துவந்த இன்பமான விநோதங்களில் இதுவும் ஒன்று. அவன் ராஜாவாயிருக்கையில் புலி மனிதன்மேல் பாய்வதாகவும் அதைக் கண்டு பகைவர் புலம்புவதாகவும் நினைத்துப் பேராநந்தமடைவான். அந்தப் பெருமைபொருந்திய புலியையும் 1794-ஆம் வருடத்தில் சீரங்கபட்டணத்தில் திப்பு தோல்வியடைந்தவுடன் ஆவன் அரண்மனையில் இருந்து கொண்டுபோய் அச்சாலையில் வைத்தார்கள்.

இவ்விந்தியாவின் அரசாட்சியும் கம்பெனியாரைவிட்டு ராஜாங்கத்தில் சேர்ந்து அந்த உத்தியோகசாலையும் எடுபட்டுப்போனவுடன் இக்காட்சிகளையெடுத்து வெண்மாளிகை என்னும் இடத்திலுள்ள பைப்ஹௌஸ் என்கிற ஒருபெரிய சாலையில் கொண்டுவைத்தார்கள். அவ்விடத்தில் வந்து சேர்ந்தவுடன் அந்தச் சாலை வரவர விருத்தியாய்க்கொண்டேவந்தது. டாக்டர் போர்பெஸ் வாட்சன் என்பவர் அதற்கு விசாரணைத்தலைவராயிருந்து அதைச் செம்மையாய்ப் பரிபாலித்துவந்தார். அப்போது இந்தியாவின் உற்பத்திகளை ராஜாங்கத்தாருக்கு அறிக்கைசெய்யவேண்டுமென்று அந்த உத்தியோகத்தையும் அவருக்கே ஏற்படுத்தினார்கள். அப்போது ராஜாங்கத்தாருக்கு எப்படியாவது நியாயமானவழியாய் இந்தியாவை பலப்படுத்தவேண்டுமென்பது அவசியமாயிருந்தது. பின்னல் சாமான்கள் காகிதம் முதலிய அநேக காரியங்களுக்குத் தக்கதான நார்வகைகள் அநேகமாய் இவ்விந்தியாவில் விளைகின்றனவென்பது அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். வயல்களில் பயிர் செய்யப்பட்டதானாலுஞ்சரி, அல்லது காடுகளில் கிடைத்ததானாலுஞ்சரி, சகலவிதமான நார்களும் எவ்வளவு விலைக்கு இங்கிலாந்தில் வாங்கக்கூடும் என்று நிதானிக்கவேண்டுவது அவசியம். முன்னே அதற்கு விசாரணைத்தலைவராயிருந்த டாக்டர் ராயல் என்பவர் அதை விருத்திபண்ணுவதற்காக அநேக காரியங்கள் செய்தார். இவ்விந்துதேசத்திலுள்ள நார்வகைகளையெல்லாம் சேகரித்து அவைகளின் குணங்களையும் ஒரு புத்தகத்தில் பிரசித்தப்படுத்தினார். முதலில் அவைகளை வெவ்வேறுவகையாகப் பிரித்து அவைகள் விளையும் பூமிகளையும், அவைகளைப் பயிர்செய்யும் விதங்களையும், ஒவ்வொன்றுக்குமுள்ள வலிமையையும், அவை இந்தியாவில் விற்கக்கூடிய விலையையும் நன்றாய்த் தெரிவித்து இங்கிலாந்தில் அவைகள் இன்னின்ன வகையான கைத்தொழிலுக்கு

உபயோகப்படுமென்பதையும், இவ்வளவு செலவழித்தால் அந்தச் சரக்குகள் இங்கிலாந்துபோய்ச் சேருமென்பதையும், இன்னும் அவைகளுக்கு உபயோகமான பல விஷங்களையும் விவரமாய் எழுதிப் பிரசித்தப்படுத்தினர். அதன்படியே அந்தக் காட்சிசாலை பைப்ஹௌஸில் வைத்திருக்கும்போது பலவகையான தினுசுகள் வரவழைத்து ஒழுங்செய்து வைத்திருந்தார்கள்.

அந்தக் காட்சிசாலை பைப்ஹௌஸில் வைத்திருந்த காலத்தில் இந்து தேசத்து உத்தியோகசாலை என்று ஒரு சிறந்தமாளிகை கட்டும்படி உத்தேசித்து, அப்படியே அநேகம் தொழில்கள் செய்ய உபயோகமாம்படி அதிக விசாலமாய் வெண்மாளிகை என்னும் இடத்தில் ஒரு சாலை கட்டினார்கள். ஆயினும் அப்போது கலகங்கள் உண்டாயிருந்ததனால் இந்தக் காட்சி வைக்கத்தக்கதாயும் இவ்விந்து தேசத்துப் புத்தகங்களைச் சேகரித்து சிறந்த புத்தகசாலை ஒன்று ஏற்படுத்தத்தக்கதாயும் விசாலமாய் அதைச்சார்ந்த ஓரிடம் கட்டக்கூடாமற் போயிற்று. பைப்ஹௌஸ் என்னும் இடம் வேறொரு காரியத்திற்கு அவசியமாய் வேண்டி யிருந்ததனால் அதிலிருந்த காட்சிசாலையை அதைவிட்டு எடுத்துவிட வேண்டியதாயிற்று. அக்காலத்தில் ஏற்பட்ட ஒழுங்குப்பாடு சிறந்ததா யிருக்கவில்லை. அந்த உத்தியோகசாலையின் மேற்புறத்தில் பலகை யறைகள் ஏற்படுத்தி அதிலே அவைகளை வைக்கும்படி ஏற்பாடாயிற்று. அதற்கு ஏறிப்போக வேண்டிய வழி வெகு நெருக்கமா யிருந்தது. மேற்புறமெல்லாம் கண்ணாடியாலேயே மூடியிருந்தபடியால் பிரகாசமாத்திரம் அதிகமாயிருக்குமாயினும் காற்றுப்போக்கு இல்லாமையால் வெயிற்காலங்களில் தாபம் மிகவும் அதிகரிக்கும். அவ்விடத்தில் சென்ற 1875-ம் ௵ ஜூன்௴ 1௳ வருஷாந்தக் காட்சி வைத்தார்கள். அதன் மேற்றளங்களெல்லாம் மேலே கண்ணாடியால் மூடப்பட்டிருக்கிறபடியால் நன்றாய்ப் பார்க்கத்தக்க விடந்தான். அடிப்புறங்களுக்கு மாத்திரம் ஒரு பக்கத்துப் பலகணி வாயில்களால் மாத்திரம் ஒளிவர வேண்டியிருந்ததனால் அவ்வளவு நன்றாயிருக்கவில்லை.

அப்போது அவர்கள் வைத்திருந்த பொருள்கள் எல்லாவற்றையும் வெளியில் காட்டவில்லை. இடமில்லாமையால் வெளியிற் காட்டாமல் அநேகம் உள்ளேயேபோட்டுக்கிடந்தன. காட்சிப்பொருள்கள் முன்னிருந்ததைவிட அப்போது அதிகமாயிருந்ததுமன்றி, வரவர அதிகமாய்ச் சேர்ந்துகொண்டே யிருந்தன. இதனால் இவ்விந்து தேசத்திலுள்ள நானாவிதமான வஸ்துவகைகளும் அவ்விடத்தில் போய்ச்சேர்ந்து இருக்கின்றனவென்றும் யாவர்க்கும் தெரியலாம். ராஜாங்கத்துக்குரிய சாமான்கள் வர்த்தகச்சாமான்கள், பயிர்த்தொழிற் சாமான்கள், அந்தந்த ஜாதிக்குரியவை மதத்துக்குரியவை முதலிய எவ்வகைச் சாமான்களும் அபரிமிதமாய் அவ்விடத்தில் நிறைந்திருக்கின்றன. இத்தேசத்தாருக் குரிய ஆயுத வகைகளில் துப்பாக்கி சிறுதுப்பாக்கி, கைத்துப்பாக்கி, உடைவாள், குத்துவாள், ஈட்டி, வேல், கத்தி, கேடயம், மழு முதலிய எல்லா ஆயுதங்களுக்கும் மாதிரிகள் காணலாம். கீதவாத்தியங்களுக் குரிய கருவிகளில் பேரி, தம்பட்டம் முதலிய பேரொலிவாத்திய முதற்கொண்டு வீணை தம்புருவரையிலுமுள்ள எல்லாவகைகளையும் காணலாம். ஹிந்துக்களும் மஹம்மதியர்களும் உடுக்கும் எல்லாவுடைகளும், அந்தந்த உடைகளாகவும், அதே அழகோடு சித்திரித்தபடங்களாகவும் காணப்படுகின்றன. அவைகளுள் பட்டு, பருத்தி, சணல், உரோமம் முதலியவைகளால் நெய்யப்பட்ட பற்பலவித ஆடைகளின் மாதிரிகளையும் காணலாம். நார் விதை முதலிய விருக்ஷவகைகளின் மாதிரிகளும், பிராணிவர்க்கம் தாதுவர்க்கம் இவைகளிலுண்டான பொருள்களின் மாதிரிகளும் வைத்திருப்பதைப்பற்றி முன்னமே குறித்துச் சொல்லியிருக்கிறோம். இவைகளோடு இத்தேசத்தார் சாதாரணமாய்த் தினந்தோறும் உபயோகிக்கின்ற சாமான்கள் விசேஷமாய்க் காணப்படுகின்றது. பானைசட்டி, அம்மி, குழவி, சொம்பு, தவலை, குடம், கரண்டி முதலியவைகளும், காறு, கலப்பை, கத்தி, வாள், கோடரி, அரிவாள், கட்டைப்பார் முதலியவைகளும் விமானம், அம்பாரி, பல்லாக்கு, வண்டி, காடி முதலியவைகளும் அனேகமாயுண்டு.



இவ்வாறு சிறந்த காட்சிசாலை இடம் மாறுத லிவ்வளவோடு முடிவுபெறவில்லை. முதலில் ஈஸ்த்திண்டியா கம்பனியாரிட வியாபாரசாலையிலிருந்து பைப்ஹௌஸ் (Fife house) என்னும் இடத்திற்குப்போயிற்று. அங்கிருந்து புதிதாய் கட்டிய இந்துதேச உத்தியோக சாலைக்குப் போயிற்று. சென்ற 1875-௵த்தில் அவ்விடம் விட்டு ஸௌத் கென்ஸிங்டன் என்னும் இடத்திற்கு வந்தது. அதுவும் கொஞ்சகாலம் குடியிருக்கத் தக்கவிடமேயன்றி நிலையன்று. இப்போது துரைத்தனத்தார் அவர்கள் சேகரித்து வைத்திருக்கும் எல்லாப் பொருள்களையும் ஒழுங்காய்க் காட்சிவைப்பதற்கும் இத்தேசத்துப் புத்தகசாலை வைப்பதற்கும் இன்னும் சில காரியங்களுக்

கும் உபயோகமானதாய்ப் பெரிய சாலையொன்று கட்டுப்படி யத்தனித்திருக்கிறார்கள்.

டாக்டர் போர்பஸ் வாட்ஸன் என்பவர் இதை வர்த்தகப் பொருட்காட்சிசாலை யாக்கவேண்டுமென்று சொல்லுகிறார். அதற்கு வேண்டிய சரக்குகளும் அனேகமாய் அவ்விடத்தில் சேர்ந்திருக்கின்றன. இவ்விந்து தேசத்தில் உண்டான பலவகை நெசவுச்சரக்குகளுக்கும் மாதிரிகள் சேகரித்து அவைகளையெல்லாம் ஒரே அளவாய்த் துண்டித்து ஒழுங்குப்படுத்திக் கட்டி வைத்து இருக்கிறார்கள். அவை எழுநூற்றுக்கு அதிகமாய் இருக்கின்றன. இவைகளுள் ஒவ்வொன்றின் பக்கத்திலும் ஒவ்வொரு கடுதாசி சேர்த்து அவைகளில் அந்தந்த மாதிரிகளுக்கு ஆதாரமான நகர்கள், உண்டாகுமிடம், அவை நெய்புமிடம், அவைகளின் குணம், விளையுமிடத்தில் அவை கட்டுள்ள விலை முதலியவைகளெல்லாம் சுருக்கமாய் அச்சிட்டுக் காட்டியிருக்கின்றன. இவைகளோடு இத்தேசத்து ஜனங்கள் அநேகரை அவரவர்களுக்குரிய ஆடையபூகோடு படமாய் சித்திரித்துவைத்து இருக்கிறார்கள்.

இவ்வாறு இவ்விந்துதேசத்துச் சகல விநோதப் பொருள்களும் நிறைந்த காட்சிசாலையில், சென்ற 1875-வருஷத்தில் இத்தேசத்திற்குக் காட்சியளிக்கும்படி இவ்விடத்திற்கு விஜயஞ்செய்திருந்த நமது இளவரசராகிய பிரின்ஸ் ஆவ் வேல்ஸ் மகாப்பிரபு, இத்தேசத்துப் பிரபுக்களும் கனவான்களும் தமக்குப் பரிசாகக்கொடுத்த பொருள்களையெல்லாம் விநோதக் காட்சியாகக்கொண்டு வைத்திருக்கிறாராம்.

---

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 13 MAY 1907 MADRAS.


# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது. 2. | 1907 ௵ மார்ச்சு ௴ | மாதம் 10.


## WHAT IS ABOVE THE EARTH.

## இவ்வுலகத்திற்குமேல் என்ன இருக்கிறது.

ஆகாயமளாவிய மரங்களும், செழித்துவளர்ந்தசெடிகொடிகளுமாய் நிறைந்திருந்த ஓர் வனத்தில் சிறிய குளம் ஒன்றிருந்தது. அதனுடைய நீரோரங்களி லெல்லாம் ஜாலர்கட்டினதுபோல் நாணல், ஜம்பு, கோரை முதலியவைகளும் செழுமையாய்ப் படர்ந்து வளர்ந்திருந்தன. அக்குளத்தினது பளிங்குபோல் நிர்மலமான நீரில் கரையிலிருக்கின்ற மரமுதலிய யாவும் பிரதிபலிக்கும்போது இவைகள் மேலும் கீழுமாய் இரண்டுபேருருவமுள்ளனவோ என்று யாவரும் வியக்கத்தக்கதா யிருந்தது.

அந்தக் குளத்திலிருந்த,(இனி தம்பியாகும்)ஒரு நீர்வண்டு தம் மினத்தோடு கூடி ஆகாரத்தினிமித்தம் ஜலத்தில் கொந்தளித்துத் திரிகையில்; தம்மவரை நோக்கி: "தவளையானது இவ்வுலகத்திலிருந்து மேலேகுதித்துப் போனபின்பு நமது கண்ணுக்கெட்டாமல் எவ்விதமாகிறதோ அது எனக்கு வெகு ஆச்சரியமாயிருக்கிறது; அதை எப்படியாவது அறியவேண்டும். அது இவ்விடத்தை விட்டுப் போய்விட்டால் மறுபடியும் நமக்குத் தெரியாமலே திரும்பி வந்து நம்மோடு சேருகிறவரையில் அதின் சங்கதியொன்றும் நமக்குப் புலப்படுகிறதில்லையே. அது போகிற இடம் யாருக்காவது தெரியுமோ? தெரிந்திருந்தால் சொல்லுங்கள்?" என்றது.

இந்த விசாரத்தைக் கேட்டு அங்கிருந்த நீர்வாழ் ஜந்துக்களிலொன்று : “ அது இன்னதைச் செய்கிறதென்பதையறிய யாருக்கு அக்கறை ; அது எப்படிப்போனால் நமக்கென்ன ?” என்றது.

மற்றொன்று : “ உன் வயிற்றுப்பாட்டை நீ பார் ; நீரில் கிடக்கிற உனக்கு நாட்டுவளப்பமேன் ?” என்றது.

அதைக்கேட்டு விசாரமுள்ள அத்தும்பிவண்டானது: “அதை அறியவேண்டுமென்று எனக்கு அதிக அபேக்ஷையாயிருக்கிறது. நீங்களெல்லாம் என் பக்கத்தில் வரும்போது நான் உங்களை நன்றாய் பார்க்கிறேன். உங்களைக் காணவிட்டால் அப்புறம் போய் விட்டீர்களென்று அறிந்துகொள்ளுகிறேன். தவளையை மாத்திரம் அப்படி அறியக்கூடவில்லை. அதின் பின்னோடு போய்க் கொண்டிருக்கும்போதே திடீரென்று எழும்பிக் கண்ணுக்குத் தெரியாமல் போய்விடுகிறதே. அது இவ்வுலகத்தை விட்டு வெளியில்போகிறதோ ? இவ்வுலகத்துக் கப்புறம் என்னவிருக்கும் ?” என்றுகேட்டது.

அதற்கு மற்றொன்று முன்னின்று:“ நீ என்ன, வீணாவீணாயிருக்கிறாய்; மேலே என்ன இருந்தாலென்ன, கீழே என்ன இருந்தாலென்ன, அதை நீ விசாரிப்பானேன் ? நீ வாசம்பண்ணுகிற உலகத்தைப்பற்றி மாத்திரம் கவனமாயிரு. இதற்குமேல் மற்றொரு உலகமிருந்தால் அங்குள்ளார் விசாரித்துக் கொள்வார்கள். இதோ பார் உன்னுடைய வீண்விசாரத்தால் வாயில் விழுகிற இரை தப்பிப் போய்விட்டதே ” என்று சொல்லிக்கொண்டே பக்கத்தில் வந்த ஒரு சிறியபூச்சியைப் பிடித்துக்கொண்டது.

இதைப்பார்த்து அது தன் பேராவல் கொஞ்சம் தணிந்து தன் தொழிலை ஆரம்பித்து என்னசெய்தாலும், தவளைப்போக்கை விசாரிக்கும் ஞாபகமாத்திரம் போகவே இல்லை. தவளை மேலே போகிறதே, அங்கே என்ன இருக்கிறதோ என்று அக்கம்பக்கத்திலிருப்பவைகளை நச்சுநச்சென்று கேட்டுக்கொண்டு அதே பெரிய கவலையாயிருந்தது.

அப்போது அதன்பக்கத்தில் அசரை என்கிற ஒரு சிறுமீன் கூட்டம் வந்து அதின் கவலையைப் பார்த்து, அவைகளுக்கொரு சங்கதியும் தெரியாததால் பேசாமல் போய்விட்டன. பின்னோடு மலங்கு மீன்கள் இந்தத்தொல்லை நமக்கேனென்று செவிகொடாமல் சேற்றில் ஒதுங்கிப்போய் மறைந்துவிட்டன.



அப்பொழுது தும்பிவண்டு வரவர ஆவல் அதிகமாய் நாற்புறத்திலும் ஓடித்திரிந்து தன்னினங்களை எல்லாம் இம்மாதிரியான கேள்விகளால் தூண்டி அவைகளுமறிய விரும்பும்படி செய்தது.

இப்படி அது கேட்டுக்கொண்டு போகையில், நடுவே உளையொன்றிருந்தது. அங்கே பச்சை நிறமுள்ள பருத்த தவளையொன்று குதித்தோடி வந்தது. அப்போது அசரை மீன் ஒன்று “ இதோ தவளை வந்தது ; அதைக்கேள் ” என்றது.

அதற்கு அவ்வண்டு நீ சொன்னது நல்லயுக்தியாய்த்தான் காண்கின்றது ; சொல்வதற்கு எளிதுதான், செய்வதற்கோ அரிதாயிருக்கின்றதே. ஏனெனில் தவளை மிக்க கனம்பொருந்தியது. ஜந்துக்களெல்லாம் அதைப் பார்ப்பதற்கே பயப்படும். அதனண்டை போய் எதையும் கேட்க ஒன்றுக்கும் தைரியமில்லாமல் விலகி நிற்பது வழக்கம். அப்படித்துணிந்து எதிரில் போய் பேசினால், அது அதிகப் பிரசங்கியென்று நினைத்துக்கொள்ளும் ; ஆயினும் கிட்டின சமயத்தை விடலாமா என்று கிட்டவிருந்த நீராம்பலைச் சுற்றி வட்டமிட்டு, அஞ்சி அஞ்சி முடிவில் தைரியத்தை முடுக்கிக் கொண்டு தவளையைக் கிட்டி, வினயமாய் நின்று ஒருகேள்வி கேட்டது.

“மிகவும் நிர்பாக்கியனான நான் ஒரு வார்த்தை சொல்லும்படி செலவுகொடுக்கச் சித்தமுண்டோ ?” என்றது.

தவளை: இதை ஆச்சரியத்தோடு உருட்டித் திரும்பிப்பார்த்து சொல்லுகிறது:—“நிர்ப்பாக்கியனாயிருந்தால் சும்மா வாயை மூடிக் கொண்டு கிடப்பதே நலம். நான் மனங்களித்திருக்கையில் தான் பேசுகிறது வழக்கம் ” என,

வண்டு: தாங்கள் பேசும்படி எனக்குச் செலவு கொடுத்தால் நானும் மனங்களிப்புள்ளவனாவேன் என்று வண்டு நடுங்கியொடுங்கி சொல்லிற்று.

தவளை: “ எனக்கு என்ன, வதறு ” என்றது.

வண்டு: “ கனம்பொருந்திய தவளையாரே, ஒரு விஷயம் நான் உங்களைக் கேட்கவேண்டும் ?” என,

தவளை: கேட்டுக்கொள்ளேனென்று அலட்சியமாய்ச் சொல்லிற்று.

“ ஐயா, இவ்வுலகத்திற்குமேல் என்னவிருக்கிறது ?” என்று தாழ்ந்தகுரலாய்க் கேட்டது.

"நீ எந்த உலகத்திற்கு மேலே என்று கேட்கிறாய்" எனத் தவளை தன் பிதுங்கசகண்களால் மருள மருள விழித்துக் கேட்டது.

"இந்த உலகந்தான்; நம்முடைய உலகந்தான்" என்று வண்டு கூறியது.

"நீ இந்தக் குளத்தையா சொல்லுகிறாய்?" என்று தவளைகேட்க,

"சரியான பெயரென்னவோ எனக்குத் தெரியாது. இப்போது நாம் வாசம்பண்ணிக் கொண்டிருக்கிற இடத்தைத் தான் சொல்லுகிறேன். இதற்குத் தாங்கள் ஏதாவது பேரிடுங்கள். இதைத் தான் யான் உலகம் என்கிறேன்" என்று துடுக்காய் விடை கொடுத்தது.

அடா வண்டே! உலகமென்கிறாயே? "ஆனால் நீ வாஸம் பண்ணுதவிடம் எது? மேலுலகமா அடா?" என்று தவளை நகைத்துப் பரியாசமாய்க் கேட்டது.

நான் கேட்கிறதும் அதுதான், "அதைத்தான் விளங்கச்சொல்ல வேண்டும்?" என்று வண்டு சொல்ல,

தவளை: கண்களை ஏளனம் செய்வதுபோல சிமிட்டிப்பார்த்து, "அப்படியா சிறுபயலே, சொல்லுகிறேன் கேள்: நீ கேட்கிறது உலகத்தாரை" என்றது.

சற்றுநேரம் பேசாதிருந்து வண்டு: "ஐயா, அங்கேகூட நீந்தலாமோ?" என்று வினயமாய்க் கேட்க,

"அதெப்படி நீந்தலாம்? தரை எப்படியடா நீராகும்? அது அல்லவென்றுதானே சொல்லுகிறேன்" என்று தவளை மிடுக்காய்க் கூறிற்று.

வண்டு: அல்லவென்கிறீரே, அங்கே வேறு என்ன இருக்கிறதோ எனக்குச் சொல்லவேண்டுமே, என,

அதற்குத் தவளை: "துராக்ஷேபம்பண்ணுகிறவர்களுள் உன்னைப்போல தொந்தரைசெய்கிறவன் ஒருவனையும் நான் பார்த்ததில்லை" என்று சற்று உதாசினமாய்ச் சொல்லி நல்லது, தரையாவது இக்குளத்தடியில் சேறு இருக்கிறதே, ஏறக்குறைய அதுபோலேதான் தரையிருக்கும்; ஆனால் அங்கே ஜலமில்லை. அதனால் ஈரம்பற்றியிராது என்றது.

வண்டு உடனே "அப்படியா! ஆனால் அங்கே வேறு என்ன இருக்கிறது?" என மறுபடியும் வினவ,



தவளை: "அதுதான் சொல்வது வருத்தம்; அங்கே என்னவோயிருக்கிறது; அதை ஆகாயம் என்கிறார்கள்; அதை விவரமாய்ச் சொல்ல எனக்குத்தெரியாது; எனக்கு ஒன்று தோன்றுகிறது: அதாவது, ஒன்றுமில்லையெனச் சொல்லலாம்; தெரிந்ததா, அடா பயலே?" என்று தவளைசொல்லிற்று.

வண்டு: "செவ்வையாய்த் தெரியவில்லை ஐயா" என,

தவளை: "நானும் அப்படித்தான் நினைத்தேன். இப்போ நான் ஒருகாரியம் சொல்லுகிறேன்; இனிமேல் இம்மாதிரியான கேள்விகளைக் கேளாதே. இதனால் யாதொரு நன்மையும் உனக்குக் கிடைக்காது என்று இடித்துப் புத்திசொல்லிற்று.

"கனம்பொருந்தியவரே! தாங்கள் சொல்லியது எனக்குச் சரியாய்த் தோன்றவில்லை. அங்கே என்ன இருக்கிறதோ அதை அறிந்துகொள்வேனானால், அதில் அதிக நன்மையிருக்குமென்று நான் எண்ணுகிறேன். எனக்கு இப்பொழுதிருக்கும் அவா தணிந்து இருப்பிடத்தோடு திருப்தியுள்ளவனாயிருந்தால் அதுவே ஒரு நன்மையல்லவா? இப்போது அது தெரியாமையால் வெகு வருத்தப்படுகிறேன்" என்று வண்டு முறையிட்டுக்கொண்டது.

தவளை. "நீ என்ன சுத்தமூடனாயிருக்கிறாய், ஏதோ ஒன்றைப் பரீக்ஷிப்பதற்காக இவ்வளவு அதிர்ப்தனாயிருக்கலாமா? இதற்காக நீ வருத்தப்படுகிறது சரியல்லவென்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால் உன்னுடைய விடாமுயற்சியைப் பார்த்தால்மாத்திரம் சற்று ஸந்தோஷமாயிருக்கிறது. ஒரு உபாயம் சொல்லுகிறேன் கேள்: என் முதுகின்மேல் ஏறிக்கொள். நான் உன்னைத் தரைமேல் கொண்டுபோகிறேன். அங்கே என்ன இருக்கிறதோ நீயே பார்த்துக் கொள்ளலாம். அதுவும் எனக்கு முட்டாள் தனமாய்த்தான் தோன்றுகிறது. ஆயினும் உன் இஷ்டப்படி என்னாலானதை நான் செய்கிறேன்" என,

வண்டு: "தங்கள் சித்தம் என் பாக்கியம். அவ்வளவு தயவு செய்வீர்களானால் தங்களிடத்தில் எனக்கு உண்டாகிற நன்றிக்கு அளவேது?" என்றது.

தவளை: "என் முதுகின்மேலேறி உட்கார்ந்து கெட்டியாய்ப் பிடித்துக்கொள், இல்லாவிடில் நான் ஜலத்தைவிட்டு மேலேகுதித்துப் போகும்போது நழுகி வீழ்ந்துபோவாய்" என்று புத்திசொல்லிற்று.

வண்டும் அதற்கு ஒப்புக்கொண்டு முதுகின்மேலேறி கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டது.

தவளை: "பத்திரம் பத்திரம்; கெட்டியாய்ப் பிடித்துக்கொள் என்று அடுத்தடுத்துச்சொல்லி மெல்ல எழும்பிக்கரைமேல் வந்து நாணலோரமாய் உட்கார்ந்து, "இதோ வந்துவிட்டோம், இதுதான் தரை, உனக்கு என்னவென்று தோன்றுகிறது?" என்றுகேட்டது.

அதற்குப் பிரதியுத்தரம் ஒன்றுமில்லாமையால், தவளை: ஐயோ! முட்டாள்வண்டே, நழுவிப்போய்விட்டையா" என்று மனதிரங்கி: "என்ன விபத்துவந்தது' நாம் நினைத்தபடியே ஆய்விட்டதே; என்னசெய்யலாம். இங்கே எங்கேயாவது விழுந்திருக்குமோ, எப்படியாவது கரையோரத்தில் தற்செயலாய் வந்து சேருமோ என்னவோ சற்றுநேரம் தேடிப்பார்ப்போம்" என்று இங்குமங்கும் நாணல் ஓரத்தில் குதித்துக்குதித்து இமைகொட்டாமல் தேடிக்கொண்டிருந்தது.

இது இப்படியிருக்கையில், அஜாக்கிரதையினால் தவறிவிழுந்த அந்த வண்டு தன் பிடிவாதத்தை விடாமலே, அந்தத் தவளை தண்ணீரிலிருந்து மேலே எழும்பும்போது பிரட்சியால் நழுவிவீழ்ந்து விழுந்த அதிர்ச்சியினாலே மூர்ச்சையடைந்து கொஞ்சநேரம் பிணம் விழுந்துகிடந்ததுபோலிருந்து, மூர்ச்சைதெளிந்தபின் அப்பா, என்ன பயங்கரமானகாரியமாயிருக்கிறது. "இவ்வுலகத்திற்கு மேல் ஒன்றுமில்லை; மரணந்தான், தவளை மோசம்பண்ணிவிட்டது. அதுதான் அங்கே போகவல்லதா எனக்குத் தோன்றவில்லை என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு இரைதேடப் போய்விட்டது. போனாலும் அதன் விசாரபுத்தி சிறிதும் மாறவில்லை.

தான் செய்ததையும் போனதையும் கண்டவர்களோடெல்லாம் சொல்லிக்கொண்டு திருப்தியடைந்திருந்தது. அதைக்கேட்ட யாருக்குத்தான் புத்தி சலிக்கமாட்டாது. அதிலிருக்கிற புதுமை, மர்மம், அபாயம், அந்தத் தவளை எவ்விதமாயிற்றோ அந்த ஆச்சரியம் இவைகளெல்லாம் கேட்கும்போது வெகு ரசமான சரித்திரமாயிருந்தபடியால், தன்னினங்கள் இதைப் பின்றொடர்ந்து நடந்த சங்கதியைப்பற்றிப் பற்பல வினாக்கள் கேட்டுக்கொண்டும், தங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களைச் சொல்லிக்கொண்டும் தருக்கித்துக் கொண்டும் இருந்தன.



இப்படியிருக்கையில் பொழுதுபோகிற தருணமாயிற்று. ஆகாரத்துக்காக அங்குமிங்கும் அலைவதெல்லாம் ஓய்ந்துவிட்டது. அன்றெல்லாம் அலைச்சல்பட்ட இந்த வண்டும் தன்னிடத்திற்குப் போகத் திரும்பும்போது, அந்தத் தவளை ஆழத்திலிருந்த ஓர் கல்லின் மேலிருக்கக் கண்டு அதைப்பார்த்து வண்டு ஆச்சரியத்தோடு: நீயா, இங்கேயா இருக்கிறாய்; நீ இவ்வுலகத்தை விட்டுப் போனதேயில்லை ; நீ என்னைப் பெரிய மோசம்செய்து மறைந்தாயல்லவா ? என்போன்ற மூடபதிகள் இப்படித்தான் அயலாரை நம்பி மோசம் போகிறது. இவ்வளவு போதும் போதும்! என,

தவளை:"நீ மரியாதைக்குக் குறைவாய்ப் பேசி எனக்கு வீண்கவலை யுண்டாக்குகிறாய், ஆயினும் மன்னிக்கிறேன்; நாகரீகமற்ற அல்ப ஜந்துவான உனக்கு என்னமரியாதை தெரியும். நான் இங்கிருந்து மேலேபோனபின்பு முதுகின்மேலே நீ இல்லையென்று அறிந்து நான் என்னவருத்தப்பட்டேனோ அதை நீ சிறிதும் நினைக்கவில்லை போலிருக்கிறது. உன்னை உறுதியாய்ப் பிடித்துக்கொள்ளும்படி நான் சொல்லவில்லையா ? நீ என் பிடித்துக்கொள்ளாமல் போய்விட்டாய்? உன்னைப்போல் யாவையும் ஆழ்ந்தறிய வல்லவர்களென்று நினைக்கிற பேதைகளுடைய சங்கதி இப்படித்தான் என்று எனக்குத் தெரியாதா ? எடுத்த காரியத்தில் துவக்கத்திலேயே ஓரிடையூறு நேரிட்டால் அந்தப் பேதைகள் திசைதெரியாமல் படாதபாடுபட்டுப் போகிறது எனக்கு நன்றாய்த்தெரியும்; உன் கதையும் இப்படித்தான் முடிந்தது.

வண்டு: "என்ன, நீர் அன்னியாயமான அபவாசத்தை எல்லாம் என்மேல் ஆரோபிக்கிறீர்" என்று களித்துச் சொல்லிற்று.

இப்படி ஒன்றுக்கொன்று வாக்குவாதம் நடந்து அடிதடியாகிற சமயமாயிருந்தது. தவளை: "உன்மேல் குற்றமொன்றுமில்லாமல் போனால் உன் சங்கதிகளைச் சரியாய்ச் சொல்லிக்குற்றமில்லையென்று ஏற்படுத்திக்கொள்" என்று அந்த வண்டுக்கு உத்தரவுகொடுக்காமற் போனால் கைகலந்தேயிருக்கும். தவளை சொல்லச்சொன்னவுடனே வண்டு தன் செய்தியையெல்லாம் நொடியில் சொல்லி முடித்தது. தவளை அது சொன்ன பயங்கரமான விவரங்களைத் தலையெடுத்துத் தன் பெருங்கண்களை மிரளமிரள விழித்துக் கேட்டுக்கொண்டிருந்தது.

வண்டு: "இப்போது இவ்வுலகத்திற்குமேல் மரணந்தான்; வேறென்றுமில்லை. நீ அங்கே போவதும் வருவதும் கட்டுக்கதையாய்த்தானிருக்கவேண்டும் என்பது ஸ்பஷ்டமாய்விட்டது. வேறேதாவதிருக்கிற பக்ஷத்தில் அதை நீ என்னோடு சொல்லக் கூடாதென்று மர்ம்மமாய் வைத்திருக்கிறாயோ என்னவோ, உமது ரகசியங்களை மறைக்க உமக்குச்சுதந்தரமிருக்கிறது. என்னைப் பயித்தியக்காரனுக்கிக்கொள்ள எனக்கிஷ்டமில்லை, உமக்கு ஒரு சலாம், நான் போய்வருகிறேன்" என,

"நீயாவது போகிறதாவது! உன் கதைகளை நான் கேட்டதுபோல் என் சரித்திரங்களை நீ கேளாமல் நீ இப்படிப் போய்விடலாகாது" என்று தவளை சொல்ல,

"சரிதான், அது எனக்கும் யுக்தமாயே தோன்றுகிறது" என்று வண்டு சொல்லிக் கதைகேட்க நின்றது.

அது ஒப்புக்கொண்டபடியால் அந்தத்தவளை தான் எழும்பிப் போனதும், அங்கே நடந்த சங்கதிகளையும் செம்மையாய்ச் சொல்லிக் கடைசியில், "அங்கேயிருந்த நாணல் புதர் முதலிய எல்லாவிடத்திலும் உன்னைத் தேடிப்பார்த்தேன்; அகப்படவில்லை. ஆயினும் அங்கே ஒரு அதிசயத்தைக் கண்டேன், அது மற்ற ஜந்துக்களைவிட உனக்குத்தான் வெகுரஸமாயிருக்கும்" என்று சொல்லி நிறுத்திவிட்டது.

வண்டு அதைக்கேட்டு, அதிக அபேக்ஷையோடு: "அதென்ன, அதென்ன?" என்றது.

அதற்குத் தவளை சொல்லுகிறது: "உங்களுடைய ஜாதியிலொன்று கரையோரத்திலிருந்த ஒரு பச்சைக்கோரையின் வழியாய்த் தண்ணீரைவிட்டு மேலே ஏறிவந்து கோரைத்தண்டை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு சூரியகிரணங்களால் பளபளப்பாய் விளங்கி நிற்கப் பார்த்தேன். உங்களினத்தார் குளிர்ச்சியும் நிழலும் தங்கிய நீராழத்திலிருக்க விரும்பும் தன்மையிடனிடத்தில் மாறினதைப் பார்த்து ஆச்சரியப் பட்டுக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு க்ஷணத்தில் ஓர் புதுமையைக் கண்டேன். அது இவ்விதமாய்த் தோன்றிற்றென்று சொல்ல எனக்குத் தெரியவில்லை. அதனுடலில் துவாரம்போல் ஒன்று தோன்றி அதிலிருந்து மெதுவாய் உடலைக் கிழித்துக்கொண்டு வருவதுபோல் ஒரு சிறு பறவை மேலெழுந்து ஆகாயத்தில் இறகுகளோடு எழும்பிற்று. அதன் சிறகுகளெல்லாப்



முதலில் ஈரமாயிருந்தது, பிறகு படிப்படியாய் சூரியகிரணம் பட்டு மினுமினுவென்றாகி அகல விரித்துக்கொள்ளக் கண்டேன். இந்தப் புதுமையான உருவம் அமைய எவ்வளவுகாலம் பிடித்ததோ எனக்குத் தெரியாது. நான் கண்ட காட்சியினால் பிரமைகொண்டு நின்றேன். பின்பு நான்கு புறத்திலும் பளுவைச் சரிப்படுத்திக்கொண்டு தன்னுடைய இரு இரக்கைகளால் சூரியகிரணங்களைப் பின்னே தள்ளிக்கொண்டு போவதுபோல் சிறகை யடித்துக்கொண்டு ஓய்வில்லாமல் ஆகாயத்தில் எழும்பி எழும்பிப் பறக்கத்தொடங்கிற்று. அதை நான்கண்சலிக்கப்பார்த்து, அதன்சிறகடிப்பதனால் உண்டாகிய ஓசையையுங்கேட்டு இந்த அதிசயத்தை உன்னைக் கண்டுபிடித்துச் சொல்லலாம் என்று களிப்புடன் தண்ணீர்க்குள் மூழ்கிப் பாய்ந்து வந்தேன்" என்று சொல்லி முடித்தது.

தும்பி வண்டு சற்றுநேரம் ஒன்றும் சொல்லத் தெரியாமலிருந்து, பிறகு "இது மிகவும் ஆச்சரியமானகதை" என்றது.

"அதற்குச் சந்தேகமா, இது உனக்குஎன்னவென்று தோன்றுகிறது?" எனத் தவளைகேட்டது.

"தங்கள் அபிப்பிராயத்தை முன்னிட்டுக் கொண்டல்லவோ நான் சொல்லவேண்டும்" என்று வண்டு கூற,

தவளை: "அப்படியா, சந்தோஷம்! இப்போது உனக்கும் பெரியோர்களிடத்தில் மரியாதையாய்ப் பேசத் தெரிந்துகொண்டாயே நல்லது, உன் உலகத்துக்கப்புறப்பட்ட விஷயங்களைப்பற்றி நீ செய்யும் துர்விசாரத்துக்கெல்லாம் நான் பார்த்தது காரணமாயிருக்கலாமென்றுநினைக்கிறேன்" என,

"நீங்கள் சொன்னது உண்மையாயிருந்தால் அப்படியே காரணமாயிருக்கலாம்" என்று வண்டு அனுமானப்பட்டது.

தவளை: "அடா அற்பப்பயலே, நீ என்னிடத்தில் அவநம்பிக்கைப்பட்டால் எனக்கென்ன கெடுதி? உனக்குத்தான் நஷ்டம்" என உரத்துச்சொல்ல,

வண்டு: நீங்கள் இரக்கையோடு பிரகாசித்துப் பறக்க ஒரு பூச்சியைப் பார்த்தீர்களே, நீங்கள் இப்போது சாதிப்பதைப் பார்த்தால் அது உண்மையாய் இருக்குமென்று நம்புகிறேன் என்று சொல்லிக்கொண்டு வருகையில் அற்வறின் முன்னே ஒரு தவளை, "நில் நில், உனக்கு லக்ஷண பாக்கியங்களோடு கூட யாவையும் யான் சொல்லவரவில்லை. போ போ, சந்தேகப்பிண்டமே! பொழுது

போய்விட்டது; நான் உலர்ந்த தரைமேலிருக்கும் புல்லாபிச்சுக்குப் போகிறேன். நீயும் உன்னிடத்தற்குப்போய் உறங்கிக் கிடந்து, காலையில் எழுந்திருக்கும் போது விபரீத புத்தியைவிட்டு நல்ல எண்ணத்தோடு எழுந்திரு. மூட ஜந்துவே!'' என்று சொல்லிச் சரேலென்று குதித்தோடி விட்டது.

---

## கிண்டர் கார்ட்டன்.
## கட்டையடுக்குந் தொழில்.

இத்தொழிலின் நோக்கமும் பிரயோஜனமும்:— உற்றுப்பார்க்கும் சக்தியை விருத்திசெய்தல், ஒழுங்கு, கவனம், சிக்கனம் முதலிய நற்குணங்களை உண்டாக்குதல், பிள்ளைகளின் சுபாவ சுறுசுறுப்பிற்குத்தக்க வேலையாதல், சிற்றில் முதலியவை கட்டுவதில் குழந்தைகளுக்குள்ள ஆசையைத் திருப்தி செய்தல், கட்டடம் முதலியவையமைக்கும் சிற்ப சாஸ்திர கைத்தொழிலுக்குத்தகுந்த அஸ்திவாரமாதல் க்ஷேத்திர கணித ரூபங்கள் தெரிந்து கொள்ளல், எண்மானமும் கணித சம்மந்தமுமான நான்கு விதிகளையும், பின்னங்களையும் அறிந்துகொள்ளச் சாதகமாயிருத்தல்.

இவ்விதம் பிரோபலால் ஏற்பட்ட ஆறுவித கொடைகளையும் நமது நாட்டுப் பாடசாலைகளில் சேகரித்துக்கொள்ளுதல் கஷ்டமாயிருப்பதாலும், அவற்றையே அனுசரித்தல் அனாவசியமென அதிகாரிகள் நினைப்பதாலும், இன்னாட்டிற்குத் தக்கவாறு ஏதாகிலும் ஓரளவுள்ள ஒரு கட்டையை எடுத்து அரை, கால் முதலிய பாகங்களாக்கி அதைக்கொண்டு பாலர் முதல் இரண்டாவது வரையிலுள்ள மூன்று வகுப்புகளிலும்பல வெவ்வேறுமாதிரி உருவங்கள் அமைத்தல் நலமாயிருக்குமென்றும் அனுபவத்திலும் அறிவிலும் தேர்ந்த ஆங்கில வித்தியா விசாரணை பரிசோதகர் ஒருவர் அபிப்பிராயப்படுவதால் அவ்வபிப்பிராயத்திற்கு இணங்கி அடியில் வருமாறு ஒரு கொடை எடுக்கப் பட்டுளது.

இது தற்காலம் எல்லா உபாத்திமை போதனா பாடசாலைகளுக்கும் ஏராளமாய் அனுப்பப்பட்டிருக்கிறது. ஜில்லாதோறுமுள்ள இப்பாடசாலைகளில் இக் கொடையைப் பார்த்து மற்ற பல பாடசாலை உபாத்தியாயர்களும் செய்துகொள்ளலாம். இது பிரோபலின் ஆறாவது கொடைபோன்றது.



இதன் விவரம்:— ஒரு கட்டையொன்று இரண்டங்குல நீளம் ஒரு அங்குல அகலம் அரை அங்குல உயரமுள்ளதாக இருபத்தேழு செங்கல் போன்ற கட்டைகளாக்கி, அவற்றுள் மூன்றை நீளத்தில் சரிபாதியாக்கி ஆறு தூண்களாகவும், வேறு ஆறை அகலத்தில் சரிபாதியாக்கி பன்னிரண்டு சரி சதுரங்களாகவும் அமைத்துக் கொண்டால் மொத்தத்தில் முப்பத்தாறு உருப்படிகளாகின்றன. இந்த ஒரு கொடையைக்கொண்டே பிரதி வகுப்பிலும் அடியில் வரும் பலமாதிரி உருவங்கள் அமைக்கலாம்.

### பாலர் வகுப்பு மாதிரிகள்.

1. நாற்காலி
2. மேஜை
3. இரட்டைப்படி
4. ரயில் பாலம்
5. சாதாரண பாலம்
6. மதில் சுவரிலுள்ள பீரங்கிவாய்.

கதை:— முற்காலத்தில் இராமரென்பவர் இலங்கைக்குப்போவதற்காகச் சமுத்திரத்தில் ஒரு பாலம் கட்டினார். அதற்கு வேண்டிய கற்களை அவரிடத்தில் அதிக விசுவாசமும் பக்தியுமுள்ள காட்டுக் குரங்குகள் கொண்டுவந்து கொடுத்தன. அதைக்கண்ட அணிற் கூட்டங்கள் உத்தம புருஷராகிய இராமருக்குத் தாங்களும் தங்களால் இயன்ற உதவிசெய்ய விருப்பம் கொண்டன. பாலத்தின் கற்கள் ஒன்றோடொன்று பொருந்தும்படியாய் தங்கள் வாலை சமுத்திரத்தில் நனைத்து மணலில் புரண்டு போதுமான அளவு மணலைக் கொண்டு வந்து சேர்த்தன. இதைக்கண்ட இராமர் அற்பப்பிராணியாகிய அணிலும் நமக்கு உதவி செய்கிறதே என்று சந்தோஷப்பட்டு அதன் முதுகில் தன்விரல்களால் தடவிக் கொடுத்தார். அக்காலம் முதல் அணிலுக்கு ரேகை உண்டாயிற்றென்று இத்தேசத்தின் தென்னாட்டிலுள்ள இந்துக்கள் சொல்வது வழக்கம்.

### தொழிலுக்கும் கதைக்குமுள்ள சம்மந்தம்.—

தொழிலில்வரும் நாற்காலியில் இராமர் உட்கார்ந்திருப்பதாகவும், மேஜை அவர் எதிரில் போட்டிருப்பதாகவும் இருவகைப் பாலங்களையும், குரங்களும் அணில்களும் கட்டுவதாகவும் மதில் பீரங்கிவாய் இலங்கையைச்சுற்றி யிருந்த மதிலிலிருந்ததாகவும் தரையிலிருந்து பாலத்தின்மீதேற இரட்டைப்படிகள் உபயோகப்படுத்தப்

பட்டதாகவும் சம்மந்தப் படுத்தலாம். (முற்காலத்தில் நாற்காலி மேஜை இல்லாமற் போனபோதிலும், இக்காலத்திய ஆசனங்களைப் போல செய்ததாகச் சொல்லவும்.)

விளையாட்டு:— ஒரு பையனை இராமராகவும், சிலரைக் குரங்குகளாகவும், சிலரை அணில்களாகவும் ஏற்படுத்தி கதையிலுள்ளபடி விஷயங்களைப் பிள்ளைகளைக்கொண்டே நடத்திக் காட்டுக.

பாட்டு.

இராகம்:— நீலாம்புரி. அல்லது மோகனம்—நோட்டு

1. ஆடம்ஸ் பிரிட்ஜ் என்று ஆங்கிலேயர் சொல்லுகின்ற,
ஓடங்கள்[1] செல்லாத[2] உத்தமமாம் ராமரணை,
காடெங்கும் திரிகின்ற கவியினங்கள் கட்டக் கண்டு,
நாடெங்கும் வாழுகின்ற நல்லணில்கள் வந்தனவாம்.

2. வந்து மிகவணங்கி[3] வானவர்கோன் கால் பணிந்து,
சந்து தெரியாது ஜலமீது அணையமைய,
தந்து மெனவாலால் சால்மணலை வாரிவந்து,

3. ஐந்து நிமிஷத்துள் ஆக்கியதாம் பெருங் குன்றம்.[4]
கண்டு மிகவியந்த கண்ணனெனும் இராமபிரான்,
உண்டுசிறு அணிலுக்கு உதவி செய்யும் தன்மை என்று,
பண்டு அதன் முதுகில் பரிவுடனே கை தடவ,[5]
கொண்ட குறியிதென்று கூறுவரும் பலருண்டு.

4. அன்று அணில் முதுகில் அமைந்த அழகான ரேகை,[6]
இன்றும் இருக்கக்கண்ட எம்பெருமான் தன்னடியோர்,
நன்றுவிது, நன்றுவிது நாரணன் தன் செய்கைக்கு,
என்று முரைத்த இதை இசை இசைத்தான் கோபாலன்.

அபிநயக் குறிப்புக்கள்.

1. கையிரண்டையும் ஒன்றுய்ச் சேர்த்து ஓடம்போல் காட்டுக.
2. வலது கையை மேலே தூக்கி ஆட்டிக் காட்டுக.
3. கை கூப்பி தலை குனிந்து காட்டுக.
4. மலைபோலக் கையால் காட்டுக.
5. வலது கையால் தடவுவதுபோல் காட்டுக.
6. மூன்று விரலால் கோடு போடுவது போல் காட்டுக.



இத்தொழில் கதை சம்மந்தமாகப் போதிக்கக் கூடிய பொருட்பாடங்கள்.

1. குரங்கு.
2. அணில்.
3. நாற்காலி.
4. மேஜை.
5. பாலம்.

முதல் வகுப்பு மாதிரிகள்.

1. கோபுர வாசற்படி.
2. கோவில் ஏணி.
3. தெப்ப குளம்.
4. இராட்டினைக் கிணறு.
5. நடன சபை.
6. தண்ணீர்ப்பந்தல்.
7. புருக்கூடு.
8. இராஜதுவாரம்.

கதை.

முற்காலத்தில் நபாபு அரசாளுகையில் வடக்கிலுள்ள பத்திராசலம் தாலுக்காவிற்கு ஒரு தாசில்தாரை நியமித்தார். அவர் பெயர் இராமதாஸ். அவர் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர். குடிகளிடத்தில் அதிக பிரியமாயும் அன்பாயும் இருப்பார். அவர் நாளில் அந்த தாலுக்காவில் மாதம் மும்மாரி பெய்து குடிகள் சவுக்கியமாய் வாழ்ந்தனர். சர்க்கார் கிஸ்துகளையும் நஷ்டமின்றிக் கட்டிவந்ததால் பொக்கிஷத்தில் பணம் ஏராளமாய்ச் சேர்ந்தது. இவற்றையெல்லாம் இராமதாஸ் என்பவர் நபாபுக்கு அனுப்பாமல் அவ்வூரில் ஒரு கோவில் கட்டி அதற்கு கோபுர வாசற்படி மிக நேர்த்தியாக அமைத்தார். சுவாமி அபிஷேகத்திற்குத் தண்ணீர் எடுக்க ஒரு கிணறும் தெப்ப உற்சவங் கொண்டாட தெப்ப குளமும் வெட்டினர். சுவாமி பத்தி உலாத்தலுக்காக ஒரு நடனசபையும், கோடை காலத்தில் வரும் ஜனங்களுக்கு தண்ணீர் குடிக்க தண்ணீர்ப்பந்தலும், கோவில் மதில் சுவரில் புருக்கள் முதலிய வசிக்க சிறு கூடுகளும் கட்டுவித்தார். இவ்விதம் பணத்தை யெல்லாம் செலவழித்ததனுல் நபாபு

கோபங்கொண்டு இவரை சிறைச்சாலையில் அடைக்கும்படி ஆள்களை அனுப்பிவிட்டான். இவரைப் பிடித்து ஜெயிலுக்குக் கொண்டு போகையில் ஊர் ஜனங்களெல்லாம் இவருடன் அழுதுகொண்டு பட்டணத்தின் வெளிப்புறமுள்ள இராஜத்துவாரம் வரையில் சென்றார்கள். பிறகு கிங்கரர்கள் இவரை ஜெயிலிலடைத்து தொந்திரவு செய்த போது, தெய்வத்தையே தியானித்துக்கொண்டு தன்னைக் காப்பாற்ற வேணுமாய்ப் பிரார்த்தித்திருந்தார். கடவுள் இவர்மீது மனமிரங்கி சேவக ரூபமாகி நபாபிடம் சென்று இவரால் செலுத்தப்படவேண்டிய பணத்தையெல்லாம் பவுன் காசுகளாகச் செலுத்தி அவரை விடுதலை செய்ய ரசீது கேட்டார். நபாபு இந்த சேவகனின் ரூபலாவண்ணியங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டு ரசீது கொடுத்தார். உடனே சேவக ரூபமாய் வந்த கடவுள் திடீரென மறைந்துவிட்டார். நபாபு கடவுளே இந்த ரூபமாக வந்தவர் என்று தெரிந்துகொண்டு, உடனே இராமதாசனை ஜெயிலிலிருந்து விடுவித்ததோடு அவர்காலில் விழுந்து தான் அறியாமல் செய்த தண்டனைக்காகத் தன்னை மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டான்.

கதைக்கும் தொழிலுக்குமுள்ள சம்மந்தம்:—

தொழிலிலுள்ள மாதிரிகளெல்லாம் கதையில், சம்மந்தப்படுகின்றன. கோவில் ஏணி விளக்கு போடுவதற்குச் செய்ததாகவும் சேர்த்துக் கொள்க.

பாட்டு:— பத்தியமெட்டு.

1. புவிதனில் பேர்பெற்ற புண்ணியபூமியாகும்
பத்திராஜலமெனும் பட்டிணத்தில்,

ரவி[1]தனில் ஒளிபெருக ராமதாசன் தாசில்
ராஜ்யபரி பாலனஞ் செய்யும்போது,
நீதி தவராது நியாயங்கள் செய்ததாலே,

மாதமும்மாரி மழை[2]பெய்து மனிதரெல்லாம்,
வாழ்வு மிகவோங்கி வைபவம் பெற்றிருந்தார்.

2. பக்தியே மேலிட்டு பகவானை தியா[3]னித்த
தக்க தாசில்தாரும் பொக்கிஷத்தை,
மிக்கவே கைகொண்டு மேலான கோவில்திருப்



பணிவிடை தன்னிலே செலவு செய்தார்,
கோபுரத்துடன் அபிஷேக கிணறுவொன்றும்,

தெப்ப உற்சவ[4]ங்கொண் டாடகுளமும் வெட்டி,
தக்கவிதமாக தருமங்கள் செய்துவந்தார்.

3. அரசிறை வராமையால் அரசனும் நேபாபு
அமுலுடன் ஆள்களை அனுப்பிவைத்து,
சிறையறையிலேவைத்து சிட்சை செய்யும்போது
ஜீவகாருண்ய ஜெக தீசன் தூதாய்,
கப்பங் கட்டியே காணமல் மறைந்துபோக,
தப்பிதம் ஓர்ந்த நேபாபு தவித்துவாடி,

ராமதாசரைப் பிரார்த்தித்து அடி பணி[5]ந்தான்.

அபிநயக் குறிப்புக்கள்.

1. சூரியனுதிக்கும் திக்கை வலது கையால் காட்டுக.
2. இருகைகளையும் மேலே தூக்கி மழை பெய்வதுபோல் காட்டுக.
3. இரு கண்களையும் மூடிக்கொண்டு குந்தி உட்காந்து இரு கை விரல்களாலும் ஜெபம் பண்ணுவது போலக் காட்டுக.
4. இரு கைகளாலும் ஊஞ்சல் பலகை ஆடுவதுபோல ஆட்டிக் காட்டுக.
5. கீழே விழுந்து கால் மண்டிபோட்டு இரு கைகளாலும் சலாம் செய்க.

இத்தொழில் கதை சம்மந்தமாய்ப் போதிக்கக் கூடிய பொருட் பாடங்கள்:—

1. குளம்; கிணறு.
2. மழை.
3. தண்ணீர்ப் பந்தல்.
4. புறா.

இன்னும் இதனுடன் சம்மந்தப் பட்டுவரும் அநேகவிஷயங்களும் உபாத்தியாயர்கள் தங்கள் திறமைக்குத் தக்கபடி தெரிந்தெடுத்துப்போதிக்கலாம்.

இரண்டாவது வகுப்பு மாதிரிகள்.

1. சிம்மாதனம்
2. இராஜ மண்டபம்
3. நீராழி மண்டபம்
4. வைகுண்ட வாசற்படி

5. பிரபை
6. மாளிகை
7. கோடை பங்களா
8. உப்பரிக்கை
9. பள்ளிக்கூடம்
10. கல்லறை.

## கதை.

முற்காலத்தில் ஹிரண்யன் என்னும் ஒரு கொடிய ராட்சசன் இந்த தேசத்தை ஆண்டான். அவன் வெகு பராக்கிரமசாலி. அதிக தீரன். அவன் பட்டணத்தில் அநேக மாடமாளிகைளும் உப்பரிகைகளு மிருந்தன. அவன் தனக்கு மிஞ்சிய தெய்வமே கிடையாதென்று அகங்கொண்டிருந்தான். கோவில்களிலெல்லாம் தன்னைப் போல சிலை செய்துவைத்து அதையே எல்லாரும் தெய்வமாக வணங்க வேண்டுமெனக் கட்டாயப் படுத்தினான். இவனுக்கு ஒரு சத்புத்திரன் பிறந்தான் அவன் பெயர் பிரகலாதன். அவன் இயற்கையிலேயே தெய்வ பக்தியுள்ளவன். அவனைப் பாடசாலையில் வைத்தவுடனே உபாத்தியாயர் ஹிரண்யனுக்கு நமஸ்காரம் செய்யென்று வற்புறுத்தினார். அதற்குப் பிரகலாதன் நான் கடவுளை நமஸ்கரிப்பேனே யொழிய மற்றவர்களை முதலில் நமஸ்கரியேனென்று மறுத்துவிட்டான். இதை ஹிரண்யனுக்குத் தெரிவிக்க, அவன் வந்து தன் பிள்ளைக்கு அநேக நற்புத்திகள் சொல்லியும் அவன் கேட்கவில்லை. அதன்பேரில் அந்தப் பிள்ளையைக்கொல்ல யானையின் காலில் இடறவைத்தும், மலையிலிருந்து உருட்டியும் பலவித உபாயங்கள் செய்தான். கடவுளுடைய கிருபையால் அவன் ஒவ்வொரு ஆபத்தினின்றும் தப்பித்துக் கொண்டான். பிறகு மிகுந்த கோபங்கொண்ட தகப்பன் நீ சொல்லும் தெய்வம் எங்கிருக்கிறது, காட்டு பார்ப்போமென்றான். அற்கு அந்த பிள்ளை அவர் இல்லாத இடமே கிடையாது, எங்கும் நிறைந்திருக்கிறார். தூணிலு மிருப்பார், துரும்பிலு மிருப்பார் என்றான். அதைக்கேட்டு கோபங்கொண்ட தகப்பன் எதிரிலிருந்த தூணைப்பார்த்து, நீ சொல்லும் தெய்வம் இதற்குள் இருப்பானாவென்று தூண் இருபிளவாகும்படி உரத்து உதைத்தான். உடனே கருணைமிகுந்த வள்ளலாகிய பகவான் பிரகலாதனாகிய அன்பனைக் காப்பாற்றும் பொருட்டு மிருகமும் மனிதரூபமும் கலந்த நரசிங்கமாக வெளிப்பட்டு கொடிய அரக்கனாகிய ஹிரண்யனைக் கொலை செய்தார். அதுநடந்தது அந்திப்பொழுதாதலால் சாய்ந்திரத்தில் சூரியன் அஸ்தமிக்கும் வேளையை ஹிரண்யவேளையென்று சொல்வது வழக்கம்.



தொழிலுக்கும் கதைக்குமுள்ள சம்பந்தம்:— தொழிலிலுள்ள சிம்மாசனம், ராஜமண்டபம் இரண்டு ஹிரண்யனுடைய தென்றும், பிரபை, வைகுண்டவாசற்படி, நீராழிமண்டபம், முதலியவை அவனைப்போன்ற சிலைவைத்த கோவில்களில் அமைக்கப்பட்டிருந்தனவென்றும், மற்ற கட்டடங்கள் பள்ளிக்கூடம் முதலியவை அவனுடைய பட்டணத்திலிருந்தவை யென்றும் சம்பந்தப்படுத்தலாம்.

### பாட்டு - இராகம் - தேசிகதோடி.

1. ஹிரண்யனென்னும் அரக்கனொருவன்
இராஜ்யபாரம் செய்கையில்,
தரணிதன்னில் தனக்குமேலா[1]ந்,
தெய்வ[2]மில்லை யென்றனன்.

2. மாடமாளிகை மகிமைவாய்ந்த
மகத்துவமாம் தன்னகரதில், .
கூடகோபுர கோவில்களில்
கும்[3]பிடத்தன் சிலைவைத்தான்.

3. பாடசாலைப் பிள்ளைகளும்
படிக்கத்தொடங்கும் காலத்தில்,
எ[4]டுத்திரண்யனை இ[5]ரஞ்சஏற்பாடிட்டனன்.

4. புதல்வனும் பிரக்கலாதனாலே புகழிழந்த பூபனும்
முதல்வனும் கடவுளாலே முடிவுபெற்று மாண்[6]டனன்.

---

## அபிநயக் குறிப்புக்கள்.

1. மேலே கைதூக்கிக் காட்டுக.
2. வலதுகைவிரல்களை விரித்து இல்லை யென காட்டுக.
3. இரண்டுகைவிரல்களையும் கூப்பி தலைகுனிந்து காட்டுக.
4. இரண்டு கைகளாலும் ஏடு பிடிப்பதுபோலக் காட்டுக.
5. கைகளைக் கும்பிடுவதுபோல் கூப்புக.
6. இரண்டு கால்களையும் பிடித்துக் கிழித்ததுபோல் நையாண்டி காட்டுக.

இது சம்பந்தமாய் போதிக்கக்கூடிய பொருட்பாடங்கள்:—

1. கட்டடங்கள் கட்டுவதைப்பற்றி.
2. யானை.
3. சிங்கம்.
4. மலை.
5. மாலைப்பொழுது.

தொழிலிலுள்ள ஒவ்வொரு மாதிரியைப் பற்றியும் ஒவ்வொரு பொருள்பாடமுஞ் சொல்லலாம்.

C. GOPALA AIYANGAR,
*Asst. Govt. Training School,*
**TANJORE.**

## உபாத்தியாயரின் ராஜசின்னம்.

நல்லா சிரியனெனு நாமத்தா னுடெங்கும்
பல்லா சிரியருமிப் பாருறையு — நல்லாராம்
எல்லாருஞ் சந்தோஷ மெய்தவரு நீயுலகில்
எல்லாரு நாளார்ந் திரு.

மாத மொருமுறையாய் மன்னித் தமிழ்நாட்டில்
காதலுடன் செல்வர்க்குக் கல்விதனை—போதிப்போர்
சந்தா தபாற்செலவுந் தானேற் றொருரூபாய்க்
குந்தாமற் போகா ருனை.

உபாத்திமா ருக்கா யொருபத் திரிகை
தபாற் செலவுந் தானேற்குந் தன்மை - யிபாத்தெனவே
எண்ணியதை யிக்கணமே யெல்லோரும் பெற்றிடுவீர்
கண்ணியஞ்சே ராசிரியர் காள்.

(நேரிசை வெண்பா.)

மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னனுக்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.



என்னும் பாடலின்படி கல்விக் கிருப்பிடமாகிய உபாத்தியாயர் மன்னனிலும் சிறப்புடையவராக மதிக்கப்பெறினும் அவரையிங்கு அம்மன்னனுக்கிணையாகவே உவமை யணியிலுரைக்கத் துணிந்த தெவ்வாறெனின்.—

உபாத்தியாயருக்குத் தன்பால் கல்விபயிலும்பிள்ளைகளேசேனைகள், சட்டம் பிள்ளைகளே (Monitors) சேனைத்தலைவர்கள். அவரது உதவி உபாத்தியாயர்களே (Assistant-Masters) மந்திரிகள், பாடசாலைக் கட்டடமே அரண்மனை, அவரமர்ந்த ஆசனமே சிங்காசனம், அவரது கரத்தமர்ந்த களாசமே (cane) செங்கோல். தான் குடியிருக்கும் ஊரே தன்னாடு, சிறுவர்க்குத் தான் பயிற்றும் தேகாப்பியாச முறைகளே (Drill and Gynmastics) யுத்த சன்னாகம், அப்பிள்ளைகளுக்குத் தான் கற்பிக்கும் நூல்களென்னும் வாள்களைக் கொண்டு தன்னாட்டை யாக்ரமிக்கவரும் அவிவேக மென்னும் பகையரசனை வெல்லுதலே தனக்குரிய ராஜவீரம். அன்னியரின் அவிவேகந் தொலைய அறிவுறுத்தி வசப்படுத்தலே அவர்கள் நாட்டைக்கவர்ந்து கொடுங்கோல் நீங்கச் செங்கோல் நடாத்தும் ராஜ தருமம். பிள்ளைகளின் குற்றங் கடிந்து குணத்தைக்கொண்டாடுதலே தாம் வகித்த அரசற்குரிய துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம். கழகத்துப் பிள்ளைகளின் கல்வியபிவிருத்திக்கேற்ப அன்னாருக்கு வருஷாந்தத்தில் அளிக்கப்படும் வெகுமதியே (Prize Distribution) அரசரியற்றற்குரிய வித்வஜன சன்மானம்.

சிறுவர்க்கு தெய்வபக்தி, குருபக்தி, மாதுர்பக்தி, பிதுர்பக்தி முதலிய நற்குணங்களுண்டாகச்செய்தலே ராஜாங்கத்துக் குரிய தேவாலய நிர்மாணசமானம், அப்பிள்ளைகளைப் பொய், களவு, பொறாமை,நிந்தை முதலிய துர்க்குணரோபணத்தினின்றும் பாவனராக்குதலே சத்திரசாவடித்தடாக நிர்மானத்துக்கு நிகர். அன்னோரை அடக்கியாளுதலே க்ஷத்திரியவீரம். அவர்க்குரிய சண்டைச்சச்சரவுகளைத் தீரவிசாரித்தலே நியாயாதிபதித்துவம். அன்னோரால் சிரமத்துக் கீடாகக்கொடுக்கப்படும் சம்பளமே அரசர் அடையற்குரிய ஆறிலொரு பகுதி.தமது போதனாமுறைகளே சட்டங்கள். அவர் கீரும் பலகையைச் (Black Board) சமயோசிதப்படி கையாளுந்திறமையே ராஜதந்திரம். தனிகர் ஏழைகளென்னும் வித்தியாசத்தை எண்ணாமல் வித்தியார்த்திகளைப் பாராட்டலே அரசற்குரிய நிஷ்பக்ஷபாத குணம்.

பிள்ளைகளிடத்தில் தான் வைத்திருக்கும் இடையறாப் பிரீதியே கியாதி. தம்முடைய நல்லொழுக்க நடையுடை பாவனைகளாலாகிய சிறப்பே தன்னுடன் பிறப்பு. தமது பலநூற் பயிற்சியே தனார்ஜித முயற்சி. தமது பூர்வோத்தர சந்தர்ப்ப சமயோசித நிதானமே தானம். தாமெழுதப்பழகின சித்ரமே (Drawing) ராஜசத்ரம் (குடை), தமது முத்துப்போன்ற கையெழுத்தே உலகவழுத்து. தாமடைந்த யோக்கியதா பத்திரங்க (Certificates) ளுக்கேற்ற உத்தியோகமே ராஜபோகம். தம்முடனொத்துழைக்கும் உபாத்தியாயர்களிடத்திலுள்ள சிநேகமே ராஜயோகம். அதிகாரிகளால் நன்கு மதிக்கப்படும் விசேடமே ராஜ கிரீடம். தம்மிடத்தென்றும் விளங்கும் நீதியே ராஜவீதி. சிறுவரை கல்வியிற் பயிற்றும் இச்சையே அரைக்கச்சை. விஷயங்களை விசதப்படுத்தி விளக்குங் காரியமே ராஜவீரியம். விஷய பரிசயப் பிரயோக விஜ்ரும்பமே ராஜடம்பம். பிள்ளைகளின் பெற்றோர் தமக்குக் கொடுக்கக் கடமைப் பட்டிருக்கும் பாக்கியே ராஜடீக்கி, எந்நாளும் சிறுவர் தம்மிடம் கல்வி பயிலும் ஒலமே ராஜகோலம். பாடசாலைக் குபாத்தியாயர் வரும் குறித்தகாலத்தின் அபின்னமே ராஜ சின்னம்.

சி. வே. சண்முக முதலியார்,
*Hd. Master, L. F. School, Tinnanur.*

## TIT-BTIS.

## விநோதக் கூற்றுக்கள்.

ஒருவனுக்கு நெடுநாள்வரையில் புத்திரப் பேறின்றி மிகு வருந்தினன். அவன் ஒரு நாள் தன் மனைவியை நோக்கிப் "பெண்ணே !

கண்ணில் யாக்கையும் திங்களில் கங்குலுங் கண்போல்
அண்ணன் மந்திரியில்லரா சாட்சியும் அருளில்
திண்ணென் னெஞ்சமும் புலவரிலவையு மொண்டீம் பால்
வண்ணவாயிள மக்களில் வாழ்வு மொப்பாமால்

எனக்கூறி, பின்னர் தாம் இயற்றிய அரியவிரதங்கள், தருமங்கள் முதலிய நன்மைகளின் பயனாகக் கடவுளருளால் ஓர் ஆண்மகவைப் பெற்றனர். அம்மகவும் நாளொரு மேனியும் பொழுதொரு



வண்ணமுமாக வளர்க்க வளர்ந்து எட்டாம் வயதை யெட்டிற்று. பெற்றோர் தங்குழந்தைகளுக்கு காலத்திற்கேற்ற உணவு உடைகளை அமைக்காமையால் நமது நாட்டில் சர்வசாதாரணமாயுள்ள பல வகைப் பிணிகள் மேற்கண்ட குழந்தையையும் விட்டதன்று. முடிவில் காலில் சிரங்கு கண்டு நாளவிடவில் அஃதோர் பெரிய படையாய்விட்டது. அது கண்ட தாய் தந்தையர் மிக மனமுளைந்து மணி மந்திர ஔஷதங்களால் முயன்றுந் தீரவில்லை. முடிவில் ஒரு வைத்தியர் அப்பிள்ளையின் காற்படையைக் கண்டு இதற்கு பொடுதலையைக் கட்டினால் மூன்று வேளையிற் றீரும் என்றனர். அது கேட்ட தந்தை பொடுதலைக்காக ஊர்தோறுந் தேடினன். எங்குங் காணப்படவில்லை. சிலநாட்களுக்குப்பிறகு ஓர் ஊரில் உற்சவம் ஒன்று நடந்தது. அதுகேட்ட தந்தை ஆ ! ஆ ! அந்த உற்சவத்திற்குப்போனால் பொடுதலையகப்படுமென்று தனக்குள் உணர்ந்து உற்சவத்திற்குப்போனான். அங்குச் சில பாகவதர்கள் பஜனைசெய்து கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒரு பெரியவர் மிகப் பத்தியோடு பஜனை செய்துகொண்டிருந்தனர். அவரை இவன் அணுகி அவரது பாதத்தில் தன் சிரப் பட வணங்கி கைகட்டி வாய்புதைத்துநின்றான்.

இவனது பணிவைக்கண்ட அப்பெரியோர் மனமிரங்கி "அன்ப! யாது வேண்டும்?" என்றனர். அதற்கவன் நடுநடுங்கி நாக்குழற "சுவாமிகளே ! தாங்கள் தயவு செய்து அடியேன் குடிசைக்கு எழுந்தருளவேண்டும்" என்றுவேண்டினன். அப்பெரியோர் இவனைப் பரம பாகவதன் என்று எண்ணி அவன் வேண்டியபடியே அவனுடைய அகத்திற்கு ஏகினர். அங்கு அப்பெரியவரை மிகவுபசரித்து அன்றிரவு தன் வீட்டிலேயே தங்கிப்போகும்படி வேண்டிக்கொண்டனன். பெரியவரும் அங்குத்தங்கினர். இரவில் அப்பெரியவர் அங்கு நித்திரை செய்யும் போது பிள்ளையின் தகப்பன் தன்குமாரனை அழைத்துக்கொண்டுபோய் பாகவதர் தலையண்டை நிற்கவைத்து அவன் காலிலுள்ளபடையில் பாகவதரது தலைபடும்படி சேரவைத்துத் துணிசுற்றிக் கயிற்றால் கட்ட ஆரம்பித்தான். இதனையுணர்ந்த பாகவதர் ஓகோ இதேது மோசமாக இருக்கிறது, தலைக்குத் தீம்பு செய்ய தாம்பு கொண்டு கட்டுகிறான் என்றுணர்ந்து விரைந்தெழுந்து ஓட ஆரம்பித்தார். அப்போது பிள்ளையின் தகப்பன் ஐயையோ! பொடுதலை போய் விடுகிறதே! பொடுதலை போய் விடுகிறதே! என்ன செய்வேன் என்று கதறிக்கொண்டே பின்பற்றியோடினான்.

அப்போது வழிப்போக்கர் சிலர் ஓட்டம்பிடிக்கும் பெரியவரை நிறுத்தி உற்ற விஷயங்களைக்கேட்டனர். அதன்மேல் அப்பெரியவர் நடந்தவிஷயங்களை விவரமாய்ச் சொல்லினர். அதற்குள் பிள்ளைக்குத் தகப்பனும் விரைந்தோடிவந்து கூட்டத்தைக் குறுகினான். அங்குள்ளவர்கள் அவனை நோக்கி "அடாபாவி! ஒரு பெரியவரை இப்படியும் அநியாயம் செய்யலாமா?" என்று கேட்டனர்.

அதன்மேல் அப்பேதைமனிதன் கூட்டத்தாரை நோக்கி "ஐயா நான் ஒன்றும் செய்யவில்லை. நான் நெடுநாள் பிள்ளையின்றி அநேக தவம் தானம் செய்து முடிவில் கடவுளருளால் ஒரு ஆண் மவைகப் பெற்றேன். அவனுக்கு இப்பொழுது ஏழெட்டு வயதாகிறது. இந்தக் காலத்தில் அவன் காலில் ஒரு படைகண்டிருக்கிறது. அப்படையைப்போக்க எத்தனையோ வயித்தியம் செய்தும் அது தீரவேயில்லை. கடைசியில் ஒரு கைதேர்ந்த வைத்தியர் பொடுதலையை வைத்துக்கட்டும்படி சொன்னார். அதன்மேல் பொடுதலையுடையவரை ஊர் தோறும் தேடினேன். எங்கும் காணக்கிடையாமல் அடுத்த ஊரில் நடந்த உற்சவத்தில் பாகவதகோஷ்டியில் இப்பெரியவருக்குப் பொடுதலை (பொட்டுப்பொட்டாய் மயிர் உதிர்ந்து வழுக்கிய தலை) இருக்கக்கண்டு களிப்புக்கொண்டு வினயமாய் வீட்டுக்கு அழைத்துவந்து உபசரித்தப்பின்னர் நித்திரை செய்யும்போது என் அருமந்த பிள்ளையின் காற்படையில் இப்பெரியவர் பொடுதலை படும்படி கட்ட ஆரம்பித்தேன். உடனே கூக்குரலிட்டு எழுந்து ஓடிவந்துவிட்டார். நீங்களெல்லோரும் தயவுசெய்துஇப்பெரியவருக்குச் சொல்லி மறுபடியும் என்வீட்டிற்குவந்து என் பிள்ளையின் காற்படையில் இவரது பொடுதலைபடும்படி சம்மதித்துச் சிறிதுநேரம் இருக்கும்படி செய்யவேண்டும்" என்று பணிந்து பலமுறை வேண்டிக்கொண்டனன். அதைக்கேட்ட ஜனங்கள் இவனது பேதமைக்கு வியந்து கைகொட்டி வயிறும் புண்படநகைத்தனர். பின்னர் சிலர் "அடா பாவி! பனைமரம்போல் வளர்ந்தனையே, பொடுதலை என்பது ஒருமூலிகை என இதுவரையிலும் அறியாயா? கழுதைக்கு ஆனது போல்வயதாயிற்றே" என்றுசொல்லி இடித்துரைத்தனர். அப்பேதை அது கேட்டு, அப்படியாவென்று கையை முறித்துக்கொண்டு தன் மூடத்தனத்தைத் தானேயுணர்ந்தான். கடைசியில் அப்பெரியவர் பிரஜைகளை நோக்கி "ஆ! எனக்கு நல்லகாலம். சொன்னவர் பொடுதலையை நறுக்கிவைத்துக்கட்டு என்று சொல்லிவிடாமல் பொடுதலையைக்கட்டு என்று சொன்னாரே! அதுவே எனக்கு நல்ல காலமாயிற்று என்று சொல்லிக்கொண்டே போய்விட்டார்.

அவ்வாறே சிலமூடர்கள் பிறர் சொல்வதன் கருத்தை நன்கு உணராமல் குயுக்தியால் வேறுபொருள் கொண்டு இடர்ப்படுவர்.



## NEWS AND NOTES.

### சமாசாரக்குறிப்பு.

எலிமென்டரி பாடசாலைகளிலெல்லாம் யாவருக்கும் சம்பளமின்றி கல்வி பயிற்றுவதற்கு துரைத்தனத்தார் தக்க ஏற்பாடுகள் செய்ய நினைத்து இருக்கின்றனர். இவ்விதி விரைவில் நடவடிக்கைக்கு வரும்போல் காணப்படுகின்றது. இதனால் ஏழைகளும் கல்வி கற்க முகாந்தரமுண்டாவதோடு குடிகளுக்கு ஒருவாறு நன்மைசெய்வதாகவும் ஏற்படுமென்பதுதுரைத்தனத்தாரது அபிப்பிராயமாம்.

* * *

சென்னையில் வாரந்தோறும் உபாத்தியாயர்கள் சங்கம் கூடி கிண்டர்கார்டன் பொருட்பாடம் முதலிய பாடங்களின் விஷயமாய் அதிக ஊக்கங்கொண்டு முயன்றுவருகின்றனர்.

* * *

வித்யாதிகாரிகள் குறிப்புப்புத்தகங்களை உபயோகிக்கும் கெட்டவழக்கத்தை நிறுத்தும்படி பலவகை உபாயங்கள் தேடுவதனால் உபாத்தியாயர்களும் இது விஷயமாய் வித்தியாதிகாரிகளது அபிப்பிராயத்தை ஒத்து நடந்து பிள்ளைகள் குறிப்புப் புத்தகங்களை உபயோகிக்கும் வழக்கத்தை நிறுத்துவது நலம். உபாத்தியாயர் சிறிது சிரமம் எடுத்துக்கொண்டு கஷ்டமானபதங்களுக்கு அர்த்தம் சொல்லிக்கொடுப்பதோடு விஷய வினவிடையை ஊக்கத்தோடு கேட்டு வருவாராயின் இக்குறிப்புப் புத்தகங்கள் அறவேதொலைந்துபோம். அன்றன்றும் பாடத்தில்வந்த பதங்களுக்கு அர்த்தமும், கேட்ட வினாக்களுக்கு விடையும் எழுதிவரப் பிள்ளைகளை வற்புறுத்தினால் சாலச் சிறப்பாகும்.

***

நமது நல்லாசிரியன் கையொப்ப நேயர்களில் பலர் உபாத்தியாயசங்கக் காரியதரிசிகளாகவும், சிலர் போதனப்பியாச கலாசாலை உபாத்தியாயர்களாகவும் இருக்கின்றனர். இவர்களில் ஒருவரேனும் நமது நல்லாசிரியற்கு விஷயதானஞ் செய்யமுன்வராமை மிகப்பரிதபிக்கத்தக்கதே. ஆயினும் மாதந்தோறும் கிண்டர்கார்டன் விஷயமாய் உழைத்துப் பாட்டுகளுடன் விஷயதானஞ் செய்யும் ம-ா-ா-ஸ்ரீ சி. கோபாலய்யங்கார் (Assistant, Govt. Training School, Tanjore) அவர்கட்கும், உபாத்தியாயர் தொழில் விஷயமாய் மிகவுழைத்து எழுதிவரும் ம-ா-ா-ஸ்ரீ சி. வே. சண்முக முதலியார் (Headmaster, L. F. School, Tinnanore) அவர்கட்கும் என்றும் வந்தனத்துடன் நன்றிபாராட்ட வுரிமையுற்றிருக்கின்றோம். மற்றைய நண்பரும் இவ்வாறு முயல்வார்களாயின் தங்களுக்கும் பிறர்க்கும் உபயோகமாகும் பலவிஷயங்கள் வெளியாகுமன்றே.

***

தற்காலம் பிரைமெரிப்பாடசாலை, உயர்தரப்பாடசாலை, கலாசாலை முதலிய கல்விச் சாலைபிற்பயிலும் மாணுக்கர்கள் "வந்தேமாதரம்" என்னும் இந்திய மாதாவின் தோத்திரத்தொடரை வாயாற் சொல்லி வாழ்த்துவது எங்கணும் பெருமுழக்கமாக விருக்கின்றது. இது விஷயமாய் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர்கள் பிள்ளைகள் மீதுகோபித்துத் தண்டிப்பதனால் பற்பல கலகங்கள் ஏற்படுகின்றன. இராஜமகேந்திரக் கலாசாலையில் இவ்விதக் கலகமுண்டாகி 230 மாணவரில் 200 மாணவர் நின்றுவிட்டனராம். இதற்குக்காரணம் அக் கலாசாலையின் அதிபர் மிஸ்டர் ஹன்டர் துரையவர்கள் மாணுக்கர்கள் மீது கடுஞ்சினம் கொண்டமையேயாம். இது விஷயமாய் பிள்ளைகள் "வந்தேமாதரம்" என்று சொல்லும் போது உபாத்தியாயர்கள் அதனைக்கவனியாது விட்டால் இவ்வகைய குழப்பம் உண்டாகாது என்று மதிராஸ் மெயில் பத்திரிகை கூறும் முகாந்தரம் சாலச் சிறப்புடையதே.

—

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 SEP 1907
MADRAS.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

| வயது. 2. | 1907 ளு ஏப்ரல் மீ | மாதம் II. |
|---|---|---|

## THE INDIAN KINDERGARTEN.

## செல்வச் சிறுவர் சிங்காரத் தோட்டம்.

*(CORRELATION SYSTEM.)*

### மூழு மூடன்.

ஓர் ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவனுக்குப் படிப்புத் தெரியாது. அவனுக்குக் கொஞ்சமும் யோசனை இல்லை. "இப்படிப் பட்டவனை என்னவென்று சொல்லலாம்?" "மூடன் என்று தான் சொல்லவேண்டும்."

அந்த மூடன் இது நல்லது இது கெட்டது என்றும் அறிய மாட்டான். அவன் தனக்குத்தானே சாவை உண்டாக்கிக் கொண்டான். அதை உங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

இந்த மூடன் ஒருநாள் அடுப்பண்டை உட்கார்ந்திருந்தான். அந்த அடுப்பில் ஒரு ஆணி விழுந்து பழுக்கக் காய்ந்திருந்தது. அதை அந்த மூடன் கையில் எடுத்தான். எடுக்கவே, கை பற்றிக் கொண்டது. உடனே அவன் துடிதுடித்து அதைக் கீழே போட்டு விட்டான். அது கீழே தேங்கியிருந்த தண்ணீரில் விழுந்து சுடுகை ஆறிவிட்டது. அதைக்கண்டு அந்த மூடன் ஆச்சரியப்பட்டான்.

சிலநாள் பொறுத்து அந்த மனிதனுக்குச் சுரம் கண்டது. சுரம் கண்டால் உடம்பு கொதிப்பேறிச் சுடும் அல்லவா? அவனுக்கும் அப்படியே தேகம் அதிக கொதிப்பாய் இருந்தது. அப்போது அங்கிருந்தவர்கள் வைத்தியனை அழைத்துவரப் போனார்கள்.



உடனே அந்த மூடன், "வேண்டாம், வேண்டாம்; இந்த சுரத்திற்கு ஏற்ற மருந்து எனக்குத் தெரியும், ஒரு நிமிஷத்தில் இது நீங்கி விடுகிறது பாருங்கள்" என்று சொன்னான்.

பிறகு, ஒரு தொட்டில் நிறம்பத் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றச் சொன்னான். உடனே அந்த மூடன் தண்ணீரில் உட்கார்ந்து கொண்டான். சுரம் அதனால் அதிகப்பட்டது. அங்கிருந்தவர்கள் நீ என் இப்படிச் செய்தாய்? என்று கேட்டார்கள். அதற்கு அவன் "அன்று பழுக்கக் காய்ந்து சூடேறின ஆணி தண்ணீரில் விழுந்து ஆறிவிட்டதே" என்றான். அதைக்கேட்டவர்கள் சிரித்தார்கள். பின்பு, அவனுக்குச் சுரம் குணப்படாமலே இறந்துவிட்டான்.

பாட்டு — இங்கிலீஷ் நோட்.

(எல்லோரும் பாடுதல்.) "புத்திகெட்ட பூனை" என்னும் சுமட்டு.

1. எழுத்து வாசனை யறியாமல் இருந்தான் ஒருவன் பெருமூடன்
பழுக்கக் காய்ந்த இரும்பொன்றைப் பதறியெடுத்தான் அடுப்பினிலே
2. விரல்கள் முழுதும் பற்றிக்கொள்ள விடுத்தான் தரையில் துடிதுடித்து
பரவிய நீரில் அதுவீழ்ந்து பட்டதும் நன்றாய் ஆறியதே



3. கண்டானிதையக் கனமூடன் காரிய மிதாக சியமென்றே
கொண்டான் அவனுக் கொருதினத்தில் கொடுஞ்சுரத் தால்கொதிப் பேறியதே

(பந்துக்கள் சொல்வது.)

4. ஐயா! ஐயா! சுரம் உமக்கே அதிகப் பட்டு வருவதனால்
மெய்யாய் நல்ல வைத்தியனை விரைந்தே யழைத்து வருகின்றோம்

(மூடன் சொல்வது.)

5. ஐயோ! ஐயோ! வேண்டாமே அவனுக் கேன்பணம் அழுகின்றீர்
மெய்யாய் இதற்கொரு நன்மருந்தை வெகுநாள் முன்பே யறிந்துள்ளேன்

6 தொட்டி யொன்றைக் கொண்டுவந்து சுருக்காய்த் தண்ணீர் நிரப்புங்கள்

பட்ட வுடனே இச்சுரத்தை பறக்கச் செய்வேன் பாருங்கள்

(பந்துக்கள்.)

7. தண்ணீர் நிறைந்த தொட்டியிதோ தருவித் தோமே இனிமேல் நீர்
எண்ணிய படியே நன்மருந்தை இட்டுச் சுரத்தை யொழித்துவிடும்

(மூடன்.)

8. க்ஷணநே ரத்தில் இந்தசுரம் தலைகாட் டாமல் ஓடிடுமே
பணமேன் மருந்தேன் வைத்தியமேன் பயித்தியம் பிடித்த மனிதர்களே

(உடனே மூடன் தண்ணீர்த்தொட்டியில் உட்கார்ந்துகொண்டான்.)

(பந்துக்கள்.)

9. அடடா பாவீ இதுவென்ன அபிபா யத்தால் சாவாயே
தடையில் லாமல் சீதளமும் தலைக்கே றிடுமே தண்ணீரால்

(மூடன்.)

10. ஐயோ உமக்குப் பயித்தியமோ அதிசயம் ஒன்று சொலக் கேளும்
கையால் செய்து பார்த்தமுறை கருத்தாய்க் கேளும் நலமுண்டாம்
11. பழுக்கக் காய்ந்த இரும்பெடுத்தேன் பதறித் துடித்து விட்டுவிட்டேன்
குழித்த தரைநீ ரினில்வீழ்ந்து குளிர்ச்சி யடைந்தே ஆறியதே

(எல்லோரும் கைகொட்டி நகைத்து பாடுதல்.)

12. ஆ! ஆ! ஆ! ஆ! வெகு நேர்த்தி அதிசயம் அதிசயம் உன்புத்தி
சாகப் போகிறாய் அடமூடா தக்ஷணை மேயட படுகேடா

(மூடன் இறந்துவிட்டான்.)

13. புத்தி யில்லா முழுமூடர் பொருந்த ஆராய்ந் தறியாமல்
சத்திய மாய்த்தம குத்தாமே சங்கடத் திற்கா ளாவாரே.

குறிப்பு — சந்தர்ப்பங்களுக்கு ஏற்க அபிநயங்கள் கற்பிக்க முதலில் வகுப்புப் பிள்ளைகளை எல்லாம் வரிசையா நிற்கவைத்து முதல் மூன்றடிகளைப் பாடச் செய்க. பிள்ளைகளில் ஒருவனை மூடனாகவும் மற்றவர்களைப் பந்துக்களாகவும் அமைத்து குறிப்பிட்டபடி அவரவர்களை அபிநயத்துடன் பாடச் செய்க.

I. இக்கதையினின்றும் எடுக்கக் கூடிய பொருட் பாடங்கள்:—

1. மனிதன். 3. தண்ணீர்க்குடம்.
2. தொட்டி. 4. தண்ணீர். 5. ஆணி.

II. சித்திரமெழுதலுக்கு:—

1. தொட்டி.
2. மனிதனுடைய அவயவங்களில்ஏதேனும் ஒன்று.
3. குடம். 4. ஆணி.
5. அடுப்பு. 6. நெருப்பு.

III. மேற்கூறிய வற்றையே களிமண் உருச் செய்தலுக்கும் கொள்ளலாம்.

பத்திராதிபர்.

# PHYSICAL EDUCATION.

## (DRILL & GYMNASTICS.)

## தேகாப்பியாசம்.

### (கவாத்தும், கசரத்தும்.)

(நல்லாசிரியற்கும் ஆறுமுகற்கும் ஒற்றுமை.)

அறுசீர் விருத்தம்.

விழவினொடும் பிரணவத்தி னருத்தத்தைப் பிரமற்கே விளம்பி யன்னோன்
பழவினைக டபுத்தவறு முககுருவே யுருவெடுத்து பாத்தி யர்க்கும்
பிழையணுகா திந்நூலை வாசித்துக் காட்டுவபோற் பிரியா தாறு
குழவிகளா யிந்நல்லா சிரியனெனு நூற்றலைப்பிற் கூடி னனே.

ஆசான் தனது சீடருக்கு ரைப்பதனை அன்னோர் தம் வாயாரச் சொல்லிக்கொண் டிருத்தலே பண்டைகாலத்திற் கல்வி பயிலும் வகையாயிருந்தது. இதற்கு நிதரிசனமாக முற்காலத்திற் கற்கத் தக்கவரெனக் கருதப்பட்டிருந்த வேதியர் வேதமோதுத லொன்



றினையே கல்விக்குச் சாதனமாகக் கொண்டிருந்தனர். ஏற்கெனவே தற்காலத்தும் எழுத்துங் கணக்குங் கல்லாமல் வாசித்தலொன்றினே வழக்கப்பட்டிருக்கும் வைதிக வயோதிக அந்தண ரநேகரை எங்குங் காணலாகும். இதனால் எழுத்திற்கும், கணக்கிற்கும் முற்பட்டது வாசிப்பெனலாயிற்று. வாசிப்பையே முக்கிய சாதனமாகக் கொண்டிருந்த முற்காலத்திற்குப் பிற்காலத்தில் 'எண்ணு மெழுத்துங் கண்ணெனத் தகு' மாறு காலக்கிரமத்தில் கணிதப்பயிற்சியும், எழுதற் பழக்கம் வாசிப்பென்னுந் தனித்தொழிலோ டிணைத்துக் கொள்ளப்பட்டன. இவ்வாறே நாளாவட்டத்தில் இவற்றினோடும் வானசாத்திரம், பூமி சாத்திரம், தேகசாத்திரம், ரோகசாத்திரம் முதலிய சாத்திரங்களுங் கூட்டிக் கலாசாலைகளிற் சிறுவர் கற்குமாறியற்றினர். எனினும் ஒருவன் கற்கவேண்டிய கல்வி இம்மட்டில் முடிந்ததாகாது.

2. கல்வியை மூன்று பெரிய பிரிவுகளாகப் பிரிக்கலாம் - அவற்றில் மேலே குறித்ததான மனமுயற்சிக்குரிய கல்வி (Mental Education) ஒருவகைத்து; இனி இவ்விகலோக சாதனத்திற்கே உரித்தான, இலௌகிகாநுபவ விவகாரங்களை வெறுத்துப் பரலோக சாதனத்திற்குறிய பரமார்த்தத்தை யடைதற் பாலதான நடையை யுடையாதற்கு வேண்டிய தத்துவ ஞானக்கல்வி (Spirital Education) மற்றொன் றுண்டென்பது அனைவரும்நினைவிற் கொள்ளத்தக்கது. இத்தகைய மேம்பாட்டினையுடைய இவ்வாத்தும தத்துவக் கல்வியை யடைதற்குச் சதுபாயமாயுள்ளது தேகாப்யாசக் கல்வியே (Physical Education) யாகும். எவ்வகைக் கல்விக்கும் ஆதாரமாயுள்ள இவ்வகைத் தேகாப்பியாசக் கல்வியையும் பயில வேண்டியது யாவருக்கும் இன்றியமையாக்கடமையேயாகும். ஏனெனில் யாதொரு சாதனத்திற்கும் காயசுத்தி யென்னும் தேகாரோக்கிய பாக்கியமே சிலாக்கியமென சாஸ்திரங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றது. பொய்யான இவ்வுடலை 'மெய்' யெனவும், மாயமென்னத்தகும் இச்சரீரத்தைக் 'காய' மெனவும் பெரியோர் நூல்களிற் கழறி யிருக்குங் கருத்தை ஆராய்ந்து பார்க்குமிடத்து என்றும் இவ்வுடல் அழியாதிருக்கத் தேடிக்கொள்ளும் வித்தையுமொன்றுண்டென்றே விளங்குகின்றது. அவ்வித்தையைச் சாதகப்படுத்துவதற்கு தேகாப்யாசமே பிரதம சாதனமென்பதற்கு மகான்களாலியற்றப்படும் யோகாப்யாசமென்னும் தேகாப்யாசமே சாக்ஷியமாகும்.

3. இவ்வகையில் தேகாப்யாசம் எந்நாளும் உச்ச நிலைபெற்றிருக்கையில் படிக்கும் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகிறநேரம்போக வீட்டில் தங்க நேரிடுங்காலத்திலும், விடுமுறை நாட்களிலும் அப்பிள்ளைகள்பெற்றோர் முன்னிலையில்தேகாப்யாச முயற்சிக்கேற்பவிளையாட நேரிடுகையில் அவர்களது செய்கையைக் கண்ணுறுந் தாய்தந்தையரிற்சில்லோர் தம்பிள்ளைகள் வீணேவிளையாடிக்கெட்டுப்போகின்றனரென்று நினைக்கின்றனர். இந்நினைவு (நாகரீகத்திற் சிறந்த நகரவாசிகளிடத்தன்று) கிராமவாசிகளிடத்தே பெரிதும் காணப்படுகிறது. விளையாட்டென்பது ஒருபோதும் வீணான காரியமெனக் கொள்ளத்தக்கதன்று. அதைப்பிள்ளைகளின் தேகாரோக்கியத்திற்குரியபாக்கியமென்றே எண்ணவேண்டும். விளையாட்டில் அநேகவிதமுண்டு-அவற்றில் பந்தாட்டம், பந்தயவோட்டம், கண்மூடியாடல் கோலிவிளையாடல், குதிரையேற்றம், உப்பரபட்டை முதலிய விளையாட்டுகள் அவயவங்களைப் பலப்படுத்தும். இவ்வுண்மையினையோர்ந்தவர்கள் சிலரே; ஆனது கொண்டே சாதாரணப் பிரசைகள் ஆடுமாடுகளை மடக்கிவைப்பதுபோல் நாள் முழுவதும் சிறுவர்களை அடைத்துவைக்குந் திண்ணைப் பள்ளிக்கூடங்களே தமதருமைச் செல்வர்களுக்கேற்றவை யென்றுற்றனுடன் அவர்களை ஆங்கு அனுப்புவார்கள்.

4. சாதாரணமாய்க் கிராமங்களில் பழைய வழக்கப்படி தெருப்பள்ளிக்கூடங்கள் காலை அருணோதயமுதல் மாலை அஸ்தமன பரியந்தமும் வைக்கப்பட்டு வருவது யாவருக்குந் தெரியும். இந்நெடுநாளைய வீண்வழக்கம் விலகக் கருதி 'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவலகால வகையினானே' என்னும் நன்னூற்கடைச் சூத்திரத்தின்படி கிராமங்களில் ஆங்காங்கு போர்ட்டு ஸ்கூல்களும் (Board schools) போர்ட்டு ரூரல் ஸ்கூல்களும் (Board Rular schools) மிஷின் ஸ்கூல்களும் (Mission shools) என சர்க்கார் தரப்பிலேனும், மிஷனர் தரப்பிலேனும் எங்கும் சர்வ சாதாரணமாய் பள்ளிக்கூடங்கள் ஏற்படலாயின. இவ்வகைப்பாடசாலைகளில் ஒரு நாளுக்கெல்லாம் ஐந்தாறு மணி நேரத்திற்கதிகம் கல்வியை போதிக்கிற வழக்கமில்லை. இக்கல்விச்சாலைகளின் தொழிற்காலம் (Hours of business) என்னிலோ காலை 9-அல்லது 10-மணிக்குத் தொடங்கி மாலை 4-அல்லது 5-மணியோடு முடிகிறது. இந்த ஏற்பாடு நெடுநாள் பழகிய திண்ணைப் பள்ளிக்கூடங்களின் வழக்கத்தினால் நாட்டிலுள்ளாருக்குக் கொஞ்சத்திற் பிடிக்கிறதில்லை. இவர்கள் தம்பிள்ளை



கள் காலை கண்விழித்துப் படுக்கைவிட்டெழுந்ததுமுதல் மாலைகண்ணுக்கெழுத்து மறைகிறமட்டும் உபாத்தியாயரிடம் கல்வி பயிலவேண்டுமென்னுங் கருத்துடையவர்கள். இவ்விதம் ஆங்கு அப்பிள்ளைகள் நாள் முழுவதும் ஆசிரியர்பால் கற்கும் விசேஷக் கல்விதானென்னோ? ஈங்கிவ்விஷயம் விரிவஞ்சி விடுத்தனம். இவ்வகை உபாத்தியாயர்களும் தாய்தந்தையரும் சிறுவர்களின் மனோதத்துவ தேகதத்துவங்களை யோராதியற்றிவருங் கொடுமை பெரிது. கன்றுக்குட்டிகளுக்குச் சமைதியான விளையாட்டுப்பிள்ளைகளை இவ்விதம் நாள்முழுவதும் இருந்த யிலக்கிலேயே இருக்கச்செய்து அவர்களின் மனோபாவ முயற்சிக்கும் இடந்தாரா திடுக்கண் விளைப்பது பெரிதும் பாவம்.

5. எங்குமுள்ள பிள்ளைகளுக்கும் எந்நேரமும் விளையாட்டின் மீதே பிரியமாயிருக்கும். இவர்களின் இத்தகைய இன்றியமையாத் தேக சாதக முயற்சிக்கேற்ற குணம் அவர்களின் நன்மையின் பொருட்டே சர்வக்ஞன கடவுளால் அளிக்கப்பட்டதோர் பேராசீர்வாத மென்னத்தகும். அஃதெவ்வாறெனின், படிக்கும் பிள்ளைகள் கற்கும் விஷயங்கள் பலவும் ஞாபகத்தில் வைப்பதன்பொருட்டு முயன்று அயர்ந்த மனம் உற்சாகமுற விளையாடவேண்டிய தவசியமே. அன்றியும் நாடோறும் வளருந் தன்மையுடைய சிறு பிள்ளைகள் விளையாட்டின் மூலமாகவே சர்வாங்க சம்பூர்த்தியை அடைகின்றனர், பிள்ளைகள் தாம் உட்கொண்ட எவ்வகை யுணவையும் விளையாட்டின் மூலமாகவே செறித்துக்கொள்ளவும், அதனாலவர்கள் அயர்ந்து நித்திரை செய்யவும், இவ்வகையில் அன்னோர் பலமும், விருத்தியடையவுமான பல்வகை நன்மைகளை யுடையவராகின்றனர். ஆயினும் அவ்வகை விளையாட்டுகளைச் செய்வகைக ளெவ்வகையின வென்பதனை உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குச் செவ்வனே உணர்த்தவேண்டும். பிள்ளைகளைக் கண்டபடி விளையாடவிடக்கூடாது. விடின் பிரமாதத்திற் கிடமுண்டாகிவிடும். மெலிந்த அல்லது தாருட்டியமான எவ்விதச் சரீரத்தினையுடைய சிறுவர்களுக்கும் பொதுவாக ஏற்பட்டுள்ள தேகாப்யாச விளையாட்டுச் சாதனங்கள் தற்காலம் எங்கும் பாடசாலைகளில் கற்பித்துவரும் கவாத்தும் (Drill) கசரத்து (Gymnastics) மேயாம்.

6. இனி கவாத்தென்னும் நடைப்பழக்கத்தால் விளையும் நன்மைகளைச் சிறிதாராய்வோம். கவாத்தினால் கைகால்கள் பலப்படும் நன்றாய் நிமிர்ந்து இரு கைகளையுந் தாராளமாய் வீசி நடப்பதனால்,

அவயவங்களிலுள்ள தசைநாரம்புகள் வலிவடைந்து அழுந்தும். தவிர இரத்தம் உடலெங்கும் பரவும், பிள்ளைகள் வரிசையாய் நின்று ஒழுங்குபட நடக்கப் பயில்வதினால் அவர்களுக்கு உற்சாகமாகவிருக்கும். இச்சமயங்களில் காதுக்கினிய கீதவாத்தியக் கருவிகளோடு சம்பந்தப்பட்ட கவாத்தென்னும் நடைப்பழக்கத்துக்கு அனுகுணமான தாள வரிசைகளையுடைய வெவ்வேறுவகைப் பாட்டுகளைப் பாடுவதினால் சிறுவர்களுக்கு ஊக்கமிருந்து உற்சாகம் மேலிட்டு அவர்கள் செய்யுங் காரியஞ் சிறந்துகாட்டுவதேயன்றி சிரமமுந் தோன்றாதிருக்கும். வெட்டவெளியான மைதானங்களில் பெரும்பாலும் மாலைநேரத்தில் தேகசாதகம் செய்தல் நலம். அக்காலங்களில் அவ்வெளியில் சஞ்சீவிக்கிணையான காற்றைப் பிள்ளைகள் சுவாசிக்க நேர்ந்து அவர்களின் இரத்தம் சுத்திகரிக்கப்பட்டு வரும். அன்றியும் கவாத்தினால், அது காறும் நெடுநேரம் கல்விச்சாலையில் உபாத்தியாயர்களால் இடைவிடாமல் பல்வகையிற் கல்வி பயின்ற மனத்தளர்ச்சியால் மழுங்கிக்கிடக்கும் அறிவும் தூண்டப்படுதலுங்கும். சொல்லப்புகின் கவாத்தினால் விளையத்தக்க நன்மைகள் பலவுள.

7. கவாத்து செய்யுங் காலத்தில் உபயோகிக்குங் கட்டளை வார்த்தைகளில் (Commanding words) முக்கியமான சிலவற்றை இதனடியிற் குறிப்போம்:—

(Fall in) பாலின் = ஒன்று சேருங்கள்.
(Attention) அட்டெண்ஷன் = கவனியுங்கள்.
(Eyes front) ஐஸ் ப்ரண்ட் = முன்னே பாருங்கள்.
(Right dress) ரைட் ட்ரெஸ் = வரிசைவரிசையாய்நில்லுங்கள்
(Right turn) ரைட் டர்ன் = வலதுபுறம் திரும்புங்கள்.
(Left turn) லெப்ட் டர்ன் = இடது புறம் திரும்புங்கள்.
(Front turn) ப்ரண்ட் டர்ன் = முன் புறம் திரும்புங்கள்.
(Rear turn) ரியர் டர்ன் = பின்புறம் திரும்புங்கள்.
(March) மார்ச் = நடவுங்கள்.
(Halt) ஹால்ட் = நில்லுங்கள்.
(Mark time) மார்க் டைம் = காலங் காட்டுங்கள்.
(Dismiss) டிஸ் மிஸ் = கலைந்து போங்கள்.



முதலிய மற்றும் பல கட்டளை வார்த்தைகள் வழங்கப்படும். அவற்றின் அர்த்த விசேஷத்தையும், அநுபவ சாதகத்தையும் முந்தித் தாமறிந்து, பிறகு உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குக் கற்பிக்க வேண்டும்.

8. ஈண்டிவ்விஷய சம்பந்தமாக இன்னும் சில விசேஷங்களை யெடுத்துரைக்க மனமவாவுகின்றது. அவை வருமாறு அநேகர் தேகாப்பியாசத்தின் அருமையும் ஆவசியகமும் அறியாதவர்களாயிருக்கின்றனர். பணக்காரர்களின் பாலர் நெய்யும் பாலுமாய் விசேஷ உணவை உட்கொண்டு தம்முடலை வளர்த்துப் பருத்து யாதொரு தேகாப்பியாசமுமின்றி உட்காரவும் எழுந்திருக்கவுமே கஷ்டப்படுகின்றனர். இஷ்டமான உணவுக்கேற்ற கஷ்டமான வேலையைச் செய்தாலன்றோ நஷ்டமாகாமல் தேகம் ஸ்பஷ்டமாகவிருக்கும். அன்னோர் கஷ்டமான வேலையைச் செய்து கைகால் வருந்துவானேனெனத் தமக்குரிய எவ்வகைய அற்பத் தொழிலும் பிறரைக் கொண்டே நடத்திக் கொள்ளுகின்றனர். வியாதியினால் தேகம் வலிக்கலாகாதே யன்றி கஷ்டப்பட்டுடல் வருந்துவதினால் நஷ்டமொன்று மிராது. கஷ்டப்பட இஷ்டமில்லாதவர்கள் தமது சரீரத்தைத் தாம் சுமந்து செல்லவும் சக்தியற்று ஆயாசமடைகின்றனர். இஃதிவ்வாறிருக்க ஏழைகள் நாள்முழுவதும் கஷ்டப்பட்டு உண்ணப் போதுமான உணவின்றி வருந்தி தேகம் மெலிந்து போகின்றனர். ஆயினும் பகலெல்லாம் தம் சரீரத்தைவாட்டிப் பாடுபடும் இவர்கள் இரவில் நிர்விசாரமாய் நித்திரை யேற்று நெடுநாள் அரோக சுகசரீரிகளாய் உயிர்பெற்று வாழாநிற்க உடலை வருத்தும் யாதொரு தேகமுயற்சியுமில்லாத தனிகர்கள் சுகநித்திரையற்று பல்வரையற்று பல்வகைய பிணிகளால் பாதிக்கப்பட்டு சின்னாளிலே நரை திரை மூப்படைந்து உயிரிழக்கின்றனர். அந்தோ இதுவுமறியாமையே யன்றோ? நிற்க.

9. முற்காலத் தரசாக்ஷியில் சத்துருபயம் அடிக்கடி நேரிட்டு வந்த காரணத்தால் அந்நாளில் ஜனங்கள் அவ்வகை அவசரத்திற்கேற்ப தேகாப்பியாச சாதனங்களைப் பல்வகையிற் பயின்று வந்தனர். இதற்கு நிதரிசனமாக மகம்மதியர் நமது நாட்டைப் படையெடுத்த காலந் தொடங்கி நாடெங்குங் கொட்டடிக ளென்னும் கசரத்து கற்கு மிடங்களுண்டாகி அவற்றில் காளையர் பாணா, கர்லா, சந்தோலா முதலிய தேகாப்பியாசக் கருவிகளைக் கொண்டு தண்டால், பஸ்கி, பல்டி, கீர்க்கி முதலிய பல்வகைக் கசரத்துகளும்

பயின்று வந்தனர். தற்கால வரசாக்ஷியில் அத்தகைய பயமில்லா தொழியவே யாவருங் கவலையற்று கல்வியென்னும் மனப்பிரயத்தின சாதனத்தையே வெகுவாய் கைக்கொண் டுழைக்கா நின்றனர். இவ்வாறெவ்வகைத் தொழிலினரும் பிரதானசாதனமாகிய தேகாப்பியாசப்பிரயத்தினத்தில் பின்னபிப் பிராயங்கொண்டொழுகுங்காலம் நேர்ந்தது. இங்ஙனம் நாடெங்கும் தேகாப்பியாச முயற்சிகுறையவே சனங்கள் வியாதியினாற் பீடிக்கப்பட்டு மனம் வருந்துவோ ராயினர். ஒருவனது தேகம் வலிவற்று துர்பலத்தசையி லிருக்கும்போது அவ்வுடலையே வாசஸ்தானமாகக் கொண்ட அவனதுமனமும் அவ்வகை ஸ்திதியினையே அடையாநிற்கும் (A sound mind in a sound body.) அன்றி யத்தேகத் தறிவுக்கிருப்பிடமான மூளையும் பல ஈனப்பட்டு ஸ்திர புத்தியற்றிருக்கும். ஆகவே இத்தகையோர் தமக்கேனும் பிறர்க்கேனும் பயன்படாமலும், எண்ணியதை எண்ணியவாறு முடிக்க வியலாமலும், நாட்பட ஜீவித்திருக்க வகை யில்லாமலும் விதிவழியே விரைவில் மரித்துப்போகின்றனர். ஆதலால் தேகாப்பியாசம் எத்தகைய மேம்பாட்டினை யுடையதோ ஆய்ந்தறிமின். இதை யநுசரித்தேயன்றோ துரைத்தனத்தாரும் சிறு பிராயத்திலேயே பாடசாலைகளிற் பிள்ளைகளுக்குத் தேகாப்பியாச சாதனங்களையும் ஓர் பாடமாகக் கற்பிக்கவேண்டுமென வற்புறுத்தி உபாத்தியாயர்களை யுசாவுதல் ?

10. இனி முடிவுரையான சில மொழிகளாவன. மானிட ஜன்மம் நன்மை தீமைகளைப் பகுத்தறிந் தொழுகுமாறு படைக்கப்பட்டது. ஒருவன் முடிவில் அடையத்தகும் பேரின்ப வாழ்க்கையும் இம்மானிட ஜனன சரீர சம்பந்தமாகவே அடையத்தக்கதென அனுபவசித்தமாக விருக்கின்றது. அவ்வகை மோக்ஷசாதனத்திற் குரிய யோகாப்பியாசமே தேகாப்பியாச மென்னில் ஒருவன் இகலோகத்திலடைதற் பாலனவாய சமஸ்த போக்கிய பாக்கியங்களில் தேகாரோக்கியமே சிலாக்கியமென்னும் மொழி யோக்கியமே யன்றோ ?

சி. வே. சண்முக முதலியார்,

*Head Master, Board Elementary School,*

*Tinanur, Chingleput District.*



## HOW IS THE BLOOD SENT THROUGH EVERY PART OF THE BODY ?

## இரத்தம் தேகமெங்கும் எவ்விதமாய்ப் பரவுகின்றது ?

இருதயமானது, மங்கல் நிறமுள்ள ரக்தம், காற்றினால் பரிசுத்தப்படும்படி, அதை சுவாசாசயத்திற்குக் கொண்டு செலுத்தி, அங்கே அது சுத்தமானவுடன், மறுபடியும் அதைத் தேகமெங்கும் பரவச் செய்கின்றது.

ரக்தத்தைச் சரீரமெங்கும் பரவச்செய்யும்படி இரண்டு வகையான குழாய்களிருக்கின்றன. அவைகளுள் ஒன்றுக்கு பிருஹன்னா என்றும், மற்றொன்றுக்கு ரக்தக்குழாயென்றும் பெயர். அவைகளுள் பிருஹன்னாடியென்பது இருதயத்திலிருந்து சுத்தமான ரக்தத்தைத் தேகமுழுதும் கொண்டு செலுத்தும். மற்றொன்று மங்கலாய்ப்போன அழுக்குரக்தத்தை மறுபடி இருதயத்துள் கொண்டு செலுத்தும்.

நாம் நமது இடப்பக்கத்தைத் தொட்டுப் பார்த்தால் இருதயம், அடித்துக்கொள்வது நமக்கு நன்றாய்த் தெரியும். வேறொருவருடைய இடதுபக்கத்தில் நமது காதை வைத்துப் பார்த்தால் அது அடித்துக்கொண்டிருக்கிற ஓசை நன்றாய்க் கேட்கும். இடதுபுறத்திலும் வலதுபுறத்திலும் இருக்கின்ற இரண்டு ஜடரங்களும் ரக்தத்தையுட்கொள்ளும்போதும் வெளியே தள்ளும்போதும் இருதயம் அசைவதுபற்றி அந்தத் துடித்தலுண்டாகின்றது.

வலது ஜடரமானது கறுத்த ரக்தத்தைச் சுவாசாசயத்திற் கொண்டு செலுத்துகிறதென்றும், இடது ஜடரமானது சுவாசாசயத்தினின்றும் வந்த சிவந்த ரக்தத்தை பிருஹன்னாடியிற் சேர்க்கிறதென்றும் அறியலாம். ஒரு அடிமரமானது அநேகம் கிளைகளாகவும் வளார்களாகவும் கிளைத்தோடுவதுபோல் அந்த பிருஹன்னாடியானது அநேகம் சிறு நரம்புகளாகப் பிரிந்தோடுகின்றது.

அப்படிப் பிரிந்தோடுகிற நரம்புகள் இவ்வளவென்று அளவு சங்கியையில்லை. அவைகளில் அநேகம் வெகு மெல்லியதாயும் அழகாயுமிருக்கின்றன. அவைகள் மயிரிழையைப் பார்க்க நுண்ணியதாய் நமது தேகத்தின் ஒவ்வொரு மூலையிலும் வியாபித்திருக்

கின்றன. அநேக விடங்களில் தோட்ட முதலியவைகளுக்குத் தண்ணீர்ப் பாய்ச்ச, நுனியில் பல சிறுத்துவாரங்களோடு ஜல யந்திரங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்களே, நமது இருதயத்தை அந்த யந்திரத்துக்கொப்பாகவும், அதினின்றும் ஓடுகிற சிறு நாடிகளை அந்த யந்திரத்திலுள்ள ரந்திரங்களுக்கொப்பாகவும் சொல்லலாம்.

ரக்தமானது இருதயத்திலிருந்து பெரிய நாடியில் அதிக விசையாய்ய் பாய்கின்றது. அச்சமயத்தில் அதிலொரு சிறு துவாரம் செய்துவிட்டால் ஊற்றிலிருந்து நீர் புறப்படுவதுபோல் சரேலென்று மேலே ரக்தம் அதிக பலமாய் வந்து பாயும், மேலும் அது போய் விழுகிற பெருநரப்பு மிகவும் உரப்பாயிராவிட்டால், உடனே அதின் வேகத்தால் கிழிந்துபோம். அதனால் ரக்தநரம்புகளெல்லாவற்றையும்விட அந்த பிருஹன்னாடி மிகவும் உரத்ததாயிருக்கிறதென்று நமக்கு நன்றாய்த் தெரிகின்றது.

வெவ்வேறு வகையான தசைகள் மூன்றுபுரை ஒன்றாய்ச் சேர்ந்து அழுத்தமும் உறுதியுமுள்ள குழாய்போலிருக்கின்றன. அவைதாம் நரம்புகள். அவைகள் மிகவும் நெகிழ்ச்சியான தன்மையுள்ளவை. அதனாலே தான் அவைகளின் மூலமாய் ரக்தமெங்கும்பரவ மிகவும் அனுகூலமாயிருக்கின்றது. ஒவ்வொரு நரம்பிலும் நேராய் ரக்தத்தைக்கொண்டு செலுத்தும்படியான வல்லமை இருதயத்திற்கில்லை. அதனால் ஒரு நரம்பிலிருந்து மற்றொன்றுக்குப் போகும்படி வழி யேற்படுத்தி யிருக்கின்றது. ரக்தம் பிரவகிக்கின்ற வேகத்தால் இரண்டுபக்கமும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டிருக்கிற நரம்புகள் பிரிந்து அதற்கு வழிவிட்டு, ரக்தம் போன உடனே மூடிக்கொள்ளும். இவ்விதமாய் ரக்தம் தேகமெங்கும் பரவுகின்றது. இருதயத்தின் துவாரத்திலிருக்கும் ஒருவகைத் தசையானது ரக்தம் அதைவிட்டு வெளியேவந்தவுடன் அதை அடைத்துவிடுகிறபடியால், அதைவிட்டு வெளியே வந்த ரக்தம் மறுபடி அதற்குள் பிரவேசிக்கிறதில்லை. அது இருதயத்தினின்று முனைந்து செல்லுகிற வேகத்தால் ஒரு நரம்பைவிட்டு மற்றொன்றாய்ப் பாய்ந்துபோய் சரீரத்தின் ஒவ்வொரு மூலைகளிலும் போய்ச் சேருகின்றது.

பெரிய நரப்புகள் அறுபட்டாலும் காயப்பட்டாலும் வெகு அபாயம் நேரும். ஏனெனில் அதினின்றும் ரக்தம் வெளியே வரவொட்டாமல் தடுக்க நாம் முயலுவதற்குமுன் அளவற்ற ரக்தம் வெளியே வந்துவிடும். ஆதலால் அந்த நரம்புகள் யாதொரு சேத



மும் உண்டாகாமல் பத்திரமாய்க் காக்கப்பட்டிருக்கின்றது. பெரிய நரம்புகள் மேல் தோலுக்கு அடுத்தவிடத்தில் ஒருபோதுமிருக்கிறதில்லை. சில பெருநாடிகள் மாமிசங்களுக்குள் நுழைக்கப்பட்டிருக்கின்றன. சில சிறு நாடிகள் எலும்புகளுக்குள் அமைக்கப்பட்டிருக்கின்றன. வேறு சில யாதொரு அபாயமுமின்றி ஒருவகையான குழாய்க்குள் விடப்பட்டிருக்கின்றன. அதற்கொரு திருஷ்டாந்தம் பாருங்கள். நமது விரல்களிலுள்ள எலும்புகளுக்குள் ஒரு நரம்போடுகின்றது. அந்த எலும்பை நாம் அறுத்தாலும் அதற்குள் இருக்கிற நரம்புக்கு யாதொரு சேதமும் நேராது. பெரிய நரம்புகள் அவ்வளவு பத்திரமான விடங்களில் வைக்கப்பட்டிருக்கிறபடியால் அவைகள் காயப்படும்படியான சமயம் நேருவது அருமை. நாம் சாதாரணமாய்த் தேகத்தில் கைகால்களில் காயம்பட்டு ரக்தம் வரக் காண்கிறோமே, அவையெல்லாம் பலத்த நரம்புகள் அறுவதனாலல்ல; அசுத்தமான ரக்தத்தைச் சுவாசாசயத்திற்குக் கொண்டு போகிற சிறுநாடிகள் அறுந்துபோய் ரக்தம் பெருகுகின்றது. அதனால் அதிகமாய்த் தீங்கு விளைவதில்லை.

நமது கைகளில் மணிக்கட்டுக்கு அடுத்த கீழ்ப்புறத்தில் தொட்டுப்பார்த்தால், மேல் தோலுக்குக் கீழோடு பல நரம்புகள் காணப்படுகின்றன. அவையெல்லாம் கறுத்த ரக்தமுள்ளவைகள். கட்டைவிரல்புறமாய் மணிக்கட்டை விரலால் கொஞ்சம் அழுத்திப்பார்த்தால் நாடியடிப்பதை நாம் அறிந்துகொள்வோம். அவையுள்ளேயிருக்கிற சுத்தரக்தநாடிகள். அவைகளைத்தான் தாதுவென்பார்கள். இருதயத்திலிருந்து ஒவ்வொருதடவையும் ரக்தம் வேகமாய் நாடிகளில் பாயும்போது அந்த நாடிகள் பிரிவதனால் அந்தத் துடித்தல் உண்டாகின்றது.

இருதயம் எவ்வளவு துரிதமாய் அடித்துக் கொள்ளுகிறதோ, அவ்வளவு துரிதமாய்த்தான் நாடிகளும் அடித்துக்கொள்ளும். ஒவ்வொரு தடவையும் ரக்தத்தைத் தள்ளுவதே இருதயம் அடித்துக் கொள்வதற்குக் காரணமாகையாலும், அது ஒவ்வொரு தடவையும் தம்மிடத்தில்வந்து வீழ்வதே நாடிகள் அடித்துக் கொள்வதற்குக் காரணமாகையாலும், இரண்டும் ஒரே ரீதியாய்த் துடிக்கின்றன. மிகவும் சவுக்கியமான வயது புருஷனுக்கு இருதயமும் நாடியும் ஒரு மினிட்டுக்கு 70 தரம் அடித்துக்கொள்ளும். சிறு குழந்தைகளுக்கும் வயது சென்றவர்களுக்கும் அதைவிடக்கொஞ்சம் வேகமாய்

அடிக்கும். சில வியாதிகளில் அதிவேகமாய் அடிக்கும். அது அக்காலத்தில் ரக்தம் அதிக வேகமாய் ஓடுவதினா லுண்டாகின்றது. வேறு சில வியாதிகளில் கொஞ்சம் மெதுவாயோடும். நமக்கு தேகம் அஸ்வஸ்தமாயிருக்கும்போது வைத்தியன் அந்தத் தாதுவைப் பிடித்துப் பார்ப்பானாயின் ரக்தம் போகிறவழியில் அசுத்த வஸ்துக்கள் இவ்வளவு கலந்து இருக்கின்றனவென்பதும், இவ்வளவு வேகமாய் ரக்தம் ஓடுகிறதென்பதும் அறிந்து சொல்லமாட்டுவன்.

நாடியோடுகிற வேகமானது ரக்தம் அலையடித்து ஓடுகிற வேகத்தை அறிவிக்கின்றது. ரக்தம் தேகத்தில் ஓடும்போது முக்கியமாய் இரண்டு காரியஞ் செய்கிறது ; சரீரத்தில் ஒவ்வொரு மூலையிலுமிருக்கிற கெட்ட வஸ்துக்களைத் தன்னுடன் அடித்துக்கொண்டு போகிறது. அதுவன்றியில் ஒவ்வொரு பாகத்திற்கும் புஷ்டியைக் கொடுக்கும்.

சரீரத்திலுள்ள ஒவ்வொரு பாகத்தையும் விருத்தி செய்யத்தக்க பதார்த்தங்கள் ரக்தத்தில் கலந்திருக்கின்றது. மாமிசம் வளருவதும் ரக்தத்தினாலேதான் ; மூளை வளருவதும் ரக்தத்தினாலேதான் ; எலும்பு வளருவதும் ரக்ததினாலேதான் ; தோல் வளருவதும் அதனாலேதான். இப்படி அது தேகத்திலுள்ள கட்டியான பொருள்களை அப்போதைக்கப்போது நூதனமாக்கிச் சீர்ப்படுத்துவது மாத்திரமேயல்ல; பாசகநீர், பித்தநீர், உமிழ்நீர்,கண்ணீர் முதலிய திரவ பதார்த்தங்களை வளர்ப்பதும் ரக்தமே. ரக்தம் ஒருதடவை தேகமெங்கும் பிரவகித்து அதிலுள்ள ஸாரம் அந்தந்த பாகத்தோடு சேர்ந்தவுடன் ஒவ்வோரிடத்திலுமுள்ள அசுத்தவஸ்துக்கள் அதில் வந்து கலக்கின்றது. உடனே அந்த ரக்தத்திலிருக்கும் சிவப்பு நிறம் மாறி ஒரு வகையான கறுப்புநிறமுண்டாகும். அப்புறம் அதற்குத் தேகத்தைப் போஷிக்கிற சக்தி கிடையாது. அது அப்படியே தேகத்தில் நிற்குமாயின் விஷம்போல நம்மைக் கொன்றுவிடும்.

ஆனால் அதன்பிறகு என்ன செய்யப்படுகிறதென்கிறீர்களோ ? கறுத்த ரக்தத்தைக் காற்றாடக் கொண்டுபோகிற ரக்தக்குழாயென்று ஒருவகை நரம்புகள் இருக்கின்றனவே, இப்போது அவைகளையும் கவனிக்கவேண்டும். மயிரிழைபோல மிகவும் நுண்ணியதான பிருஹன்னாடியின் நுனிகள் அதிநுட்பமான மற்றொருவகை ரக்த நரம்புகளின் நுனிகளோடு சேர்ந்து தம்மிடத்திலுள்ள ரக்தங்களை அவைகளில் ஊற்றுகின்றன. அவைகளின் மூலமாய் ரக்தமானது இருதயத்திற்குச் சமீபத்திலிருக்கிற பெரிய ரக்தநரம்பில் போய்ச் சேரும்.



அங்கே புதிய அன்னசாரமும் கூடவந்து கலக்கின்றது. அங்கிருந்து இந்த ரக்தமும் அன்னசாரமும் ஒன்றாய்ச் சேர்ந்து இருதயத்துட் செல்லும். இருதயமானது அவைகளைச் சுவாசாசயத்திற்கொண்டு சேர்த்து நமது சுவாசத்தின் வழியாக அதிலுள்ள அழுக்குகளை வெளியே கொண்டு தள்ளுகின்றது. அதனால் அந்த ரக்தமானது தன்னிடத்திலிருந்த மலங்களெல்லாம் போய் நல்ல சிவப்பு நிறமடைந்து மறுபடியும் தேகமுழுதும் பரவுவதற்குப் பக்குவமாகின்றது.

இவ்விதமாய் ரக்தம் முதலில் சுவாஸப்பைக்குப் போவதற்கும், அப்புறம் அங்கிருந்து தேகமெங்கும் வியாபிப்பதற்கும் ரக்தப்பிரசாரமென்று பெயர். இருதயமானது ஒருமணி நேரத்துக்குள் நாலாயிரம் தடவைக்கு அதிகமாய் அடித்துக்கொள்ளவும், அப்படியே அதிக துரிதமாய் ரக்தத்தை ஓடச்செய்யவும் வல்லமையுடையதாயிருப்பதால், இவ்வகையான ரக்தப்பிரசாரம் மூன்று மின்னிட்டுக்குள் நடந்துபோம்.

ஆயினும் அதிக வேகமுள்ள பிராணாதாரமான பிரவாஹமானது பிறப்புமுதல் இறப்புவரையில், ஒரு விநாடிகூட ஓயாமல் நமது தேகத்துள் எவ்வளவு நிச்சப்தமாய் ஓடுகின்றது ! நமது சரீரத்தில் நரம்புகள் அசையாமல் நிற்பதும், மெதுவாய் நாடிகள் அடித்துக் கொள்வதும் நமக்குப் புலப்படுகிறதேயன்றி, மற்றவையொன்றும் ரக்தமோடுவதைப்பற்றி நமக்குத் தெரிகிறதில்லை. இருதயத்தின் உண்மையான உபயோகமின்னதென்றும், ரக்தம் இவ்வகையாய்ப் பரவுகிறதென்றும் தெரியாமல் நெடுநாளாய் மஹா பண்டிதர்களான வைத்தியசாஸ்திரிகள் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தது இதுதான்.

சுமார் முந்நூறுவருஷங்களுக்கு முன்னே மகாபுத்திசாலியும் பண்டிதருமான 'ஸேர்விடஸ்' என்கிற ஸ்பேயின்தேசத்து வித்வானொருவர், இருதயந்தான் ரக்தத்தைக் காற்றாடும்படி சுவாஸாசயத்திற் கொண்டுவிடுகிறதென்று கண்டுபிடித்தார். அதன்பிறகு இருந்த பண்டிதர்கள் கொஞ்சங் கொஞ்சமாய் இருதயத்தின் உபயோகமும், சுவாஸாசயத்தின் உபயோகமும், நாடிகளின் உபயோகமும், நமது சரீரமாகிற யந்திரத்திலுள்ள மற்ற ஒவ்வொரு பாகத்தின் உபயோகமும் இன்னின்னவென்று கண்டுபிடித்தார்கள்.

ஜனவிநோதினி.

# The Madras Educational Exhibition committee.

## சென்னை கல்விப்பொருட்காட்சிச் சபை.

### 1907.

---

சபாநாயகர்.

மிஸ்டர் ஆர்தர் மேஹியூ, எம். ஏ.

உதவி சபாநாயகர்.

மிஸ் P. F. பார்ஸன்ஸ், பி. ஏ., எல். டி.

காரியதரிசிகள்.

ம. ா. ஸ்ரீ. M. சுப்பிரமண்யம், பி. ஏ., எல். டி.

,, G. மாணிக்க செட்டியார், பி. ஏ., எல். டி.

பொக்கிஷதார்.

,, A. S. வைத்தியநாத ஐயர், எம். ஏ., எல். டி.

பொருட் காட்சிச் சபையார்.

மிஸ் ஆக்னெஸ் ஸ்மார்ட்.

,, எம். எல். ஸ்காட்.

மிஸர்ஸ். மார்கரெட் K. பாரோ.

ரெவரண்ட். J. ஸ்டுவர்ட், எம். ஏ.

,, W. L. பெர்குஸன், டி. டி.

,, A. O. பிரவுன், எம். ஏ.

,, W. D. கிளார்க், பி. ஏ.

ம. ா. ஸ்ரீ. B. K. இராமநாதன், எம். ஏ., பி. எல்., எல். டி.

,, S. சிங்காரவேலு நாயகர், பி. ஏ.

,, C. பலபத்திர நாயகர்.

,, C. S. இராமசாமி ஐயர்.

,, K. C. S. அநந்தநாராயண ஐயர், பி. ஏ., எல். டி.

,, T. அண்ணாமலை முதலியார்.

,, N. சுவாமிநாதன், பி. ஏ., எல். டி.

---



1907௵ ஆகஸ்டு௴ முடிவில் சென்னையில் வித்தியாபிவிருத்தி காட்சி யொன்றை ஸ்தாபிக்கவெண்ணி, அதனை தக்க ஏற்பாடுகளுடன் முட்டின்றி முடிக்க அடியிற் குறிப்பிட்டவர்கள் ஓர் சபை கூடியிருக்கின்றனர். சென்னை இராஜதானியில் பொதுக் கல்வியின் விருத்திக்காக நியமிக்கப்பட்டிருக்கும் கல்விச் சாலைகளிலுள்ளோர் யாவரும் இக்காட்சியால் பயனடையும்படி, காட்சிப் பொருள்கள் முக்கியமாய் உபாத்தியாயர்களாலும் மாணவர்களாலும் விமரிசையாகச் செய்து முடிக்கப்பெற்றவைகளாகவே இருத்தல் வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்சொன்ன விதமாக ஏற்படுத்தப்படும் பொருட்காட்சியினாலுண்டாகும் பயன்கள் அளவற்றனவென்பது சொல்லாமலே விளங்கும். உபாத்தியாயர்களாலும் மாணவர்களாலும் செவ்வனே செய்யப்பட்ட காட்சிப் பொருள்களை, குறித்தவிடத்தில் ஒருங்குசேர்த்து வைத்தால், இக் காட்சியைக்கண்டு களிக்கவரும் யாவருக்கும் அவற்றால் விசேஷித்த நன்மை யுண்டாகுமென்றே நிச்சயிக்கின்றோம். இக்காட்சியால் உபாத்தியாயர்கள் அநேக புதிய விஷயங்களைத் தெரிந்துகொண்டு புதிய வழியில் தத்தம் மாணவர்களுக்குக் கற்பிக்கவும் இயலும். இவ்விஷயங்களில் நிபுணராக விருப்பவர்களுக்கும் இக்காட்சி அவர்கள் சாமர்த்தியத்தை இன்னும் விருத்தி செய்யவும் அவர்கள் மனத்துள் மறைந்துள்ள பயன்படும் விஷயங்களை வெளிப்படுத்தவும் ஒரு முகாந்தரமாகும். பிரதம வித்தியாபி விருத்திக்கு, கைகளால் செய்யப்படும் செய்பொருள்கள் இன்றியமையாதனவாதலால் இத்தகைய காட்சியால் பிள்ளைகள் கைகளும் கண்களும் தக்க வேலைகளில் ஈடுபட்டுப் பயனடைவதைப் போல மற்றெவைகளாலும் அவ்வளவு பயனடைய மாட்டா.

இவ்வாறு ஏற்படுத்தப்படும் காட்சியின் விருத்தியானது சபையாரால் சேகரிக்கப்படும் திரவிய சகாயத்தை பொருத்திருக்கின்றது. இக்காட்சிச் சாலையை நிலை நிறுத்தி நடத்துவதற்கு வேண்டிய செலவை சபையாரால் சேகரிக்கப்படும் திரவியத்தினின்றும் நீக்க, மிகுதியில் கொஞ்சமேனும் செலவிட்டு காட்சிப்பொருள் செய்தனுப்புகிறவர்களில் கைதேர்ந்தவர்களுக்கு வெகுமதிகளைக் கொடாவிடில் இக்காட்சியால் அடையவேண்டிய பலன் முற்றுங் கிட்டாது ஆதலால் நண்பர்கள் அனைவரும் தங்களால் இயன்ற அளவு உதவி புரிந்து, ஒருமனப்பட்டு இக்காட்சியை நன்னிலைக்குக் கொண்டுவருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சென்னை தங்கசாலை வீதி தொண்டைமண்டலத் துளுவவேளாளர் உயர்தரக் கலாசாலையின் பிரின்சிபாலை இக்காட்சி சாலைக்கு பொக்கிஷதாரராக ஏற்படுத்தி யிருத்தலா லவரிடம் கையொப்பத் தொகைகளைச் செலுத்தும்படியாகவும் கேட்டுக்கொள்கின்றோம்.

மானேஜர்களும், உபாத்தியாயர்களும் ஒருமனப்பட்டு ஒத்து உழைத்தாலல்லது இப் பொருட்காட்சிச் சாலை நன்னிலைக்கு வருவ தரிது. ஆகையால் மானேஜர் தமது பார்வையிலிருக்கும் பள்ளிக் கூட உபாத்தியாயர்களை இக்காட்சிச் சாலையின் விருத்திக்காக தங்களாலானமட்டும் உழைத்து வரும்படி தூண்டுவதோடு அவ்வுபாத்தியாயர்களாலும், அவர்களது மாணாக்கர்களாலும் செய்யப்படும் அரிய காட்சிப் பொருள்களை தத்தம் மானேஜர்களது மூலமாய் இப்பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பும்படி வேண்டுகின்றனம். இக்காட்சிச் சாலைக்கு அனுப்பப்படக்கூடிய பொருள்களின் அட்டவணை ஒருவாறு கீழே குறிக்கப்பட்டுளது. ஆயினும் அதிற் காணப்பட்டவை மட்டுமே போதுமானவை யெனக் கொள்ளாது அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட மற்றும் அரிய பொருள்களையும் உடன் கொள்ளுதல் கூடும்.

### A. சித்திரம் வரைதல்.

(a) யாதோரளவுமின்றி கையால் வரைதல்.

(1) மாணாக்கர்கள், — இயற்கைப் பொருள்களை யேனும், மனோத்தேசத்தாலேனும் காகிதம் அட்டை முதலியவற்றின்மேல் பென்வில், வர்ணச் சுண்ணும்பு, தூரி (Brush) களைக் கொண்டு வரைவது —

(2) (உபாத்தியாயர்கள்) பொருட் பாடங்களையேனும், கதைகளையேனும் உதகரிக்க அட்டை அல்லது பழுப்பு நிறமுள்ள கடிதத்தின்மேல் பென்வில் அல்லது வர்ணச் சுண்ணும்பினால் வரைவது.

(b) கட்டடங்களின் படங்கள், துண்டு நிலங்களின் அளவுகள் முதலியவற்றை மட்டப்பலகையால் சுருக்கி அளவிடுதல்.

(c) படம் வரைதல் — எல்லையைக் காட்டும் படங்கள், விசேஷபடங்கள் அதாவது இயற்கையமைப்புக்கள், இருப்புப் பாதைகள், மழை, ஜனத்தொகை முதலியவற்றை உதகரித்தல்.



### B. எழுத்து.

(a) எழுத்தின் அமைப்புக்கள். (b) ஆங்கிலத்திலும், சுயபாஷையிலும் சட்ட புத்தகம் (Copy books)

### C. சிறுவர் சிங்காரத் தோட்ட வேலைகள்.

1. மரவேலை - பழங்கள், பிராணிகள் முதலியன
2. களிமண் வேலை ”
3. சடைவேலை - கோயில்கள், கட்டடங்கள் முதலியன
4. ரப்பர்வேலை - முத்திரைகள், பிராணிகள் முதலியன
5. குத்தித் தைத்தல்
6. காகித அட்டை வேலைகள்
7. மணிகளாலும் கொட்டைகளாலும் செய்யப்படும்வேலைகள்
8. பாய்பின்னுதல் - காகிதம், ஓலை, கோரை முதலியவைகளால்
9. கூடை முடைதல்-பனையோலை, ஈந்தின் ஓலை முதலியவைகளால்
10. குத்தி வர்ணமிடல்
11. காகித புஷ்பங்களால் மாலை செய்தல்
12. வர்ணவேலை.

### D. கம்பளி நூல் வேலை.

தையல்வேலை, கொக்கி ஊசி வேலை, பாய் ஓரம் தைத்தல், குறுக்குத் தையல், ஓரம் தைத்தல், சிங்காரவேலைகள்.

### E. தையல் வேலை.

சாதாரண தையல், சிங்காரத் தையல்

### F. சரிகைவேலை.

### G. பூகோள சாஸ்திரம்.

தத்துவ சாஸ்திரம் முதலியவைகளைக் கற்பிக்கவேண்டிய கருவிகள்

### H. பாடங்களை உதகரிக்கவும் பள்ளிக்கூடப் பொருட்காட்சிச் சாலையை விளக்கவும் பொருட்களின் தொகுதி —

நாணயங்கள், முத்திரைகள், முட்டைகள், கொட்டைகள், கூடுகள், தாதுப் பொருள்கள் முதலியன.

*I.* உபாத்தியாயர் வேலைகளின் பதிவுகள் —

காலநிர்ணயப்பட்டி, ஒன்று அல்லது பாடங்களின் பாடசாலை. பாடப்பட்டி முதலியன.

*J.* கீழ்வகுப்புக்களின் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்ட பாடங்களின் அமைப்பு.

மேற்சொல்லிய வஸ்துக்களிற் சில இங்கிலாந்தினின்றும் அழைப்பித்துக் காட்டப்படும்.

வித்தியாபிவிருத்தியில் மனங் கொண்டவர்களால் அனுப்பப்படும் வஸ்துக்கள் அங்கீகரிக்கப்படும் ஆனால் இவ்வஸ்துக்களை மற்றவைகளோடு சீர்தூக்கி எற்றஞ் சொல்லவாவது போட்டிக்குகொண்டு வரவாவது முடியாது.

1907ஹூ ஆகஸ்டுமீ 1உக்குள் காரியதரிசிகளிடம் காட்சிப் பொருள்கள் சேரும்படி அவைகளை முன்னதாகவே அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

காட்சிப் பொருள்கள் அனுப்பினவர்களில் கை தேர்ந்தவர்களுக்கு சபையாரால் பதக்கம், வெகுமதி, அல்லது நற்சாட்சிப்பத்ரதிம் இனமாகக் கொடுக்கப்படும்.

இங்ஙனம்:
தங்களன்புள்ள,
எம். சுப்ரமண்யம்.
ஜி. மாணிக்க செட்டி
காரியதரிசிகள்.

## SNOW.
## பனிக்கட்டி.

தண்ணீர் உறைந்தால் பனிக்கட்டியாகுமென்பது அனைவரும் அறிந்த விஷயம். பனிக்கட்டியை நமது முகத்துக்கெதிரில் பற்றிப் பார்த்தால், அது பளிங்கைப்போல ஒளி வீசும். இதனால், தண்ணீருக்கும் பனிக்கட்டிக்குமுள்ள வேற்றுமை நன்கு புலப்படும். திரவ பதார்த்தமாகிய தண்ணீர், குளிர்ச்சியினால் இறுகி பனிக்கட்டியாகிய திட பதார்த்தமாகவும், அத்தண்ணீரே வெப்பத்தினால் ஆவியாகி வாயு பதார்த்தமாகவும் மாறும். ஆகத் தண்ணீர் ஒன்றே, திரவ, திட, வாயு பதார்த்தங்களாக மாறுகின்றது.





2. நாம் வசிக்கும் இத்தென்னிந்தியநாடு மிக்க வெப்பமானதாகையால், இங்கு இயற்கையான பனிக்கட்டிகளைப் பார்ப்பதரிது. மிகுந்த குளிர்ச்சியான நாடுகளில் பனிக்கட்டிகள் தண்ணீரில் உறைந்து மிதந்துகொண்டிருக்கும். சீததேசங்களில் பனிக்கட்டித் தீவுகள் பலவுளவாம். அவை சில சமயங்களில் உடைபட்டுத் தண்ணீரில் மிதக்கத்தலைப்படும். தண்ணீரிலேயே தண்ணீர் உறைந்து மலையென மிதப்பது எவ்வளவு ஆச்சரியகரமானது! சில விடங்களில் அப்பனிக்கட்டித் தீவுகள் சுமார் பத்துப் பதின்மூன்று மைல் அளவிற்குப் பரந்திருப்பதும் உண்டாம்.

3. பனிக்கட்டி, தண்ணீரினும் பளுவற்றது. அது தண்ணீரின் நிறையில் எழிலொருபங்கு குறைவுள்ளது. இப்பனிக் கண்டங்கள் நீர்மட்டத்திற்குமேல் புலப்படுவதைப்போல ஆறுமடங்கு தண்ணீர்க்குள் அமிழ்ந்திருக்கும்.

4. இராக்காலங்களில், அதிவேகமாய்ச் செல்லும் நீராவிக் கப்பல்கள் இப்பனிக்கண்டங்களிற் பட்டுச் சேதமுறுவது முண்டு. அதனால், மாலுமிகள் இது விஷயத்தில் மிக்க கவலை செலுத்துவார்கள். பனிக்கட்டியாலுண்டாகும் பயன் இவ்வள வவ்வளவன்று. மிக உரத்த கற்களை உடைப்பதற்குதவும் மற்றக் கருவிகளைவிட இப்பனிக்கட்டியே சாலச்சிறந்த ஆயுதமாம். அஃதெப்படியெனில், தண்ணீர் திரவரூபமாய் இருக்கும்போது. அதற்கு வேண்டும் இடத்தைவிட, அத்தண்ணீர் இறுகிப் பனிக்கட்டியாகும்போது அதிக இடம் வேண்டும். ஆதலால், கற்பிளவுகளில் வீழ்ந்த தண்ணீர் இறுகும்போது அதற்கு வேண்டிய அளவு பரவுதற்கு இடமில்லாமையால் அது அவ்விடத் திருக்குங் கல் முதலியவைகளைப் பிளந்து உடைத்து விடும்.

5. ஒரு பனிக்கட்டித் துண்டை ஒரு புட்டித் தண்ணீரில் போட்டுவைத்தால், அஃது உறுகுமளவும் அந்நீரைக் குளிர்ச்சியாய் வைத்திருக்கும். பிறகு, அது படிப்படியாய் அவ்விடத்திலுள்ள சாதாரண சலத்திற்குச் சமமான சீதோஷ்ணத்தை யடையும். விஷசுரம் முதலிய பிணிகளுக்குப் பனிக்கட்டி மிக்க உபயோகமான ஔஷதமாம். பனிக்கட்டி நமது நாட்டில் சாதாரணமாய் எங்கும் கிடைப்பதரிது. ஆனால், யந்திர சகாயத்தால் தற்காலம் வேண்டுமளவு செய்து வருகிறார்கள்.

6. பனிக்கட்டியைக் கம்பளத்தில் பொதிந்து வைத்தால் அஃது உருகாமலிருக்கும். நமது உடலில் உஷ்ணமுண்டாவதற்கன்றோ நாம் கம்பளத்தை உடுத்திக்கொள்கின்றோம். கம்பளம் உஷ்ணத்தை உண்டாக்குகிற . தென்பதில்லை. ஆயினும், அது தேகத்திலுள்ள உஷ்ணத்தை வெளிப்படுத்தாமலும், வெளியே யிருக்கும் உஷ்ணத்தை உள்ளே புகவொட்டாமலுஞ் செய்கின்றது. ஆதலின், பனிக்கட்டியின் மீதும் வெளியேயுள்ள உஷ்ணம் தாக்காமல் தடுத்துக் காக்கின்றமையால் கம்பளத்தில் பொதிந்துள்ள பனிக்கட்டி உருகாமலிருக்கின்றது.

7. நமது இந்து தேசத்திலும் ஒரோர் காலங்களில் மழைபெய்யும்போது வானத்தினின்றும் சிறு பனிக்கட்டிகள் விழுவதுண்டு. அவையே ஆலங்கட்டிகள் என்னப்படும்.

8. இந்தியாவின் வடவெல்லையாய் அமைந்துள்ள இமயமலையின் சிகரமுழுதும் இப்பனிக்கட்டிகளே மிகுதியாய் உறைந்திருப்பதனால் அம்மலைக்கு இமாசலமென்று பெயர்; (இமம் = பனி, அசலம் = மலை.) இப்பருவதத்தினின்றும், கங்கை, பிரமபுத்திரை, சிந்து முதலிய சீவ நதிகள் உற்பத்தியாகின்றன. இந்நதிகளில் மாரிகாலத்தினும் வேனிற்காலத்தில் நீர்ப்பெருக்கு மிகுதி. அதற்குக் காரணம் அம்மலைச் சிகரத்தில் பொதிந்துள்ள பனிக்கட்டிகள் சூரியகிரணத்தினால் மிகுதியும் உருகுதலேயாம்.



## TIT BIT.

## விநோதக் கூற்று.

### முரடன் பாச்சாவின் மந்திரியை வென்றது.

ஒரு முறட்டுத்துலுக்கச் சேவகன் மழைக்காக ஒரு வீட்டுத் திண்ணையிலே வந்து உட்கார்ந்தான். அவன் பக்கத்திலே ஒருக்ஷய ரோகி வந்து உட்கார்ந்து இருமினான். அந்தத் துலுக்கன் அடா இங்கே இருமாதேயென்றான். மறுபடியும் இருமினான். அந்த முறடன் கோபத்துடனே கத்தியை உருவிக்கொண்டு அந்த நோயாளியை ஒரே வெட்டாகத் துண்டித்தான். அதைக்கண்டு சமீபத்திலிருந்த எல்லாருங் கூடிப் பிடித்துக்கொண்டுபோய் இராயரிடத்திலே ஒப்பித்தார்கள். இராயர் அவனை ஏன் வெட்டினை யென்று கேட்டார். அவனை இருமாதே யென்று சொன்னேன், என் பேச்சைத் தள்ளிக்கொண்டு இருமினான், அதனாலே வெட்டிப் போட்டேனென்றான். இராயர் அந்த மூடத்தனமான பேச்சைக்கேட்டுச் சிரித்து அப்பாஜியைப்பார்த்து இவனுக்கு என்ன தண்டனை விதிக்கலாமென்று கேட்டார். இவனை ஒன்றும் செய்யாமல் காவலில் வைத்து நாள்தோறும் இரண்டு சேர் மாமிசமும் ஒருசேர் நெய்யும் அதற்குத் தக்க சாமான்களும் கொடுத்துச் சாப்பிட்டுக் கொழுப்பேறும்படி செய்துவந்தால் நல்ல தருணத்திற்கு உதவுவானென்று சொன்னான். அப்படி செய்துகொண்டு வருகிற காலத்தில் ஒருநாள் பாச்சாவானவன் தன்னுடைய மந்திரிகளை நோக்கி மதியூகியாகிய அப்பாஜியினுடைய வல்லமையினாலே ராயன் நமக்குக் கீழ்படிந்து பகுதி கட்டாமல் இருக்கிறான். அவனைச் செயிக்கிறதற்கு யாருக்காவது வல்லமை உண்டாயிருந்தால் சொல்லுங்களென்று கேட்க, அவர்களில் ஒருவன் நான் செயித்துவருகிறேனென்று சொல்ல அவனுடனோ தன்னுடைய திரளான சேனைகளைக் கூட்டி இராயரைச் செயித்துவரும்படி

யனுப்பினான். அவன் இராயருடைய பட்டணத்திற்குச் சமீபத்தில் வந்திறங்கித் தான் வந்த செய்தியைத் தூதர்களாலே இராயருக்குத் தெரிவித்தான். அப்போது இராயர் தம்மருகிலிருந்த அப்பாஜியைப் பார்த்து இவன் ராக்ஷசனைப் போல மகா துஷ்டனும் மிகுந்த வுபாயக்காரனும் அதிக சேனைகளோடு கூடி வந்திருக்கிறானே இப்படிப்பட்ட விபரீதம் ஒருநாளுமில்லையே, இதற்கென்ன செய்யலாமென்று கேட்டார். அதற்கு அப்பாஜி முன்னாலே கொழுப்பேற வைத்திருந்த முரட்டுத் துலுக்கனை அழைப்பித்து நான் எவ்வளவு? இப்பஞ்சையின்மேலே இப்படியாகத் தண்டெடுத்துக்கொண்டு வரலாமா? நான் பகுதிப்பணத்தைச் செலுத்திப் போடுகிறேனென்று இராயரைக் கொண்டு சமாதானக் கடிதாசி எழுதுவித்து அந்த முரடன் கையில் கொடுத்துப் பாச்சாவின்-மந்திரியினிடத்திற்கு அனுப்பினான். அவன் அந்தச் சமாதானக் கடிதாசியைக் கையிலே பிடித்துக்கொண்டுபோய் மந்திரி கையிலே கொடுத்தான். அந்த மந்திரி வாங்கிப் படித்துப் பார்த்து எவ்வளவும் சௌரியமில்லாத இந்தப் பஞ்சையின்மேலே தண்டெடுத்து வந்தோமென்று இராயரை இகழ்ந்து காறிக் கீழே உமிழ்ந்தான். அந்த முரட்டுத்துலுக்கன் தன்னை நிந்தித்துக் காறி உமிழ்ந்தானென்று எண்ணிக்கொண்டு தன் கத்தியினாலே மந்திரியை இரண்டுதுண்டாக வெட்டிப்போட்டான். அவன் பக்கத்தில் இருக்கிறவர்கள் அந்த முரடனை வெட்டிப் போட்டார்கள். மந்திரி இறந்துபோகவே தண்டு முறிந்து ஓடிப்போய்விட்டது. இராயர் அப்பாஜி யுக்தியை மிகவும் புகழ்ந்து கொண்டாடினார்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 SEP 1907
MADRAS.

# நல்லாசிரியன்

உபாத்தியாயர்கட்கெனவே உலவிவரும்

மாதாந்தச் செந்தமிழ்ப் பத்திரிகை.

வயது. 2. | 1907 ஸு மேமீ | மாதம். 12.

## AN APPEAL.

## ஒரு விண்ணப்பம்.

ஆசிரிய நண்பர்காள் !

இப் பத்திரிகையோடு நமது நல்லாசிரியற்கு இரண்டாம் வயது பூர்த்தியாகின்றது. இவ்வருட இறுதியில் சில எதிர்பாராக்காரணங்களால் பத்திரிகை இரண்டொரு நாள் தவணை கடந்து வந்திருக்கும். அதற்குப் பொருளின்மை காரணமில்லா தொழியினும் மனத்திற்கு நேர்ந்த சிறிது இடையூறே காரணமாயிற்று. அவற்றை இங்குக் கூற இடமில்லை. நண்பரிற் பலர் அறிவரென விட்டனம். இனி ஒரு மாதப் பத்திரிகை மறுமாதத்தில் வெளியிடும் வழக்கத்தை நிறுத்தி அந்தந்த மாதப் பத்திரிகையை அந்தந்த மாதத்திலேயே கட்டாயமாக 15 ஆம் தேதிக்குள் அனுப்பிவிட தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பத்திரிகை தோறும் காரலேஷன் ஸிஸ்டம் (Corrélation System.) என்னும் முறைக்கு இணங்க பாட்டும், கதையும், தொழிலும் காட்டப்படும். இவை சென்ற இரண்டு மாதப் பத்திரிகைகளிலும் காணலாம். அன்றி, போதனுப்பியாச பாடசாலைகளில் எலிமெண்டரி கிரேட் உபாத்தியாயர்களுக்கு இப்போது பாடங்களாக நியமித்துள்ள விஷயங்கள் ஏழு; அவை :—

1. முதற்பாஷை (அதாவது தாய்ப்பாஷை)
2. கணக்கும், க்ஷேத்திர கணிதமும்
3. பூகோளம்

4. கிராம ஏற்பாடு
5. இயற்கைப் பொருட்பாடம்
6. தேகாப்யாசமும், தோட்ட வேலையும்
7. கிண்டர் கார்டன் பாடமும், அப்பியாசமும் என்பனவாம்.

ஆகையால் இம்முறையாக விஷயங்கள் எழுதப்படும். அதனால் இப்பத்திரிகை மிகப்பயன்படக்கூடியதாகும் என்பதிற்சற்றும் சந்தேகமில்லை. ஆகையால் ஆசிரிய நேசர்கள் இதுவரையில் கையொப்ப நேயர்களாக இருந்து பத்திரிகை நிலைபெறச் செய்துவந்தது போலவே இனியும் செய்யும்படி வேண்டுகின்றோம். அன்றித் தமது நண்பர்களுக்கும் இதனது பயனை எடுத்துரைத்துச் சந்தாதாரராகும்படிச் செய்ய வேண்டுகின்றோம்.

முக்கியக் குறிப்பு.

அடுத்த மாதமுதல் பத்திரிகையை நிறுத்திவிட வேண்டுவோர் இப் பத்திரிகையைப் பெற்றவுடனே வேண்டாமென்பதை ஒரு கார்ட்டின் மூலமாய்த் தெரிவிக்கவேண்டுகின்றோம். இல்லாவிட்டால், வி. பி. சார்ஜ் முதலிய பலவகை நஷ்டத்திற்கு யாங்கள் உள்ளாகின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பத்திராதிபர்.

---

## THE INDIAN KINDERGARTEN.

### கிண்டர் கார்டன்.

I. கிண்டர்கார்டன் என்பதென்ன ?— கிண்டர்கார்டன் என்பது குழந்தைகளுக்கான ஒருவகைப் பாடசாலை அல்லது பழகுமிடத்தின் பெயராம். அவர்களைப் பழக்கும் விதம் வித்தியா சம்பந்தமான ஒருவகை விளையாட்டாம். அதில், புத்தக முதலியவற்றின் மூலமாகப் போதிக்கப்படும் போதனை சிறிதுமில்லை. ஆனால் குழந்தைகள், விளையாட்டுப் பொருள்கள், தொழில்கள் மூலமாக வேடிக்கை பார்க்கவும், மிக்க விருப்பமுள்ளவர்களாயிருக்கவும், செய்யப்படுவதன்றி பொருள்களையும் விஷயங்களையும் உய்த்துணரவும், யோசிக்கவும் போதிக்கப்படுகின்றனர். இப்பாடம் குழந்தையின் ஒவ்வொரு தத்துவத்தையும் விருத்தி செய்ய வற்புறுத்துகின்றது. அறிவைச் சேகரிப்பதைக் காட்டிலும் அவ்வறிவின் விருத்திக்கான இந்திரியங்களுக்கு வலிவுறுத்துகின்றது. குழந்தையை தனக்குத் தானே விஷயங்களைக் கற்றறியத் திறமை யுண்டாக்குகின்றது. அன்றித் தனக்குத் தானே விஷயங்களைக் கற்கும் விருப்பத்தையும் உண்டாக்குகின்றது.



II. இதனாலுண்டாகுங் குணங்கள் — கல்வியின் முக்கிய பிரிவுகளாகிற மனம், தேகம், ஒழுக்கமாகிய மூன்றையும் விருத்தி செய்யும் குணத்தையுடையதாக விருக்கின்றது.

1. மனோதத்துவத்தை விருத்தி செய்யும் குணம் — குழந்தைக்கு இயற்கையாயுள்ள தீவிர புத்தியை உபயோகிக்கவும், ஒரு விஷயத்தை சரியாகச் செய்தலை தன் வழக்கமாகக் கொள்ளும் குணத்தை உண்டாக்கவும், உய்த்துணரும் சக்தியை விருத்தி செய்யவும், குழந்தைகளை யோசிக்கும்படி போதிக்கவும், குழந்தையை அதிக திறமையுள்ளதாகச் செய்யவும், குவிந்துள்ள மனோ தத்துவங்களை சரியான வழியில் உபயோகித்துச் சந்தோஷத்தை யடையவும் சரிவர அமைக்கின்றது.

2. தேகதத்துவத்தை விருத்தி செய்யும் குணம் — தாள அளவுக்குத் தக்கபடி நடத்தல் முதலியன, ஆட்டம், பாடல், விளையாட்டுக்கள் இவை யாவும் தேகதத்துவத்தை விருத்தி செய்யத் தக்கது. குழந்தைகளுக்கு சுருசுருப்பு, ஆச்சரியத்தோடும் ஊக்கத்தோடும் வஸ்துக்களைக் கவனித்தல், விளையாடல் முதலியவற்றில் இயற்கையாயுள்ள விருப்பம் செவ்வனே கவனிக்கப்பட்டு தக்க வழியில் உபயோகிக்கப்படுகிறது. தேக சவுக்கியம் விருத்தியாக்கப்படுகிறது. அதனால் மனோ தத்துவமும் வலிமையடைகின்றது. கைகால் முதலிய உறுப்புக்களுக்கு அப்பியாசத்தினால் வளர்ச்சி யுண்டாகின்றது. அன்றி, கண்ணுங் காதும் ஒழுங்கான வழியால் உபயோகிக்கப்படுகின்றன.

III. ஒழுக்கத்தை விருத்திசெய்யுங் குணம் — இயற்கையாகவும், மானிட சம்பந்தமாகவுமுள்ள, ஜாக்கிரதை, சுத்தம், திருத்தம், ஒழுங்கு, செய்தொழிலில் விருப்பம், அன்பு, உண்மையுடைமை, அடக்கம், அழகிய பொருள்கள் முதலியவற்றைப் பற்றிய பாடங்கள், நல்லொழுக்கத்தின் நிமித்தமாகப் போதிக்கப்படுகின்றன. மற்றும் தற்காலத்தில் நமது நாட்டுப் போதனை முறையை, விசேஷபொருட்பாடத்தினாலும், சித்திரமெழுதலினாலும், பலவகைப்பட்ட கைத்தொழில்முறையாடலும் விருத்தி செய்யும் பொருட்பாட போதனைக்கு இக் கிண்டர்கார்டன் பாடம் தக்க தோழனாக விருக்கின்றது.

---

(CORRELATION SYSTEM.)



## WHO IS THE GREAT?

## யார் பெரியவன்?

ஒருவன் மனிதன் தன் கையில் உள்ள விரல்கள் கர்வித்துத் தான் தானே பெரியவன் என்று சண்டையிட்டன. அந்த விரல்களைப் பார்த்து "நீங்கள் என் இப்படிச் சண்டையிடுகிறீர்கள்?" என்று கேட்டான். அதற்கு ஒவ்வொருவிரலும் தானே பெரியவன் என்று சொல்லுகின்றது.

சுண்டுவிரல்.—"நீ சாமியைக் கும்பிடும் போது நானே முன்னே பெரியவன்" என்றது.

மோதிரவிரல்.—"நான் விலை உயர்ந்தமோதிரங்கள் போட்டுக் கொள்கிறேன். ஆகையால் நானே எல்லோரிலும் பெரியவன்" என்றது.

(பிறகு நடுவிரலைக் கேட்டான். அது, "எல்லாரையும்கேட்டுக் கொண்டுவா; நான் கடைசியில் சொல்லுகிறேன்" என்றது.)

ஆள்காட்டிவிரல்.—"உனக்குத் தெரியாதபொருள்களை இதோ ☞ என்று காட்டுகிறேன் - நீ கோபமாய் பேசும்போது நானும் கோபம் கொண்டு உன்னோடு ஆடுகிறேன். ஆகையால், நானே பெரியவன்" என்றது.



பெரியவிரல்.—"நான் இல்லாவிட்டால் உன்னால் எதையும் எடுக்கமுடியாது, பிடிக்கவும் முடியாது, எழுதவும் முடியாது. ஆகையினால் நானே பெரியவன்" என்றது.

நடுவிரல்.—"நானோ அவர்களைப்போல் காரணம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. ஐந்து விரல்களையும் ஒன்றாய்ச் சேர்த்துப் பார், யார் பெரியவன்? என்று தெரியும்" என்றது. இவைகளையெல்லாம் கேட்டு மனிதன் தன் விரல்களைப் பார்த்து "உங்களில் ஒவ்வொருவனும் பெரியவன்தான்" என்று சாமதானம் செய்தான்.

ஆகையால் "பிள்ளைகளே! நீங்கள் 'நான் பெரியவன்' 'நான் கெட்டிக்காரன்' என்று சண்டையிடாமல் இருங்கள்."

### பாட்டு.

"முத்தி நெறி யறியாத" என்னும் மாதிரி

1. கையிலுள்ள விரல்களெல்லாம் கர்வத்தால் ஒவ்வொன்றும்
மெய்யாகத் தான்தானே மிகப்பெரியோனெனச் சொல்லி

2. சண்டையிடக் கண்ட அவன் தன் விரல்கள் தமக்குள்ளே
சுண்டுவிரல் தனைப்பார்த்துச் சொல்லென்றான் உன் பெருமை

3. (சுண்டுவிரல் சொல்லுகிறது)
பூமியிலென்றனைப்போல புண்ணியரும் உண்டோ நீர்
சாமியைக்கும் பிடும்போது சரியாக முன்னிற்பேன்

4. (மனிதன் மோதிரவிரலை நோக்கி) நல்லது உன் பெருமை யாது?
பணமுடையார் எவராலும் பாராட்டப் படுவார்கள்
குணமுடைய மோதிரங்கள் குலவிடநான் விளங்குகிறேன்

5. (மனிதன் நடுவிரலைநோக்கி) இருக்கட்டும்,உன்பெருமையென்ன?
நடுவிரல் நான் என்பெருமை நாட்டுகிறேன் முடிவினிலே
அடைவுடனே மற்றவரை அன்பாகக் கேட்டிடுவீர்

6. (மனிதன் சுட்டுவிரலைநோக்கி) நல்லது உனக்கு என்னபெருமை
ஆட்காட்டி விரலுனக்கே அன்புடைய தோழன் நான் [யோ?
கேட்காமல் உன்னோடே கிளையைப் போல் ஆடுவனே

7. (மனிதன் பெருவிரலை நோக்கி) சரி உனக்கேதாவது பெருமையு
என்றனையே பெருவிரலென் றெல்லாரும் சொல்வார்கள் [ண்டா?
நன்றாக எதைச்செயவும் நானில்லாதா காதே

8. (மனிதன் முடிவில் நடுவிரலை நோக்கி) உன் பெருமையைச்சொல்
சீரில்லா அவர்களைப்போல் செப்புவதேன் ஒரு நாயம் [னும்?
நேராக நிறுத்தினக்கால் நெடியோன் நானென அறிவாய்
9. (நீதி-மனிதன் எல்லா விரல்களையும் பார்த்து)
என்கையிலே விரலுருவாய் இருந்திடுமென் நேசர்களே
உன்னினால் உலகத்தில் ஒவ்வொன்றும் உயர்ந்ததுவே
ஆதலினால் நீங்களெல்லாம் ஆங்காரம் கொள்ளாமல்
நீதமாம் ஒருமனத்தால் நிலைபிரியா திருப்பீரே.

---

# GEOGRAPHY.

## பூகோள சாஸ்திரம்.

### முன்னுரை.

பூமியைப் பற்றி விவரிக்கும் சாஸ்திரம் பூகோள சாஸ்திரம் என்னப்படும். பூகோள சாஸ்திரம் இப்பூமியில் அமைந்துள்ள மலை ஆறு முதலிய இயற்கைப் பொருள்கள், அவ்வவ்விடங்களில் உண்டாயிருக்கும் சீதோஷ்ண ஸ்திதிகள், விளை பொருள்கள், வசிக்கும் மனிதர்கள், வழங்கும் பாஷைகள், செய்யும் கைத்தொழில்கள், போக்கு வரவுக்குரிய சாதனங்கள், வியாபாரங்கள், அரசாட்சிகள் முதலியவற்றின் விவரங்களைத் தெரிவிக்கும்.

அவ்வாறே வானத்தைப்பற்றிய விஷயங்களைத் தெரிவிக்கும் சாஸ்திரத்திற்குக் ககோள சாஸ்திரம் என்று பெயர். பிள்ளைகளே! நீங்கள் இப்புத்தகத்தை வாசிக்கும்போது பூகோளத்தைப் பற்றிய விஷயங்களில் மிகுதியும், ககோளத்தைப்பற்றிய விஷயங்களிற் சிறிதும் அறிந்துகொள்வீர்கள்.

### பூமியின் உருவம்.

முதலில் பூகோளத்தைப்பற்றி ஆராய்வோம். நாம் வசிப்பதற்கு இடமாயுள்ள இந்தப் பூமி, பார்வைக்குத்தட்டையாய்ச் சம நிலமாகத் தோன்றினாலும், அது உண்மையில் உருண்டை வடிவமுள்ளதே. சில முகாந்தரங்களைக்கொண்டு பரிசோதிக்குமளவில் இப்பூமி, ஒரு பந்தைப்போல் முற்றும் உருண்டை வடிவமுள்ளதாய்த் தோன்றா



விட்டாலும்,* கிச்சிலிப்பழத்தைப் போல் இரண்டு புறங்களில் மாத்திரம் சிறிது தட்டையான உருண்டை வடிவமுள்ளதென்று தெரியவருகின்றது.



பூமி உருண்டை வடிவமுள்ளது.

சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் நமது கண்களுக்குத் தோன்றுங் கிரகங்கள். இவற்றில் சூரியனும், சந்திரனும் உருண்டை வடிவமுள்ளனவாகக் காணப்படுகின்றன. ஆகையால் பூமியும் உருண்டை வடிவமுள்ளதாயிருக்க வேண்டுமென்று எண்ண இடமுண்டாகின்றது.

ஒரு மனிதன் ஓரிடத்திலிருந்து புறப்பட்டு ஒரேதிசையாய்ப் பிரயாணம் செய்தால் கடைசியாகத் தான் முன்பு புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்கிறான். எப்படியெனில்,

ஒரு கிச்சிலிப்பழத்தின் மேலேயுள்ள எறும்பு ஒன்று ஓர் இடத்திலிருந்து புறப்பட்டு ஒரே திசையாக அப்பழத்தைச் சுற்றிவருமானால் அந்த எறும்பு கடைசியில் தான் புறப்பட்ட இடத்திற்கே

---

☞ பூமிக்கு அண்டம் என்றோர் பெயருண்டு. அண்டம் என்பதற்கு முட்டை என்று அர்த்தமாகையால் பூமி முட்டையைப்போல் உருண்டை வடிவமுள்ளதென்பதை ஒருவாறு ஊகிக்கலாம்.

வந்து சேரும். பூமி தட்டையா யிருந்தால் அவ்வாறு ஒருவன் புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர முடியாது. ஆகையால் பூமி உருண்டை வடிவமுள்ளதென்று ஏற்படுகின்றது.

நாம் ஒரு மைதானத்தில் நின்றுகொண்டு வானத்தைப்பார்த்தால், அது கூடாரம்போல் வளைந்து சிறிது தூரத்திற்கப்பால் பூமியில் படிந்திருப்பதுபோல் தோன்றும். அந்த விடத்திற்போய்ப் பார்த்தால் முன்போலவே மற்றுஞ் சிறிது தூரத்தில் அது படிந்திருப்பதாய்த் தோன்றுகின்றது. இவ்வாறு வானம் வட்ட வடிவாய்த் தோன்றுவதனால் பூமி உருண்டை வடிவமுள்ளதா யிருக்கவேண்டுமென்று ஏற்படுகின்றது.



நாம் கடற்கரையில் நின்று, கரையை நோக்கி வரும் ஒரு கப்பலைப் பார்த்தால் முன்பு அதன் மேற்பாகங்களாகிய பாய்மரம் முதலியவை தெரியும். வரவர மேலிருந்து அடிப்பாகம் வரையிலும் தெரியும். பூமி தட்டையா யிருந்தால் ஒரே காலத்தில் அக்கப்பலின் முழு உருவமும் தோன்றும். அவ்வாறின்றி, முதலில் மேற்பாகமும், பின்பு அடிப்பாகமும் தோன்றுவதனால் பூமி உருண்டை வடிவமுள்ளதென்று ஏற்படுகின்றது.

நீ ஒரு விசாலமான மைதானத்தில் நின்றுகொண்டு உன் கண்ணுக்கெட்டியதூரம் நேரே நன்றாய் உற்றுப்பார்த்து அவ்விடத்திலுள்ள ஒருபொருளைக் குறியாகவைத்துக்கொள். பின்பு, நீ நின்றவிடத்திலுள்ள மரம், கோபுரம் முதலிய ஏதாவதொரு உயர்ந்தவிடத்திலேறி முன் பார்த்த தூரத்தைப் பார்த்தால் நீ அவ்விடத்தில் குறி வைத்துள்ள இடத்தைவிட அதிக தூரம் உனக்குத் தோன்றும். ஆகையால் பூமி உருண்டை வடிவமுள்ளதென்று ஏற்படுகின்றது.

பூமியின் நிழல் சந்திரன்மீது படுவதனால் சந்திர கிரகணம் உண்டாகின்றது. அவ்வாறு சந்திர கிரகணம் உண்டாகும்போது பூமி சந்திரனை மறைக்கும் பாகம் வட்டமாகத் தோன்றுகிறதனால் பூமி உருண்டை வடிவ முள்ளதா யிருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது.



# WHEN IS COLD DANGEROUS?

## குளிர்ச்சி கெடுதிபயப்பது எப்போது?

நமது தேகமெங்கும் ரத்தம் தட்டுத்தடையின்றி ஓடிக்கொண்டிருந்தாலல்லது நமது தேகத்தில் எந்தப்பகுதியும் சூடாயிராது. சீதமானது, மேல்தோலுக்கு அடுத்த உட்புறத்திலுள்ள ரத்தநாடிகளை, உதிரமோடுவதற்கு வழியில்லாதபடி, சுருக்கிப்போடுகின்றது. அதனாலேதான் நமக்குக் குளிர்ச்சியுண்டாகிறது; சூடானது சுருங்கியிருக்கிற நாடிகளை, ரத்தம் நன்றாயோட வழியுண்டாகும்படி மலரச்செய்கின்றது. குளிர்ச்சியால் நமது சர்மம் வெளுத்துச் சுருங்கிப்போகின்றதே அதேனெனில், சிறுநாடிகள் சுருங்கி ரத்தம் மேற்புறத்தில் வராமல் தடைப்பட்டுப்போவதனாலேதான். தீயண்டை போனால் உடனே சூடுண்டாகி அந்த நாடிகள் மலர்ந்து போகிறபடியால், மறுபடி உதிரம் அதன்மூலமாய் ஓடி அந்தத் தோல்களைப் பெருத்துச் சிவக்கச்செய்கின்றது.

சரீரத்துள் ரத்தம் வேகமாயோடும்படி செய்கின்ற எந்த வஸ்துவும் நமக்குச் சூடுண்டாகச்செய்யும். ஒருவர்க்கு நாணமுண்டானாலும் கோபமுண்டானாலும் உடனே உடம்பு எவ்வளவு சூடாய்ச் சிவந்துபோகின்றது. ரத்தம் திடீரென்று மேற்புறத்தில் உதைவதனாலேதான் அப்படியாகின்றது. இதேமாதிரியாய் நல்ல நடைநடந்தாலும் ஓடினாலும் வேறெந்தவிதப் பயிற்சிசெய்தாலும் சீதகாலத்திலேகூட நமதுதேகம் சூடாகின்றது. ஏனென்றால், தேகசலனத்தினால் ரத்தம் தேகமெங்கும் வேகமாயோடத் தலைப்படுகிறது. காலம் அதிக குளிர்ச்சியாயிருக்குமானால், நமது தேகத்தில் உதிரவோட்டமுள்ளளவுதான் சூடும் இருந்துகொண்டிருக்கும்.

ரத்தம் மேற்புறத்தில் பரவுதலாவது மேல்தோலிலன்று. மேல்தோலுக்கு அடுத்த உட்புறத்திலுள்ள புரையிலாம். மேல்தோலில் உணர்ச்சியுமில்லை, ரத்தநாடிகளுமில்லை. அது தேகத்திற்கு ஓராவரணமாய் உட்புறத்திற்கு யாதொரு தீங்கு நேரவொட்டாமல் காக்கின்றது. மேல்தோல் இல்லாமற்போனால் நமது தேகத்தைத் தொடும்போதெல்லாம் நமக்கு நோயுண்டாகும். ஏனென்றால் மேல்தோலுக்கு அடுத்த உட்புறத்திலிருக்கின்ற தோலில் உணர்ச்சி அதிகமாயிருக்கின்றது. அதை அறுத்தாலும் குத்தினாலும் மேல்தோலை

உரித்தாலும் நோவுண்டாவதனால், அங்கே உணர்ச்சி அதிகமாக உண்டென்பது நமக்கு நன்றாய்த் தெரிகின்றது அல்லவா? அதுதான் வாஸ்தவமான தோல். உதிரமோடுவதும் அதிலேதான். அதில் ஊசிநாட்ட இடமில்லாமல் ரத்தநரம்புகள் நிறைந்திருக்கின்றன. தோல் தேகத்துக்குள் உண்டாகும் அழுக்குகளை வெளியே கொண்டு தள்ளிச் சரீரத்தை சுத்திசெய்ய உதவியாயிருப்பது, அதன் முதன்மையான உபயோகங்களில் ஒன்று.

ரத்தம் ஓடுப்போது அங்குள்ள அழுக்குகளைச் சேர்த்துக் கொண்டு, அவற்றுள் சில பாகத்தைச் சுவாஸாசயத்தில் கொண்டு சேர்க்கின்றது. அங்கே அந்த அழுக்குகள் சுவாசவாயுவோடு கலந்து கெட்ட மூச்சோடு காற்றாய் வெளியே வந்துவிடுகின்றன. இன்னும் சில பாகம் சர்மத்தண்டை போய்ச் சேர்ந்து வேர்வை வடிவமாய் வெளியே வந்துவிடுகின்றது.

நமது தேகத்தில் ஓர் அரைரூபா யளவிடத்தில் மூவாயிரத்திற்குக் குறையாமல் சிறு துவாரங்கள் நிறைந்திருக்கின்றன. அவையெல்லாம் தேகத்திலுள்ள கெட்ட தண்ணீர் வெளியேவர ஜலதாரைகளாக இருக்கின்றன.

நமது தேகத்தில் குளிர்ச்சியுண்டாகும்போது உதிர நரம்புகள் சுருங்கிப்போய் ரத்தம் தேகத்தின் அழுக்குகளை மேல் தோலண்டை கொண்டு சேர்க்கக்கூடாமற்போகின்றமையால், அந்த விஷ வஸ்துக்களெல்லாம் வெளியேவராமல் உள்ளேயே வியாபிக்கின்றன. ஆதலால், சீதளதோஷம் அசவுக்கியம் உண்டாக்குகின்றதென்பது ஆச்சரியமன்று. சர்மமானது தான் செய்யவேண்டியபடி தேகத்திலுள்ள அழுக்குகளை வெளியே தள்ளாமல் நின்றுவிட்டால், மற்ற அவயவங்கள் அதை வெளியே தள்ளும்படி அதிகமாய் யத்தனிக்கின்றன. அதனால் வெப்பமுண்டாகி வியாதி உண்டாகிறது. இப்படி, நாம் குளிர்ச்சியுண்டாகும்படி செய்துகொண்டால் அப்போது நமது தேகத்து அழுக்குகள் ஒவ்வொருவேளை ஈரலில் தள்ளப்படுகின்றன; அப்போது ஈரல் நோயுண்டாகும். ஒவ்வொருவேளை குடலில் தள்ளப்படுகின்றன; அப்போது குடல் நோயுண்டாகும். ஒவ்வொருவேளை சுவாசாசயத்தில் தள்ளப்படுகின்றன. அப்போது ஒருவகைக் கெட்ட குளிராவது மார்புநோயாவது உண்டாகின்றது. ஆதலால், நமது தேகத்துக்குச் சில உறுப்புகள் தம்மிடத்திலுள்ள



கெட்ட வஸ்துக்களை வெளியே தள்ளும்படி வலிந்து முயல்வதனாலேதான் நமக்கு அசவுக்கியமும் வியாதியும் அநேகமாய் உண்டாகின்றன.

நமது தேகத்தில் வேர்வையுண்டாகாமலிருப்பது எப்போதும் அபாயகரமென்பது இதனால் நமக்குத் தெளிவாய்த் தெரியவில்லையா? நமது தேகத்தின் மேற்புறத்தில் அழுக்குகள் தங்குவதனாலேதான் வேர்வைநீர் வெளியே வராமல் நின்றுபோகின்றது. குளிர்ச்சியால் வேர்வை தடைபட்டு அதனால் உண்டாகிற நோய் இத்தேசத்தில் அதிகம். ஆதலால் நமக்குக் குளிர்ச்சி உண்டாவதற்குக் காரணம் இவையென்பதும், அது இந்தக்காலத்தில் உண்டாகின்றதென்பதும் நாம் அறிந்துகொள்ளவேண்டுவது அவசியம்.

நாம் வேகமாய் நடந்துகொண்டிருக்குமளவில் நமக்குக் குளிர் உண்டாவதில்லை. ஏனெனில் அப்போது குளிர் கிட்ட அண்டவொட்டாமல் ரத்தம் அதிகவேகமாய் ஓடிக்கொண்டு இருக்கும். சூடு அதிகமாகி அயர்ந்துபோவார்களானால் அப்போ குளிருண்டாகும். அப்படியே நாம் சஞ்சரிக்கும் காலங்களில் வேர்வையுண்டாகி அதனால் நமது உடுப்புகளெல்லாம் நனைந்து ஈரமாய்ப்போனாலும், நாம் நடந்துகொண்டிருக்குமளவும் அதனால் யாதொரு தீங்கும் நேராது. வீட்டில்வந்து அந்த ஈரவாடைகளைக் களையாமல் அவற்றோடு நடமாடுவோமானால் அது கெடுதி பயக்கும் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

சிலர் சீதஜலத்தில் மூழ்கினால் சயித்தியமுண்டாகும் என்றெண்ணிக் குளிர்ந்தநீரைக் கண்டால் நடுங்குகிறார்கள். நமது தேகம் சவுக்கியமாய் இருக்கிறகாலத்தில் நாம் குளிர்நீரில் மூழ்கினால் யாதொரு தீங்கும் நேராமல் இருப்பதுமன்றி மிகவும் தேகத்துக்கு அனுகூலமாயிருக்கும். நாம் நீராடிக் கரையேறியபொழுதே அதனால்உண்டான நன்மை நமக்கு நன்றாய் விளங்கும். நமது தேகம் அசவுக்கியமாயிருக்கும்போது குளித்தாலும், சவுக்கியமாயிருக்குங்காலத்திலும் நெடுநேரம் ஜலத்தில் அலைந்துகொண்டிருந்தாலும் கெடுதியுண்டாகும்.

நமது தேகம் சூடாயும் அனுகூலமாயும் இருக்குங்காலத்தில் நாம் கொஞ்சநேரம் குளிர்ந்த ஜலத்திலானாலும் குளிர்ந்த காற்றிலானாலும் இருப்பதனால் கெடுதி யாதொன்றுமில்லை; முன்னிருந்ததைவிட அதிகமாய்ச் சவுக்கியம் உண்டாகும். சற்றுநேரம் அந்

தக் குளிர்ச்சியால் ரத்தம் உள்ளே தங்கியிருப்பதனால், நாம் அதைவிட்டு அப்பால் வந்தவுடன் அந்த ரத்தம் முன்னிலும் நன்றாய்ப்பரவ ஆரம்பிக்கின்றது. நமது தேகத்தில் அசவுக்கியத்தால் நெடுநாளாய்க் குளிர் தொடர்ந்துகொண்டிருந்தால்தான் கொஞ்சம் நீர் பட்டாலும் காற்றுப்பட்டாலும் குளிரும் ஜ்வரமும் உண்டாகின்றன. நாம் வலிமையாயும் சவுக்கியமாயும் இருக்கும்போது நாடோறும் தண்ணீரில் நீராடிக்கொண்டு இருப்பதைவிட அநுகூலமானது வேறொன்றும் இல்லை. ஆனால் துரிதமாய் ஜலத்தைவிட்டு வெளியே வரும்படியாகவும், வெளியே வந்தவுடன் நன்றாய் உடம்பைத் துடைத்துக் கொள்ளும்படியாகவும் நாம் கவனமாயிருக்கவேண்டும்.

சிறுபிள்ளைகளுக்கோ அப்படியல்ல, அவைகளுக்குக் குளிர்ந்த காற்றும் குளிர்ந்தநீரும் உதவா. பிள்ளை எவ்வளவு சிறிதோ அவ்வளவு குளிரைத் தடுக்கிறசக்தியும் குறைவு. இது தாய்மார்களுக்கு அநேகமாய்த் தெரியும். குழந்தைகளைத் திறந்தபடி வெளியே காற்றுக்குநேராய் ஒருபோதும் கொண்டுவரக்கூடாது. அதனால் தலைநோய் வயிற்றுநோய் முதலியவையுண்டாகும். சிறு குழந்தைகள் உட்கொள்ளுகிற காற்று எப்போதும் சுத்தமானதாயிருக்கவேண்டும். குழந்தைகளை அதிகமாய் நீராட்டிக்கொண்டு இருக்கவேண்டும். வெந்நீர்தான் அநேகமாய்ச் சிறுபிள்ளைகள் தேகத்துக்கு ஒத்திருக்கும்.

ஜனவிநோதினி,

## The Madras Educational Exhibition committee.

## சென்னை கல்விப் பொருட்காட்சிச் சபை-1907.

சென்னை வித்தியாபிவிருத்திப் பொருட்காட்சிச் சங்கத்துக் காரியதரிசியாகிய ம-ா-ா-ஸ்ரீ எம். சுப்ரமண்ய சாஸ்திரியார் பி-ஏ. எல்-டி-அவர்கள் எழுதுவதாவது :—

இங்கிலாந்திலிருந்து இரவலாகத் தருவிக்கும் காட்சிப்பொருள்கள், அவற்றைப் பார்வையிடும் பாடசாலை மானேஜர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும் வித்தியா சம்பந்தமான மிக்க நன்மைகளை உண்டாக்குமென்பதில் சற்றும் சந்தேகமில்லை. ஆகையால், இவ்விராஜதானியிலுள்ள ஒவ்வொரு பாடசாலையினின்றும் ஒவ்வொரு உபாத்தியாயரேனும் சென்னைக்கு வந்து இப்பொருட்காட்சி முடியும் வரையில் சென்னையில் தங்கிக் காண்பதன்றி அதன் விஷயமாய்ப் போதிக்கப்படும் போதனைகளின் சமாசாரங்களைக் குறித்துக் கொண்டு போய்த் தங்களோடு உபாத்திமைத் தொழில் நடத்தும் மற்ற உபாத்தியாயர்களுக்கும் தாங்கள் கிரகித்த போதனைகளைத் தெரிவிக்கும்படியான ஏற்பாடுகளைப் பாடசாலைத் தலைவர்கள் சீக்கிரத்தில் செய்வார்களென்று நம்புகின்றோம். நாங்கள் சேகரிக்கும் காட்சிப்பொருள்கள் மிகவும் அரியவைகளாகவும் மேலானவைகளாகவும் இருக்குமென்று நம்புகிறோம். இங்கிலாந்திலுள்ள கல்விச் சங்கத்தார் (Board of Education in England) எங்கள் பிரஸிடெண்டு மிஸ்டர் ஆதர் மேஹியூ துரையவர்கள் மூலமாகக் காட்சிப்பொருள்களை இக்காட்சிச்சாலையில் உபயோகிக்கும்படி அனுப்புவதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். அவர்களது கருணைத் திறத்திற்கு யாங்கள் என்றும் நன்றிபாராட்டக் கடமையுற்றிருக்கின்றோம். ஜப்பானிய கவர்ன்மெண்டார் வேண்டுகோளின்படி இங்கிலாந்திலுள்ள வித்தியா சம்பந்தமான காட்சிப்பொருள்கள் சேகரிக்கப்பட்டு இப்போது டோக்கியோ பட்டினத்திற்கு அனுப்பப்படுகின்றனவாகையால் வழியிலுள்ள இச்சென்னையில் நமது காட்சிச்சாலையில் அப்பொருளைப் பலரும்கண்டு களிக்கக்கூடிய நன்மையை நாம் அடைய முகாந்தரமாயிற்று.



சென்னையில் செனேட் அவுஸ் (Senate House) என்னும் கட்டடத்தில் 1907௵ ஆகஸ்டுமீ 24௳ இக்காட்சிசாலை திறக்கப்படும். அன்று முதல் ஒரு வாரம் வரையில் எல்லோரும் இக்காட்சியைக் கண்டு களிக்கும்படியேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அக்காலத்தில் கல்வி கேள்விகளில் சிறந்தவர்கள் வித்தியா சம்பந்தமான விஷயங்களை எழுதி வாசிப்பார்கள். இச்சாலைக்கு காட்சிப்பொருள்களை அனுப்ப இஷ்டமுள்ளவர்கள் நடந்துகொள்ளவேண்டிய சட்டதிட்டங்கள் தனியே அச்சிடப்பட்டுள்ளன. இவைகளைக் காரியதரிசிகளிடமிருந்து யாதொரு கட்டணமுமில்லாமலே பெற்றுக்கொள்ளலாம். அவ்விதிகள் இதன் அடியில் காட்டப்பட்டுள்ளன. இக்காட்சி சாலைக்கு அனுப்பும் பொருள்களில் மிகவும் நேர்த்தியானவைகளைச் செய்தவர்களுக்குப் பதக்கம் அல்லது இனாம் கொடுக்கப்படும். ஐதராபாத்து, மைசூர், திருவாங்கூர் முதலிய சுதேச இராச்சியங்களினின்று அனுப்பப்படும் காட்சிப்பொருள்களும் அங்கீகரிக்கப் படுமாகையால் இவ்விராச்சியங்களிலுள்ள பாட

சாலைத் தலைவர்களும் இச்சாலைக்குத்தக்க பொருள்களை அனுப்புவார்கள் என்று நம்புகின்றோம். வித்தியாபி விருத்திக்காக, கருவிகள் பொருள்கள் முதலியவைகளை வெளியிடுவோரும் இச் சாலைக்கு வேண்டிய கருவிகளையும் பொருள்களையும் அனுப்புவார்கள் என்று நம்புகிறோம். இக்காட்சியைக் காண்பதற்காகக்கட்டணம் ஒன்றும் ஏற்படுத்தப் படவில்லை. ஆகையால் கருத்துள்ளவர்க ளனைவரும் வந்து கண்டு களிக்கலாகும்.

பொருட் காட்சி நடத்து மிடம்..........சென்னை ஸெனேட் அவுஸ்.
திறக்கப்படும் தினம்...... ..............1907ௗ ஆகஸ்டு மீ 24உ.

பொருட் காட்சிச் சாலை திறக்கப்படும் விஷயத்தைப் பற்றிய உபந்நியாசம் ஆனரபில் மிஸ்டர். பி. எஸ். சிவசாமி ஐயர் பி. ஏ. பி. எல். அவர்களால் செய்யப்படும்.

பொருட் காட்சி சாலை நடத்தப்படும் காலத்தில் தக்க கல்விமான்களால் கிரமமாக வித்தியா சம்பந்தமான விஷயங்களைப் பற்றிய வியாசங்கள் படிக்கப்படும். மிக மேன்மையான பொருள்களைச் செய்தவர்களுக்குப் பதக்கங்கள் (Medals) அல்லது பரிசுகள் (Prizes) கொடுக்கப்படும்.

### பொருட்காட்சிச் சாலைக்குப் பொருள்களை யனுப்புவோருக்கான விதிகள்.

(1) காட்சிச் சாலைக்குப் போட்டிக்காக (For Competition) அனுப்பப்படும் பொருள்கள் உபாத்தியாயர்கள் அல்லது மாணாக்கர்களால் செய்யப்பட்டனவாகவே இருத்தல் வேண்டும்.

(2) வெளியூர்களி னின்றும் அனுப்பப்படும் பொருள்கள் 1907ௗ ஜூலை மீ 25உ முதல் ஆகஸ்ட்டு மீ 5உக்குள் காரிய தரிசிகளுக்கு அனுப்பப்படவேண்டும். தபாலில் அனுப்பப்படும் பொருள்கள் சென்னை வித்தியா விஷய பொருட்காட்சிச் சபை காரியதரிசிகளுக்கு (To The Secretaries, Madras Educational Exhibition Committee, Mint Buildings, Madras) என்று விலாசமிட்டனுப்ப வேண்டும். ரயில்வே பார்சல் மூலமாய் அனுப்புவோர் சென்னை ஏழு கிணற்றுக்கடுத்த மலையப்பன் வீதி 22 ஆவது வீட்டில் வசிக்கும் காரியதரிசிக்கு வண்ணாரப்பேட்டை ரயில்வே ஸ்டேஷன் மூலமாய் அனுப்பவேண்டும். பொருள்களைச் சென்னையினின்றும் அனுப்புவோர் 1907ௗ ஆகஸ்டு மீ 1உ முதல் 10 தேதிவரையில் எந்த நாளிலாவது காலை 10 மணி முதல் மாலை 5 மணிக்குள் சென்னை ஸெனேட் அவுஸுக்கு அனுப்ப வேண்டும்.



(3) தபால், ரயில் மற்றும் எந்த வகையிலேனும் அனுப்பப் படும் பொருள்களுக் குண்டான கட்டணங்களை முன்னதாகவே செலுத்தப்பட் டிருத்தல் வேண்டும்.

(4) கமிடியால் ஒப்புக்கொள்ளப்பட்டு இரவலாக வாங்கிக் கொள்ளப்படும் பொருள்களுக் கன்றி மற்றவைகளுக்கு வண்டிக் கூலி முதலியவை கொடுக்கப்பட மாட்டா.

(5) பொருள்களின் பின் பக்கத்தில் அப்பொருளைச் செய்தோருடைய பெயரும் விலாசமும் எழுதப்பட வேண்டும். விற்பனைக்குரிய பொருள் களுக்குச் சொந்தக்காரரே விலை ஏற்படுத்துவதன்றி அதன் விற்பனைக்கான ஏற்பாடுகளையும் அவர்களே செய்து கொள்ளவேண்டும்.

(6) காட்சிக் கனுப்பும் பொருள்களில் ஏதேனும் பேதமுண்டானால் அதற்குக் கமிடியார் உத்தரவாதிக ளல்ல.

(7) அனுப்பப்படும் பொருள்களில் காட்சிக்கு யோக்கியதையான பொருள்களை மட்டும் காட்சிச் சாலைக்கு எடுத்துக் கொள்ளும் சுதந்திரம் கமிட்டியாரைப் பொறுத்ததாகும்.

(8) பொருட்களை அனுப்புவோர் ஒவ்வொருவரும் கீழ்க் குறித்த விஷயங்க ளடங்கிய நமூனா ஒன்றை அனுப்பவேண்டும்.

(a) பொருள்களின் எண்.

(b) பொருளின் பெயரும் விவரமும், அதன் நோக்கத்தையும் தெரிவிக்க வேண்டும்.

(c) பொருளைச் செய்தவர் பெயர்.

(d) பொருள் போட்டிக்காக அனுப்பப்பட்டதா? அல்லது இரவலாக அனுப்பப் பட்டதா ?

(e) போட்டிக்காக அனுப்பப்படும் பொருளானால் கீழ்க் குறித்த வண்ணம் நற்சாட்சிப் பத்திரம் ஒன்று அனுப்பப் பட வேண்டும்.

(f) பொருள் செய்தவருடைய கை யெழுத்து.

இப்பொருள் அல்லது பொருள்கள்..............பாடசாலையின் ..............வகுப்பு உபாத்தியாயர் அல்லது மாணாக்கன் கையால் செய்யப்பட்ட தென்பதற்குச் சாட்சியாகின்றேன்.

(கையெழுத்து) ..............................

பாடசாலையின் தலைமை உபாத்தியாயர் அல்லது மானேஜர்.

(கையெழுத்து)
எம். சுப்ரமண்யம்,
ஜி. மாணிக்க செட்டி,
கவுரவ காரியதரிசிகள்.

---

# FEMALE EDUCATION.

## பெண் கல்வி.

பெண்களைப் படிப்பிக்க வேண்டுவது அவசியமென இன்னமும் வற்புறுத்திக் கூறும் விஷயம் நமக்கு வேண்டுவதில்லை. ஏனெனில், பெண்கல்வியை வெறுத் துரைப்போர் பெரும்பாலும் இப்போது இல்லையென்றே சொல்லலாம். சுமார் 30 வருடங்கட்கு முன் இருந்த பகைவரில் இப்போது 100-க்கு 5 பேரும் இல்லையென்றே சொல்லலாம். இவ்வளவு சிறுதொகையினரை எதிரிகளாக வைத்துக்கொண்டு பேசுவது வீணேயாகும். இன்னும் சில ஆண்டுகளில் இவர்களும் ஒழிந்துவிடுவார்கள் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. ஆகையால் அவ் விரோதிகளை ஒருபுறம் ஒதுக்கி அப் பெண்கல்வி விருத்தியாக வேண்டும் விஷயத்தைப் பற்றிப் பேசுவோம்.

சுமார் 40 வருஷங்களுக்கு முன்பு துரைத்தனத்தார் பெண் கல்வியை விருத்திசெய்ய எண்ணங்கொண்டு ஆங்காங்கு பெண்பாடசாலைகளை ஏற்படுத்தி அவற்றிற்கு, ஆண் பிள்ளைகள் பாடசாலையைவிட இரட்டிப்பான திரவியோபகாரஞ் செய்து வந்தனர். அப்போது அப்பெண் பாடசாலைகள் ஆண் பிள்ளைகள் பாடசாலையின் வித்தியாதிகாரிகளின் மேற் பார்வையிலேயே அமைக்கப்பட் டிருந்தன. பின்னர், பெண்பாலர்களையே உபாத்தியாயினிகளாக அமைத்து விருத்திசெய்ய வேண்டுமென்னும் நோக்கங் கொண்டு சென்னையில் பெண்பால்களுக்களுக் கென்றே போதனாப்பியாச பாடசாலையொன்றை



நியமித்து அதற்கு மிஸ்ட்ரஸ் ஐ. பிராண்டரம்மாளை சூபரிண்டெண்டெண்டாக நியமித்தனர். பின்பு அந்தம்மாளையே பெண் பாடசாலைகளின் இன்ஸ்பெக்டரஸ் ஆக நியமித்து இச் சென்னை இராஜதானியிலுள்ள எல்லாப் பெண் பாடசாலைகளையும் அந்தம்மாளுடைய அதிகாரத்தி லமைத்தனர். அந்தம்மாள் மெய்வருந்தி பரோபகாரஞ் செய்யும் நன்மையிலே நாட்டமுடையராய் உழைத்து, தான்ஒருவரே பார்க்க நேர்ந்த அவ்வேலையை நான்குபேர் பார்க்கக்கூடிய அளவிற்கு விருத்திசெய்து விட்டனர். இப்போது7-8 பேர் பார்க்கக்கூடிய நன்னிலைக்கு வந்துவிட்டது. இஃது இப்படியாக சென்ட்ரல் சர்க்கிளுக்கு இரண்டாவதாக மிஸ் இ. கார்அம்மாள் இன்ஸ்பெக்ட்ரஸாக வந்து மிஸ்ட்ரஸ் பிராண்டர் அம்மாள் உழைத்த வுழைப்புக்குச் சிறிதும் பின் வாங்காமல் இரவும் பகலும் உழைத்து வந்தனர். இந்தம்மாள் காலத்தில் இந்திய கைம்பெண்கள் படித்து விருத்தியடைந்து உயிர் வாழ்க்கைக் குரிய ஜீவனோபாயங்களை பெறும்படியாக கவர்ன்மெண்டார் திரவியோபகாரம் செய்யும் முயற்சியை எடுத்து நிறைவேற்றினர். அதன் பொருட்டு நாமும் நமது நாட்டுக் கைம் பெண்களும் அந்தம்மாளுக்கு என்றும் மறவாத நன்றி பாராட்ட உரிமை யுற்றிருக்கின்றோம்.

இனி மூன்றாவதாக மிஸ் எ. ஆர்னல்டு அம்மாள் அந்த ஸ்தானத்தை வகித்திருக் கின்றனர். இந்தம்மாள் வந்து சுமார் ஒன்றரை வருடகால மாகின்றது. இதில் ஒருவருட காலம் லீவில் இருந்து விட்டனர். இப்போது நிலையாக ஒன்றரை மாத காலமாய் வேலைபார்த்து வருகின்றனர். இந்தம்மாள் தணிக்கை பார்க்கும் வேலையில் (Inspection work) மிகவும் அனுபவ சித்தமான விஷயங்களையே கேட்டு நல்லறிவுச் சுடர்கொளுத்தி வருகின்றனர். புதிதாக ஏற்படும் போதனை முறைகளை உபாத்தியாயர்கள் கைக்கொண்டு போதித்து வரவேண்டும் என்பது இந்தம்மாளுடைய முக்கிய நோக்கமாம். "பழையன கழிதலும், புதியன புகுதலும்" வேண்டும் என்னும் கருத்துக்கொண்ட இந்தம்மாள் சிலநாட்களுக்கு முன்பு சென்னை முத்தியாலுப் பேட்டை இந்து பாலிகா பாடசாலையில் நடந்த வருஷோத் சவத்தில் அக்கிராசனம் வகித்து, பெருங் களிப்புடன் பெண்களுக் கெல்லாம் பரிசளித்தனர். முடிவில், அப் பாடசாலையின் பெண்களையும், உபாத்தியார் களையும் நோக்கித் தமிழிலேயே ஒரு உபந்நியாசம் செய்தனர். அதன் சுருக்கமாவது:—

அன்று பாடசாலைப் பிள்ளைகள் அனைவரும் பரிசு பெற்றதை முதன்மையாகக் கொண்டு எல்லோரும் ஒருங்கே பரிசு பெற்றது, யாவரும் ஒரு படித்தாய் கெட்டிக்காரர்களாகவும் ஒழுங்காய்ப் பாடசாலைக்கு வந்தவர்களாகவும் இராராயினும், அனைவரும் ஒருங்கே சந்தோஷங் கொள்ள வேண்டுமென்னும் கருத்தால் எல்லோருக்கும் பரிசுகொடுக்கப்பட்டது என்றும், ஆகையால் பிள்ளைகளில் ஒவ்வொருவரும் தினந்தோறும் வேளை தப்பாமல் ஒழுங்காய்ப் பாடசாலைக்கு வரவேண்டும் என்றும், அப்படி வருவதனால் அவர்கள் விருத்தியடைவதோடு உபாத்தியாயர் சொன்ன விஷயங்களையே மறுபடியும் சொல்லவேண்டி சிரமத்தினின்றும் நீங்குவார் என்றும் விளக்கமாக இலக்கணப் பிழையின்றிச் சொல்லியதோடு மற்றும் சிலபுத்தி மதிகளையும் எடுத்துக் கூறினர். பின்பு உபாத்தியாயர்களை நோக்கிப் பிள்ளைகளிடத்து அன்பாயிருந்து அரிய விஷயங்களையெல்லாம் அநுபவ சித்தமாய் ஏற்ற முறைகளால் கற்பிக்க வேண்டும் என்றும் பேசி முடித்தனர். இந்தம்மாளுக்குத் தமிழ்ப் பாஷை முற்றும் அன்னிய பாஷையாக இருந்தும் தெளிவாய் இலக்கணப் பிழையின்றிப் பேசியது பேராய்ச்சரிய கரமாவதோடு அந்தம்மாளுடைய உழைப்பையும் நன்கு புலப்படுத்து கின்றது. இந்தம்மாளுடைய பரிட்சை வினாக்கள் மிகவும் அநுபவபூர்வமாயுள்ளன வென்பதை விளக்க இங்கு இரண்டொன்றைக் காட்டுகின்றோம்.

1. வண்டிக் குதிரைக்குக் கண் பட்டை இடுவதேன் ? ஏறு குதிரைக்கு அது இடாமலிருப்ப தேன் ?

2. இந்தியா தீபகல்பமாக இருப்பதேன் ?

முதலியனவாம்.

இவ்வாறு அனுபவ பூர்வமாய் விஷயங்களை அறிவிக்க விரும்பும் மிஸ் ஏ. ஆர்னல்ட்டு அம்மாள் காலத்தில் நாம் அனுபவ பூர்வமாய் அடைய வேண்டிய நன்மை ஒன்றுண்டு அதாவது:—

முதலில் ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் பாடசாலை ஒன்றாகவே இருந்தது. பின்பு பெண் பாடசாலைகள் தனித் தனியே வைக்கப்பட்டன வாயினும் ஆண்பாலரே தணிக்கை பார்க்கும் உத்தியோகஸ்தர்களாக இருந்தனர். பின்பு அவ் வதிகாரிகளும் பெண்பாலராகவே இருத்தல் வேண்டும் என்று தீர்மானித்து இப்போது பெண் பாடசாலைக்குப் பெண்பால்களே அதிகாரிகளாக ஏற்பட்டிருக்கின்றனர். எந்த விஷயமும் முதலில் ஒருவாறு குறைபாடுள்ளதாக இருப்பினும் வர வர அவ்விஷயம் முற்றும் குணமாக மாறிவிடும். அதற்கு இப் பெண்கல்வியே தக்க திருஷ்டாந்தமாம். ஆயினும் பெண்கல்வி விஷயமாய் ஏற்பட்டிருக்கும் பெருங்குறை ஒன்று நெடுங்காலமாக மாறாமலே நடைபெற்று வருகின்றது. அது யாதெனின், ஆண்பிள்ளைகட்கும் பெண்பிள்ளைகட்கும் பாடங்கள் மாத்திரம் ஒரே படியாக அமைக்கப்பட்டுள்ளன. ஆண் பிள்ளைகளுக்கான பாட புத்தகங்களே பெண்களுக்கும் உபயோகிக்கப் படுகின்றன. ஆங்கில பாஷையிலேயோ பெண் களுக்குத் தனித் தனி பாட புத்தகங்கள் பலவுண்டு அவை, பிரின்ஸெஸ் ரீடர் (Princess Readers) குயின் ரீடர் (Queen Readers) ஆகியபல்வேறு பாடங்களிருக்கவும் நமதுநாட்டுப் பெண்களுக்கு ஒன்றேனும் இல்லாதிருப்பது பெருங்குறைவே யன்றோ ? மேலும் ஆண் பிள்ளைகள் அறிய வேண்டிய விஷயங்கள் வேறு, பெண்பிள்ளைகள் அறியவேண்டிய விஷயங்கள் வேறு. பெண் பிள்ளைகள் வீட்டிற்குரிய பொருள்களின் குண குணங்களையும், கற்புடைய மாதர் ஒழுங்கங்களையும், அந்நிய நாட்டு ஸ்திரீகளுடைய நடையுடை பாவனைகளையும் அறிதல் அவசியம். இதைவிட்டு, காட்டுமிருகங்களைப் பற்றியும், ஜலசரங்களைப் பற்றியும் அறியவேண்டுவது அவ்வளவு அவசியமில்லை யென்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயமாம். மற்றும் கணிதத்தில் அந்நியநாட்டு நாணயங்கள், நீட்டலளவையில் போல் முதலியவை, மற்றும் அநேக வாய்பாடுகளைப் பற்றிய கணக்குக்கள் இவையெல்லாம் பெண்பால்களுக்கு அனாவசியமாகும். பின்ன கணிதமும் உபயோக மற்றதென்றே கூறலாம். மற்றும் வேண்டுவது இந்து நாணயத்தைப் பற்றிய கணக்குக்களும், வீட்டுக்கணக்கு, கடைக் கணக்கு முதலியவைகளும் மிகவும்அவசிய மானவைகளாகும் அன்றி, நமது நாட்டுப் பெண் பிள்ளைகள் 4 வது வகுப்பிற்கு மேற்பட்டு வாசிக்க அவ்வளவாகக் கூடாதவர்களா யிருப்பதனால் அதற்குள்ளாகவே வீட்டைச் சீர்திருத்தம் செய்தற்கான சுகாதாரவிதிகள், சாதாரண வியாதிகள் அவை யுண்டாகு முகாந்தரங்கள் அவற்றிற் கேற்ற பரிகாரங்கள், குழந்தைகளைப் பராபரிக்கும் முறைகள் ஆகிய இவை முதலான விஷயங்களை யுணர்த்தும் போதனை அவசியம் வேண்டும். இதனோடு வரும்படிக்குத் தக்கபடி குடும்பத்தை நிறைவேற்றும் முறை, பாகஞ்செய்யு முறை முதலிய தெரிந்திருப்பதும் விசேஷமாகும். இத்தகைய விஷயங்களை நாம் இப்போது சென்றல்சர்க்கில்

இஸ்பெக்டிட்ரஸாக வீற்றிருக்கும் மிஸ் ஏ ஆர்னல்ட் அம்மாள் மூலமாக அடையவேண்டிய நன்மைகளாம். இன்னும் இதைப்பற்றிய விவரங்களை பின்னால் விளங்க வரைவோம்.

---

## WATER — A LIQUID.

## தண்ணீர் — ஒரு திரவபதார்த்தம்.

(தண்ணீரைப்பற்றிப் போதிக்கு முறை.)

திருஷ்டாந்தத்திற்கு வேண்டிய பொருள்கள்.—இரண்டு சிறிய கிண்ணங்கள், ஒரு தண்ணீர்த்தொட்டி, ஒரு கண்ணாடிக்குவளை (a tumbler), ஒரு தூரி (Brush), ஒரு தட்டு, ஒரு புட்டி, சிறிது வாள் தூள், ஒரு குடம் தண்ணீர்:—

### I. தண்ணீர் ஓடுகிறது.

1. இரண்டு கிண்ணங்களை மேஜையின்மேல் வைக்க. அவற்றில் ஒன்றில் வாள் தூளையும், மற்றொன்றில் தண்ணீரையும் ஓரம் வரையில் நிரப்புக. பின்பு தண்ணீரும், வாள்தூளும் தனித்தனி கிண்ணத்தில் தலைவரையில் மட்டமாக கிண்ணங்களின் ஓரம்வரையில் சமமாக இருப்பதைப் பிள்ளைகளுக்குக் காட்டுக.

பிறகு ஒரு பிள்ளையை அழைத்து வாள்தூளில் பிடிப்பிடியாக எடுத்து அத்தூள் நிரப்பிய கிண்ணத்தில் கொண்டமட்டும் வைத்து நிரப்பித் தொகுதியாக்கும்படி செய்க. அத்தூள் கோபுரம்போல் நிற்குமட்டும் தூளை நிரப்பும்படி செய்க.

இது செய்து முடிந்தவுடன் வகுப்புப் பிள்ளைகளைநோக்கி, இப்போது வாள்தூளை மென்மேலும் வைத்துக் கோபுரம்போல் உயர்த்தினோம். ஆனால் தண்ணீருள்ள கிணத்தில் இன்னும் சிறிது தண்ணீர் விட்டால் என்ன ஆகும்? என்று வினவுக.

தண்ணீர் வாள்தூளைப்போல் தொகுதியாகப் பாத்திரத்திற்கு மேலும் உயர்ந்து நிற்காது. கிண்ணம்பிடிப்பதற்கதிகமாகச் சிறிது தண்ணீர் விட்டாலும். அது ஓரங்களில் வழிந்தோடி மேஜையின் மீது பரவி நிற்கும்; அப்போது கிண்ணத்தில் தண்ணீர் விளிம்புவரையில் ஒரு மட்டமாகத் தட்டையாகவே இருக்கும்.



மேஜையின் மேலாவது கற்பலகையின்மேலாவது ஒரு பிடி வாள்தூளை வைக்க, அதுபோலவே தண்ணீரையும் சிறிது வைக்க முயலுக. அவ்விரண்டிற்கு முண்டாகும் வேற்றுமையைப் பிள்ளைகள் சொல்லட்டும்.

தண்ணீர் மறுபடியும் ஓடிப் பலகை முழுதும் பரவ ஆரம்பிக்கின்றது.

2. இப்போது, தண்ணீர் இவ்விதமாய் பரவுவதனால் அது ஓடுகிறதென்றும் அவ்வாறு ஓடுவதனால் அதைத் திரவப்பொருள் என்று நாம் சொல்கிறோம் என்றும் பிள்ளைகளுக்கு விவரிக்க.

வாள்தூள் ஓடுவதில்லை; அது திரவபதார்த்தமன்று; வாள்தூள் இப்போது நிற்பதுபோலவே நாம் அதை எடுக்கும்வரையில் நிற்கும்.

பின்பு பால், எண்ணெய், மோர் முதலிய பொருள்களும் திரவபதார்த்தம் என்று பிள்ளைகளிடம் வருவிக்க. இப்பொருள் வாள் தூளைப்போல் தொகுதியாக உயர்ந்து நிற்க மாட்டாதெனவும் ஓடுந்தன்மையுடையன எனவும் வருவிக்க.

3. வாள்தூளைக் கையால் அள்ளியெடுப்பதுபோல தண்ணீரை நாம் கையால் அள்ளக் கூடாதென்றும், வாள்தூளைக் குழிக்க முடியாதென்றும் பிள்ளைகளுக்கு அறிவிக்க.

தண்ணீரையெடுத்தால் விரல்களினிடையே ஓடிவிடும். திரவபதார்த்தங்களெல்லாம் புட்டி, தொட்டி, குடம் ஆகிய இவற்றைப் போன்ற ஏதேனும் ஒரு பாத்திரத்தி லிருக்கக் காண்பதேன் என்பதைப்பற்றிப் பிள்ளைகளே இயற்கையில் அறிந்து விவரிக்க ஏற்ற சாதனமுண்டாகும். திரவ பதார்த்தமுள்ள பாத்திரத்தில் ஓட்டையேனும் சிறு துவாரமேனும் ஏன் இருத்தல் கூடாதென்போமானால் பிள்ளைகள் ஓட்டை அல்லது துவாரமுள்ள பாத்திரத்தில் திரவ பதார்த்தத்தை விட்டால், ஒழுகி அல்லது ஓடிப்போய்விடும் என்று பதில் சொல்வார்கள்.

4. பிறகு, கிண்ணத்திலுள்ள தண்ணீரை மெதுவாய்ச் சாய்த்து தண்ணீர்த் தொட்டியில் ஊற்றிவிட்டு அப்போதுண்டாகும் விஷயத்தைக் கவனித்துப் பிள்ளைகளைச் சொல்லும்படி செய்க.

கிண்ணம் சிறிது சாய்க்கப்பட்டபோது அதிலுள்ள தண்ணீர் உயர்ந்து நிற்க முடியாது.

அது ஓரத்தின் வழியாய் வழிந்து ஒரு சிறு நீரோட்டம் போல் தொட்டியில் விழுக்கின்றது.

அப்போது நாம்அதை ஊற்றுதல் என்று சொல்கிறோம். திரவ பதார்த்தம் ஓடுந்தன்மை யுள்ளதாய் இருப்பதனால் அதை ஒரு பாத்திரத்திலிருந்து மற்றொன்றுக்கு ஊற்றலாம்.

## II. திரவபதார்த்தங்கள் கீழ் நோக்கி யோடுகின்றன.

ஒரு பாத்திரத்தினின்றும் மற்றொரு பாத்திரத்தில் சிறிது தண்ணீரை மெதுவாய் ஊற்றுக.

தண்ணீர் எவ்வழியாக ஓடுகின்றது? அது கீழ்நோக்கி யோடுகின்றது.

தண்ணீரை மேல்நோக்கி யோடும்படி செய்யலாகுமா? பார்ப்போம்.

மேசையின்மேல், ஒரு கற்பலகையை வை; அதன்மேல் சிறிது தண்ணீர் விடு. ஒரு முனையைச் சிறிது சாய். எந்த வழியாய் தண்ணீர் ஓடுகின்றது? என்று பிள்ளைகளைக்கேள். அது கீழ்ப்புறமாய் ஓடுகின்றது.

எல்லாம் ஒன்றுதான். இப்போதும் தண்ணீர் கீழ்ப்புறமாய் தான் ஓடுகின்றது. அது மேல் நோக்கிச் செல்லாது.

மழையைக் கவனிக்கச்செய்க. தலைக்கு நேர் மேலே மேகத்தினின்றும் மழைத்துளி கீழ் நோக்கி விழுவதைப் பிள்ளைகளிடம் வருவி, குழாய், ஜலதாரை முதலியவற்றிலிருந்தும் தண்ணீர்கீழ்நோக்கி வருவதன்றி மேல் நோக்கிச் செல்வதில்லை என்பதையும் வருவிக்க.

தண்ணீர் போன்ற எல்லா திரவ பதார்த்தமும் கீழ் நோக்கி யோடுவதன்றி மேல் நோக்கிச் செல்வதில்லை.

திரவ பதார்த்தங்களெல்லாம் எப்போதும் கீழுக்கே செல்ல முயல்வதனால் அவை யிவ்வாறு கீழ்நோக்கி யோடுகின்றன.

## TIT BITS.

## விநோதக் கூற்றுக்கள்.

### (மூடர்கள் யார்?)

பண்டைக் கால முதலாக உபாத்தியாயர்களுக்கு எங்கெங்கும் கவுரவ முண்டு. அதனாலேயே அரிய வித்வான்களும் "உபாத்தியாயர்" என்னும் பட்டத்தை விரும்பி யடைவதுண்டு. சிலகாலமாக ஒரு தொழிலுமில்லாதவன் நான்கு பிள்ளைகளை மடக்கிக் கொண்டு நானும் உபாத்தியாயர் என்று வெளிப்படுவது வழக்கமாயிற்று. இதனாலேயே, "கணக்கன் கெட்டால் உபாத்தியாயர்,



கழுதை கெட்டால் குட்டிச் சுவர்" என்னும் பழமொழியும் வழங்குகின்றது. இப்பழமொழிக்குத் திருஷ்டாந்தமாகவே இக்காலத்து உபாத்தியாயர்களிற் சிலர் தமது தொழிலுக்கு வேண்டிய திறமை சிறிதுமின்றி வெளிவருகின்றனர். எத்தொழிலினும் உபாத்திமைத் தொழில் மிகக் கடினமானதென்பதை பலரறியாவிட்டாலும் உபாத்தியாயராக வெளிவருவோர் அறிதல் அவசியம். சதா வாசிக்கும் வழக்கம் (Reading habit) உபாத்தியாய ராவோருக்கு இன்றியமையாத கடனாக இருத்தல்வேண்டும். இதை விட்டுப் பல உபாத்தியாயர்கள் ஊரிலிருந்து வரும் கடிதத்தை வாசிப்பதன்றிப் புத்தகங்களை வாசித்தலைக் காண்பதரிதாகின்றது. இத்தகையோரும் உபாத்தியாயர் தாமே! இப்படிப்பட்ட உபாத்தியாயர்களது பேதமையை விளக்கும் கதை ஒன்றை இங்கு எழுதுவோம்.

சிற்றரசன் ஒருவன் ஒருநாள் தன் மந்திரியை நோக்கி ஓ மந்திரீ! நமது நாட்டில் புத்திமான்களாயிருப்பவர்கள் யார்? அவர்களை நன்றாய்ப் படிப்பிக்கவேண்டும்" என்றான். அதைக்கேட்ட மந்திரி அரசனை நோக்கி, "வேந்தே! நமது நாட்டில் உபாத்தியாயர்கள் தாம் பெருமூடர்களாக இருக்கின்றனர்" என்றான். மந்திரியின் மறுமொழியைக்கேட்ட மன்னவன் பேராச்சரியமுற்று, என்ன! எல்லோருக்கும் நற்புத்தி கற்பிப்பவர் உபாத்தியாயர்கள்; அவர்களே மூடர்களாக இருப்பது எவ்வாறு? இது 'சூரியன்முன் இருள் நிலைத்திருக்கிறது' என்பது போலன்றோ காண்கின்றது" என்றான்.

அதன்மேல் அமைச்சன் அரசனை நோக்கி, "அரசே! நான் சொல்வது பிழையன்று, அதனை நேரில் பரீக்ஷிக்கலாம்" என்று சொல்லி அவ்வூர் உபாத்தியாயர்களுக்கெல்லாம் மறுநாள் அரசசமுகத்திற்கு வரும்படி தனித்தனி தாக்கீது ஒன்று அனுப்பினான். அரசனது தாக்கீதைக்கண்ட உபாத்தியாயர்கள் ஒன்றுகூடி ஐயோ! இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது! என்றுமில்லாத சங்கதி இன்று நேர்ந்தது; இது என்ன காரணமோ! என்ன விபரீதமோ! தெரியவில்லையே! எனத் தமக்குள்ளே பேசிக்கொண்டிருக்கையில், ஒருவர் அப்படியல்ல நமக்கெல்லாம் நல்லகாலம் பிறக்கப்போகிறது. இந்த வருஷமுதல் அரசன் நமக்கு வருஷந்தோறும் ஏதோபரிசுகொடுக்கப் போகிறாப்போல் காண்கின்றது என்றார். மற்றொருவர் அதெல்லாம் வீண்பேச்சு, நம்மை ஏதோ பரீக்ஷிக்கப்போகிறாப்போல் காண்கிறது என்றான். அதைக் கேட்ட மற்றவர்கள், "ஐயையோ இதென்ன அநியாயம்! நமக்கென்ன தெரியும்? ஏதோ இரண்டெழுத்தைக் கற்றுக்

கொண்டு வந்த வரையில் காலந் தள்ளிக் கொண்டு வருகிறோம்; நம்மைப் பரிட்சித்தால் நமக்கென்ன தெரியும்" என்றார்கள். இவ்வாறு பற்பல விதமாய்ப் பேசிக்கொண்டு, என்ன செய்வது, அரசன் ஆணையை மறுக்க வொண்ணாது. போய்தான் தீரவேண்டும் என்று தீர்மானித்து, தமக்குள் அதிக வயது சென்றவராய், தலையும் தாடியும் நரைத்தவாராய், நெடுங்காலமாய் உபாத்தியாயராயிருக்கும் பெரிய உபாத்தியாயரை மற்றவர்கள் நோக்கி, அண்ணா! எல்லாவற்றிற்கும் நீங்களே முன்னிற்கவேண்டும், எங்களுக்கு ஒன்றும் தெரியாது, நீங்கள் விட்டதே எங்களுக்குவழி" என்றார்கள்.

அதைக்கேட்ட விருத்தர் சந்தோஷந்தலைக்கொண்டு, ஆ! ஆ! அப்படியே; நீங்கள் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம், எல்லாவற்றிற்கும் நான் முன்னிற்கின்றேன் என்றார். அதனால் மற்றவர்கள் சமாதானங்கொண்டு சென்று மறுநாள் காலை 10 மணிக்கு மன்னவன் அரண்மனையை அணுகினர். அங்கு அரசன் சமுகத்திற்கு முன் செல்வது யார் என்று முரண்டு, முடிவில் முதியவரே முன் செல்லவேண்டுமென்று அவரை முன்னேவிட்டு ஒருவர்பின் ஒருவராக எறும்புச் சாரை போல் நின்றார்கள். அரசனுக்கும் மந்திரிக்கும் முன்னிற்பவர் முகந்தவிர மற்றவர்கள் உருவமும் தெரியாதபடி அடங்கி ஒடுங்கி நின்றனர். அதன்மேல் அரசன் சாடையால் தன் தலையைச் சிறிதுபின்னுக்கு அசைத்து வலது புறமாக இழுத்தனன். (அது முன்னுக்கு வந்து உட்காரு என்னுங் கருத்து) பெரிய கிழவன் அதனை யுணராது, தலையை அசைத்த குறிப்பு டகரம் போல் இருந்தமையால், அரசன் தன்னை டகர வரியை உச்சரிக்கச் சொல்லுகிறான் என்றெண்ணி உரத்த குரலோடு "ட அனா" என்றான். அதைக்கேட்டு பின்னின்றவன் "டா வன்னா" என்றான் இப்படியே "டி இனா" "டீ யன்னா" என்பதாக டகர வரியை டமாரமாக அடித்துவிட்டார்கள். அதைக் கண்ட அரசனும் மந்திரியும் மற்றுமுள்ள பரிசனங்களும் வயிறும் புண்பட நகைத்தனர். பின்பு, அரசன் மந்திரி சொன்னது உண்மையேயென்றுணர்ந்து, அவ்வுபாத்தியாயர்களது பேதமைக்குப் பெரிதும் மனமிரங்கி, போதனுப்பியாச கலாசாலை யொன்று நியமித்து அதில் உபாத்தியாயர்களைப் பழக்கியதுமன்றி, அவ்வாறு பழகிய உபாத்தியாயர்களுக்கு வருஷந்தோறும் திரவியோபகாரமுஞ் செய்து வந்தான்.

SL
TM211, N05
N05.1-2
16430